இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது
பாராளுமன்றம்
(முதலாவது அமர்வு)




# கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆண்டறிக்கை

# 2019

கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆண்டறிக்கை

2019

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்

# ஆண்டறிக்கை

# 2019

தேசிய கணக்காய்வு அலுவலகம்

# தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகபூர்வச் சின்னம்

## இந்த உத்தியோகபூர்வச் சின்னத்திற்காக பயன்படுத்திய குறியீடுகளிலிருந்து பின்வரும் அர்த்தங்கள் நிருபனமாகின்றன.

- சின்னத்தில் மேலே காட்டப்பட்டுள்ள சிங்கத்தின் மூலம் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது
- அதன் நடுவிலுள்ள தராசு மூலம் சுகந்திரமும் பக்கச்சார்பற்ற தன்மையையும் பிரதிபலிக்கின்றது.
- அதனைச் சுற்றியுள்ள இரண்டு ஒலிவ் கிளை சமாதானத்தையும் சௌபாக்கியத்தையும் பிரதிபலிக்கின்றது.
- அதனைச் சுற்றியுள்ள  தாவர இலை மூலம் தேசிய கலாச்சாரம் பிரதிபலிக்கின்றது.

## எமது தூர நோக்கு

இலங்கை பிரசைகளின் நலனுக்காக பொதுக் கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகையை நோக்காகக் கொண்டு பொதுத் துறையின் வழிகாட்டியாக இருத்தல்.

## எமது செயற்பணி

நிலைபேறான அபிவிருத்தியை பேணுவதற்காக சிறந்த நிதி முகாமைத்துவத்தினையும் உத்தம பொது வளப் பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் ஈடுபடுவதன் மூலம் நல்லாளுகையையும் பொதுக் கணக்களிப் பொறுப்பையும் மேம்படுத்தல்

## எமது குறிக்கோள்கள்

1. வளங்களை தம்வசம் வைத்துள்ள நிறுவனங்களின் முகாமைத்துவங்கள் அவர்களுக்குள்ள பொதுக கணக்களிப்பொறுப்பினை உறுதிப்படுத்தி பாராளுமன்றத்திற்கு அறிவிக்கின்றனவா என்பது தொடர்பில சுயாதீன பரிசோதனையொன்றை மேற்கொள்தல்

2. பொதுத்துறை நிறுவனங்களின் செயலாற்றலை பரிசோதிப்பதற்காக பொதுக் கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE) ஆகிய இரண்டு பாராளுமன்ற கண்காணிப்புக குழுக்களிற்கும் உதவுதல

3. முகாமைத்துவ அறிக்கைளினூடாக பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் அவர்களது கணக்களிப்பொறுப்பினை முன்னேற்றிக் கொள்வதற்கு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களிற்கு உதவுதல்

## எமது விழுமியங்கள்

மேன்மை
புத்தாக்கம்
தலைமைத்துவம்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல. AGS/AR/2019/21
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி 2020 ஒக்தோபர்
Date

கௌரவ சபாநாயகர்,
இலங்கை பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே.

ஐயா,

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வருடாந்த அறிக்கை – 2019**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் கருமங்களை நிறைவேற்றுவதுடன் சம்பந்தப்பட்ட 2019 ஆம் நிதி ஆண்டிற்கான எனது அறிக்கையினை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற எனது அறிக்கைகளின் ஏழாவது தொகுதியாக இந்த வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் ஏனைய அறிக்கைகளை பின்வரும் தொகுதிகளின் கீழ் வெவ்வேறாக சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| *முதலாம் தொகுதி* | - | *அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள்* |
| *இரண்டாம் தொகுதி* | - | *அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள்* |
| *மூன்றாம் தொகுதி* | - | *நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள்* |
| *நான்காம் தொகுதி* | - | *வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள்* |
| *ஐந்தாம் தொகுதி* | - | *மாகாண சபைகள்* |
| *ஆறாம் தொகுதி* | - | *உள்ளூராட்சி அதிகாரசபைகள்* |
| *எட்டாம் தொகுதி* | - | *செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகள்* |
| *ஒன்பதாம் தொகுதி* | - | *அரச கம்பனிகள்* |
| *பத்தாம் தொகுதி* | - | *விசேட கணக்காய்வு அறிக்கைகள்* |

எனது செயலாற்றுகை மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பான இந்த அறிக்கை சர்வதேச நியமங்களிற்கு அமைய தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிதி வளத்தினை பயன்படுத்துதலுடன் சம்பந்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கியதாகவும் செயற்பாட்டுப் பகுப்பாய்வுகளுடன் கூடியதாகவும் வருடாந்த அறிக்கையாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

Sgd./W.P.C. Wickramaratne
Auditor General

டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව   இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை   No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.naosl.gov.lk

# உள்ளடக்கம்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| எமது கட்டமைப்பு | 01 | **மின்வலு மற்றும் எரிசக்தி** | |
| சட்டரீதியான நிறைவேற்றல் | 04 | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 221 |
| எமது ஒழுங்கமைப்பு வரைபடம் | 14 | எரிசக்தி | 225 |
| பதவியணியினர் பயிற்சி | 17 | **நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல்** | |
| தகுதியுள்ள கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துதல் | 22 | நீர்ப்பாசனம் மற்றும் சுத்திகரிப்பு | 235 |
| | | நீர் வழங்கல் | 239 |
| பாராளுமன்றத்திற்கு உதவுதல் | 22 | **வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி** | |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்படும் மிகை அறவீடு | 24 | வீடமைப்பும் நிர்மாணமும் | 245 |
| | | நகர வசதிகள் | 247 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்படும் செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு | 27 | **மனிதவள அபிவிருத்தி** | |
| | | கலாச்சார மற்றும் கலை அலுவல்கள் | 255 |
| | | கல்வி | 257 |
| விசேட புலனாய்வுக் கணக்காய்வும் பொதுமக்கள் பிரதிநிதித்துவ அலுவல்களும் | 47 | உயர் கல்வி | 265 |
| | | திறன் அபிவிருத்தி | 273 |
| 2019 இற்கான நிதிக்கூற்றுக்கள் | 59 | தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவு | 283 |
| 2019 இல் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள் | 67 | சுகாதாரம் | 293 |
| | | விளையாட்டு அலுவல்கள் | 313 |
| | | இளைஞர் விவகாரம் | 317 |
| திரட்டிய நிதியம் | 83 | **தொழில்நுட்ப அபிவிருத்தி** | |
| அரச தொழில் முயற்சிகள் | 103 | விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி | 319 |
| உள்ளூராட்சி | 111 | தொடர்பாடல் | 323 |
| வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள் | 117 | **சுற்றாடல்** | |
| வங்கித்துறை | 123 | வனச்சீவராசிகள் | 335 |
| **தேசிய பாதுகாப்பும் நீதிமன்ற அலுவல்களும்** | | சுற்றாடல் முகாமைத்துவம் | 339 |
| | | **பிரதேச அபிவிருத்தி** | |
| தேசிய பாதுகாப்பு | 139 | கிராமிய பொருளாதார அலுவல்கள் | 345 |
| நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் | 149 | பிரதேச நிர்வாகம் | 347 |
| **உண்மைப் பொருளாதாரம்** | | **சமூகப் பாதுகாப்பு** | |
| விவசாயம் | 155 | சமூக அபிவிருத்தி | 351 |
| கால்நடை வளம் | 161 | சமூக நிவாரணம் | 357 |
| பெருந்தோட்டத் தொழில் | 165 | சமூகப் பாதுகாப்பு | 359 |
| மீன்பிடி மற்றும் நீரியல் வளம் | 175 | **சேவைப் பொருளாதாரம்** | |

| | | | |
|---|---|---|---|
| கைத்தொழில் | 183 | நிதிச் சேவைகள் | 365 |
| காணி அலுவல்கள் | 187 | அரசாங்க சேவை | 371 |
| **போக்குவரத்து** | | வாணிப அலுவல்கள் | 377 |
| பயணிகள் போக்குவரத்து | 193 | சுற்றுலா அலுவல்கள் | 381 |
| துறைமுக மற்றும் கப்பற்துறை | 207 | மிருகக் காட்சிசாலைகள் மற்றும் தாவரவியல் பூங்காக்கள் | 387 |
| நெடுஞ்சாலைகள் | 215 | மாகாண சபைகளின் அறிமுகம் | 389 |

| | | | |
|---|---|---|---|
| மேல் மாகாண சபை | 393 | வடமத்திய மாகாண சபை | 409 |
| மத்திய மாகாண சபை | 397 | வடமேல் மாகாண சபை | 415 |
| தென் மாகாண சபை | 399 | சப்ரகமுவ மாகாண சபை | 419 |
| வடக்கு மாகாண சபை | 401 | ஊவா மாகாண சபை | 423 |
| கிழக்கு மாகாண சபை | 403 | | |

## எமது வரலாறு

முன்னர் சிலோன் என அழைக்கப்பட்ட தற்போதைய இலங்கையின் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் தோற்றத்தினை பிரித்தானியர் காலத்தின் ஆரம்பப்பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். 1776 இல் பிரித்தானியர் தீவினை கைப்பற்றி 3 ஆண்டுகளுக்கு பின்னர் அதாவது 1779 ஆம் ஆண்டின் ஆரம்ப பகுதியில் சிசில் ஸ்மித் என்பவர் கணக்காளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக இருந்துள்ளமை ஆவணங்களின் மூலம் தெரியவந்துள்ளது. அன்று முதல் இலங்கையின் உயர் கணக்காய்வு நிறுவனமாக 40 கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் சுதந்திர நிறுவனமொன்றாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் இயங்கி வந்திருந்ததுடன் அது தற்போது தேசிய கணக்காய்வு அலுவலகம் என்ற பெயரில் தொடர்ந்து தொழிற்பட்டு வருகின்றது.

## கணக்காய்விற்காக எமக்குள்ள அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலிருந்து பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு முதன்மையாக கிடைத்துள்ளது. அது 2018 ஆக்ஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் ஏற்பாடுகளில் மிகவும் விரிவாக உள்ளது.

கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி மன்றமொன்று வைத்துள்ள அவ்வாறான கம்பனிகளையும் உள்ளடக்கிய விதத்தில் இந்த அதிகாரம் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் கீழ், கீழே தரப்பட்டுள்ளவாறு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

“கணக்காய்வாளர் தலைமை அதிபதி அரசாங்கத்தின் எல்லாத் திணைக்களங்கள், சனாதிபதிக்கான செயலாளர் அலுவலகம், பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம், அமைச்சரவையின் அலுவலகங்கள், நீதித்துறைச் சேவை ஆணைக்குழு, அரசியலமைப்புப் பேரவை, 41 (ஆ) என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள், நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், உள்ளூராட்சி அதிகார சபைகள், பொதுக் கூட்டுத்தாபனங்கள், ஏதாவது ஏழுத்துமூல சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் மற்றும் வேறு பொறுப்பு முயற்சிகளும் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் அல்லது பதிவு செய்யப்பட்டதுமாக கருதப்பட்டுள்ள எந்தக் கம்பனிகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி அதிகாரசபை வைத்திருக்கின்றதோ அக் கம்பனிகள் எவற்றையும் அவற்றின் கணக்குகளையும் கணக்காய்வு செய்தல் வேண்டும்.”

அரசியலமைப்பினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பொறுப்பளிக்கப் பட்டுள்ள அதிகாரம் கீழே காட்டப்பட்டுள்ள சட்ட விதிகளில் மேலும் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

- பொது நிதி தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைப் பொறுப்புக்களை குறித்துக் காண்பிக்கின்ற மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வச் சட்டம்.
- அரச கூட்டுத்தாபனங்களிற்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II
- மாகாண சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு
- மாநகர சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு
- நகர சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181 ஆம் பிரிவு
- பிரதேச சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 ஆம் பிரிவு

- கமநல அபிவிருத்திச் சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் 2000 இன் 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்திச் சபைகள் அதிகாரச் சட்டத்தின் 58 ஆம் பிரிவு
- விளையாட்டுச் சங்கங்களைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுச் சங்கங்கள் அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவு

தேவைப்படுமிடத்து பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வேறு எவையேனும் கடமைகளையும் புரிவதற்கு அரசியலமைப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்குகின்றது. தனது செயற்பாடுகளையும் கடமைகளையும் புரிகையில் தமது கடமையில் உதவி செய்வதற்கு தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அரசியலமைப்பு அதிகாரம் வழங்கியுள்ளது. அத்துடன் கணக்காய்வு தொடர்பான ஏனைய தொழில்நுட்ப, தொழில்சார், விஞ்ஞான ரீதியான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு விசேட நிபுணர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 154(5) ஆம் உறுப்புரையானது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரின் கடமைகளை மேற்கொள்ளும் போதும் கையளிக்கும் போதும் சகல புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளையும் மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் அல்லது பொதுத் துறை நிறுவனங்களின் களஞ்சியங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் என்பவற்றை அணுகுவதற்கும், கணக்காய்வினை மேற்கொள்வதற்கும் தேவையான தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றைப் பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## எமது சேவை பெறுனர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரப்பெல்லை அரசியலமைப்பில் தெளிவு படுத்தப்பட்டுள்ளதுடன் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் கம்பனிகளையும் உள்ளடக்கிய விதத்தில் அது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போதைய எமது சேவை பெறுநர்களின் அடிப்படை கீழுள்ளவாறாகும்.

| சேவைபெறுநர் | **நிறுவனங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| **அமைச்சுக்கள்** | 31 |
| **அமைச்சரவை அந்தஸ்த்து அற்ற அமைச்சுக்கள்** | 06 |
| **திணைக்களங்கள்** | 96 |
| **மாவட்டச் செயலகங்கள்** | 25 |
| **கூட்டுத்தாபனங்கள்** | 204 |
| **அரசாங்க கம்பனிகள் (பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்பிற்குள் கொண்டுவரப்பட்டவை)** | 114 |
| **அரசாங்க வங்கிகள்** | 10 |
| **நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள்** | 65 |
| **வெளிநாட்டு நிதியளிப்புச் செயற்திட்டங்கள்** | 164 |
| **ஏனைய சுயாதீன நிறுவனங்கள்** | 22 |

| | |
|---|---|
| **மாகாண சபைகள்** | 09 |
| **உள்ளூராட்சி மன்றங்கள்** | 341 |
| **கமநல சேவை நிலையங்கள்** | 562 |
| **விளையாட்டுச் சங்கங்கள்** | 64 |
| **மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் விசேட செலவின பிரிவுகள்** | 253 |
| **மாகாண சபைகள் கட்டளைகளின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனங்கள்** | 44 |
| மொத்தம் | 2046 |

## எமது நோக்கெல்லை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பாகம் I இலுள்ள 3 முதல் 5 வரையான பிரிவுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளின் நோக்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய,

- கணக்காய்வாளர் தலைமையதிபதியினால்
  - திரட்டு நிதியத்தினாற் பெறப்பட்ட எல்லா வருமானங்களையும் திரட்டுநிதியத்திலிருந்தான எல்லாச் செலவினங்களையும் கணக்காய்வு செய்தல் வேண்டும்;
  - செலுத்தீடு செய்யப்பட்டனவாகக் கணக்காய்வுக்குட்படு உருவகங்களின் கணக்குகளில் காட்டப்பட்ட பணங்கள், அவை எந்தச் சேவைகளுக்காக அல்லது நோக்கங் களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளனவோ அல்லது பொறுப்பிக்கப்பட்டுள்ளனவோ அந்தச் சேவைகளுக்காக அல்லது நோக்கங்களுக்காகச் சட்டமுறையாகக் கிடைக்கக்கூடியனவாகவிருந்தன மற்றும் ஏற்புடையற்பாலனவாகவிருந்தன என்பதை நிச்சயித்தல் வேண்டும்;
  - செலவினமானது அதனை அனுமதிக்கின்ற அதிகாரத்துக்கு இசைந்தொழுகுகின்றதா என்பதைத் தீர்மானித்தல் வேண்டும்; அத்துடன்
  - ஒவ்வொரு கணக்காய்விலும், வருமானம், செலவினம், கொடுக்கல்வாங்கல் மற்றும் நிகழ்வுகள் என்பவற்றைப் பரிசோதனை செய்தல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நிறைவேற்றப்பட்ட கணக்காய்வொன்றின் நோக்கெல்லை, கணக்காய்வுக்குட்படு உருவகங்களின் கணக்குகள், நிதிகள், நிதிநிலைமை மற்றும் பகிரங்க நிதியினதும் ஆதனங்களினதும் புத்திசாலித்தனமான முகாமைத்துவம் என்பனவற்றைப் பரிசோதனை செய்வதனை உள்ளடக்கும்.

- இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் கணக்காய்வாளர் தலைமையதிபதி பாராளுமன்றத்துக்குப் பொறுப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கணக்காய்வாளர் தலைமையதிபதி, எடுத்துக்கூறப்பட்ட விடயங்கள் பற்றிய கணிசமான எண்பிப்புடன் சேர்த்து பொதுமக்கள் எவராலும் எழுத்தில் அவரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதும் ஒரு கணக்காய்வுக்குட்படு உருவகம் தொடர்பானதுமான ஏதேனும் விடயத்தைப் பரிசோதனைசெய்யலாம் என்பதுடன் அது தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அவரது தற்றுணிபின் பிரகாரம், கணக்காய்வின் நோக்கெல்லை தீர்மானிக்கப்படுவதுடன், இது தொடர்பில் அவர் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்கமைய,

- ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவினால்

தீர்மானிக்கப்பட்ட இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், 29ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசியக் கணக்காய்வு அலுவலகத்தினால் பொறுப்பேற்கப்படும் கணக்காய்வுகளுக்கு ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

- இலங்கைக் கணக்காய்வு நியமங்களில், செயலாற்றுகைக் கணக்காய்வுகள், சூழல் கணக்காய்வுகள், தொழில்நுட்பக் கணக்காய்வுகள் மற்றும் வேறு விசேட கணக்காய்வுகளுக்காகக் கணக்காய்வு நியமங்கள் குறித்துரைக்கப்பட்டிராதவிடத்து, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவானது, அத்தகைய கணக்காய்வுகளுக்கு ஏற்புடையனவாக வேண்டிய உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச ஒழுங்கமைப்பினால் தீர்மானிக்கப்பட்ட உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களின் ஏற்பாடுகளை, உள்'ர்த் தேவைப்பாடுகளுக்கொவ்வ அவசியமான திருத்தங்களுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் குறித்துரைக்கலாம்.

- பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE) ஆகியவற்றாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி வழி காட்டப்படுகின்றார்.

## எமது சுதந்திரம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுதந்திரம் அரசியலமைப்பினால் விரிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மூலம் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச அமைப்பின் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரம் மீதான அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணங்கும் விதத்தில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**"கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் தகைமைபெற்ற கணக்காளராக இருத்தலும் வேண்டும். அவர் அரசியலைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தில் பதவிவகித்தலும் வேண்டும்."**

நோய்வாய்ப்படல் அல்லது உடல் அல்லது உள ரீதியான இயலாமை காரணமாக மாத்திரம் சனாதிபதியினால் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு அவரை பதவிநீக்கம் செய்யலாம். அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரை மேலும் தெரிவிப்பது யாதெனில், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சம்பளம் பாராளுமன்றத்தாலேயே நிர்ணயிக்கப்பட்டு அது திரட்டிய நிதிக்குச் சாட்டுப்படுவதுடன் அவரது பதவிக்காலத்தில் குறைக்கப்படவுமாகாது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி எந்தவொரு அமைச்சரினதும் அல்லது அரசாங்க அலுவலகத்தினதும் மேற்பார்வைக்கு உட்படுவதில்லை.

## சட்டரீதியான நிறைவேற்றுதல்கள்

### சட்டரீதியான நிறைவேற்றுதலுக்கான தேவைப்பாடுகள்

கணக்காய்வாய்வாளர் தலைமை அதிபதியின் பணியாற்றும் சுதந்திரம் இற்றை வரை அரசியலமைப்பின் வாயிலாகப் பாதுகாக்கப்பட்ட போதும், அவரது நிதிசார் மற்றும் நிர்வாகச் சுதந்திரம் என்பன இவ்விடயங்கள் மீதான அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை ஏற்பாடுகளின் மூலம் நிறைவேற்றுநர்களால் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் மூலம் மட்டுப்படுத்தல் இல்லாமலாக்கப்பட்டுள்ளது. மனிதவளம் மற்றும் நிதி ஆகிய மூலவளங்களுக்கு நிறைவேற்றுநர் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதி தங்கியிருப்பதானது பாராளுமன்றத்தின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளது உண்மையான, சுதந்திரமான தன்மைக்கு ஊறுவிளைவிப்பதாகும். ஏனெனில் எந்தவொரு நிறுவனத்தின்தோ தனிநபரினதோ கட்டுப்படுத்தலின்றியும் சர்ச்சைக்குரிய பழிவாங்கல்களுக்கு உட்படாதவாறும் அவர் இருத்தல் வேண்டும். பணிகளையும் நிதியையும் உள்ளடக்கியவாறான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது சுதந்திரத்தை உறுதி செய்வதற்கு சட்டங்களின் வாயிலாக பாராளுமன்றத்தால் விரிவான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது. 2018

ஆம் ஆண்டு வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அவரின் செலவினங்களுக்காக பொதுத் திறைசேரியின் உதவியில் தங்கியிருக்க வேண்டியிருந்தது. ஏனைய முன்னேற்றமடைந்த பொதுநலவாய நாடுகளிலுள்ளவாறு இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது வரவு, செலவுத் திட்டம் அரசியலமைப்புச் சபை ஒன்றினால் நுணுக்கமாக பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும் வகையில் அல்லது அவரது வரவு, செலவுத் திட்டம் நிறைவேற்றுனர்களது கட்டுப்பாடுகளிலிருந்து விலகும் வகையில் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகளை நிறைவேற்றுவதன் சுதந்திரத்தை உறுதிப்படுததுவதாக உள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினதும் அவரது பதவியணியினரதும் நிர்வாகச் சுதந்திரத்ஜ த பாதுகாத்தல், பதவியணியினரது பதவி உயர்வுகள், இடமாற்றம், ஒழுக்காற்று விடயங்கள், சம்பளம் மற்றும் பதவியணியினரின் ஏனைய நிர்வாக விடயங்கள் தொடர்பான கட்டுப்பாடு தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், அரசியலமைப்பின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி “அரசாங்க உத்தியோகத்தர் தொடர்பான விசேட பட்டியலில்” சேர்த்துக் கொள்ளப்படாதிருந்ததுடன், தாபன விதிக்கோவையில் விபரிக்கப்பட்டுள்ள சகல அரசாங்க நிர்வாகப் பிரமாணங்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரது பதவியணியினருக்கும் ஏற்புடையனவாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிர்வாகச் சுதந்திரம் இதனால் மேலும் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகின்றது. இவ்வாறான நிர்வாகக் குறைபாடுகள் அவரது கணக்காய்வு பணிகளுக்கு பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடத்தக்களவில் இடையூறுகளை ஏற்படுத்தியிருந்தன.

ஐக்கிய இராச்சியத்தின் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கான சர்வதேச அமைப்பின் (“இன்டொசாய்”) 1977 இன் “லீமா பிரகடனத்தில்” அரசாங்க கணக்காய்வுச் சுதந்திரத்திற்கான மூலதத்துவங்கள், முறைகள் மற்றும் தொழில்சார் விதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் 30 ஆண்டுகளிற்குப் பின்னர் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரம் தொடர்பிலான XIX ஒன்றுகூடலின் போதான (2007 மெக்சிகோ) மெக்சிகோ பிரகடனத்தில் அரசாங்க நிறுவனங்களின் சிறந்த கணக்காய்விற்காக அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கான சுதந்திரம் தொடர்பாக நிரந்தரமான பின்வரும் 8 விடயங்கள் அத்தியாவசியமானது என இனங்காணப்பட்டுள்ளன.

### கொள்கை 1

அர்த்தமுள்ளதும் பயனுள்ளதுமான அரசியல மைப்பிற்கு இணங்க / நியதிச்சட்டரீதியான / சட்டரீதியான கட்டமைப்பொன்று மற்றும் அந்த கட்டமைப்பினுள் நடைமுறையில் அமுல்படுத்தப்படும் ஏற்பாடுகள் காணப்படுகின்றமை.

அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்குரிய சுவாதீனத்தின் அளவினை விரிவாக காட்டும் வகையிலான சட்டங்களை இயற்றுதல் அவசியமாகின்றது.

### கொள்கை 2

அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் (கல்வியியல் நிறுவனங்களின்) அங்கத்தவர்கள் தமது கடமைகளை சாதாரணமாண முறையில் நிறைவேற்றும் போது அவர்களின் பதவிகளின் பாதுகாப்பு மற்றும் சட்டச் சூழலின் சுவாதீனத்துவம்.

பின்வரும் நிலைமைகளுக்கு கட்டுப்படும் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்களினதும் கல்வியல் நிறுவனங்களின் அங்கத்தவர்களின் நியமனம், மீள் நியமனம், வேலை வாய்ப்பு, பதவி நீக்கம் மற்றும் ஓய்வூதியம் பெறல் தொடர்பான நிபந்தனைகள் குறித்த சட்டங்களை இயற்றுதல் மூலம் விசேடமாக காண்பிக்கப்பட வேண்டும்.

- அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்படும் நடைமுறையின் மூலம் சுவாதீனத்துவத்தை சான்றுறுதிப்படுத்தும் நியமனங்கள், மீள் நியமனங்கள் அல்லது பணி நீக்கம் (அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுவாதீனத்துவம் மற்றும் தொடர்புடைய ISSAI II வழிகாட்டி கோவை மற்றும் சிறந்த நடைமுறைகள்).

- தமது கட்டளைகளை (Mandate) எதிர்ப்புகளின் அடிப்படையில்

முன்னிலைப்படுத்தும் அச்சமின்றி நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான முறையில் போதியளவான நீண்ட மற்றும் குறித்துரைக்கப்பட்ட கால எல்லையுடன் மேற்கொள்ளப்படும் நியமனங்கள்; மற்றும்

- தமது கடமைகளை உரிய முறையில் நியாயமான முறையில் நிறைவேற்றும் போது கடந்த காலத்தில் அல்லது தற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனுமொரு பணியொன்றை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படும் முறைப்பாடொன்றின் போதான தடைகாப்பு. (Immune)

**கொள்கை 3**

அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் பணிகளை நிறைவேற்றும் போது போதியளவில் பரவலாக்கப்பட்ட கட்டளை (Mandate) மற்றும் பூரணமான விருப்புரிமை.

பின்வரும் பணிகளை கணக்காய்வு செய்யும் அதிகாரம், அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட வேண்டும்.

- பொது நிதி, வளங்கள் அல்லது சொத்துக்களை பெற்றுக்கொண்ட நபரொருவர் அல்லது நலனாளியொருவரால் அவற்றை பாவனைக்கு உட்படுத்தல் தொடர்பான அதனது நாளாந்த தன்மை தொடர்பில் கவனம் செலுத்தாது கணக்காய்வுக்கு உட்படுத்துதல்.
- அரசாங்கத்திற்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை சேகரித்தல்.
- அரசின் அல்லது அரச நிறுவனங்களின் கணக்குகள் தொடர்பில் சட்டரீதியான மற்றும் நியாயத்தன்மை;
- நிதி முகாமைத்துவத்தின் மற்றும் அறிக்கையிடலின் தரம்; மற்றும்
- அரசின் அல்லது அரச நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சிக்கனம், செயற்திறன் மற்றும் விளைதிறன்.

சட்டரீதியாக அவ்வாறு செயற்படுமாறு குறிப்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களால் அரசினது அல்லது அரச நிறுவனங்களின் கொள்கைகளை கணக்காய்வுக்கு உட்படுத்த கூடாதெனினும், அவர்களது கணக்காய்வு நடவடிக்கையானது கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பணிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

தனது பொறுப்புக்களை நிறைவேற்றும் போது அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு பூரண விருப்பத்தின் பிரகாரம் செயற்படக்கூடியதாக இருத்தல் வேண்டும். அவர்கள் அரச நிதிய பயன்பாடு மற்றும் முகாமைத்துவம் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பாக சர்வதேச அமைப்பினதும் சர்வதேச அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களால் அந்த நிறுவனங்களுக்குரிய முறையில் அரசியலமைப்பு ரீதியில் விதிக்கப்படும் சட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டியதுடன், பின்வரும் விடயங்கள் தொடர்பில் அரசியலமைப்பினூடாக அல்லது நிறைவேற்று ரீதியாக மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகளில் அல்லது தலையீடுகளில் இருந்து அந்த கணக்காய்வு நிறுவனம் விடுதலையளிக்கப்படும்;

- கணக்காய்வு பிரச்சினைகளை தேர்ந்தெடுத்தல்;
- அவர்களது கணக்காய்வினை திட்டமிடல், நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உட்படுத்துதல், நடாத்துதல், அறிக்கையிடல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;
- தமது அலுவலகங்களின் ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துவம்;
- அங்கீகரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தமது கட்டளையின் (Mandate) ஒரு பகுதியாகும் சந்தர்ப்பங்களின் போது தமது தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்;

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களால் தாம் கணக்காய்வு செய்யும் ஒழுங்கமைப்புக்களின் முகாமைத்துவத்தினுள் ஏதேனுமொரு விதத்திலான தலையீடொன்று அல்லது தலையீடொன்று இடம்பெறுவதாக தென்படும் வகையில் செயற்படலாகாது.

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தம்மால் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனங்களுடன் மிகவும் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள கூடாதென உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதன் பிரகாரம் அவர்கள் நோக்கங்களுக்கமைய

செயற்பட்டவாறு உள்ளனர் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தமது கடமைகளை நிறைவேற்றும் போது அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் பூரணமான விருப்புரிமையின் அடிப்படையில் செயற்படக்கூடியதாக இருக்க வேண்டும். அவர்கள் அரசின் நிதியங்களின் பயன்பாடு மற்றும் முகாமைத்துவத்தினை முன்னேற்றுவதற்கு பாடுபடும் அரச அல்லது அரச நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

சர்வதேச கணக்காளர் சம்மேளனத்தினாலும் ஏனைய ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை விதிக்கும் நிறுவனங்களிலும் உத்தியோகபூர்வ ஆவணங்களை அடிப்படையாக கொண்ட பொருத்தமான பணிகள் மற்றும் கணக்காய்வு நியமங்களைப் போன்று ஒழுக்கநெறிக் கோட்பாடுகளும் அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் சட்டங்கள் மூலம் அல்லது சட்டங்களை உருவாக்குவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வருடாந்த செயலாற்றல் அறிக்கையொன்றினை அல்லது அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தினால் சட்ட மன்றத்திற்கு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அந்த நிறுவனத்தால் அந்த அறிக்கைகள் பொது மக்களுக்கு அறிந்து கொள்வதற்கு இடமளிக்க வேண்டும்.

**கொள்கை 4**

தடைகளின்றி தகவல்களை பெறக்கூடியதாக இருத்தல்.

அதி உயர் கணக்காய்வு நிறுவனத்திற்கு சொந்தமான சட்டரீதியான பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு தேவையான அனைத்து ஆவணங்கள் மற்றும் தகவல்களை உரிய நேரத்தில், செம்மைத்தன்மையுடன், நேரடியாக மற்றும் சுதந்திரமாக பெற்றுக்கொள்வதற்கு போதியளவான அதிகாரங்கள் அந்த நிறுவனத்திடம் காணப்பட வேண்டும்.

**கொள்கை 5**

தமது பணிகள் தொடர்பில் அறிக்கையிடுவதற்கான உரிமையும் கடப்பாடும்

தமது கணக்காய்வு பணியின் பெறுபேறுகளை அறிக்கையிடல் தொடர்பில் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வரையறைகளை விதிக்கக்கூடாது. தமது கணக்காய்வு பணிகளின் பெறுபேறின் கீழ் வருடத்திற்கு ஒரு தடவையாவது அறிக்கையிடுவதற்கு அவர்களுக்கு சட்டத்தினால் கட்டளையிடப்பட வேண்டும்.

**கொள்கை 6**

கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கம் மற்றும் கால நிர்ணயத்தினை தீர்மானிக்கும் சுதந்திரம் மற்றும் அவற்றை வெளியிட்டு பகிர்ந்தளித்தல்.

- தமது கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளடக்கத்தினை தீர்மானிக்கும் சுதந்திரம் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படுகின்றது.
- கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் கருத்துக்களை பொருத்தமான முறையில் கவனத்திற் கொண்டு தமது கணக்காய்வு அறிக்கைகளின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கும் சுதந்திரம் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படுகின்றது.
- கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட வேண்டிய ஆகக்குறைந்த தேவைப்பாடுகளை குறிப்பிடலும் பொருத்தமான சந்தர்ப்பங்களின் போது முறையான கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்காக அல்லது சான்றுறுதிப்படுத்துவதற்கான குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் அறிவித்தலொன்று சட்டரீதியான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அறிக்கையிடுவதற்கு தேவையான விடயங்கள் குறிப்பாக சட்டத்தினால் நிரணயிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது தவிர்ந்த தமது கணக்காய்வு அறிக்கைகளின் கால நிர்ணயத்தை தீர்மானிக்கும் சுதந்திரம் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படுகின்றது.
- ஒட்டுமொத்தமான முறையில் சட்டமன்றம், அதன் ஆணைக்குழுவொன்று அல்லது அரசினால் விசாரணையொன்று இல்லாத போது கணக்காய்விற்காக விசேட கோரிக்கையொன்று மேற்கொள்ளப்படும் போது அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு அவற்றை நிறைவேற்ற முடியும்.
- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் அறிக்கைகளை சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் உரிய

அதிகாரிகளுக்கு முறையாக சமர்ப்பிப்பதன் மூலம் கையளித்ததன் பின்னர் அவற்றை வெளியிட்டு பகிர்ந்தளிக்க வேண்டும்.

**கொள்கை 7**

அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தின் பரிந்துரை தொடர்பில் விளைவுடைய பின்தொடர் பொறிமுறையொன்று காணப்படுதல்.

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்கள் தமது அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளினை மீளாய்வு செய்து பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு மீள்திருத்த படிமுறைகளை எடுப்பதற்கு உரிய முறையில் சட்ட மன்றங்களுக்கு அல்லது அதன் ஆணைக்குழுவிற்கு அல்லது கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களைப் போன்றே உரிய முறையில் சட்டமன்றம், அதன் ஆணைக்குழுவொன்று அல்லது கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபை போன்றவற்றின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் உரிய முறையில நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அந்த கணக்காய்வு நிறுவனங்களுக்கு உரித்தான உள்ளக பின் தொடர் முறைமையொன்று காணப்படுகின்றது.

- பின்தொடர் நடவடிக்கைகளை அங்கீகரிப்பதற்கு உரித்தான அரசியலமைப்பு அதிகாரங்கள் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படும் போதும் அந்த கணக்காய்வு நிறுவனங்களுக்குரிய பின்தொடர் அறிக்கைகள் உரித்தாகும் வகையில் சட்டமன்றத்திற்கு அல்லது அதனது ஆணைக்குழுவொன்றிற்கு அல்லது கணக்காய்வினை மேற்கொண்ட நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும்.

**கொள்கை 8**

நிதி மற்றும் முகாமைத்துவம் / நிர்வாக தன்னுரிமை மற்றும் பொருத்தமான மனித, பௌதீக மற்றும் நிதி வளங்கள் காணப்படுதல்.

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு தேவையான மற்றும் சராசரி மனித, பௌதீக மற்றும் நிதி வளங்கள் காணப்பட வேண்டும். இந்த வளங்களை பெற்றுக்கொள்வதனை கட்டுப்படுத்துவதற்கோ செயற்படுத்துவதற்கோ நிர்வாகிகள் முன்வரக்கூடாது. அதி உயர் கணக்காய்வு நிறுவனம் தனது பாதீட்டினை அவர்களாலேயே முகாமை செய்து பொருத்தமான முறையில் ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும்.
- சட்டமன்றம் அல்லது அதன் ஆணைக்குழுவொன்று அதி உயர் கணக்காய்வு நிறுவனம் தமது கட்டளையினை (Mandate) நிறைவேற்றுவதற்கு தேவையான உரிய வளங்களை கொண்டுள்ளதனை உறுதிப்படுத்தும் பொறுப்பினை ஏற்க வேண்டும்.
- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள் அவரகளின் கட்டளைகளை (Mandate) நிறைவேற்றுவதற்கான படிமுறைகளை எடுப்பதற்குரிய அளவில் இல்லாதிருப்பின் அது தொடர்பில் நேரடியாக சட்டமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமை அந்த கணக்காய்வு நிறுவனத்திற்கு காணப்படுகின்றது.

அரசியலமைப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதி மாத்திரம் தொடர்பில் குறிப்பிடுவதுடன் அவரது பதவியணியினரைக் குறித்துக் குறிப்பிடவில்லை. ஆகையால் ஏனைய நாடுகளிலுள்ளவாறு தனிப்பட்ட அதிகாரச்சட்டமொன்றினூடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பதவியணியனரது அதிகாரமும் பொறுப்பும் வரையறுத்துக் கூறப்படுதல் வேண்டும். அத்தேவைப்பாடு 2018 ஆக்ஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மூலம் கிடைத்து உள்ளது.

**அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் ஊடாக அரசியலமைப்பின்**

## 153 மற்றும் 154 ஆம் உறுப்புரைகளிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எதிர்கொள்ளப்பட்ட நிர்வாக மற்றும் நிதிசார் சுதந்திரத்திலுள்ள குறைபாடுகளை நீக்கும் நோக்குடன் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளிற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் தகைமைபெற்ற கணக்காளராக இருத்தலும் வேண்டும். அவர் அரசியலைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தில் பதவி வகித்தலும் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை தலைவராகக் கொண்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினை தாபித்தல். பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக அல்லது அதற்கு மேற்பட்ட பதவியினை வகித்த கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற இரண்டு அங்கத்தவர்கள் மற்றும் இலங்கை உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர் அத்துடன் இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற வகுப்பு I இன் அலுவலர் ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய 3 ஆண்டுகள் நிரந்தர பதவிக்காலத்திற்காக சனாதிபதியினால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்.

- இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் உறுப்பினர்களின் பதவிநீக்கம் என்பவற்றிற்கான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை திணைக்களத்தின் நிர்வாகச் சுதந்திரத்தை பாதுகாக்கும் நோக்குடன் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்படுகின்றது.

- அரசாங்கத்தினால், அரச கம்பனியொன்றினால் அல்லது உள்ளூராட்சி மன்ற நிறுவனமொன்றினால் கம்பனிச் சட்டத்தின் பதிவு செய்யப்பட்ட கம்னியொன்றின் பங்கு மூலதனத்தில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட உரித்துள்ள சகல அரச கம்பனிகளிலும் கணக்காய்வினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடரயப்பரப்பின் கீழ் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களது சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக “பகிரங்க உத்தியோகத்தர்” *என்ற* வரைவிலக்கிணத்திலிருந்து நீக்கப்படுகின்றனர்.

- தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த பாதீடு ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுனர்களின் எவ்வித தலையீடுகளுமின்றி மேற்கொள்வதற்கு போதியளவு நிதிகள் வழங்கப்படுள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பாராளுமன்றத்தினால் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் தேசிய பாதீட்டில் கூட்டிணைப்பதற்காக நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும்.

## 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்

கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையையும் தாபிப்பதற்கும், ஏற்பாடு செய்வதற்கும், பகிரங்க நிதி மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பங்களிப்பைக் குறித்துரைப்பதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நோக்க விடயங்களுக்கான ஏற்பாடுகளும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான ஏற்பாடுகள் பின்வருமாறு இருந்தது.

- கணக்குகள், நிதி, நிதி நிலைமை, அரச நிதியங்களின் நிதிக் கட்டுப்பாடு, கணக்காய்வு நிறுவனங்களின் ஆதனங்களின் பரிட்சிப்பு மற்றும் செயலாற்றல் கணக்காய்வு, சூழல் கணக்காய்வு, தொழில்நுட்பக் கணக்காய்வு மற்றும் ஏனைய விஷேட கணக்காய்வு என்பவற்றை மேற்கொள்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முடியுமான வகையில் விடயப்பரப்பெல்லை விரிவுபடுத்தப்பட்டமை.
- கணக்காய்வை மேற்கொள்கின்ற நிறுவனத்திற்குரிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் அந்த விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான போதியளவான சான்றுகளுடன் பொது மக்களிடையே எவரேனும்மொருவர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்து மூலம் அறவிடுவில்லையாராயின் அந்த விடயங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பரீட்சிக்கப்பட முடியுமாக இருந்ததுடன் அது தொடர்பாக பாரளுமன்றத்திற்குப் அறிக்கையிடப்பட வேண்டும்.
- 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு நியமங்கள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் பொறுப்பேற்கப்படுவதுடன் அது சகல கணக்காய்வாளர்களுக்கும் ஏற்புடையதாகும்.
- செயலாற்றல் கணகாய்வு, சூழல் கணக்காய்வு, தொழில்நுட்பக் கணக்காய்வு மற்றும் வேறு விசேட கணக்காய்வுகளுக்காக இலங்கை கணக்காய்வு நியமங்களின் எந்தவொரு கணக்காய்வு நியமத்தையும் குறித்துரைக்காத சந்தர்ப்பங்களின் போது உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான சர்வதேச நியமங்களின் ஏற்பாடுகளை உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப அவசியமான திருத்தங்களுடன் உள்ளடக்கிய வகையில் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் குறித்துரைக்கப்பட வேண்டும்.
- அரச கூட்டுத்தாபனம், அரச கம்பனிகள் தவிர ஏதாவது கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அல்லது ஏதாவது கணக்குகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்கு ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்ததன் பின்னர் ஐந்து மாதங்களுக்குள் சுருக்கமான அறிக்கையொன்று விநியோகிக்கப்பட வேண்டியிருந்தமை.
- அரச கூட்டுத்தாபனமொன்று அல்லது அரசினால் அல்லது அரச கூட்டுத்தாபனத்தால் பங்குகளில் ஐப்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தைக் கொண்டு இருக்கின்ற கம்பனியொன்றில் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய உரிய பதிவேடுகள் மற்றும் தகவல்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைத்த மூன்று மாதங்களுக்குள் அதன் ஆண்டறிக்கையை பிரசுரிப்பதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- உரிய கணக்காய்வை மேற்கொள்கின்ற நிறுவனம் கையளிக்கப்பட்டுள்ள அமைச்சருக்கும், நிதி விடயங்கள் கையளிக்கப்பட்டுள்ள அமைச்சருக்கும் பிரதியுடன் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து ஐந்து மாதங்களுக்குள் ஒவ்வொரு கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்ற நிறுவனங்களினதும் நிர்வாக சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வருடாந்தம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்கள் அரசாங்கத்தின் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து மூன்று மாதங்கள் கழிவதற்கு முன் திறைசேரி செயலாளரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்ற அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் அல்லது சபைகள் ஏதாவது எழுத்து மூல சட்டத்தின் மூலம் அல்லது அதன் கீழ் அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட வியாபார முயற்சிகள் அல்லது ஏனைய வியாபாரங்கள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது

என கருதப்படுகின்ற தனது பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதமொன்றை அரசாங்கம் அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஏதாவதொரு கம்பனியிலிருந்து கட்டணமொன்று அறவிட வேண்டியிருந்தமை.

- கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ககப்படுகின்ற இலங்கை அரச கணக்காய்வுச் சேவைக்குரிய அங்கத்தவர்களை நியமித்தல், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் சேவையிலிருந்து நீக்குதல் என்பன ஆணைக்குழுவிற்கு உரியதாக இருந்தமை.
- ஆணைக்குழுவினால் ஆட்சேர்க்கப்படுகின்ற நபர்களின் சம்பளம் மற்றும் ஏனைய படிகளும் வேறு அதாவது நலன்களும், சம்பளம் மற்றும் ஊழியர் ஆணைக்குழுவின் கருத்துரைகளைப் பெற்றதன் பின்னர் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த சம்பளம் திரண்ட நிதியத்திற்கு செலவினப் பொறுப்பாக உள்ளது.
- சகல கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறவனத்தாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏதாவதொரு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பைக் காண்பிக்க வேண்டியிருந்ததுடன் வினைத்திறனான கணக்காய்வை மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்குவதற்காக வேலை செய்வதற்கு தேவையான பாதுகாப்பு மற்றும் காப்பீட்டுடன் கூடிய சூழலொன்றை அமைத்து வழங்க வேண்டியுள்ளது.
- நிதி விடயங்கள் கையளிக்கப்பட்டுள்ள அமைச்சரால் குறித்துரைக்கப்படுகின்ற கால எல்லையில் தேசிய கண்ககாய்வு அலுவலகத்தின் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட வேண்டும். சபாநாயகரினால் தீர்மானிக்கப்படுகின்ற தினத்தின் போது அது சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது அறுபது நாட்களுக்கு முன்னர், எதிர்வரும் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உத்தேச செயல் நிகழ்ச்சித்திட்டங்களின் வரைவொன்று தயாரிக்கப்பட்டு சபாநாயகர்கருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை.
- தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிதியாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள், கணக்குகள் மற்றும் ஏனைய தகவல்களைக் கணக்காய்வு செய்வதற்காக சபாநாயரால் தகைமை பெற்ற சுதந்திரமான கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டியிருந்ததுடன் இந்த பணிகளுக்காக கணக்காய்வு அலுவலகம், தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனமொன்றாக கருதப்பட வேண்டியிருந்தமை.
- கணக்காய்வு கட்டணங்களில் 15 சதவீதம், பாராளுமன்றத்தின் இணக்கப்பாட்டுடன் அரசாங்கத்தால் நிதியத்திற்கு செலவு செய்யப்படுகின்ற சகல கொடுப்பனவுகள் மற்றும் சிவில் அல்லது குற்ற வழக்குகளிலிருந்து அறவிடப்படுகின்ற ஏதாவது கிரயமொன்று வருமான மூலமாகக் கொண்டு கணக்காய்வு நிதியமொன்றை ஏற்படுத்த வேண்டியிருந்தமை.
- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டிருந்தமை.
- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது உரிய நிர்வாக சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்தமை.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபருக்கு ஒத்துழைப்பு வழங்குதலை புறக்கணித்தல் குற்றமாக இருந்தமை.
- தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவின் அல்லது இலங்கை அரச கணக்காய்வுச் சேவை என்பவற்றில் ஏதோ ஒரு உத்தியோகத்தரின் தீர்மானத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்துவதற்கு துணிதல் குற்றமாக இருந்தமை.
- சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் விதியொன்றை மீறுகின்ற ஏதோ ஒரு நபர் குற்றமொன்றை புரிவாராயின் நீதிபதியின் முன் ஆஜர்படுத்தப்பட்டு வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியின் மீது ரூபா ஒரு இலச்சத்தை விஞ்சாத தண்டப் பணம் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத

காலத்திற்காக சிறையிலிடுவதற்கு அல்லது அந்த தண்டப் பணம் மற்றும் சிறையிலிடுதல் என்ற இரண்டு தண்டணைகளுக்கும் கட்டுப்படுதல்.

- அரச நிதி மற்றும் கணக்காய்வு தொடர்பான துறையில் மனிதவள இயலுமையை விருத்தி செய்யும் எண்ணத்துடன் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கீழ் அரச கணக்காய்வு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையமொன்று தாபிக்கப்பட வேண்டியிருந்தமை

## எமது நிறுவனக் கட்டமைப்பு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் தலைவர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக காணப்படுவதுடன், திணைக்களத்தின் நிதிநடவடிக்கைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் தொழிற்படுகின்றார். திணைக்களத்தின் தற்போதைய நிறுவகக் கட்டமைப்பு பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு இணையாக ஒவ்வொரு மட்டத்திலும் குறித்தளவு எண்ணிக்கையான உத்தியோகத்தர்களுடன் அதன் அமைப்பில் 05 மட்டங்களைக் கொண்டதாகும்.

முதலாம் மட்டம் 03 மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளை உள்ளடக்குவதுடன் அந்தப் பதவிகள் தற்போது வெற்றிடமாகக் காணப்படுகின்றன. இரண்டாவது மட்டம் 15 பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளை உள்ளடக்குவதுடன் அவர்களால் அரசாங்கக் கணக்காய்வு தொடர்பான கொள்கைகள் மற்றும் ஒட்டுமொத்த அரசாங்க கணக்காய்வு என்பன மேற்பார்வை செய்யப்படுகின்றன. பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் 44 பிரிவுகள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அந்த ஒவ்வொரு பிரிவுகளிற்கும் பொறுப்பாகவுள்ள உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் மூன்றாம் மட்டத்தில் காணப்படுகின்றனர். இந்த உதிவிக் கணக்காள்வாளர் தலைமை அதிபதிகளால் மத்திய அரசாங்க மற்றும் மாகாண சபைகளின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவுத் தலைவர்களிற்கு ஒப்படைக்கப்படுகின்ற கணக்காய்வு கிளைகளின் தலைமைத்துவம் கணக்காய்வு அத்தியட்சகர்கள் அல்லது கணக்காய்வுப் பரீட்சகர் சேவையிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரால் நிறைவேற்றப்படுவதுடன் அவர்களிற்கு குறிப்பிட்டளவு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் நான்காவது மட்டத்தில் உள்ளனர். அதற்கமைய குறித்துரைக்கப்பட்ட விதத்தில் தங்களது கண்காணிப்பில் கொண்டுவரப்பட்டுள்ள கணக்காய்வுக் கிளைகள் செயற்படவேண்டிய முறையினை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான முழுமையான பொறுப்பு பிரிவுத் தலைவருக்கு ஒப்படைக்கப்படுகின்றது. கிளைத் தலைவர்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள கணக்காய்வுப் பரிசோதகர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களை வினைத்திறனாகவும் பயனுள்ள விதத்திலும் சேவையில் ஈடுபடுத்தி அவர்களிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் படி கிளைத் தலைவர்களுக்கு உதவி வழங்கும் அந்த உத்தியோகத்தர்கள் ஐந்தாம் மட்டத்தில் உள்ளனர்.

இலங்கை கணக்காய்வு நியமங்கள், நியதிச்சட்டங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்டத் தேவைப்பாடுகளிற்கு இணங்க பரிசோதனைகள், அவதானிப்புக்கள் மற்றும் தமது அங்கீகரிக்கப்பட்டநிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்ககளப் பரிசோதனைகளை நிறைவேற்றுவதன் ஊடாகஅவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வினை மேற்கொண்டு தமது கிளைத் தலைவர்களுக்கு உதவுகின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டாம் மட்டத்திற்கு உரித்தான பிரதான 44 பிரிவுத் தலைவர்களிலிருந்து 17 பிரிவுகளின் தலைவர்கள் மாகாண மட்டத்தில் பிராந்திய அலுவலகங்களிற்கு பொறுப்பாக செயற்படுவதுடன் அவர்களின் கண்காணித்தல் மூன்று பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளால் மேற்கொள்ளப்படுகின்றது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிர்வாக நடவடிக்கைகள் பணிப்பாளர் (நிர்வாகம்) இன் கீழ் வரும் தாபனக் கிளையாலும் நிதி நடவடிக்கைகள் பிரதான கணக்காளரின் கீழுள்ள கணக்குகள் பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிப்பிரமாணம் 133 இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு பிரதம உள்ளகக் கணக்காய்வாளரின் கீழ் அரசாங்க முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்படுவதுடன், அவர் நேரடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றார்.

கணக்காய்வினை செயற்படுத்துவதற்குரிய ஒழுங்கமைப்பு வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது.


Auditor General
Add.AG(CGSE)
Add.AG(CGMD)
Add.AG(PZIA)
DAG (HUD)
AAG- 1
SAs
AEs
DAG(TND)
AAG -7
SAs
AEs
DAG(COM)
AAG - 2
SAs
AEs
DAG(SOF)
AAG - 2
SAs
AEs
DAG(SBE)
AAG - 1
SAs
AEs
DAG(AGS)
AAG - 1
SAs
AEs
DAG(BAF)
AAG - 1
SAs
AEs
DAG(MDP)
AAG - 2
SAs
AEs
DAG(TCM)
AAG- 2
SAs
AEs
DAG(FFP)
AAG-2
SAs
AEs
DAG(SPR)
AAG - 6
SAs
AEs
DAG(ADM)
Chief Accountant
Accountant
MAs
DAG(ADM)
Director (Admin)
AD(Admin)
MAs
DAG(CGL)
AAG - 13
SAs
AEs
DAG(PTS)
AAG - 3
SAs
AEs
DAG(SPR)
AAG - 1
SAs
AEs
CIA
MAs

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் வகிபாகம் தொடர்பில் மதிப்பாய்வொன்றை மேற்கொண்ட பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2011 நவம்பர் 14 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட புதிய ஊழியர்கோப்பின் பிரகாரம், இலங்கை கணக்காய்வுச் சேவை உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை 350 ஆக உயர்த்தப்பட்டதுடன் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் உத்தியோகத்தர்கள் 1,200 ஆக காணப்பட்டனர். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினை செயற்படுத்துவதற்கான தேசிய கணக்காய்வுச் சட்டம் 2018 யூலை 27 ஆந் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 2018 ஆகஸ்ட் 01 முதல் அமுலுக்குவரும் வகையில் அதிமேதகு சனாதிபதியினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தது. இருப்பினும், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பதவியணிக்காக வரையப்பட்டுள்ள சேவை பிரமாணக் குறிப்பினை நிறைவேற்றிக்கொள்வதற்கு 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை முடியாது போயிருப்பதுடன், ஏற்படுகின்ற வெற்றிடங்களை பழைய சேவைபிரமாணக் குறிப்பின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலேனும் நிரப்புவதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி நிலமையின் கீழ், ஆண்டின் 2019 இன் ஆரம்பத்திலும் 2019 ஆம் ஆண்டின் இறுதியிலும் 2020 யூன் 30 ஆந் திகதியிலும் உள்ளவாறான திணைக்களத்தின் ஒவ்வொரு பதவியிலும் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளன.

| | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடம் | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடம் | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணக்காய்வு பதவியணி | | | | | | | | | |
| **மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி** | 03 | 01 | 02 | 03 | - | 03 | 03 | - | 03 |
| **பிரதிக் கணக்காய்வாளர் தலைமைஅதிபதி** | 15 | 11 | 04 | 15 | 11 | 04 | 15 | 10 | 05 |
| **உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி** | 44 | 32 | 12 | 44 | 26 | 18 | 44 | 23 | 21 |
| **கணக்காய்வு அத்தியட்சகர்** | 288 | 212 | 76 | 288 | 205 | 83 | 288 | 202 | 86 |
| **கணக்காய்வு பரிசோதகர்** | 1200 | 1102 | 98 | 1200 | 1013 | 187 | 1200 | 999 | 201 |
| கணக்காய்வு சாராத பதவியணி | | | | | | | | | |
| **பணிப்பாளர் - நிர்வாகம்** | 01 | 01 | - | 01 | 01 | - | 01 | 01 | - |
| **பிரதான கணக்காளர்** | 01 | 01 | - | 01 | 01 | - | 01 | 01 | - |
| **பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்** | - | - | - | - | - | - | 01 | 01 | - |
| **ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள்** | 17 | 11 | 06 | 17 | 11 | 06 | 17 | 12 | 05 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் இணைந்ததரங்கள்** | 127 | 115 | 12 | 127 | 113 | 14 | 127 | 114 | 13 |
| **அறிக்கை தட்டெழுத்தாளர்** | 42 | 42 | - | 41 | 41 | - | 41 | 41 | - |
| **கனிஷ்ட ஊழியர்கள்** | 213 | 185 | 28 | 213 | 201 | 12 | 213 | 196 | 17 |
| மொத்தம் | **1951** | **1713** | **238** | **1950** | **1623** | **327** | **1951** | **1600** | **351** |

அட்டவணை 01 – 2019 திசெம்பர் 31 இலும் 2020 யூன் 30 இலும் உள்ளவாறுமான பதவியணி நிலைமை

மேலே குறிப்பிட்டவாறு, 2019 ஜனவரி 01 முதல் 2019 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 238 பேர் முதல் 327 பேர் வரையிலான வீச்சில் பதவியணியினர் வெற்றிடங்கள் நிலவுகின்றமை காரணமாக தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பாரிய இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறே 2020 யூன் 30 ஆந் திகதி வரையில் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை 351 ஆக அதிகரித்திருந்தது.

## சேவைப் பிரமாணக் குறிப்பை அங்கீகரித்துக்கொள்ளல்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பதவியணி, இலங்கை கணக்காய்வுச் சேவை மற்றும் கணக்காய்வுப் பரிசோதகர் சேவை உத்தியோகத்தர்களை உள்ளடக்குகின்றது. அப்போது காணப்பட்ட நிலைமையின் கீழ், 6/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த இரு சேவைகளிற்காகவும் தனித்தனியான சேவைப் பிரமாணக் குறிப்புகள் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பிரேரணைகள் மற்றும் கோரிக்கைகளை ஆராய்வதற்காக சனாதிபதியின் செயலாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு அப்போதைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை தலைவராகக் கொண்டு இரண்டு முன்னாள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளையும் சனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ஒருவரையும் உள்ளடக்கியிருந்தது. குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளைக் கவனத்திற்கொண்ட பின்னர், இலங்கை கணக்காய்வுச் சேவையினையும் கணக்காய்வு பரிசோதகர் சேவையினையும் ஒன்றிணைத்து “இலங்கை பொதுக் கணக்காய்வுச் சேவை” என்ற பெயரில் புதிய சேவையொன்றை தாபிப்பதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2014 திசெம்பர் 23 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது.

மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை கணக்காய்வுச் சேவையினையும் கணக்காய்வு பரிசோதகர் சேவையினையும் ஒன்றிணைத்து தாபிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள “இலங்கை பொதுக் கணக்காய்வுச் சேவை” அரசாங்கத்தினால் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி புதிய சேவைக்கான சேவைப்பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டு வருவதுடன், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அரசாங்க கணக்காய்வு ஆணைக்குழு அதனை அங்கீகரித்துக் கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. புதிய சேவை பிரமாணக் குறிப்பை அங்கீகரித்துக் கொள்வதன் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளையும் தொழிற்பாடுகளையும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றுவதற்காக மிக உயர்தொழில் தரத்தில் பதவியணியினரை பேணுவதற்கான வாய்ப்பினை இது வழங்கும். அத்துடன், புதிய சேவையின் நியமன மற்றும் ஒழுக்காற்று அதிகாரி கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவாக உள்ளமையால் அத்தொழிற்பாடுகளை தாமதமின்றி நிறைவேற்றுவதற்கான இயலுமை

காணப்படுகின்றமையால் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் செயலாற்றலை உயர்த்துவதற்கு அது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

### பதவியணியினர் பயிற்சி

அரச வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பயன்படுத்துவதனை வலுப்படுத்துவதற்குத் தேவையான பங்களிப்பு மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் இலங்கை மக்களுக்கு தரமான மற்றும் நம்பிக்கையூட்டுகின்ற அரச சேவையை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் அரச நிறுவனங்களின் நிதி மற்றும் செயலாற்றல் கடமைகளை நிறைவேற்றல் சம்பந்தமாக கணக்களிக்கும் பொறுப்பு சரியான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை பரீசீலித்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த நியதிச்சட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக, 1,277 கணக்காய்வு உத்தியோகத்தர்களையும் மற்றும் 355 உதவிச் சேவைகளிற்கான உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய பதவியிணியினரின் பங்களிப்பு தற்போதைய தேசிய கணக்காய்வுத் திணைக்களத்தினால் பெறப்படுகின்றது.

அதற்கிணங்க அலுவலகத்தின் பயிற்சி பிரிவினால் உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் தேவைப்பாடுகளுடன் பொருந்தும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்வதற்கும் அதற்காக அவர்களுக்கு அவசியமான உதவியை வழங்குவதன் மூலம் அவர்களை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதற்காக வளப் பங்களிப்பை அலுவலகத்தில் சேவையாற்றிக்கொண்டிருக்கும் தகுதியான, திறமையான உத்தியோகத்தர்களின் உதவியையும் வெளிவாரி விரிவுரையாளர்களின் உதவியையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக விரிவுரைகள், கலந்துரையாடல்கள் நடைமுறை பயிற்சி மற்றும் களச் சுற்றுலாக்கள் போன்ற பயிற்சி முறைகளை பயன்படுத்தி நடாத்துவதன் மூலம் பின்வரும் நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் தொழில்நுட்பத் திறன்களை அபிவிருத்தி செய்தல்.
- உத்தியோத்தர்களின் வினைத்திறனையும் செயலாற்றலையும் உயர்த்துதல்.
- உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ ஆற்றல்களை விருத்தி செய்தல்.
- கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான அறிவு ஆற்றல் மற்றும் விவேகத்தை வழங்குதல்.
- நிதிசார்ந்த மற்றும் சேவை சட்டங்கள் தொடர்பான அறிவை வழங்குதல்.
- குழு ஆற்றலை அபிவிருத்தி செய்தல்.
- உத்தியோகத்தர்களின் நேர் மனோபாவத்தை அபிவிருத்தி செய்தல்

### உள்நாட்டில் பயிற்சியளித்தல்

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக 2019 ஆம் வருடத்திலே அலுவலகத்தின் பயிற்சி பிரிவினால் அனைத்து கணக்காய்வு உத்தயோகத்தர்களையும் உள்ளடக்கும் வகையில் 10 தலைப்புகளின் கீழ் 51 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு அல்லாத பதவியணியினரையுடைய உத்தியோகத்தர்களுக்காகவும் பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

### வெளிநாடுகளில் பயிற்சியளித்தல்

அனைத்து கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்காக செயலாற்றல் கணக்காய்வு சம்பந்தமாக வெளிநாட்டு பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட மலேசிய செயலாற்றல் கணக்காய்வு பயிற்சி வேலைத்திட்டத்திற்காக மீளாய்வாண்டிலே 229 உத்தியோகத்தர்கள் பங்கேற்றிருந்ததுடன் வேறு 06 தலைப்புக்கள் உள்ளடக்கப்படும் வகையில் 29 கணக்காய்வு உத்தயோகத்தர்கள் 22 வெளிநாட்டுப் பயிற்சி வேலைத்திட்டங்களுக்கு பங்கேற்றிருந்தனர்.

மீளாய்வாண்டிலே திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான விபரங்கள் அட்டவணை 02 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | நிகழ்ச்சித்திட்டங்களின் விபரம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் | | | | பயிற்சி மணித்தியால எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பகுதித்தலைவர்கள் | கணக்காய்வு அத்தியட்சகர்கள் | கணக்காய்வு பரீட்சகர் | மொத்தம் | |
| உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | | | | | | | |
| 1 | நிதிசார் கணக்காய்வு பயிற்சி | 21 | 40 | 160 | 706 | 906 | 7,111 |
| 2 | செயலாற்றல் கணக்காய்வு பயிற்சி | 9 | 29 | 213 | 908 | 1,150 | 14,072 |
| 3 | பெறுகை மற்றும் நிர்மானக் கணக்காய்வு | 3 | | 4 | 18 | 22 | 189 |
| 4 | தடயக் கணக்காய்வு பயிற்சி | 5 | 40 | 27 | 136 | 203 | 5,191 |
| 5 | கணனி தொடர்பான பயிற்சிகள் | 1 | | | 28 | 28 | 609 |
| 6 | வரி தொடர்பான பயிற்சிகள் | 3 | | 9 | 237 | 246 | 3,507 |
| 7 | நேர் மனப்பாங்கு அபிவிருத்திச் செயலமர்வுகள் | 5 | 40 | 221 | 1,028 | 1,289 | 17,830 |
| 8 | அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக காணிகளை சுவீகரித்தல் | 1 | 4 | 6 | 31 | 41 | 892 |
| 9 | அறிக்கையிடல் பயிற்சிகள் | 1 | 9 | 94 | 162 | 265 | 1,921 |
| 10 | வளவாளர்களை பயிற்றுவித்தல் நிகழ்த்திட்டம் | 2 | 8 | 43 | 25 | 76 | 2,030 |
| | **மொத்தம்** | 51 | | | | 4,516 | 53,352 |
| வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள் | | | | | | | |
| 1 | செயலாற்றல் கணக்காய்வு | 4 | 1 | 3 | 226 | 230 | 20,010 |
| 2 | நிதி மேசடி குற்றப் புலனாய்வு | 1 | 1 | 3 | 3 | 7 | 305 |
| 3 | பொது நிர்மாண பணிகள் மீதான அரசாங்கக் கணக்காய்வு JICA | 1 | | 2 | | 2 | 363 |
| 4 | தகவல் தொழில்நுட்பக் கணக்காய்வு | 1 | | | 1 | 1 | 87 |
| 5 | அரச கணக்காய்வு முகாமைத்துவம் | 1 | | 3 | | 3 | 457 |
| 6 | ASSOSAI/ SAI பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் கூட்டங்களும் | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6.1 | International Workshop on Audit of Waste Management – India | 1 | | | 1 | 1 | 73 |
| 6.2 | 13thBAI seminar on IT Audit - Korea | 1 | | 1 | | 1 | 51 |
| 6.3 | Audit of Financial Statements of CIRDAP for the 19th Biennium – Bangladesh | 1 | 1 | | 1 | 2 | 174 |
| 6.4 | 19th INTOSAI WEGA Meeting – Thailand | 1 | | | 1 | 1 | 44 |
| 6.5 | SAI Leadership and Stakeholders Meeting | 1 | 1 | | 1 | 2 | 87 |
| 6.6 | Asian Evaluation Week | 1 | 1 | | | 1 | 44 |
| 6.7 | Seminar on enhancing work comprehensive for Young Officials | 1 | | 1 | | 1 | 167 |
| 6.8 | IFAD Financial Management Meeting | 1 | | | 1 | 1 | 29 |
| 6.9 | Seminar on Belt & Road Countries Risk Management Capacity Improvement | 1 | 1 | | | 1 | 94 |
| 6.10 | Seminar on China's Development Experience | 1 | | 1 | | 1 | 218 |
| 6.11 | IPSASB Round Table and Capacity Building Forum | 1 | 2 | | | 2 | 102 |
| 6.12 | Regional Public Financial Management Forum – Bangladesh | 1 | | 1 | | | 29 |
| 7 | பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் | 1 | | 1 | | 1 | |
| | **மொத்தம்** | 23 | | | | 258 | 21,330 |

அட்டவணை 02 - மீளாய்வாண்டில் திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்கேற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள்

## கணனிமயப்படுத்திய தரவுத்தள முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல்

உத்தியோகத்தர்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு, பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்வதற்கும் ஒவ்வொரு உத்தியோகத்தருக்குமென வெவ்வேறாக பயிற்சி அறிக்கைகளைப் பேணிச் சென்று அவற்றை நாளதுவரையாக்குவதற்கும் கணனிமயப்படுத்திய தரவுத்தளமொன்று (Computerized Data System) 2019 ஆம் ஆண்டு முதல் பயிற்சிப் பிரிவினால் பேணிவரப்படுகின்றது.

## வெளிவாரி நிறுவனங்களிற்கு வளவாளர்களை வழங்குதல்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள 39 உத்தியோகத்தர்களினால் 2019 ஆம் ஆண்டில் அட்டவணை 03 இல் காட்டப்பட்டுள்ளவாறான விடயப் பரப்புகளின் கீழ் ஏனைய அரசாங்க நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் கணக்காய்வு மற்றும் அதனையொத்த துறைசார்ந்த அறிவினையும் இயலுமையினையும் விருத்திசெய்வதற்காக அவர்களது அறிவினை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

| விடயப்பரப்பு / நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நிறுவன எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| புதிய கணக்காய்வுச் சட்டம் தொடர்பில் அறிவுறுத்துதல் | 93 | 93 |
| நிதிப்பிரமாண மற்றும் கொள்வனவு நடைமுறைகள் | 1 | 1 |
| கணக்காய்வும் முகாமைத்துவமும் | 1 | 1 |
| கொள்வனவும் களஞ்சியப்படுத்தலும் | 1 | 1 |
| கணக்காய்வு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 3 | 6 |
| நிர்மாணக் கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1 | 1 |
| அரச நிதி முகாமைத்துவமும் நிதிப் பொறுப்புக்களும் | 2 | 2 |
| சிறிய மற்றும் நடுத்தரளவான நிறுவனங்களில் கணக்காய்வின் பயன்பாடு | 1 | 1 |
| மொத்தம் | **103** | **106** |

அட்டவனை 03, வெளிவாரி நிறுவனங்களிற்கு வளவாளர்களை வழங்குதல்
மூலம்: தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பயிற்சிப் பிரிவு


THE AUDITOR-GENERAL'S
PERFORMANCE AUDIT REPORT :
PROCESS AND ISSUES
Presented by Tan Sri Dr. Madinah Mohamad,
Former Auditor-General of Malaysia
NATIONAL AUDIT ACADEMY
18 APRIL 2019






Background of the Case

## தகுதியுள்ள கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துதல்

தற்போது நிலவும் வெற்றிடங்கள் காரணமாக உருவாகியுள்ள வளப் பற்றாக்குறைக்கான இடைவெளியை நிரப்பும் நோக்கிலும் நிபுணத்துவ சேவையின் தேவைப்பாட்டை குறிப்பாக அரச வங்கிகளின் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கும் தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசு அரசியலமைபின் 154 ஆம் உறுப்புரை மூலம் தகமை பெற்ற கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துவதற்கான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சு மற்றும் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம், தொடர்புடைய அமைச்சு, மற்றும் கணக்காய்வு கம்பனிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய விதத்தில் திணைக்களத்தின் கணக்காய்வு கட்டண குழுவின் அங்கீகாரத்தின் மீது குறித்த கணக்காய்வு கம்பனிகளுக்கு அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சேவைகளுக்காக 2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 33.85 மில்லியன் மற்றும் ரூபா 43.38 மில்லியன் என செலுத்தப்பட வேண்டியுள்ளது. தகமை பெற்ற கணக்காய்வாளர்களின் சேவையினைப் பெற்றுக் கொள்கையில் அவர்களால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் தரம், கம்பனியில் உள்ள பங்காளர்களின் எண்ணிக்கை, அவர்களுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கணக்காய்வுப் பயிலுனர்களின் எண்ணிக்கை போன்ற காரணிகள் கருத்திற் கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக கணக்காய்வுக் கம்பனியின் தரத்தினைக் காட்டும் விடயங்களில் ஒன்றான அவர்களின் சர்வதேச தொடர்புகள் மற்றும் அவர்களால் வழங்கப்படுகின்ற தொழில்சார் சேவைகளின் தரம் என்பன அவர்களை தெரிவு செய்யும் தேர்வுகளில் உள்ளடக்கப்படுகின்றன.

பொதுவாக, ஓர் குறித்த கம்பனிக்கு ஆகக் கூடிய அளவில் 05 ஆண்டுகளுக்காக ஓர் குறித்த கணக்காய்வு ஒப்படை தொடர்ந்து வழங்கப்படுகின்றது.

பிரதான 02 அரச வர்த்தக வங்கிகள் மற்றும் பத்தொன்பதாம் அரசியலமைப்பு திருத்தத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்பிற்கு உள்ளடக்கப்பபட்ட 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட அரச உரித்தினைக் கொண்டுள்ள கம்பனிகள் உட்பட 2018 மற்றும் 2017 ஆண்டுகளில் முறையே 76 மற்றும் 72 நிறுவனங்களைக் கணக்காய்வு செய்வதற்காக பொதுத் தொழிலில் துறையில் ஈடுபட்டுள்ள முறையே 23 மற்றும் 27 கணக்காய்வுக் கம்பனிகள் எனக்கு உதவி வழங்கின. மேலும் கணக்காய்வு பரீட்சகர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமையால் திணைக்களத்தினால் குறித்த கம்பனிகள் நேரடிக் கணக்காய்விற்கு உட்படுத்துவதற்கும் பிரதான இரண்டு வர்த்தக வங்கிகளின் கிளைகளை கணக்காய்வு செய்வதற்காகவும் தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை நியமிக்காமல் இருப்பதற்கு எடுத்த தீர்மானம் காரணமாக 2017 ஆம் ஆண்டு முதல் ஈடுபடுத்தப்பட்ட ஒத்துழைப்பு பெற்றுக்கொண்ட கணக்காய்வு கம்பனிகளின் அளவு குறைவடைந்துள்ளது.

## பாராளுமன்றத்திற்கு உதவுதல்

அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம், பொது நிதி மீதான முழுமையான கட்டுப்பாட்டினை பாராளுமன்றம் கொண்டுள்ளது. தேசிய கணக்காய்வு அலுவலகமானது, பொது முயற்சிகளின் நிதிப் பராமரிப்பும் சிக்கனமும், செயற்பாட்டு வினைத்திறனும் செயற்திறனும் மீது பாராளுமன்றத்துக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்கும் கடமைப்பொறுப்புடன் அரசாங்கத்தின் வெளிவாரிக் கணக்காய்வாளராக செயற்பட்டு பொதுக் கணக்களிப்பொறுப்பு முறைமைக்கு பிரதான பங்களிப்பினை மேற்கொள்கின்றது. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 119 மற்றும் 120 இன் கீழ் தாபிக்கப்பட்டுள்ளன முறையே அரசாங்க கணக்குகள் குழு மற்றும் பொது முயற்சிகள் குழு என்பவற்றின் கவனத்திற்கு எடுக்கப்படுகின்றன. பொதுக் கணக்குகளை பரிசோதிப்பதன் ஊடாக பொது நிதிகள் மற்றும் வளங்களினது பயன்படுத்தலைக் கருத்திற்கொண்டு சட்டமியற்றுவோருக்கு உதவுவதே இந்த இரண்டு குழுக்களினதும் வகிபாகமாகும். ஆகையால், பொதுத்துறையின் கணக்களிப்பொறுப்பு மற்றும் பயனுள்ள நல்லாளுகையினை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கக் கணக்ககளை பரிசோதித்து, அரசாங்க நிதிகள் மற்றும் வளங்கள் உரியவாறு பயன்படுத்தப்பட்டுள்ளனவா எனப் பரிசோதித்தறிவதற்கு பாராளுமன்றத்திற்கு

உதவுகின்ற சிக்கலான வகிபாகமொன்று இந்த இரண்டு குழுக்களிற்கும் உள்ளன.

நிலையியல் கட்டளை 119 இன் படி, பொதுச் செலவினத்தை பராமரிப்பதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதிகளின் செலவினத்தைக் காட்டுகின்ற பகிர்வுக் கணக்குகள் மற்றும் குழு தேவையெனக் கருதி பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படுகின்ற ஏனைய கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளின் உதவியுடன் சேர்த்து பரிசோதித்தில் அரசாங்க கணக்குகள் குழுவின் கடமைப்பொறுப்பாக உள்ளது. பொதுவாக எந்தவொரு திணைக்களம், உள்ளூராட்சி அதிகாரசபை மற்றும் அவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பில் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், நிதியியல், நிதிசார் நடைமுறைகள், செயலாற்றல் மற்றும் முகாமைத்துவம் மீது அவ்வப்போது பாராளுமன்றத்திற்கு அரசாங்க கணக்குகள் குழுவினால் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபனங்கள், முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அரசாங்கத்தினால் மூலதனத்திற்குப் பங்களிப்புச் செய்யப்பட்டுள்ள தொழில் முயற்சிகள் மற்றும் எவையேனும் எழுத்திலமைந்த அதிகாரச்சட்டத்தினால் அரசாங்கம் கையேற்ற வணிக முயற்சிகளின் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடன் சேர்த்து பரிசோதித்தில் நிலையியல் கட்டளை 120 இன் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பொது முயற்சிகள் குழுவின் கடமையாகும். அரசாங்க கூட்டுத்தாபனங்கள், முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அரசாங்கத்தினால் மூலதனத்திற்குப் பங்களிப்புச் செய்யப்பட்டுள்ள தொழில் முயற்சிகள் மற்றும் எவையேனும் எழுத்திலமைந்த அதிகாரச்சட்டத்தினால் அரசாங்கம் கையேற்ற வணிக முயற்சிகளினதும் குழுவினால் பணிப்புரை வழங்கப்பட முடிந்த அவ்வாறான நிறுவனங்களினதும் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், பாதீடுகளும் வருடாந்த மதிப்பீடுகளும், நிதியிடுதல்களும் முகாமைத்துவமும் மீது குழுவானது அவ்வப்போது பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

இரண்டு குழுக்களிற்கும் உரித்தான அங்கத்தவர்களை உள்ளடக்கிய உப குழுக்களை நியமிப்பதற்கு அரச கணக்குகள் குழு மற்றும் அரச முயற்சிகள் மீதான குழுவிற்கு அதிகாரமுள்ளதுடன் எந்தவொரு நபரையும் அழைத்து வினவுவதற்கும் அதிகாரமுள்ளது. அத்துடன், எந்தவொரு ஆவணத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஏனைய ஆவணத்தினை பரிசோதிப்பதற்கும் களஞ்சியங்கள் மற்றும் ஆதனங்களிற்கு பிரவேசிப்பதற்குமான அதிகாரம் அவற்றுக்கு உள்ளது.

பாராளுமன்றத்திலுள்ள ஆளும் தரப்பு மற்றும் எதிர்க்கட்சியினை பொருத்தமான விதத்தில் பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஏற்றவாறு குழுவினால் பெயரிடப்படுகின்ற 16 பாராளுமன்ற உறுப்பினர்களை பொது முயற்சிகள் குழு மற்றும் பொதுக் கணக்குகள் குழு அவற்றின் அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. அரசாங்க கணக்குகள் குழு மற்றும் அரசாங்க பொது முயற்சிகள் குழு ஆகிய இரண்டு குழுக்களினதும் பரிசோதனைகளின் பின்னர் அவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றுத் தரப்பினர் ஏற்றுக் கொள்கின்றனரா என்பது மாத்திரமன்றி அந்த பரிந்துரைகள் பயனுள்ள விதத்திலும் முழுமையாகவும் அமுல்படுத்தப்பட்டு, மிக முக்கியமாக நிதி செயற்திறன் மற்றும் சேவைகளின் தர நிலைமை தொடர்பில் நேர்சிந்தனையான மாற்றம் இடம்பெற்றுள்ளதா என்பதனை பரிசோதித்து, அமுலாக்கப்படுகின்ற செயன்முறை குறித்து இக்குழுக்களிற்கு மீண்டும் அறிக்கை சமர்ப்பித்தல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைப்பொறுப்பிற்குள் உள்ளடங்குகின்றது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரது பிரதிநிதிகளால் விசேடமாக கணக்காய்வில் நேரடியாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் உதவியுடன் குழுக்களிற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. குழுக்களின் செயற்பாடுகளிற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி முக்கியமான பணியொன்றை மேற்கொள்வதுடன் மீளாய்வுக்குரிய விடயம் தொடர்பில் தேவைப்படுகின்ற அனைத்து தகவல்களையும் அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்தி குழுக்களிற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

பின்புலத்திலுள்ள தகவல்களை வழங்குதல் மற்றும் விவாதிக்கப்படுகின்ற விடயத்துடன் தொடர்புடைய கருத்துக்களை தெரிவிப்பதன் மூலம் குழுக்களிற்கு உதவுதலே கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பணியாகும். கணக்குகள் குழுக்களின் விசாரணையின் போது தகவல்களை

வழங்குதல், குழுக்களிற்கு கருத்துரை தெரிவித்தல் மற்றும் குழுக்களின் உறுப்பினர்களால் கேட்கப்படுகின்ற வினாக்களிற்கு விடையளித்தலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. வினவப்பட வேண்டிய வினாக்கள் தொடர்பில் நடைமுறையொன்றை அல்லது எவையேனும் கலந்துரையாடப்பட வேண்டிய பிரச்சினை தொடர்பான பின்புலத் தகவல்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதி முன்மொழிகின்றார்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தொடர்புடைய அரசாங்க நிறுவனத்தின் செயற்பாட்டுச் செயலாற்றலை பரிசோதிப்பதற்காக குறித்த அரசாங்க நிறுவனத்திற்கு ஏறத்தாழ ஒரு மாதகால அவகாசம் குழுவினால் வழங்கப்படுகின்றது. கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் நாளதுவரையாக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் குறித்துரைக்கப்பட்ட காலத்தில் குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். குழுவில் கலந்துரையாடப்படுவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சிறு குறிப்பொன்றை தயாரித்துக்கொள்வதற்கு ஏற்றவிதத்தில் பதிலளித்தலொன்றை கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனம் தயாரித்து வழங்குதல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கியுள்ள பரிந்துரைகளை கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்ற நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்டமை தொடர்பான செயன்முன்னேற்றம் மீதான தகவல்கள் நியாயமானவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அனைத்துப் பதில்களும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. மீளாய்வின் நிறைவின் பின்னர் தொடர்புடைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது ஆளுகைச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் கருத்திலெடுக்கப்பட்டு கணக்காய்வு அறிக்கை மூலம் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களைக் கொண்டு சிறியளவிலான கலந்துரையாடல் குறிப்பொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்படுகின்றது. ஆகையால். குழுவின் உறுப்பினர்களிற்கு அந்த கணக்காய்வு அவதானிப்புக்களிலிருந்து கணக்காய்வுக்கு உட்பட்டுத்தப்பட்ட நிறுவனத்தின் தற்போதைய நிலைமையினை தெளிவாக புரிந்துகொள்ள முடியும். மேலும், முன்னர் நடாத்தப்பட்ட கூட்டங்களில் வழங்கப்பட்ட பணிப்புரைகளை அமுல்படுத்தலின் செயன்முன்னேற்றம் அந்த கலந்துரையாடல் குறிப்பில் வேறாக உள்ளடக்கப்படுகின்றது.

2019 ஆம் வருடத்தினுள் அரச கணக்குகள் குழுவினால் 20 அரச நிறுவனங்களை பரிசோதிப்பதற்காக 32 குழு அமர்வுகளும் செயலாற்றல் அறிக்கைகள் மற்றும் விசேட கணக்காய்வு அறிக்கைகளை பரிசோதிப்பதற்காக 09 நிறுவனங்கள் தொடர்பில் 11 குழு அமர்வுகளும் நடத்தப்பட்டுள்ளதுடன், பொது முயற்சிகள் குழுவினால் 31 அரச நிறுவனங்களை பரிசோதிப்பதற்காக 37 குழு அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

விசேடமாக அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளை மதிப்பீடு செய்வதற்காக தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட வினாப்பட்டியலை தயார் செய்யும் பொருட்டு தேசிய கணக்காய்வு அலுவலக உத்தியோகத்தர்களினால் அரச கணக்குகள் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. ஒவ்வொறு மற்றும் அனைத்து அரச நிறுவனங்களும் தமது செம்மைத்தன்மையினை உறுதி செய்வதற்காக வழங்கப்படுகின்ற பதிலளித்தல்களின் செல்லுபடியான தன்மையை உறுதி செய்தலின் ஊடாக கணக்காய்வு அலுவலக உத்தியோகத்தர்கள் இக் குழுவிற்கு மேலும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்படும் மிகை அறவீடு

இலங்கையில் 341 உள்ளூராட்சி நிறுவனங்கள் காணப்படுவதுடன், 24 மாநகர சபைகள், 41 நகரசபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் அவற்றுள் உள்ளடங்கும். இந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் உரிய கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச்சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.

அந்த கட்டளைச்சட்டங்கள் மற்றும் அதிகாரச்சட்டங்களில் சட்டத்திற்கு முரணாக கொடுப்பனவு விடயங்கள், கவனயீனம் அல்லது மோசடியினால் ஏற்பட்ட நட்டம் மற்றும் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், குறிப்பிடப்படாத விடயங்களை மிகை அறவீடு செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அந்த அதிகாரத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான 10 வருட காலப்பகுதியினுள் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் சம்பந்தப்பட்ட 529 தரப்பினர்களிற்கு ரூபா 32.73 மில்லியன் தொகையான 82 மிகை அறவீட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் ரூபா 6.11 மில்லியன் அல்லது 18.67 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் மிகை அறவீட்டினை அறவீடு செய்யும் நடைமுறை தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி மேற்கொள்கின்ற செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு

அரச நிறுவனங்களின் நிகழ்ச்சித் திட்டமொன்றின் செயறதிட்டமொன்றின் வெவ்வேறு செலவின அலகொன்றின் தெரிவு செய்யப்பட்ட துறை தொடர்பாக அரச நிறுவனங்களின் செயற்பாடுகளின் சிக்கனம் செயற்திறன், வினைத்திறன் மற்றும் சுற்றாடல் தாக்கம் என்பவற்றை மதிப்பீடு செய்யப்பட்டு உரிய கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய மேம்படுத்தல்கள் தொடர்பாக பரிந்துரைகள் உட்பட அறிக்கையிடல் செயலாற்றல் கணக்காய்வின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

அரச நிறுவனங்களின் வெவ்வேறு துறைகள் ஏனைய கணக்காய்வு கிளைகளில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் இச்செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு அலகின் மூலம் தெரிவு செய்யப்படும் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் தாக்கங்கள் உள்ள விசேட துறை ஊடாக செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் நிதிக் கணக்காய்வு அறிக்கைகளுக்கு மேலதிகமாக சமர்ப்பிக்கப்படுகின்ற செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்றன. இத்துறைக்காக தேசிய கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

செயலாற்றல் கணக்காய்வு செயற்படுத்தும் போது செயற்பாடுகளை அடிப்படையாக கொண்ட பாதீடொன்று செயற்படுத்துதல் மற்றம் ஒவ்வொரு நிறுவனத்திற்காக பிரதான செயலாற்றல் குறிகாட் (Key Performance Indicators) தீர்மானித்தல் மிகவும் முக்கியமான விடயமாக இருந்த போதும் இலங்கையில் தற்போது அலுவலகங்களை அடிப்படையாக கொண்ட பாதீட்டு முறைமையொன்று செயற்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக ஒவ்வொரு துறைக்குரிய செயலாற்றல் குறிகாட்டி எம்மால் தீர்மானிக்கப்பட்டு செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றல் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

## கலை பிரிவின் கீழ் கல்விகற்கேபார் எண்ணிக்கை மற்றும் கலைப் பட்டதாரிகளிற்கான வேலைவாய்ப்பின்மை

இதுவரை இலங்கையின் சனத்தொகையில் 21.3 மில்லியனாக இருப்பதுடன் அச்சனத்தொகையில் வேலைவாய்ப்பில் உள்ளவர்கள் 8.31 மில்லியன் என அறிக்கையிடப்பட்டுள்ளது. மீளாய்வாண்டு வரை மொத்த வேலையின்மை . அண்ணளவாக 362,999 ஆன அளவில் காணப்படுகின்றது. இத்தொழிலற்றவர்களுக்கு இடையே 38.4 சதவீதமானோர் ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் பொருத்தமான வேலையைத் தேடிக்கொண்டிருப்பதாக ஆய்வொன்றின் தரவுகள் மூலம் அறியப்பட்டுள்ளது. இதில் அதிகமானோர் கலை விடயப் பரப்பில் கல்வி கற்ற பட்டதாரிகள் ஆவர்.

இதற்கமைய நாளுக்குநாள் பல்வேறு ஊடகங்களினூடாக சித்தரிக்கப்படும் வகையில் இலங்கையில் வேலையின்மையால் வாடும் பட்டதாரிகள் விசேடமாக கலைப்பரிவு பட்டதாரிகள் போன்று உயர்தரத்தில் கலைப்பிரிவு பாடவிதானத்தில் கல்வி பயின்று பல்கலைக்கழக வாய்ப்பினை பெறத் தவறிய மாணவர்களின் வேலையின்மை பிரச்சினைக்குரியதாக உள்ளதுடன், அது தொடர்பில் அரச நிறுவனங்களின் தலையீட்டினை மதிப்பீடு செய்யும் நோக்கில் இந்தச் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலகின் அனைத்துச் சமூகத் தரங்களிலும் கலையானது கட்டாயமாகக் காணப்படுவதாகும். அது மனித சமூகத்தின் நலனுக்கான அத்தியாவசிய அங்கமாகும். அதற்கமைய பாடசாலை மட்டத்தில், பல்கலைக்கழக மட்டத்தில் இலக்கியவாதிகள், நாடகக் கலைஞர்கள், சினிமாக் கலைஞர்கள், இசையமைப்பாளர்கள், சித்திரக் கலைஞர்கள் எனப் பல்வேறு தரங்களில் தொழில் ரீதியிலான கலைஞர்களை உருவாக்குவதற்கு முதன்மையான பங்களிப்பினை வழங்குகின்றது. ஆயினும் பொருளாதார வளர்ச்சி வேகம் **2.7** சதவீதமளவான குறைவான பெறுமதியில்

உள்ளதும் தொழிற்படையிலுள்ள **4.3** சதவீதமானோர் வேலையின்றி இருக்கும் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றில் கல்வியானது பொருளாதார வளர்ச்சியை நோக்கி செல்ல வேண்டியதுடன் கல்வி மற்றும் தொழில் வாய்ப்பு என்பவற்றுக்கிடையான பொருத்தமின்மையையும் குறைக்கப்படல் வேண்டும்.

இந்த செயலாற்றல் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கிய அவதானிப்புக்களில் இலங்கையில் பாடசாலைக் கல்வி மற்றும் உயர் கல்விக்கான கால அடிப்படையில் மீளமைக்கப்பட்ட கல்விக் கொள்கைகள் இன்றி கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுவதும், பாடசாலை மட்டத்தில் நிலவும் மனித வளம் மற்றும் பௌதீக வசதிகளின் குறைபாடுகளின் அடிப்படையில் மாணவர்களில் ஒருபகுதியினர் உயர்தரத்தில் கலைப்பிரிவு பாடவிதானத்தினைத் தெரிவு செய்வதும், விசேடமாக மாணவர்களுக்கு தொழில்நுட்ப ரீதியான பாடவிதானங்களைக் கற்பதில் இடையுறுகள் காணப்படுவதும், பல்கலைக்கழகக் கல்வியை நோக்குமிடத்து அவற்றில் கலைப்பரிவு பட்டப் பாடநெறிகள் நடப்புக் காலத்திற்கேற்ற வகையில் மீளமைக்கப்பட்டிராமையும், ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் மென் திறன்களை வளர்த்துக் கொள்ளும் நோக்கில் காணப்படும் சந்தர்ப்பங்கள் குறைந்தளவே உள்ளது என்பதும் அவதானிக்கப்பட்டது.

நாட்டில் ஆளணி திட்டமிடல் கொள்கையொன்று **2018** ஆம் ஆண்டில் மீளமைப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் அதை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இரு நிறுவனங்களுக்கூடாக இடம் பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் எந்த ஒரு நிறுவனமொன்றினாலும் நிலவும் தொழில் சிக்கல்களை அறிந்து அதற்கான நிலையான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடியாதிருந்தது.

அவ்வாறான நிலையில் **2012** ஆம் ஆண்டுகளில் **2018** ஆண்டுகளில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்துள்ள **54,824** பட்டதாரிகள் **2018** ஜுன் **30** ஆம் திகதியில் வேலையின்றி இருப்பதுடன், **2019** செப்டெம்பர் **18** ஆம் திகதி வரையில் **03** கட்டங்களின் கீழ் **19,920** (அதாவது **36** சதவீதம்) பேரளவில் பட்டதாரிப் பயிலுனராக நியமனம் வழங்குவதற்கு நிதி பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

மேற்படி சிக்கல்களைக் குறைப்பதற்கு இதன் சிக்கல்களைக் குறைத்து நாட்டின் வேலைவாய்ப்பினை அதிகரிப்பதற்கு தற்போதுள்ள கல்விக் கொள்கைகளை உடனடியாக நடப்பு காலத்திற்கேற்ற வகையில் மீளாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டியதுடன், நாட்டின் மாகாணங்களுக்கிடையே கல்வியில் நிலவும் வேறுபாட்டினைக் குறைத்து அனைவருக்கும் சமமான மனித மற்றும் பௌதீகக் கல்வி வசதிகளை வழங்குவதும், தொழில்நுட்பம் போன்ற தொழிற் கல்வித் திறன்களை மேம்படுத்தக்கூடிய பாட விதானங்களின் மூலம் கற்றல் சந்தர்ப்பங்களை அதிகரிக்க வேண்டும் என்பதும், பல்கலைக்கழகங்களில் கல்விப் பாடநெறிகள் மற்றும் பாடங்கள் நடப்புக்கேற்ற வகையில் மீளமைப்பு செய்யப்பட வேண்டும் என்பதும் அவசியம். தொழில்நுட்பம், மென்திறன்கள் போன்ற தொழில் சந்தை மையப்படுத்தப்பட்டுள்ள ஏனைய தகமைகளை வளர்ப்பதற்கு மாணவர்களுக்கு வசதிகளை மேலும் அதிகரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்பதும் பரிந்துரைக்கப்படுகின்றது.

## இலங்கையின் தொல்பொருள் மரபுரிமைகள் முகாமைத்துவம்

இலங்கையின் முழு தொல்பொருள் உரித்துக்களும் 1815 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதிக்குரிய இடங்கள், நினைவுச் சின்னங்கள், நகரக்கூடிய அரும்பொருட்கள் மற்றும் நூறு ஆண்டுகளுக்கும் மேலான பழையன என்பன தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழ் "பாதுகாப்பானது" என்று அறிவிக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே இலங்கையின் தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் மீது தொல்பொருளியலார்களின் முறையான அக்கறை ஏற்பட தொடங்கியது. அதேபோல் நாட்டிலுள்ள பிரதான தொன்மையான இடங்கள் முறையாக ஆய்வு செய்ய அரசாங்கம் முன்வந்தது. தொல்பொருள் இடங்களை பராமரிக்கும் உயரிய நிறுவனமாகவே 1890 ஆம் ஆண்டு

தொல்பொருளியில் திணைக்களம் அமைக்கப்பட்டது.

இலங்கையின் தொல்பொருள் பராம்பரியம் தேசத்தின் கடந்த காலத்துக்குரிய ஆயிரக் கணக்கான தொல்பொருள் இடங்கள், பழைய நினைவுச் சின்னங்கள், நகரக் கூடிய கலைப்பொருட்கள் என்பதுடன், இந்த பராம்பரியங்களை முறையாகப் பராமரித்து, எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்குவது தேசிய தேவையாகும். தற்போதைய காலகட்டத்தில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதன் காரணமாக, இந்த பாரம்பரியங்களுக்கு அச்சுறுத்தல் மற்றும் அது தொடர்பில் சமூகத்துக்குள் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துவதன் காரணமாக இந்தத் தலைப்பு கணக்காய்வுக்காக தெரிவு செய்யப்பட்டது. இந்த கணக்காய்வின் நோக்கம் இலங்கையில் தொல்பொருள் பாரம்பரியத்தை நிர்வகிப்பதில் தொல்பொருள் திணைக்களத்தின் பங்கை மதிப்பீடு செய்தல் இக்கணக்காய்வின் நோக்கமாகும்.









தொல்பொருட்கள் அழிவடையும் ஆபத்திற்கு உட்பட்டிருத்தல்

அரும்பொருட்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான சட்டப் பின்னணியை பலப்படுத்துவதற்கு முக்கியமாக அமையும் தொல்பொருள் கட்டளைச் சட்டம் மற்றும் தேசிய கொள்கை சரியான நேரத்தில் திருத்தப்படாமை, அடையாளம் காணப்பட்ட தொல்பொருள் பாதுகாப்பு நினைவுச் சின்னங்கள், சரியான திட்டத்துடன் திணைக்களத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமை, தொல்பொருள் முகாமைத்துவ திட்டத்தை செயற்படுத்தும் போது ஏற்படும் தாமதம் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் முழுமைப்படுத்தப்படாமை, அடையாளம் காணப்பட்டுள்ள தொல்பொருள் பாதுகாப்பு நினைவுச் சின்னங்கள், பழைய நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் வளங்கள் உள்ளிட்டவை தொடர்பில் அரச வர்த்தமானி

அறிவித்தல் ஊடாக வெளியிடுவதில் தாமதம், மனித செயற்பாடுகள் ஊடாக முன்னெடுக்கப்படும் தொல்பொருள் அழிப்பு காரணமாக, தொல்பொருள்களின் பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளமை, நிதி பெறுவதில் சிக்கல்கள், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான பொருள்களை விநியோகிப்பதில் காணப்படும் தாமதம், தொல்பொருள் வள முகாமைத்துவம் மற்றும் ஆய்வுக்கான வல்லுனர்கள் மற்றும் நிபுணத்துவம் உடைய அனுபவமிக்க தொழில் வல்லுனர்கள் மற்றும் தொல்பொருள் பாதுகாப்புக்கு போதுமானளவு மனித வளம் மற்றும் ஏனைய வளங்கள் திணைக்களத்தில் போதுமானளவு இன்மை போன்ற காரணங்களே, பிரதானமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த நிலைமைகளுக்கான தீர்வாக தொல்பொருள் கட்டளைச் சட்டம் மற்றும் தேசிய தொல்பொருள் கொள்கையை திருத்துவதற்கு துரித நடவடிக்கைகளை எடுத்தல், தேசிய மட்டத்தில் தொல்லியல் இடங்களை அறிக்கையிடலுக்காகநீடகால செயற்திட்டங்களை தயாரித்தல், ஆய்வுகள், பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை, வர்த்தானி மூலம் பிரசுரித்தல், காப்புறுதி செய்தல், அகழ்வு, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு போன்ற விடயங்களில் அந்நடவடிக்கைகளின் சட்ட பின்னனியில் மேற்கொள்ளல், மற்றும் அந்நடவடிக்கைகளின் கண்காணிப்பு வழிநடாத்துதல், மீளாய்வு மற்றும் பின்தொடர் போனற் ஒவ்வொரு செயற்பாடும் திட்டமொன்றின் பிரகாரம் நாளதுவரையாக மேற்கொள்ளல், தொல்பொருளியல் வளங்களை முகாமைமத்துவம் மற்றும் ஆராய்ச்சிக்காக அர்ப்பணிப்புடனான ஆட்களை ஆட்சேர்த்தல் மற்றும் அவர்களுக்குரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் போன்ற பரிந்துரைகள் இக்கணக்காய்வில் முன்வைக்கப்பட்டுள்ளன.

## கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட மேல்மாகாணத்தின் தரிசு வயல்களை மீள் பயிரிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் மதிப்பீடு

விவசாயம் மற்றும் அதனுடன் இணைந்த பாராளுமன்றத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக விவசாயத் திணைக்களம் உள்ளதுடன், அந்த அமைச்சின் கீழ் பிரதேச மட்டத்தில் விவசாயம் மற்றும் அதனுடன் இணைந்த முக்கிய நிறுவனம் கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஆகும். விவசாய வேலைத் திட்டங்களுக்காக அடிப்படை வழங்கல் சேவையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 1957 ஒக்டோபர் 01 ஆம் திகதி கமநல அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்பட்டிருந்ததுடன், அது தற்காலத்தில் 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

மேல் மாகாணத்தில் வயல்கள் தரிசாவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அறிந்து கொள்ளல் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் தரிசு வயல்களை மீளவும் பயிர் செய்வதற்காக மேற்கொள்ளும் பங்களிப்பு மற்றும் குறித்த சிக்கல்களுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கும் செயன்முறைகளை மதிப்பீடு செய்தலே இந்தச் செயலாற்றல் கணக்காய்வின் முக்கிய குறிக்கோளாகும்.

கமநல அபிவிருத்தித் திணைக்களமானது தரிசு வயல்களை மீளவும் பயிர் செய்வதற்கு உரிய பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதோடு அதற்காக அடிப்படைச் பிரச்சனையாக உள்ளது நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவப் பிரச்சனையாகும். மேல் மாகாணத்தில் புனர்நிர்மானம் செய்யப்பட வேண்டிய சிறு நீர்ப்பாசனம் மற்றும் கைவிடப்பட்டுள்ள சிறு நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகின்றன. மேல் மாகாணத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு தரிசு வயல்கள் மீளவும் சாகுபடி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆண்டு வரையிலும் தரிசு வயல்களின் அளவுகளில் குறிப்பிடத்தக்க அளவிலான குறைவு போன்றே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படக்கூடிய நிலங்களின் அளவுகளிலும் குறைவடைந்துள்ளன.




திட்டமிடல், வயல் நிலங்கள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பேணுதல், நீர்ப்பாசன சிக்கல்களை அறிந்து கொள்ளுதல், செயற்றிட்டங்களை முன்னுரிமைக்கேற்ப அறிந்து கொள்ளுதல், குறித்த செயற்றிட்டம் தொடர்பான ஒப்பந்த நிர்வாகம், ஏனைய தேசியக் கொள்கைகளுக்குப் பொருத்தமான வகையில் கொள்கைகளைத் தயாரித்தல், நிறுவனங்களுக்கிடையிலான இணைப்பு மற்றும் அவற்றைக் கண்காணித்தல், வயல் நிலங்களின் பெயர்ப் பட்டியலைத் திருத்தல் மற்றும் அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்துதல் போன்ற பரிந்துரைகள் இங்கு சமர்ப்பிக்கப்படுவதோடு அதன் மூலம் மேல் மாகாணத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் வயல் நிலங்களின் அளவினை அதிகரித்துக் கொள்ளும் நோக்கத்தினை அடைவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியுமென்பது இக்கணக்காய்வின் நோக்கமாகும்.

## நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்ப்படுத்தல்

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் மிகவும் சிறந்ததொரு பூமிக்கான உலகளாவிய மற்றும் உருங்கிணைந்த நோக்காகும். இலங்கை அரசினால் பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை ஸ்தாபித்தல் 2015 ஆம் ஆண்டின் போது நிலைபேறான அபிவிருத்திக்கு பொறுப்பான வரிசை அமைச்சாக நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சினை தாபித்தல், 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தல், நிலைபேறான அபிவிருத்தி சபையினை நிறுவுதல் போன்ற பிரதான நடைமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன.

அதியுயர் கணக்காய்வு நிறுவனமாக இலங்கையின் தேசிய கணக்காய்வு அலுவலகம், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள அரச நிறுவனங்களின் செயற்திறனை மற்றும் விளைதிறனை அதிகரிப்பதன் மூலம் அவற்றின் கணக்களிதகைமை, வெளிப்படைத்தன்மை, நேர்மை ஆகியவற்றை பலப்படுத்தும் நோக்கில் மற்றும் அதன் மூலம் குடிமக்களின் வா்ழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்காக நிலைபேறான அபிவிருத்திநோக்கங்களை அடைந்துகொள்ளல் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு 2016 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் 2018 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் வரையிலும் தெரிவு செய்யப்பட்ட அரச நிறுவனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆகஸ்ட் மாதம் முதல் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் அது தொடர்பில் பொறுப்பு கூறும் அரச நிறுவனங்களால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

2019 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் வரையிலுமான இலங்கையின் தூரநோக்கு 2025 ஆம் ஆண்டு வரையிலுமானதுடன், அரச முதலீட்டு திட்டமொன்றாக (2017-2020) முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்

பயன்படுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் முதல் இலங்கையின் தேசிய தூரநோக்காக சுபீட்சமான நோக்கு பயன்படுத்தப்படுகின்றது. அந்த நோக்கின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டின் போது இலங்கையின்நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்காக அமைச்சரவையின் அமைச்சுக்களை மீள ஒழுங்கமைத்தல் மற்றும் அதற்காக முறையான திட்டமொன்றினை தயாரிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. 2025 ஆம் ஆண்டின் நோக்கு மற்றும் அரச முதலீட்டு திட்டத்தினுள் (2017-2020) நிலைபேறான அபிவிருத்தி சுற்றாடல் சார்ந்து காணப்படுவதனை விட பொருளாதார மற்றும் சமூகம் சார்ந்ததாக ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி இலங்கையை 2030 ஆம் ஆண்டளவில் பயணிக்க வைப்பதற்காக

தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய சுற்றறிக்கைகளை மீளாய்வு செய்யும் போது அவை சுற்றாடல், சமூக மற்றும் பொருளாதாரம் ஆகிய விடயங்களினதும் சமனான தன்மையை பாதுகாக்கும் வகையில் பின்பற்றப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் விதிகள் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அரசின் பொருளாதார பணிகளை செயற்படுத்தும் 08 பிரிவுகளின் கீழ் 322 செயற்திட்டங்களில் சுமார் 50 சதவீதமானவை மாத்திரம் ஆரம்ப அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், 19 சதவீதமானவை மாத்திரம் இரண்டாவது அங்கீகாரத்தினை பெற்றிருந்தன. 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய பாதீட்டில் பிரதான செயற்திட்டங்களுடன், 78 இலக்குகள் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான தேசிய பாதீட்டில் பிரதான செயற்திட்டங்களுடன், 75 இலக்குகள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. போதிலும், குறித்த அமைச்சு அல்லது தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்தினால் அவற்றை தேசிய ரீதியில் அளவீடு செய்யும் பணி இடம்பெற்றிருக்கவில்லை.

அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பீடு செய்யும் போது அது 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக குறைவடைந்திருந்தமை, கொழும்பு நகரின் வளியின் நிலைமை உலக சுகாதார ஸதாபனத்தின் (ஹுர்ழு) நியமங்களை விஞ்சியிருந்தமை, யானைகள் மற்றும் மனிதர்களுக்கடையேயான மோதல்கள் அதிகரித்தமை, உலக காலநிலை அபாய குறிகாட்டியில் இலங்கை இரண்டாம் இடத்தினை அடைந்தமை போன்ற விடயங்களின் அடிப்படையில் இலங்கையின் சுற்றாடல் சமநிலையை பேணல் தொடர்பில் இலங்கையின் ஆயத்தம் தொடர்பில் சிக்கல்கள் எழுந்துள்ளன.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2019 நவம்பர் மாதத்திற்குரிய தரவுகளின் பிரகாரம் நகர திண்மக்கழிவுகளில் சுமார் 84 சதவீதம் உரிய முறையில் அகற்றப்படாமை, தேசிய மீள்சுழற்சி விகிதமானது 5 சதவீதமாக இருந்தமை, தனிநபர் அபாயகரமான கழிவு உற்பத்தியானது 2018 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் 9.5 கி.கிராம்களிலிருந்து 13 கி.கிராம்கள் வரை அதிகரித்தமை, அபாயகரமான கழிவின் சுத்திகரிப்பு விகிதமானது குறைவடைந்தமை, எரியூட்டப்படும் மருத்துவக் கழிவுகளின் சதவீதம் குறைவடைந்தமை, மீள்சுழற்சிக்காக இறக்குமதி செய்யப்படும் இலத்திரனியல் இறக்குமதி வீதம் மாத்திரம் அதிகரித்தமை போன்ற செயலாற்றல் தகவல்கள் அவதானிக்கப்பட்டன.

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் குறித்த விசேட தேவைப்பாடுடைய நபர்கள் தொடர்பில் 14 இலக்குகளுக்காக குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த தரவுகளில் அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 9 இலக்குகள் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருந்தன.

வருடாந்த பாதீட்டின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலளவினை பெற்றுக்கொள்ளும் தற்போதைய மூலோபாயமாக இருந்தது. அதன் போது 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய பாதீட்டின் (கடன் செலுத்தல்கள் கழிக்கப்பட்டு) நிதியில் 14 சதவீதமானவை பிரதான செயற்திட்டங்கள் மற்றும் இலக்குகளுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டின் தேசிய பாதீட்டின் (கடன் செலுத்தல்கள் கழிக்கப்பட்டு) நிதியில் 17 சதவீதமானவை பிரதான செயற்திட்டங்கள் மற்றும் இலக்குகளுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தன.

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 169 இலக்குகளில் 49 இற்காக குறிகாட்டிகள் மற்றும் அடிப்படை

தரவுகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 26 இலக்குகளுக்காக குறிகாட்டிகள் மற்றும் அடிப்படை தரவுகள் தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. ஏனைய நிறுவனங்களால் தயாரிக்கப்பட வேண்டிய 131 குறிகாட்டிகளுக்காக அந்த நிறுவனங்களிடம் தரவுகள் காணப்பட்ட போதிலும், அவற்றை தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் இணைந்து தேசிய தரவுக் கட்டமைப்பில் ஒருங்கிணைத்திருக்கவில்லை.

17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் செயன்முன்னேற்றம் மக்களுக்கு, நிர்வாகத்திற்கு மற்றும் பாராளுமன்றத்திற்கு அறிந்துகொள்ளும் நோக்கில் வழங்கும் நடைமுறையொன்று 2019 திசெம்பர் மாதம் வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2030 நிகழ்ச்சிநிரலினை செயற்திறனாக நடைமுறைப்படுத்துவதற்காக அரச நிறுவனங்கள் அவர்களின் விடயப்பரப்பிற்கு இணங்க நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் மூலோபாயங்களை தயாரிப்பதற்குரிய தகவல்களை நிலைபேறான அபிவிருத்தி சபைக்கு வழங்குவதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தி தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத்தினை தயாரிக்கும் நடைமுறையை துரிதப்படுத்தல். வருடாந்த பாதீட்டு திணைக்களத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயலாற்றல் குறிகாட்டிகள் (மூீஜ) குறித்த நிறுவனங்களுடன இணைந்து மதிப்பீட்டு நடைமுறையை அபிவிருத்தி செய்தல். தேசிய அபிவிருத்தி தொடர்பான கொள்கையினை உருவாக்கும் போது 2019 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் சுபீட்சத்தின் நோக்கினுள் நிலைபேறான அபிவிருத்தி தேசிய திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சுகளை மீள ஒழுங்கமைத்தல் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி சபையினால் ஒழுங்குபடுத்தல். நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக சுற்றாடல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தல். இலக்குகளை அடைந்துகொள்ளல் பொருட்டு வளங்களை கோரலினை இலகுபடுத்தும் நோக்கில் அரச நிறுவனங்களுக்கு தெளிவான சுற்றறிக்கைகளை வெளியிடல். நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இலங்கையில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக அனைத்து அரச நிறுவனங்களினதும் இணைப்பினை மேம்படுத்தல். நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றத்தினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கு இயலுமான வகையில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பொறிமுறையொன்றினை அபிவித்தி செய்தல் மற்றும் கால அடிப்படையில் அறிக்கையிடும் நடைமுறையொன்றினை தயாரித்தல் மற்றும் அவை பொது மக்களுக்கு மற்றும் அது தொடர்பில் அக்கறை செலுத்தும் தரப்பினருக்கு பெற்றுக்கொள்ளும் நடைமுறையொன்றினை தயாரித்தல் இக்கணக்காய்வின் பரிந்துரைகளாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## இலங்கையின பிளாஸ்ரிக் இறக்குமதி, பயன்பாடு மற்றும் பின்பயன்பாடு

பிளாஸ்ரிக்கோஸ் (Plastikos) என்ற கிரேக்கச் சொல் வழியே உருவாகியிருப்பதோடு அதன் அர்த்தம் “உடையாமல் உருவத்தை மாற்றக் கூடியது” என்பதாகும். தற்கால உலகில் அதிகளவில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பிரதானமாக 07 வகைப்படுத்தப்படுகின்றன.

திண்மம், தரவம் மற்றும் வாயு என கழிவுப் பொருட்கள் உள்ளடக்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கைக்காக 2019 ஒக்தோபர் 10 ஆந் திகதி அளவில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை அது அமுல்படுத்ததும் நிலைக்கு உட்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த பொருட்களில் உள்ளடங்கும் திண்மக்கழிவுகளை கைதவிர்ப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட கொள்கையொன்ற காணப்படாமை 2016 ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதிய் 16/2236/704/061 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் மூலம் விரிவான பொறுப்பு கோட்பாட்டு அமுலாக்கல் தேவைப்பாடு உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதும் 2019 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை செயற்பாட்டு நிலைமைக்கு உட்படவில்லை.

2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான 07 ஆண்டு காலப்பகுதியில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்டிக் அளவு 3,353.9 மில்லியன் கிலோகிராம் என அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 184,300.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மூலப்பொருட்கள், முடிவுப்பொருட்கள், தளபாடங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் என 4 பிரதான வகைகளின் கீழ் பிளாஸ்டிக் இறக்குமதி செய்யப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டின் போது பிளாஸ்டிக் இறக்குமதியில் 64 சதவீதம் பிளாஸ்டிக் மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.அதன் பிரிகாரம் 2017 ஆம்

ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டில் பிளாஸ்ரிக் மூலப்பொருளாக இறக்குமதி அதிகரிப்பு 3.7 சதவீதமாக இருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட செலவினம் 1.23 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**பிளாத்திக்கு இறக்குமதிகளின் வகைப்படுத்தல் - 2018**




2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் போது பொலிவயகல் குளோரைட் (PVC) வகையான பிளாஸ்ரிக் இறக்குமதி 21.19 ஆலும் பொலிஸ்டரீன் (PS) வகை பிளாஸ்ரிக் இறக்குமதி 44.67 சதவீதத்தினாலும் பொலிபுரொப்லின் (PP) வகை பிளாஸ்ரிக் இறக்குமதி 39.24 சதவீதத்தினாலும் வெவ்வேறு வகையான பிளாஸ்ரிக் இறக்குமதி 160.79 சதவீத அளவொன்றினாலும் அதிகரித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது. வருடாந்தம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்ரிக் அளவில் படிப்படியாக மீள்சுழற்சி செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்ட அளவு அண்ணளவாக 30 சதவீதமாக இருந்தது.

பின்பாவனை பிளாஸ்ரிக் முகாமைத்துவ செயற்பாடு தொடர்பாக இலங்கையில் செயற்படுத்தப்படுகின்ற 100 பிரதான நிலையங்களின் செயலாற்றலை பரீட்சித்த போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் இல்லாமல் 26 நிலையங்கள் காணப்பட்டதுடன் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையில் 28 நிலையங்களின் அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக்காலம் காலாவதியாகியிருந்தன.

பிளாஸ்ரிக் பொலித்தின் கழிவுப்பொருள் முகாமைத்துவம் முழுமையாக மேற்கொள்ளும் முன் மாதிரியான உள்ளுராட்சி மன்றங்கள் சிலவற்றை அபிவிருத்தி செய்வதை நோக்காக கொண்ட செயற்திட்டத்திற்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 452.7 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டத்தின் செயலாற்றலை பரீட்சித்த போது குறித்த தரப்பினர் தமது பொறுப்பினை போதியளவில் நிறைவேற்றாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே பொலித்தீன் பிளாஸ்ரிக் உற்பத்தி, வியாபாரம், பயன்பாட்டினை குறைத்தல் மற்றும் பின்பாவனை முகாமைத்துவ சுற்றாடலுக்கு சாதகமான வகையில் மேற்கொள்ளும் நோக்கில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் 2017 செப்தம்பர் 01 இல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 6

அறிவித்தல்களை செயற்படுத்துதல் தொடர்பான செயலாற்றல் பரிசோதனையின் போது சட்டரீதியற்ற பிளாஸ்ரிக் உற்பத்தயை ஒழுங்குபடுத்தாமை, பிளாஸ்ரிக் திறந்தவெளியில் எரிப்பது தொடர்பாக உள்ளூராட்சிமன்றங்கள் மூலம் பொதுமக்கள் அறிவூட்டப்பாடமை மற்றம் தேவையான உபகரணங்கள் போதியளவில் இல்லாமை என்பன அவதானிக்கப்பட்டன.

பிளாஸ்ரிக் பொலித்தின் தொடர்பாக தற்போது செயற்படுத்தப்படும் சட்ட ரீதியான மீளாய்வு செய்தல் மற்றும் தேவையான திருத்தங்கள் மூலம் பிளாஸ்ரிக், பொலித்தின் இறக்குமதி, உற்பத்தி வியாபாரம், பாவனையைக் குறைத்தல் மற்றும் பின்பாவனை முகாமைத்துவத்திற்காக துரித நடைமுறைகளை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியம் வாய்ந்ததாக அவதானிக்கப்பட்டது. பிளாஸ்ரிக் பொலித்தின் இறக்குமதி மற்றும் நாட்டில் உற்பத்தி என்பவற்றை அதைரியப்படுத்துவதற்கும் நாட்டில் காணப்படும் பிளாஸ்ரிக் பொலித்தின் பயன்பாட்டைக் குறைப்பதற்கும் பின் பாவனை முகாமைத்துவ நடைமுறைகளை கிராமிய மட்டத்தில் செயற்படுத்துவதற்காக தேவையான ஒத்துழைப்பினை வழங்குவதற்கும் பின்பாவனை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தி அதற்காக சந்தைகளை உருவாக்கி மேலும் பலப்படுத்துதல் இடம்பெற வேண்டும்.

நுகர்வோர் கொருட்களை கொள்வனவு செய்யும் போது உரைகளாக வழங்கப்படும் பொலித்தீன் உரைகள் உட்பட கூடுதலான தடிப்புடைய பொலித்தீன் உை உற்பத்தி விற்பனை மற்றும் பயன்பாடு தடைசெய்யப்பட்டுள்ளதுடன் சுற்றாடலுக்கு சாதமான பொதிகளை நுகர்வோருக்கு வழங்கும் நோக்கில் 2016 யூன் 02 ஆந் திகதிய 16/1702/704/45 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் மூலம் குறுங்கால செயற்பாடுகள் தொடர்பாக தீர்வு இடபபட்ட போதும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறப்பட்டிருக்கவில்லை.









பிளாத்திக்கு / பொலிதீன் அகற்றல்

2016-2018 புனரோதம் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயன்பாட்டின் பின்னரான பிடைகொல்லி கொள்கலன்களை மீள்சுழற்சியாக்கும் தேசிய செயற்திட்டம் 2019 செப்தம்பர் 30 ஆந் திகதி வர செயற்படுத்தியிருக்கவில்லை.

கடற் பாதுகாப்பு நிறுவனத்தின் (Coastal Conservancy) மூலம் செயற்படுத்தப்படும் சர்வதேச கடற் கரைகள் சுத்தம் செய்யும் நிகழ்ச்சி International Costal cleanup 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையிலான 05 வருட காலப்பகுதியில் இலங்கையின் கடற்கரைகளை சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் தொடர்பான விவரங்கள் 04 ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கண்காணிப்புகள் பின்வருமாறு நடாத்தப்படும்.இலங்கையின் கடற்கரையின் 318 கிலோ மீற்றர் இடத்திற்குள் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 150,242 குளிர்பான போத்தல்கள், 100,875 உணவுப் பொதி உறைகள், 80,483 உறிஞ்சு குழாய்கள் (ஸ்ட்ரோஸ்), 74,183 போத்தல் மூடிகள் 64,646 பிளாஸ்டிக் உரைகள் மற்றும் 56,154 சிகரட் துண்டுகள் சேகரிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் பிளாஸ்ரிக் பாவனை ஒழுங்குபடுத்தல் தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் செயற்படுத்துவதன் மூலம் பிளாஸ்ரிக் பயன்பாடு காரணமாக ஏற்படக்கூடிய சுற்றாடல் சேதத்தை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### சிகிச்சை கழிவுப்பொருட்கள் வெளியேற்றும் நடைமுறை மற்றும் அதன் சுற்றாடல் தாக்கம்

வைத்தியசாலைகளில் நாளாந்த நடவடிக்கைளின் மூலம் அகற்றப்படுகின்ற மருத்துவக் கழிவுகளை அவற்றின் தன்மை அடிப்படையில் சுற்றாலைப் பாதிக்கின்ற மற்றும் சுற்றாடலைப் பாதிக்காத கழிவுகள் என வகைப்படுத்தலாம். அவற்றில் சுற்றாடலைப் பாதிக்கின்ற கழிவுகள் ஏனைய பொதுவான கழிவுகளிலிருந்து வேறுபடுத்தி இனங்காணப்பட்டு அவை முறையாகவும் பாதுகாப்பாகவும் அகற்றப்படுதல் வேண்டும்.

சிகிச்சை கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய இலங்கைக்கான தேசிய கொள்கையொன்று 2001 ஆம் ஆண்டில் வரையப்பட்டிருந்ததுடன் அது 2018 ஆம் ஆண்டு வரையிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வைத்தியசாலை கழிவு முகாமைத்துவத்தினை வினைத்திறனாக அமுல்படுத்துவதற்கான அறிவு, தேவைப்பாடு மற்றும் தேவையான வளம் என்பன போதியளவில் காணப்பட்டு அச்செயற்பாடுகளை மதிப்பிடுவதற்குத் தேவையான தரவு முறைமையொன்று நாளதுவரையாக பேணிச்செல்லப்பட வேண்டுமென்பது தேவையாக உள்ளது. 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் வைத்தியசாலை கழிவு முகாமைத்துவத்திற்குரிய சுற்றாடல் மற்றும் மஹவலி அபிவிருத்தி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் மற்றும் பட்டோலையிடப்பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது, இத்தேவைப்பாட்டின் பிரகாரம் தனியார் வைத்தியசாலைகள் உட்பட 328 வைத்தியசாலைகள் மற்றம் மருத்துவ நிலையங்களில் 181 மாத்திரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களைப் பெற்றக்கொள்ள வசதிகளைப் பெற்றிருந்தன. அது மொத்தமாக பதிவு செய்யப்பட்ட 1521 மருத்துவ நிறுவனங்களில் 12 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதப்பத்திரங்களைப் பெற்றிருந்த ஏனைய நிறுவனங்களில் 3 சதவீதம் மாத்திரம் அட்டவணைப்படுததிய கழிவுப்பொருள் முகாமைத்துவ அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்டிருந்தன.

சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைசசினால் 2006 மார்ச் 21 ஆந் திகதிய 01-12/2006 ஆம் இலக்க பொதுச் சுற்றறிக்கை மற்றும் இலங்கை நுண்ணுயிலாளர் சங்கத்தின் கழிவுப்பொருள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் சிகிச்சை கழிவுகள் உருவாகும் சந்தர்ப்பத்திலேயே வர்ணங்களின் அடிப்படையில் அவற்றை வகைப்படுத்துதல் (separate) மிக முக்கியமானதாகும். அநேகமான வைத்தியசாலைகள் மருத்துவக் கழிவுகள் உருவாகின்ற சந்தர்ப்பத்திலேயே அவற்றை வகைப்படுத்துவதற்கென (segregation) உரிய வழிமுறையொன்றை தயாரித்திருந்த போதிலும், அதற்குத் தேவையான பௌதீக வளம் உரிய வர்ணங்களின் படி வழங்கப்பட்டிருக்காமைால் தெரிவுப் பரிசோதனைக்கு அநேகமான வைத்தியசாலைகள் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சிகிச்சை கழிவுகளை வெளியேற்றுவதற்காக விசேடமான பொலித்தீன் உரை நியம ஏற்றுக்கொண்ட தரத்தில் இல்லாமை தேசிய வைத்தியசாலகள்

உட்பட பல வைத்தியசாலைகளில் அவதானிக்கப்பட்டது. மேலும் கழிவுகளை களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து செய்தல், கழிவுகளை முறையாக கைதவிர்ப்பதற்காகன நடவடிக்கைகளுக்காக உரிய வழிகாட்டிக் கோவையொன்றின் ஆலோசனை வழங்கிய போதும் அதன் பிரகாரம் செயற்படாத வைத்தியசாலைகளும் காணப்பட்டன.

மருத்துவக் கழிவுகளை வைத்தியசாலை வளவில் எரித்தல், வைத்தியசாலை வளவில் காணப்படுகின்ற வெதுப்பகத்தின் மூலம் குறைந்த வெப்பத்தில் எரித்தல், வைத்தியசாலை வளவில் புதைத்தல் போன்ற பாதுகாப்பற்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே எரித்தல் அல்லது தகனத்தின் பின் எஞ்சுகின்ற சாம்பல் மற்றும் எரிகழிவுகளை பாதுகாப்பான நிரப்பும் தளங்களிற்கு அனுப்பிவைப்பதற்குப் பதிலாக திறந்த வெளிகளில், சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய விதத்தில் புதைத்தல், ஏனைய பொதுவான கழிவுகளை அகற்றும் விதத்தில் இக்கழிவுகளையும் அகற்றுதல் அல்லது சேகரித்து வைத்தல் இடம்பெற்றிருந்தது. திருகோணமலை, திஸ்ஸமஹாராம, பொலன்னருவ, கதிர்காமம் ஆகிய நகரங்களில் நிறுவப்பட்டுள்ள ஒட்டு மொத்த வைத்தியசாலைகளும் தெரிவு பரிசோதனைக்கு உட்பட்டதுடன் இவ்வைத்தியசாலைகளில் மேற்படி குறைபாடு அவதானிக்கப்பட்டது.

மருத்துவக் கழிவு முகாமைத்துவத்தினை முறைமைப்படுத்துவதற்காக அரசாங்கம் தனியார் துறையுடன் இணைந்து ஒருங்கிணைந்த செயற்திட்டமொன்றை 2014 ஆம் ஆண்டில் ஆரம்பித்திருந்ததுடன் நீதிமன்ற தீர்ப்பின் காரணமாக 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி முதல் இதன் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள அரசாங்க மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் உருவாகின்ற மருத்துவக் கழிவுகளை மத்தியப்படுத்திய பொதுவான முறைமையொன்றின் மூலம் சுத்திகரித்து சுற்றாடலுக்கு அனுகூலமான விதத்தில் அகற்றும் நோக்குடன் 2014 சனவரி 02 ஆந் திகதி பிரதான மூன்று தரப்பினர்களால் கைச்சாத்திடப்பட்டு செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கையின் முதலாவது தரப்பாக சுகாதார அமைச்சும் இரண்டாவது தரப்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் மூன்றாவது தரப்பாக தனியார் நிறுவனமொன்றும் சம்பந்தப்பட்டிருந்ததுடன், இந்த உடன்படிக்கையின் மூலம் சேவை வழங்கும் காலம் பரீட்சார்த்த செயற்திட்டமொன்றாக 05 ஆண்டுகளாக காணப்பட்டது. இந்த உடன்படிக்கையனால் வரிசை அமைச்சுடன் சம்பந்தப்பட்ட சகல அரசாங்க வைத்தியசாலைகள், மாகாண வைத்தியசாலைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் வருகின்ற வைத்தியசாலைகளினால் உருவாக்கப்படுகின்ற மருத்துவக் கழிவுகள் சுத்திகரிப்புக்கு அனுப்பிவைக்கப்பட இருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இந்நிறுவனத்தினால் சேகரிக்கப்படும் சிகிச்சையளிக்கப்படாத வைத்தியசாலை வளவுகளில் களஞ்சியப்படுத்தியிருந்த சிகிச்சை கழிவுகளின் மொத்த அளவு 252,764 கிலோ கிராம் மற்றும் அண்ணளவாக 21 கொள்கலன்கள் அளவில் இருந்தன.

வைத்தியசாலைக் கழிவுகளை அகற்றுவதற்காக 13.76 மில்லியன் ஐ.அ.டொலர் கடன் தொகையொன்றை இலங்கை அரசாங்கத்திற்கு மானியமாக வழங்குவதற்காக அவுஸ்திரேலிய ஏற்றுமதி நிதிக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கும் (EFIC) இலங்கை அரசாங்கத்திற்குமிடையே 2015 திசெம்பர் 07 ஆந் திகதி உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன்மூலம் இலங்கையின் தெரிவுசெய்யப்பட்ட 06 மாகாணங்களிலுள்ள வைத்தியசாலைகளை 20 ஆக வகைப்படுத்தி இனங் காணப்பட்டிருந்ததுடன் அவற்றில் 05 வைத்தியசாலைகளிற்கு வெதுப்பகம் உள்ளடங்கலாக 20 வைத்தியசாலைகளிற்கும் மெடாமைசர் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அவற்றிற்கான ஒட்டுமொத்தக் கிரயம் 15,023,157.7 ஐ.அ.டொலர் ஆக இருந்த போதும் சிகிச்சை கழிவுகளை முறையாக கைதவிர்ப்பதற்காக போதியளவு பங்களிப்பொன்றை ஏற்படுத்தியிருக்கவில்லை.

அவுஸ்திரேலிய நாட்டின் உதவியுடன் அமுல்படுத்தப்பட்டிருந்த மருத்துவக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டம் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட வைத்தியசாலைகளில் இச்செயற்திட்டம் உச்ச பயன்தரக்கூடிய வகையில் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை அதற்காக 13.76 மில்லியன் ஐ.அ.டொலர் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 20 வைத்தியசாலைகளுக்காக மெடாமைசர் என்ற உபகணங்களை வழங்குவதற்காக 14

மில்லியன் ஐ.அ.டொலர் செலவிடப்பட்டிருந்தது. அச்செலவினம் முறையான செயற்திறனாக மேற்கொள்ளாதிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான உலக வங்கியின் உதவியின் கீழ் அமுலாக்கப்பட்டிருந்த இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் குறிக்கோள், கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதலாகக் காணப்பட்ட போதிலும், இந்த நிதி ஏற்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்தியிருக்காமை மற்றும் நிதிகளை பயன்பாட்டிற்கு எடுத்திருந்த வைத்தியசாலைகள் அதனை பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்தியிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.தெரிவு பரிசோதனையின் போது பதுளை வைத்தியசாலையில் அவ்வாறறான நிலைமையொன்ற அவதானிக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களால் மருத்துவக் கழிவகற்றல் செயற்பாடுகளிற்காக முன்னுரிமை இடமொன்றாக இருந்தது. அச்செயற்பாடுகள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள், மேற்பார்வை மற்றும் கண்காணித்தல் என்பன பலவீனங்கள் காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் வெளியான பத்திரிகைச் செய்திகளின் படி மருத்துவக் கழிவுகள் நாட்டின் பல்வேறு இடங்களிற்கு அனுமதியின்றி இனங்காணப்படாத தரப்பினரால் அகற்றப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன.

அத்துடன், மருத்துவக் கழிவு முகாமைத்துவத்தின் மீது தாக்கம் செலுத்துகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் கொள்கைகளை, தேசிய மற்றும் சர்வதேச உடன்பாடுகளிற்கு அமைய உருவாக்கி, தேவையான பௌதீக மற்றும் மானிட வளத்தினை போதியளவில் வழங்குதலும் வேண்டும். மருத்துவக் கழிவு முகாமைத்துவத்திற்காக அமுலாக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களின் செயலாற்றல் தொடர்பில் ஆய்ந்தறிந்து குறித்த செயற்திட்டங்களின் செயலாற்றலை உச்ச மட்டத்தில் பேணிச்செல்வதன் மூலம் இப்பிரச்சினைக்கு வெற்றிகரமாக தீர்வுகாணக்கூடியதாக இருக்கும். இச்செயற்பாடுகளில் காணப்படுகின்ற முறையற்ற தன்மை காரணமாக மருத்துவக் கழிவுகளால் மக்களின் உயிர்வாழ்விற்கு ஏற்படுகின்ற பாதிப்புகளையும் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளையும் நாட்டின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக கண்டிப்பாக தீர்த்துவைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

### பீடைகொல்லிகள் இறக்குமதி, பயன்பாடு மற்றும அதன் சுற்றாடல் தாக்கம்

பீடைகொல்லிகள் என்பது களைகொல்லிகள், பூஞ்சணக் கொல்லிகள் மற்றும் பூச்சுக் கொள்ளிகள் போன்ற இரசாயணச் சேர்க்கைகளின் மூலம் தயாரிக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படுகின்ற உள்ளீடுகளாகும். பயிரினங்களை சேதப்படுத்துகின்ற பல்வேறு உயிரிணங்கள் மற்றும் களைகளைக் கட்டுப்படுத்துவதற்காக கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதில் பண்டைய காலந்தொட்டு தற்காலம் வரை அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. 1980 இன் 33 ஆம் இலக்க பீடைகொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மூலம் பீடைகொல்லிகள் இறக்குமதி செய்தல், பொதியிடுதல், சுட்டுத்துண்டிடுதல், களஞ்சியப்படுத்துதல், கூட்டுக்களைத் தயாரித்தல், போக்குவரத்துச் செய்தல், விற்பனை செய்தல், விற்பனைக்காக விநியோகித்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அச்செயற்பாடுகளின் கண்காணித்தல் கிருமிநாசினிகள் பதிவாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.









கிருமிநாசினிகளின் இறக்குமதி, பயன்பாடு மற்றும் அதன் சுற்றாடல் தாக்கங்கள்

கிருமிநாசினிகளைப் பயன்படுத்துதல் தொடர்பில் கண்காணித்தல் நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றமை தொடர்பிலும் அதன்மீது செல்வாக்குச் செலுத்துகின்ற பிரமாணங்கள், விதிகள் மற்றும் நியமங்களின் படி அவை பயன்படுத்துகின்றனவா என்பது தொடர்பிலும் அதன்மூலம் இடம்பெற ஏதுவான சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்கு ஏற்ற விதத்திலும் நிறுவனங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப் பொறுப்புக்களை மதிப்பிடுதல் இக்கணக்காய்வின் குறிக்கோளாகும்.

2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மொத்தக் கிருமிநாசினிகளின் அளவு 28,640 மெற்றிக் தொன்களாகக் காணப்பட்டதுடன் அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ஐக்கிய அமெரிக்க டொலர் 225 மில்லியனாகும். 2019 யூன் 30 ஆந் திகதி வரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த மொத்தக் கிருமிநாசினிகளில் உள்ளடங்கியிருந்த செயற்பாடுடைய மூலக்கூறுகளின் எண்ணிக்கை 200 ஆகக் காணப்பட்டதுடன், அச்செயற்பாடுடைய மூலக்கூறுகள் உள்ளடங்கியுள்ள கிருமிநாசினிகளை இற்குமதி செய்வதற்காக கிருமிநாசினிகள் பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டிருந்த இறக்குமதியாளர்களின் எண்ணிக்கை 80 ஆகக் காணப்பட்டது. நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற கிருமிநாசினிகளின் தகுதியினைப் பரிசோதிப்பதற்காக தற்போது அந்தக் கிருமிநாசிகளை உற்பத்திசெய்கின்ற நாடுகளால் வழங்கப்படுகின்ற தரச்சான்றிதழ் அடிப்படையாகக் கொள்ளப்படுவதுடன், நூற்றுக்கு நூறுவீதம் உள்நாட்டு ஆய்வுகூடப் பரிசோதனைகளின் மூலம் கிருமிநாசினிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

கிருமிநாசினிகள் விற்பனைச் சான்றிதழ் வழங்கும் செயற்பாட்டினை பரிசோதனைக்கு உட்படுத்தியதில் அச்செயற்பாடு முறையாக இடம்பெறுவதில்லையென்பது அவதானிக்கப்பட்டதுடன், கிருமிநாசினி விற்பனை நிலையங்களைக் கண்காணித்தலும் போதியளவில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படாதுள்ளமையும்

அவதானிக்கப்பட்டது. விவசாய நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படுகின்ற கிருமிநாசினிகளில் உள்ளடங்கியுள்ள செயற்பாடுடைய 110 மூலக்கூறுகளில் 60 இற்காக மாத்திரம் அறுவடைக்கு முந்திய காலமும் 219 உச்ச பயன்பாட்டு வரையறைகளும் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைய செயற்பாடுடைய 50 மூலக்கூறுகளிற்கான உச்ச பயன்பாட்டு வரையறைகள் இலங்கையில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

2019 செப்தெம்பர் 30 ஆந் திகதியிலுள்ளவாறு அகற்றப்படாதுள்ள 2,057 லீற்றர் திரவ நிலையிலுள்ள காலாவதியான கிருமிநாசினிகளும் 24,153 கிலோ கிராம் திண்ம நிலையிலுள்ள கிருமிநாசினிகளும் அரசு துறைக்குச் சொந்தமான சில இடங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு காலாவதியான கிருமிநாசினிகளை சுற்றாடலிற்கு தீங்கிழைக்காத வகையில் அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது மிக நீண்டகாலமாக பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

இலங்கை சுங்கத்தினால் இறக்குமதியாளர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற தரச் சான்றிதழின் அடிப்படையில் பீடைகொல்லிகள் விடுவிக்கப்படுகின்றன. இறக்குமதி செய்யப்படுகின்ற அனைத்துக் பீடைகொல்லிகளும் மாதிரிகளை ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வசதிகள் போதியளவில் பீடைகொல்லிகள் பதிவாளர் அலுவலகத்தில் நிறுவப்படாதுள்ளமை அவதானிக்கப்பட்டது.

சுற்றாடலிற்கு தீங்கிழைக்காத மற்றும் மனித ஆரோக்கியத்திற்கு அனுகூலமான சிறந்த விவசாய நடைமுறையொன்றை அமுல்படுத்துவதற்காக (GAP - Good Agriculture Practice) நிகழ்ச்சித்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், விவசாயிகளிடையே இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் செயன்முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் ஊடாக மிகவும் வெற்றிகரமான விவிசாயக் கலாச்சாரமொன்றை ஏற்படுத்த முடியுமென்பது அவதானிக்கப்பட்டது. 2017 யூன் 14 ஆந் திகதிய 2023/34 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு இணங்காத வகையில் விவசாயிகளால் படிமாத்ரா பயன்படுத்துதல் மற்றும் 2010 மே 25 ஆந் திகதிய 1655/07 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் இன் கீழ் விசாயிகள் பீடைகொகொல்லி பயன்படுத்தும் போது பாதுகாப்பான முறைகளை பின்பற்றியிருக்கவில்லை.

பீடைகொல்லிகளின் விற்பனையானது முழுமையாக தனியார் பீடைகொல்லி விற்பனையாளர்களால் மேற்கொள்ளப்படுவதுடன், அநேக பீடைகொல்லி விற்பனையாளர்களிற்கு பீடைகொல்லிகள் தொடர்பில் முறையான பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பீடைகொல்லி பிரச்சினைகள் மற்றும் பீடைகொல்லிகள் தொடர்பான அறிவுரைகள் போன்றன விவசாயிகளிற்கு மேற்படி முறையாக பயிற்றுவிக்கப்படாத பீடைகொல்லி விற்பனையாளர்களினாலேயே வழங்கப்படுகின்றன. கிருமிநாசினிகள் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்வதன் மூலம் பெற்றுக்கொண்ட முறையான பதிவுச் சான்றிதழின் கீழ் மாத்திரமே கிருமிநாசினி விற்பனை இடம்பெற வேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு நாடு முழுவதிலும் கிருதிநாசினி விற்பனையில் ஈடுபட்டிருந்த 2,294 விற்பனையாளர்களில் 1,079 விற்பனையாளர்கள் மாத்திரமே அவ்வாறு சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டிருந்தனர்.

தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை நிலையததின் (National Plant Quaratine Service – NPQS) ஏற்றுமதிக்காக தயார்படுத்தப்பட்டுள்ள மரக்கறிகள், கீரை வகை மாசடைந்திருந்தன. அவ்வாறு மரக்கறி மாசுபடல் தொடர்பாக 95 மாதிரிகள் பரிசோதனையின் போது 24 மாதிரிகள் அல்லது 25 சதவீதம் மாசடைதல் பீடைகொல்லி காரணமாக (Contamination) ஆக இருந்தன.

இதன்படி, பீடைகொல்லிகளின் இறக்குமதி, பாவனை, காலாவதியான மற்றும் பயன்படுத்திய வெற்றுக் கொள்கலன்களை முறையாகவும் சுற்றாடலிற்கு சாதகமான விதத்திலும் அகற்றுதல் போன்ற விடயங்கடன் தொடர்புடைய பொறுப்புவாய்ந்த நிறுவனங்களின் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்குத் தேவையான

நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதன் மூலம் மனித ஆரோக்கியத்திற்கும் இயற்கைச் சுற்றாடலிற்கும் ஏற்படுகின்ற பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள முடியும்.

**தேசிய ரம்சார் ஈரவலயங்கள்**

உலகில் மனித நாகரிகத்தின் தொடக்கத்துக்கு பின்புலமான தனித்துவமானதும், பல்லுயிர்கள் நிரம்பியதுமான சுற்றுச் சூழல் அமைப்புகளாக ஈர நிலங்களைக் குறிப்பிடலாம். இந்தச் சுற்றுச் சூழல் அமைப்புக்களால் உருவாகும் தனிச் சிறப்புகளின் காரணமாக, சர்வதேச ரீதியில் இந்த ஈர நிலங்களைப் பாதுகாப்பதற்கும், நிர்வகிப்பதற்கும் ஒரு கருவியாக 1971 ஆம் ஆண்டில் ராம்சர ஈர நில நிலங்களுக்கான மாநாடு எனும் பன்னாட்டு ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டாகும் போது உலகம் முழுவதும் 2331 ராம்சர் ஈர வலயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு அவற்றுள் இலங்கையும் 06 மண்டலங்களுக்கு உரித்துடையதாக இருக்கிறது.

சனத்தொகை வளர்ச்சியினாலும், நகர மயமாக்கலினாலும் வரையறுக்கப்பட்ட நில வளங்களைப் பயன்படுத்துவது அதிகரித்ததோடு, ஈர நிலங்களின் நீடித்தலுக்கான அச்சுறுத்தல்களும் அதிகரித்து வருவதைக் காணக் கூடியதாக இருந்தது. சுற்றுச் சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரதேசங்கள் மனித நடவடிக்கைகளால் கடுமையான சவால்களை எதிர்கொள்வதோடு, அதற்குரிய அதிகாரம் வாய்ந்த நிறுவனங்கள் அச் சவால்களைக் குறித்து போதியளவு கவனம் செலுத்தவில்லை.

சதுப்பு நிலங்களை மண்ணிட்டு நிரப்புதல், வனப் பகுதிகளை அகற்றுதல், ஈர நிலங்களில் காணப்படும் வளங்களை அதிகளவில் பெற்றுக் கொள்தல் மற்றும் அந்நிய ஆக்கிரமிப்புப் பயிர்களும், உயிரினங்களும் விரைவாகப் பரவுதல் போன்றவை இங்கு காணப்படும் சிக்கல்களில் சிலவாகும். இலங்கையில் முக்கியமான ராம்சர் ஈர நிலங்களாக சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த தேசிய வனங்கள் மற்றும் சரணாலயங்களான பூந்தல, வில்பத்து, குமன, ஆனவிலுந்தாவ, வங்காலை மற்றும் மாதுரு கங்கை ஆகிய பிரதேசங்கள் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சர்வதேச ராம்சர் ஈர நில சாசனத்தில் இலங்கையும் கூட ஒரு உறுப்பு நாடாக உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், மாநாட்டின் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு உரிய தனியான சட்ட அமைப்பு எதுவும் இலங்கையில் நிறுவப்பட்டிருக்கவில்லை. வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்ட விதிகளின் கீழ் இந்த ராம்சர் ஈர நிலங்களுக்கான ஒழுங்குமுறைகள் கட்டுப்படுத்தப்படுவதை அவதானிக்க முடிந்தது. ராம்சர் ஈர நிலங்கள் வெளியிடப்பட்டதன் பின்னர், இந்த ஈர நிலங்களில் காணப்படும் பல விதமான உயிர்களின் நிலைப்பாடு குறித்து போதுமான அளவில் ஆய்வுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. அத்தோடு பல்லுயிர் பாதுகாப்பிற்காக பல தரப்பட்ட தந்திரோபாயங்கள் மற்றும் தேசிய திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், ராம்சர் ஈர நில மண்டலங்களுக்கென்று தனியானதொரு திட்டத்தைத் தயாரித்து செயற்படுத்துவதும், தற்போதைய நிலைமையைக் குறித்த செயலாற்றல் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

ராம்சர் ஈர நில மண்டலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலப் பகுதிகளுக்குரிய எல்லைகள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு தினம் வரையில் ராம்சர் ஈர நிலங்கள் தொடர்பாக எழுந்துள்ள எல்லைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் கவனம் செலுத்துவது போதியளவில் நடைபெற்றிருக்கவில்லை. ராம்சர் ஈர நில மண்டலங்களின் உள்ளே மற்றும் அதன் அயல் மண்டலங்களின் உள்ளே அங்கீகாரமற்ற கட்டிட நிர்மாணங்களைச் செய்தல், சதுப்பு நிலங்களை நிரப்புதல் மற்றும் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் பலவும் அவதானிக்கப்பட்டதோடு, ஆக்கிரமிக்கக் கூடிய தாவர இனங்களின் பரவலால் வாவி அமைப்புகளுக்கும், பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் பல்லுயிர்களுக்கும் பெருமளவிலான பாதிப்புகள் உருவாகியிருந்தன.

இலங்கையில் வன விலங்குகள் மற்றும் தாவரங்களைப் பாதுகாப்பதற்காக பரிசோதனைகளைச் செய்தல், அவ்வாறான வன விலங்குகளும், தாவரங்களும் வணிக ரீதியில் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கான ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல், அதற்கு சம்பந்தப்பட்ட அல்லது அவ்வாறான நடவடிக்கைகளுக்கான ஒழுங்கு விதிகளைத் தயாரிப்பதற்காக வன விலங்கு மற்றும் தாவரங்கள் பாதுகாப்புச் சட்டக் கோவை 02 (1) உப பிரிவு (இணைப்பு - 02) மூலமாக தேசிய பாதுகாக்கப்பட்ட நிலங்கள் மற்றும் சரணாலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இந்த விதி முறைக்கு இணங்க மாநாட்டின் கீழ் தேசிய வனங்கள் 03 மற்றும் சரணாலயங்கள்

03 ராம்சர் ஈர நிலங்களாக இடையிடையே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. சட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தினுள் அல்லது சரணாலயத்தினுள் அனுமதிப் பத்திரத்தோடு விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்காக அனுமதிகள் அளிக்கப்பட்டலாம். அந்த ஆராய்ச்சிகள் மூலமாக பெற்றுக் கொள்ளப்படும் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளுக்கு ஏற்ப பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களினுள்ளே அல்லது சரணாலயங்களினுள்ளே காணப்படும் வன விலங்குகள் மற்றும் தாவரங்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகள் பலவீனமாக காணப்பட்டது.

பூந்தல ராம்சர் ஈர நிலத்தினுள் காணப்படும் ஆக்கிரமிக்கக் கூடிய தாவர இனங்களை மதிப்பீடு செய்து கட்டுப்படுத்துவது சம்பந்தமாக 2017 ஆம் ஆண்டில் ஆராய்ச்சியொன்று மேற்கொள்ளப்பட்டது. நந்த ஆராய்ச்சியின் படி சீமைக் கருவேல மரம் மற்றும் சப்பாத்திக் கள்ளி (Prosopis juliflora மற்றும் Opountia dillenil) ஆகிய பெயர்களால் அழைக்கப்படும் ஆக்கிரமிப்புத் தாவரங்கள் முறையே 486 ஹெக்டயார்களும் (8%) 568 ஹெக்டயார்களும் 9 சதவீதம் அளவில் பூந்தல ஈர நிலப் பகுதியில் பரவியிருந்தன. எனினும் அவை கட்டுப்பாட்டிற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

குமண ராம்சர் ஈர நிலத்தில் அமைந்திருக்கும் குமண ஆழமற்ற ஏரியில் வசிக்கும் பல்லுயிர்கள் சம்பந்தமாக ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்ட போதிலும் அந்த ஆராய்ச்சிகளின் போது கண்டறியப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் அவற்றுக்கான பரிந்துரைகள் போதுமான அளவில் நிறைவேற்றப்படவில்லை.

மாது கங்கை ராம்சர் ஈர நில சரணாலயத்துக்குரிய தீவொன்றில் அமைந்திருக்கும் நிஜ சதுப்பு நிலத் தாவர வகையான Combretaceae குடும்பத்தைச் சேர்ந்த Lemnitzer littorea (சிவப்பு நொச்சி) தாவரமானது 2012 ஆம் ஆண்டுக்கான தேசிய சிவப்புத் தரவு ஆவணங்களுக்கு இணங்க மிகத் தீவிரமான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் நிஜ சதுப்பு நிலத் தாவர இனங்களில் இரண்டில் ஒன்றாகக் கண்டறியப்பட்டது. இந்தத் தாவரத்தைப் பாதுகாப்பதற்கும் திரும்ப வளரச் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் போதுமான அளவு எடுக்கப்பட்டிருக்கவில்லை.



சதுப்பு நிலங்களிலுள்ள நிர்மாணங்கள்



வனச்சீவராசிகள் திணைக்களம் அடையாளமிட்டுள்ள எல்லைகள் அகற்றப்பட்டுள்ள விதம்




குப்பைகள் அகற்றப்பட்டுள்ள விதம்




சதுப்பி நிலங்களை சுற்றி வேலிகள் அமைக்கப்பட்டிருத்தல்

உயிரியல் பல்லினத்தின் படி உறுதியாக முக்கியத்துவம் மிக்க சதுப்பு நிலங்களை இனங்கண்டு அதற்குத் தேவையான சந்தர்ப்பங்களில் வன அறிக்கைகள் மற்றும் முகாமைத்துவத்தினை ஆகியவற்றை திட்டமிட்டு மேற்கொண்டிருத்தல் வேண்டும். இருப்பினும், அவ்வாறான அறிக்கை தயாரித்தல்கள் மற்றும் முகாமைத்துவம் என்பன 2018 திசெம்பர் 31 வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

மாது கங்கை ராம்சர் ஈர நிலத்துக்குச் சொந்தமான மையப் பகுதியில் சதுப்பு நிலங்களை நிரப்புவது மற்றும் ஹோட்டல் நிர்மாண வேலைத் திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அச்செயறதிட்டங்கள் மூலம் இடம்பெறும் சுற்றாடல் சேதங்களை தவிர்ப்பதற்கு வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய ஈர நில கொள்கை மற்றும் வியூகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள இலக்குகளிடையே ஒரு இலக்காக ராம்சர் மாநாட்டின் தரப்பினர் என்ற நிலையில் அதற்குரிய தேசிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டுமெனினும் அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இறால் பண்ணைகளின் கழிவு நீரை வெளியேற்றும் போது 1980 இலக்கம் 47 உடைய தேசிய சுற்றாடல் சட்டத்தின் விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றமையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இறால் வளர்ப்பிற்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.




இறால் கொட்டில்களில் கழிவுநீர் அகற்றல்

ஈர நில மண்டலத்துக்குள் நீர் வாழ் உயிரின வளர்ப்போடு சம்பந்தப்பட்ட அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது நீர்ப் பரப்பு கூண்டுகளுக்குள் பாதங்களை வைத்து உயிரியல் பல்லுயிர்களுக்கு ஏற்படக் கூடிய மோசமான பாதிப்புகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம் என்பது அவதானிக்கப்பட்டது.

சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சினால் 2014 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இலங்கை பல்லுயிர் பாதுகாப்புக்கான ஐந்தாவது தேசிய அறிக்கையில் பல்லுயிர் செயற்பாட்டுத் திட்டத்திற்கு (BCAPC) இணங்க இலங்கை சூழல் அமைப்புக்கள் 04 முக்கியமான கருப் பொருள்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை காடுகள், ஈர நிலங்கள், சமுத்திர அமைப்புகள் மற்றும் விவசாய அமைப்புகள் ஆகும். இந்தத் திட்டத்தில் ஈர நிலத்தின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ள செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட எதிர்பார்த்துள்ள விஷேட குறிக்கோள் 03 மற்றும் அதன் அடிப்படையிலான 16 பரிந்துரைகளும் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன.

கணக்காய்வு தினமான 2019 நவம்பர் 11 ஆந் திகதி வரை அந்தப் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.
செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. **2011** திசெம்பர் **13** திகதி இலக்கம் **1736/21** ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க கூண்டுகளில் அடைக்கப்பட்டு மீன்கள் வளர்க்கப்படும் தொழில் முனைப்புக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தன. காலி மாவட்டத்தில் மாது கங்கை ராம்சர் ஈர நிலத்தை அண்டிய பகுதிகளில் கூண்டுகளில் அடைக்கப்பட்ட மீன் வளர்ப்புக்காக **18** நபர்கள் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொண்டிருந்த போதிலும் பாத ஒத்தட சிகிச்சை மீன் வளர்ப்பு மையங்கள் எனும் செயற்திட்ட வகைப்படுத்தலின் கீழ் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டிருந்த தொழில் முனைவோர் **05** பேர் மாத்திரம் ஆகும். இதற்கிணங்க ஏனைய **13** மையங்களும் உரிய அனுமதிப் பத்திரங்கள் இல்லாமலேயே தமது நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. **04** பாத ஒத்தட சிகிச்சை மீன் வளர்ப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரத்தின் காலஎல்லை முடிவடைந்திருந்தது.

கடலாமைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக போதிய பணியாளர்கள் நியமிக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. வில்பத்து தேசிய சரனாலயத்தின் மேற்கு எல்லை சுமார் 38 கிலோமீற்றர் அளவிலான கடற்கரைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள கடற்பிரதேசம் ரம்சா ஈர நிலத்திற்கு உரித்தான பிரதேசமாகும். இவ் வளங்களைப் பாதுகாப்பதற்கான ஒரு வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படாமை இக் கடற்பன்ளிகள் மற்றும் கடலாமைகளின் வாழ்க்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்தது.

ரம்சா ஈர நிலம் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சரணாலயம் / தேசிய வனத்தினுள் அமைந்துள்ள தனியார் இடமொன்றில்

செயற்பட்டு வரும் ஒரு அபிவிருத்தி வேலைத்திட்டம் அல்லது குறித்த அபிவிருத்தித் திட்டங்களின் பலனாக சுற்றாடலுக்கு விடுவிக்கப்படும் கழிவுகள், கழிவு நீர் மற்றும் வாயு வெளியேற்றம் காரணமாக அச் சூழல் தொகுதிக்கு ஏற்படக்கூடிய சுற்றாடல் தீங்கினை மதிப்பிடுதல் தொடர்பான விதிமுறைகள் வன விலங்குகள் மற்றும் காட்டுவளப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தினால் மேவுகை செய்யப்படவில்லை.

படையெடுப்புத் தாவரங்களினால் வில்பத்து தேசிய சரனாலயத்தின் குளங்கள் இரையாகியுள்ளன. இக் குளங்களில் மிகவும் விசாலமான குளமான மஹவெவ குளத்தின் ஏறத்தாள நான்கில் மூன்று பகுதி ஹம்புபன் மூலம் மூடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டு இத் தாவரங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது மிக மெதுவாக நடைபெறுவதுடன் போதியளவு இடம்பெறாததும் அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஜப்பான் ஜபர, சல்வீனியா போன்ற ஏனைய படையெடுப்புத் தாவரங்களும் இக் குளங்களுக்கு அச்சுறுத்தலாக இருந்துள்ளன.



*ஹம்புபன்*



*சல்வீனியா*

2016-2022 ஆண்டுகளுக்கு உரித்தான ஒழுங்கு செய்யப்பட்ட உயிரினப் பல்வகைமை தந்திரோபாய செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் பிரதான தரப்பினரொருவராக வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களமானது அறியப்பட வேண்டும் எனினும் இரண்டாம் மட்ட தரப்பினரொருவராக அறியப்பட்டிருந்தது. இலக்கிடப்பட்ட நோக்கங்களில் செயலாறறலை பரீட்சிப்பதற்காக தாபிக்கப்பட்ட குறிகாட்டிகளின தற்போதய செயன்முன்னேற்றத்தை அளவிடுவது 2019 நவம்பர் மாதம் வரைலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இந்த ராம்சர் ஈர நில பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பணியாளர்களை ஈடுபடுத்தாதிருத்தல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை போதியளவு வழங்காதிருத்தல் போன்றவை அவதானிக்கப்பட்டதோடு, சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஈர நிலங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மீது அதிக கவனம் செலுத்துதல் அத்தியாவசியமானது என்பதுவும் அவதானிக்கப்பட்டது. பல்லுயிர்களில் மிகவும் உயர் பெறுமதி வாய்ந்த, வெள்ளக் கட்டுப்பாடு போன்ற சுற்றாடல் சேவைகள் பலவற்றை வழங்கும், அருகி வரும் அரிதான தாவரங்களையும், உயிரினங்களையும் கொண்டிருக்கும், புலம் பெயர்ந்து வரும் விசேட வகைப் பறவைகள் பலவற்றுக்கும் சுவர்க்கமாக அமைந்திருக்கும் நீர் வளம் நிறைந்த பிரதேசங்கள் இவை என்பதோடு வரலாற்று மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இந்த ராம்சர் ஈர நிலங்களின் பாதுகாப்பிற்காக அரசாங்கம் தலையிடும் தேவைப்பாடு உருவாகியிருந்தது.

## புலனாய்வு கணக்காய்வு மற்றும் மக்கள் பிரதிநித்துவம் தொடர்பான கணக்காய்வுப் பணிகள்

நபரொருவர் அல்லது குழுவொன்றினால் அநீதிக்கு அல்லது சட்டத்திற்கு முரணான முறையில் நலனொன்றினை அல்லது பிரதிபலனை பெற்றுக்கொள்வதற்கு உரிய அபாயம் தொடர்பில் அதன் மூலங்களினை பரீட்சித்தல் புலனாய்வு கணக்காய்வாளரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றில் மோசடியினை கண்டறிதல் மற்றும் அவற்றை தவிர்ப்பதற்கு கட்டுப்பாட்டு முறையொன்றினை உறுதிப்படுத்துதல் தொடர்பில் புலனாய்வுக் கணக்கில் கவனம் செலுத்தப்படுகின்றது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் பத்தொன்பதாவது திருத்தத்தில் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மூலம் அரச நிதி உரிய முறையில் முகாமை செய்வதற்காக அரசு கணக்காய்வினை வலுவூட்டப்பட்டுள்ளது. கணக்காய்வு நிறுவனங்களின் கடமைகள் ஆவணங்களை பரீட்சிப்பதற்கு மேலதிகமாக புலனாய்வினை விரிவுபடுத்தும் நோக்கில் மக்களின் பிரதிநிதித்துவமும் ஆணைக்குழுக்களின் கோரிக்கை, அரச கணக்குகள் தொடர்பில் மற்றும் பொது சட்டவாக்கம் தொடர்பில் செயற்பாட்டுக்குழுக்களின் பிரதிநிதித்துவம், நிறுவனத் தலைவர்களின் பிரதிநிதித்துவம் மற்றும் ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் தகவல்களைப் பெற்றுக்கொண்டு அரச நிதி முகாமைத்தவத்தினை செயற்திறனாக மேற்கொள்வது தொடர்பில் புலனாய்வு கணக்கீட்டில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதனோடினைந்ததாக திணைக்களங்களினால் உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் ஆற்றலினை அபிவிருத்தி செய்வதற்காக நடைமுறையொன்றினை உருவாக்குவதற்கும், உரிய பயிற்சிகளை வழங்குவதற்கும், பௌதீக வளங்கள், துரித அழைப்பு இலக்கங்கள், இலத்திரனியல் தபால் போன்றவற்றை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விசேட புலனாய்வுப் பிரிவினால் மீளாய்வாண்டின் போது முக்கியமான மற்றும் துரித கவனம் செலுத்தப்பட வேண்டிய (பிரதிநிதித்துவம்) தொடர்பில் கவனம் செலுத்தும் போது 23 பிரதிநிதித்துவங்களுக்கு உரியதாக ரூபா 12,557.4 மில்லியன் செலவினங்களினை பரீட்சிக்கும் போது அரசிற்கு ஏற்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 9,868.1 மில்லியனாக இருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொண்ட புலனாய்வுகளுக்கு உரியதாக முக்கிய அவதானிப்புக்களை தொகுத்து பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

### கட்டிட வாடகைகளை கூடுதலாக செலுத்துதல்

சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வழிப்பு, மீள்குடியேற்றல் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சரின் எண்ணக்கருவின் பிரகாரம் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள அனைத்து நிறுவனங்களும் ஒரு கட்டிடத்திற்கு கொண்டு வருவதற்காக கட்டிமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. 2016 மே 10 ஆந் திகதி முதல் 24 மாத காலப்பகுதிக்காக ஒரு மாதத்திற்கு ரூபா 5,089,500 படியான வாடகைக்கு கட்டிடமொன்றினை வாடகைக்கு எடுப்பதற்காக கட்டிட உரிமையாளருடன் அமைச்சு உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்தது. அரச மதிப்பீட்டாளரினால் அந்தக் கட்டிடத்தில் மாதாந்த வாடகையாக ரூபா 3 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த மதிப்பீட்டினை மீளகருத்தில் கொண்டு அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு பதிலுரைக்கும் பதிலாக மாதமொன்றிற்கு ரூபா 4.2 மில்லியன் வரையிலும் வாடகை அதிகரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் கட்டிட உரிமையாளருடன் இணக்கப்பாட்டிற்கு வந்ததிற்காக கலந்துரையாடல்களை மேற்கொள்ளாது அவர் முன்வைத்த கூறுவிலையின் பெறுமதிக்கு கட்டிடத்தினை வாடகைக்கு எடுத்த காரணத்தினால் மாதமொன்றிற்கு ரூபா 889,500 படி 02 வருட காலப்பகுதிக்காக ரூபா 21,348,000 தொகை கூடுதலாக செலுத்த நேர்ந்திருந்தது. அரச மதிப்பீட்டாளரின் அறிக்கையின் பிரகாரம் கட்டிடத்தின் பரப்பளவானது சுமார் 30,808 கனஅடிகளாக இருந்த போதிலும், கட்டிடத்தின் உரிமையாளர் குறிப்பிடப்பட்ட 35,100 கன அடிகளுக்காக வாடகை செலுத்தப்பட்டிருந்தமையினால் உடன்படிக்கைக் காலத்திற்கு உரியதாக ரூபா

14,931,160 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. ஆகக்குறைந்த விலையுடனான விலைக்கேள்வியினை நிராகரித்தமையினால் ரூபா 88,510,968 தொகையும், இரண்டாவது ஆகக்குறைந்த விலையுடனான விலைக்கேள்வியை நிராகரித்தமையால் ரூபா 4,212,000 ஆன நட்டமும் அரசிற்கு ஏற்பட்டிருந்தது. அலுவலகத் தேவைப்பாட்டிற்கு அமைய உள்ளக அமைப்பினை மாற்றியமைக்க நேர்ந்திருந்த ஆகக்குறைந்த மற்றும் ஆகக்குறைந்த இரண்டாவது கூறுவிலைகளுக்கிடையே அவற்றுக்குரிய கட்டிடங்கள் இரண்டினதும் வாடகைக்கு எடுக்காது உடன்படிக்கை கைச்சாத்திட்டு கட்டிடத்தின் உட்புறத்தினை மாற்றியமைப்பதற்காக ரூபா 19,091,396 ஆன கிரயத்தினை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. விலைக் கேள்வி ஆவணங்களினுள் எந்தவொரு பந்தியிலும் உள்ளடக்கப்படாத எனினும், கட்டிட உரிமையாளரின் கோரிக்கையின் அடிப்படையில் ரூபா 15,268,500 தொகையான பாதுகாப்பு வைப்பொன்றினை செலுத்துவதற்கு பெறுகைகள் குழு தீர்மானித்திருந்தது. ஏனைய கட்டிட வளாகத்தினுள் தனது அலுவலகத்தினை நடாத்திச் செல்வதற்கு புனர்வாழ்வு ஆணையக பணியகத்திற்கு மாதமொன்றிற்கு ரூபா 799,779 தொகையான மேலதிக கிரயமொன்றும் நட்ட மீளளிப்பதற்கான அலுவலகத்திற்கு 5,684 கனஅடிகள் பரப்புடைய கட்டிடம் இழக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு ரூபா 44,779 நிதி ரீதியான நட்டமொன்றினையும் மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

### மின்சார கம்பங்களினை உற்பத்தி செய்த செயற்திட்டத்தில் ஏற்பட்ட நட்டங்கள்

இலங்கை மின்சார (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 1,000 ஆன பங்கு மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட லெக்கோ செயற்திட்டம் எனும் பெயருடைய உப கம்பனியினால் 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மின்சார கம்பங்களை உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தின் காரணமாக ரூபா 5.9 மில்லியன் ஆக காணப்பட்ட திரண்ட இலாபம் ரூபா 3.4 மில்லியன்களான திரண்ட நட்டம் வரையில் வீழ்ச்சியடைந்திருந்தது. உற்பத்தி செய்யப்பட்ட 786 மின்சாரத் தூண்கள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்தமையால் ஏற்பட்ட நட்டம் ரூபா 7.31 மில்லியனாக இருந்தது. மிகவும் எளிமையான செயற்பாட்டு நடவடிக்கையொன்றினை செய்வதற்கு எதிர்பார்த்த கம்பினயொன்றுக்கு உயர் பொறுப்புடனான பதவியணியொன்றினை 19 பேருடன் இணைத்துக் கொள்வதற்கு சம்பளங்களாக ரூபா 10.29 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. சரியான தரத்தில் உற்பத்தி பணிகளை மேற்கொள்வதற்கு மேற்கொள்ளும் எதிர்பார்ப்புடன் பாணந்துறை பிரதேசத்தில் வாடகைக்கு எடுக்கப்பட்ட காணிக்காக 10 மாதங்களினுள் ரூபா 90,000 ஆன வாடகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், எவ்வித உற்பத்தியும் அங்கு இடம்பெற்றிருக்கவில்லை. முன்னைய உற்பத்திகளினை மேற்கொண்டு பண்டாரகம பிரதேசத்தின் வேலைத்தளத்தினை மீளவும் மாற்றியிருந்த போதிலும், உற்பத்திப் பணிகளுக்காக பயன்படுத்திய ரூபா 4.16 உபகரணங்கள் சேதமடைந்திருந்ததுடன் 03 மாத காலப்பகுதிக்கு போதியளவான ரூபா 4.83 மில்லியன் பெறுமதியான உற்பத்தி பொருட்கள் 2013 ஆம் ஆண்டின் இலாபத்திற்கு எதிராக முழுமையாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

### மின்சாரத்தினை பகிர்ந்தளிக்கும் தூண்கள், கம்பிகளுடனான தொலைக்காட்சி இணைப்புகளினை வழங்குதல்

இலங்கை மின்சார (தனியார்) கம்பனியின் மின்சார பகிர்ந்தளிக்கும் தூண்களினை பயன்படுத்தி கம்பிகளுடனான மின்சார இணைப்புக்கள் (Cable TV) வழங்குவதற்கு லெக்கோ செயற்திட்ட கம்பனி, தனியார் கம்பனிகள் இரண்டுடன் ஒப்பந்தமொன்றினை கைச்சாத்திட்டிருந்தது. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய வருமானங்கள், இலாப நட்டக் கணக்கினுள் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் அதன் கூட்டுப்பெறுமதி ரூபா 9.27 மில்லியனாக இருந்தது. அந்த சேர்மதியினுள் தனியார் தொலைக்காட்சி கம்பனிகள் இரண்டிடமிருந்து பெறவேண்டிய ரூபா 5.98 மில்லியனான கடன் பட்டோர் மீதியும் உள்ளடங்கியிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் வரித்தொகை உரிய முறையில் செலுத்தப்படாத போது தனியார் சேவை வயர்களை தூண்களிலிருந்து அகற்ற முடியுமான போதிலும், அதன் பிரகாரம் ஏற்பட்டிருக்கவில்லை. அத்துடன் லெக்கோ செயற்திட்ட கம்பனியினால் பேணப்படும் அறிக்கைகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெறவேண்டிய தொகை ரூபா 40.08 மில்லியனாக இருந்தது.

## கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்காக காணியொன்றினை கொள்வனவு செய்தல்

இலங்கை மின்சார (தனியார்) கம்பனியொன்றுக்கு புதிய அலுவலகக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2001 ஆம் ஆண்டின் போது ரூபா 53.54 மில்லியன் செலவிடப்பட்டு நாராஹேன்பிட்டிய பிரதேசத்தில் சுமார் 73.85 பேர்ச் பரப்பளவான காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டளவில் அந்த காணியில் எவ்வித நிர்மாணங்களும் இடம்பெற்றிருக்கவில்லை. எனினும், 18 ஆண்டுக் காலப்பகுதியினுள் காணியின் பாதுகாப்பிற்காக ரூபா 10 மில்லியனுக்கு அதிகமான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தலைமைச் செயலகம் நடாத்திச் செல்லப்படும் கட்டிடத்திற்காக 1999 செப்தெம்பர் மாதம் முதல் 2019 யூன் மாதம் வரையிலும் கட்டிட வாடகையாக ரூபா 208 மில்லியன் தொகையும் அதன் இடவசதி போதாமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டின் போது வாடகைக்கு எடுக்கப்பட்ட மேலதிக கட்டிடத்திற்காக 2019 யூன் மாதம் வரையிலும் ரூபா 22.3 மில்லியனும் வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.

## இலங்கை மின்சார (தனியார்) கம்பனியின் பணம் லங்கா ப்ரோட்பான்ட் நெட்வோர்க்ஸ் தனியார் கம்பனிகளில் முதலீடு

இலங்கை மின்சார (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் லங்கா ப்ரோட்பான்ட் நெட்வோர்க்ஸ் தனியார் கம்பனியின் முன்னுரிமைப் பங்குகளில் 2001 யூலை 20 ஆந் திகதி ரூபா 15 மில்லியன் தொகையும், 2001 யூலை 06 ஆந் திகதி சாதாரண பங்குகளில் ரூபா 5 மில்லியன் தொகையுமாக ரூபா 20 மில்லியன் கூட்டுத்தொகை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஒரு வருட திறைசேரி உண்டியல்களுக்காக இலங்கை வங்கியினால் செலுத்தப்படும் வட்டியானது இரண்டு வீதத்தினை சேர்ப்பதன் மூலம் தயாரிக்கப்படும் வட்டி வீதத்திற்கு முன்னுரிமை பங்குகளிற்காக வட்டி செலுத்துவதற்கு இணங்கியிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு உரிய வட்டியான ரூபா 32.68 மில்லியனை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. முதலீடு செய்யப்பட்ட சாதாரண பங்குகளுக்காக எவ்வித நலனும் கிடைத்திராததுடன் முன்னுரிமைப் பங்குகளுக்காக செலுத்துவதற்கு இணங்கி வாடகை சதவீதத்தின் பிரகாரம் சாதாரண பங்குகளுக்காகவும் வட்டி கணிப்பிடப்படின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இழக்கப்பட்டிருந்த வட்டி வருமானம் ரூபா 10.96 மில்லியனாக இருந்தது. மேற்படி முதலீட்டுக் கம்பனியின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தேறிய சொத்துக்கள் ரூபா 1,207.13 மில்லியனான மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. அவ்வாறே இலங்கை மின்சார (தனியார்) கம்பனியினால் மேற்படி மேற்கொள்ளப்பட்ட ரூபா 20 மில்லியனான மொத்த முதலீடு கணக்காய்வு கம்பனியின் முன்மொழிவின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டின் போது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## திட்டவட்டமான நடைமுறையொன்றினை கருத்தில் கொள்ளாது பட்டியலிடப்படாத மின்சார நுகர்வினை கணிப்பீடு செய்தல்

இலங்கை மின்சார (தனியார்) கம்பனியினால் மொறட்டுவயில் இராவதாவத்த காகில்ஸ் வளாகத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்த 100KVA அளவான மின்சாரம் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை. இலங்கை மின்சார (தனியார்) கம்பனி தொடர்ச்சியாக பின்பற்றும் நடைமுறையினை கருத்திற் கொள்ளாது வேறொரு முறையினை பின்பற்றி பட்டியலிடப்படாத மின்சார நுகர்வினை கணிப்பீடு செய்த காரணத்தினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 3.61 மில்லியன் தொகைக்கு பதிலாக ரூபா 1.93 மில்லியன் அறவிடப்பட்டமையால் மின்சார கம்பனிக்கு ரூபா 1.66 மில்லியன் ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

## யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதான சிற்றுண்டிச்சாலையினை குத்தகைக்கு வழங்குதல்

இலங்கை கடற்படையின் பங்களிப்புடன் மற்றும் ரூபா 3.53 மில்லியன் பொருட்களுக்காக செலவிடப்பட்டு கவர்ச்சியான முறையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதான சிற்றுண்டிச்சாலை நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த சிற்றுண்டிச்சாலை 2018 ஏப்ரல் 09 ஆந் திகதி முதல் 2020 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் குத்தகைக்கு வழங்குவதற்காக முன்வைக்கப்பட்டிருந்த ஒரு மாத காலப்பகுதிக்கு ரூபா 310,000 தொகையான

ஆகக்கூடிய மிகைக் கேள்வியை புறக்கணித்து மோசடியான முறையில் ரூபா 123,000 தொகையான இரண்டாவது ஆகக்கூடிய விலைக்கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக அரசிற்கு ரூபா 4.03 மில்லியனான வரி குத்தகை வருமானம் இழப்பிற்குள்ளாகியிருந்தது.

### நலன்புரிச் சங்கத்தினால் மருத்துவமனை வளாகத்தில் பல்வேறு இடங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டமை

எந்த தரப்பினரதும் அனுமதியின்றி மற்றும் அரசின் எவ்வித கொடுப்பனவுமில்லாது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வளாகத்தில் உள்ள 11 இடங்கள் பல்வேறு தரப்பினருக்கு தனது வியாபாரங்களை நடாத்திச் செல்வதற்காக நிர்வாகத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே நலன்புரிச் சங்கத்திற்கு வழங்கிய 06 இடங்களில் 03 இடங்கள் தனியாருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டமையினல் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 2.62 மில்லியனான குத்தகை வருமானம் நலன்புரிச் சங்கத்திடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நலன்புரிச் சங்கத்தினால் மேலும் இரு வியாபார நிலையங்கள் உப குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையினால் அரசிற்கு இழப்பான குத்தகை வருமானம் ரூபா 1.60 மில்லியனாக காணப்பட்டது.

### அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளில் அரச சார்பற்ற அமைப்புக்களின் பெயரில் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரின் கோரிக்கையின் பிரகாரம்யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் கண் சிகிச்சை பிரிவொன்றினை தாபிப்பதற்காக ரூபா 12.50 மில்லியன் செலவிடப்பட்டு உரிய காணி கொள்வனவு செய்வதற்காக வழங்கிய அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த பெறுமதிக்கு காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்தக் காணி போதனா வைத்தியசாலையின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், அது அரச சார்பற்ற அமைப்பொன்றான யாழ்ப்பாண மருத்துமனையின் அபிவிருத்தி சங்கத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்தக் காணியின் தற்காலிக கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்காக அரச நிதியிலிருந்து ரூபா 1.90 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நிர்மாண ஒப்பந்தங்களினை கையளித்தல்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ரூபா 2 மில்லியனுக்கு குறைவான அனைத்து நிர்மாண ஒப்பந்தங்களும் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9 மற்றும் 3.9.1 வழிகாட்டிகளினை அடிப்படையாகக் கொண்டு அரச சார்பற்ற நிறுவனமொன்றாக பதிவு செய்திருந்த யாழ்ப்பாண மருத்துவ அபிவிருத்தி சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 170.24 மில்லியனான 310 ஒப்பந்தங்களுக்காக உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. இந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் ஒப்பந்ததாரரான மருத்துமனையின் அபிவிருத்தி சங்கத்தினால் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.1 வழிகாட்டியின் ஏற்பாடுகள் மீறப்பட்டிருந்தது.

### பதுளை பொதுமருத்துமனையின் கந்தல் துணிகளை சலவை செய்தல்

சுகாதார அமைச்சின் பெறுகைகள் குழுவினால் 2018 மே 15 ஆந் திகதி முதல் 2019 மே 14 ஆந் திகதி வரையிலும் பதுளை பொது மருத்துவமனையின் கந்தல் துணிகளை சலவை செய்வதற்காக ரூபா 20.52 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் 04 ஒப்பந்ததாரர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. பதுளை மருத்துமனையின் கந்தல் துணிகள் அனைத்தையும் சலவை செய்யும் இயலுமை காணப்பட்ட போதிலும், அது தொடர்பில் கவனம் செலுத்தப்படாது துணிகளினை சலவை செய்யும் ஒப்பந்தத்தில் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2018 ஆம் ஆண்டினுள் மாத்திரம் ரூபா 9.57 மில்லியன் அரச பணம் செலவிடப்பட்டிருந்தது.

### சமர்ப்பிக்கப்பட்ட ஒரு விலைக்கேள்வியின் அடிப்படையில் ஒப்பந்தத்தினை கையளித்தல்

பதுளை பொது மருத்துவமனையின் வழங்கல் தேவைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒரு விலைக்கேள்வியினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருந்தார். ஒரு விலைக்கேள்வி மாத்திரம் முன்வைக்கப்படும் போது அதற்கு மீள விலைக்கேள்வி கோரல் இடம்பெற்றிருக்கவில்லை. அத்துடன் அந்த வழங்குனரிடமிருந்து 30 சந்தர்ப்பங்களில் ரூபா 17.91 மில்லியன் கூட்டுத்தொகை

செலவிடப்பட்டு வழங்கல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### மேலதிக படிகளினை கூடுதலாக செலுத்துதல்

தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நாளொன்றிற்கு 07 மணித்தியாலங்கள் படியான வாரமொன்றிற்கு 42 மணித்தியாலங்களினை விஞ்சி வேலை செய்யும் காலத்தினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரப் படிகள் செலுத்துவதற்காக மணித்தியாலங்கள் கணிப்பிடப்பட வேண்டும். எனினும், சராசரி கடமை நேரத்தினுள் உள்ளடங்கும் வகையில் 13 புகையிரத நிலையங்களில் மருதானை புகையிரத நிலையத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த 18 புகையிரத கண்காணிப்பாளர்களிற்கு 2017 நவம்பர் மாதம் முதல் 2018 ஏப்ரல் வரையான 06 மாத காலப்பகுதியினுள் ரூபா 1.20 மில்லியன் மேலதிகப் படிகள் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

### சிக்கனமற்ற செலவினம்

சுகாதார அமைச்சின் கணக்காளரொருவர் 2016 மே மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் International Exposure and Professional Development Course on Hospital Management and Accounting எனும் பாடநெறியினை கற்பதற்காக பாடநெறி மற்றும் ஏனைய செலவினங்களுக்காக ரூபா 691,680 செலவிடப்பட்டிருந்தது. மீண்டும் அந்த உத்தியோகத்தருக்கே அந்த பாடநெறியை கற்பதற்காக ரூபா 691,680 செலவிடப்பட்டு பங்குபற்றியிருந்தார். இதன் காரணமாக ஒரு சந்தர்ப்பத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 691,680 தொகையான பாடநெறிக் கட்டணங்கள் உள்ளடங்கலாக ஏனைய செலவினங்கள் சிக்கனமற்றதாக இருந்தது.

### பதவிக்கு பொருந்தாத கடமைகளை கையளித்தல்

ஊவா மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் அளவீட்டு உதவியாளர்களினை இணைத்துக் கொள்ளல் மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறையின் 10 ஆம் பந்தியின் பிரகாரம் அளவீட்டு உதவியாளர் பதவிகளுக்காக அரசின் வர்த்தமானி அறிவித்தலில் அல்லது பத்திரிகை அறிவித்தல் மூலம் அல்லது வலைத்தளத்தில் அறிவித்தலொன்றினை வெளியிடுவதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேற்றின் அடிப்படையில் முன்னுரிமையின் பிரகாரம் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும். அதன் பிரகாரம் செயற்படாது ஊவா மாகாண விவசாய, நீர்ப்பாசன, நன்னீர் மீன்வளர்ப்பு கைத்தொழில், காணிகள், சுற்றுலா மற்றும் போக்குவரத்து அலுவல்கள் அமைச்சினால் இதற்கு முன்னர் கிடைத்துள்ள விண்ணப்பங்களின் அடிப்படையாகக் கொண்டு 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அமைய அடிப்படையில் அளவீட்டுத் துறையின் 07 உதவியாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இந்த நியமனங்களை வழங்கும் சந்தர்ப்பம் அளவில் அங்கீகரிக்கப்பட்ட 03 அளவையாளர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டமையினால் இணைத்துக் கொள்ளப்பட்ட அனைத்து அளவீட்டு உதவியாளர்களுக்கும் அளவிடுதல் அல்லாத ஏனைய கடமைகள் சாட்டப்பட்டிருந்தது.

### கடமைகளை நிறைவேற்றாமை

2018 நவம்பர் 12 ஆந் திகதி பகல் 03.45 மணிக்கு நாமல் ஓயா குளத்தின் குளக்கட்டின் மீதுள்ள பாதையில் கடந்த செல்ல முடியாதவாறு இரு காட்டு யானைகள் காணப்படுவதாக வனசீவராசிகள் திணைக்களத்தின் கல்லோயா தேசிய வனப்பூங்கா அலுவலகத்தின் தொலைபேசி இலக்கத்திற்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் தேடிப்பார்ப்பதற்கு எந்த உத்தியோகத்தரும் அந்த இடத்திற்கு வருகை தந்திருக்கவில்லை இரவு நேரங்களில் காட்டு யானைகள் கிராமங்களினுள் நுழையும் சந்தர்ப்பங்களில் கிராமவாசிகளின் உயிர் மற்றும் ஆதனங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு உதவி புரிவதற்காக வனசீவராசிகள் உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தியிருந்த போதிலும், 2018 நவம்பர் 12 ஆந் திகதி அதிகாலை 04.15 மணிக்கு கல்லோயா தேசிய வனப்பூங்காவின் தலைமையக அலுவலகத்தில் பரிசோதனை மேற்கொண்டதுடன் அந்த சந்தர்ப்பத்தில் கடமைகள் சாட்டப்பட்டிருந்த பிரதி பூங்கா பொறுப்பாளர் அலுவலகக் கடமைகளில் ஈடுபட்டிருக்கவில்லையென்பது வெளிப்படுத்தப்பட்டது.

### எரிபொருள்களுக்காக கூடிய தொகையினை செலுத்துதல்

சேனாநாயக்க சமுத்திரத்தினை பார்வையிடுவதற்கு ஒரு தடவை பிரயாணத்திற்காக 02 மணித்தியால காலங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஒரு வள்ளத்தில் ஒரு பயண தடவைக்காக எரிபொருள் (மண்ணெண்ணெய்) 17 லீற்றர் தேவைப்படுவதாக நாளாந்த ஓட்டக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. 2018 நவம்பர் 14 ஆந் திகதி 05 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகளில் 03 வள்ளங்கள் உள்ளடங்கலாக ஒரு வள்ளத்தில் இரு மணித்தியாலங்களில் சஞ்சரிப்பதற்காக தேவைப்படும் எரிபொருளின் அளவு 07 – 09 லீற்றர் வரையான வீச்சில் காணப்பட்டது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது எரிபொருள் 38,107 லீற்றர்கள் 03 வள்ளங்களுக்காக விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் நாளாந்த ஓட்டக் குறிப்புக்களின் பிரகாரம் 2,241 ஓட்டத் தடவைகள் இடம்பெற்றிருந்தன. பௌதீக பரிசோதனையின் பிரகாரம் ஒரு தடவை பிரயாணிப்பதற்காக தேவைப்படும் உச்ச எரிபொருளின் அளவு சுமார் 10 லீற்றர்களாக கருதினால் 2,241 பயணத் தடவைகளுக்காக 22,410 லீற்றர் மாத்திரம் செலவிடப்பட வேண்டியதாக இருந்தது. அதன் பிரகாரம் அண்ணளவாக மண்ணெண்ணெய் எரிபொருள் லீற்றர் 15,697 இற்காக ரூபா 1.04 மில்லியன் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

### குளத்தின் புனரமைப்பு பணிகள் உரிய முறையில் இடம்பெறாமை

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மொனராகலை பிரதேசத்தின் பொறியியிலாளரால் 2017 ஆகஸ்ட் 22 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட யுதகனாவ குளத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளில் பணிகளானது 80 சதவீதம் மற்றும் அலைதாங்கியினை நிர்மாணிக்கும் பணிகள் 60 சதவீதம் மாத்திரம் நிறைவேற்றப்பட்டு எஞ்சிய வேலைகள் பூர்த்தி செய்யப்படாது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த நிலைமை ஏற்படுவதற்கு உரிய காரணங்களை தேடியறிந்து அதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக மடைகள் மற்றும் வான்கதவுகள் நிர்மாணித்தல் நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டு குறித்த நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. குளக்கட்டு மற்றும் அலைதாங்கியினை நிர்மாணிக்கும் பணிகள் தொடர்ந்தும் மொனராகலை பிரதேசத்தின் நீர்ப்பாசன பொறியியலாளருக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், 2019 நவம்பர் மாதம் வரையிலும் அந்த பணிகள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மொனராகலை பிரதேசத்தின் நீர்ப்பாசன பொறியியல் அலுவலகத்தினால் குளத்தின் அலைதாங்கியை நிர்மாணிக்கும் பணிகளுக்காக ரூபா 31.26 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த நிர்மாணங்களை மேற்கொள்ளும் போது கவனக் குறைவினால் கல் பரப்பப்படுத்தல் மற்றும் உரிய முறையில் மேற்பார்வை செய்யப்படாமையினால் பரப்பப்பட்டிருந்த பாதுகாப்பு காபட் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வகையில் சேதமடைந்திருந்தது. மேலும், குளத்தின் வெளிச்சுவரினை நிர்மாணிக்கும் போது அதன் அண்மையிலுள்ள வாயில் மற்றும் பாலத்தின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தாமையினால் குளத்திலிருந்து வெளியேறும் நீரினால் அதன் கரைகள் அரிப்புக்குள்ளாகின்றமையால் பாலம் உடையும் அபாயத்திற்கு உட்பட்டிருந்தது.



பரிசோதனை சந்தர்ப்பத்தில் யுதகனாவ குளக்கட்டு காட்சியளித்த விதம்



வாயில்களை விட சிறிய பாலம் மற்றும் பாதுகாப்பற்ற கரையோரங்கள் குளத்தின் நீர் ஓட்டம் காரணமாக கரைகள் கழுவிச் சென்றுள்ள விதம்

## மாணவர் விடுதிகளினை முகாமை செய்வதிலுள்ள நலிவுகள்

கொழும்பு ஆனந்தா வித்தியாலயத்தினுள் மாணவர் விடுதியினுள் மேல் தளத்தில் தரம் 7 மற்றும் 8 இன் மாணவர்களின் படுக்கையறைகளில் இரட்டைக் கட்டில்களில் மேலுள்ள கட்டில் மற்றும் கூரை ஆகியவற்றுக்கிடையே குறைவான (இடைவெளி) உயரம் காணப்பட்டது. பெரும்பாலான கட்டில்களில் மேல் கூரையில் மின்விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளமையினால் மேல் கட்டில்களில் உள்ள மாணவர்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை காணப்பட்டது. அவ்வாறு மின்விசிறிகளை பொருத்தியிருந்த காரணத்தினால் மேல் கட்டில்களில் உள்ள மாணவர்களுக்கு நுளம்பு வலைகளை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. விடுதியின் கூரையின் முகடுகள் இத்து போயிருந்தமை, உள்கூரைகள் உடைந்து காணப்பட்டமை, மலசலகூடம் மற்றும் குளியலறை உரிய முறையில் சுத்தம் செய்யப்படாமை, அதற்கு போதியளவு ஊழியர்கள் ஈடுபடுத்தப்படாமை, அதன் சூழல் சுத்தப்படுத்தப்படாமை மற்றும் விடுதி மதியுரைக் குழு 2019 யூலை மாதம் முதல் கூட்டப்படாதிருந்தமை போன்ற பல்வேறு குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.



மேல் கட்டில்களில் மற்றும் கூரை ஆகியவற்றுக்கிடையே குறைவான இடைவெளி காணப்படுதல்





மேல்தளத்திற்கு நுழையும் இடத்தில் கூரையில் மேற்கூரை இடங்கள்

கூரை புனரமைக்கப்பட வேண்டிய

உடைந்துள்ள விதம்







நீர்வடிகட்டி உள்ள இடத்தின் சுத்தமற்ற தன்மை

சுத்தமற்ற முறையில களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த உருளைக் கிழங்கு

விடுதியின் பின்புறமுள்ள சுத்தப்படுத்தப்படாத வடிகாலொன்று

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை இணைத்துக்கொள்ளாமை**

அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் உயர் நிறைவேற்று பதவிகளான பணிப்பாளர் நாயகப் பதவி 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி முதலும் நிறுவனத்தின் இரண்டாவது நிறைவேற்றுப் பதவியான அங்கீகரிக்கப்பட்ட பணிப்பாளர் பதவிகள் 06 இல் 03 பதவிகள் 2018 ஆம் ஆண்டு முதலும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அந்த பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை

இணைத்துக் கொள்வதற்கு நிர்வாகம் 2020 மே 31 ஆந் திகதி வரையிலும் தவறியிருந்தது. நிர்வாக பணிப்பாளர் பதவிக்காக 2018 நவம்பர் 11 ஆந் திகதி முதல் 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பணிப்பாளர் (நிதி) பதவிக்காக 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 2020 மே 31 ஆந் திகதி வரையிலும் வெளிவாரி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும், நிறுவனத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக 374 பேரைக் கொண்ட பதவியணியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 மே 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 254 பேரைக் கொண்டிருந்தது. இதன் பிரகாரம் அத்திகதியில் உள்ளபடியான வெற்றிடங்களின் எண்ணிக்கை 121 ஆக இருந்தது.

### கோழிப் பண்ணையினை நிர்மாணிக்கும் பணிகள் கைவிடப்பட்டிருந்தமை

வல்பிட்ட மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திற்காக புதிய கோழிப் பண்ணையொன்றினை நிர்மாணிப்பதற்காக மேல்மாகாண சபையின் நிதியின் கீழ் ரூபா 1,500,000 தொகையான நிதிய ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்தப் பணியினை நிறைவேற்றுவதற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 1,433,033 ஆக இருந்தது. இந்த நிர்மாண ஒப்பந்தத்திற்காக பதிவு செய்த கிராம அபிவிருத்தி சங்கமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2018 ஒக்தோபர் 18 அந் திகதி வரையிலும் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது. எவ்வாறாயினும் குறித்த நிர்மாணங்களில் 60 சதவீதம் நிறைவு செய்யப்பட்டிருந்ததன் பின்னர் ஒப்பந்தக்காரரால் நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது ஒப்பந்த தாரரால் முன்வைக்கப்பட்ட பணிகளுக்காக அளவிடைப் பத்திரங்களில் உரிய கோழிப் பண்ணைகளின் நிர்மாண அளவிடைகளின் பிரகாரம் வெற்றிகரமான முறையில் நிறைவு செய்யப்பட்டள்ளதாகவும் பணிகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் பணிகள் மீளக் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டு பயிற்சி நிறுவனத்திற்கு பொறுப்பான உதவிப் பணிப்பாளரினால் கொடுப்பனவுகள் பரிந்துரை செய்யப்பட்டு மாகாண விவசாய பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 885,400 தொகை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2020 சனவரி 13 ஆந் திகதி வரையிலும் இந்த கோழிப் பண்ணையினை நிர்மாணிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அதன் கூரையிலுள்ள சில தகரங்கள் துரப்பிடித்து உள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.



கோழிப் பண்ணையின் பரீட்சிப்புத் தினமான 2020 சனவரி 13 ஆந் திகதியில் உள்ளபடியான நிலைமை



கோழிப் பண்ணையின் கூரை துருப்பிடித்திருந்த விதம்

### விஞ்ஞான ஆய்வுகூடங்கள் மற்றும் அலுவலகக் கட்டிடங்களினை நிர்மாணித்தல்

இலங்கை அணுசக்தி சபையின் முன்னோடி வலு அதிகாரசபையின் விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் அலுவலகக் கட்டிடம் அணுதெறிப்பிற்கு உட்படும் பிரதேசங்களிலிருந்து விலகி தாபிக்கும் நோக்கில் மாலபே தகவல் தொழில்நுட்ப பூங்காவின் கல்பராவத்தை எனும் பிரதேசத்தில் 03 ஏக்கர்கள் 36.5 பேர்ச் பரப்பளவான காணி கொள்வனவு செய்வதற்காக 2014 யூலை 31 ஆந் திகதி முதல் 2015 ஒக்தோபர் 29 ஆந் திகதி

வரையிலும், 05 சந்தர்ப்பங்களிலும் ரூபா 181 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்தக் காணியின் பெறுமதி ரூபா 116 மில்லியனாக அரசின் பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அரசின் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுப் பெறுமதியினை ரூபா 65 மில்லியனால் விஞ்சி ரூபா 181 மில்லியன் செலவிடப்பட்டு காணிக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அந்தக் காணிக்காக பணம் செலுத்தப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும், காணியின் உரித்து சட்ட ரீதியாக கையளிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

சபையினை மீள தாபிப்பதற்காக ஒரு தளத்துடனான ஆய்வுகூடக் கட்டிடமொன்று முதலாம் கட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை இணங்கியிருந்ததுடன் அதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றுக்கு 2013 ஒக்தோபர் 25 ஆந் திகதி கைச்சாத்திட்டிருந்தது. அதன் பிரகாரம் சர்வதேச ஒத்துழைப்புக்கான யப்பான் நிறுவனத்தின் (JICA) கடனின் அடிப்படையில் ரூபா 367.2 மில்லியன் மற்றும் உள்நாட்டு நிதியின் அடிப்படையில் ரூபா 51.8 மில்லியன் எனுமாறு ரூபா 419 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிர்மாணங்கள் தொடர்பில் மக்களின் எதிர்ப்புக்கள் உருவாகிய காரணத்தினால் நிர்மாணங்களை நிறுத்துவதற்கு நேர்ந்திருந்தது. அச்சந்தரப்பம் வரையிலும் நிர்மாணங்களுக்காக ரூபா 60.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக மாலபே ஹல்காரவத்தையில் சபையினை மீள நிறுவுதல் நிறுத்தப்பட்டு தேசிய பயிலுனர் மற்றும் பயிற்சி நிறுவனத்திற்குரிய ஒருகொடவத்தியில் அமைந்துள்ள காணியொன்றில் இந்த நிர்மாணங்களை மேற்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மாலபே ஹல்கராவத்தை காணியின் நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 60.1 மில்லியன் சிக்கனமற்ற செலவினமொன்றாக (நட்டம்) உருவாகியிருந்தது.

குறித்த நிர்மாணங்கள் மீண்டும் ஒருகொடவத்தயிலுள்ள காணியில் மேற்கொள்ள தீர்மானித்திருந்தமையால் ஒட்டுமொத்த நிர்மாணக் கிரயம் கிரய மதிப்பீடு ரூபா 267.8 மில்லியனால் அதிகரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஒப்பந்தகாரரினால் ஒருகொடவத்தயில் அமைந்துள்ள காணியில் ஆரம்ப நிர்மாணங்களில் ஏற்பட்டிருந்த குறைபாடுகள் காரணமாக JICA நிறுவனத்தினால் நிர்மாண ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டு அதற்கு அடுத்த விலைக்கேள்வி சமர்ப்பித்த ஒப்பந்ததாரருக்கு ரூபா 597.2 மில்லியனுக்கு நிர்மாணப் பணிகள் கையளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒட்டுமொத்த நிர்மாண மதிப்பீட்டுக் கிரயம் (மாலபே ஹல்பராவத்தை காணியின் நிர்மாணங்களுக்காக செலவிடப்பட் ரூபா 60.1 மில்லியனும் உள்ளடங்கலாக) ரூபா 925.7 மில்லியனாக காணப்பட்டது. இதன் பிரகாரம் மாலபே ஹல்கராவத்தை தகவல் தொழில்நுட்ப பூங்காவின் ஆய்வு கூடக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டு ஒருகொடவத்த தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணியில் நிர்மாணப் பணிகள் மீள புதிதாக ஆரம்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆரம்ப மதிப்பீட்டுக் கிரயத்தினை விட ரூபா 506.7 மில்லியனால் மதிப்பிடப்பட்ட கிரயம் அதிகரிக்கப்பட்டிருந்தது.

## தீர்வை வரி சலுகையின் கீழ் வாகனமொன்றினை இறக்குமதி செய்யும் அனுமதிப்பத்திரங்களினை வெளியிடுதல்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் பதிற்கடமை தலைமை மனிதவள முகாமையாளர் 2017 பெப்ரவரி 13 ஆந் திகதி முதல் 2017 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையான 06 மாத காலமாக சுழற்சியாக சேவையில் ஈடுபட்டிருக்கவில்லை. சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகனங்களுக்காக அனுமதிப்பத்திரங்களினை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பத்தில் அது தொடர்பில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறே அவர் தொடர்பில் 1999, 2003 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்டிருந்த ஒழுக்காற்றுநடவடிக்கை தொடர்பில் தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் 12 வருடங்கள் தொடர்ச்சியான சேவைக் காலத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் 2017 நவம்பர் 30 ஆந் திகதி தீர்வை வரி சலுகையின் அடிப்படையில் வாகனமொன்றினை இறக்குமதி செய்வதற்கான

அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனத்திற்காக 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி இலங்கை சுங்கத்தினால் ரூபா 4,868,500 ஆன வரிச் சலுகையொன்று வழங்கப்பட்டிருந்தது.

### சட்டவிரோதமான முறையில் மதுபானம் உற்பத்தி செய்யும் வடிசாலைகளுக்கு நலனேற்படும் வகையில் மதுவரியினை கணிப்பீடு செய்தல்

மதுபான உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனமொன்றினால் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின்போது சட்டவிரோதமான முறையில் எதனோல் மதுசாரம் (NES) 518,600 லீற்றர்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத்தினால் இனங்காணப்பட்டிருந்தது. அந்த எதனோல் மதுசாரத்தின் அளவில் உற்பத்தி செய்யக்கூடிய மதுபானத்தின் அளவு 313,880 லீற்றர்களாக மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட குழுவினால் கணிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டளைகள் மற்றும் மதுவரிக் கையேட்டில் குறிப்பிட்டுள்ள அளவீடுகளைக் கருத்தில் கொள்ளாது விசாரணைக் குழுவினால் சட்டவிரோதமான முறையில் மதுபானம் உற்பத்தி செய்த வடிசாலைகளுக்கு நலனேற்படும் வகையில் அடிப்படையொன்றினை பயன்படுத்தி எதனோல் மதுசாரத்தின் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய மதுபானத்தின் அளவு கணிப்பிடப்பட்டு அறவிடப்பட வேண்டிய மதுவரி குறைவாக கணிப்பிடப்பட்டிருந்தது. அந்த அடிப்படையின் பிரகாரம் உற்பத்தி செய்த மதுபானத்தின் அளவு சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட மதுசாரத்தின் அளவை விட குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த தவறான கணிப்பீட்டின் காரணமாக சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட மதுபான உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டுள்ள எதனோலுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,634.66 மில்லியனான மதுவரி ரூபா 588.90 மில்லியனாக கணிப்பிடப்பட்டிருந்தது. அந்த தவறான கணிப்பீட்டின் காரணமாக அறவிடப்பட வேண்டியதாக இருந்த ரூபா 1,045.76 மில்லியன் மதுவரி குறைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### காத்திருப்போர் பட்டியலின் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளித்த செலவினங்கள் விளைவற்றதாகியமை

சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையினால் தேயிலை பரிசோதகர் / செயல்திட்ட உத்தியோகத்தர் பதவிகளுக்காக 2018 மே 09 ஆந் திகதி பத்திரிகை அறிவித்தல் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்காக 2019 மார்ச் 18 மற்றும் 19 ஆகிய இரு தினங்களில் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்தன. இலக்கம் 559 கொண்ட பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 08 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதற்காக உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கும், 13 பேரை காத்திருப்பு பதிவேட்டில் நிறுத்தி வைப்பதற்கும் அந்த அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் உள்ளகப் பயிற்சி செயற்திட்டங்களுக்காக பங்குபற்ற வைக்க வேண்டியதாக இருந்தது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் காத்திருப்போர் பட்டியலில் விண்ணப்பதாரர்களின் பயிற்சிக்காக ரூபா 532,553 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2019 யூன் 24 ஆந் திகதி பத்திரிகை அறிவித்தல் ஊடாக மீண்டுமொரு தடவை தேயிலை பரிசோதகர் / செயற்திட்ட உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கு விண்ணப்பங்களை கோரப்பட்டமையினால் காத்திருப்போர் பதிவேட்டில் இருந்த உத்தியோகத்தர்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 532,553 விளைவற்ற செலவினமாக இருந்தது.

# தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள்

## நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் படிவம்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் அரசாங்கக் கணக்குகள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. அச்சுற்றிக்கையிலுள்ள பின்வரும் அடிப்படைகளைப் பிரயோகித்து 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று என்பன தயாரிக்கப்பட்டுள்ளன.

## அறிக்கையிடல் அடிப்படை

### அறிக்கையிடல் காலப்பகுதி

இந்த நிதிக்கூற்றுக்களிற்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2019 சனவரி 01 இல் தொடங்கி திசெம்பர் 31 இல் முடிவடையும் நிதி ஆண்டாகும்.

### தயாரிப்பிற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயங்கள் மீள மதிப்பிடப்பட்ட பெறுமதிகளிற்கு சீராக்கப்பட்டுள்ளன. வேறுவகையில் குறிப்பிடப்படாதவிடத்து கணக்குகள் மேம்படுத்திய காசு முறையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய தொகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## வருமானங்களை இனங்காணல்

கைமாறுகின்ற மற்றும் கைமாற்றமற்ற வருமாங்கள் அவை கிடைக்க வேண்டிய காலஎல்லை கருத்திலெடுக்கப்படாது, காசு கிடைக்கும் காலத்தில் வருமானமாக இனங்காணப்படுகின்றன.

## ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இனங்கண்டு அளவிடுதல்

சொத்துக்களிலிருந்து எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு கிடைப்பது உறுதியாக காணப்பட்டு, அச்சொத்துக்களை நம்பகரமாக அளவிடக் கூடியதாக இருப்பின் அவை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என இனங்காணப்படுகின்றன.

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் இனங்காணப்படுவதுடன் கிரய வடிவம் சம்பந்தப்படாதிருக்கும் சந்தர்ப்பங்களில் மீள விலைமதிக்கப்பட்ட பெறுமதிகள் பிரயோகிக்கப்படுகின்றன.

## ஆதனம், பொறி மற்றும் உபகரண ஒதுக்கம்

இந்த ஒதுக்கக் கணக்கு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒப்பீட்டுக் கணக்காகும்.

## காசும் காசுக்கு சமமானவைகளும்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டில் புழக்கத்திலுள்ள பண நோட்டுக்களும் குற்றி நாணயங்களும் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் உள்ளடங்கியுள்ளன.

## நிதி நிலைவரம் மீதான கூற்று 2018 திருத்திய

2019 யூலை 07 ஆந் திகதிய SA/MA/MA-02/Assets ஆம் இலக்க அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி 2019 ஆம் ஆண்டு வரையிலும் சொத்துக்கள் இனங்காணப்பட்டு ஆரம்ப மீதிகள் என கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். அதற்கமைய, 2018 ஆம் ஆண்டு தொடர்பில் 2019 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட சொத்துக்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் 2018 இன் ஆரம்ப மீதிகள் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

## நிதி நிலைமைக் கூற்று

| | உள்ளபடியான | |
|---|---|---|
| | **2019** | **2018 திருத்திய** |
| | ரூபா | ரூபா |
| நிதி சாராத சொத்துக்கள் | | |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** | 391,745,228 | 382,254,367 |
| நிதிச் சொத்துக்கள் | | |
| **முற்பணக் கணக்குகள்** | 226,919,272 | 219,416,775 |
| **சாசும் காசுக்கு சமமானவையும்** | 6,802,571 | - |
| மொத்தச் சொத்துக்கள் | **625,467,071** | **601,671,142** |
| தேறிய சொத்துக்கள் / உரிமைத்துவம் | | |
| **தேறிய சொத்துக்கள்** | 164,010,576 | 205,279,869 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரண ஒதுக்கம்** | 391,745,228 | 382,254,367 |
| **வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கம்** | 585,000 | 2,730,000 |
| நடைமுறைப் பொறுப்புகள் | | |
| **செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி** | - | 4,542,134 |
| **வைப்புக் கணக்குகள்** | 62,323,696 | 6,864,772 |
| **கட்டுநிதி மீதி** | 6,802,571 | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | **625,467,071** | **601,671,142** |

**இந்த நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளவாறு மிகப் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அதனுடன் தொடர்புடைய கணக்குளிற்கான குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குகளிற்கான தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளன என்றும் அவை சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.**

டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2020 பெப்ரவரி ஆந் திகதி

எஸ்.எம்.சீ. லக்ஷ்மி
பிரதான கணக்காளர்
2020 பெப்ரவரி ஆந் திகதி

## 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

| நிதிச் செயலாற்றல் கூற்று | | | |
|---|---|---|---|
| திருத்திய பாதீடு | | உள்ளபடியான | |
| 2019 | | 2019 | 2018 |
| ரூபா | | ரூபா | ரூபா |
| | **வருமானப் பெறுவனவுகள்** | | |
| **170,000,000** | வரியல்லாத மற்றும் ஏனைய வருமானம் | 276,697,315 | 165,030,063 |
| **170,000,000** | மொத்த வருமானப் பெறுவனவுகள் (அ) | 276,697,315 | 165,030,063 |
| | **வருமானமற்ற பெறுவனவுகள்** | | |
| **-** | திறைசேரிக் கட்டுநிதி | 1,527,971,140 | 1,603,800,000 |
| | வைப்புக்கள் | 125,055,685 | 20,365,300 |
| **52,000,000** | முற்பணக் கணக்குகள் | 72,466,341 | 77,867,428 |
| **-** | ஏனைய பெறுவனவுகள் | 74,656,439 | 62,339,998 |
| **-** | பெறுமதி சேர் வரிப் பெறுவனவுகள் | 50,146,355 | 26,380,610 |
| **52,000,000** | மொத்த வருமானமற்ற பெறுவனவுகள் (ஆ) | 1,850,295,960 | 1,790,753,336 |
| 222,000,000 | **மொத்த வருமான மற்றும் வருமானமற்ற பெறுவனவுகள்**<br>**(இ) = (அ)+(ஆ)** | **2,126,993,275** | **1,955,783,399** |
| | கழிக்க: செலவினம் | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | |
| **1,454,127,540** | சம்பளம், கூலி மற்றும் ஏனைய ஊழியர் நலன்கள் | 1,453,700,074 | 1,464,526,249 |
| **330,942,460** | ஏனைய பொருட்களும் சேவைகளும் | 327,927,115 | 253,286,132 |



வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

| | | | |
|---|---|---|---|
| **13,900,000** | மானியங்கள் மற்றும் மாற்றல்கள் | 13,622,630 | 13,771,671 |
| **128,000** | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 127,327 | - |
| 1,799,098,000 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | **1,795,377,146** | **1,731,584,052** |
| | **மூலதனச் செலவினம்** | | |
| **28,500,000** | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்படுத்தலும் | 26,759,417 | 12,212,631 |
| **201,400,000** | மூலதனச் சொத்துக்களை கைக்கொள்ளல் | 23,192,765 | 14,834,169 |
| **66,500,000** | இயலுமை அபிவிருத்தி | 61,959,414 | 76,136,978 |
| 296,400,000 | **மொத்த மூலதனச் செலவினம் (உ)** | **111,911,596** | **103,183,778** |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம்** | | |
| - | செலுத்திய வைப்புக்கள் | 69,596,760 | 24,858,261 |
| - | செலுத்திய முற்பணங்கள் | 82,113,840 | 73,254,303 |
| - | செலுத்திய பெறுமதி சேர் வரி | 54,688,488 | 20,714,261 |
| - | **மொத்த பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | **206,399,088** | **118,826,825** |
| 2,095,498,000 | மொத்தச் செலவினம் (எ) = (ஈ)+(உ)+(ஊ) | 2,113,687,830 | 1,953,594,655 |
| - | **2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதி (ஏ) = (இ)-(எ)** | **13,305,445** | **2,188,744** |

| 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கட்டுநிதி சீராக்கல் கணக்கு | | |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிச் செயலாற்றல் கூற்றின் படி கட்டுநிதி மீதி** | | 13,305,445 |
| **(+) கூட்டுக:** | | |
| **முற்பணக் கணக்குகளின் சீராக்கிய மீதி** | 4,072,606 | |
| **ஏனைய செலவின விடயங்களிலிருந்து வரவு வைத்தல்** | 2,098,115 | 6,170,721 |
| | | 19,476,166 |
| **(-) கழிக்க:** | | |
| **முற்பணப் பெறுவனவுச் சீராக்கம்** | 8,764,743 | |
| **ஏனைய செலவின விடயங்களிற்கான செலவினம்** | 3,908,852 | 12,673,595 |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதி | | **6,802,571** |

## 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

| காசுப் பாய்ச்சல் கூற்று | | |
|---|---|---|
| | | |
| | **2019** | **2018 திருத்தியது** |
| | ரூபா | ரூபா |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல் | | |
| **மொத்த வரிப் பெறுவனவுகள்** | | |
| **கட்டணம், மிகைஅறவீடு, தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரங்கள்** | 276,697,315 | 165,030,063 |
| **வருமானமற்ற பெறுவனவுகள்** | 74,656,439 | 62,249,458 |
| **கட்டுநிதிப் பெறுவனவுகள்** | 1,588,600,000 | 1,603,800,000 |
| **பெறுமதி சேர் வரிப் பெறுவனவுகள்** | 50,146,355 | 26,380,610 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசு (அ) | **1,990,100,109** | **1,857,460,131** |
| கழிக் க: காசுச் செலவினம் | | |

| | | |
|---|---|---|
| **ஆளுக் குரிய வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினம்** | 1,881,997,862 | 1,817,529,287 |
| **மானியங்கள் மற்றும் மாற்றல்கள்** | | |
| **ஏனைய செலவின விடயங்களிற்கான செலவினம்** | 3,908,852 | 3,335,436 |
| **ஏனைய செலவின விடயங்களிற்காக செலுத்திய கட்டுநிதி** | 6,802,571 | - |
| **திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி** | 60,628,860 | - |
| **பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு** | 54,688,488 | 20,714,261 |
| செயற்பாட்டுச் செலவினத்திற்கான காசுப் பாய்ச்சல் (ஆ) | **2,008,026,633** | **1,841,578,984** |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் **(இ) = (அ) – (ஆ)** | (17,926,524) | 15,881,147 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல் | | |
| **உரிமைத்துவ நீக்கல் ஏற்பாடு மற்றும் பௌதீகச் சொத்து விற்பனை** | - | 90,540 |
| **முற்பணங்களின் அறவீடு** | 67,699,469 | 75,405,249 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசு (ஈ) | **67,699,469** | **75,495,789** |
| **கழிக்க: காசுச் செலவினம்** | | |
| **பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீட்டுக் கைக்கொள்ளல்** | 23,192,765 | 14,834,169 |
| **முற்பணக் கொடுப்பனவு** | 82,039,105 | 72,049,806 |
| முதலீட்டு நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ) | **105,231,870** | **86,883,975** |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் **(ஊ) = (ஈ) – (உ)** | (37,532,401) | (11,388,186) |
| செயற்பாட்டு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் **(எ) = (இ) +(ஊ)** | (55,458,925) | 4,492,961 |
| நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல் | | |
| **வைப்புக்கள் பெறுவனவு** | 125,055,685 | 20,365,300 |
| நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல் (ஏ) | 125,055,685 | 20,365,300 |

| | | |
|---|---|---|
| கழிக்க: காசுச் செலவினம் | | |
| **வைப்புக்கள் கொடுப்பனவு** | 69,596,760 | 24,858,261 |
| நிதியீட்டல் நடவடிக்கைகளிற்கான மொத்தக் காசு செலவினம் (ஐ) | **69,596,760** | **24,858,261** |
| நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ) = (ஏ) – (ஐ) | 55,458,925 | (4,492,961) |
| **காசிலேற்பட்ட தேறிய மாற்றம் (ஓ) = (எ)+(ஒ)** | - | - |
| **சனவரி 01 உள்ளவாறு ஆரம்பக் காசு மீதி** | - | - |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதிக் காசு மீதி** | - | - |

# 2019 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள்

இலங்கையின் சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசிலமைப்பின் 154(1) உறுப்பஜுர மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் 22 விசேட கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டன. தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் கணக்காய்வு செய்யப்படும் இமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய நிறவனங்களுக்குரியதாக இந்த அறிக்கைகள் வழங்கப்பட்டன. அக் கணக்காய்வு அறிக்கைகளை வெளியிடும் போது பொது முயற்சிகள் தொடர்பான குழு, பொதுக் கணக்குள் குழு மற்றும் கணக்காய்வு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்கள், தேசிய மற்றும் காலரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த தொடர்பாக கவனம் செலுத்த வேணடிய ஊடக ˙வெளிப்படுத்தல்கள் அல்லது பொது மக்கள் பிரதிநிதிகள் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கவனத்தை செலுத்தி எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பேரில் விசேட கணக்காய்வு அறிக்கைகளுக்கான விடயங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

கீழே விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட சகல கணக்காய்வ அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கைகள் தொடர்பாக அக்கரை செலுத்தும் தரப்பினரின் பயன்பாட்டிற்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் இணையத்தளத்தில் மும்மொழிகளிலும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2019** ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட விசேட கணக்காய்வு தொடர்பான தகவல்கள் அட்டவணை 03 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

| தொடர் இல. | அறிக்கையின் பெயர் | அறிக்கை திகதி | அறிக்கை வழங்குவதற்கு பின்னணியாக இருந்த விடயங்கள் |
|---|---|---|---|
| 01 | அபிவிருத்தி லொத்தர் சபையின் கட்டமைப்புச் செயற்பாடுகள் மற்றும் வாடிக்கையாளருக்கு கிடைக்கும் நலன்கள்" தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை | 2019.01.09 | பணப் பரிசில்கள் பகிர்ந்தளிக்கப்படுவது தொடர்பில் அபிவிருத்தி லொத்தர் சபையின் காகாணப்படுகின்ற கட்டமைப்புச் செயல்முறை அமைக்கப்பட்டுள்ள முறைமை மற்றும் அதன் வினைத்திறனான தன்மை தொடர்பில் பரீட்சித்து அறிக்கையிடுதல் இவ் அறிக்கையின் நோக்கமாகும். |
| 02 | மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முதலீட்டு முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை | 2019.01.25 | நம்பிக்கையாளர் சபையால் நிதியத்தின் நிதி முறையான முகாமைத்துவ இன்றி முதலீடு செய்தமையும் நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட மாலபே மஹாபொல கெம்பஸ் நிறுவனத்தின் உரிமை நிதியத்திலிருந்து விலகிச் செல்வதற்கு வழிவகுத்தமையும் ஆகிய காரணங்களால் மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியம் தொடர்பாக விமர்சித்து கலந்துரையாடுவதற்கு உட்பட்ட காரணத்தினால் அது தொடர்பாக பரீட்சிப்பதற்காக |

| | | | |
|---|---|---|---|
| 03 | 2018 பொதுநலவாய விளையாட்டு விழாவின் அனுசரணையை இலங்கைக்கு பெற்றுக் கொள்வது தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை | 2019.03.28 | 2018 பொதுநலவாய விளையாட்டு விழாவின் அனுசரணையை இலங்கைக்கு பெற்றுக்கொள்ளும் குறிக்கோளில் சீடபிள்யூஜி 2018 (தனியார்) கம்பனி எனும் பெயரில் ஒரு அரசாங்க கம்பனி தோற்றுவிக்கப்பட்டு அதன் செயற்பாடுகளுக்காக ரூபா 689.9 மில்லியன் பணம் சேகரிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த அனுசரணையை இலங்கைக்கு பெற்றுக் கொள்ள முடியாமையின் அடிப்படையில் கம்பனியைத் தோற்றுவிக்கும் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| 04 | அநுராதபுரம் மாநகர எல்லைக்குள் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல் நிருமாணிப்புக்கள் காரணமாக ஏற்பட்டுள்ள தாக்கங்களை பரிசோதனை செய்வதற்கான விசேட கணக்காய்வு அறிக்கை | 2019.03.28 | நகர திட்டமிடல் முறையாக மேற்கொள்ளாமை காரணமாக அத்துமீறிய நிர்மாணிப்புக்கள் துரித கதியில் வளர்ச்சியடைதல் காரணமாகவும் அநுராதபுரம் நகரத்தில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார, சுற்றாடல் மற்றும் கலாச்சார தாக்கங்கள் தொடர்பாக விடயங்களை கண்டறிவதற்காக இவ்வறிக்கை வெளியிடப்பட்டது. |
| 05 | லக்விஜய அனல் மின்சார நிலையத்தின் முக்கியத்துவமும் அதன் சுற்றாடல் தாக்கம் | 2019.03.29 | லக்விஜய அனல் மின்சார நிலையத்தின் செயற்பாட்டின் போது ஏற்படும் சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் அவற்றை தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக சுற்றாடல் கணக்காய்வு அறிக்கையொன்றை தயாரித்தலின் தேவைப்பாட்டின் பேரில் |
| 06 | கொழும்பு - தாமரைக் கோபுர நிர்மாணம் தொடர்பான விசேட அறிக்கை | 2019.04.01 | செயற்திட்டம் தொடர்ச்சியாக தாமதமடைந்தமை, செயற்திட்டத்தின் கிரயம் உயர்வடைந்து செல்லல் என்பவற்றால் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் வணிக செயற்பாடுகளை ஆரம்பித்தல் மற்றும் வருமானங்களை உழைத்தல் தாமதமானதற்கும் காரணமாக இருந்தது. மேற்கூறப்பட்ட பின்புலத்தின் அடிப்படையில் தாமரைக் கோபுர நிர்மாண செயற்திட்டத்தில் இதுவரையான செயற்பாடுகள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்களை அறிக்கையிடுவதற்காக |
| 07 | சட்ட வரைவுத் திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விஷேட கணக்காய்வு மீதான அறிக்கை. | 2019.04.10 | சட்ட வரைவு தயாரிப்பதில் தாமதம், வரைவுகளை அடிக்கடி திருத்தங்களுக்கு உட்படுத்தல், காணப்படும் சட்டங்கள் காலரீதியில் நாளதுவரையாகாமை போன்ற விடயங்கள் காரணமாக திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொள்ளும் தேவைப்பாட்டின் அடிப்படையில் |
| 08 | இலங்கையில் மிளகு உற்பத்தி மற்றும் அதன் சந்தை நிலைமையை மதிப்பிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட விஷேட | 2019.04.22 | அண்மைய காலத்தின் போது, இலங்கைக்கு மிளகு இறக்குமதி படிப்படியாக அதிகரிப்பதும் உள்நாட்டு சந்தைகளில் மிளகுக்கு வழங்கிய விலை குறைவடைந்தமை காரணமாக அதிக அளவிலான சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகள் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வு மீதான அறிக்கை. | | தோன்றியதன் காரணமாக உண்மை நிலைமை அறிவதற்கும் அதற்குத் தேவையான தீர்வுகளை இனங் காண்பதற்குமாக |
| 09 | சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் வாகன முகாமைத்துவம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை | 2019.04.22 | அமைச்சிற்குரிய 1,794 வாகனங்களின் பௌதீக இருப்பினை உறுதி செய்வதற்கும் அமைச்சினால் முடியாது போயிருந்தது. இந்த நிலைமையின் அடிப்படையில் அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களின் உரித்து, இருப்பு, பதிவேட்டிற்குட்படுத்தல், பயன்பாடு மற்றும் பராமரிப்பு நிர்வாக நடைமுறை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு உள்ளடங்கலான வாகன முகாமைத்துவ நடைமுறை தொடர்பில் தேடிப் பார்ப்பதற்காக |
| 10 | பொருட்கள் போக்குவரத்திற்காக புகையிரத சேவையை மதிப்பீடு செய்வதற்கான விசேட கணக்காய்வு அறிக்கை | 2019.04.22 | 1968 ஆம் ஆண்டளவில் பொருள் போக்குவரத்து சந்தைப் பங்கில் 38 சதவீதம் புகையிரதத் திணைக்களத்திற்குரியதாகக் காணப்பட்ட போதிலும் நிகழ்காலத்தில் அது 0.3 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. |
| 11 | சப்ரகமுவ மாகாண வீதிகள் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் எம்பிலிபிடிய பிரதேச சபையின் மேற்பார்வையில் அபிவிருத்தி செய்யப்பட்ட வேலைகள் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை. | 2019.04.22 | இது தொடர்பாக பொது மக்களும் ஊடகங்களும் விடயங்களை வெளிப்படுத்தியிருந்த போதும் கணக்காய்வினால் இனங்காணப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு மேற்கூறிய செயற்பாட்டின் போது அரசாங்கத்தின் நிதி துஸ்பிரயோகம் செய்யப்பட்டதா என்பதனையும் அப்பணத்தை ஈடுபடுத்துதல் விளைவற்றதா என்பதனையும் பரீட்சிப்பதற்காக |
| 12 | இலங்கையின் அரசின் கடன் முகாமைத்துவம் | 2019.04.22 | ஸ்ரீஇலங்கை அரசின் கடன் முகாமைத்துவம் தொடர்பான பகுப்பாய்வு ரீதியான அறிக்கையொன்று பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் |
| 13 | வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறையில் தற்போதய நிலைமையை ஆய்வுசெய்வதற்காக விசேட கணக்காய்வ அறிக்கை | 2019.07.23 | வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறையின் தற்போதய நிலைமையை ஆய்வு செய்வதற்காக |
| 14 | வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை கம்பனியால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த A 350-900 வகை 08 விமானங்களை கொள்வனவு செய்யும் உடன்படிக்கையை முடிவுறுத்துவது தொடர்பாக பாரளுமன்றத்தின் பொது | 2019.06.17 | 2017 செப்தம்பர் 20 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை கம்பனியின் செயற்பாடுகளைப் பரீட்சிப்பதற்காக பாரளுமன்றத்தின் பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போது வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவை கம்பனிக்கு விமா ஊர்திகளை கொள்வனவு செய்யும் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய உடன்படிக்ககளை முடிவுறுத்துவது தொடர்பாக பரீட்சித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்கமாறு |





ய்வு அறிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| | முயற்சிகள் தொடர்பான குழுவின் வேண்டுகோளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் இறுதி அறிக்கை | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் |
| 15 | ருஹுனு மகா கதிர்காமம் தேவாலயத்தில் இடம் பெற்ற முறைகேடுகள் தொடர்பாக பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கை | 2019.10.31 | 1931 இன் 19 ஆம் இலக்க பௌத்த விஹாரைகள் தேவாலய கட்டளைச் சட்டத்தின் 38(1) ஆம் பிரிவின் பிரகாரம் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தினால் எனக்கு மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் |
| 16 | இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தொடர்பான விசேட கணக்காய்வ | 2019.10.23 | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தன் 13 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்குரியதாக ஐந்து வடயங்கள் தொடர்பாக வசேட கவனத்தை செலுத்துவதற்காக |
| 17 | விவசாயிகளின் நிதிய தேவைப்பாட்டிற்காக இரத்தினபுரி மாவட்ட கமநல வங்கி தொகுதியின் செயற்பாடுகள் மற்றும் பங்களிப்பு தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை | 201912.05. | பொதுமக்கள் பணமாக அதன் சொத்துக்கள் மற்றும் அதன் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய சட்ட காலச்சட்டகம் ஒன்ற இல்லாமையும் இது வரை சுயசக்தியுடனான அபிமானத்துடன் கூடிய விவசாய சமூகமொன்றை உருவாக்கும் தேவைப்பாட்டின் பால் நிதி பலத்தை இரத்தினபுரி மாவட்டத்தினுள் உருவாக்குவதற்காக விவசாய சமூகத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் வலுவூட்டலை வெற்றிகரமாக மேற்கொள்ள கமநல வங்கி ஆரம்பம் முதல் 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டு வரை செயற்பட இயலாதிருந்தமை அவதானிக்கப்பட்டது |
| 18 | பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிதிகளை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வது தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை | 2019.12.11 | 2015 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிலையான வைப்புக்கள் சம்பந்தமாக விரிவான கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் அது சம்பந்தமாக இனங்காணப்பட்ட அவதானிப்புக்களை உள்ளடக்கி இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது |
| 19 | அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் பணிப்பொறுப்பு மற்றும் திணைக்களத்தின் சொத்துக்களின் பயன்பாடு | 2019.12.31 | திணைக்களத்தினால் மக்களுக்கு வழங்கப்படக்கூடிய அதியுச்ச சேவை என்ன என்பதும் அதன் மூலம் மக்களுக்கு பல்வேறு விதத்தில் ஏற்படுத்தக்கூடிய பாதுகாப்புக்களை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் தொடர்பில் குறித்த அதிகாரிகளின் கவனம். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை | | செலுத்தப்படுவதனை உத்தேசத்தில் கொண்டு இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது. |
| 20 | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் சாரதி அனுமதிப்பத்திரங்களை வெளியிடும் தற்போதய செயற்பாடு தொடர்பான விசேட கணக்காய்வுப் பரிசோதனை | 2019.12.31 | சாரதி அனுமதிப்பத்திரங்களை வெளியிடும் தற்போதய செயற்பாடு தொடர்பான விசேட விரிவான பரிசோதனையொன்றை மேற்கொள்ளல் |
| 21 | இலங்கையின் குடியியல்சார் (பிறப்பு, விவாகம் மற்றும் இறப்பு பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தைப் பண்படுத்துதல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை. | 2019.12.31 | பிறப்பு, விவாக மற்றும் இறப்புகளை பதிவு செய்யும் நடைமுறையின் செயற்திறனை மதிப்பீடு செய்தல், தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்புக்களை முறையாக நிறைவேற்றி பொதுமக்கள் சேவை நிறைவேற்றப்பட்டுள்ள முறைமையை இனங்கண்டு மதிப்பீடு செய்தல் |
| 22 | மாத்தறை மாநகர சபையின் ஆதனங்களை தனியார் தரப்பினரால் பயன்படுத்துவது தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை | 2019.12.31 | மாத்தறை மாநகர சபைக் கட்டளைச் சட்டம் மற்றும் ஏனைய நிதி விதிகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவது அத்தியவசிய விடயமொன்றாக குறிப்பிபடப்ட்டிருந்த போதும் சபையினால் இக்காணி மற்றும் கட்டிடங்களை செயற்திறனாக பயன்படுத்துவதில் காணப்படும் ஆபத்து காணப்படுவதாக அவ்வப்பொது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. |

அட்டவணை 03 – 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள்

2019 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட அறிக்கைகள் பொழிப்பாக்கப்பட்டு இந்த அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளன.

### "அபிவிருத்தி லொத்தர் சபையின் கட்டமைப்புச் செயற்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கப் பெறும் நலன்கள்" தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை

1997 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, ஜனாதிபதி நிதியத்துக்கு நிதியளிக்கும் செயற்பாட்டின் பொருட்டு லொத்தர் சீட்டிழுப்பு செயற்பாடானது, அபிவிருத்தி லொத்தர் சபையின் பிரதான செயற்பாடாக இருந்தது. அவ்வாறு உருவாக்கப்படுகின்ற நிதியானது ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக மஹபொல உயர் கல்வி நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

அபிவிருத்தி லொத்தர் சபை அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் போது நடாத்தப்படுகின்ற அனைத்து லொத்தர் சீட்டிழுப்புக்களின் போதும் வழங்கப்படுகின்ற பரிசில்களின் எண்ணிக்கை மற்றும் அவ் ஒவ்வொரு பரிசிலினதும் வகை மற்றும் பெறுமதி நியதிகளுக்கு இணங்க செய்யப்பட்டு இருத்தல் வேண்டும். அதன் படி அத்தகைய பரிசில்கள் வீடு, மோட்டார் வாகனம், ஏதேனும் பொருள் அல்லது பணத் தொகையொன்று போன்றவற்றை உள்ளடக்கி இருக்க முடியும். அபிவிருத்தி லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக பொது மக்கள் ஆர்வம் காட்டுவது தொடர்பில் பரிசில்களின் பெறுமதி மற்றும் அளவுகள் பிரதான காரணங்களாக இருந்தன.

எவ்வாறாயினும், கடந்த காலப்பகுதியினுள் லொத்தர் விற்பனை நிறுவனங்கள் மற்றும் அவற்றின் லொத்தர் தொடர்பில் வாடிக்கையாளர்கள் மத்தியில் நம்பிக்கை காணப்பட்டதுடன், அதற்கு காரணம்

முன்னைய வருடங்களில் லொத்தர் விற்பனையின் பெறுமதி மற்றும் அளவுக்கு சரிசமமாக அதிகளவிலான பரிசுகளும் வழங்கப்பட்டமையும், அது போன்று சுப்பர் பரிசுப் பொதி இலட்சாதிபதிகள் மற்றும் கோடிஸ்வரர்களை அதிகளவில் உருவாக்கியிருப்பதாக லொத்தர் சந்தையின் வாடிக்கையாளர்கள் மத்தியில் கருத்து நிலவுகின்றது.

கடந்த காலப் பகுதியினுள் அபிவிருத்தி லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு போதுமான அளவு பரிசில்கள் கிடைக்காமையும் சுப்பர் வெற்றிப் பொதிகள் வழங்கப்படாமல் தொடந்தேச்சையாக அதிக வெற்றி வாரங்களை கடந்து சென்றமையால் தற்போது வாடிக்கையாளர்களுக்கு அது தொடர்பில் எதிர்பார்ப்பு குறைவடைந்த நிலைமை காணப்படுவதாக தெரிய வந்துள்ளது. இதன் காரணமாக லொத்தர் சந்தை தொடர்பான நம்பிக்கை இழக்கப்பட்டு லொத்தர் பரிசில் கட்டமைப்பு மற்றும் வெற்றி சீட்டிழுப்பு நடவடிக்கைகளில் எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்பது தொடர்பில இவ் அறிக்கை மூலம் பரிசோதிக்கப்பட்டு அறிக்கையிடுதலே நோக்கமாகும்.

ஒவ்வொரு லொத்தர் வகைக்கும் ஏற்ப நடாத்தப்படுகின்ற வெற்றி சீட்டிழுப்பு எண்ணிக்கைகள், பரிசில் கட்டமைப்பு மற்றும் பரிசில் வீதம், வெற்றி சீட்டிழுப்பு இயந்திரத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய பந்துகளின் எண்ணிக்கை போன்ற லொத்தர் நடாத்துதல் தொடர்பில் குறிப்பிட்ட தேர்வளவுகள் இன்மையானது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே சீட்டிழுப்பு இயந்திரத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய பந்துகளின் எண்ணிக்கை மற்றும் நியமம் தொடர்பிலும், வெற்றி சீட்டிழுப்புக்களையும் நடாத்துவதற்கு முன்பு பரிசோதனை எதுவும் நடைபெறுவது தொடர்பில் முறையான சான்றுப்படுத்தல் எதுவும் இடம் பெறுவதில்லை என்பது தெளிவாகின்றது.

அரச அனுசரனையின் கீழ் தொழிற்படுகின்ற சூதாட்ட முறைமையொன்றாக லொத்தரினை நடாத்துவதற்கே அபிவிருத்தி லொத்தர் சபை தாபிக்கப்பட்ட போதிலும், அரசாங்க நிறுவனம் என்ற ரீதியில் அதன் கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும். அதன்படி, லொத்தர் வாங்குவதற்கு தயாராகவுள்ள வறிய மற்றும் கீழ் நடுத்தர மட்டத்தை சேர்ந்த மக்களின் நலன் கருதி பரிசில் கட்டமைப்பினை தயார்படுத்துதல் முக்கியமானதாக காணப்படுகிறது. சபையினால் நிதிய உருவாக்கம் மற்றும் அதை மேம்படுத்தும் நோக்கினை மட்டும் இலக்காகக் கொண்டு தமது செயற்பாடுகளை செயற்படுத்தி வந்தது.

### மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முதலீட்டு முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை

இளைஞர்களுக்கு உயர்கல்வி வசதிகளை வழங்குவதனை உள்ளடக்கிய ஐந்து குறிக்கோள்களையையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்காக 1981 இன் 66 ஆம் இலக்க மஹாபொல உயர்கல்வி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் கீழ் மஹாபொல உயர்கல்வி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அதிகாரச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியம் தொடர்பான நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு நம்பிக்கையாளர் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. நம்பிக்கையாளர் சபையானது தொடக்குனர், பிரதம நீதியரசர், உயர்கல்வி அமைச்சு செயலாளர், கல்விக்குப் பொறுப்பான அமைச்சு செயலாளர், வர்த்தக அமைச்சு செயலாளர், தொடங்குனரால் ஐந்து ஆண்டுகள் காலத்திற்கு நியமிக்கப்படுகின்ற இரண்டு நபர்கள் ஆகியோரை உள்ளடக்கியுள்ளது. அதிகாரச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் குறிக்கோள்களை முன்னுரிமைப்படுத்துவதற்குத் தேவையான நலன் தருகின்ற அல்லது உதவியளிக்கும் அனைத்து விடயங்களையும் மேற்கொள்வதற்கான அதிகாரம் நம்பிக்கையாளர் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், அதிக நலன்தரும் வகையில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை உருவாக்குதலும் முகாமைத்துவம் செய்தலும் நம்பிக்கையாளர்களால் செய்ய வேண்டியவையாகும்.

எவ்வாறாயினும், கடந்த காலப்பகுதியின் போது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் எடுக்கப்பட்ட தீர்மானம் மஹாபொல நிதியத்திற்கு சாதகமற்ற மற்றும் நலன் தராத வகையில் எடுக்கப்பட்டிருந்தது. இந் நிலைமையைப் பரீட்சிப்பதற்காக சட்டங்கள், உடன்படிக்கைகள், அமைச்சரவைத் தீர்மானங்கள், பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள் என்பவற்றைப் போல பெறுகை ஆவணங்களும் பரீட்சிக்கப்பட்டன. அப்பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற முடியாத

மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர் கல்விக்கு வாய்ப்புக்கள் வழங்கும் குறிக்கோளுடன் மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் சொந்தமான மாலபேயில் அமைந்துள்ள 25 ஏக்கர் காணியில் மஹாபொல நிதியத்தால் தோற்றுவிக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப (உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட) கம்பனி (SLIIT) உடன் 2003 மார்ச் 19 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் மூலம் மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு காணப்பட்ட சாதகமான நிபந்தனையானது 2005 நவம்பர் 14 மற்றும் 2015 மே 12 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் மூலம் நீக்கப்பட்டு மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு SLIIT நிறுவனம் சம்பந்தமாக இருந்த உரிமை இழக்கப்பட்டு ஒரு குத்தகை உடன்படிக்கை நிலைமைக்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும் இதுவரை கிடைக்க வேண்டியிருந்த வருமானமும் மஹாபொல நிதியத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. சனாதிபதி நிதியத்தினதும் மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினதும் சமனான மூலதனப் பங்களிப்பில் தோற்றுவிக்கப்பட்ட அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபத்தில் 50 சதவீத உரிமை மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு இருந்தும் 2012 ஆம் ஆண்டிலிருந்து அதற்கு குறைந்த இலாபப் பங்கு சனாதிபதி நிதியத்திலிருந்து நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு கிடைத்திருந்தது. நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து தோற்றுவிக்கப்பட்ட நெஷனல் வெல்த் போப்பேரசன் கம்பனியால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற இலங்கை வங்கியில் பேணப்பட்டு வந்த மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முதலீட்டுப் பிரிவு முகாமைத்துவம் முறைப்படி மேற்பார்வை செய்யப்படாததனாலும் அக் கம்பனியின் துணைக் கம்பனியான நெட்வெல்த் சிகியூரிடீஷ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அரசாங்கத்தின் பிணையங்கள் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாகவும் முறையான மேற்பார்வை செய்யப்படாததன் காரணமாக அக் கம்பனி கடந்த காலத்தின் போது நட்டமடைந்து அல்லது போதியளவில் இலாபத்தைப் பெற்றுக்கொள்ளாதிருந்தது. மேலும் நிதியத்தை சேகரிப்பதற்காக பெறுகை நடைமுறைகளுக்குப் புறம்பாக சீட்டிழுப்பாளர் தெரிவு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட மங்கத லொத்தரின் மூலம் உழைக்கப்பட்ட இலாபம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை. இவ்விடயத்தை வெளிப்படுத்துவதன் மூலம் மஹாபொல நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள பாதகமான நிலைமைக்காக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் யார் என்பதனை வெளிப்படுத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவித்ததன் எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக அதிக நன்மை பயக்கும் சரியான முதலீட்டைத் தீர்மானிப்பதற்கு பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்களை அதற்கு தொடர்புபடுத்துவதே இந்த அறிக்கையை வழங்குவதன் குறிக்கோளாகும்.

அதற்கிணங்க இச்சிக்கலைக் குறைத்துக் கொள்வதற்காக மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தில் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளை பொருத்தமான முறையில் ஆய்வு செய்து நிதியத்தின் நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாகச் செயற்படுத்துவதற்குத் தேவையான சரியான தீர்மானம் எடுப்பது நம்பிக்கையாளர் சபை கூட்டங்களின் போது பெரும்பாலானோரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுவும் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தில் திருத்தங்களை உரிய காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுவும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதுவும் தொடக்கத்தில் இனங்காணப்பட்டிருந்தன.

மஹாபொல நம்பிக்கைப் பொறுப்ப நிதிய அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியம் தொடர்பான நிர்வாகம் முகாமைத்துவம், கட்டுப்பாடு என்பன நம்பிக்கையாளர் ஒப்படைக்கப்பட்டிருந்தும் நம்பிக்கையாளர் சபை 2003 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தில் நிதியத்திற்கு நன்மை பயக்குமாறும் வினைதிறனாகவும் தீர்மானம் எடுக்காமையும் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தை மீறி நடவடிக்கை எடுத்துள்ளமையும் காரணமாக நிதியத்திற்கு நிதி மற்றும் நிதிசாராத பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது என இறுதியாக தீர்மானிக்கிறேன்.

### 2018 பொதுநலவாய விளையாட்டு விழாவின் அனுசரணையை இலங்கைக்கு பெற்றுக்கொள்வது தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

2018 பொதுநலவாய விளையாட்டு விழாவின் அனுசரணையை இலங்கைக்கு

பெற்றுக்கொள்வதற்காக 2010 ஆம் ஆண்டின் போது விளையாட்டுத்துறை அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்குத் தேவையான நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல், அமுல்படுத்துதல் மற்றும் பெறுகை நடவடிக்கைகளின் கேள்வி மனுக்களைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளுக்காக சீ.டபிள்யூ.ஜீ 2018 (தனியார்) எனும் பெயரில் ஒரு அரசாங்க கம்பனி தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அக்கம்பனியின் பங்கு மூலதனத்தில் 51 சதவீதம் அரசாங்கமும் 49 சதவீதம் அரசாங்க நிறுவனங்களும் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க தொடக்க மூலதனத்தில் ரூபா 110 மில்லியன் பணம் விளையாட்டுத்துறை அமைச்சினாலும் பொதுத்திறைசேரியினாலும் ரூபா 18 மில்லியன் இலங்கை டெலிகொம் கம்பனியினாலும் வழங்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களிடமிருந்து பணத்தை நன்கொடையாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு ரூபா 689.9 மில்லியன் நிதி சேர்க்கப்பட்டு கம்பனி தோற்றுவிக்கப்பட்டிருந்தது. விளையாட்டு விழாவின் அனுசரணையை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. மேலும் அவ்வாறு பெற்றுக்கொண்ட பணம் முறையான நிதிக்கட்டுப்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மையின்றி செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் கம்பனியின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க இடம்பெற்றிருக்கவில்லை எனவும் ஏடுகள், அறிக்கைகள், சட்டங்கள், பல்வேறு கோவைகள், பதிவேடுகள் என்பவற்றைப் பரீட்சித்த போது இனங்காணக்கூடியதாக இருந்தது. அதற்கிணங்க 2010 ஆம் ஆண்டில் கம்பனியைத் தோற்றுவிப்பதற்குரிய சட்டரீதியான ஏற்பாட்டைப் பரீட்சித்தலும், 2013 மே 31 ஆந் திகதி வரை கம்பனிக்கு கிடைத்த நன்கொடைகளும் இடம்பெற்ற செலவுகளும் கம்பனியின் கணக்குகளைச் சமர்ப்பித்தலைப் போல கலைப்பதற்குரிய தகவல்களும் பரீட்சிக்கப்பட்டன. அதற்கிணங்க கம்பனியைத் தோற்றுவிக்கும் நடவடிக்கை அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக இடம்பெற்றிருத்தலும் அரசாங்கத் துறையின் பங்கு மூலதனத்திற்காக சட்டரீதியான பங்குச் சான்றிதழ் வழங்கப்படாமையும் கேள்விகளைத் தயாரிப்பதற்காக ஆலோசனைக் கம்பனியைத் தெரிவு செய்தல், உடன்படிக்கை செய்து கொள்ளல், ஆலோசகர்களைத் தெரிவு செய்தல் என்பன மேற்கொள்ளப்படும் போது பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு முரணாக இடம்பெற்றிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதன் குறிக்கோள்களுக்கு புறம்பாக இக்கம்பனியில் பணத்தை முதலீடு செய்திருந்தமையும், கம்பனி முறைப்படியாக ஏடுகள், அறிக்கைகள் என்பவற்றை பேணியிருக்காமையும், உரிய அனுசரணையைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையின் பின்னரும் கம்பனி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் இக்கம்பனியை கலைத்தல் நடவடிக்கை இடம்பெற்றிருக்காமையும், உரிய நிதிக்கட்டுப்பாட்டாளர்கள் இன்றி தனிப்பட்ட தரப்பினர்களிடமிருந்து நிதிகள் சேகரித்தல் இடம்பெற்றிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான அரசாங்க கம்பனி உரிய அமைச்சின் மற்றும் திறைசேரியின் முறையான மேற்பார்வையின் கீழ் காணப்படுதல் வேண்டும் எனவும் அமைச்சரவைக்கு சரியான தீர்மானம் எடுப்பதற்காக தேவையான சரியான தகவல்களை உரிய காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தலும் அரசாங்க கம்பனிகளின் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது பணத்திற்கான பெறுமதிக் கருதுகோளைப் பாதுகாக்கும் வகையில் நிதி நடவடிக்கைகளை செயற்படுத்துவதும் உரிய சட்ட விதிகள், சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் அவசியமானவை என இனங்காணப்பட்டிருந்தது.

அதற்கிணங்க, 2018 பொதுநலவாய விளையாட்டு விழாவின் அனுசரணையை இலங்கைக்குப் பெற்றுக்கொள்வதற்காகச் சேகரிக்கப்பட்ட பணத்தை ஆக்கபூர்வமாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தாமையின் காரணமாக நிதி ரீதியாக ரூபா 689.9 மில்லியன் நிதி நட்டம் ஏற்பட்டுள்ளதாக தீர்மானிக்கின்றேன்.

### அநுராதபுரம் மா நகரவெல்லைக்குள் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல் நிருமாணிப்புக்கள் காரணமாக ஏற்பட்டுள்ள தாக்கங்களை பரிசோதனை செய்வதற்கான விசேட கணக்காய்வு அறிக்கை

பிரதான விவசாய சந்தைப்படுத்தல் மற்றும் சேவை நிலையமாகவும் வரலாற்று பெறுமதியுடைய உலக மரபுரிமை நகரமான தற்கால அநுராதபுர நகரம் 42.19 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பினைக் கொண்டுள்ளதுடன், நகர மத்தியில் ஓடுகின்ற மல்வத்து ஓயாவின்

மேற்கு பகுதி புனித நகரமெனவும், கிழக்குப் பகுதி புதிய நகரமெனவும் அழைக்கப்படுகின்றது. 22 பிரதேச செயலகங்களை கொண்டுள்ள புதிய நகரம் மற்றும் இரண்டும் அநுராதபுரம் மா நகரசபை அதிகாரப் பிரசேத எல்லைக்கு உரியதாகும்.

புனித நகரத்தை பாதுகாப்பதற்கும், புனித நகரத்தின் மக்களை புதிய நகரத்தில் குடியமர்த்துவதற்கும் திட்டமிட்ட அநுராதபுரத்தின் முதலாவது நகர அபிவிருத்தி திட்டம் 1949 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. மீண்டும் 2007 ஆம் ஆண்டில் பல்வேறு பயன்பாடுகளின் பொருட்டு காணிகளை ஒதுக்கும் 11 வலயங்களின் கீழ் வகைப்படுத்தி "வலயமயப்படுத்தல் திட்டம்" நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்புடையதான பொது நியமங்களையும் வலயமயப்படுத்தலுக்கான ஒழுங்குவிதிகளையும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நகர அபிவிருத்தி அதிகார சபையால் "நகர அபிவிருத்தி திட்டத்தின்" பிரகாரம் பணியாற்றுதல் வேண்டும்.

மேற்படி அபிவிருத்தி திட்டங்களை தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருப்பினும், அந்த திட்டங்களுக்கு புறம்பாக குளங்களின் காப்பொதுக்கீட்டு பிரதேங்களிலும், நீர்ப்பாசன நடவடிக்கைகளின் பொருட்டு நீர் வழங்கும் நீர்ப்பாசன முறைமைகளுக்கு தடையேற்படும் வகையிலும், வீதியின் மத்தியிலிருந்து கட்டிட ரேகைக்கு இருக்க வேண்டிய ஆகக் குறைந்த தூரம் தொடர்பாக கவனத்தில் கொள்ளாமையாலும் அத்துமீறல் நிருமாணிப்புக்கள் மேற்கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. நிருமாணிப்புக்கள் திட்டம், வலயமயப்படுத்தல் ஒழுங்குவிதி திட்டங்கள், கட்டிடங்களை ஒழுங்குவிதிகளுக்கமைவாக அங்கீகரிக்கப்பட்ட பயன்படுத்தல்களை பின்பற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை மற்றும் தடை செய்யப்பட்ட பயன்பாடுகளை பயன்படுத்த மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்கள் காரணமாக நகர அபிவிருத்தி திட்டம் சிக்கலான நிலைக்கு உள்ளாகியதுடன் அதன் காரணமாக நகர வாழ் மக்களின் சுகாதார பாதுகாப்பு முறைகள், போக்குவரத்து தடைகள் மற்றும் அமைதியான வாழ்க்கை முறை என்பன பாரிய சமூக பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மேற்கொள்கின்ற நடவடிக்கைகளின் ஊடாக இந்தப் பணியை வினைத்திறனாகவும், பயனுள்ளதாகவும் மற்றும் பொருளாதார ரீதியிலான பணியாக உருவாக்குவதற்கு மேற்கொள்ள முடியுமான மாற்று நடவடிக்கைகளின் மீது துரிதமாக கவனம் செலுத்தும் தேவையை கவனத்தில் கொண்டும் இந்தக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

### லக்விஜய அனல் மின்சார நிலையத்தின் முக்கியத்துவமும் அதன் சுற்றாடல் தாக்கம்

வடமேல் மாகாணத்தின் கற்பிட்டி - நுரைச்சோலை பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள 900 மெகாவொட் இயலளவுடன் கூடிய இலங்கை மின்சார சபைக்குரிய இலங்கையின் முதலாவது மற்றும் ஒரே நிலக்கரி அனல் மின்சார நிலையம் லக்விஜய நிலக்கரி அனல் மின்சார நிலையம் ஆகும். 2006 ஆம் ஆண்டின் போது 300 மெகாவொட்டுடன் முதலாவது கட்டமும் 2010 ஆம் ஆண்டின் போது 600 மெகாவொட்டுடன் இரண்டாம் கட்டமும் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது முறையே முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களிலிருந்து 900 மெகாவொட் தேசிய மின்சார முறைமைக்கு சேர்க்கப்பட்டிருந்தது. இலங்கையின் தற்போதைய மின் உற்பத்திக்காக இலங்கை மின்சார சபையின் கீழ் 26 பிரதான மின் நிலையங்கள் (தனியார் துறை மின் நிலையங்கள் தவிர) பங்களிப்பொன்றும் 247 மொத்த உப நிலையங்களின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது உற்பத்தி செய்யப்பட்ட மொத்த உற்பத்தி 14,671.2 கெகாவொட் மணித்தியாலங்களாக இருந்ததுடன் இந்த உற்பத்திக்காக லக்விஜய நிலையத்தின் பங்களிப்பு 34.75% சதவீதமாக இருந்தது. மின்சார உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் பிரதான தோற்றுவாயான நீர், எரிபொருள் மற்றும் நிலக்கரி என்பவற்றிற்கு இடையே நிலக்கரி மூலம் உற்பத்தி இரண்டாவது குறைந்த சராசரி அலகுக் கிரயத்துடன் கூடிய தோற்றுவாயாக இருப்பது அவதானிக்கப்பட்டது.

இந் நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் அதன் சுற்றாடல் தாக்கத்தை இனங்காணும் நோக்காக கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் போது வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபையினால் லக்விஜய அனல் மின்நிலையத்திற்காக முதலாவது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஈடுபாடொன்று இடம் பெற்றிருக்கவில்லை. 2017/2018 ஆம்

ஆண்டிற்காக அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக நிலையத்தினால் 2017 யூன் 14 ஆந் திகதி மாகாண சுற்றாடல் அதிகாரசபைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மே 10 ஆந் திகதி வரையில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்காக மின் நிலையத்தின் தொழிற்பாடு செயற்பாடுகள் தொடர்பாக மாகாண சுற்றாடல் அதிகாரசபையின் கவனம் போதியளவில் செலுத்தப்படாதிருந்தமை அதற்காக பொறுப்பான ஏனைய நிறுவனங்களின் செயற்திறனின்மை காரணமாக பாதகமான சுற்றாடல் தாக்கங்கள் இடம் பெற்றுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

லக்விஜய மின் நிலையத்தின் மூலம் மின்சார உற்பத்தி செயற்பாட்டின் போது ஈடுபடுத்தப்பட்டுள்ள பிரதான மூலப் பொருளான நிலக்கரியில் காணப்பட வேண்டிய தரம் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தாதிருந்தமை ஏற்பட்டிருந்த சுற்றாடல் சிக்கல்களுக்கு பிரதான காரணமாக இருந்தது. அவ்வாறே நிலக்கரி எரியும் போது உற்பத்தியாகும் பறக்கும் சாம்பல் மற்றும் கீழ் சாம்பல்களாக உப பொருட்களை வெளியேற்றும் நடைமுறை, செயற்திட்டத்தின் திட்டமிடும் கட்டத்தின் போது இனங்காணப்பட்டிருந்த போதிலும் இச் செயற்பாடு போதியளவில் மேற்கொள்ளப்படாமையால் சுற்றாடல் சிக்கல்கள் உருவானமை அந்தப் பிரச்சினையை கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை எடுக்கும் போது மின்நிலையத்தினால் செலவிடப்பட வேண்டிய கிரய அதிகரிப்பொன்று இடம்பெறுவதாகவும் அவதானிக்கப்பட்டது. சுற்றாடல் ரீதியான பிரச்சினையொன்றான பறக்கும் சாம்பல், பிரிவில் படிவாக வைத்திருப்பதற்குப் பதிலாக துரித படிமுறையொன்றினால் பிரிவிலிருந்து அகற்றி இனங்காணப்பட்ட வேறு உற்பத்திகளுக்காக மூலப் பொருளாக பயன்படுத்தும் தேவைப்பாடு அவசியமென அவதானிக்கப்பட்டது. மாகாண சுற்றாடல் அதிகாரசபையினால் பிரசித்தப்படுத்தப்பட்ட சுற்றோட்ட வளி நிலைமை தொடர்பான நியமங்களுக்கு இணங்க மின்நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என மாகாண சுற்றாடல் சபையினால் தொடர்ந்து கண்காணிக்கப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

நிலக்கரியை எரிக்கும் போது உருவாகும் சுற்றாடல் நிலைமைக்கு பாதகமான வாயுக்கள் மற்றும் பாரஉலோகங்கள் வெளியேற்றப்படும் செயற்பாடு, மின்நிலையத்தின் செயற்பாட்டு தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் கடல் நீர் சுத்திகரிப்பின் பின்னர் மீண்டும் கடலுக்குள் வெளியேற்றும் செயற்பாடு மற்றும் நிலக்கீழ் நீர் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யும் தேவைப்பாடு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் வெளியேறும் புகை தொடர்பாக வெளியாகும் கந்தகமாக பறக்கும் சாம்பல் தொடர்பாக மின் நிலையியல் வீழ்படிவாக்கியின் செயற்திறன்தன்மையை தொடர்ந்து மேற்பார்வை செய்யப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது. மின் நிலையத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் திட்டமொன்றின் பிரகாரம் மேற்கொள்வது மற்றும் நிலக்கரி பிரிவில் உள்ள தூசு துணிக்கைகள் காற்றுடன் பரவுவதை தவிர்ப்பதற்காக நிலக்கரி பிரிவினை சுற்றி தற்போது உள்ள காற்று தடையை விரிவாக்குவதற்கும் தற்போது பிரிவில் குவித்து வைக்கப்பட்டுள்ள சாம்பல் கிராமப் புறத்திற்கு பரவுவதை தவிர்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நிலையத்தின் செயற்பாடுகள் மூலம் மீன் பிடி சமூகத்திற்கான தாக்கத்தை குறைப்பதற்கும் கடலினுள்ளே ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நிலக்கரி படிந்திருக்கும் அளவினையும் அவ்வாறு படிவதை குறைப்பதற்காக தேவையான நடவடிக்கைகளைத் திட்டமிடவும் வேண்டியுள்ளது. கடலரிப்பினை குறைப்பதற்காகவும் கடற்கரையின் பாதுகாப்பிற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது. மேலே குறிப்பிட்ட சகல நடவடிக்கைகளை எடுப்பதற்கும் சுற்றாடல் சேதத்தை குறைத்து சுற்றாடலுக்கு சாதகமான கைத்தொழிலொன்றாகவும் தேசிய பொருளாதாரத்திற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட மின் உற்பத்தி கைத்தொழிலொன்றாக பங்களிப்பினை வழங்கும் இயலுமை உள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### கொழும்பு - தாமரைக் கோபுர நிர்மாணம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கை

விநோத பூங்காவை அண்மித்ததாக 350 மீற்றர் உயரமான பல்நோக்கு தொலைக்காட்சி மற்றும் தொலைத்தொடர்பு கோபுரமொன்றை நிர்மாணித்து பூர்த்தி செய்தல் என்ற பெயரில்

2010 ஒக்தோபர் மாதம் 13 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட PS/CP/44/2010 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் பேலியகொட பிரதேசத்தில் 8.0 ஹெக்டேயர் பரப்பளவையுடைய காணியொன்று விநோத பூங்காவுடன் 350 மீற்றர் உயரமான பல்நோக்கு தொலைத்தொடர்பு கோபுரமொன்றை நிர்மாணிக்கும் வகையில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்படுகின்ற இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான சகல திட்டங்களுக்காகவும் மேற்கூறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

செயற்திட்டம் கொழும்பு நகரத்தில் சுற்றுலா கேந்திர நிலையமாகக் கொண்டுவரும் இயலுமையைக் கவனத்தில் கொண்டு செயற்திட்டத்தை தாபிப்பதற்கான காணியாக கொழும்பு 10, பேரேவெவயிற்கு முன்பக்கத்தில் அமைந்துள்ள 2.59 ஹெக்டேயர் அளவான காணி இனங்காணப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் புதிய செயற்திட்ட பூமியின் அபிவிருத்தி இயலுமையைக் கவனத்தில் கொண்டு, புதிதாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுடன் இறுதி நிர்மாணக் கிரயம் ஐக்கிய அமெரிக்க டொலர் 104,300,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் ஆரம்ப எண்ணக்கருக்கள் மாற்றமடையாது பேணும் வகையில் கொழும்பு தாமரைக் கோபுர செயற்திட்டம் (Colombo Lotus Tower Project) ஆக மீண்டும் பெயரிடப்பட்டிருந்தது.

2012 நவம்பர் 12 ஆந் திகதி நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் 912 நாட்களில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரின் கோரிக்கையின் அடிப்படையில் 2017 ஒக்தோபர் வரை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் நிர்மாணச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் காணப்பட்டது. அதன்போது செயற்திட்ட ஆரம்பத்தில் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமை, செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட காணிப் பகுதி முறையாக கையேற்கப்படாமை, மின் உயர்த்திகள் மற்றும் படிக்கட்டுக்களுக்கான உப ஒப்பந்தம் கையளிக்கும் செயற்பாடுகளை முறையாக இன்மை, நிர்மாண ஒப்பந்தம் தாமதமாகியிருந்தமை மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட கடன் பணம் வரையறுக்கப்பட்டிருந்தமை, செயற்திட்டத்தை வணிக மயப்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் நிச்சயமற்றதாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் தேசிய முக்கியத்துவம் மிக்க செயற்திட்டமொன்றாக இனங்காணப்பட்ட இந்த செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் தொடர்ந்தும் தாமதமாகியமைக்காக சகல தொடர்புடைய தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டுமென இனங்காணப்பட்டிருந்தது.

### சட்ட வரைவுத் திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விஷேட கணக்காய்வு

இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 11 ஆவது உறுப்புரையில் 75 ஆவது அத்தியாயத்தில் “கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன்கொண்ட சட்டங்களையும் அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டை நீக்கும் அல்லது திருத்தும் அல்லது அரசியலமைப்புக்கு ஏதேனும் புதிய ஏற்பாட்டைச் சேர்க்கும் சட்டங்கள் உட்பட்ட சட்டங்களை ஆக்குவதற்குப் பாராளுமன்றம் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அரசாங்கத்தின் சட்டவாக்கல் பணியினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதனை இலகுவாக்கும் வகையில் ஆரம்ப (புதிய) சட்டங்கள் வரையுள்படுத்தல் மற்றும் திருத்தம் செய்தல், துணைச் சட்டங்களை வரையுள்படுத்தல் மற்றும் மீளாய்வு செய்தல் சட்ட வரைஞர் திணைக்களத்தின் பிரதான பணியாகும். அமைச்சரவை தீர்மானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் கொள்கைகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான வகையில், அரசாங்கத்தின் சட்டவாக்கல் சபையின் நிகழ்ச்சித்திட்டங்களில் செயற்பாட்டினை இலகுவாக்குவதற்கு தேவையான உள்நாட்டு சட்ட கட்டமைப்பினை தயாரித்தல் சட்ட வரைஞர் திணைக்களத்தின் பிரதான கடமையாகும். அமைச்சரவை தீர்மானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் கொள்கைகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான வகையில், அரசாங்கத்தின் சட்டவாக்கற் சபையின் நிகழ்ச்சித்திட்டங்களில் செயற்பாட்டினை இலகுவாக்குவதற்கு தேவையான உள்நாட்டு சட்டக் கட்டமைப்பினை தயாரித்தல் சட்ட வரைஞர் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும்.

இதனடிப்படையில் ஒரு நாட்டில் சட்டங்களை வரையுள்படுத்தல் என்பன மிக விசேடமான துறையாகும். அத்தகையதொரு விசேட துறையில் பணியாற்றுவதற்காக சட்டவரைஞர் மற்றும் குறித்த பணியாற்தொகுதிக்கு ஆற்றல், அறிவு மற்றும் ஏனைய சட்டத்துறைகள் தொடர்பான அறிவும் அத்தியாவசதியமாகும். சட்டவரைஞர் ஏதேனும் சட்டம் ஒன்றை வரையுள்படுத்துகையில், தொடர்புடைய உத்தேச சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறை தொடர்பாக உள்நாட்டு மற்றம் வெளிநாட்டு சட்டத் துறையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பற்றிய அறிவையும் புரிந்து கொள்ளுதலையும் புதுப்பித்துக்கொள்ளுதல் முக்கியமாகும். அதேபோன்று சட்டம் வரையுள் படுத்துகையின் அடிப்படை சந்தர்ப்பத்திலிருந்து அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றும் வரையிலான செயற்பாட்டில் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களின் தொடர்பும் அதற்கு சமமாக முக்கியமாகும்.

சட்டம் வரையுள்படுத்தும் பணியில் அனுபவமிக்க பணியாற்றொகுதியை தற்போது வரை உருவாக்கி கொள்வதற்கு இயலாதிருத்தல், அரச கொள்கைகளை சட்டமாக வரையுள்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுக்களிடமிருந்து முன்வைக்கப்படும் வேண்டுகோள்களில், கொள்கைகளை அவ்வவ்போது மாற்றங்களை மேற்கொள்ளுதல் மற்றும் இறுதியான கொள்கை இல்லாதிருத்தல், ஆற்றல், அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றைக் கொண்டுள்ள அனுபவமிக்க சட்டத்தரணிகளின் சேவையை ஒப்பந்த அடிப்படையின் மீதேனும் பெற்றுக்கொள்வதற்குள்ள தடைகள், சமமான சேவைகளுக்கிடையில் உள்ள சம்பள முரண்பாமுகள், வசதிகளுடன்கூடிய அலுவலக கட்டிடத்தின் தேவை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு அதிகளவிலான வாய்ப்புக்களை வழங்குதல், வரையுள்படுத்திய ஆரம்ப அல்லது இறுதி வரையுளாக கையளிக்கப்பட்டு சட்டமா அதிபரினதும் ஏனைய திணைக்களங்களினதும் அவதானிப்புக்கள் மற்றும் ஆலோசனைகள் எதிர்பார்த்து வழங்கப்படும் வேண்டுகோள்களுக்கு பதிலளிப்புக்களில் ஏற்படும் தாமதங்கள் போன்ற பிரச்சினைகளுக:கு ஆக்கபூர்வமாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

சட்டமானது காலத்திற்கேற்றவாறு புதுப்பிக்கப்படுதலானது, தற்போது சமூகத்தின் பாரிய தேவையான உள்ளது. புதிய சட்டங்களை வெளியிடுதல் மற்றும் நாட்டின் பொருளாதார, சமூக அபிவிருத்தியில் தற்கால தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஏற்புடையதாக நிலையில் உள்ள அதிகளவிலான சட்டங்களை திருத்தப்படல் குறித்த சமூகத்தின் தேவையாகும். அதேபோன்று அரச கொள்கைகளை சட்டமாக மாற்றியமைத்து பிரஜைகளின் உரிமைகளை சிறப்பாக ஏற்றுக்கொள்ளுதல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பன காலத்திற்கேற்ற அவசியமாக உள்ள பின்னணியில் சட்ட வரைஞர் திணைக்களத்தின் செயலாற்றுகையில் முன்னேற்றத்தின் பலவீனமானது, குறித்த சமூகத்தின் தேவையினை காலத்திற்கேற்றவாறு நிறைவேற்றுதல் என்ற எதிர்பார்ப்புக்கள் வீழ்ச்சியடைந்துள்ளன.

நாட்டினுள் சமூக, பொருளாதார, அபிவிருத்தி செயற்பாட்டில் காலத்திற்கேற்றவாறு தயாரிக்கப்பட வேண்டிய, திருத்தம் செய்யப்பட வேண்டிய, சட்டங்கள் தயாரிப்பதில் தாமதங்கள் ஏற்படுவதாயின் அவற்றை அடையாளம் காணுவதற்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதனுடன் தொடர்புடைய துறைகளிடம் செய்தியினை வழங்குதல் இந்த கணக்காய்வின் நோக்கமாகும்.

## இலங்கையில் மிளகு உற்பத்தி மற்றும் அதன் சந்தை நிலைமையை மதிப்பிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட விஷேட கணக்காய்வு மீதான அறிக்கை.

இலங்கையின் கறுப்பு மிளகிற்காக உலக சந்தையில் அதிக கேள்வி இருந்ததுடன் இலங்கையின் மிளகிற்காக செலுத்தப்பட்ட விலையானது ஏனைய உற்பத்தி செய்கின்ற நாடுகளுடன் ஒப்படும் போது உயர்ந்த மட்டத்திலிருந்தது. ஏனைய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட கறுப்பு மிளகிற்கு ஒத்ததாக இலங்கை மிளகில் உள்ளடங்குகின்ற பைபரின் உயிர் அனு கூறானது உயர் மட்டத்திலிருந்தது அத்தகைய நன்மைக்காக வழங்கப்பட்டது.(Peparine) அத்தகைய நிலைமையின் கீழ், இலங்கையின் கறுப்பு மிளகிற்காக மத்தியகிழக்கு நாடுகளிலிருந்தும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் உயர் கேள்வி ஏற்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன் ஆனால் உள்நாட்டு சந்தையில் மிளகின் கொள்வனவு விலையானது அண்மையில் திடீர் குறைவை காட்டியது. உள்நாட்டு சந்தையில் கறுப்பு மிளகின் விலையானது 2015 ஆம் ஆண்டில் ரூபா 1200 - 1400 இற்கும் (கிலோ கிராம்

ஒன்றிற்கு) இடையிலான மட்டத்தில் இருந்த போதிலும் இது 2016 ஆம் ஆண்டிலிருந்து குறைவொன்றை காட்டியதுடன் தற்போது கறுப்பு மிளகின் கொள்வனவு விலைவானது ரூபா 600 - 800 (கிலோ கிராம் ஒன்றிற்கு) இற்கும் இடையில் உள்ளது. கறுப்பு மிளகின் வெளிநாட்டு சந்தை விலையானதும் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 1200 - 2300 இற்க இடையிலான வீச்சில் இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிட்டதிலிருந்து ரூபா 800 - 1200 வரைக்கும் குறைவடைந்தது.

இத்தகைய நிலைமையின் கீழ் மிளகின் புதிய உற்பத்தியாளர்கள் சந்தைக்குள் நுழைவதற்கு தயங்கியதுடன் அவர்கள் உற்பத்தியில் எதிர்கொள்ளும் சர்ச்சைகளால் இந்த துறையிலிருந்து விட்டுச்சென்றார்கள் ஆகையால், உள்நாட்டு சந்தையில் மிளகிற்கான விலை குறைவடைவதில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணங்கள் தொடர்பாக புலனாய்வு செய்யும் நோக்கத்துடனும் மேலும் விலை குறைவடைவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக மற்றும் பொருளாதார விடயங்களை இனங்காண்பதற்குமாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்த நோக்கத்திற்காக, இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் துறையில் கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்கள் மற்றும் வர்த்தக குழுவிலுள்ள தகவல்கள் மற்றும் தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தகவல்கள் பயன்படுத்தப்பட்டதுடன் உரிய தரப்பினர்களுடன் நேர்காணல்கள் நடாத்துவதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கிணங்க, பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட காணியுடன் ஒப்பிடும் போது பயிர்ச்செய்கை குறைந்த மட்டத்திலிருந்தமை, பயிர்ச்செய்கை காலத்தின் போது குறைந்த விலைகளில் சில நாடுகிளிலருந்து மாத்திரம் கறுப்பு மிளகினை ஒட்டுமொத்தமாக இறக்குமதி செய்தமை குறைந்த விலைகளை கொண்ட மிளகின் உள்நாட்டு ஏற்றுமதி அறவிடுவிலிருந்து கிட்டத்தட்ட 85 சதவீதத்தை ஏற்றுமதி செய்தல், உயர் விலைகளை செலுத்துகின்ற மத்திய கிழக்கு மற்றும் மேற்கத்தய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயன்முறையை வரையறுத்தல் உள்நாட்டு விவசாயிகளிற்கு (கிலோ கிராம் ஒன்றிற்கு) செலுத்தப்பட்ட விலைகளிற்குயேற்பட்ட திடீர் குறைவு போன்றன இந்த சர்ச்சைக்கு பிரதான காரணங்களாக இனங்காணப்பட்டது.

மேலும், உள்நாட்டு மிளகு உற்பத்தியின் மற்றும் நுகர்வு மற்றும் மிகையின் அளவை கருத்திற்கொண்டு இறக்குமதி கொள்கையை தீர்மானிப்பத்தல் மற்றும் சில நாடுகளிலிருந்தான மட்டுமான குறைந்த விலையுள்ள குறைந்த தரத்துடனான மிளகின் இறக்குமதியினை தடுத்தல் மற்றும் மிளகு உற்பத்தி போன்றவற்றிற்காக உயர் விலைகளை கொடுத்துள்ள இலங்கையின் சந்தைப் பங்கை மீள உழைத்தல் போன்ற மீட்சி நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இந்த நிலைமையை தடுக்கலாம் என மேலும் அவதானிக்கப்பட்டது.

## சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் வாகன முகாமைத்துவம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரின் பெயரில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மற்றும் சுகாதார துறைக்குரிய பல்வேறு பதவிப் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ள 5,556 வாகனங்கள் காணப்படுவதாக மோட்டார் வாகனத் திணைக்களத்தின் தரவுகளுக்கமைய உறுதிப்படுத்தப்பட்டதுடன், அமைச்சின் வாகனப் பதிவேட்டிற்கமைய அந்த அளவானது 5,792 ஆக இருந்தது. மேலும், அமைச்சின் வாகனப் பதிவேட்டிலான 1,794 வாகனங்களின் பௌதீக நிலைதகுதன்மையை உறுதிப்படுத்திக்கொள்வாற்கும் அமைச்சினால் முடியாதிருந்தது. இந்த நிலைமையின் அடிப்படையில் அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களின் உரித்து, இருப்பு, பதிவேட்டிற்குட்படுத்தல், பயன்பாடு மற்றும் பராமரிப்பு, வாகன நிர்வாக நடைமுறை மற்றும் உள்ளக கட்டுப்பாடு உள்ளடங்கலான வாகன முகாமைத்துவ நடைமுறை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களை முன்வைத்தல் இந்த அறிக்கையை வெளியிடுவதற்கான நோக்கமாகும். அமைச்சின் போக்குவரத்துப் பிரிவிற்கு பொறுப்பான செயற்படும் பணிப்பாளரிடம் (போக்குவரத்து) மற்றும் உரிய பதவியணியிலிருந்தும் பெறப்பட்ட எழுத்துமூல சான்றுப்படுத்தல்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்களை பகுப்பாய்வு ரீதியாக பகுத்தாராய்தல் இடம்பெற்றது. மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட வாகனப் பதிவேட்டில் இல்லாத 202 வாகனங்களின் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்படாத மோட்டார் வாகனங்கள் மற்றும் உந்துருகளின் எண்ணிக்கை 171

ஆகும். அவ்வாறே வெளிவாரி தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்ததாக மோட்டார் வாகனத் திணைக்களத்தின் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்ட 259 மோட்டார் வாகனங்கள் மற்றும் உந்துருளிகள், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 158 மோட்டார் வாகனங்கள் மற்றும் உந்துருளிகள் மற்றும் மோட்டார் வாகனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாததாக கணக்காய்வினால் வெளிப்படுத்தப்பட்ட 11 மோட்டார் வாகனங்கள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட வாகனப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பௌதீக இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அமைச்சினால் முடியாது போன 679 மோட்டார் வாகனங்கள் மற்றும் 1,115 உந்துருளிகள் எனுமாறு 1,794 மொத்த வாகனங்கள் தொடர்பில் அமைச்சினால் முறையான பௌதீக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன், அமைச்சிற்கு சொந்தமாக உள்ளதாக பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்த மோட்டார் வாகனங்கள் மற்றும் உந்துருளிகளில் 1,239 மோட்டார் வாகனங்கள் மற்றும் 2,795 உந்துருளிகளின் இட அமைவினை இனங்காண கணக்காய்வினால் முடியாதிருந்தது. மேலும், அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் உரிய எரிபொருள் படியினை மிகைத்து 2017 ஆம் ஆண்டினுள் அமைச்சருக்கும் அந்த அலுவலகத்திற்கும் ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக ரூபா 2,360,550 தொகையான எரிபொருளும் அமைச்சருக்கும் அந்த அலுவலகத்திற்கும் ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக ரூபா 4,266,280 தொகையான எரிபொருளும் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது.

1,794 வாகனங்கள் காணாமல் போயிருந்தமை, அமைச்சிற்கு சொந்தமாக காணப்பட்ட வெளிவாரி தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்த 177 வாகனங்களின் ஒப்படைப்புக்களின் சட்டரீதியான தன்மை உறுதிப்படுத்தப்படாமை மற்றும் பற்றாக்குறையாகவுள்ள 202 வாகனங்களில் 171 வாகனங்களின் இருப்பு மற்றும் ஏலமிடப்பட்டமை உறுதி செய்யப்படாமை காரணத்தால் திட்டவட்டமாக கணிப்பிட முடியாத நட்டமொன்று ஏற்பட்டுள்ளதாகவும், அமைச்சிற்கு சொந்தமாக காணப்படும் 5,792 இனை விஞ்சிய வாகன அணியை முகாமை செய்வதற்காக உரிய நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் அதனை அமுல்படுத்துவதற்கும் இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் அவ்வாறான நட்டங்கள் தொடரந்தும் இடம்பெறுகின்றதாகவும், விடயப்பொறுப்பு அமைச்சருக்கு, பிரதி அமைச்சருக்கு மற்றும் உரிய பதவியணிக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக வாகனங்கள் மற்றும் எரிபொருள் வழங்குவதன் மூலம் மற்றும் அரச வாகனங்களை அப்புறப்படுத்தும் நடைமுறைக்கு முரணாக வாகனங்களை விற்பனை செய்தமையால் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்தல் தொடர்பிலும், அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் போக்குவரத்து பிரிவிற்கு பொறுப்பான இருந்த உத்தியோகத்தர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய தரப்பினர் பொறுப்புக்கூற வேண்டும். அதற்கமைய இந்த நிலைமையை முகாமை செய்வதற்கும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டங்களை தீர்ப்பதற்கும் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் முக்கியத்துவம் இந்த அறிக்கையின் பரிந்துரைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது.

பொருட்கள் போக்குவரத்திற்காக சேவையைப் பயன்படுத்துவதனை மதிப்பீடு செய்வதற்கான விசேட கணக்காய்வு அறிக்கை

1985 இன் 26 ஆம் இலக்க புகையிரத கட்டளைச் சட்டம், 1902 இன் 09 ஆம் இலக்க கட்டளைச் சட்டம் மற்றும் அச்சட்டங்களின் திருத்தங்களுக்கு இணங்க புகையிரத திணைக்களத்தின் மூலப் பொருள் போக்குவரத்து நடவடிக்கை இடம்பெற்று வருவதுடன், அச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டளவில் 151 ஆண்டுகள் கடந்துள்ளது. 1867 - 1934 காலப்பகுதியின் போது புகையிரத் திணைக்களத்தின் ஒட்டுமொத்த வருமானத்தில் பொருள் போக்குவரத்தின் மூலம் 57 சதவீதமான வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் அது 2017 ஆம் ஆண்டளவில் 9.3 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும், 1968 ஆம் ஆண்டளவில் பொருள் போக்குவரத்து சந்தைப் பங்கில் 38 சதவீதம் புகையிரதத் திணைக்களத்திற்குரியதாகக் காணப்பட்ட போதிலும், நிகழ்காலத்தில் அது 0.3 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும், பொருள் போக்குவரத்து ஆக்கபூர்வமாகவும் விளைத்திறனாகவும் இடம் பெற்றிருக்காததன் காரணமாக வருமானத்திற்கான தாக்கத்தைப் போல சுற்றாடல், சமூக மற்றும் பொருளாதார தாக்கங்களையும் மதிப்பீடு செய்வதற்காக இந்த அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. இந்த அறிக்கையைத் தயாரிக்கும் போது உரிய கட்டளைச் சட்டங்கள், சுற்றறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஆவணங்களைப் பரீட்சித்தல், அடிப்படையாகக் கொள்ளப்பட்ட

தரவுகளை மீளாய்வு செய்தல், பௌதீகப் பரிசோதனை என்பவற்றின் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

அதற்கிணங்க, முதலாவது வகுப்பிலும் இரண்டாவது வகுப்பிலும் பொருள் போக்குவரத்து 80 சதவீதம் அளவில் கைவிடப்படுதல், பொருள் போக்குவரத்திற்குரிய சட்டங்கள் தேவைப்பாட்டிற்கு இணங்க தயாரிக்கப்படாமை பிராந்திய தேவைப்பாடுகளுக்கிணங்க எரிபொருள் போக்குவரத்து செய்யப்படாமை, எரிபொருள் போக்குவரத்தில் 60 சதவீதமான சந்தைப் பங்கு கைவிடப்பட்டமை பெருந்தெருக்கள் மூலம் பொருட்கள் போக்குவரத்துச் செய்வதன் காரணமாக சுற்றாடல் சிக்கல்களைப் போல உளரீதியான மற்றும் சமூக ரீதியான சிக்கல்களும் உருவாகியுள்ளது என்பதனை இணங்காணக்கூடியதாக இருந்தது. அதற்கிணங்க பொருள் போக்குவரத்திற்காக சேவை சார்ந்த வசதிகளைத் தோற்றுவிப்பதற்கு கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுப்பதனை உள்ளடக்கி அறிக்கையின் 10 ஆவது அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ள நடைமுறைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

# திரட்டு நிதியம்

அரசின் நிதி நிர்வாகத்திற்குரியதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் XVII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் அரசாங்க நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாட்டினையும் பாராளுமன்றம் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசினால் சேகரிக்கப்படுகின்ற வருமானம் திரட்டு நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டியிருந்ததுடன் அரசியலமைப்பின் 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் திரண்ட நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டிற்கான அரச செலவினத்திற்கு தேவையான நிதிஏற்பாடு 2019 இன் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அரசின் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக ரூபா 4,728.19 பில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 04 இல் காண்பிக்கப்படுகின்றது.

| நிதி | மூலதன நிதி ஏற்பாடு | மீண்டெழும் நிதிஏற்பாடு | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் மூலம் வழங்கல் மற்றும் சேவைகளுக்கான ஏற்பாடு | 844.29 | 1,275.77 | 2,120.06 |
| காணப்படும் சட்டங்கள் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ள திரட்டு நிதியத்திற்கு செலவினப் பொறுப்பாக விஷேட சட்ட சேவைகளுக்கான நிதிஏற்பாடு | 1,300.86 | 931.14 | 2,232.00 |
| வழங்கல் மற்றும் சேவைகளுக்கான மேலதிகமாக வழங்கப்படும் நிதிஏற்பாடு (குறைநிரப்பு மதிப்பீடு) | 147.55 | 205.39 | 352.94 |
| விசேட சட்ட சேவை செலவினங்களுக்கான மேலதிகமாக வழங்கப்படும் நிதிஏற்பாடு | 0.16 | 23.03 | 23.19 |
| மொத்தம் | **2,292.86** | **2,435.33** | **4,728.19** |

அட்டவணை 04 - அரசின் வழங்கல், சேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடு
மூலம்:- தேசிய பாதீட்டு திணைக்களம்

2019 இன் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் 240 தேசிய பாதீட்டு திணைக்களத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்வரும் குறைநிரப்பு உதவி சேவைகள் மற்றும் அவசர பொறுப்பு செயற்திட்டத்தின் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 2.3.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மாத்திரம் பயன்படுத்தவதற்காக ரூபா 1766.10 பில்லியனான மேலதிக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் அந் நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 159.77 ஏனைய

செலவின தலைப்புகளுக்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரை அச்செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் ரூபா 16.33 பில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 05 இல் காண்பிக்கப்படுகின்றது.

| செலவினத்தின் தன்மை | தேறிய நிதிஏற்பாடு | வேறு தலைப்புகளுக்கு நிதிஏற்பாடு மாற்றல் | சேமிப்புக்கள் | சேமிப்புக்கள் தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | |
| மீண்டெழுபவை | 70.40 | 69.54 | 0.87 | 1.23 |
| மூலதனம் | 105.70 | 90.23 | 15.47 | 14.63 |
| மொத்தம் | 176.10 | 159.77 | 16.33 | 9.28 |

அட்டவணை 05 - குறைநிரப்பு மதிப்பீட்டு உதவி சேவை மற்றும் அவசர தேவைகள் பொறுப்பு செயற்திட்டத்தின் கீழான நிதிஏற்பாடு மாற்றல்
மூலம்:- தேசிய வரவு செலவுதிட்ட திணைக்களம்

மீளாய்வாண்டின் அரசின் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக ரூபா 4,728.19 பில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடு ரூபா 4,297.83 பில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி ஏற்பாடு ரூபா 43.36 பில்லியனால் அதாவது 10.01 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதிஏற்பாட்டில் ரூபா 4,075.83 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 652.26 பில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 13.8 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

மீண்டெழும் செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 2,416.74 பில்லியனாக இருந்ததுடன், அதில் ரூபா 2,321.62 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 95.12 பில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 3.94 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டில் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 1,011.45 பில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 637.22 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 37.00 சதவீதம் அதாவது ரூபா 374.23 பில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் கொடுப்பனவிற்காக ரூபா 1,300.00 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,116.99 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் கொடுப்பனவிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் 14.08 அதாவது 183.01 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டிற்குரிய கடன் கொடுப்பனவுகள் தவிர, மூலதன நிதிஏற்பாடு ரூபா 1,011.45 பில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 637.22 பில்லியன் அதாவது 63 வீதம்

பயன்படுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போது ரூபா 625.31 பில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது மூலதன நிதிஏற்பாட்டின் பயன்பாடு ரூபா 11.91 பில்லியனால் அதிகரித்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினத்திற்கான நிதிஏற்பாடு ரூபா 2,416.74 பில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,321 பில்லியன் அதாவது ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளில் 96.06 பயன்படுத்தப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினமான ரூபா 2,108,.96 உடன் ஒப்பிடும் போது ரூபா 212.66 பில்லியனால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டின் ரூபா 2,734.27 பில்லியனான மொத்த செலவினம் (கடன் கொடுப்பனவுகள் தவிர) மீளாய்வாண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 2,958.84 வரை ரூபா 224.57 பில்லியனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டிற்குரிய கடன் கொடுப்பனவுகள் தவிர, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் 18.97 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 05 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மொத்த அரச செலவினம் மொத்த தேசிய உற்பத்தி தொடர்பான தகவல்கள் அட்டவணை 06 இல் காட்டப்பட்டுள்ளது.

| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் (ரூபா பில்.) | 1,370 | 1,673 | 1,771 | 1,946 | 2,109 | 2,322 |
| மூலதனச் செலவினம் (ரூபா பில்.) | 596 | 684 | 594 | 657 | 625 | 637 |
| மொத்தச் செலவினம் (கடன் செலுத்துதல் தவிர) )ரூபா பில்.) | 1,966 | 2,357 | 2,365 | 2,603 | 2,734 | 2,959 |
| மொத்த தேசிய உற்பத்தி (ரூபா பில்.) | 9,785 | 11,183 | 11,839 | 13,289 | 14,200 | 15,600 |
| மொத்தச் செலவினத்தின் சதவீதமாக மூலதனச் செலவினம் (கடன் செலுத்துதல் தவிர) | 30 | 29 | 25 | 25 | 23 | 22 |
| மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக மொத்தச் செலவினம் (கடன் செலுத்துதல் தவிர) | 20 | 21 | 20 | 20 | 19 | 19 |

அட்டவணை 06 - மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக
மூலம் : குடியரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் மத்திய வங்கி ஆண்டறிக்கை

2014 ஆம் ஆண்டின் போது கடன்கொடுப்பனவு தவிர மூலதனச் செலவினம் ரூபா 596பில்லியனாக இருந்ததுடன் அது ஆண்டின் ரூபா 1,966 பில்லியனான மொத்தச் செலவினம் (கடன்கொடுப்பனவு தவிர்) உடன் ஒப்பிடும் போது 30 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அம்மீதி 22 சதவீதம் வரை 8 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,966 பிலலியனான மொத்தச் செலவினம் (கடன்கொடுப்பனவு தவிர) அவ்வாண்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 20 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அச்சதவீதம் 19 வரை குறைவடைந்திருந்தது. முன்னைய 5 ஆண்டு காலப்பகுதியில் அச்சதவீதம் தொடர்பான விபரங்கள் உரு 01 இல் தரப்பட்டுள்ளது.




உரு 01 - மொத்தச் செலவினம் மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக
மூலம் : குடியரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் மத்திய வங்கி ஆண்டறிக்கை

மீளாய்வாண்டின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி மற்றும் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மீதான கழிவுகளை கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 888.79 பில்லியன் வட்டியாக செலவிடப்பட்டிருந்தது. அது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 38.21 சதவீதமாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 36.60 பில்லியனால் அதாவது 4.29 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதற்கு மேலதிகமாக ஆளணி வேதனங்களுக்காக ரூபா 528.79 பில்லியன் தொகையும் மானியம் மற்றும் நிதியுதவிகளுக்காக ரூபா 703.51 பில்லியன் தொகையும் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைச் செலவினங்களுக்காக ரூபா 199.83 பில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தன. மொத்த மீண்டெழும் செலவினம் தொடர்பாக மேற்கூறப்பட்ட செலவினங்கள் உயர்ந்த பங்களிப்பைக் கொண்டுள்ளதுடன் ஒட்டு மொத்த மீண்டெழும் செலவினங்களையும் தீர்ப்பதற்காக ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் போதியளவாக இருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் மொத்த அரச செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 414.43 பில்லியனாக இருந்தது. அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 240.56 பில்லியனால் அதாவது 138.35 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 5 ஆண்டு காலப்பகுதியின் மீண்டெழும் செலவினம், அரசின் வருமானம் மற்றும் அரசின் வருமானத்தை மிகைத்த மீண்டெழும் செலவினம் தொடர்பான தகவல்கள் அட்டவணை 07 இல் தரப்பட்டுள்ளது.

| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா பில். | ரூபா பில். | ரூபா பில். | ரூபா பில். | ரூபா பில். | ரூபா பில். |
| அரசாங்க வருமானம் | 1,127.63 | 1,394.24 | 1,698.76 | 1,845.02 | 1,935.09 | 1,907.20 |
| மீண்டுவரும் செலவினம் | 1,370.05 | 1,672.92 | 1,770.88 | 1,945.57 | 2,108.96 | 2,321.62 |
| அரசாங்க வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் | 242.42 | 278.68 | 72.12 | 100.55 | 173.87 | 414.42 |

அட்டவணை 07 – அரசாங்க வருமானம், மீண்டெழும் செலவினம் மற்றும் அரசாங்க வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவினம்
மூலம் : குடியரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் மத்திய வங்கி ஆண்டறிக்கை

அவ்வாறே மூலதன செலவினங்களுக்காகவும் மீளாய்வாண்டின் போது ரூபா 637.22 பில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், மீண்டெழும் செலவினத்தின் ஒரு பகுதி, அரச முதலீடு மற்றும் கடன் தவணைப் பணம் செலுத்துவதற்கான உள்நாட்டுக்கடன், வெளிநாட்டுக்கடன் மற்றும் உதவிகள் பெறவேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருடாந்த கடன் தவணைப் பணம் மற்றும் வட்டியாக கணிசமான தொகையொன்றைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் அக்கிரயம் வருடாந்தம் அதிகரித்து செல்கின்றதாக இருந்தது.

மீளாய்வாண்டின் போது மீண்டெழும், மூலதனச் செலவினம் மற்றும் கடன் மீளச் செலுத்துதல் என்பவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 4,075.83 பில்லியனாக இருந்ததுடன் திரட்டிய செலவினத்தில் 27.41 சதவீதம் கடன் செலுத்துவதற்காகவும், 21.81 சதவீதம் கடன் வட்டி மற்றும் கழிவினை செலுத்துவதற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. விபரங்கள் உரு 02 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு. 02 - 2019 ஆம் ஆண்டின் மீண்டெழும், அரச முதலீடு மற்றும் கடன் கொடுப்பனவு
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள் 2019

2019 வருடாந்த மதிப்பீட்டின் 4.6 ஆம் பந்தியின் கீழ் அரசன் கடமைப்பாடுகள் 42 ஆம் இலக்க 13 தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தன. அரசின் திரட்டிய செலவினம் அம் 13 கொத்தனிகளின் கீழ் பகிரப்படும் விதம் உரு 03 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 03 - 13 கொத்தணிகளின் கீழ் ஒட்டுமொத்தச் செலவினம் பகிரப்பட்டுள்ள விதம்

மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள் 2019

திரட்டிய செலவினத்தல் ரூபா 2,140.47 மில்லியனான சேவை பொருளாதாரத்திற்காக செலவிடப்பட்டிருந்த போதும் அதில் ரூபா 1,116.98 மில்லியன் வெளிநாட்டு கடன் தவணைப் பணத்தை செலுத்துவதற்கும் ரூபா 888.79 பில்லியன் வட்டிக் கொடுப்பனவிற்கும் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சேவைப் பொருளாதாரத்திற்கான செலவினத்தில் கடன்தவணை மற்றும் வட்டி கொடுப்பனவு உரு 04 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 04 - மொத்த சேவைகள் செலவினம் மற்றும் கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவு

மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள் 2019

## அரசாங்க வருமானம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட 2019 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வரி வருமானம், வரியல்லாத மற்றும் ஏனைய வருமானங்களாக மதிப்பிடப்பட் அரசின் வருமானம் ரூபா 2,360 பில்லியன் ஆக இருந்தது. அது முன்னைய ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருமானமான ரூபா 2,233.10 பில்லியனான வருமானத்துடன் ஒப்பிடும் போது ரூபா 127.50 பில்லியன் அதாவது 5.71 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,907.19 பில்லியனான

வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட ரூபா 453.40 பில்லியனால் அதாவது 19.21 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 1,935.09 பில்லியன் உடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 27.90 பில்லியன் அதாவது 1.44 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அரசின் வருமானம் மொத்த தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடும் போது முன்னைய ஆண்டின் போது 13.62 சதவீதமாக இருந்த போதும் அது மீளாய்வாண்டின் போது 12.23 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. கடந்த 2016 ஆம் ஆண்டின் போது அவ்விகிதம் 14.3 சதவீதமாக அறிக்கையிட்டிருந்ததுடன் அதன் பின்னைய ஆண்டுகளில் விகிதம் படிப்படியாக குறைவடைந்து காணப்பட்டது. விபரம் உரு 05 இல் தரப்பட்டுள்ளது.




உரு 05 :- அரசாங்க வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக,
மூலம் :- இலங்கை குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

அரசாங்க வருமானம் “வரி வருமானம் மற்றும் வரியல்லாத வருமானம்” பிரதான இரண்டு வகையின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், வரி வருமானம் மீண்டும் வருமான வரி, உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி மற்றும் சர்வதேச வியாபார அடிப்படையிலான வரி என வகைப்படுத்தப்பட்டு குடியரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான வருமான வரியாகச் சேகரிப்பதற்கு ரூபா 385 பில்லியன் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்கு ரூபா 42.7 மில்லியன் அதாவது 11.09 சதவீதத்தினால் மிகைத்து ரூபா 427.70 ஆன வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற வரிகளில் ரூபா 1,291.36 பில்லியன் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 973.84 பில்லியன் மாத்திரம் சேகரிக்கக் கூடியதாக இருந்தது. சர்வதேச வியாபாரத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற வரிகளில் ரூபா 400.64 பில்லியன் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 333.38 பில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வரி வருமானங்களில் ரூபா 2,077.00 பில்லியன் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதில் 83.53 சதவீதம் அதாவது ரூபா 1,734.92 பில்லியன் மாத்திரம் சேகரிப்பதற்கு முடியுமாக இருந்தது. மீளாய்வாண்டின் போது வரியல்லா ஏனைய வருமானங்களில் ரூபா 283.60 பில்லியன் சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதும் அதில் மரூபா 172.27 பில்லியன் வருமானம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக அரசின் வருமான வகைப்படுத்தல் மற்றும் அவ்வகைப்படுத்தலின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட அரசின் வருமானம் மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானத்தை உரு 06 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு 06 - மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான அரசின் வருமானம்
மூலம் :- இலங்கை குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

## வரி வருமானம்

அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் வரி வருமானம் ரூபா 1,734.92 பில்லியனாக இருந்ததுடன் அது மொத்த அரச வருமானத்தின் 90.97 சதவீதமாக இருந்தது. முன்னைய ஆண்டின் போது வரி வருமானம் ரூபா 1,712.32 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வரி வருமானம் ரூபா 1,712.32

பில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது 1.32 சதவீதத்தினால் அதாவது ரூபா 22.60 பில்லியனால் அதிகரித்திருந்தது.

## வருமான வரி

முன்னைய ஆண்டின் போது ரூபா 310.45 மில்லியனான வரி வருமானம் மீளாய்வாண்டின் போது 37.77 சதவீதத்தினால் அதாவது ரூபா 117.25 பில்லியனால் அதிகரித்து ரூபா 427.70 பில்லியனாக இருந்தது. அது மொத்த வரி வருமானத்தில் 24.65 சதவீதமும் மொத்த அரசின் வருமானததில் 22.43 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. இவ்வாறு வருமான வரி அதிகரித்தமை தொடர்பில் வருான வரியின் கீழ் வரும் கூட்டிணைக்கப்பட்ட வரி வருமானம் ரூபா 101.35 பில்லியனாலும் கூட்டிணைக்கப்படாத மொத்த வரி வருமானம் ரூபா 15.90 பில்லியனால் அதிகரித்திருந்தமை தாக்கமளித்திருந்தது.

## உள்நாட்டு பொருட்கள் சேவைகள் மீதான வரி

மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வரி வருமானத்தில், உள்நாட்டு பொருட்கள் சேவைகள் மீது விதிக்கப்பட்ட வரித் தொகை ரூபா 973.84 பில்லியனாக அதாவது மொத்த வரி வருமானத்தில் 56.13 சதவீதமாகவும் மொத்த அரசின் வருமானத்தில் 51.06 சதவீதமும் ஆக இருந்தது. முன்னைய ஆண்டின் போது அது மொத்த வருமானத்தில் 61.91 சதவீதமும் மொத்த அரச வருமானத்தின் 54.79 சதவீதமாக இருந்தது.

மீளாய்வாண்டின் அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்நாட்டு பொருட்கள் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிகளிலிருந்து 26.98 சதவீதத்தை விட பங்களிப்பொன்றை அரசின் வருமானத்திற்கு வழங்கியிருந்தது, மது வரிக்கட்டளைச் சட்டத்தின் கீழ் மதுபானங்களிலிருந்து ரூபா 115.38 மில்லியன் வருமானமொன்று ஈட்டப்பட்டிருந்ததுடன் அது மொத்த அரசின் வருமானத்தின் 6.05 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. உற்பததி (விசேட ஏற்பாடுகள்) வரிகளின் கீழ் சிகரட், மதுபானம், பெற்றோலிய உற்பத்திகள், மோட்டார் வாகனங்கள் மற்றம் ஏனைய அரசின் வருமானமாக ரூபா 284.09 பிலலியனான வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த அரச வருமானத்தின் 14.90 சதவீதமாக இருந்தது.

## சர்வதேச வியாபாரத்தின் மீதான வரி

அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சர்வதேச வர்த்தகத்தின் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள வரி மூலம் ரூபா 333.38 பில்லியன் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் மொத்த வரி வருமானத்தில் 19.22 மில்லியனும் திரட்டிய வருமானததில் 17.48 சதவீதமாகவும் இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சர்வதேச வியாபாரத்தின் மீதான வரி மூலம் வருமான சேகரிப்பு 8.33 பில்லியன் அதாவது 2.44 சதவீதம் குறைவடைந்திருந்தது.
மேலே குறிப்பிட்டதன் பிரகாரம் அரச வருமானக் கட்டமைப்பில் மஜறக வரியாக கருதக்கூடிய வருமானத்தின் உயர் பங்களிப்பு மற்றும் அதிகரிப்பிற்காக கழே காட்டப்பட் காரணிகளின் போதியளவு தாக்கமொன்று ஏற்பட்டிருந்ததுடன் அத்தாக்கங்களின் நிதிசார் பெறுமதியை கணக்கிடுவதற்காக வருமானத்தை சேகரிக்கும் திணைக்களத்தினால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக வருானம் சேகரிக்கம் திணைக்களங்களின் உண்மையான செயலாற்றலை மதிப்பிடுவதற்காக சேகரிக்கப்பட்ட வருமானத்தின் அதிகரிப்பு மாத்திரம் கருத்திற் கொள்ளல் போதியளவில் இல்லையென அவதானிக்கப்பட்டது.

- அரசினால் உயர்ந்த வரி விகிதங்களைத் தீர்மானித்தல்
- விசேட சந்தர்ப்பங்களில் இடம்பெறும் இறக்குமதிகளின் அதிகரிப்பு காரணமாக ஏற்படும் வரி வருமானத்தின் அதிகரிப்பு
- பொருட்கள் மற்றும் சேவைகளின் வெளிநாட்டுச் சந்தை விலைகள் அதிகரிப்பதால் இடம்பெறும் வரி வருமானத்தின் அதிகரிப்பு
- அந்நியச் செலாவணி விகித்தில் வீழ்ச்சி காரணமாக ஏற்படும் இறக்குமதி கிரய அதிகரிப்பு மீது வருமானம் அதிகரித்தமை

மேலும், வெளிநாட்டு வியாபார உடன்படிக்கை மற்றும் ஏனைய சட்டங்கள் மது மேற்கொள்ளப்படும் வரி விடுதலை, இலகுபடுத்தல் மற்றும் வரி விலக்களிப்பு காரணமாக அரச வருமானத்திற்கு இடம்பெறும் தாக்கம் தொடர்பாக விரிவான தகவல்களும் குறித்த திணைக்களங்களின் செயலாற்றலை மதிப்பிடும் போது கருத்திற் கொள்ளாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டின் போது அரச வருமானக் கட்டமைப்பில் வரியல்லாத வருமானத்திற்கு ஒப்பாக பங்களிப்பு 9.03 சதவீதமான குறைந்த பெறுமதியொன்றை எடுத்திருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் போது 11.51 சவீதமாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒபபிடும் போது மீளாய்வாண்டில் வரியல்லாத வருமானம் ரூபா 50.51 பில்லியனால் அதாவது 22.67 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

### அரச வருமானம் மற்றும் பாதீட்டு இடைவெளி

அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட பாதீட்டு பற்றாக்குறை ரூபா 1,067.59 பில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மதிப்பிடப்பட்ட பாதீட்டு பற்றாக்கறையை விட ரூபா 293.23 அதாவது 28.88 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது, மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளவாறான பாதீட்டு பற்றாக்குறை ரூபா 1,051.64 பில்லியனாக இருந்தது.டன் அது மதிப்பிடப்பட்ட பாதீட்டு பற்றாக்கறையை விட ரூபா 15.95 மில்லியனால் அதாவது 1.49 சதவீத குறைவொன்றாகும். எவ்வாறாயினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உள்ளவாறான பாதீட்டுபற்றாக்கறை ரூபா 252.47 பில்லியனால் அதாவது 31.59 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

அரச வருமானத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பாதீட்டு பற்றாக்குறை அரசின் வருமானத்தில் 55.14 சதவீதமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் வருமானத்தில் 55.14 வதமான முன்னைய ஆண்டின் அப்பெறுமதி 41.29 சதவீதமாக இருந்தது. 2015 ஆம் ஆண்டு முதல் அரசின் வருமானத்திற்கு பெறுமதி ஒப்பாக பாதீட்டு பற்றாக்குறை தொடர்பான விபரங்கள் உரு 07 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 07 – வருமானத்திற்கு ஒப்பாக பாதீட்டுப் பற்றாக்குறை
மூலம் :- இலங்கை குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

## மீண்டெழும் செலவினத்தைத் ஈடுசெய்து கொள்வதற்கு வருமானம் போதியளவில் காணப்படாமை

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினம் ரூபா 2,321.62 பில்லியனாகவும் அரசாங்கத்தின் மூலதனச் செலவினம் ரூபா 637.22 பில்லியனாகவும்இருந்தது. எனினும், அரசாங்கத்தினால் உழைக்கப்பட்ட ஒட்டுமொத்த வருமானம் ரூபா 1,907.19 பில்லியனாக இருந்ததன் காரணமாக அந்த வருமானம் மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினத்தை ஈடுசெய்து கொள்வதற்கும் போதியளவினதாக இருக்கவில்லை. அதன் பிரகாரம், ஒட்டு மொத்த அரசாங்க வருமானத்தை விஞ்சி ரூபா 414.43 பில்லியனால் மிகைத்து மீண்டெழும் செலவினம் ஏற்பட்டிருந்தது.

## பாதீட்டு பற்றாக்குறை

2006 ஆம் ஆண்டின் பாதீட்டு நிலுவை அவ்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியில் ஐந்து சதவீதத்தை மிகைக்காத மற்றும் அம்மட்டத்தை அதன் பின்னர் தொடர்ந்தும் பேணும் பொறுப்பாக இருப்பதாகவும் அரசின் கடன் சுமை மட்டத்தை குறைத்தல்" அரசினால் பின்பற்றப்பட வேண்டிய பொறுப்புடன் நிதி முகாமைத்துவதற்கு அடிப்படையாக இலக்கொன்றாக 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் 3(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அரசின் குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முன்னைய ஐந்து ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் மதிப்பீட்டு பாதீட்டுப் பற்றாக்குறை முறையே ரூபா 828.37 பில்லியன் மற்றும் ரூபா1,067 பில்லியனாக இருந்தது. அவ்வாறே அவ்வாண்டுகளில் குறித்த பரீட்டு பற்றாக்குறை மதிப்பிடப்பட்ட உள்நாட்டு உற்பத்தியில் முறையே 5.83 சதவீதம் மற்றும் 6.85 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு திறைசேரி தவறியிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் உள்ளவாறான பாதீட்டு பற்றாக்குறை ரூபா 105.64 பிலலியனாக இருந்ததுடன் அது மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.74 சதவீதமாக இருந்தது. அவ்விகிதம் முன்னைய ஆண்டின் போது 5.62 சதவீதமாக இருந்தது.

மீளாய்வாண்டின் மொத்த வருமானம் ரூபா 1,907.19 ஆக இருந்ததுடன் திரட்டிய அரச செலவினம் (மீண்டெடும் + அரச முதலீடுகள்) ரூபா 2,958.84 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் பாதீட்டு நிலுவை ரூபா 1,051.64 பில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டிலும் கடந்த 7 ஆண்டுகளிலும் அரச வருமானம், செலவினம் மற்றும் பாதீட்டு நிலுவை

தொடர்பான விபரங்கள் உரு 08 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 08 – அரசாங்க மொத்த வருமானம், மொத்தச் செலவினம் மற்றும் பாதீட்டுப் பற்றாக்குறை
மூலம் :- இலங்கை குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

## பாதீட்டு பற்றாக்குறை நிதியீட்டம்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பாதீட்டு பற்றாக்குறை ரூபா 252.46 பில்லியனால் அதாவது 31.59 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், தேறிய வெளிநாட்டுக் கடன் எடுத்தல்கள் ரூபா 464.59 பில்லியன் முதல் ரூபா 362.72 பில்லியன் வரை ரூபா 101.83 பில்லியனால் அதாவது 21.92 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது. தேறிய உள்நாட்டுக் கடன் பெறுவனவு ரூபா 169.92 பில்லியன் முதல் ரூபா 523.03 பில்லியன் வரை ரூபா 353.11 பில்லியனால் அதாவது 207.81 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பாதீட்டு பற்றாக்குறையை நிதியளிப்பதற்காக உள்நாட்டுக் கடன்கள் மூலம் உயர்ந்த பங்களிப்பொன்றை பெற்றுக்கொண்டதுடன் அது மொத்த நிதியளிப்புகளில் 49.73 சதவீதமாக இருந்தது. அதற்கு மேலதிகமாக வெளிநாட்டு கடன் எடுத்தல் 34.49 சதவீதமாகவும் உப கடன் அறவீடு 1.74 சதவீதமும் வைப்புக் கணக்குகள் மற்றும் பொறுப்புக்களின் தேறிய வேறுபாடுகள் 8.37 சதவீதமாக இருந்தது.

## அரசாங்கக் கடன்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆவது உறுப்புரையின் பிரகாரம் கடனை உள்ளடக்கிய முழுமையான நிதிக் கட்டுப்பாடும் பாராளுமன்றத்திற்கு உரித்தாக வருவதுடன் குடியரசின் சகல கடன்களுக்காகவும் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறவேண்டும். அதன் பிரகாரம் 2019 இன் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 2.1(அ) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்திற்காகவும் அரசாங்கம் சார்பாகவும் இலங்கையிலோ அல்லது அதற்கு வெளியிலோ கடன் பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுக் கடன் ரூபா 935 பில்லியன் தொகையும், உள்நாட்டு வங்கியல்லாக் கடன் (திறைசேரி உண்டியல் மூலம் தேறிய கடன் எடுத்தல் உட்பட) ரூபா 1,068 பில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 2,002.78 பில்லியன் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 1,870.87 பில்லியன் கடன் அளவு (திறைசேரி உண்டியல் மூலம் தேறிய கடன் எடுத்தல் உட்பட) உடன் ஒப்பிடும் போது ரூபா 132 பில்லியனால் அதாவது 7.05 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது, அரசாங்கம் உள்நாட்டுக் கடன் தொடர்பில் கூடிய கவனமொன்று

செலுத்தியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது, பெற்றுக்கொண்ட உள்நாட்டுக் கடன் அளவை முன்னைய ஆண்டின் போது பெறப்பட்டிருந்த (திறைசேரி உண்டியல்கள் மூலம் தேறிய கடன் பெறுவனவு உட்பட) ரூபா 1,099.26 பில்லியனான உள்ளநாட்டு கடன் அளவுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 31 பில்லியனால் அதாவது 2.87 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது, பெற்றுக்கொண்ட கடன் அளவை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு அட்டவணை 08 இல் காண்பிக்கப்படுகின்றது.

| விபரம் | 2019<br>ரூபா<br>பில்லியன் | 2018<br>ரூபா<br>பில்லியன் |
|---|---|---|
| வெளிநாட்டு கடன் பெறுவனவு | 935.10 | 771.61 |
| உள்நாட்டு கடன் பெறுவனவு | 138.87 | 34.09 |
| திறைசேரி உண்டியல் | 768.00 | 763.02 |
| திறைசேரி பிணைமுரி | 67.94 | 62.38 |
| வெளிநாட்டு பிரயோக பண வங்கி அலகு (செயற்திட்டம் அல்லாத) | 61.86 | 234.09 |
| அபிவிருத்தி பிணைமுறி | 1.01 | 5.68 |
| வெளிநாட்டு பிரயோக பண வங்கி அலகு செயற்திட்டம் அல்லாத | 30.00 | - |
| மொத்த உள்நாட்டு கடன் எடுத்தல் | 1,067.68 | 1,099.26 |
| ஆண்டில் பெற்ற மொத்தக் கடன் | 2,002.78 | 1,870.87 |

அட்டவணை 08 - பெற்றுக்கொண்ட கடன் வகைப்படுத்தல்

மூலம் :- அரச கணக்குகள் திணைக்களம் / குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய அரச கடன் மீதி ரூபா 12,187.86 பில்லியனாக இருந்ததுடன் அது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 11,276.28 பில்லியனான மொத்த அரச கடன் மீதியுடன் (மத்திய வங்கி முற்பணம் மற்றும் வங்கி மேலதிகப் பற்று தவிர) ஒப்பீடு செய்த

போது ரூபா 911.58 பில்லியனால் அதாவது 9.08 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் காணப்பட்ட மொத்த அரசாங்கக் கடன் தொடர்பான விபரம் அட்டவணை 09 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | 2019<br>ரூபா<br>பில்லியன் | 2018<br>ரூபா<br>பில்லியன் |
|---|---|---|
| **திறைசேரி உண்டியல்** | 897.67 | 758.80 |
| **திறைசேரி பிணை முறி** | 4,338.28 | 4,999.93 |
| **ரூபாய்க் கடன்** | 24.09 | 24.09 |
| **இலங்கை அபிவிருத்தி பிணை முறி** | 560.23 | 614.22 |
| **வெளிநாட்டு மீண்டெழும் நிதியில் உள்நாட்டு கடன்** | 168.01 | 100.51 |
| **வெளிநாட்டு மீண்டெழும் நிதியில் வங்கிப் பிரிவு (செயற்திட்டம்)** | 17.70 | 19.51 |
| **சுஹுருபாய கட்டிடத்தை நிர்மாணப்பதற்கான கடன்** | 6.26 | 6.82 |
| **திறைசேரி உண்டியல் (செயற்படு கடப்பாட்டு முகாமைத்துவச் சட்டம்)** | 30.00 | - |
| **ஓய்வுபெறல் பணிக்கொடைக் கடன்** | 61.13 | - |
| **குத்தகைக் கடன்கொடுத்தோர்** | 2.88 | 7.66 |
| **மொத்த உள்நாட்டுக் கடன்** | 6,106.25 | 5,531.55 |
| **வெளிநாட்டு (செயற்திட்டம்)** | 3,105.83 | 3,194.16 |
| **வெளிநாட்டுத் தொகையில் காலரீதியான கடன் வசதிகள்** | 242.19 | 330.17 |
| **சர்வதேச பிணை முறி** | 2,733.59 | 2,220.41 |
| **மொத்த வெளிநாட்டுக் கடன்** | 6,081.61 | 5,744.74 |
| **மொத்த அரச கடன் மீதி** | 12,187.86 | 11,276.28 |
| **மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி** | 15,600.00 | 14,200.00 |
| **மொத்த அரச கடன் மீது மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக** | 78.13 | 79.41 |

அட்டவணை 09 - வகைப்படுத்தப்பட்ட ஆண்டின் இறுதியில் காணப்பட்ட கடன் மீதி
மூலம் :- அரச கணக்குகள் திணைக்களம் / குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

### பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட கடன் வரம்புகளை மீறி கடன்களை வழங்குதல்

2019 இன் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 2.1(அ) ஆம் பிரிவின் பிரகாரம் 2019 நிதியாண்டினுள் பெற்றுக்கொண்ட கடன்தொகையில் உருவாகிய எஞ்சிய மீதி 2019 நிதியாண்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அல்லது ஆண்டின் இறுதயிலும் ரூபா 2,079 பில்லியனை விஞ்சக்கூடாது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன் அளவு ரூபா 2,158 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட கடன் எல்லை ரூபா 79 பில்லியனால் மிகைத்திருந்தது. விபரம் அட்டவணை 10 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

| விபரம் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
|---|---|---|---|
| **வெளிநாட்டுக் கடன் பெறுதல்** | | 935.10 | |
| **2019 ஆம் ஆண்டில் வசூலாகியிருந்த போதிலும் கணக்கிலிடப்படாத கடன்கள்** | | 176.84 | |
| **ஐந்தொகைக்கு வெளியே கணக்கு வைக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் - ஆண்டின் போதானவை** | | 8.12 | |
| **உள்நாட்டுக் கடன் பெறுதல்** | | | |
| **திறைசேரி உண்டியல்கள்** | | 768.00 | |
| **வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல் வங்கி அலகு (நியதிச்சட்டமற்ற)** | | 67.94 | |
| **இலங்கை அபிவிருத்தி முறிகள்** | | 61.86 | |
| **வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல் வங்கி அலகு (செயற்திட்டங்கள்)** | | 1.01 | |
| திறைசேரி உண்டியல் வழங்குதல் | 1,719.33 | | |
| திறைசேரி முறிகளிற்கான கொடுப்பனவு | 1,580.45 | 138.88 | |
| **2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட கடன்கள்** | | | 2,157.75 |
| **2019 இன் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் படி 2019 ஆம் ஆண்டிற்காக பெறப்பட முடியுமான உச்ச கடன் தொகை** | | | 2,079.00 |
| **2019 ஆம் ஆண்டில் வரம்பினை மீறி பெற்ற கடன்** | | | 78.75 |

அட்டவணை 10 - கடன் எல்லைகளை மீறல்
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

### ஆகக்கூடிய செலவு எல்லை மீறல்



திரட்டு நிதியம்

2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) பிரிவின் பிரகாரம் ஏதேனும் ஒரு ஆண்டின் இறுதியில் காணப்பட வேண்டிய ஆகக்கூடிய பொறுப்புக்கள் அவ்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியில் 80 சதவீதத்தை மிகைக்க கூடாது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த எல்லைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆணடின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்யும் போது மீளாய்வாண்டின் இறுதி வரை கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன், திறைசேரி முறிகள் மற்றும் நிதி நிலைமை தொடர்பாக கூற்றுக்களுக்கு புறம்பாக கணக்கு வைக்கப்பட்டிருந்த வெவ்வேறு அரச முயற்சிகளுக்குரிய பொறுப்புக்கள், மத்திய வங்கி முற்பணங்கள் மற்றும் வங்கி மேலதிகப் பற்று என ரூபா 1,035 பில்லியன் பொறுப்புக்கள் கணக்கில் எடுத்த போது அரசின் திரட்டிய பொறுப்புக்கள் ரூபா 13,493 பில்லியனாக இருந்தது. அது 2019 ஆம் ஆண்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 86.49 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஆகக்கூடிய பொறுப்பு எல்லையை மிகைத்திருந்தது. விபரங்கள் அட்டவணை 11 இல் காண்பிக்கப்படுகின்றன.

| **பொறுப்புக்கள்** | **2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** |
|---|---|
| | ரூபா பில்லியன் |
| வங்கி மேலதிகப் பற்று | 194.52 |
| மத்திய வங்கி முற்பணம் | 236.61 |
| அரசாங்கக் கடன் (அரசாங்க நிதிகூற்றுக்களின் படி) | **12,187.86** |
| நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாத பொறுப்புக்கள் :- | 345.45 |
| - ஐந்தொகைக்கு வெளியே கணக்கு வைக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் | 318.25 |
| - திறைசேரி பிணைமுறி மீதி குறைத்து கணக்கீடு செய்தல் | |
| - கணக்கிலிடப்படாத வெளிநாட்டுக் கடன் | 210.19 |
| மொத்த பொறுப்புக்கள் | **13,493.88** |
| **மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி** | **15,600.00** |
| **மொத்த பொறுப்புக்கள், மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக** | 86.49 |

அட்டவணை 11 – உச்ச செலவு எல்லைகளை மீறல்
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

- பொது திறைசேரியின் பிணை அடிப்படையில் பொது முயற்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடனுக்காக வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த பிணை மற்றும் சலுகைகளின் கடிதங்களின் பெறுமதி ரூபா 858 பில்லியன் மற்றம் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் விசேட செலவின

பிரிவுகளில் வருடாந்த நிதிக்கூற்றுக்களின் பொறுப்புக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 165 பில்லியனான பெறுமதியும் மேற்குறித்த பொறுப்புக்களில் உள்ளடக்கப்படவில்லை.

## தனி நபர் கடன் அளவு அதிகரித்தமை

மொத்த அரச கடன் மீதி, வருடாந்த சனத்தொகையுடன் ஒப்பிடும் போது 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 264,8244 ஆன தனியால் கடன் அளவு 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 558,999 வரை அதிகரித்திருந்தது. அவ்வாறே அது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 520,364 ஆன தனி நபர் கடன் அளவுடன் ஒப்பிடும் போது ரூபா 38,635 ஆல் அதாவது 7.42 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. தனிநபர் கடன் அளவு அதிகரிப்பு உரு 09 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 9 – தலைக்குரிய கடன் அளவு

மூலம் - மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள் / மத்திய வங்கி ஆண்டறிக்கை

## பொதுப்படுகடன் மீதியிலுள்ள வெளிநாட்டுக் கடன்களின் அளவு அதிகரித்துள்ளமை

மொத்தப் பொதுப்படுகடனில் 49 சதவீதமானவை வெளிநாட்டுக் கடன்களாகும். ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைந்தமை காரணமாக செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடனின் அளவு அதிகரித்துள்ளது.

## உள்நாட்டு வெளிநாட்டு கடன் பெறுகைகள், கடன் தவணையும் வட்டியும் செலுத்துதல் மற்றும் அரசாங்க வருமானம்

2019 ஆம் ஆண்டில் உள்நாட்டு வெளிநாட்டு கடன் பெறுகைகள், கடன் தவணையும் வட்டியும் செலுத்துதல் மற்றும் அரசாங்க வருமானம் என்பன முன்னைய 05 ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே அட்டவணை 11 இல் தரப்பட்டுள்ளது.

| விபரம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் |
| **ஆண்டில் பெறப்பட்ட உள்நாட்டுக் கடன்*** | 2,020.23 | 2,793.43 | 2,517.78 | 2,548.63 | 2,718.43 | 2,648.13 |
| **ஆண்டில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்** | 422.54 | 556.37 | 574.25 | 601.31 | 771.61 | 935.10 |
| **ஆண்டில் பெறப்பட்ட மொத்தக் கடன்** | 2,442.77 | 3,349.80 | 3,092.03 | 3,149.93 | 3,490.04 | 3,583.33 |
| **உள்நாட்டு கடன் தவணைக் கொடுப்பனவு**** | 1,583.77 | 2,265.48 | 2,072.67 | 2,340.15 | 2,548.51 | 2,125.10 |
| **வெளிநாட்டு கடன் தவணைக் கொடுப்பனவு** | 106.98 | 187.11 | 145.12 | 219.35 | 307.01 | 572.34 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உள்நாட்டுக் கடன் வட்டிக் கொடுப்பனவு | 376.46 | 450.05 | 509.82 | 597.02 | 667.66 | 654.82 |
| வெளிநாட்டுக் கடன் வட்டிக் கொடுப்பனவு | 69.93 | 77.17 | 101.08 | 138.55 | 184.53 | 233.97 |
| கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவு | 2,137.14 | 2,979.82 | 2,828.68 | 3,295.06 | 3,707.72 | 3,586.23 |
| அரசாங்க வருமானம் | 1,127.03 | 1,394.24 | 1,698.75 | 1,845.02 | 1,935.09 | 1,907.20 |
| அரசாங்க வருமானத்தை விஞ்சிய கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவு | 1,010.11 | 1,585.58 | 1,129.92 | 1,450.04 | 1,772.62 | 1,679.03 |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தப் படுகடன் மீதி | 6,577.48 | 7,684.95 | 8,793.96 | 9,588.10 | 11,276.28 | 12,187.86 |

அட்டவணை 11 - உள்நாட்டு வெளிநாட்டு கடன் எடுப்பனவு, கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவு மற்றும் அரசின் வருமானம்

மூலம் :- அரசின் நிதிக்கூற்றுக்கள்

* ஆண்டில் பெற்றுக்கொண்ட உள்நாட்டுக் கடனில் திறைசேரி முறிகளை வழங்குவதன் மூலம் பெற்றுக்கொண்ட தொகையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

[மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி + (நிதிக் கூற்றுக்கள் குறிப்பு 13 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் பெற்றுக்கொண்ட உள்நாட்டுக் கடன் + திறைசேரி உண்டியல்களின் மூலம் தேறிய கடன் எடுப்பனவு)]

[உதாரணமாக மீளாய்வாண்டின் ரூபா 1,719.33+(1,067.68 - 138.87)=2,648.13 பில்லியன்]

** உள்நாட்டுக் கடன் கொடுப்பனவில் திறைசேரி முறிகளுக்காக ஆண்டில் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளும் உள்ளடங்கியுள்ளன.

[நிதிக் கூற்றுக்கள் குறிப்பு 14 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் திருப்பிச் செலுத்திய உள்நாட்டுக் கடன் + மீளாய்வாண்டில் திருப்பிச் செலுத்திய திறைசேரி உண்டியல்களின் பெறுமதி)]

[உதாரணமாக மீளாய்வாண்டின் ரூபா 544.65+1,580.45=2,125.10 பில்லியன்]

### அரசாங்க வருமானம் குறைவடைந்து கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவு அதிகரித்துள்ளமை

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மொத்த வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 27.90 மில்லியனால் அதாவது 1.44 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு ஒப்பாக ரூபா 453.40 பில்லியனால் அதாவது 19.21 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது தேறிய கடன் எடுத்தல் (உள்நாடு வெளிநாடு) ரூபா 251.29 பில்லியனால் அதிகரித்திருந்ததுடன் கடன் வட்டிக் கொடுப்பனவு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 36.60 பிலலியனால் அதாவது 4.29 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. விபரம் உரு 10 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு 10 - அரசின் வருமானம் குறைவடைந்து கடன் தவணை மற்றும் வட்டி அதிகரித்தமை

மூலம் :- அரசின் நிதிக்கூற்றுக்கள்

### கடன் தவணை மற்றும் ஆண்டிற்குரிய வட்டி கொடுப்பனவிற்கு அரசின் வருமானம் போதியதாக இல்லாமை

மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,907.20 பில்லியனாக இருந்த போதும் செலுத்த வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டி ரூபா 3,586 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டியில் 53.18 சதவீதத்தை மாத்திரம் செலுத்த சேகரிக்கப்பட்ட வருமானம் போதுமாக இருந்தது. அதன் பிரகாரம் ாக ரூபா 2,856 மற்றும் ரூபா 852 மி அரசின் வருமானத்தை மிகைத்து மேலும் ரூபா 3,708 பில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டியில் 46.82 சதவீதம் அதாவது ரூபா 1,679.03 பில்லியனை தீர்வுசெய்வதற்காக மீளாய்வாண்டின் போது உள்நாட் மற்றும் வெளிநாட்டு கடன் பெற்றுக்கொள்ள நேர்ந்திருந்தது.

பெற்றக்கொண்ட கடனை மிகைத்து கடன் தவணை மற்றம் வட்டிக் கொடுப்பனவு முன்னைய ஆண்டின் முழுமையான கடன் தவணை மற்றம் கடன் வட்டி கொடுப்பனவு, ஆண்டில் பெற்றுக்கொண்ட மொத்தக் கடன்களில் 106.23 சதவீதமாக இருந்ததுடன் அது மீளாய்வாண்டின் போது 100.08 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் ஆண்டில் பெற்றுக்கொண்ட மொத்தக்கடன், ஆண்டின் கடன் தவணை மற்றும் கடன் வட்டி கொடுப்பனவிற்கேனும் போதுமாக இருக்கவில்லை. அதன பிரகாரம் ஆண்டின் இறுதியில் மொத்த அரச கடன் மீதி மொத்தக் கடன் மீதி வருடக் கணக்காக் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றமை அவதானிக்கப்பட்டது.

### பெற்றுக்கொண்ட கடன் அபிவிருததி செயற்திட்டங்களுக்கு பயன்படுத்த முடியாமல் போனமை

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,187.86 பில்லியனான மொத்த அரச கடன் மீதி, ரூபா 15,600 பில்லியனான மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் 78.13 சதவீதமாக இருந்தது. இதன் பிரகாரம் நீண்டகாலமாக அரசினால் பெற்றுக்கொண்ட உள்நாட்டு வெளிநாட்டு கடன்களில் கருத்திற் கொள்ளக்கூடியளவு கடன் தவணை மற்றும் வட்டி மீள் கொடுப்பனவிற்காக பயனபடுத்தியிருந்தமையால் எதிர்பார்த்த பிரகாரம் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக போதியளவு முதலடோன்றை செய்ய முடியாமல் இருந்தது.

### அரசின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 152. பில்லியன் கடன் தொகை குறைத்து கணக்கிடப்பட்டிருந்தமை

- கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசினால் செலுத்த வேண்டிய அரச கடன் மீதி ரூபா 12.19 பில்லியனாக இருந்ததுடன் தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது கீழே

காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் ரூபா 701 பில்லியன் குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

- குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட திறைசேரி பிணை முறிகள் தொடர்பான கணக்கீட்டு கொள்கை 2016 ஆம் ஆண்டு முதல் சீராக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் திறைசேரி பிணை விநியோகத்தின் போது அவற்றின் தேறிய பெறுமதிக்குப் பதிலாக முகப்பு பெறுமதிக்கு கணக்கீடு செய்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட திறைசேரி பிணை முறிகளின் முகப்புப் பெறுமதி தொடர்ந்தும் கணக்குகளில் சீராக்கம் செய்யப்படாததன் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிதிக்கூற்றுக்களில் திறைசேரி பிணை முறிகளுக்கு உரிய மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 318 பில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

  - 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக அரசினால் பெற்றுக்கொண்ட கடன்களிலிருந்து ரூபா 172.72 பில்லியனான கடன் மீதி செலுத்த வேண்டியதாக இருந்தது. இது தொடர்பாக 2017 ஆகஸ்ட் மாதம் 04 ஆந் திகதி துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சினால் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக அரசினால் எடுக்கப்பட்ட கடன்களிலிருந்து மேலும் செலுத்த வேண்டிய மீதி மீளக் கொடுப்பனவு பொறுப்பு அக்கடன் உடன்படிக்கை அமுலாகும் திகதி முதல் அமுலாகும் வகையில் பொது திறைசேரியினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும் அக்கடன் மீதி குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அக்கடன் மீதி துறைமுக அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களிலிருந்தும் நீக்கப்பட்டிருந்தது.

  - கடன் இலக்கம் 2012033 - அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டம் - கட்டம் II இன் கீழ் 2019 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 8,16 பில்லியனான வெளிநாட்டு கடன் தொகை கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- 2019 ஆம் ஆண்டில் தீர்வையான 129 வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 176.84 பில்லியன் மற்றும் 19 வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2018 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் தீர்வையாகியிருந்த ரூபா 33.34 பில்லியனாக மொத்தம் ரூபா 210,19 பில்லியன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெளிநாட்டுக் கடனாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

- அரசின் நிதிக்கூற்றுக்களின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவு பெறுமதி ரூபா 572.34 பில்லியன் ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 29 (வெளிநாட்டுக் கடன் மீதிகள் கூற்று) இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவு பெறுமதி ரூபா 565,82 பில்லியன் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதற்குரிய குறிப்புக்களுக்கு இடையே வெளிநாட்டுக் கடன் மீள் கொடுப்பனவு பெறுமதியில் ரூபா 6.52 பில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

- அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த அரச கடன் மீதி ரூபா 12,187.86 பில்லியனாக இருந்த போதும் இலங்கை மத்திய வங்கியின் தகவல்களின் பிரகாரம் அத்திகதியில் அரச கடன் மீதி ரூபா 13,301.41 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் அரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி பேணப்படும் தகவல்களுக்கு பிரகாரம் அரச கடன்

மீதிகளுக்கு இடையே ரூபா 843.55 ஆன வேறுபாடு காணப்பட்டது.

- வெளிநாட்டுக் வள திணைக்களத்தின் 854-1 அறிக்கை மற்றும் அரசின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 29 வெளிநாட்டு கடன் மீதிகள் கூற்றுடன் ஒப்பிடும் போது நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 341 மில்லியன் குறைவாகவும் 05 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 2,049 மில்லியன் கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 02 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளுக்குரியதாக ரூபா 01 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

# அரச தொழில்முயற்சிகள்

அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் என்பது அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், ஏதேனும் எழுத்துருவிலான சட்டத்தின் மூலம் அரசிற்கு கையேற்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் வர்த்தக மற்றும் வர்த்தக நோக்கற்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பெரும்பான்மையாக அரசிற்குச் சொந்தமாக கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களாகும் என அறிமுகப்படுத்தலாம். அதற்கமைய, தமது பெயரில் உடன்படிக்கை செய்வதற்கு அதிகாரமுள்ள, வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி மற்றும் செயற்பாட்டு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள, இலாபமீட்டுதல் அல்லது கிரயத்தை ஈடுசெய்யும் விதத்தில் சாதாரண வணிகச் செயற்பாடுகளில் ஏனைய தரப்பினர்களிற்கு பொருட்கள் சேவைகளை விற்பனை செய்கின்ற மற்றும் அரசாங்கத் துறையிலுள்ள தரப்பினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனமாக அரசாங்க தொழில் முயற்சிகளிற்கு செயற்பட முடியும்.

அத்துடன், பொருட்கள் சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருமானங்களை உழைக்கின்ற அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் என இவற்றை அறிமுகப்படுத்தவும் முடிகின்றது. பயன்பாட்டுச் சேவைகளை வழங்குகின்ற வர்த்தக முயற்சிகளும் நிதி நிறுவனங்களும் பொது முயற்சிகளில் உள்ளடங்குகின்றன. சில அரசாங்க முயற்சிகள் சமூக சேவைகளை வழங்குவதற்கான பொறுப்புடன் குறித்த தரப்பினருக்கும் சமூகப் பிரிவினருக்கும் விலையினை அறவிடாது அல்லது குறிப்பிடத்தக்க குறைந்த கட்டணத்தின் கீழ் பொருட்கள் சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் செயற்பட்ட போதிலும், சாதாரணமாக இலாபமீட்டும் செயற்பாடாகவே உள்ளது. அதற்கமைய, அவற்றின் சொத்துக்களின் மீது திரும்பலொன்றை உழைத்தல் எதிர்கால அபிவிருத்திக்கு தேவையாக உள்ளது. ஒழுங்குபடுத்தல், மேம்படுத்தல் மற்றும் கல்விசார் அரசாங்க முயற்சிகள் பாரம்பரியமாக வர்த்தகத் துறையில் உள்ளடங்குவதில்லை என்பதுடன், அந்த முயற்சிகள் இலாபமீட்டாத அமைப்புக்கள் எனக் கருதப்படுவதுடன், இலாபத்தன்மை நீங்கலான ஏனைய நியதிகளைப் பயன்படுத்தி அவற்றின் செயலாற்றல்களை பரீட்சித்தல் வேண்டும். பின்வரும் தலைப்புக்களின் கீழ் இலங்கையிலுள்ள அரசாங்க தொழில் முயற்சிகளை விரிவாக வகைப்படுத்த முடியும்.

- விசேடவகை வணிக முயற்சிகள்
- நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்ட ரீதியற்ற நிதியங்கள்
- அரசுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
- ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணித்தல் நிறுவனங்கள்
- பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சியளித்தல் நிறுவனங்கள்
- ஏனைய அபிவிருத்தி மற்றும் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்த அவ்வாறான 416 அரசாங்க தொழில் முயற்சிகளின் தொகுப்பு கீழே உரு 11 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 11 – 2019 ஆம் ஆண்டில் அரச தொழில்முயற்சிகளின் தொகுப்பு

அதற்கமைய, மின்வலு, நீர், பெற்றொலிய உற்பத்திகள், தொலைத் தொடர்பு மற்றும் விமான சேவைகள் போன்ற பொருளாதாரத்தின் முக்கியமான பகுதிகள் பொது முயற்சிகளால் தந்திரோபாய ரீதியில் செயற்படுத்தப்படுகின்றன. பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த உரிமைத்துவம் மற்றும் போட்டித்தன்மை என்பன தொடர்பில் சகல அரசாங்க தொழில் முயற்சிகளினதும் நிறுவன ரீதியான கட்டுப்பாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

## செயலாற்றல் மதிப்பீடு

அரசாங்க தொழில் முயற்சிகளின் கணக்காய்வு என்பது நிதிசார் மற்றும் இணங்கியொழுகுதல் கணக்காய்வுகளுடன் மட்டும் வரையறுக்கப்பட்டவையல்ல ஆனால் அவற்றின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வினைத்திறன், சிக்கனம் மற்றும் பயனுறுதி என்பவற்றையும் கருத்திற் கொண்டதாகும்.

அரசாங்க தொழில் முயற்சிகளின் வினைத்திறன் மற்றும் பயனுறுதி மீதான கணக்காய்வு சில நியமங்கள் மற்றும் பிரமாணங்களின் அடிப்படையில் நடாத்தப்படுகின்றன. இலாபமே செயலாற்றலின் பிரதானமான பிரமாணம் அல்ல என்பதுடன் பொது நிதிகளின் சிக்கனமான மற்றும் வினைத்திறனான பயன்பாடு மற்றும் குறிக்கோள்களை அடைதல் என்பன மீது முகாமைத்துவத்தின் செயலாற்றல் மிக முக்கியமானதாகும். குறிக்கோள்களில் அரசாங்க தொழில் முயற்சிக்குப் தொழில் முயற்சி வேறுபடுகின்றது. எந்தக் குறிக்கோள்களிற்காக ஒரு அரசாங்க தொழில் முயற்சி நிறுவப்பட்டதோ அதன் அளவுக்குக் கொண்டுவருவதற்காக அரசாங்க தொழில் முயற்சியின் நிதி மதிப்பீட்டுப் பகுப்பாய்வு செயற்படுத்தப்படுகின்றது. கணக்காய்வின் முதற்தர கடமைகளில் ஒன்று, ஒரு அரசாங்க தொழில் முயற்சியின் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கான பிரமாணத்தை இனங்காணுவதாகும். உதாரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற உற்பத்தி முயற்சியின் விடயத்தில குறிக்கோள் மற்றும் முதலீட்டு இயலளவு, கிரயங்கள் மற்றும் காலப்பட்டியல்கள், நுகர்ச்சியின் சாதாரண அளவுகள், விளைவு, உற்பத்தித்திறன், கிரமான வருவாயின் வீதம் போன்றன செயலாற்றலை அளவிடுவதற்கான அளவுகோலாக காணப்படுகின்றன. அரசாங்க தொழில் முயற்சிகளிடமுள்ள நீண்டகால மற்றும் குறுங்கால மூலதனத்தினதும் செயற்பாட்டு திட்டங்களினதும் செயலாற்றலை மதிப்பீடு செய்தல் ஏனைய முக்கியமான பண்புகளாகும்.

பௌதீக செயலாற்றலை மதிப்பாய்வு செய்கையில் பொருத்தமான சூழ்நிலையில் நிறுவனத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட இயலளவு ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகோலாக உள்ளது. எவ்வாறிருந்த போதிலும், தரப்படுத்தப்பட்ட இயலளவைப் பயன்படுத்துவது, மூலப்பொருட்கள், மற்றும் பயன்பாட்டுச் சேவைகள், விளைவுகள் மற்றும் நிராகரித்தல் அதேபோல பேணுதல் என்பவற்றுக்கான பொருத்தமான பராமரிப்பு மற்றும் நுகர்ச்சியுடன் சேர்த்து

மதிப்பிடப்படுகின்றது. செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கான இன்னொரு முக்கிய பயன்பாடு, நுகர்வுகள், உற்பத்தித் திறன், விளைவுகள் முதலியவற்றின் நியமான அளவின் அடைப்படையில் நியம அல்லது இலக்குக் கிரயத்தை தீர்மானிப்பதாகும். நிறுவனக் கட்டுப்பாடு, பொது முகாமைத்துவம், நிதிமுகாமைத்துவம், கொள்வனவு முகாமைத்துவம், நிர்மாண முகாமைத்துவம் போன்றவை தொடர்பாக பொது முயற்சிகளால் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டல்கள் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ளதுடன், இந்த வழிகாட்டல்கள் முயற்சியின் செயலாற்றல் மற்றும் முறைமைகளை மதிப்பீடு செய்வதற்கான இன்னொரு அடிப்படையை வழங்குகின்றது. உள்ளக மற்றும் புறநிலை நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய தொழில்நுட்பக் கற்கைகள் மற்றும் நியமங்கள் இந்த வழிகாட்டல்களிற்கு அடிப்படையிலமைந்த ஏனைய நியதிகளாக உள்ளன.

செயலாற்றல் கணக்காய்வு நடைமுறைத் தேவையாக உள்ளது. நிதிக் கணக்காய்வில் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்குகளின் சரியான தன்மை தொடர்பில் சான்றுறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இருப்பினும் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சித்தல் செயலாற்றல் கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## நிதிச் செயலாற்றல்

பொதுத் துறைச் செயற்பாடுகளின் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில் பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ள துறைகளில் ஈடுபட்டுள்ள அநேக அரச தொழில் முயற்சிகள் நட்டத்தில் இயங்குகின்றமை அவதானிக்கப்படுகின்றது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 254 அரச தொழில் முயற்சிகளிற்குரிய நட்ட நிலைமைப் பகுப்பாய்வு கீழே உரு 12 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 12 – 2019 ஆம் ஆண்டில் அரச தொழில் முயற்சிகளின் இலாப நட்டப் பகுப்பாய்வு

மேற்படி தகவல்களின் படி, அரசாங்க தொழில் முயற்சிகளின் நட்டத்தின் மொத்த அளவு ரூபா 102 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இலாபத்தின் மொத்த அளவு ரூபா 260 பில்லியனாகும். அதற்கமைய, அரசாங்க தொழில் முயற்சிகளின் இலாபத்தின் தேறிய அளவு ரூபா 158 பில்லியனாகும். நிதித் தகவல்களைச் சமர்ப்பித்திருந்த 254 நிறுவனங்களில் 92 நிறுவனங்கள் பற்றாக்குறையுடன் கூடிய நிறுவனங்களாகக் காணப்பட்டதுடன் 162 நிறுவனங்கள் மிகையினைக் காண்பித்தன. குறிப்பிடத்தக்களவு நிதிப் பற்றாக்குறையுடைய நிறுவனங்களாக இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட இலங்கை விமான சேவைகள் கம்பனி மற்றும் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட 25 நிறுவனங்கள் என்பன காணப்பட்டன. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச தொழில் முயற்சிகளினால்

கட்டுப்படுத்தப்படுகின்ற மொத்தச் சொத்துக்களின் அளவு ரூபா 11,354 பில்லியனாகக் காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது ரூபா 489 பில்லியன் அதிகரிப்பாகும். ஒவ்வொரு வகைக்கும் உட்பட்ட 254 பொது முயற்சிகளின் மொத்தச் சொத்துக்களின் தொகுப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே உரு 13 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 13 - 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அரச முயற்சிகளின் மொத்தச் சொத்து

## நிலைபேறான அபிவிருத்தி

இயற்கை வளங்களின் விரைவான நுகர்வானது எதிர்கால சந்ததியினர் வளங்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் அளவிற்கு இட்டுச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. அவ்வாறே வளங்களின் நுகர்வின் பக்க விளைவாகவுள்ள கழிவுகள் சுற்றாடலின் சமநிலைக்கு அச்சுறுத்தலாக உருவாகியுள்ளன. கட்டாய பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடலின் நிலைபேறான தன்மை என்பன நிலைபேறான அபிவிருத்தி என்ற கருத்தில் மையப்படுத்தப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பரஸ்பர ரீதியில் இருக்க வேண்டும் என்பதுடன் அதற்காக முழு உலகமும் கவனஞ்செலுத்த வேண்டும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

சுற்றாடல் அபிவிருத்தி மீதான உலக அமைப்பால் குறிப்பிடப்பட்டவாறு அடிப்படை மனித தேவைகளை பூர்த்திசெய்தல், மனித வாழ்க்கைத்தரத்தை உயர்த்தல், சுற்றாடலைப் பாதுகாத்தல், உற்பத்திதிறனை உயர்த்தல் நிலைபேறான அபிவிருத்தியின் முதல் தர நோக்கங்களாக உள்ளடக்கப்படுகின்றது. அதனால், நிலைபேறான அபிவிருத்தி எண்ணக்கருவானது எதிர்கால சந்ததியினர் அவர்களுடைய தேவைப்பாடுகளை எதிர்கொள்ளும் வகையில் சாத்தியங்களை பேணுவதோடு மனிதர்களால் உயிரிண பல்லினத்தை பயன்படுத்தல் மற்றும் முகாமை செய்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

வித்தியாசமான பொருளாதார, சமூக மற்றும் சூழல் பின்னணியினைக் கொண்டு, ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கின்ற உறுப்பு நாடுகள் 2030 ஆம் ஆண்டளவில் சமநிலையினை அடைதல் வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள எண்ணக்கருவே நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாகும். இது தொடர்பில் 2015 செப்தெம்பரில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி உச்சிமாநாட்டில் பங்கெடுத்த அரச தலைவர்கள் அதற்கான இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தியிருந்தனர். நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சித்திட்டமானது இது தொடர்பில் அடிப்படையாகவிருந்ததுடன், இது மனித நேயம், புவி மற்றும் சௌபாக்யம் போன்றவற்றை இலக்காகக் கொண்டு அனைத்து உறுப்பு நாடுகளினாலும் அமுல்படுத்த வேண்டிய பொதுவான பிரகடனமாக உள்ளது. ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடாகவுள்ள இலங்கையானது இந்த பொதுவாக பிரகடனத்தை கட்டாயமாக

அமுல்படுத்த வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது. இதனால் 2017 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனங்கள் இந்த பொதுவான பிரகடன எண்ணக்கருவினை அமுலாக்கலின் செயல்முன்னேற்றம் பரீட்சிக்கப்பட்டது. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அதற்கான செயல்முன்னேற்றம் போன்றவற்றை அடைந்து கொள்வதற்காக அரச நிறுவனங்களின் தயார்நிலை தொடர்பில் அரச கணக்காய்வுகள் மற்றும் அறிக்கையிடலின் போது முக்கியமாக கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

அரசாங்க தொழில் முயற்சிகளின் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசோட்டக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தகவல்களின் பொழிப்பு என்பவற்றை உள்ளடக்கியதாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. நிறுவனங்களின் நிலைவரத்தினை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றனவா என்பது பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுதந்திரமான உறுதிப்படுத்தலை வழங்குகின்றார். நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதன் மூலம் இந்த உறுதிமொழி வழங்கப்படுகின்றது. அரசாங்க தொழில் முயற்சிகளின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் என்பன நிதிக்கூற்றுக்கள் ஊடாக நியாயாபூர்வமாக பிரதிநிதித்துவப்படுகின்றனவா அல்லது இல்லையா என்பது பற்றியும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் அல்லது சம்பந்தப்பட்ட சர்வதேச கணக்கீட்டு நியாயங்களுடன் இணங்கியதாகவுள்ள இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் அல்லது நிதி அறிக்கையிடும் நியமங்களுடன் இணங்கிய வகையில் அவை உள்ளனவா அல்லது இல்லையா என்பது பற்றியுமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவு அபிப்பிராயத்தினால் வெளிப்படுத்தப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களில் பொருட்படுத்தக்கூடிய தவறுகள் அல்லது இணக்கமின்மை மற்றும் நோக்கெல்லை வரையறைகளும் கணக்காய்வின் போது முகாமைத்துவத்திற்கும் கணக்காய்வாளருக்கும் இடையே எழுகின்ற இனக்கமிண்மைகளைக் கருத்திற்கொண்ட பின்னர் நான்கு வகையான கணக்காய்வு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவையாவன

### முனைப்பழியற்ற அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இனக்கமின்மைகள் காணப்படாதவிடத்து வழங்கப்படுகின்றது.

### முனைப்பழியுள்ள அபிப்பிராயம் (தவிர்த்த அபிப்பிராயம்)

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இனக்கமின்மைகள் காணப்படுமிடத்தும் அவை நிறுவனத்தின் நிதி விளைவினை திரிவுபடுத்தப்படுமளவிற்கு தாக்கம் செலுத்தாதிருப்பின் வழங்கப்படுகின்றது.

### பாதகமான அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு முடியாதவாறு நோக்கெல்லை வரையறுக்கப்பட்டிருப்பின் இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

### மறுப்பு அபிப்பிராயம்

தெரிவிசெய்யப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், அவை கையாளப்பட்ட முறை அல்லது நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மை போன்ற விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கும் கணக்காய்விற்கும் இடையே பொருண்மையான / புருடத்துவ இனக்கமின்மை மற்றும் தவறான கூற்றுக்கள் காணப்படுமிடத்து இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கையில் அது மிகவும் நியாயமானதாக காணப்படுவதற்காக கணக்காய்வின் போது பயன்படுத்த முடியுமான கணனிமுறைக் கணக்காய்வு மென்பொருளினதும் உதவி பெற்றுக்கொள்ளப்படுகின்றது. கணக்குகளை பரிசோதித்து பெற்றுக்கொள்ளடுகின்ற மாதிரிகளின் அடிப்படையிலும் ஒட்டுமொத்த பொருண்மையான விடயங்களின் சதவீதமாக திருத்தப்படாதுள்ள தவறான கூற்றுக்களின் கூட்டுத்தொகை சீராக்கப்பட்டு அதன் விளைவின் அடிப்படையிலும் கணக்காய்வு அபிப்பிராயம் தீர்மானிக்கப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டிற்காக 416 அரசாங்கத் தொழில் முயற்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் மீது வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழேயுள்ள அட்டவணை 12 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகை | 2019 | 2018 |
|---|---|---|
| முனைப்பழியற்ற | 62 | 90 |
| முனைப்பழியுள்ள | 110 | 176 |
| மறுப்பு | 7 | 17 |
| பாதகமான | 4 | 8 |
| இதுவரை தீர்மானிக்கப்படாதவை | 71 | 14 |
| தகவல்கள் சமர்ப்பிக்கப்படாதவை | 162 | 111 |

அட்டவணை 12 – கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள்

## நிலையான சொத்துக்களின் பதிவேடுகளின் பேணுகை

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் எனப்படுவது உற்பத்தியின் போது அல்லது சேவை வழங்கலின் போது பயன்படுத்தப்படுகின்ற மற்றும் ஏனைய தரப்பினருக்கு வாடகைக்கு விடுவதற்காக அல்லது நிர்வாக நடவடிக்கைகளிற்காக வைத்திருக்கப்பட்டுள்ள சொத்துக்களாவதுடன் அச் சொத்துக்கள் ஒரு அறிக்கையிடல் காலத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதிக்கு பயன்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற நிலையான சொத்துக்களாகும். அத்துடன், நடைமுறைச் சொத்துக்கள் எனப்படுபவை செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அல்லது அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னர் பன்னிரண்டு மாத காலத்தில் தேறுமென எதிர்பார்க்கப்படுகின்ற சொத்துக்களாகும். சகல நிலையான சொத்துக்களிற்கும் திருத்தமாக இலக்கமிட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை உரியவாறு பேணாதிருப்பின் சொத்துக்களை சரிவர இனங்காண்பதற்கு முடியாது போவதுடன், அவை தொடர்பான பௌதீக மெய்மையாய்வும் தோல்வியில் முடியவடைகின்றமை அவதானிக்கப்பட்டது. ஒவ்வொரு நிலையான சொத்து தொடர்பான விபரங்களை வைத்திருக்கும் நடைமுறையால் சொத்துக்களின் கட்டுப்பாடு உறுதிப்படுத்தப்படுவதுடன் சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்படுவதனை தடுப்பதற்கும் நிறுவனத்திற்கு உதவியாக அமைகின்றது. பெறுமானத்தேய்வை கணிப்பீடு செய்தல், குத்தகை மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளிற்காக வசதியளித்து சொத்துக்களின் சரியான பெறுமதியினை வைத்திருக்கும் செயற்பாடாகவும் உள்ளது. நிலையான சொத்துப் பதிவேடு முகாமைத்துவத்தின் தேவைகளுக்கு உகந்த வகையில் சரியான பூரணமான மற்றும் விளக்கமான அறிக்கைகளை உருவாக்குகின்றது. கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு உரித்தாக அல்லது அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள பணங்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக பேணப்படுவதற்கு போதியளவில் முறைப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனையும் அவை அவ்வப்போது மெய்மையாய்வு செய்யப்படுவதனையும் உரிய பிரமாணங்கள்

மற்றும் அறிவுறுத்தல்களிற்கு இணங்குகின்றன என்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். இருப்பினும் அநேக நிறுவனங்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பேணாதிருப்பதுடன், நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வினையும் மேற்கொள்ளாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

அநேக அரசாங்க தொழில் முயற்சிகளில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் மற்றும் சொத்துக்கள் விளைவற்று வைக்கப்பட்டுள்ளதுடன் அச்சொத்துக்கள் 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்க்கப்படாமை காரணமாக அப்பொருட்களும் சொத்துக்களும் விற்பனை செய்யப்படுவதன் மூலம் கிடைக்கக் கூடியதாகவுள்ள வருமானம் அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்ததுடன் அப்பொருட்களைப் பாதுகாப்பதற்கும் களஞ்சியப்படுத்துவதற்கும் மேலதிக கிரயம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் வரைவு ஆண்டறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எனினும், 2019 ஆம் ஆண்டிற்காக 162 பொது முயற்சிகள் தமது நிதிக்கூற்றுக்களை 2020 செப்தெம்பர் 30 வரையிலும் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்தால் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனமொன்றால் பங்கு மூலதனத்தில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட உரிமைத்துவத்தைக் கொண்டுள்ள கம்பனிகளின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்களும் வேறு தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் தகவல்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குக் கிடைக்கப்பெற்று மூன்று மாதத்திற்குள், அவற்றின் வருடாந்த அறிக்கைகளுடன் பிரசுரிப்பதற்காக அந்த கூட்டுத்தாபனத்திற்கு அல்லது கம்பனியின் ஆளுகைச் சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அவரது அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## தொழில்சார் பதவியணியினை ஆட்சேர்ப்பதற்கும் வைத்துக்கொள்வதற்கும் சுதந்திரமின்மை

வர்த்தக தீர்மானங்களை மேற்கொள்கையிலும் பயிற்சிபெற்ற பதவியணியினரை சேர்த்துக்கொள்ளல் மற்றும் தக்கவைத்துக் கொள்கையிலும் தாக்கம் செலுத்துகின்ற பல்வேறு அங்கீகார தேவைப்பாடுகள் பணிப்பாளர் சபையின் செயற்பாடுகளிற்கு பாதகமாக தாக்கம் செலுத்துகின்றன. இந்த வரையறைகள் காரணமாக அதிகமான முயற்சிகள் உயர்ந்த சம்பளங்ளுடன் ஒப்பந்த அடிப்படையில் உயர் தொழிலாளர்களை சேர்த்துக்கொள்கின்றமை அவதானிக்கப்பட்டது. தனியார் துறையுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த சம்பள அளவுத்திட்டம் காரணமாக விசேடமாக கணக்காளர்கள், பொறியியலாளர்கள் விலைமதிப்பீட்டாளர்கள் போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கும் தொழில்சார் தகுதி வாய்ந்தவர்களை தக்கவைத்துக் கொள்வதற்கும் பொது முயற்சிகள் பெரும் போராட்டத்தில் ஈடுபடுகின்றன.

## அரசாங்கத்திற்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள்

அரசாங்க தொழில் முயற்சிகளாக அரசாங்கத்திற்குச் சொந்தமான பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள் சிலவும் நாட்டில் உள்ளன. அக் கம்பனிகளின் பங்குகளின் பெரும் பகுதி அரசாங்கத்திற்கு சொந்தமாக உள்ளது. இந்தக் கம்பனிகள் கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் இந்தக் கம்பனிகள் சிலவேளை முற்றாக அரசாங்கத்திற்கு சொந்தமானதாகவோ அல்லது பொது தனியார் கூட்டுமுயற்சியாக செயற்படுகின்ற பங்குமூலதனத்தில் குறித்த சதவீதம் அரசாங்கத்திற்குச் சொந்தமாகக் கொண்டவையாகும். முழுமையாக அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சிகளைச் சூழ்ந்துள்ள பிரச்சினைகளில் பலவற்றைத் தவிர்ப்பதற்கு தனியார் துறையின் ஈடுபாடு கட்டுப்பாட்டுக் கருவியாக

செயற்படுத்தப்படுகின்றது. பொதுத் திறைசேரியின் பங்குபற்றுதலின்றி குறித்த தனியார் முயற்சியினால் மூலதனம் ஈடுபடுத்தப்படுகின்ற துணைக் கம்பனி அல்லது உப கம்பனியாக பொது முயற்சிகளினால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனிகளும் காணப்படுகின்றன.

பங்குகளில் 100 சதவீதம் அரசாங்கத்திற்கோ அல்லது ஒரு பொது முயற்சிக்கோ உடைமையாக உள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர்களை நியமிப்பதற்கான அதிகாரம் அரசாங்கத்திற்கு உள்ளதுடன் இலாபத்தில் பங்கு பெறுவதற்கு தனியாள் எவருக்கும் உரித்தில்லை. அது உண்மையில் அரசாங்க கூட்டுத்தாபனமொன்று என்ற வகையில் அரசாங்கத்தினால் பங்குகள் சாதாரணமாக விற்பனை செய்யப்படுவதன் மூலம் சாதாரண “தனியார் துறை” கம்பனியாக அதனை மாற்றுவதில், போதுமானதாக இருப்பதனை ஒத்திருக்கும். பங்குகளில் 50 சதவீதத்திலும் குறைவாக விற்பனை செய்கையில் கூட கம்பனியின் பணிப்பாளர்களை நியமிப்பதற்கான அதிகாரம் அரசாங்கத்திடமே உள்ளது. 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகள் விற்பனை செய்யப்படுகையிலும் கூட அரசாங்க தாபனக் கொள்கைகளிற்கு செல்வாக்குச் செலுத்துவதற்கு போதுமானளவு அதிகாரம் உள்ளது. எனினும் அதிகளவான பொதுக் கூட்டுத்தாபனங்கள் துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையில் பெரும்பான்மையானோரை அதன் அங்கத்தவர்களைக் கொண்டு உருவாக்குகின்ற போதிலும் அவற்றின் கட்டுப்பாட்டு அதிகாரத்தை நிர்வாகத்திற்காக நடைமுறைப்படுத்துவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

அரசாங்க தொழில் முயற்சிகளின் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் கட்டுப்பட்டிற்காக அரச முயற்சிகள் திணைக்களத்தினால் அவ்வப்போது பீஈடீ சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன், அவற்றிலுள்ள சில தீர்மானங்களை அமுல்படுத்துவதற்காக தொழில் முயற்சிகள் நிதி அமைச்சின் ஒத்திசைவினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு ஒத்திசைவினைப் பெற்றுக்கொள்ளாது தீர்மானங்களை அமுல்படுத்தியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## ஏனைய இலாப நோக்கற்ற அரசாங்க தொழில் முயற்சிகள்

ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள், பல்கலைக்கழங்கள் ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சி நிறுவகங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் என்பவற்றைக் கொண்டதாக இந்த முயற்சிகள் உள்ளன. இந்த நிறுவனங்களின் பிரதான வருமான மூலமாக இருப்பது வருடாந்த அரசாங்க மானியம் அல்லது சில பொருட்கள் மற்றும் சேவைகளில் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட வரியாகும்.

# உள்ளூராட்சி

இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள 341 உள்ளூராட்சி நிறுவனங்களில் 24 மாநகர சபைகள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252ஆம் பந்தி) ஒழுங்கு விதிகளின் மூலமும், 41 நகரசபைகள் நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் (255ஆம் பந்தி) ஒழுங்கு விதிகளின் மூலமும், 276 பிரதேச சபைகள் 1987 இன் 15 ஆம் இலக்கப் பிரதேசச் சபை ஒழுங்கு விதிகளின் மூலம் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருவதுடன், இந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்று தொடர்பாக வழங்கப்பட்ட கணக்காய்வு கருத்து தொடர்பான சாராம்சம் அட்டவணை 13 இல் காட்டப்பட்டுள்ளது.

| உள்ளூராட்சி நிறுவன வகை | கணக்கு சமர்ப்பிக்க வேண்டிய சபைகளின் எண்ணிக்கை | 2020.08.15 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பித்த கணக்கு எண்ணிக்கை | கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட சபைகளின் எண்ணிக்கை | 2020.08.15 ஆம் திகதியில் வழங்கப்பட்டுள்ள அறிக்கைகளின்படி கணக்காய்வு அபிப்பிராயம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிலைமை கணக்கிடப்பட்டவை | நிலைமை கணக்கிடப்படாதை வ | கருத்துக்களின் நகல் | பகுதியான கருத்து |
| மாநகர சபை | 24 | 24 | 19 | 16 | - | - | 03 |
| நகர சபை | 41 | 40 | 37 | 37 | - | - | - |
| பிரதேச சபை | 276 | 275 | 264 | 251 | 04 | 01 | 08 |
| **மொத்தம்** | **341** | **339** | **320** | **304** | **04** | **01** | **11** |

அட்டவணை 13 – உள்ளூராட்சி நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்று மற்றும் வழங்கப்பட்ட கணக்காய்வுக் அபிப்பிராயங்கள்

மூலம் - தேசிய கணக்காய்வு அலுவலகம்

உள்ளூராட்சி அதிகாரசபையின் நிதிக்கூற்று தொடர்பான கணக்காய்வு அறிக்கைகளினால் வெளிப்படுத்தப்பட்டள்ள முக்கிய அவதானிப்புகள் பல தொகுக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

- புளத்கொஹுபிடிய பிரதேச சபையின் ரூபா.1.30 மில்லியன் பெறுமதியான கப் வாகனமொன்றும் மற்றும் ரூபா.2.65 மில்லியன் பெறுமதியான ட்ரக்டரொன்றும் சுமார் 4 வருட காலம் தொட்டும், ரூபா.6.22 மில்லியன் பெறுமதியான குப்பை கம்பெக்டர் வானமொன்று சுமார் ஒரு வருட காலம் தொட்டும், பிரதேச அலுவலக வளாகத்தில் செயற்பாடின்றி காணப்படுகின்றது.

- 2011 ஆம் ஆண்டில் எம்பிலிபிட்டிய பிரதேச சபையினால் மகநெகும செயற்றிட்டத்தின் கீழ் 07 வீதி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. அந்த 07 செயற்றிட்டங்களின் நடவடிக்கை சமூகம் சார்ந்த அமைப்பு மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. அந்த நிர்மாண நடவடிக்கைக்குத் தேவையான கூழாங்கற்கள் வழங்கும் ஒப்பந்தத்தை எம்பிலிப்பிட்டிய பிரதேசச் சபையின் தலைவரினால் சபையின் அனுமதியின்றி தனியார் கம்பனியொன்றிடம் ஒப்படைத்து அதற்கான ஒப்பந்தங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. குறித்த ஒப்பந்தக்காரரினால் சமூகம் சார்ந்த அமைப்பிற்கு கூழாங்கற்கள் வழங்கியிருந்ததோடு அதற்காக பிரதேச சபையினால் ஒப்பந்தகார கம்பனிக்கு ரூபா.2.09 மில்லியன் செலுத்தப்பட வேண்டியிருந்தது. 04 கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட கூழாங்கற்களுக்காக ரூபா.1.31 மில்லியன் செலுத்தப்படாத காரணத்தால் குறித்த கம்பனியால் சபைக்கு எதிராக நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த 04 கைத்தொழில்களை நடைமுறைப்படுத்திய சமூகம் சார்ந்த அமைப்பினால் கைத்தொழிலினை நிறைவு செய்து இறுதி

விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், சபையினால் அந்த விலைப்பட்டியல் மற்றும் பிடித்து வைக்கப்பட்ட தொகையும் சமூகம் சார்ந்த அமைப்பிற்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்தக் கைத்தொழிலுக்கு ஒப்பந்தக்கார கம்பனியால் வழங்கப்பட்டிருந்த கூழாங்கற்களின் பெறுமதியினை அந்த விலைப்பட்டியல் பெறுமதிகளிலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

- ஏலஹர பிரதேச சபையினால் துாரசேவைப் பேருந்து நிறுத்துமிடமொன்றும் மற்றும் வியாபாரக் கட்டிடத் தொகுதியொன்றும் நிர்மாணிக்கும் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குப் பிரதேச சபையின் அனுமதி மற்றும் சாத்தியக்கூற்று ஆய்வு இன்றி கருங் கல்லொன்றை தகர்த்து அகற்றுவதற்கு ரூபா.15.67 மில்லியன் பலனற்ற செலவு செய்யப்பட்டிருந்தது.

- ஹிங்குரக்கொடை பிரதேச சபை குத்தகை வசதி அடிப்படையில் பெற்றுக் கொண்டிருந்த கப் வாகனமொன்று 2015 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகி இருந்தது. வாகனத்திற்காக ரூபா. 6.30 மில்லியன் முழுக் காப்புறுதி நட்டஈடு கிடைக்க வேண்டி இருந்தது. அதில் காப்புறுதி நிறுவனத்தினால் ரூபா.3.30 மில்லியன் காப்புறுதி நட்டஈடு சபைக்கு செலுத்தி இருந்ததுடன், சபையினால் அந்தக் தொகையை எவ்வித பிரதிபலனுமின்றி வங்கி நடைமுறைக் கணக்கிலிட்டு வைத்திருந்தது. வாகன விபத்துக்காக காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய ரூபா.3.00 மில்லியன் காப்புறுதி நட்டஈட்டினைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

- ஹிங்குரக்கொடை பிரதேச சபையின் புதிய வியாபாரக் கட்டிடத் தொகுதியில் 24 கடைகளிலிருந்து மீளாய்வு ஆண்டுக்கு அறவிடப்பட்ட வேண்டியிருந்த ரூபா.1.95 மில்லியனான வாடகை வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. அந்தக் கடைகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா.627,978 பிணைத் தொகையினை விஞ்சி வருமான நிலுவை காணப்பட்டமையால் பிணைத் தொகையின் மூலம் நிலுவை வருமானத்தினை அறவிட்டுக் கொள்ள சபைக்கு முடியாதிருந்தது.

- மதிரிகிரிய பிரதேச சபையின் சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைப் பாதையை முன்னேற்றும் செயற்றிட்டத்தில் பிரதேசசபை இடைக் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் திவுலன்கடவல வாரச்சந்தை ரூபா.2.25 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 5 வருட காலமாக அந்த வாரச் சந்தை முற்றாகச் செயற்படாது காணப்பட்டது.

- வெலிகந்த பிரதேச சபையின் 16 கடைகளுக்கு மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மாதாந்த வாடகை மதிப்பீட்டிற்கமைய வாடகை அறவிடப்படாமையால் 2018 மே மாதம் தொடக்கம் 2019 திசெம்பர் மாதம் வரையிலும் ரூபா.910,000 நட்டம் ஏற்பட்டிருந்தது.

- புத்தல பிரதேச சபையின் வாரச் சந்தை, மாட்டிறைச்சிக்கடை மற்றும் கோழி இறைச்சிக் கடை உள்ளிட்ட 06 சொத்துக்கள் 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையிலும் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா.1.18 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- புத்தல பிரதேச சபை அதிகாரம் பிரதேசத்தினுள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள 182 விளம்பரப் பலகைகளுக்கான முன்னைய ஆண்டில் அறவிடப்பட்டிருக்க வேண்டிய ரூபா.819,100 அறவிடப்பட்டிருக்கவில்லை.

- மதகம பிரதேச சபையில் நீண்டகாலமாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 142 கடைகளின் மாதாந்த குத்தகை அறவிடுகையில், ஊவா மாகாண பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கிடைத்திருக்க வேண்டிய ரூபா.11.06 மில்லியன் வருமானத்தை சபையின் நிதி இழந்திருந்தது.

- தணமல்வில பிரதேச சபைக்குச் சொந்தமான இறைச்சிக் கடை மீன் கடை மற்றும் வாராந்த சந்தை குத்தகைக்குக் கொடுப்பதன் மூலம் 10 வருடங்களுக்கும் அதிகமான காலம் தொட்டு அறவிடப்பட

வேண்டிய ரூபா.768,277 நிலுவைக் குத்தைகைத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

- மகவ பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியில் கடைகள் மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டு 2016 செப்டெம்பர் 22 ஆம் திகதி குருணாகல் மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தன. நகர சபையினால் அந்தக் கடைகளின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததால் குறைந்தது ரூபா.2.58 மில்லியன் வருமானத்தை சபை இழந்திருந்தது.

- மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் நிதியினைப் பெற்றுக் கொண்டு குருணாகல் மாநகர சபையினால் சுமார் ரூபா.8.00 மில்லியன் செலவிடப்பட்டு, பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் மறுசுழற்சிச் செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டில் பிளாஸ்டிக்கைத் துண்டுகளாக்குதல் மற்றும் பிளாஸ்டிக்கை உருவாக்குவதற்கு 02 இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டில் அந்த இயந்திரங்கள் செயலிழந்த நிலைக்கு உள்ளாகி இருந்ததுடன், மீண்டும் திருத்தப்பட்டு இருந்தன. நகரசபையினால் செயற்றிட்டம் செயற்படுத்தப்படாமையால் செலவிடப்பட்ட தொகையானது பலனற்று இருந்தது.

- 2014 ஆம் ஆண்டில் வெளி நிறுவனமொன்றில் வழங்கப்பட்ட ரூபா.3.05 மில்லியன் மானியத்தினை உபயோகித்து குருணாகல் மாநகர சபையினால், சபையின் சந்தை நிலத்தில் 70 கன மீற்றர் கொள்திறன் கொண்ட உயிர்வாயு அலகொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2020 மே 31 ஆம் திகதி வரையிலும் அந்த அலகினால் எவ்வித பிரதிபலனையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது செயலற்றுக் காணப்பட்டது.

- மீளாய்வு ஆண்டின் இறுதியில் குருணாகல் மாநகர சபையில் நீர் வருமான நிலுவையாக ரூபா.61.00 மில்லியன் இருந்தது. அந்த நிலுவை வருமானத்தின் ரூபா.100,000 இற்கு அதிகமான நிலுவை காணப்படும் 27 நீர் பாவனையாளரிடம் ரூபா.13.54 நிலுவை வருமானம் காணப்பட்டது.

- நாத்தாண்டிய பிரதேச சபையினால் இறைச்சிக் கூடமொன்று நிர்மாணிப்பதற்கு 2002 ஆம் ஆண்டில் 04 நபர்களுக்கும் பெற்றுக் கொடுத்த ரூபா.600,000 தொகையினை அந்த நபர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2016 ஒக்டோபர் 13 ஆம் திகதி இடம்பெற்ற மாகாணக் கணக்குத் தொடர்பாக செயற்குழுவினால் குறித்த கொடுப்பனவுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அந்தப் பணத்தினை அறவிடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2020 மே 31 ஆம் திகதி வரையிலும் அந்தப் பணத்தினை அறவிடுவதற்குச் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- வனாதவில்லுவ பிரதேச சபையினால் ரூபா.4.24 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கொம்போஸ்ட் செயற்களத்தில் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது.

- கருவலகஸ்வெவ பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டில் ரூபா.5.00 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட நீலபம்ம விடுமுறை வாசஸ்தலமும், 2014 ஆம் ஆண்டில் ரூபா.10.00 மில்லியன் மற்றும் ரூபா.3.00 மில்லியன் என செலவிட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த வாராந்த சந்தைக் கட்டிடங்களும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் எவ்விதமான பயன்பாடுமின்றி செயலிழந்து காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு அலகும் செயற்பாடின்றிக் காணப்படுகின்றது.

- சூரியவெவ பிரதேச சபையினால் மீளாய்வு ஆண்டு இறுதியளவில் நீர் பாவனையாளர்கள் 75 பேரிடம் நீர்க் கட்டணமாக ரூபா.75.11 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- 2015 ஆம் ஆண்டில் ரூபா.9.98 மில்லியன் பெறுமதியான கட்டுவன வாராந்த சந்தைக் கட்டடம் மற்றும் கிரம பேருந்துக் தரிப்பிடக்

கடைகள் 05 வருடங்களாக முற்றாக செயற்படாது காணப்பட்டது.

- 2016 ஆம் ஆண்டில் நாகொடை பிரதேச சபையினால் புரநெகும செயற்றிட்டத்தின் கீழ் ரூபா.44.46 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்குக் கட்டிடம், வாராந்த சந்தை மற்றும் கழிப்பறைத் தொகுதிகள் நிர்மாணிக்கபட்ட நாள் தொடக்கம் பாவனைக்கு உட்படுத்தப்படவில்லை.

- 2015 ஆம் ஆண்டில் பொது நிர்வாக மற்றும் மாகாண சபை, உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக நிர்வாகம் தொடர்பான அமைச்சினால் கரந்தெனிய பிரதேச சபைக்கு ரூபா.24.93 மில்லியன் பெறுமதியான மோட்டார் கிரேடரொன்று அன்பளிப்புச் செய்திருந்தது. அது கிடைக்கப் பெற்ற நாள் தொடக்கம் 2020 மே 31 திகதி வரையிலும் அதனால் எவ்வித பயனையும் பெற்றிருக்கவில்லை.

- 2005 ஆம் ஆண்டில் ஹிக்கடுவை நகர சபையினால் ரூபா.30 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தை மேல் மாடியின் 17 கடையறைகளும் மற்றும் 08 சிறிய கடைகள் ஆகியன நிர்மாணிக்கப்பட்ட நாள் தொடக்கமே செயற்படாது காணப்பட்டன.

- 2006 ஆம் ஆண்டில் தேசியத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சினால் ஹிக்கடுவை நகரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.3.00 மில்லியன் பெறுமதியான கழிவு நீர் பவுசர் 2013 ஆம் ஆண்டின் பின்பு செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

- காலி மாநகர சபையினால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உடன்பாட்டின் அடிப்படையில் அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஈடுபடுத்தக் கூடியதாக இருந்த ரூபா.10.20 மில்லியன் தொகை எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்படாது சேமிப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

- காலி மாநகர சபையினால் 2013 ஜூலை 02 ஆம் திகதியில் பூர்த்தி செய்யும் நோக்கில் புவியியற் தகவல் ஒழுங்கமைப்பினைத் தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா.4.08 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டின் இறுதியிலும் அதன் வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

- மொரட்டுவை மாநகரசபையினால் மாநகர சபைக் கட்டளைச்சட்டத்தின் (252 அதிகாரம்) 188(1) உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களின் கீழ் செயற்படாது, திடீர் விபத்துக்கள் மற்றும் சுகாதாரக் காப்புறுதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அங்கத்தவர்கள் 27 பேருக்கு அந்தக் காப்புறுதி வழங்கப்பட்டிருந்ததுடன், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா.0.95 மில்லியன் மற்றும் ரூகா 1.09 மில்லியன் என மொத்தமாக ரூபா.2.04 மில்லியன் சபையினால் செலவிடப்பட்டிருந்தது. அந்தக் காப்புறுதிக்காக அங்கத்தவர்களினால் சந்தாப் பணம் சபைக்கு செலுத்த வேண்டி இருந்த போதிலும், மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா.1.70 மில்லியன் சந்தாப் பணத்தினை அறவிட்டுக் கொள்ள சபை தவறியிருந்தது.

- மொரட்டுவை மநகர சபையின் கம்பெக்டர் வாகனம் 1999 ஒகஸ்ட் 10 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன், அந்த விபத்தில் பாதிப்புக்குள்ளான தரப்பினருக்கு குற்றஞ்சாட்டப்பட்ட சபையின் ஓட்டுனரால் ரூபா.3.00 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது. ஓட்டுனரால் செலுத்த வேண்டிய அந்தத் தொகை சபை நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் அதில் ரூபா.112,205 மட்டுமே ஓட்டுனரிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. 2019 மார்ச் மாதத்திலிருந்து குறித்த சபைக்கு மேலும் ரூபா.2.89 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. அந்த ஓட்டுனர் 2020 நவம்பர் 26 ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெற வேண்டிதாக இருப்பினும், குறித்த நிலுவைத் தொகையினை அறவிடுவதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- 2019 ஜனவரி மாதம் தொடக்கம் ஜுன் மாதம் வரையிலும் தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையினால் பல்வகை வருமானம், மதிப்பீட்டு வரி மற்றும் திட்டமிடல் பிரிவுகளில் பொதுமக்கள்

சேவையினை வழங்குவதன் மூலம் காட்டப்பட்ட ரூபா.1.18 மில்லியன் வருமானம், மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 185(2)(உ) பிரகாரம் சபை நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டியிருந்தது. சபையினால் அந்த வருமானம் சபை நிதியில் வரவு வைக்கப்படாது 27 உத்தியோகத்தர்களுக்கிடையே அனுமதியின்றி பிரித்தெடுக்கப்பட்டிருந்தது.

- கொழும்பு மாநகர சபையினால் 2001 ஆம் ஆண்டில் விழா மண்டபக் கட்டடமொன்று நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டு, 2007 ஆம் அண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. சபையினால் அதற்காக ரூபா.5.42 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டு வரையிலும் அந்த விழா மண்டபம் செயற்படாது காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் அந்த விழா மண்டபத்தினை உடைத்து அகற்றி, 2019 திசெம்பர் 31ஆம் திகதியில் அந்த இடத்தில் ரூபா.42.88 மில்லியன் செலவில் புதிய இரண்டு மாடிக் கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2020 ஜூன் 30ஆம் திகதி வரையிலும் அந்தக் கட்டிடம் பாவனைக்குட்படுத்தப்படாது செயற்பாடின்றிக் காணப்பட்டது.

- 2016 ஆம் ஆண்டில் கொழும்பு மாநகர சபையினால் ரூபா.1.66 மில்லியன் செலவில் புற்று நோயைக் கண்டறிவதற்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் பின்னர் புற்று நோய் கண்டறிவதற்கான பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் ரூபா.1.49 மில்லியன் இரசாயனப் பதார்த்தம் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

- கொழும்பு மாநகர சபையின் நகரசபை ஆணையாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் 23 ஊழியர்களின் இடமாற்றம் மற்றும் ஓய்வு பெற்றுச் சென்றமை போன்ற காரணங்களினால் அரச இல்லத்தினைப் பயன்படுத்துவதற்குள்ள தகமை அற்றுப் போயிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த உத்தியோகத்தர்கள் அரச இல்லங்களிலிருந்து வெளியேறாது அந்த உத்தியோகபூர்வ இல்லங்களை அனுபவித்து வந்துள்ளனர். குத்தகைக் காலத்தை விஞ்சிய உத்தியோகத்தரிடமிருந்து தாபனக்கோவையின் XIX அத்தியாயத்தின் 7.2 பிரிவின் பிரகாரம் தங்கியுள்ள காலப்பகுதிக்கான தண்ட வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஜூன் மாதம் வரையிலும் இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கணக்கிடப்பட்ட தண்ட வாடகை ரூபா.27.10 மில்லியனாக இருந்தது.

- கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான 18 பொதுச் சந்தைகளில் 3046 வியாபார நிலையங்களிலிருந்து 2019 திசெம்பர் 31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டி இருந்தது. அத்திகதி வரையிலும் குத்தகைக்குக் கொடுக்கப்படாத 384 வியாபார நிலையங்கள் செயற்படாது இருந்ததுடன், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகவுள்ள வியாபார நிலைய உரிமையாளர்கள் 30 பேரினது மொத்தத் தொகையான ரூபா.87.20 மில்லியன் வாடகை வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது.

- வத்தளைப் பிரதேச சபையின் ஹெந்தல வியாபாரத் தொகுதியில் விழா மண்டபத்திற்காக 2014 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா.974,800 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்தக் காசோலைக்கு உரியதான பெற்றுக் கொள்ள வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

- அநுராதபுரம் மாநகர சபையில் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலும் இடம் பெற்றிருந்த ரூபா.47.17 மில்லியன் பெறுமதியான இரு நிதி மோசடிகள் தொடர்பில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- அநுராதபுரம் மாநகர சபையில் சேவையாற்றிய 2013 ஆம் ஆண்டில் வேறு நிறுவனத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர் ஒருவருக்கு அத்தினம் தொடக்கம் 2018 ஜூன் மாதம் வரையிலுமான காலப்பகுதிக்காகச்

செலுத்தப்பட்டிருந்த ரூபா.1.82 மில்லியன் வேதனம் மற்றும் கொடுப்பனவினைத் தீர்ப்பதற்குச் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2017 ஆம் ஆண்டில் தலாவ பிரதேச சபையினால் ரூபா.9.50 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட தம்புத்தேகம வாரச் சந்தைக் கட்டிடத் தொகுதி பயன்படுத்தப்படாது புற்கள் வளர்ந்து காணப்பட்டது.

- ரம்பாவ பிரதேச சபைக்குச் சொந்தமான ரூபா.6.39 மில்லியன் பெறுமதியான கப் வாகனமொன்று 2019 மே 16 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி ரூபா.1.58 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த விபத்துத் தொடர்பான தகவல்கள் தவறானதும் மற்றும் துஷ்பிரயோகத்தினதும் அடிப்படையில் உரிமை மறுக்கப்பட்டு இருந்ததுடன் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வாகனம் உள்நாட்டுப் பிரதிநிதியின் பிரதேச திருத்தும் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

# வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள்

2019 ஆம் ஆண்டுக்கான நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையின் படி, மதிப்பீட்டாண்டில் மொத்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையான ரூபா. 1,016.5 பில்லியனை நிதியீட்டம் செய்வதற்கு அரசாங்கம், உள்நாட்டு நிதி மூலங்களில் இருந்து ரூ. 702.4 பில்லியன்களையும் வெளிநாட்டு நிதி மூலங்களில் இருந்து ரூ. 314.1 பில்லியன்களையும் பெற்றிருந்தது. முன்னைய ஆண்டில் வெளிநாட்டு நிதி மூலங்களில் இருந்து பெறப்பட்ட ரூ. 324 பில்லியன் தேறிய வெளிநாட்டு படுகடன் அளவுடன் ஒப்பிடுகையில் மதிப்பீட்டாண்டின் வெளிநாட்டு படுகடன் வீதம் வீழச்சியடைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

மதிப்பீட்டாண்டில் வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினர்களுடனும் கடன் வழங்கும் முகவர் நிறுவனங்களுடனும் 41 புதிய வெளிநாட்டு நிதியுதவி உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றின் மூலம் எதிர்வரும் வருடங்களில், ஐ.அ.டொலர். 3,378.8 மில்லியன்கள் பெறப்படவுள்ளது. படுகடன் உடன்படிக்கைகள் மூலம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட ஐ.அ.டொலர். 3,312.5 மில்லியன்களையும் மானிய உடன்படிக்கைகள் மூலம் எதிர்வரும் வருடங்களில் கிடைக்கவிருக்கும் ஐ.அ.டொலர். 66.3 மில்லியன்களையும் அது உள்ளடக்கியுள்ளது. இப்படுகடன் மற்றும் மானியத் தொகைகள் பிரதானமாக வீதிகள் மற்றும் பெருந்தெருக்கள், பாலங்கள், நகர அபிவிருத்தி, மின்வலு, கல்வி மற்றும் பயிற்சிவழங்கல்கள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலம்பேண் வசதிகள், சமூக உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய துறைகளிற்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### வெளிநாட்டு செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வுக்குச் சமர்ப்பித்தல்.

மதிப்பீட்டாண்டு இறுதியில் 163 வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள் செயற்படும் நிலையில் காணப்பட்டதுடன், அவற்றில் 122 வெளிநாட்டு செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும் இந்தியக் கடன் முறை, சீன அரசாங்கத்தின் உதவிகள் மற்றும் ஏனைய இருதரப்பு உடன்படிக்கை கடன் திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்ட உடன்படிக்கைகளில், வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்விற்கு உட்படுதல் வேண்டும் என்ற கட்டாய விதிமுறை உள்ளடக்கப்படாத காரணத்தால் அச்செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டு அபிவிருத்தித் தரப்பினர் மற்றும் கடன் வழங்கும் முகவர் நிறுவனங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு செயற்திட்டங்கள் தொடர்பான விவரங்கள் உரு 14 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 14 - வெளிநாட்டு செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்.

## வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல்

### விவசாயத் துறை

இலங்கையின் விவசாயத் துறை பெருந்தோட்ட பயிர்ச்செய்கை மற்றும் பெருந்தோட்டமற்ற பயிர்ச்செய்கை ஆகிய இரண்டு துறைகளை உள்ளக்கியிருப்பதுடன், 1980 ஆம் ஆண்டு முதல் விவிசாயத் துறையின் ஒட்டுமொத்த உற்பத்தித்திறன் ஏறத்தாழ 0.60 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதன்படி, இலங்கையின் விவசாயத் துறையினது வளர்ச்சி வீதம் ஏனைய தெற்காசிய நாடுகளின் வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. அந்நிலையினை மாற்றியமைத்து விவசாயிகளினதும் நாட்டினதும் பொருளாதாரத்தினை முன்னேற்றுவதற்காக விவசாய அபிவிருத்தி, உற்பத்தித் திறன் அபிவிருத்தி மற்றும் பல்லின உற்பத்தி ஆகிய இலக்குகளை அடைந்துகொள்ளும் நோக்கில் விவசாயத் துறையினை நவீனமயப்படுத்துவதற்கான செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம் மற்றும் செயற்திட்டத்தினை தொடங்குவதற்காக விவசாய அமைச்சினதும் முதலாந்தர கைத்தொழில் அமைச்சினதும் செயலாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒருங்கிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைய விவசாய அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த பிரிவின் மூலம் சர்வதேச சேவை வழங்கும் நிபுணர் ஒருவரின் உதவியுடன் இலங்கையில் வறியோர்கள் கூடுதலாக வசிக்கின்ற பிரதேசங்களான யாழ்ப்பாணம், முல்லைதீவு, அநுராதபுரம், மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை மற்றும் பொலன்னறுவை ஆகிய 7 மாவட்டங்களை மையமாகக் கொண்டு 7 நவீன விவசாய தொழில்நுட்ப மாதிரிக் கிராமங்களை தாபித்து அந்தக் கிராமங்களையொட்டி உருவாகின்ற புதிய விவசாய அமைப்புக்கள் மற்றும் விவசாய இயக்கங்களின் உற்பத்திகளின் பெறுமதியினை உயர்த்துவதற்காக மூலதனச் சீராக்கல் கொடுப்பனவாக நிதி உதவியினை வழங்குவதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், சர்வதேச சேவை வழங்கும் நிபுணர் ஒருரை தெரிவுசெய்தலுடன் தொடர்புடைய பெறுகை நடவடிக்கைகளில் காணப்பட்ட நலிவுகள் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்குறித்த விவசாயக் கிராமங்களை அமைக்கும் திட்டத்தை அமுல்படுத்த செயற்திட்டத்திற்கு முடியாது போயிருந்ததுடன், முதலாந்தர கைத்தொழில் அமைச்சின் கீழ் திட்டமிடப்பட்டிருந்த குறிக்கோள்களும் அடையப்பட்டிருக்கவில்லை. அத்துடன், முதலாந்தர கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள பிரிவினால் இனங்காணப்பட்டிருந்த மாவட்டங்கள் மற்றும் அடிப்படை குறிக்கோள்களிற்கு முரணாக நாட்டிலுள்ள ஏனைய 14 மாவட்டங்களிலுள்ள தொழில்முயற்சிகளிற்காக ரூபா 1,410.38 மில்லியன் தொகையினை மூலதனச் சீராக்கல் கொடுப்பனவாகச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கவதற்கு இணங்கியிருந்த ஐ.அ.டொலர். 123 மில்லியனிற்குச் சமனான ரூபா 18,243.75 மில்லியன் கடன் தொகையில் 23.77 சதவீதத்திற்குச் சமனான ஐ.அ.டொலர் 29.72 மில்லியன் தொகை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வரிசை அமைச்சுக்களால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### சமூக நலனோம்பல் துறை

இலங்கையின் எழுத்தறிவு வீதம் மற்றும் ஆயள் எதிர்பார்க்கை போன்ற மானிட அபிவிருத்திச் சுட்டிகள் வலயத்திலுள்ள ஏனைய நாடுகளைக் காட்டிலும் உயர்ந்த பெறுமதியில் காணப்படுகின்றமையால் கடந்த தசாப்தத்தில் உயர் வறுமையினைக் குறைத்து வளங்களின் சமபங்கீட்டினை மேம்படுத்துதல் தொடர்பில் இலங்கை குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை அடைந்துள்ளது. விரிவாக அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், இலங்கையின் சமூகப் பாதுகாப்பு முறைமை பரந்துவிரிந்து காணப்படுகின்றமையால் தற்போது அது எவ்வித ஒருங்கிணைப்புமின்றி அமுல்படுத்தப்பட்டு வருகின்றமையை காணமுடிகின்றது.

உரிய சமூகப் பாதுகாப்பு முறையொன்றின் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ளோர் மற்றும் வறுமைக் கோட்டில் வசிக்கின்றோர்களை இலக்காகக் கொண்டு நிவாரண உதவிகளை வழங்குவதன் மூலம் அவர்களையும் பொருளாதாரச் செயற்பாடுகளிற்கு உள்ளீர்த்து சமூகத்திலுள்ள நிலையற்ற நபர்களை எதிர்பாராத பொருளாதார அதிர்ச்சிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் முறைசாராத பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோர்களிற்கு அவர்களது

ஓய்வுபெறும் காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குவதற்குத் தேவையான வழிமுறையொன்றைத் தயாரிக்கும் நோக்குடனும் சமூகத்திலுள்ள வறிய மற்றும் நிரந்தரமற்ற நபர்களிற்கு நிவாரணங்களை வழங்கும் செயற்திட்டங்களை நியாயமானதாக, வினைத்திறனாக மற்றும் வெளிப்படையானதாக அமுல்படுத்தும் வகையிலும் “சமூக பாதுகாப்பு வலைப்பின்னல் செயற்திட்டம்” ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், இதற்காக சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் ஐ.அடொலர் 75 மில்லியனை கடன் உதவியாக வழங்குவதற்கு இணங்கியிருந்தது. சமூக வலைப்பின்னல்களின் வினைத்திறனை மேம்படுத்துவதன் மூலம் அதற்கான செலவினத்தை மிகவும் பயனுள்ளதாக மாற்றி திட்டமிடப்பட்டுள்ள நடுத்தரகால அரச நிதி வழங்கல் வேலைத்திட்டங்களிற்கு ஏற்படத்தக்க வறுமைத் தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்கு இதன்மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன், இதன்வாயிலாக, இலங்கை அரசாங்கத்திடம் தற்போது காணப்படுகின்ற சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை காலோச்சிதமாக மீளாய்வுசெய்து, மீளத் தயாரிப்பதற்கு வசதி வழங்கப்படுவதுடன் படிப்படியாக வயோதிபத்தை நோக்கிப் பயணிக்கின்ற மக்களிடையே ஏற்படத்தக்க சவால்களிற்கு முகங்கொடுப்பதற்கும் இதன் மூலம் எதிர்பாக்கப்படுகின்றது. இருப்பினும், 2022 இல் நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகளில் ஒன்றான சமூக நலனோம்பல் உதவிச் சபையினை தாபித்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்ததுடன், குறித்த சமூக நலனோம்பல் உதவிச் சட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 36 மாதங்கள் கடந்திருந்த போதிலும், நலிவான செயலாற்றல் காரணமாக சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் வழங்குவதற்கு இணங்கியிருந்த ஐ.அடொலர் 75 மில்லியன் தொகையில் 2019 திசெம்பர் 31 வரை அதில் 4.67 சதவீதத்திற்குச் சமனான ஐ.அ.டொலர் 3.5 மில்லியன் மாத்திரம் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக சமூகத்திலுள்ள வறியோர்களிற்கு கிடைக்க வேண்டிய நலன்களை வினைத்திறனாகவும் வெளிப்படைத் தன்மையாகவும் வழங்கப்பட வேண்டுமென்ற செயற்திட்டத்தின் குறிக்கோள் முழுமையாக அடையப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## மின்வலுத் துறை

நம்பகரமாக மின்சாரத்தை விநியோகிப்பதன் மூலம் மின்சார வழங்கலின் தரத்தினை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்களை இலங்கை மின்சார சபை அமுல்படுத்தியிருந்தது. ஏனைய செயற்திட்டங்களைப் போலல்லாது அச் செயற்திட்டங்களை இயக்கிச் செல்வதற்கு தனியான மையமொன்று செயற்திட்ட பணிப்பாளர் ஒருவரின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன், இலங்கை மின்சார சபை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அதிகாரசபையின் பல்வேறு பிரிவுகளினூடாக குறித்த செயற்திட்டங்களின் கூறுகள் தனித்தனியாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக நாடு முழுவதனையும் உள்ளடக்கிய விதத்தில் தாபிக்கப்பட்டுள்ள இலங்கை மின்சார சபையின் இச்செயற்திட்டப் இப்பிரிவுகளுக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையே முறையான ஒருங்கிணைப்பு காணப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மின்சார பிரிவுகளிலுள்ள செயற்திட்டங்களின் கொள்வனவுத் தாமதங்கள் காரணமாக ஒப்பந்தங்களைக் கையளிப்பதற்கு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு 2 வருடங்களிற்கும் மேற்பட்ட காலம் எடுத்திருந்தமையால், செயற்திட்டக் காலத்தினுள் ஒப்பந்த வேலைகளை பூரணப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றமை பொதுவாக அவதானிக்கப்பட்டது.

செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பல்வேறு பிரதேசங்களிலும் வாடகை அடிப்படையில் வெவ்வேறு அலுவலக வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. இதற்கமைய, மின்வழங்கல் நம்பகரத்தன்மையினை மேம்படுத்தும் இச்செயற்திட்டத்தினால் 2017 சனவரி முதல் 2019 திசெம்பர் 31 வரையான காலத்தில் அலுவலக வாடகையாக ரூபா 8.9 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் மூலம் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 176.9 மில்லியன் தொகை ஒப்பந்தகாரர்களிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களிடையே ரூபா 23.4 மில்லியன் பெறுமதியான அதி ஆடம்பர கார் வாகனங்களும் உள்ளடங்கியிரந்தமை அவதானிக்கப்பட்டது.

மேலும், 2016 திசெம்பரில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மின்வழங்கல் நம்பகரத்தன்மையினை மேம்படுத்தும் இச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்குத் தேவையான வாகனங்கள் வெளிவாரி ஒப்பந்தகாரர்களின் ஊடாக வாடகைக்குப் பெறப்பட்டு 2017 சனவரி முதல் 2019 திசெம்பர் 31 வரையான காலத்தில் ரூபா 69.11 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

மின்வழங்கல் நம்பகரத்தன்மையினை மேம்படுத்தும் இச்செயற்திட்டத்தினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் இருப்பு விடயங்களாக ரூபா 3,374.48 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த இருப்பு தொடர்பான தெரிவுப் பரிசோதனைகளில் மின்சார சபைக்குரிய களஞ்சியங்களில் அந்த இருப்புக்கள் தொடர்பில் இருப்பு அறிக்கைகள் முறையாகப் பேணப்படாதிருந்தமையால் குறித்த இருப்பு விடயங்கள் செயற்திட்டங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற இருப்புக்கள் என்பதனை வேறுபடுத்தி இனங்காண முடிந்திருக்கவில்லை.

## உயர் கல்வித் துறை

கீழ்நிலை மத்தியதர வருமானம் பெறுகின்ற சமூகத்தரநிலை முதல் உயர் வருமானம் பெறுகின்ற சமூகநிலை வரையிலும் அவர்களின் முன்னேற்றத்தின் கேந்திர மையமாகத் திகழ்வது உயர் கல்வித் துறையென்பது இனங்காணப்பட்டுள்ளது. உலக வங்கியின் கடன் உதவியுடன் உயர் கல்வித் துறைக்கு உதவுவதற்காக உயர் கல்வியினை விரிவுபடுத்தி அபிவிருத்தியினைத் துரிதப்படுத்தல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2018 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2023 யூன் மாதத்தில் பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத் துறைகளில் மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவு வாய்ப்பினை அதிகரித்து உயர் கல்வித் துறையில் ஆராய்ச்சிகள் மற்றும் புத்தாக்கங்களை ஊக்கப்படுத்துதல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகக் காணப்பட்டதுடன், இதற்காக ஐ.அ.டொலர் 100 மில்லியன் தொகையினை வழங்குவதற்கு உலக வங்கி இணங்கியிருந்தது.

மீளாய்வாண்டில் செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 15 அரசாங்க பல்கலைக்கழகங்களிற்கும் இலங்கை உயர் கல்வி நிறுவனத்திற்கும் ரூபா 80.8 மில்லியன் முற்பணமாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த முற்பணத் தொகையில் ரூபா 15 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய நடவடிக்கைகளிற்குப் பயன்படுத்தப்படாது அந்த நிறுவனங்களின் வங்கி நடைமுறைக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத் துறைகளில் மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவு வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்குடன் அப்பீடங்களின் இயலளவினை அதிகரிப்பதற்குத் தேவையான கற்கை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 06 அரசாங்க பல்கலைக்கழகங்களிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 760.54 மில்லியன் தொகையில் ரூபா 86.2 மில்லியன் தொகை ஓராண்டிற்கும் மேலாக உரிய நடவடிக்கைகளிற்குப் பயன்படுத்தப்படாது அந்த நிறுவனங்களின் வங்கி நடைமுறைக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்ததுடன் இதன் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 35.3 மில்லியன் பெறுமதியான கற்கை உபகரணங்கள் அந்த நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## நீர் வழங்கல் துறை

கொழும்பு நகரத்தின் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் சேவைகளை முன்னேற்றி முகாமைத்துவம் செயவதன் ஊடாக 49 சதவீதமாகக் காணப்படுகின்ற வருமானமற்ற நீர் வழங்களை 2020 ஆம் ஆண்டளவில் 18 சதவீதமாகக் குறைத்து அந்த மட்டத்தினை பேணிச்செல்லல் மற்றும் கொழும்பு நகரத்தில் 24 மணிநேரமும் தரமான நீர் வழங்கலை உறுதிப்படுத்தல் ஆகிய நோக்கங்களுடன் கொழும்பு பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய 03 செயற்திட்டங்கள் 2013 ஆம் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தன. செயற்திட்டத்தினை தயார்படுத்தல் தாமதங்கள், ஒப்பந்தங்களைக் கையளித்தல் தாமதங்கள் மற்றும் ஆரம்ப திட்டங்களை பின்னர் மாற்றியிருந்தமை காரணமாகவும் வீதிகளை உடைப்பதற்காக குறித்த நிறுவனங்களிடமிருந்து அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட தாமதங்கள் காரணமாகவும் 03 செயற்திட்டங்களினதும் செயன்முன்னேற்றம் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. இவற்றின் காரணமாக குறித்த

செயற்திட்டங்களை அதற்குரிய கால எல்லைக்குள் பூரணப்படுத்த முடியாது போயிருந்ததுடன், அவற்றை பூரணப்படுத்துவதற்காக 40 முதல் 48 மாதங்கள் வரையான வீச்சில் காலநீடிப்செய்ய வேண்டியேற்பட்டிருந்தது. அத்துடன், நிதியங்களை குறைவாகப் பயன்படுத்தியமைக்காக தண்டப்பணமாக ரூபா 170.28 மில்லியன் தொகையினை செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்களவு தாமதம் ஏற்பட்டிருந்தமையால் 7 ஆண்டுகள் கடந்த பின்னரும் 2012 ஆம் ஆண்டில் நிலவிய 49 சதவீதமான வருமான இழப்புக்குள்ளான நீர் விநியோகம் 2019 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் 40.8 சதவீமாக மாத்திரமே குறைவடைந்திருந்தது.

### பொதுவான அவதானிப்புக்கள்

செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவுகளின் செலவினத்தை உள்ளடக்கும் வகையில் ஒப்பந்த ஆவணங்களில் புதிய நிபந்தனைகளை உட்படுத்துவதன் மூலம் செயற்திட்டங்களுடன் தொடர்புபடாத நடவடிக்கைகளிற்காக கடன் தொகையினைப் பயன்படுத்துதல் மற்றும் ஒப்பந்தகாரர்களிற்கு இணங்கிய தொகையினைக் காட்டிலும் மேலதிக தொகையினை இலாப எல்லை மற்றும் பொது மேந்தலைச் செலவினத்திற்காக செலவிட வேண்டியேற்பட்டிருந்தமை கணக்காய்வில் பொதுவாக அவதானிக்கப்பட்டது. அத்துடன், செயற்திட்டங்களால் மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்யாது அத்தேவையினை அளவுத்திட்ட பட்டியல்களின் விடயமொன்றாக ஒப்பந்த உடன்படிக்கைகளில் உள்ளடக்கியிருந்தமை காரணமாக கொள்வனவு செய்வதிலும் பார்க்க கூடியளவான தொகை ஒப்பந்த காரர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்தமை மற்றும் குறித்த வாகனங்களின் உரிமைத்துவம் குறித்த ஒப்பந்தக் கம்பனிகளின் பெயரில் காணப்பட்டிருந்தமை என்பன காரணமாக செயற்திட்டக் கால முடிவில் குறித்த மோட்டார் வாகனங்களின் உரிமைத்துவம் வரிசை அமைச்சிற்கு அல்லது அரசாங்க நிறுவனங்களிற்கு கிடைக்காதிருக்கும் ஆபத்த காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

செயற்திட்டங்களின் பௌதீகச் செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்திருக்காமை காரணமாக கடன் தொகைகளின் பயன்பாடு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை மற்றும் செயற்திட்டங்களின் காலஎல்லையினை நீடிப்புச்செய்ய வேண்டியேற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக, பயன்படுத்தப்படாத கடன் தொகைகள் மீது கடப்பாட்டுத் தண்டப்பணத்தை செலுத்தவேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

நிதி அமைச்சினால் செயற்திட்ட இறுதி அண்டில் நிதிக்கூற்றுக்களை எவ்வாறு தயாரித்தல் வெண்டுமென உரிய அறிவுறுத்தல்கள் வழங்கியிருக்காமையால் வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்களின் செயற்பாட்டுக் காலம் முடிவடைந்த பின்னரும் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவுகளினால் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவினைப் பின்பற்றி நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

# வங்கித்துறை

வங்கித்துறையானது 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு 26 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் (LCBs) 6 உரிமம் பெற்ற விசேட வங்கிகளுமாக (LSBs) 32 வங்கிகளைக் கொண்டுள்ளது. 26 LCBs ஆனது 13 வெளிநாட்டு வங்கிகளை உள்ளடக்குகின்றதுடன் அவற்றில் 2 வெளிநாட்டு வங்கிகள் அவற்றின் தலைமை அலுவலகங்களினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை அடிப்படையாகக்கொண்டு இறுதி நடைமுறைகளை ஆரம்பித்திருந்தன. லங்காபுத்ர டெவலெப்மென்ட் பாங் லிமிட்டட் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் கூட்டிணைக்கப்பட்டிருந்ததுடன் ஸ்ரீ லங்கா சேவிங் பாங் லிமிட்டட்டானது துணைக்கம்பனியொன்றாக 2019 ஆம் ஆண்டின் போது தேசிய சேமிப்பு வங்கியால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. விபரங்கள் கீழே அட்டவணை 14 இல் தரப்பட்டுள்ளன.

**2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான வங்கிகள், வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய வங்கி நிலையங்களின் பரம்பல்**

| வகுதி | | வங்கிகள் | கிளைகள் | மாணவர் சேமிப்பு பிரிவுகள் | ஏரீஎம்கள் |
|---|---|---|---|---|---|
| LCBs | உள்ளூர் வங்கிகள் | 13 | 2,857 | 3,783 | 5,158 |
| | வெளிநாட்டு வங்கிகள் | 13 | 50 | | |
| LSBs | தேசிய மட்ட சேமிப்பு வங்கிகள் | 1 | 262 | | 413 |
| | வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 2 | 64 | | |
| | ஏனைய LSBs | 3 | 371 | | |

அட்டவணை 14 - 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான வங்கிகள், வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய வங்கி நிலையங்களின் பரம்பல்
மூலம் - இலங்கை மத்திய வங்கி (திருத்தப்பட்ட அல்லது ஏற்பாட்டு தரவுகள்)

வங்கித்துறை சேவைகளை மேம்படுத்துதல், வங்கித்துறை வலையமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான பொருட்கள்/ சேவைகளை அறிமுகப்படுத்துதல் என்பவற்றின் மூலம் வங்கித்துறையானது பொருளாதாரத்தின் நிதி நடுநிலைக்கு உதவுகின்றது. 42 வங்கிக் கிளைகள் மற்றும் 564 ஏரீஎம்கள் 2019 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்த அதே நேரம் 11 வங்கிக் கிளைகள் மற்றும் 13 ஏரீஎம்கள் மூடப்பட்டிருந்தன. அதற்கிணங்க, வங்கி நிலையங்கள் மற்றும் ஏரீஎம்களின் மொத்த எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் முறையே 7,387 மற்றும் 5,571 வரை அதிகரித்திருந்தன.

உரிமம் பெற்ற வங்கிகள் (LCBs மற்றும் LSBs) 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான நிதித் துறையின் ரூபா 20,159.4 பில்லியன் மொத்தச் சொத்துக்களிற்கு ரூபா 12,522.7 பில்லியன் அல்லது 62 சதவீதத்தால் பங்களித்திருந்ததுடன் மத்திய வங்கியானது 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 1,919.4 பில்லியன் அல்லது 9.5 சதவீததத்தால் நிதித்துறையின் மொத்தச் சொத்துக்களிற்கு பங்களித்திருந்தது. மத்திய வங்கியின் சொத்துக்கள் 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 1,509.8 பில்லியன் சர்வதேச ஒதுக்கங்களை உள்ளடக்குகின்றது.

வங்கித்துறையின் மொத்தச் சொத்துக்களின் விபரங்கள் கீழே உரு 15 இல் தரப்பட்டுள்ளன.




உரு 15 - வங்கித்துறையின் மொத்தச் சொத்துக்கள்
மூலம்: இலங்கை மத்திய வங்கி (திருத்தப்பட்டது அல்லது ஏற்பாடு)

## சொத்துக்கள்

LCBs மற்றும் LSBs இன் செத்து அடிப்படையானது (asset base) ஆண்டின் போது ரூபா 728.7 பில்லியன் அல்லது 6.2 சதவீத அதிகரிப்புடன் 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 12.5 ரில்லியனாக அதிகரித்திருந்தது. எனினும் 2019 ஆம் ஆண்டிற்கான பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சி விகிதம் 2018 ஆம் ஆண்டின் 14.6 சதவீத வளர்ச்சி வீதத்தை விட குறைவாக இருந்தது. LCBs & LSBs இன் சொத்துக்களின் கட்டமைப்பு விபரங்கள் கீழே உரு 16 இல் தரப்பட்டுள்ளன.




உரு 16 - LCBs & LSBs இன் சொத்துக்களின் கட்டமைப்பு
மூலம்: இலங்கை மத்திய வங்கி (திருத்தப்பட்ட அல்லது ஏற்பாட்டுத் தரவுகள்)

2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான மொத்தக் கடன்களிலிருந்து ரூபா 7,362 பில்லியன் அல்லது 91 சதவீதம் LCBs ஆல் வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 760 பில்லியன் அல்லது 9 சதவீதம் LSBs ஆல் வழங்கப்பட்டிருந்தது. கடன்களில் ஏற்பட்ட வளர்ச்சியானது 2019 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது நிலவிய நிச்சயமற்ற அரசியல் நிலைமைகள் காரணமாக 2018 ஆம் ஆண்டின் 19.6 சதவீதத்திலிருந்து 2019 ஆம் ஆண்டில் 5.6 சதவீதம் வரை குறிப்பிடத்தக்களவு குறைவடைந்திருந்தது.

கடன்களிற்கான குறைவான கேள்வியானது முதலீடுகளை நோக்கி அதிக வங்கி நிதிகளை செயற்படுத்துவதை விளைவித்திருந்ததால் முதலீடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியானது 2018 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு 4.6 சதவீதத்திலிருந்து 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு 12.2 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. முதிர்ச்சி கலவைக்காக (maturity Portfolio) வைத்திருத்தல் 18.1 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வியாபார கலவையிலுள்ள முதலீடுகள் 2019 ஆம் ஆண்டின் போது 7.3 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## செயற்பாடற்ற கடன்கள் (என்பிஎல்)

வங்கித்துறையின் என்பிஎல் விகிதமானது ஆண்டின் போது நிலவிய பாதகமான வணிக நிலைமைகள் காரணமாக 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 3.4 சதவீதத்திலிருந்து 2019 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு 4.7 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. அதற்கிணங்க துறையின் மொத்த செயற்பாடற்ற கடன்களானது 2018 ஆம் ஆண்டின் ரூபா 102.5 பில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் ரூபா 118.5 பில்லியனால் அதிகரித்திருந்தது. உரு 17 செயற்பாடற்ற கடன்கள் விகிதம்.




உரு 17 - செயற்பாடற்ற கடன்கள் விகிதம்
மூலம்: இலங்கை மத்திய வங்கி (திருத்தப்பட்ட அல்லது ஏற்பாட்டுத் தரவு)

### பொறுப்புக்களும் மூலதனமும்

மத்திய வங்கியின் பொறுப்புக்கள் ரூபா 1,919.4 பில்லியனாக காணப்பட்டதுடன் இது பிரதானமாக சர்வதேச அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் ரூபா 613.8 பில்லியன் வைப்புக்கள், வர்த்தக வங்கிகளின் ரூபா 254.6 பில்லியன் வைப்புக்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு வழங்கப்பட்ட ரூபா 678 பில்லியன் நாணயங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

LCBs & LSBs இன் 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான மொத்தப் பொறுப்புக்களில் 73.2 சதவீதம் வைப்புக்களாக காணப்படுகின்றன. வைப்பு அடிப்படையானது 2018 ஆம் ஆண்டின் ரூபா 1.1 ரில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் ரூபா 669.8 பில்லியன் அதிகரிப்புடன் 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 9,162.3 பில்லியனை அடைந்திருந்தது. விபரங்கள் கீழே உரு 18 இல் தரப்பட்டுள்ளன.




உரு 18 - LCBs & LSBs இன் பொறுப்புக்கள்
மூலம்: இலங்கை மத்திய வங்கி (திருத்தப்பட்ட அல்லது ஏற்பாட்டுத் தரவு)

### வைப்புக்கள்

வைப்புக்களின் வளர்ச்சி விகிதம் 2018 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான 14.8 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு 7.9 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. LCBs மற்றும் LSBs என்பவற்றின் கால வைப்புக்கள் ரூபா 6,092.5 பில்லியனாக காணப்பட்டதுடன் அது 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான மொத்த வைப்புக்களில் 66.5 சதவீதத்திற்காக கணக்கீடு செய்யப்பட்டதுடன் சேமிப்புக்கள் மற்றும் கேள்வி வைப்புக்கள் முறையே 25.6 சதவீதம் மற்றும் 5.8 சதவீதத்திற்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே உரு 19 இல் தரப்பட்டுள்ளன.




உரு 19 - LCBs & LSBs இன் வைப்புக்களின் கட்டமைப்பு
மூலம் - இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகள்

## இலங்கை மத்திய வங்கி

இலங்கை பணத்தின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைப்பு, நிதிசார் மற்றும் கொடுப்பனவு முறைமைக்கு பொறுப்புக்கூறவேண்டிய தலைமை அதிகார அமைப்பாக, இலங்கை மத்திய வங்கியானது (சீபீஎஸ்எல்), திருத்தியமைக்கப்பட்ட 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பணச் சட்ட அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் உற்பத்தித்திறன்மிக்க வளங்களின் அபிவிருத்தியை ஊக்கப்படுத்தி மேம்படுத்தும் நோக்கில் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதி முறைமை ஸ்திரத்தன்மை என்பவற்றை பாதுகாக்கும் குறிக்கோள்களுடன் இலங்கை மத்திய வங்கி உருவாக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு பண உறுதிப்பாட்டிற்காக உள்நாட்டு நாணயக் கொள்கையினை நிர்ணயிப்பதற்கு நாணயச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் மூலம் இயலுமான வரை பாதுகாப்பதற்கு பணத்தின் விநியோகம், கிடைப்பனவு, மற்றும் கிரயம் என்பவற்றை ஒழுங்கமைப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை முயற்சித்தல் வேண்டும். பண நிரம்பலில் ஏற்படுகின்ற மாற்றங்கள் விலை உறுதிப்பாட்டை பாதிக்கின்ற பிரதான காரணியொன்றாக உள்ளது. பணவீக்கமொன்றின் ஊடாக காசு ஒதுக்கத்துடன் தொடர்புபடுகின்ற விரிந்த பண நிரம்பலின் மாற்றங்களிற்கு தாக்கத்தினை ஏற்படுத்துவதன் மூலம் விலை உறுதிப்பாட்டினை அடைந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

காசு ஒதுக்கம் என்பது நாணயக் கொள்கையின் செயற்பாட்டு இலக்காகும். கொள்கை வட்டி விகிதங்கள், திறந்த சந்தை செயற்பாடுகள் (OMO) மற்றும் வர்த்தக வங்கி வைப்புப் பொறுப்புக்கள் மீதான நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைப்பாடு (SRR) என்பன தற்போது பயன்படுத்தப்படுகின்ற பிரதான நாணயக் கொள்கை கருவிகளாகும். கொள்கை வட்டி விகிதங்களின் ஒட்டுமொத்தக் குறைப்பு 2019 மே 31 தொடக்கம் 2020 ஏப்ரல் 03 வரையான காலப்பகுதியின் போது 200 அடிப்படைப் புள்ளிகள் வரை காணப்பட்டதன் விளைவாக 2020 ஏப்ரல் 03 இல் வணிகம் மூடப்பட்டுள்ளவாறு நிலையான வைப்பு வசதி விகிதம் (எஸ்டிஎவ்ஆர்) மற்றும் நிலையான கடன் வசதி விகிதம் (எஸ்எல்எவ்ஆர்) என்பன முறையே 6.00 சதவீதம் மற்றும் 7 சதவீதத்தில் காணப்படுகின்றன. எஸ்டிஎவ்ஆர் மற்றும் எஸ்எல்எவ்ஆர் என்பன பொருளாதாரத்தின் துரித மீளமைப்பொன்றிற்கு உதவுவதற்காக 2020 யூலை 9 தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் முறையே 4.50 சதவீதம் மற்றும் 5.50 சதவீதம் வரை மேலும் குறைக்கப்பட்டிருந்தன.

ஒதுக்குப் பணமானது 2018 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 2.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு 3.0 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. உண்மையில் ஒதுக்குப் பணம் முன்னைய ஆண்டின் ரூபா 21.3 பில்லியன் அதிகரிப்பொன்றுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 932.6 பில்லியன் வரை ரூபா 28.5 பில்லியனால் குறைவடைந்திருந்தது. 2019 மார்ச் மாதத்தில் SRR இன் 5.00 சதவீதம் வரையான குறைப்புடன் மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 254.6 பில்லியன் வரை ரூபா 65.5 பில்லியனால் குறைவடைந்திருந்தது. நியதிச் சட்ட ஒதுக்கு வீதம் (எஸ்ஆர்ஆர்) 2020 மார்ச் 16 தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் 5.00 சதவீதத்திலிருந்து 4.00 சதவீதம் வரையும் 2020 யூன் 16 தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் 4.00 சதவீதத்திலிருந்து 2.00 சதவீதம் வரையும் மேலும் குறைக்கப்பட்டிருந்தது.

ஒதுக்குப் பணத்தின் சொத்துக்கள் பக்கம் மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் (என்டிஏ) மற்றும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களை (என்எவ்ஏ) கொண்டுள்ளது. மத்திய வங்கியின் என்டிஏ 2018 ஆம் ஆண்டின் போதான ரூபா 116.9 பில்லியன் அதிகரிப்பொன்றுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 36.6 பில்லியன் வரை ரூபா 173.9 பில்லியனால் குறைவடைந்திருந்தது இதற்கு முரணாக மத்திய வங்கியின் என்எவ்ஏ 2018 ஆம் ஆண்டின் ரூபா 95.6 பில்லியன் வீழ்ச்சியுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 145.5 பில்லியனால் அதிகரித்திருந்தது.

மத்திய வங்கியானது ஆண்டின் போதான நாணயமாற்று விகிதத்தை தீர்மானிப்பதில் நெகிழ்வுத் தன்மையை பேணுவதை தொடர்ந்திருந்தது. 2018 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு பெறுமதித்தேய்வு ஒன்றை பதிவுசெய்திருந்த இலங்கை ரூபாவானது 2019 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலரிற்கு எதிராக 0.6 சதவீதத்தால் ஓரளவு அதிகரித்திருந்தது. நாணயமாற்று விகிதத்தின் ஒப்பீட்டளவிலான நிலையான தன்மை வியாபார பற்றாக்குறையின் வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களிக்க முடியும்.

நிதித் துறை விரிவுபடுத்தல் மற்றும் செயலாற்றல் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் ஆண்டின் போது நிலவிய அரசியல் ஸ்திரமற்ற தன்மை காரணமாக ஏற்பட்ட குறைந்த பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக பிரதானமாக 2019 ஆம் ஆண்டின் போது குறைவடைந்துள்ளன.

வங்கித்துறை இலாபத்தன்மையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சொத்து மதிப்பு குறைவடைந்தமை, செயற்பாட்டுக் கிரயங்கள் அதிகரித்தமை மற்றும் வரிகள் அதிகரித்தமை காரணமாக குறைவடைந்திருந்தது. வங்கித்துறையின் சொத்து அடிப்படையானது ஆண்டின் போது ரூபா 728.7 பில்லியனால் அல்லது 6.2 சதவீததத்தால் அதிகரித்திருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 12.5 ரில்லியனை விஞ்சியிருந்தது. அதேநேரம் 2018 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சி விகிதம் 14.6 சதவீதமாக காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு வங்கித்துறையின் மொத்தப் பொறுப்புக்களில் 73.2 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதான நிதியளித்தல் மூலமாக வைப்புக்கள் இருக்க வேண்டுமென தொடர்ந்து காணப்பட்டதுடன் கடன்கள் 13.4 சதவீதமாக கணக்கீடு செய்யப்பட்டது. செயற்பாடற்ற கடன் விகிதம் (NPLs) 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 3.4 சதவீதத்திலிருந்து 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 4.7 சதவீதம் வரை அதிகரித்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது வங்கித்துறையின் கடன் தரம் மேலும் குறைவடைந்திருந்தது.

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் (LFCs) மற்றும் விசேட குத்தகைக் கம்பனிகள் (SLCs) துறை 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 42 LFCs மற்றும் 4 SLCs என்பவற்றை கொண்டிருந்தது. துறையிலுள்ள சில LFCs ஆல் எதிர்கொள்ளப்பட்ட சிக்கல்களை தீர்ப்பதற்காக மேற்பார்வை தொடர்பானவற்றுடனான கம்பனியின் வணிக செயற்பாடுகளை புதுப்பிப்பதற்கு அதிகளவான கவனம் செலுத்தப்பட்டு துறையின் நிலையான தன்மையை பேணுவதற்காக விவேகமான நடவடிக்கைகள் எடுப்பதை மத்திய வங்கி தொடர்ந்திருந்தது. எனினும் பற்றாக்குறையான மூலதன மட்டம், நலிவான சொத்து மதிப்பு, தொடர்ச்சியான நட்டங்கள் மற்றும் முதிர்ச்சியின் போது பணம் மீளச் செலுத்தப்படாதமை அல்லது கேள்வி மீதான வைப்பாளர் பணம் மீளச் செலுத்தப்படாதமை காரணமாக 2019 செப்தெம்பர் 19 இலிருந்து

அமுலுக்கு வரும் வகையில் ரீகேஸ்ஸ் பினான்ஸ் லிமிட்டட்டின் உரிமமும், நிதி நிலை வீழ்ச்சியடைந்தமை மற்றும் பாரிய திரவத்தன்மை நெருக்கடி காரணமாக 2020 மே 22 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் வேறொரு பினான்ஸ் கம்பனி பிஎல்சியின் உரிமமும் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையால் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதார திட்டம் என்பவற்றிலிருந்து ரூபா 600,000 வரையான இழப்பீடுகளை பெறுவதற்கு அக் கம்பனிகளின் வைப்பாளர்கள் உரித்துடையவர்களாவர்.

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

### இலங்கை வங்கி (பீஓசீ)

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றாக இலங்கை வங்கி ஸ்தாபிக்கப்பட்டு 1938 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் கீழ் 1939 ஆகஸ்ட் 01 இல் முறையாக கூட்டிணைக்கப்பட்டிருந்தது.

பங்குதாரர்களுக்கான உலகளாவிய நுழைவு, ஊழியர் வலுவூட்டல் மற்றும் பெறுமதி அதிகரிப்புடன் நாட்டிற்கு உயர் வினைத்திறன்மிக்க, வாடிக்கையாளரை நோக்காகக் கொண்ட, தொழில்நுட்ப ரீதியில் அதிநவீனமயப்படுத்தப்பட்ட, வலுவான மற்றும் புதுமையான நிதிசார் சேவைகளை வழங்குவது வங்கியின் பணிக்கூற்றாகும்.

மேற்படி பணிக்கூற்றை அடைந்துகொள்வதற்கு, 2019 ஆம் ஆண்டளவில் 581 கிளைகள், 62 மட்டுப்படுத்தப்பட்ட சேவை கிளைகள், 11 நடமாடும் கிளைகள், 164 சீடிஎம் இயந்திரங்கள், 1,033 ஏரீஎம்/சீஆர்எம் இயந்திரங்கள், 14 பிராந்திய கடன் நிலையங்கள் மற்றும் 15 எஸ்எம்ஈ நிலையங்கள் ஊடாக வங்கி தமது சேவைகளினை பகிர்ந்தளித்திருந்தது. மேலும் 8,503 எண்ணிக்கையான பதவியணியினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

2019 செப்தெம்பர் மாதத்தில் பிற்ச் றேரிங்ஸ் லங்கா லிமிட்டட்டால் ஸ்திரமான கண்ணோட்டத்துடன் “AA+(lka)” இல் தேசிய நீண்டகால தரப்படுத்தலொன்று பீஓசீ இற்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் ஐசிஆர்ஏ லங்கா லிமிட்டட் 2019 ஒக்தோபர் மாதத்தில் “ஸ்திரத்தன்மை” தொடக்கம் “எதிர்மறை” வரையான மீளாய்வு கண்ணோட்டத்துடன் (SL)AAA இல் பீஓசீ இன் வழங்குநர் தரப்படுத்தலையும் மீள உறுதிப்படுத்தியிருந்ததுடன் இலங்கையிலுள்ள மிகப்பெரிய வங்கி, வெளிப்படையான இறையாண்மை நிலை, அரசாங்கத்திற்கு பிரதான கடன்வழங்குநர் ஒருவராக பணியாற்றுதல் மற்றும் முழுமையான அரச உடைமை போன்றவாறு அதனது உயர்ந்தளவான முறைமைப்படுத்தப்பட்ட முக்கியத்துவத்தை பிரதிபலிக்கின்றது.

### மக்கள் வங்கி (பிபீ)

1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி அதிகாரச்சட்டத்தின் மூலம் இலங்கையில் அரச உடமை வங்கியொன்றாக மக்கள் வங்கியானது கூட்டிணைக்கப்பட்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு மற்றும் அதற்கான திருத்தங்களின் பிரகாரம் இலங்கை கூட்டுறவு இயக்கம், கிராமிய வங்கித்துறை, விவசாயம் மற்றும் கைத்தொழிலை அபிவிருத்தி செய்து உதவியளித்தல் மற்றும் வர்த்தக வங்கி, தங்கநகை முகவர் மற்றும் வியாபார வங்கி வணிகத்தை மேற்கொள்ளுதல் என்பன வங்கியின் நோக்கமாகும்.

மக்கள் வங்கியானது 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு நாடளாவிய ரீதியில் 739 கிளைகளுடன் தற்போது செயற்படுகின்றது. மேலும் 755 ஏரீஎம்கள், 270 சீடிஎம்கள், 222 கியோஸ்கள் மற்றும் 239 சுய வங்கிப் பிரிவுகள் காணப்படுகின்றன.

வங்கி அதன் சட்டமுறை மூலதனத்தை அதிகரிப்பதற்கு ஒப்பீட்டளவில் எளிதாக தொகுதிக்கடன்களை வழங்கக்கூடியவாறு மக்கள் வங்கி (திருத்தம்) சட்ட முன்வரைவு 2019 செப்தெம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. பிந்திய திருத்தமானது, தொகுதிக்கடன்கள் இணங்குகிற Basel III, தட்டு II இல் ரூபா 10 பில்லியனை வங்கி வெற்றிகரமாக அதிகரித்திருந்தது.

டிஜிட்டல் தளத்தில் வங்கியின் வெற்றியானது ஆசிய வங்கியாளர் சஞ்சிகை (Asian Banker Magazine) மற்றும் ஆசியா பணம் (Asia Money) இரண்டின் மூலம் பெற்ற மிகச் சிறந்த டிஜிட்டல் வங்கி 2019 மற்றும் 2019 ஆம்

ஆண்டிற்கான ஆசிய வங்கியாளர் சஞ்சிகை மூலம் சிறந்த நடமாடும் வங்கி பயன்பாட்டின் பெறுநராக இருக்கின்றமை உள்ளடங்கலாக சர்வதேச ரீதியாக பெறப்பட்ட விருதுகள் ஊடாக நிரூபிக்கப்பட்டுள்ளது. தகவல் காப்பு மற்றும் பாதுகாப்பு – ISO-IEC 27001:2013 சான்றிதழிற்கான மிக உயர்ந்த சர்வதேச ரீதியான தர அங்கீகாரத்தையும் வங்கி பெற்றிருந்தது. மேலும் வங்கியானது பல பாராட்டுதல்களை பெற்றிருந்ததுடன் "SLIM NIELSON PEOPLE'S விருதுகள் - 2019", "LANKAPAY TECHNOVATION விருதுகள் - 2019", "ADB TFP விருதுகள் - 2019", "ஆசிய வங்கியாளர் விருதுகள் - 2019", "ஆசியா பணம் விருதுகள் - 2019" மற்றும் "ஐரோப்பிய உலகளாவிய வங்கி மற்றும் நிதி விருதுகள் - 2019" உள்ளடங்கலாக பல தரஅங்கீகாரங்களை பெற்றிருந்தது. வங்கியானது பிற்ச் றேரிங்ஸ் லங்கா லிமிட்டட் மூலம் "AA+(lka)" தேசிய நீண்டகால தரப்படுத்தலொன்றை கொண்டிருந்தது.

ஆண்டு முழுவதும் பல வைப்பு திரட்டல் பிரச்சாரங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் வெவ்வேறு வாடிக்கையாளர் பிரிவுகளை பூர்த்தி செய்வதற்காக பல்வேறு வகையான கடன் தயாரிப்புக்கள் வழங்கப்பட்டன.

## உரிமம் பெற்ற விசேட வங்கிகள்

### தேசிய சேமிப்பு வங்கி (என்எஸ்பீ)

தேசிய சேமிப்பு வங்கியானது 1972 ஆம் ஆணடில் 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டத்தின் மூலம் அந்நேரத்தில் மக்களிற்கு நிதிச் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டிருந்த நான்கு தனித்துவமான நிறுவனங்களை ஒன்றிணைத்து ஸ்தாபிக்கப்பட்டது. 1988 இன் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிமம் பெற்ற விசேட வங்கி என்ற அந்தஸ்து வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது.

வங்கியின் வாடிக்கையாளர்கள் அவர்களது சேமிப்புக்கள் மற்றும் முதலீட்டுத் தேவைப்பாடுகளை உச்ச அளவில் மேம்படுத்துவதற்கான மொத்த நிதி தீர்வுகளை அவர்களிற்கு வழங்கும் அதே நேரத்தில் அதனது அனைத்து பங்காளர்களினதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுதல் வங்கியின் பணிக்கூற்றாகும்.

மேற்படி பணிக்கூற்றை அடைந்து கொள்வதற்கு, 256 கிளைகள், 4,063 தபால் மற்றும் உபதபால் அலுவலகங்கள் மற்றும் 334 எண்ணிக்கையான சீடிஎம்/ ஏரீஎம்/ சீஆர்எம் இயந்திரங்கள் ஊடாக வங்கி தமது சேவைகளினை பகிர்ந்தளித்திருந்தது. மேலும் 4,715 எண்ணிக்கையான பதவியணியினர் நாடு முழுவதும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

என்எஸ்பீக்கு அதன் பெரிய வங்கிகளின் சக குழுவை காலரீதியாக மீளாய்வு செய்வதை பின்பற்றி ஸ்திரமான கண்ணோட்டத்துடன் AAA (lka) தேசிய நீண்டகால தரப்படுத்தலொன்றை பிற்ச் றேரிங்ஸ் உறுதிப்படுத்தியிருந்தது. மேலும் இது எதிர்மறை கண்ணோட்டத்துடன் "B+" ஆக நீண்டகால வழங்குநர் இயல்புநிலை தரப்படுத்தலை (IDRs) உறுதிப்படுத்தியிருந்தது.

### குழுமம்

குழுவானது என்எஸ்பீ பண்ட் மனேஜ்மென்ட் கம்பனி மற்றும் ஸ்ரீ லங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிட்டட் ஆகிய இரண்டு துணைக்கம்பனிகளை கொண்டுள்ளது. வங்கியானது அரசாங்க வரவுசெலவுத் திட்டம் 2016 இல் மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவுடன் கருத்தொருமித்து 2019 ஒக்தோபர் 11 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ஸ்ரீ லங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிட்டட்டை (எஸ்எல்எஸ்பீ) முழுமையாக கொள்வனவு செய்திருந்தது. அதற்கிணங்க துணைக்கம்பனிகளிலுள்ள முதலீடு 2018 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ள ரூபா 1.7 பில்லியனிற்கு எதிராக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 4.8 பில்லியன் வரை அதிகரித்திருந்தது.

### ஸ்ரீ லங்கா சேவிங்ஸ் பாங் (எஸ்எல்எஸ்பீ)

ஸ்ரீ லங்கா சேவிங்ஸ் பாங் ஆனது 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றாக கூட்டிணைக்கப்பட்டு 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மீள பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற விசேட வங்கியொன்றாக இது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வருமானமீட்டும் நுண் தொழில்முயற்சியாளர் மற்றும் எஸ்எம்ஈ வணிக செயற்பாடுகளிற்கு மிகவும் நம்பகத்தன்மையானதும் மிகவும் விரும்பத்தக்கதுமான நிதிச் சேவைகளை உறுதிப்படுத்துவதற்காக சேமிப்பு பழக்கங்களை நிலைநிறுத்துதல் மற்றும் நுண்நிதி மற்றும் எஸ்எம்ஈ வலையமைப்பை எளிதாக்குதல் என்பன வங்கியின் பணிக்கூற்றாகும்.

அபிவிருத்தி விளைவுகளுடன் கண்காணிக் கப்பட்ட தரப்படுத்தலின் கீழ் ஸ்ரீ லங்கா சேவிங்ஸ் பாங்கிற்கு (SL)BBB- வழங்குநர் தரப்படுத்தலை ஐசீஆர்ஏ லங்கா லிமிட்டட் வழங்கியிருந்தது. அதற்கிணங்க வங்கியானது நடுத்தரளவு கடன் அபாயத்தை கொண்டுள்ளதுடன் நிதிக் கடப்பாடுகளை உரிய நேரத்தில் வழங்குவது தொடர்பாக நடுத்தரளவிலான பாதுகாப்பை கொண்டுள்ளது.

### அரச ஈட்டு முதலீட்டு வங்கி (எஸ்எம்ஐபீ)

அரச ஈட்டு முதலீட்டு வங்கியானது அரச உடமை வங்கியொன்றாக உள்ளதுடன் 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், சட்ட ஏற்பாடுகளிற்கிணங்க நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதன் மூலம் விவசாயம், கைத்தொழில் மற்றும் வீடமைப்பு அபிவிருத்திகளிற்கு உதவியளிப்பதே வங்கியின் நோக்கமாகும்.

எஸ்எம்ஐபீ நாட்டிற்கான முதன்மையான வீடமைப்பு வங்கியாகவும் அபிவிருத்தி வங்கி வாடிக்கையாளர், வணிக பங்காளர், ஊழியர்கள், பங்குதாரர்கள், தொழில்நுட்பம் மற்றும் சமூகத்தில் மதிப்புமிக்க பங்காளரொருவராகவும் தொடர்ந்திருப்பது வங்கியின் பணிக்கூற்றாகும்.

மேற்படி பணிக்கூற்றை அடைந்துகொள்வதற்கு, 25 கிளைகள் ஊடாக வங்கி தமது சேவைகளினை பகிர்ந்தளித்திருந்தது.

### வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (எச்டிஎவ்சீ)

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது 1997 இன் 07 ஆம் இலக்க (2003 இன் 15 ஆம் இலக்க மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களால் திருத்தப்பட்ட) இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு 1988 இன் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிமம் பெற்ற விசேட வங்கி என்ற அந்தஸ்தும் வழங்கப்பட்டுள்ளது. அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு மற்றும் அதற்கான திருத்தங்களின் பிரகாரம் அனைத்து இலங்கையர்களினதும் வீடமைக்கும் கனவை நனவாக்குவதற்காக வீடமைப்பு தொடர்பான நிதி வசதிகளை வழங்குவதில் சந்தையில் மறுக்கமுடியாத தலைவராக உருவாகுவதே வங்கியின் பணிக்கூற்றாகும்.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியானது 2019 ஆம் ஆண்டில் புதிய கிளைகள் எதனையும் ஸ்தாபித்திருக்காததுடன் அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ள மொத்தக் கிளைகள் 39 ஆக காணப்பட்டதுடன் BB+ (lka) கடன் தரப்படுத்தலைக் கொண்டிருந்தது.

### பிராந்திய அபிவிருத்தி வங்கி (பிஎஸ்பீ)

பிரதேச அபிவிருத்தி வங்கியானது 2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி அதிகாரச்சட்டத்தின் மூலம் 2010 ஆம் ஆண்டில் ஆறு மாகாண அபிவிருத்தி வங்கிகளை ஒன்றிணைத்து அரச உடமையாக்கப்பட்ட உரிமம் பெற்ற விசேட வங்கியொன்றாக இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கு நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் பிரதானமாக விவசாயம், கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம், கால்நடை, கடற்றொழில் நடவடிக்கைகள் மற்றும் பெண்களை வலுவூட்டுதல் என்பவற்றை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதன் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த பிராந்திய பொருளாதார அபிவிருத்தியை எளிதாக்குவதே வங்கியின் நோக்கமாகும்.

நிதியை அபிவிருத்திக்கு அர்ப்பணித்த நிதி நிறுவனமொன்றாக, பிரதேச அபிவிருத்தி வங்கி நாட்டில் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை தரமுயர்த்துவதில் முக்கிய பங்கை தொடர்ந்து வகித்து வருகின்றது. தீவின் பெரும்பாலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் வங்கி முன்னணியில் உள்ளதுடன் நிதியாளரொருவராக முக்கிய பங்கு

வகிக்கின்றது. வங்கியின் வாடிக்கையாளர்களை வலுவூட்டி அதன் மூலம் அதன் 276 கிளைகளின் நாடளாவிய ரீதியான கிளை வலையமைப்புக்கள் ஊடாக நாட்டை அபிவிருத்தி செய்தல் வங்கியின் கடப்பாடாகும்.

2016 ஆம் ஆண்டிற்கான அரசாங்க வரவுசெலவுத் திட்ட முன்மொழிவிற்கிணங்க பிரதேச அபிவிருத்தி வங்கியானது 2018 திசெம்பர் 31 இல் லங்காபுத்ர வங்கியில் 100 சதவீத பங்கு மூலதனத்தை கொள்வனவு செய்திருந்தது. இதன் மூலம் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியை ஒன்றிணைப்பதற்கு முன்மொழியப்பட்டு அது தொடர்பாக 2018 பெப்ரவரி 14 இல் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. ரூபா 4.176 பில்லியன் தொகையான கொள்வனவு மதிப்புக்காக (Purchase consideration) எல்டிபீ இன் முழுப் பங்குகளையும் பிஎஸ்பீ கொள்வனவு செய்திருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் அமுலுக்கு வரும் வகையில் பொதுத் திறைசேரி சார்பில் குறித்த பெறுமதிக்காக புதிய பங்கொன்றை வழங்கும் வகையில் கொள்வனவு மதிப்பு தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. எல்டிபீ இன் வங்கிச் செயற்பாடுகள் 2019 ஏப்ரல் 1 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பிஎஸ்பீ ஆல் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் 2019 ஏப்ரல் 30 இல் ஒன்றிணைப்பு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள்

### இலங்கை வங்கி

#### வங்கி

- சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது வங்கியின் மொத்த வட்டி வருமானம் ரூபா 220.5 பில்லியன் வரை 12.8 சதவீதத்தாலும் வட்டிச் செலவினங்கள் ரூபா 145.3 பில்லியன் வரை 11.9 சதவீதத்தாலும் அதிகரித்திருந்திருந்தன. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆண்டின் போதான தேறிய வட்டி வருமானம் 14.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. நட்டக் கழிவு கட்டணங்கள் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 3.6 பில்லியனால் அல்லது 23.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. ஆண்டின் போதான ஆளணி செலவினங்கள் 5.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வங்கியானது மீளாய்வாண்டின் போது ரூபா 40.2 பில்லியன் தொகையான வரிக்கு முன்னரான தேறியலாபத்தை பதிவுசெய்திருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறியலாபம் ரூபா 43 பில்லியன் தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2.8 பில்லியன் அல்லது 6.5 சதவீத வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

- எனினும் வங்கியின் ஆண்டிற்கான இலாபம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 10 சதவீத அதிகரிப்புடன் ரூபா 23.1 பில்லியனாக இருந்தது. 2018 ஏப்ரல் 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளிலிருந்து (எஸ்எல்டிபீ) உழைக்கப்பட்ட வட்டி வருமானம் மீது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வழங்கப்பட்ட விலக்களிப்பு காரணமாக வருமான வரிச் செலவினம் குறைவடைந்தமையே இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சராசரி சொத்து மீதான திரும்பல் (ஆர்ஓஏஏ) மற்றும் சராசரி உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓஏஈ) என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 18.75 சதவீதம் மற்றும் 2.9 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

- மொத்தக் கடன் மற்றும் முற்பணங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 1,648.8 பில்லியன் வரை ரூபா 138.3 பில்லியனால் அல்லது 9.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. காலக் கடன்கள், தங்கநகை அடகு, வீடமைப்பு கடன்கள் மற்றும் திட்டங்களின் கீழான கடன்கள் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக பங்களித்திருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது காலக் கடன்கள், தங்கநகை அடகு, வீடமைப்பு கடன்கள் மற்றும் திட்டங்களின் கீழான கடன்கள் முறையே 21 சதவீதம், 19 சதவீதம், 13 சதவீதம் மற்றும் 12 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதே நேரம் மேலதிகப்பற்று, குத்தகை மற்றும்

ஏனைய கடன் மீதிகள் முறையே 9 சதவீதம், 18 சதவீதம் மற்றும் 31 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

- கைத்தொழில் ரீதியான கலவை மதிப்பு பின்னடைவை பின்பற்றி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 24.3 பில்லியனால் அல்லது 44 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இப் பின்னடைவானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது 27 சதவீதத்தால் நட்டக்கழிவுக் கட்டணங்கள் அதிகரித்ததன் ஊடாக பிரதிபலிக்கப்பட்டிருந்தது. மொத்த என்பிஏ விகிதம் மீளாய்வாண்டில் 3.62 சதவீதத்திலிருந்து 4.79 சதவீதம் வரை அதிகரித்திருந்த போதிலும் இது கைத்தொழில் சராசரிக்கிணங்க காணப்பட்டது.

- வங்கியின் மொத்த வைப்பு அடிப்படை ஆண்டின் இறுதியில் 13.2 சதவீதத்தால் அல்லது ரூபா 1,771 பில்லியனிலிருந்து ரூபா 2,005.2 பில்லியன் வரை அதிகரித்திருந்தது.

- 2019 ஆம் ஆண்டிற்கான தட்டு I மூலதனத்திலும் மொத்த மூலதனத்திலும் முறையே 10 சதவீதம் மற்றும் 14 சதவீதமான ஆகக் குறைந்த தேவைப்பாட்டை விஞ்சி முறையே 11.2 சதவீதமும் 15.6 சதவீதமும் வங்கியால் பேணப்பட முடிந்திருந்தது. திரவச் சொத்து விகிதம் (உள்ளூர்), திரவத்தன்மை மேவுகை விகிதம் (எல்கேஆர்) மற்றும் திரவத்தன்மை மேவுகை விகிதம் (அனைத்து நானயங்களும்) என்பன முறையே 20 சதவீதம், 100 சதவீதம் மற்றும் 100 சதவீதமான ஆகக் குறைந்த தேவைப்பாட்டை விஞ்சி மீளாய்வாண்டின் போது முறையே 24.6 சதவீதம், 188.2 சதவீதம் மற்றும் 125.6 சதவீதத்தை பதிவு செய்திருந்தன.

- கொவிட் - 19 சர்வதேச பரவல் காரணமாக வங்கியின் வழமையான வணிக நடவடிக்கைகளில் இடம்பெற்ற மாற்றங்கள் காரணமாக வங்கிக்கான தாக்கம் குறிப்பிடத்தக்களவு காணப்படுகின்றது. கொவிட் - 19 தாக்கத்தை மதிப்பீடு செய்யும் செயன்முறையில் வங்கி உள்ளதுடன் பொருளாதாரத்தை பாதுகாப்பதற்கு அரசாங்கத்தால் கடன்களை காலந்தாழ்த்தி செலுத்துவதற்கான சட்ட உரிமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் கொவிட் - 19 காரணமாக இடம்பெற்ற உண்மையான தாக்கம் இன்னமும் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## தொகுதி

தொகுதியானது 2019 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறியலாபமாக ரூபா 41.5 பில்லியனை அறிக்கையிட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 5.2 சதவீத வீழ்ச்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. தொகுதியின் மொத்த சொத்து அடிப்படை ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 2,462.5 பில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 5.7 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் மொத்த வைப்புக்கள் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 8.9 சதவீதம் மற்றும் 13.1 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

## மக்கள் வங்கி

- வங்கியின் மொத்த வருமானம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 197 பில்லியனை அடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 8.7 சதவீத அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. 2019 ஆம் ஆண்டின் போதான வங்கியின் வட்டி வருமானம் ரூபா 184 பில்லியன் வரை 10.6 சதவீதத்தாலும் வட்டிச் செலவினங்கள் ரூபா 125.5 பில்லியன் வரை 13 சதவீதத்தாலும் அதிகரித்திருந்திருந்தன. எனினும் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 3.1 பில்லியனால் அல்லது 5.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது நட்டக் கழிவு கட்டணங்கள் ரூபா 3.2 பில்லியனால் அல்லது 121 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. வங்கியானது ரூபா 19.7 பில்லியன் தொகையான வரிக்கு முன்னரான இலாபத்தை அறிக்கையிட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டிற்கு எதிராக 19.3 சதவீத வீழ்ச்சியாக காணப்பட்டது.

- வங்கியின் மொத்த வைப்பு அடிப்படை ஆண்டின் போது ரூபா 68 பில்லியனால் அதிகரிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 1,491 பில்லியனை அடைந்திருந்ததுடன் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 47 பில்லியன் அல்லது 3.4 சதவீத அதிகரிப்பொன்றுடன் 2019 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 1,413.6 பில்லியனை அடைந்திருந்தது. வங்கியின் மொத்த சொத்து அடிப்படை 2019 திசெம்பர் மாத இறுதியளவில் ரூபா 1.873 ரில்லியனை உரிமைகோருகின்றது.

- வங்கி மட்டமொன்றில் முழுமையான செயற்பாடற்ற கடன்கள் (NPLs) முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ள ரூபா 31.5 பில்லியனுடன் ஒப்பிடும் போது ஆண்டின் போது ரூபா 43.6 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. இதன் விளைவாக வங்கியின் நட்டக்கழிவுக் கட்டணங்கள் 121 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. 2019 ஆம் ஆண்டின் போது NPLs இல் கைத்தொழில் ரீதியான அதிகரிப்பொன்று காணப்பட்ட போதிலும் வங்கியின் என்பிஎல் விகிதம் 3.3 சதவீதத்தில் காணப்படுகின்றதுடன் இது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4.7 சதவீத கைத்தொழில் சராசரியை விட மிகவும் குறைவாக காணப்படுகின்றது.

- மொத்த தட்டு I மூலதன விகிதம் மற்றும் மொத்த மூலதன விகிதம் என்பன முறையே 10.68 சதவீதம் (ஆகக்குறைந்தது 9.50 சதவீதம்) மற்றும் 14.66 சதவீதம் (ஆகக்குறைந்தது 13.50 சதவீதம்) ஆக காணப்பட்டன. மேலும் வங்கியானது அதன் சட்டமுறை மூலதன மட்டங்களை அதிகரிப்பதற்கு நியாயமான முறையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நிலையான மற்றும் தொடர்ச்சியான செயன்முறையில் காணப்படுகின்றது. 2020 திட்டம் அதன் காணி கட்டிடத்தை மீள்மதிப்பீடு செய்வதை உள்ளடக்குகின்றதால் தொகுதிக்கடன்கள் இணங்குகின்ற Basel III, Tier II இல் ஆகக் குறைந்தது ரூபா 8 பில்லியனை வழங்கி அதன் பங்கிலாபக் கொள்கையை தொடர்ந்து பேணுகின்றது.

## தொகுதி

தொகுதியானது 2019 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறியலாபமாக ரூபா 25.66 பில்லியனை அறிக்கையிட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 17.7 சதவீத வீழ்ச்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. தொகுதியின் மொத்த சொத்து அடிப்படையானது முன்னைய ஆண்டின் ரூபா 1,908 பில்லியன் மீதியுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2,050 பில்லியன் வரை அதிகரித்திருந்தது.

## தேசிய சேமிப்பு வங்கி

- சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வங்கியானது மீளாய்வாண்டின் போது ரூபா 10.5 பில்லியன் தொகையான வரிக்கு முன்னரான தேறியலாபத்தை பதிவுசெய்திருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறியலாபம் ரூபா 7.9 பில்லியன் தொகையாக காணப்பட்டது. வங்கியின் மொத்த வட்டி வருமானம் 2019 ஆம் ஆண்டில் 7 சதவீதத்தால் அல்லது ரூபா 110.5 பில்லியன் தொடக்கம் ரூபா 118.7 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. சராசரி சொத்து மீதான திரும்பல் (ஆர்ஓஏ) மற்றும் சராசரி உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டின் போது முறையே 17 சதவீதம் மற்றும் 4.37 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

- வங்கியின் மொத்த வைப்பு அடிப்படையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 21 சதவீதத்தால் அல்லது ரூபா 839.6 பில்லியன் தொடக்கம் ரூபா 1,016.6 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. மொத்த வைப்பு அடிப்படையில் கால வைப்பின் சதவீதம் 2018 ஆம் ஆண்டில் 76 சதவீதமாக காணப்பட்டு 2019 ஆம் ஆண்டில் 78 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

- மீளாய்வாண்டின் போது வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 31.9 பில்லியனால்

அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 3.69 சதவீதத்தால் கூட்டுறவு கடன் கலவை குறைவடைந்தமைக்கு எதிராக 15.29 சதவீதத்தால் சில்லறைக் கடன் கலவை அதிகரித்தமையே இதற்கான காரணமாகும்.

- வங்கியின் மொத்த என்பிஎல் விகிதம் 2018 ஆம் ஆண்டில் 1.44 சதவீதத்திலிருந்து 2019 ஆம் ஆண்டில் 1.57 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. முகாமைத்துவத்தின் பிரகாரம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நாட்டில் நிலவிய ஏனைய சவாலான நிலைமைகளுடன் கடன்களை அறவீடு செய்வதில் காணப்பட்ட சிக்கல்கள் அதற்கான காரணமாகும்.

- வங்கியின் பொதுவான மூலதன தட்டு I (CET1) விகித நிலைமையானது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13.08 சதவீதத்திலிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12.02 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் மொத்த மூலதன விகிதம் முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறான 15.90 சதவீதத்திற்கு எதிராக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 14.35 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும் வங்கியானது 2019 ஆம் ஆண்டின் போது CET1 இல் 8.5 சதவீதமும் மூலதன போதுமைக்காக நிர்ணயிக்கப்பட்ட மொத்த மூலதன விகிதத்தில் 12.5 சதவீதமுமான ஆகக்குறைந்த சட்டமுறை தேவைப்பாடுகளை அடைந்திருந்தது.

- தொகுதியானது 2019 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறியலாபமாக ரூபா 13.1 பில்லியனை அறிக்கையிட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 65 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் மொத்த வைப்புக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 8 சதவீதம் மற்றும் 21 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

### ஸ்ரீ லங்கா சேவிங்ஸ் பாங்

- வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 197 மில்லியனால் அல்லது 5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. நுண் நிதிக் கடன் ரூபா 91 மில்லியன் அல்லது 7 சதவீதத்தாலும் தனிப்பட்ட கடன்கள் ரூபா 67 மில்லியன் அல்லது 19 சதவீதத்தாலும் குறைவடைந்தமை மேற்படி வீழ்ச்சிக்கு தாக்கமளித்திருந்தன. மேலும் மொத்த செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 106 மில்லியனால் அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

- வங்கியின் மொத்த வைப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 12 மில்லியனால் அல்லது 1 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது நிலையான வைப்பு ரூபா 20 மில்லியன் அல்லது 4 சதவீதம் குறைவடைந்தமை மேற்படி வீழ்ச்சிக்கு தாக்கமளித்திருந்தது.

- அமைப்பு அகவிதியின் பிரகாரம் நிதியுதவி மற்றும் சேவைகள் ஏற்பாட்டின் மூலம் செயற்திறனான சுயதொழில் நுண் கைத்தொழில் முயற்சிகள் மற்றும் கிராமிய வேலை உள்ளடங்கிய பல்வேறு நடவடிக்கைகளூடாக வறியவர்களிற்கான நிலையான வருமானமீட்டும் வாய்ப்புக்கள் மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் என்பவற்றினை இனங்கண்டு, அபிவிருத்தி செய்து, மேம்படுத்தி, ஊக்கப்படுத்தி உதவியளித்தல் வங்கியின் பிரதான நோக்கமாகும். எனினும் மேற்படி பிரதான நோக்கங்களை கருத்தில் கொள்ளாமல் வங்கியானது மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அதன் மொத்த முதலீட்டில் ஏறத்தாழ 72 சதவீதத்தை நிலையான வைப்புக்கள், நிதிக் கருவிகள், மூலதனக் கருவிகள் போன்றவற்றில் முதலீடு செய்திருந்தது.

### அரச ஈட்டு முதலீட்டு வங்கி

வங்கியால் 2020 செப்தெம்பர் 01 இல் உள்ளவாறு திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

- வழங்கப்பட்ட கடன்கள் 2018 ஆம் ஆண்டின் ரூபா 37.9 பில்லியன் தொகையுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் ரூபா 41.2 பில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் இது 8.6 சதவீத அதிகரிப்பாக இருந்தது. ஆகையால் ஆண்டின் போதான வட்டி வருமானம் முன்னைய நிதியாண்டின் ரூபா 6.7 பில்லியனிலிருந்து 15 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 7.7 பில்லியனை அடைந்திருந்தது. மேலும் வங்கி அதன் வைப்பு அடிப்படையை ஆண்டின் போது ரூபா 37.02 பில்லியனிலிருந்து ரூபா 42.5 பில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் இது 14.8 சதவீத அதிகரிப்பாக காணப்பட்டது.

- மொத்தச் சொத்துக்கள் 2018 ஆம் ஆண்டில் ரூபா 49.3 பில்லியனிலிருந்து ரூபா 55.95 பில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் வங்கியின் மொத்தச் சொத்துக்கள் ரூபா 6.7 பில்லியனால் அதிகரித்திருந்தது. வங்கியின் செயற்பாடற்ற கடன் விகிதம் 2018 ஆம் ஆண்டில் 20.46 சதவீதத்திலிருந்து 2019 ஆம் ஆண்டில் 25.26 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

- 2019 ஆம் ஆண்டில் வங்கியானது ரூபா 774 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை அறிக்கையிட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டிற்கு எதிராக 23.17 சதவீத அதிகரிப்பாக இருந்தது. மேலும் வங்கியின் தேறிய வட்டி வருமானம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 661 மில்லியன் அல்லது 29.55 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

- மூலதனப் போதுமை மற்றும் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு, பங்குதாரர்களிற்கான பெறுமதி உருவாக்கம் என்பவற்றிற்கு உயர்ந்தளவு முன்னுரிமை காணப்பட்டதுடன் பங்குதாரர் நிதிகள் 2019 ஆம் ஆண்டில் 7.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. பங்கு ஒன்றுக்கான சொத்துப் பெறுமதி 2019 ஆம் ஆண்டில் ரூபா 73.51 தொடக்கம் ரூபா 79.11 வரை அதிகரித்திருந்தமை 7.6 சதவீத அதிகரிப்பை சுட்டிக்காட்டுகின்றது. எனினும் இலாபத்தன்மை குறைவடைந்தமை காரணமாக 2019 ஆம் ஆண்டின் போது பங்கு ஒன்றிற்கான உழைப்பு ரூபா 8.72 தொடக்கம் ரூபா 7.35 வரை குறைவடைந்திருந்தது. முக்கிய மூலதன விகிதம் (தட்டு 1) மற்றும் மொத்த மூலதன விகிதம் (தட்டு 2) என்பன முறையே 7.00 சதவீதம், 8.5 சதவீதம் மற்றும் 12.50 சதவீதமான சட்டமுறைத் தேவைப்பாடுகளிற்கு எதிராக 18.21 சதவீதம் மற்றும் 19.14 சதவீதமான ஆகக்குறைந்த தேவைப்பாட்டிற்கு மேல் காணப்படுகின்றது. எனினும் இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) 2014 சனவரி 17 ஆம் திகதிய நிதித்துறை ஒன்றிணைப்பு மீதான பிரதான திட்டத்துடன் சேர்த்து வழங்கப்பட்ட 02/17/402/0073/002 ஆம் இலக்க பணிப்புரையின் பிரகாரம் வங்கியானது 2016 சனவரி 01 இல் அதன் முக்கிய மூலதன மீதியாக ரூபா 5,000 மில்லியனைப் பேண வேண்டிய போதிலும் 2015 யூலை 30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கால வரையறை செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் ஆகக்குறைந்த மூலதனத்தைப் பூர்த்தி செய்வதற்காக வங்கியின் வேண்டுகோளின் மீது காலநீடிப்பொன்றை சீபிஎஸ்எல் வழங்கியிருந்தது. அதற்கிணங்க வங்கியானது 2017 சனவரி 01 அளவில் ரூபா 4,000 மில்லியன் தொகையான மற்றும் 2018 சனவரி 01 அளவில் ரூபா 5,000 மில்லியன் தொகையான மூலதனத்தை பெறவேண்டியிருந்தது. வங்கியின் வேண்டுகோளின் மீது ரூபா 5,000 மில்லியன் முழுமையான தேவைப்பாட்டை எதிர்கொள்வதற்கு 2019/06/30 வரை மேலதிக காலநீடிப்பொன்றை மத்திய வங்கி வழங்கியிருந்தது. 2019 ஆம் ஆண்டில் திறைசேரிக்கு வழங்கப்பட்ட AT1 பிணைமுறியின் ஊடாக மேலதிக மூலதனத்தை கொள்வனவு செய்து வங்கியானது ரூபா 5 பில்லியன் மூலதன போதுமை தேவைப்பாட்டுடன் தற்போது இணங்கியிருந்தது.

### பிரதேச அபிவிருத்தி வங்கி

- வங்கியின் மொத்த வைப்பு அடிப்படை மீளாய்வாண்டின் போது ரூபா 8 பில்லியன் அல்லது 5.7 சதவீதத்தால்

அதிகரித்து 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் ரூபா 149.6 பில்லியனை அடைந்திருந்தது. வங்கியின் மொத்த வைப்பு அடிப்படை ரூபா 23 பில்லியன் அல்லது 13 சதவீதத்தால் அதிகரித்து 2019 திசெம்பர் மாத இறுதியளவில் ரூபா 199.99 பில்லியனை விஞ்சியிருந்தது. எல்டிபீ இன் ஒன்றிணைப்பு, முதலீடுகள் மற்றும் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

- வங்கி ரூபா 1.2 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை அறிக்கையிட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டிற்கு எதிராக 41.8 சதவீத வீழ்ச்சியாகக் காணப்பட்டது. நட்டக்கழிவுச் செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மேற்படி வீழச்சிக்கான பிரதான காரணமாகும். வட்டி வருமானம் ரூபா 1.5 பில்லியன் அல்லது 6 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வட்டிச் செலவினங்கள் ரூபா 944 மில்லியன் அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. அதற்கிணங்க தேறிய வட்டி வருமானம் ரூபா 547.6 மில்லியன் அல்லது 5 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்திருந்தது.

- முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறு 5.40 சதவீதத்திலிருந்து 2019 திசம்பர் 31 இல் உள்ளவாறு 9.48 சதவீதம் வரை என்பிஎல் விகிதத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புடன் சொத்து மதிப்பில் பாதகமான போக்கு அவதானிக்கப்பட்டது. கட்டம் 3 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கடன்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த கடன்களிலிருந்து ரூபா 14.1 பில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் இது முன்னைய ஆண்டு இறுதியுடன் ஒப்பிடும் போது 86 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு அதிக அறவீட்டு ஆபத்துடன் மொத்தக் கடன்களில் 18 சதவீதம் கட்டம் 2 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

- 2019 ஆம் ஆண்டின் செயற்பாட்டு செலவினங்களுக்கான பதவியணிக் கிரயமானது 55.4 சதவீதமான துறை விகிதத்துடன் ஒப்பிடும் போது 74.55 சதவீதமாகக் காணப்பட்டது. சொத்துக்கள் மீதான திரும்பல் மற்றும் உரிமை மூலதனம் மீதான திரும்பல் என்பன முன்னைய ஆண்டின் இறுதியுடன் ஒப்பிடும் போது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 0.26 சதவீதம் மற்றும் 3.33 சதவீதம் வரை மேலும் குறைவடைந்திருந்தன. எனினும் வங்கியானது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆகக்குறைந்த மூலதன போதுமை விகிதத்தைப் பேணியிருந்தது.

# தேசிய பாதுகாப்பு

இலங்கை இராஜியத்தை தொடர்ச்சியாக உறுதிப்படுத்துதல் மற்றும் ஆகாயம், கடல் மற்றும் தரைப் பாதுகாப்பை பேணுவதற்காக பின்வரும் செயற்பாடுகளை பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள ஏழு திணைக்களங்களினாலும் ஏழு நியதிச் சட்ட நிறுவனங்களினாலும் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- இலங்கை இராஜ்சியத்தின் தொடர்ச்சியினையும் தேசிய பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துதல்.
- ஆகாயம், கடல் மற்றும் தரை வலயங்களில் பாதுகாப்பினைப் பேணுதல்.
- தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.
- இலங்கையின் கீர்த்தியையும் கௌரவத்தையும் பேணுவதற்காக உதவியளித்தல்
- பாதுகாப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான கொள்கைகளை தயாரித்தலும் அமுல்படுத்துதலும்
- சட்டத்தையும் சமாதானத்தையும் பேணுதல்
- சமூக ஒழுக்கத்தை உறுதிப்படுத்துகின்ற விரிவான சீர்த்திருத்தத்தினை மேற்கொள்ளல்.
- சமூகச் சீர்கேடாக மாறியுள்ள பல்வேறு வகையிலான குற்றங்கள் மற்றும் சமூக விரோதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு ஒழிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்தல்.
- மோட்டார் வாகன போக்குவரத்தினைக் கட்டுப்படுத்துதல்
- ஆபத்தான மருந்துகளைப் பயன்படுத்து தலைத் தடுத்தலும் கட்டுப்படுத்துதலும்
- நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முகாமைத்துவ முறைமையையும் நடைமுறையையும் மேம்படுத்துவதன் மூலம் நம்பகரமான மற்றும் பாதுகாப்பான அச்சக சேவையை மக்களுக்கு வழங்குதல்.

மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போதும், கடந்த இரண்டு ஆண்டுகளின் போதும் பாராளுமன்றத்தினால் ரூபா 1,131,929 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,060,711 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அக்காலப்பகுதியில் பாராளுமன்றம் வழங்கிய நிதி ஏற்பாட்டில் 6.29 சதவீதம் அல்லது ரூபா 71,218 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் உருவப்படம் 20 இல் தரப்படுகின்றது.




உருவப்படம்: 20 - பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டினை பயன்படுத்துதல்.
மூலம்: திறைசேரியின் இறுதிக் கணக்கு கூற்றுக்கள்

மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றது.

## ஐக்கிய நாடுகளின் சமாதானச் செயற்பாட்டு நடவடிக்கைகள்

இலங்கை இராணுவ மற்றும் ஆகாய படை வீரர்கள் 5 நாடுகளில் ஐக்கிய நாடுகளின் சமாதான செயற்பாட்டு கடமைகளை மேற்கொண்டு வந்தன. மீளாய்வாண்டிற்காக ரூபா 3,850 மில்லியன் தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருந்தும் அதில் ரூபா 1,681.41 மில்லியன் அல்லது 43.67 சதவீதம் மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது. லெபனான் மற்றும் சூடான் நாடுகளில் இலங்கை இராணுவப் படையினால் மேற்கொண்ட செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 219.79 மில்லியனும் மத்திய ஆபிரிக்கா மற்றும் தென் சூடானில் இலங்கை விமானப் படையினால் மேற்கொண்ட செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ரூபா 2,184.56 மில்லியனுமாக ரூபா 2,404.35 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. இதில் மத்திய ஆபிரிக்காவின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பெறவேண்டிய ரூபா 280.07 மில்லியன் வருமானம் நிலுவையாகக் காணப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது.

இலங்கை இராணுவப் படை மாலி நாட்டில் 2017 திசெம்பர் 24 ஆந் திகதியிலிருந்து ஐக்கிய நாடுகளின் சமாதானச் செயற்பாட்டுக் கடமைகளை மேற்கொண்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை ஐக்கிய நாடுகள் அமைப்புடன் புரிந்துணர்வுடன் உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருக்கவில்லை. அக்கடமைகளுக்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 6,604,752 அல்லது ரூபா 1,197.96 மில்லியன் வருமானம் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் மற்றும் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

ஐக்கிய நாடுகளின் சமாதானக் கடமைகளுக்காக விசேட அதிரடிப்படையின் யுத்தப் படையணியை மாலி நாட்டில் ஸ்தாபிப்பதற்குத் தேவையான ஆயுதங்கள், யுத்த வாகனங்கள், நடமாடும் வாகனங்கள், தொடர்பாடல் உபகரணங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2016 மே 11 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 300 மில்லியன் நிதிஏற்பாடு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிஏற்பாட்டில் 29.6 சதவீதம் அல்லது ரூபா 88.79 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது ரூபா 880.73 மில்லியன் செலவு செய்து உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த உபகரணங்கள் ஒரு முகாமில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கட்டளையிடும் உத்தியோகத்தர்களால் கடமைக்கு சமூகமளிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிநெறிகள் நடாத்தப்பட்டதுடன் ஐக்கிய நாடுகளின் சமாதான செயற்பாட்டினை 2020 ஆகஸ்ட் மாதம் வரை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## உத்தரவுப்பத்திர வருமானங்களைச் சேகரித்தல்

மீளாய்வாண்டின் போது அரசாங்க பாதுகாப்பு அமைச்சினால் உத்தரவுப்பத்திர கட்டண வருமானமாக ரூபா 32.77 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 1.13 மில்லியன் வருமானம் நிறுவையாகக் காணப்பட்டது. அந்த நிலுவையாக வருமானத்தில் ரூபா 304 மில்லியன் வருமானம் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிறுவையாகக் காணப்பட்டு வந்திருந்தது.

2015 திசெம்பர் 11 ஆந் திகதிய பீஎடீ/04/08/01/59 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் பொருளாதார நிலைமையின் மாற்றங்களை கவனத்தில் கொண்டு அறவிடப்படுகின்ற கட்டணங்கள் காலத்துக்கு காலம் திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும், 1996 இன் 22 ஆம் இலக்க துவக்கு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் துவக்கு உத்தரவுப்பத்திரக் கட்டணம்

நீண்டகாலமாக திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### வழங்கப்பட்ட ஆயுதங்கள் உத்தரவுப் பத்திரங்களைப் புதுப்பித்தல்

உயிர்கள் மற்றும் உடமைகளைப் பாதுகாப்பதற்காக மற்றும் விவசாய மற்றும் விவசாயமற்ற செயற்பாடுகளுக்காக 21 மாவட்டங்களிலுள்ள ஆட்களுக்கு 1,351 பிஸ்டோல் மற்றும் றிவோல்வர்களுக்காக ஆயுதங்கள் உத்திரவுப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியான 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை 14 மாவட்டங்களில் 111 ஆயுதங்களுக்காக வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரங்கள் 2019 ஆம் ஆண்டிற்காக உத்தரவுப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் அமைச்சினால் துவக்குகள் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க விவசாய மற்றும் விவசாயமற்ற செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட ஆயுதங்கள் உத்தரவுப் பத்திரத்தனை புதுப்பித்தலானது மாவட்ட செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 04 மாவட்டங்களின் 81 பிரதேச செயலகப் பிரிவுகளில் உத்தரவுப் பத்திரங்களினை புதுப்பித்தல் சம்பந்தமாக மேற்கொண்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது 12 மற்றும் 16 போர்களான 9,421 ஆயுதங்களில் 2,288 ஆயுதங்கள் 2019 பெப்ரவரி மாதம் வரை உத்தரவுப் பத்திரங்களை புதுப்பித்திருக்கவில்லை.

வழங்கப்பட்ட ஆயுதங்களின் உத்தரவுப் பத்திரங்கள் சம்பந்தமாக 2017 ஆம் ஆண்டின் போது கம்பஹா மாவட்டத்தின் 09 பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது 04 பிரதேச செயலகப் பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் ஆயுதங்களின் உத்தரவுப் பத்திரதாரர்கள் மரணமடைதல், உத்தரவுப் பத்திரதாரர்கள் மரணமடைந்தும் பிள்ளைகள் பதிவு செய்தலை கைவிடல், ஆயுதங்களை தேடிக் கண்டுபிடிக்க முடியாமை, ஒப்படைத்தலை முறைப்படியாக உறுதிப்படுத்தாமை, களவாடல் எனக் குறிப்பிடல், ஆயுதங்கள் விற்பனை செய்யப்பட்ட பிரிவுகளில் வீட்டு இலக்கம் / விலாசம் இல்லாத ஆயுதங்கள் காணாமல் போனமை விலாசங்கள் இல்லாமை வெளிநாடு சென்றுள்ளமை, தகவல்களை தேடிக்கண்டு பிடிக்க முடியாமை முதலிய காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவை மீளாய்வாண்டின் இறுதிவரையும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

### நிலுவையாக இருந்த கடன் மீதிகள்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சில் சேவையில் ஈடுபட்டதிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த, ஓய்வுபெற்ற, வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட மற்றம் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஏனைய 1500 உத்தியோகத்தர்களிடமிருந்தும் ரூபா 8.87 மில்லியன் தொகையான கடன் மீதி அறவிட வேண்டியிருந்தது. அக்கடன் மீதிகளில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 3.23 கடன் மீதி நிலுவையாகக் காணப்பட்டது.

இலங்கை கடற்படையினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஊழியர் கடன்களின் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 22 மில்லியன் (கடற்படை முகாமில் சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களைத் தவிர்த்து) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

இலங்கை இராணுவப் படையின் மரணமடைந்த உத்தியோகத்தர்கள், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து வேலையிலிருந்து இடை நிறுத்திவைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 63.06 மில்லியன் கடன் மீதி 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலமாகக் காணப்பட்டு வந்திருந்தும் அக்கடன் மீதியை அறவீடு செய்தல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

### தந்திரோபாய பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு செயற்திட்டம்

தேசிய பாதுகாப்பிற்கு குறிவைக்கப்பட்டுள்ள தற்கால சவால்களுக்கு முகங்கொடுப்பதனை

முன்னிட்டு பாதுகாப்பு சேவைகளுக்கு மத்தியில் ஒரு பொதுவான தொடர்பாடல் இயந்திரத்தினை உருவாக்குவதற்காக முப்படைகளை உள்ளடக்கி பொலிஸ் சேவையின் அடுத்துவரும் 10 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகள் வரையான காலப்பகுதி முழுவதும் பரந்திருக்கும் தொடர்பாடல் தேவைப்பாட்டினை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக பேச்சு, தரவு, உருவம் மற்றும் தரவு மூலங்களை அடிப்படையாகக் கொண்ட வலையமைப்பிற்காக ரூபா 1,192 மில்லியனுக்கு புதிய 11 தொடர்பாடல் கோபுரங்களை நிர்மாணிப்பதற்கும் காணப்படும் 10 கோபுரங்களின் மூலம் நாட்டின் 21 இடங்களினூடாக 37 மைக்ரோ அலைவரிசை வானொலி வழிகளை உள்ளடக்கிய எதிரொலி முறைமையை ஸ்தாபிப்பதற்கு 2013 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

2016 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்ட அச்செயற்திட்டம் 2019 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகள் மேலதிக காலத்தைப் பெற்றிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரை அச்செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு முடியாது தொடரந்தும் செயற்பட்டு வந்தது. தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு, மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பவற்றை உள்ளடக்கிய 04 அரசாங்க நிறுவனங்கள் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி செயற்திட்ட இடத்தை தெரிவு செய்தல், தொடக்க அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல், 11 தொலைத்தொடர்பு கோபுரங்களின் பெறுகை நடவடிக்கைகள், கோபுரங்களை நிர்மாணித்தல் ஆகிய செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க அளவு தாமதங்கள் இடம்பெற்றிருந்தது. நுண் அலை வானொலி ஒலிபரப்பு முறைமையை கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கைகளுக்காக 05 ஆண்டுகள் காலத்திற்குள் மூன்று சந்தர்ப்பங்களின் போது கேள்வி மனுக்களைக் கோரி மதிப்பீடு செய்யப்பட்டு இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் கோபுரத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட 22 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் 2017 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

## அங்கீகாரத்தினை மிகைத்து கொடுப்பனவு செய்தல்

யுத்த காலத்தில் பயங்கரவாதிகளிடமிருந்து வாகனங்கள் பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப்பட்டதன் பின்னர் அந்த வாகனங்களைப் பயன்படுத்தும் போது ஏற்பட்டிருந்த பல்வேறு சிக்கல்களின் காரணமாக அந்த வாகனங்களை முறைப்படியாக முப்படைகளுக்கு ஒப்படைப்பதற்காக மீளாய்வு செய்யப்பட்டிருந்தது. அந்த மீளாய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 50,000 வீதம் கொடுப்பனவு செய்வதற்காக திறைசேரி செயலாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சினால் மீளாய்வாண்டின் போது அந்த அங்கீகரித்த எல்லையை மிகைத்து ரூபா 3.08 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## மரங்களை வெட்டுவதற்காக பயன்படுத்துகின்ற இயந்திர வாள்களைப் பதிவுசெய்தல்

சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நாட்டிலுள்ள வளத்தை பாதுகாப்பதற்கு அமுல்படுத்தப்படுகின்ற தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு சமாந்தரமாக நடமாடும் இயந்திர வாள்களைப் பயன்படுத்தி அனுமதியின்றி மரங்களை வெட்டுவதன் காரணமாக காடுகள் அழிவதனைத் தவிர்க்கும் குறிக்கோளுடன் அமைச்சினால் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் மூலம் பிரசுரிக்கப்படுவதற்காக ரூபா 3.29 மில்லியன் மற்றும் ஆவணங்களை அச்சிடுவதற்காக ரூபா 1.45 மில்லியனுமாக ரூபா 4.74 மில்லியன் மொத்த தொகை அமைச்சினால் செலவு செய்யப்பட்டிருந்தது. நாட்டிலுள்ள 42 பொலிஸ் பிரிவுகளின் கீழுள்ள 484 பொலிஸ் நிலையங்களில் 82,614 இயந்திர வாள்கள் மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்டிருந்தும் 2019 மே 31 ஆந் திகதியின் பின்னர் அந்த தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை ஒரு நிரந்தர நிகழ்ச்சித்திட்டமாக அமுல்படுத்துவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## விடுமுறை விடுதி மற்றும் விழா மண்டப வருமானம்

இலங்கை கடற்படையினால் 06 கடற்படை ஓய்வறையும் 08 விடுமுறை விடுதிகளும் 06

விழா மண்டபங்களும் பேணப்பட்டு வந்ததுடன் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக கடற்படை உத்தியோகத்தர்களும் ஏனைய உத்தியோகத்தர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அந்த கடற்படை உத்தியோகத்தர்களினதும் ஏனைய உத்தியோகத்தர்களினதும் சம்பளங்களும் படிகளுமாக திரட்டு நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்டதுடன் அதன்மூலம் சேகரிக்கப்படும் வருமானம் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்படவில்லை. உரிய விடுமுறை விடுதிகள் மற்றும் விழா மண்டபங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் அச்செயற்பாடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்விற்குரிய அறிக்கைகளின் பிரதிகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே இலங்கை கடற்படையின் 07 கடற்படை ஒய்வறைகளை உள்ளடக்கும் வகையிலான 17 கடற்படை முகாம்களின் 122 ஏக்கர்களுக்கு அதிகமான காணிப் பரப்பளவில் பயிர்ச்செய்கை செய்யப்பட்டிருந்தது. பயிர்ச்செய்கைக்காக திரண்ட நிதியத்திலிருந்து சம்பளம் பெறுகின்ற 111 கடற்படை வீரர்கள் பங்களிப்புச் செய்திருந்ததுடன் பயிர்ச்செய்கையிலிருந்து கிடைத்த ரூபா 8.8 மில்லியன் வருமானம் அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்படாது கடற்படை விவசாய நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### கொடுப்பனவு வவுச்சர்கள் தயாரிக்கப்படாமை

நிதிப்பிரமாணம் 225(1) இன் பிரகாரம் அனைத்து கொடுப்பனவுகளுக்காகவும் வவுச்சர்களை நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சரியாக முழுமையாகத் தயாரிக்கப்பட்டு கொடப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், இலங்கை கடற்படையினால் வவுச்சர்கள் தயாரிக்கப்படாது ரூபா 305.5 மில்லியன் மொத்த தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### திருகோணமலை கப்பல்தள இறங்குதுறையை நிர்மாணித்தல்

திருகோணமலை கப்பல்தள இறங்குதுறையை நிர்மாணிப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 136.8 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிதிசார் செயல்முன்னேற்றம் 13.68 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### உள்ளக நிதியத்தினைப் பேணுதல்

2011 நவம்பர் 30 ஆந் திகதிய 852 ஆம் இலக்க விமானப் படைத்தளத் தளபதியின் 5 ஆம் இலக்க விமானப் படைக் கட்டளையின் பிரகாரம் இலங்கை கடற்படை தலைமையத்தில் பல்வேறு முகாம்கள் மற்றும் பிரிவுகளில் 97 உள்ளக நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்நிதியங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் நிதியத்தின் 5லம் மேற்கொள்ளப்படுகின்ற இலாபம் உழைக்கும் செயற்திட்டங்களுக்காக இலங்கை விமானப் படையின் பௌதீக மற்றும் மனித வளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 1499(அ) உறுப்புரையின் பிரகாரம் எதுவித எழுத்து மூல ஒரு சட்டத்தின் கீழ் காட்டப்படாத அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற அனைத்து பெறுவனவுகளும் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அந்த நிதியத்தின் மூலம் உருவாகின்ற வருமானம் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### ஹெலிடுவர்ஸ் கம்பனியை ஒரு அரசாங்க கம்பனியாக மாற்றுதல்

இலங்கை விமானப் படையின் பௌதீக மற்றும் மனித வளங்களைப் போல நிதியத்தினைப் பயன்படுத்தி ஒரு தனிப்பட்ட கம்பனியாக ஹெலிடுவர்ஸ் கம்பனி செயற்படுத்தப்பட்டு வருகின்றது. 2010 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான 10 ஆண்டுகள் காலத்திற்குள் ரூபா 57.4 மில்லியன் இலாபம் கம்பனியால் உழைக்கப்பட்டிருந்தது. அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களம் வழங்கிய ஆலோசனை மற்றும் அரசாங்க கணக்குகள் தொடர்பான தெரிவுக் குழுவினால் வழங்கிய சிபார்சுகளின் பிரகாரம் அந்த தனியார் கம்பனியை ஒரு அரசாங்க கம்பனியாக மாற்றி அதன் பங்குகளின் உரிமையை

பொதுத்திறைசேரியின் செயலாளருக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### ஆகாய விமான வாடகை வருமானம்

மீளாய்வாண்டின் இறுதிவரை இலங்கை விமானப் படையினால் சேகரிக்கப்படுகின்ற ஆகாய விமான வாடகை வருமானத்தில் ரூபா 13.17 மில்லியன் வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. அந்த நிலுவையாக இருந்த வருமானத்தில் ரூபா 10.82 மில்லியன் வருமானம் 4 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகள் வரையான காலமாக காணப்பட்டுவரும் மீதியாகும். அந்த நிலுவையாகயிருந்த வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கையானது பலவீனமான நிலையில் காணப்பட்டது.

### இராணுவ வீரர் நலன்புரி

ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கு 354 சக்கர நாற்காலிகளும் 583 ஊன்று கோல்களும் 472 செயற்கைப் பாதங்களும், 165 கண்ணாடிகளும் வேண்டப்பட்டிருந்தன. எனினும் ரணவிரு சேவா அதிகாரசபையினால் 25 சக்கர நாற்காலிகள், 29 ஊன்று கோல்கள், 09 செயற்கைப் பாதங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், கண்ணாடிகள் எதுவும் வழங்கப்படவில்லை. இதற்கிணங்க இராணுவ வீரர்களின் தேவைப்பாட்டினை நிறைவேற்றும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது. அவ்வாறே இதற்காக 2019 யூலை 11 ஆந் திகதிய எமக்காக நாம் நிதியத்தலிருந்து ரூபா 10 மில்லியன் இதற்காக வழங்கப்பட்டிருந்தும் அதிகாரசபையினால் உதவி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு அது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### நீரிழிவு நிலையத்தை ஸ்தாபித்தல்

நீரிழிவு நிலையத்தை ஸ்தாபிப்பதற்காக இலங்கை விமானப் படைக்கு ரூபா 297.85 மில்லியன் நிதிஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரை அந்த நிதிஏற்பாட்டில் எதுவித பயன்பாடும் இடம்பெற்றிருக்காமையின் காரணமாக வழங்கப்பட்ட நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

### நட்டங்கள் மற்றும் சேதங்கள்

மீளாய்வாண்டின் இறுதிவரை இலங்கை இராணுவப் படையின் 172 சம்பவங்கள் தொடர்பாக ரூபா 143,368.75 மில்லியன் நட்டங்கள் மற்றும் சேதங்கள் காணப்பட்டன. இந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் 1 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலமாகக் காணப்பட்டு வந்திருந்ததுடன் அந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக பொறுப்பான நபர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு முடியாதிருந்தது.

### ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலை

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்து மாணவர்களுக்கு நடைமுறைப் பயிற்சிகளை வழங்குவதற்காக போதனா வைத்தியசாலை 2017 மே மாதத்தின் போது திறக்கப்பட்டு வைத்தியசாலையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 திசெம்பர் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டது. இவ்வைத்தியசாலைக்காக ஐ.அ.டொலர் 177.329 மில்லியன் வெளிநாட்டு பணமும் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,165.12 மில்லியன் பணமும் ஈடுபடுத்தப்பட்டு இந்த போதனா வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்ட பற்கள் அலகு நிறைவேற்றுப் பரிசோதனை அலகு, சிறுநீரக அலகு, 05 ஆம் மாடியின் மருத்துவ வாட்டு, 7 ஆம் மாடியின் கண், காது, தொண்டை அலகு, 8 ஆம் மாடியின் இருதய சிகிச்சை அலகு என்பவற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதி வரை ஆளணிப் பற்றாக்குறை மற்றும் ஏனைய குறைபாடுகளின் காரணமாக ஒட்டுமொத்த இயலளவில் 30 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### குற்றங்களைத் தீர்த்துவைத்தல்

நாட்டில் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதன் முன்னேற்றத்தை பிரதிபலிக்கும் பிரதான அளவு கோலானது நாட்டில் குற்றங்கள்

அறிக்கையிடப்படுதலின் எதிர்பாராத அளவும் அறிக்கையிடப்பட்ட குற்றங்களை தீர்த்து வைத்தல்களின் ஒப்பீட்டு பெறுமதியாகும். இலங்கை பொலிசுக்கு கிடைத்த முறைப்பாடுகளில் தீர்வு காணப்பட்ட முறைப்பாடுகளின் அளவில் சதவீதம் தொடர்பான தகவல்கள் அட்டவணை 15 இல் தரப்படுகின்றது.

| | குற்றங்களின் வகை | 2018 | | | 2019 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கை யிடப்பட்ட அளவு | தீர்வு காணப்பட்ட அளவு | தீர்வு காணப்பட்ட சதவீதம் | அறிக்கை யிடப்பட்ட அளவு | தீர்வு காணப்பட்ட அளவு | தீர்வு காணப்பட்ட சதவீதம் |
| 01 | வலுவான குற்றங்கள் | 36,355 | 28,246 | 77.69 | 34,578 | 25,612 | 74.07 |
| | பிள்ளைகளுக்கு எதிரான வலுவான குற்றங்கள் | 3,344 | 1,572 | 47.01 | 3,065 | 1,742 | 56.84 |
| | பெண்களுக்கு எதிரான வலுவான குற்றங்கள் | 775 | 326 | 42.06 | 638 | 248 | 38.87 |
| 02 | சிறு குற்றங்கள் | | | | | | |
| | சிறு தவறுகள் - ஆட்களுக்கு எதிராக | 41,888 | 27,831 | 66.44 | 39,463 | 25,405 | 64.38 |
| | சிறு தவறுகள் - ஆதனங்களுக்கு எதிராக | 31,415 | 14,143 | 45.02 | 29,490 | 12,760 | 43.27 |
| 03 | நானாவித முறைப்பாடுகள் | 971,617 | 971,617 | 100.00 | 959,015 | 893,373 | 93.16 |
| 04 | மது சம்பந்தமான குற்றங்கள் | 129,813 | 104,048 | 80.15 | 112,414 | 103,741 | 92.28 |
| 05 | போதைப் பொருட்கள் சம்பந்தமான குற்றங்கள் | 124,940 | 120,052 | 96.09 | 129,765 | 124,166 | 95.69 |
| 06 | மோசடிக் குற்றங்கள் | 954 | 868 | 90.99 | 1,274 | 1,182 | 92.78 |
| 07 | நியதிச்சட்ட தவறுகள் | 40,607 | 38,102 | 93.83 | 36,629 | 34,530 | 94.27 |

அட்டவணை 15 - இலங்கை பொலிசுக்கு கிடைத்த முறைப்பாடுகளில் தீர்வு காணப்பட்ட முறைப்பாடுகளின் அளவின் சதவீதம்
மூலம்:- இலங்கை பொலிஸின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் தகவல் அறிக்கை

அட்டவணை 15 இல் குறிப்பிட்ட 07 வகையான குற்றங்களில் 04 வகையான குற்றங்கள் சம்பந்தமாக தீர்வுகளின் சதவீதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் குறைவடைந்துள்ளது.

## மோட்டார் வாகன விபத்துக்களைத் தவிர்த்தல்

மக்களின் உயிர்களையும் ஆதனங்களையும் பாதுகாக்கும் வகையில் போக்குவரத்தினை முறைப்படுத்துவதற்குத் தேவையான

நடவடிக்கைகள் எடுத்தல் இலங்கை பொலிஸின் செயற்பாடாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கையானது மீளாய்வாண்டின் போது 5,323 ஆல் குறைவடைந்து மரணமடைதல் விபத்துக்களின் சதவீதம் 10 சதவீதத்தாலும் பாரதூரமானதாக காயமடைதல் விபத்துக்களின் எண்ணிக்கை 9 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. 2017 – 2019 காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்களின் எண்ணிக்கை அட்டவணை 16 இல் தரப்படுகின்றது.

| விபத்துக்களின் வகை | விபத்துக்களின் எண்ணிக்கை திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | **2017** | **2018** | **2019** |
| மரண விபத்துக்கள் | 2,962 | 2,953 | 2,645 |
| பாரதூரமான விபத்துக்கள் | 8,666 | 8,475 | 7,718 |
| சிறு காயமுள்ள விபத்துக்கள் | 13,102 | 12,264 | 10,679 |
| சேதம் ஏற்படும் விபத்துக்கள் | 12,866 | 12,064 | 9,391 |
| மொத்தம் | 37,596 | 35,756 | 30,433 |

அட்டவணை:- 16 - நாட்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்களின் எண்ணிக்கை
மூலம்:- இலங்கை பொலிசின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் தகவல் அறிக்கை

## போதைப் பொருள் கட்டுப்பாடு

ஆபத்தான மருந்துகளைப் பயன்படுத்துதல் மற்றும் சுழற்சியினைத் தடுத்தல் இலங்கை பொலிஸின் செயற்பாடாகும். போதைப் பொருட்கள் சம்பந்தமான தவறுகளை அறிக்கையிடுதலை 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது 4,825 ஆல் அதிகரித்திருந்ததுடன் ஹரோயின் கைப்பற்றிய அளவு 1,380 கிலோ கிராம்களாலும் ஹரோயின் சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட நபர்கள் 8,672 இனாலும் அதிகதித்திருந்தது. விபரம் அட்டவணை 17 இல் தரப்படுகின்றது.

| வகை | 2018 | | | | | | | 2019 | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அறிகை | பிடிப்பட்ட அளவு | வழக்கு தாக்கல் செய்யப்பட்ட அளவு | குற்ற வாளியான நபர்களின் அளவு | பறிமுதல் செய்யப்பட்ட அளவு | | | அறிகை | பிடிப்பட்ட அளவு | வழக்கு தாக்கல் செய்யப்பட்ட அளவு | குற்ற வாளியான நபர்களின் அளவு | பறிமுதல் செய்யப்பட்ட அளவு | | |
| | | | | | கிலோ கிராம் | கிராம் | மில்லி கிராம் | | | | | கிலோ கிராம் | கிராம் | மில்லி கிராம் |
| கஞ்சா | | 71,505 | 69,886 | 63,603 | 8,884 | 457 | 162 | | 63,585 | 62,024 | 56,231 | 15,389 | 235 | 934 |
| அபின் | | 3 | 1 | 1 | - | 8 | 380 | | 169 | 141 | 147 | 9 | 583 | 198 |
| ஹசீஸ் | | 199 | 189 | 161 | 82 | 291 | 597 | | 603 | 597 | 536 | 10 | 164 | 637 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஹரோயின் | 47,355 | 44,346 | 36,356 | 721 | 363 | 175 | 56,482 | 52,553 | 44,983 | 2,101 | 691 | 246 |
| மொபின் | 254 | 187 | 165 | - | 194 | 784 | 18 | 18 | 18 | - | 1 | 950 |
| கெகேன் | 74 | 62 | 45 | 9 | 859 | 780 | 133 | 122 | 119 | 24 | 725 | 653 |
| ஏனையவை | 5,550 | 5,381 | 4,770 | 556 | 389 | 26 | 8,775 | 8,711 | 7,907 | 480 | 845 | 576 |
| மொத்தம் | 124,940 | 120,052 | 105,101 | 10,254 | 563 | 904 | 129,765 | 124,166 | 109,941 | 18,016 | 246 | 194 |

அட்டவணை:- 17 -போதைப் பொருட்கள் சம்பந்தமான குற்றங்கள் தொடர்பான தகவல்கள்
மூலம்:- இலங்கை பொலிசின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் தகவல் அறிக்கை

## பிரதான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதலின் செயல்முன்னேற்றம்

2014 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட பொலிஸ் கட்டளைச் சட்டத்தினை திருத்துதல் 2017 மே மாதத்தின் போது அறிக்கை ஒப்படைக்கப்பட்டிருந்த “பொலிஸ் மீளமைப்பு செயல்நடவடிக்கைத் திட்டம்” இனை அமுல்படுத்துதல் 2015 ஆம் ஆண்டிலிருந்து இனங்காணப்பட்ட இலங்கை பொலிசுக்காக ஒரு பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்தல் 2014 ஆம் ஆண்டிலிருந்து திட்டமிடப்பட்டு வந்த சுயமாக தண்டங்களைச் செலுத்தும் முறைமையை ஸ்தாபித்தல் ஆகிய பிரதான செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டின் இறுதிவரையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

# நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள்

குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு நீதி வழங்குவதில் வினைத்திறன் மற்றும் அர்த்தமுள்ள முறையொன்றைத் தாபிப்பதற்கு நீதி மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களினூடாகப் பங்களிப்பை பெற்றுக் கொடுப்பதனால் உச்ச நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மஜிஸ்ரேட் நீதிமன்றம் மற்றும் சிறுவர் மஜிஸ்ரேட் நீதிமன்றம் என்பவற்றில் பதிவு செய்யப்பட்டிருந்த வழக்குகளுக்கு இறுதித் தீர்ப்பு மற்றும் தீர்மானம் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

நீதி மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் சிறைச்சாலைகள் திணைக்களம் ஆரம்பக் காலத்தில் சிறைக் கைதிகளுக்கு பாதுகாப்பு மற்றும் அடைக்கலம் வழங்கிய போதிலும் தற்காலத்தில் அதற்கு மேலதிகமாகச் சென்று சிறைக் கைதிகளைச் சிறந்த புனர்வாழ்வு முறையில் ஈடுபடுத்தும் சமூக சுத்திகரிப்பு நிலையமாக மாறியுள்ளது. இதற்கமைய நாடு முழுவதிலும் பரந்துள்ள 03 பாதுகாப்புச் சிறைச்சாலைகள், 19 ரிமாண்ட் சிறைச்சாலைகள், 02 இளைய தவறிழைத்தோரினைத் திருத்தும் மத்திய சிறைச்சாலைகள், 09 தொழில் முகாம்கள் 02 திறந்த தொழில் முகாம்கள், 20 சிறைக்கூடங்கள் மற்றும் 01 சிறைச்சாலைப் பாடசாலை என்பன சிறைச்சாலைகள் அதிகாரிகளின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

இந்தப் பிரிவிற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா. 59.38 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த 03 வருடத்திலும் மொத்தமாக ரூபா. 53.95 மில்லியன் உபயோகிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த 03 ஆண்டுகளில் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் ரூபா. 5.43 உபயோகிக்கப்படாது இருந்தது. உரு 21 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 21 – மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவு
மூலம் - திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கை

### சேதங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை

நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சிற்குரிய கெப் வாகனமொன்று 2017 மார்ச் 08 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி அன்று தொடக்கம் வெளி இடமொன்றில் நிறுத்தப்பட்டு 2 வருடங்களுக்கும் அதிகமான காலத்திற்குப் பிறகு அமைச்சு வளாகத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. அந்த வாகன விபத்து தொடர்பில் 2017 ஜுன் 07 ஆம் திகதி விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், குழுவினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையானது 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

- அமைச்சின் கீழுள்ள சர்வதேச தீர்ப்பனவு மையமானது 2013 ஆம் ஆண்டு தொடக்கம் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட இடத்திலேயே தாபிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஜுன் வரையான காலப்பகுதிக்காக ரூபா. 18.82 மில்லியன் தொகை வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. இந்த மத்திய நிலையமானது 2016 திசெம்பர் மாதம் தொடக்கம் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகத் தாபிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்திற்குத் தேவையான மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளும் முறை தொடர்பில் தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருக்காததுடன், பணிப்பாளர் குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருக்காததால் நிறுவனம் இயக்கம் எதுவுமின்றி இருந்தது. இதற்கமைய 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 06 வருட காலங்கள் கடந்துவிட்ட போதிலும், இந்த மத்திய நிலையத்தினை நிலையான இடத்தில் அமைப்பதற்கு நீதி அமைச்சு தவறியிருந்ததுடன் அமைக்கப்பட்ட நிறுவனமும் இயங்காததால் 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா. 18.82 மில்லியன் வாடகை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாகியிருந்தது. 2019 ஜுலை மாதம் தொடக்கம் இந்த மத்திய நிலையம் நீதி அமைச்சின் கீழான கடமைப் பொறுப்புகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.
- அமைச்சினால் ரூபா. 1.28 மில்லியன் செலவில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டுடன் I ஆவது தொகுதி வரையான 66,171 சட்ட அறிக்கைப் பிரதிகள் எவ்வித பயனுமின்றி அமைச்சில் சேகரித்து வைக்கப்பட்டிருந்தமையால் அதற்காக செலவிடப்பட்ட தொகை பலன் எதுவுமின்றி இருந்தது.
- 03 ஆண்டு கால உத்தரவாதக் காலத்துடன் 2016 ஆம் ஆண்டில் ரூபா. 1.35 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த வைரஸ் காப்புடன் கூடிய 14 கணினிகள், அச்சிடல் இயந்திரம் உள்ளிட்ட ஏனைய துணைக்கருவிகள் 2017 மார்ச் 23 ஆம் திகதி நீர்கொழும்பு சிறைச்சாலைக்குக் கிடைக்கப்பெற்றிருந்தது. 2020 மே 31 ஆம் திகதியில் 03 வருட உத்தரவாதக் காலம் கடந்திருந்த போதிலும், அத்தினம் வரையிலும் அந்தக் கணினிகள் மற்றும் துணைக்கருவிகள் எதிர்பார்க்கப்பட்ட அலுவல்களுக்கு உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை.

### வழக்குத் தீர்ப்புகள் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்தல்

அமைச்சினால் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்புகளை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கு மொழி பெயர்ப்புச் செய்வதற்கு 2004 ஒகஸ்ட் 01 ஆம் திகதி முதல் மொழிபெயர்ப்புப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டு இருப்பினும், 2020 ஒகஸ்ட் மாதம் வரையிலும் அந்த மொழிபெயர்ப்புப் பிரிவு செயற்பட்டிருக்கவில்லை. அது வரையிலும் 2004 ஆம் ஆண்டின் I ஆவது தொகுதி தொடக்கம் 2011 ஆம் ஆண்டின் I ஆவது தொகுதி வரையான சட்ட அறிக்கை சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பு செய்வதற்கு ரூபா. 4.06 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில் அச்சிடல் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2004 ஆம் ஆண்டின் I ஆவது தொகுதியில் 03 பகுதிகள் இரண்டாவது சரவைப்படி பார்த்தலுக்கு பிரதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு அரச அச்சகத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவை திரும்ப கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

### அரச நிதியினை துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமளித்தல்

முறையான உள்ளக நிர்வாக ஒழுங்கு முறையொன்றினைத் தயாரித்திருக்காமையால் 2019 செப்டெம்பர் 04 ஆம் திகதி நுகேகொடை உயர் நீதிமன்றத்திற்குக் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா. 223,916 தொகையானது 2020 ஜனவரி 20 ஆம் திகதி வரையிலும் வங்கியில் வைப்பிலிடப்படாது இடைநடுவில் வைத்திருந்தும் மற்றும் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் பூகொடை உயர் நீதிமன்றத்தின் தண்டப் பணம், ஜாமீன் பணம் மற்றும் தவணைப் பெறுகைகளில் ரூபா. 1,190,071 தொகை போலி ஆவணங்களைப் பயன்படுத்தி துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

### பணிகள் ஆரம்பிக்கப்படாத செயற்றிட்டங்கள்

நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தின் நீதிபதியின் உத்தயோகபூர்வ இல்லம் நிர்மாணிப்பதற்கு 2019 நவம்பர் மாதத்தில் ரூபா. 5.47 மில்லியன் தொகையானது வேலை தொடங்குவதற்கான முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2020 மே 31 ஆம் திகதி வரையிலும் அந்தச் செயற்றிட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய 06 மாதங்களுக்கும் அதிகமான காலம் வெளி நபர்களுக்கு அரச நிதியினைத் தவறான வழியில் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

### செயற்றிட்டங்கள் இடைநடுவில் கைவிடப்படல்

2010 ஆம் ஆண்டு வெளி ஒப்பந்தகாரரொருவருக்கு வழங்கப்பட்டிருந்த சட்ட உதவி மற்றும் சமூகத் திருத்தல் கட்டட நிர்மாணத்திற்காக அந்த ஆண்டில் வெளி ஒப்பந்தகாரரொருவருக்கு வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் ஒப்பந்தக்காரரினால் அந்த ஒப்பந்தம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அது வரையிலும் செலுத்தப்பட்டிருந்த முற்பணத்தில் ரூபா. 254,691 தொகையும் மற்றும் செயற்றிறன் உத்தரவாதமான ரூபா.339,595 தொகையுமாக மொத்தம் ரூபா.594,286 அறவிடப்பட வேண்டியதாக இருப்பினும், 2020 பெப்ரவரி 06 ஆம் திகதி வரையிலும் அந்தத் தொகையானது அறவிடப்படாது இருந்தது.

### நிலுவை வருமானம்

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், சட்ட ரீதியான நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்ற அரச நிறுவனங்களுக்குக் கட்டணம் அறவிடப்படும் அடிப்படையில் சட்ட ரீதியான சேவைகள் மற்றும் சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தன. அந்தச் சேவைகளுக்காக 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா.269.69 மில்லியன் வருமானம் நிலுவையாகக் காணப்படுகின்றது. அந்த நிலுவை வருமானத்தில் 65 சதவீதம் அதாவது ரூபா.173.94 மில்லியன் 03 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் தொட்டு தொடர்ந்து வந்துள்ளது.

### முற்பணக் கடன் நிலுவை

அமைச்சினால் அரச ஊழியர்களுக்கு வழங்கியிருந்த முற்பணக் கடன்களில் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் இறுதியில் ரூபா.23.06 மில்லியன் முற்பணக் கடன் நிலுவையாகக் காணப்பட்டது. அந்த நிலுவை மீதியில் 35 சதவீதம் அதாவது ரூபா.7.96 மில்லியன் கடன் மீதியானது 5 வருடங்களுக்கும் அதிகமான காலத்திலிருந்து நிலுவையாகக் காணப்படுகின்றது.

### சட்ட விதிகளை மறு சீரமைத்தல் மற்றும் ஒன்றிணைத்தல் செயற்றிட்டம்

2014ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அமைச்சரவைத் தீர்மானத்தின்படி சட்ட விதிகளை மறுசீரமைத்தல் மற்றும் ஒன்றிணைத்தல் செயற்றிட்டம் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் 2014 ஜூலை 01ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததோடு அது 2017 திசெம்பர் 31ஆம் திகதியில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டியிருந்தது. அந்த செயற்றிட்டம் 2017 திசெம்பர் 31ஆம் திகதியில் பூர்த்தி செய்ய முடியாது போன காரணத்தினால் 2018 ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் மேலும் 06 வருட காலம் வரையிலும் நீடிக்குமாறு அமைச்சரவை அனுமதி வேண்டப்பட்டிருந்தது. அமைச்சரவையினால் 03 வருடங்கள் வரையில் மட்டுமே காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய 2020 திசெம்பர் 31ஆம் திகதியளவில் செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்ததுடன் 2014ஆம் ஆண்டு தொடக்கம் 2019 திசெம்பர் 31ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் ரூபா.11.68 மில்லியன் வரையில் செலவிடப்பட்டிருந்தது. அந்தக் காலப் பகுதிக்கு உரியதாக ரூபா.185 மில்லியன் நிதி

ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 6.3 சதவீத நிதி மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

### சட்ட வரைஞர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமை

சிறந்த அரச நிர்வாகத்தினை உருவாக்குவதற்காக அரசாங்கத்தின் பல்வேறு கொள்கைகள் சட்டமாக மாற்றப்படுவது சட்ட வரைஞர் திணைக்களத்தின் கடமையாகும். அந்த கடமையினை நிறைவேற்றுவதற்கு நேரடியாகப் பங்களிப்பு வழங்கும் உத்தியோகத்தர்களின் (சிரேஷ்ட தரம் மற்றும் மூன்றாம் தரம்) 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 70 ஆக இருந்தது. அத்திகதியில் அந்தப் பதவிகளில் 33 வெற்றிடமாகக் காணப்பட்டது. முந்தைய வருட இறுதியில் அந்த வெற்றிட எண்ணிக்கை 28 ஆக இருந்தது. சிரேஷ்ட உதவி சட்ட வரைஞர் பதவிகள் 08 ல் 07 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. உதவி சட்ட வரைஞர் பதவிகளில் 10 வருட சேவைக் காலத்தினை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு மூலம் சிரேஷ்ட உதவி சட்ட வரைஞர் பதவிகள் நிரப்பபடும் எனினும் 2020 மே 31ஆம் திகதி வரையிலும் அந்த சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருந்த உத்தியோகத்தர்கள் உதவி சட்ட வரைஞர் பதவிகளில் இல்லாத காரணத்தினால் உதவி சட்ட வரைஞர் பதவிகள் இன்னும் வெற்றிடமாகவே காணப்படுகின்றது. அவ்வாறே உதவி சட்ட வரைஞர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யும் நடவடிக்கை முறைமை திருத்தப்படாது இருப்பதனால் அந்தப் பதவிகளில் நிலவும் 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதுள்ளது.

### சிறைச்சாலைகள் தகவல் முகாமைத்துவ ஒழுங்கு முறையினைத் தயாரித்தல்

சிறைச்சாலை தகவல் முகாமைத்து ஒழுங்கு முறையினைத் தயாரிக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு 2019 திசெம்பர் 31ஆம் திகதியில் 07 வருட காலங்கள் பூர்த்தியாகி இருந்ததுடன் அதற்காக ரூபா.101 மில்லியனளவு செலவிடப்பட்டிருந்தது. சிறைச்சாலைகள் தகவல் முகாமைத்துவ ஒழுங்கு முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்கு 2016ஆம் ஆண்டில் வெலிகடை சிறைச்சாலையை இணைய வலையமைப்பு ஆக்குவதை இலங்கை டெலிகொம் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு அதற்காக ரூபா.957,978 செலவிடப்பட்டிருந்தது. 12 சிறைச்சாலை நிறுவனங்களை இணைய வலையமைப்பில் இணைப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு ரூபா.30.51 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 16 நிறுவனங்களை வலையமைப்பினுள் இணைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் அந்தத் தகவல் ஒழுங்கு முறைமை அனைத்து சிறைச்சாலைகள் ஒழுங்கு முறைமையினுள் செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

### சிறைச்சாலைகளினுள் காணப்படும் அதிக நெருக்கடி

சிறைச்சாலையில் இட வசதிகள் இருக்கும் வகையில் ஒவ்வொரு வகைக்கும் உரிய சிறைக் கைதிகளை வேறு வேறாக தடுத்து வைக்க வேண்டி இருந்தது. நீர்கொழும்பு மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளினுள் காணப்படும் அதிக நெருக்கடி காரணமாக அவ்வாறு வகைப்படுத்தித் தடுத்து வைக்க முடியாதுள்ளது. மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரீட்சிப்பிற்கு அமைய நீர்கொழும்பு சிறைச்சாலையில் 16 காவலறையின் 18,853 சதுர அடியினுள் கட்டளைச் சட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தடுத்து வைக்கக்கூடிய தடுத்து வைக்கப்படுவோர் எண்ணிக்கை 350 ஆக இருந்தது. ஆயினும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 05 சந்தர்ப்பங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 1,695 பேர் தொடக்கம் 1,843 பேர் வரையான வீச்சில் காணப்பட்டது. களுத்துறை சிறைச்சாலையில் 22 காவலறைகளில் 17,126 சதுர அடிகளில் சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தடுத்து வைக்கக்கூடிய தடுப்பாளர்களின் எண்ணிக்கை 317 பேராக இருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டில் 06 சந்தர்ப்பங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 1,159 பேர் தொடக்கம் 1,415 பேர் வரையான வீச்சளவில் காணப்பட்டது.

### சேவையில் நிரந்தரமாக்கப்பட்டமை குறித்து முறையான நியமனக் கடிதம் வழங்கப்படாமை

30 சிறைச்சாலை நிறுவனங்களில் 17 சிறைச்சாலை நிறுவனங்களின் மொத்த உத்தியோகத்தர்கள் 437 பேரில் 251 உத்தியோகத்தர்களினால் 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தினுள் சேவையில் நிரந்தரமாக்குவதற்குரிய தகமைகளைப் பூர்த்தி செய்திருந்தனர். 2020 மே 31 ஆம் திகதி வரையிலும் அந்த உத்தியோகத்தர்கள் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 05 சிறைச்சாலை நிறுவனங்களில் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையிலுள்ள காலப் பகுதியினுள் நியமனம் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் 53 பேரை நிரந்தரமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டி இருப்பினும், அந்த உத்தியோகத்தர்களின் கோவைகள் இற்றைப்படுத்தப்படாது இருந்தமையினால் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு முடியாது இருந்தது. 11 சிறைச்சாலை நிறுவனங்களில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் நியமனம் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் 34 பேரின் தனிநபர் கோவைகள் இற்றைப்படுத்தப்படாது இருந்தமை மற்றும் சேவையில் நிரந்தரமாக்குவதற்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்காமையால் அவர்களின் பதவிகளை நிரந்தரமாக்குவதற்கு முடியாது போயிருந்தது. 11 சிறைச்சாலை நிறுவனங்களில் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள் 37 பேரின் கோவைகள் இற்றைப்படுத்தப்படாது இருந்தமையால் அந்த உத்தியோகத்தர்களின் நியமனத்தினை நிரந்தரமாக்குவதற்கு நியமன அதிகாரியிடம் பரிந்துரை செய்ய முடியாதிருந்தது.

### அரச பகுப்பாய்வு அறிக்கை சமர்ப்பித்தல்

அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தில் தடயவியல் மற்றும் உணவு அறிவியல் எனும் இரு பிரதான பிரிவுகளால் பெற்றுக் கொடுக்கப்படும் நிபுணத்துவ சாட்சியானது நீதிமன்ற வழக்குத் தீர்ப்புகளைத் துரிதப்படுத்த மிக முக்கியமானதாகும். 2019 ஆம் ஆண்டில் அவ்வாறான 40,745 நிபுணத்துவ அறிக்கைகள் நீதிமன்றத்திற்கு வழங்கக் கூடியதாக இருந்தது. மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் 14,171 அறிக்கைகள் நீதிமன்றத்திற்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது.

### குடும்ப அலகுகளில் பிளவுகளைத் தவிர்ப்பதற்குக் கொள்கை ரீதியான திட்டங்களைத் தயாரித்தல்

வறுமை காரணமாக சட்டத்தின் உதவியினைப் பெற்றுக் கொள்ள முடியாத மக்களுக்கு நீதியை நோக்கிப் பிரவேசிப்பதற்காக இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழுவிற்கு உரித்தான நாடு முழுவதிலும் அமைந்துள்ள 83 சட்ட உதவி மத்திய நிலையங்களுக்கு 171,858 பேர் வருகை தந்திருந்தனர். அவர்களுக்குரியதாக நீதிமன்ற முன்னிலையில் விசாரிக்கப்படும் 45,963 வழக்குகளுக்கு வழக்கறிஞர் சேவையினை இலவசமாகப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது. அந்த வழக்குகளில் 72 சதவீதம் அதாவது 32,980 வழக்குகள் விவாகரத்து மற்றும் பராமரிப்பு செலவுக்காக இடப்பட்ட வழக்கு நடவடிக்கைகளுக்காக இருந்த போதிலும், குடும்ப அலகுகளில் பிளவுகளைத் தவிர்ப்பதற்குக் கொள்கை ரீதியான திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஆணைக்குழு பங்களிப்பு செய்திருக்கவில்லை.

# விவசாயம்

நாட்டினுள் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி உணவு உற்பத்தியை அதிகரிப்பது இப் பிரிவின் நோக்கமாகும். அந் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு விவசாயம், கிராமியப் பொருளாதார நடவடிக்கைகள், பண்ணைத் துறை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் இரண்டு திணைக்களங்கள் மற்றும் 11 கூட்டுத்தாபனங்களும் ஒன்றிணைந்து கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றயிருக்க வேண்டும்.

- உள்நாட்டு உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- வயல் நிலங்கள் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்
- விவசாய சமூகத்தின் நலன்புரி ஏற்பாடுகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்
- கரிம உரம் உற்பத்தி மற்றும் நச்சு கலப்படமற்ற விவசாயத்தை பிரபல்யப்படுத்தல்.

மேற்குறித்த கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதிக்கு ரூ. மில்லியன் 181,266.57 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது என்பதுடன் ரூ. மில்லியன் 162,922.99 அதில் பயன்படுத்தப் பட்டிருந்தது. அதன்படி அக் கால இடைவெளிக்கு பாராளுமன்றத்தால் ஒதுக்கப் பட்டிருந்த நிதி ஒதுக்கத்தில் நூற்றுக்கு 10.12 வீதம் அதாவது ரூ. மில்லியன் 18,343.58 க்கான நிதி ஒதுக்கம் பயன்படுத்தப் பட்டிருக்க வில்லை. விவரம் உரு 22 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 22 - பாராளுமன்றத்தால் ஒதுக்கப் பட்டிருந்த நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு

மூலம் - திறைசேரியின் இறுதிக் கணக்கறிக்கை

### விவசாய அமைச்சுக்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட கட்டிடம்

பாராளுமன்ற செயற்குழு முறைமையை சீர்திருத்தம் செய்வதற்கும் மேலதிக அலுவலக இடவசதித் தேவைக்கும் விவசாய அமைச்சு அமைந்துள்ள “கொவிஜன மந்திரய ” (விவசாய இல்லத்) தைப் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தது. அதன் காரணமாக விவசாய அமைச்சுக்கு ராஜகிரியவில் அமைந்துள்ள தனியார் கம்பனி ஒன்றுக்குச் சொந்தமான 9 மாடிக் கட்டிடத்தை 2016 ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி முதல் மதாந்த வாடகை ரூ. மில்லியன் 21 க்கு குத்தகை வாடகைக்கும் ரூ. மில்லியன்

6 க்கான சேவைக் கட்டணமும் செலுத்தப் படுவதன் அடிப்படையில் அரச பெறுகை வழிகாட்டற் கோவையின் 3.2.1 மற்றும் 3.2.2. வழி காட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு ஏற்பாடுகளைப் பின்பற்றாது பெறப் பட்டிருந்தது.

மொத்த ஊழியர் படை 300 பேர்கள் அளவிலான விவசாய அமைச்சுக்குத் தேவைப்படும் கட்டிடத்தின் அளவு சதுர அடி 66,500 ஆகக் காணப்பட்ட போதிலும், குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த 09 மாடிக் கட்டிடத்தின் பரப்பளவு 103,000 சதுர அடிகளாகக் காணப்பட்டது. மேலும் நிதிப் பரமாணக் குறிப்பின் 835(2) (உ) பிரகாரம் குத்தகைக் கால வரையறை அதிக பட்ஷம் 03 வருடங்களாக இருக்க வேண்டும் என காணப்படுகின்ற போதிலும், குத்தகை வழங்குனரின் வேண்டுகோளுக்கு அமைய அதனை 05 வருடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 03 வருடங்களின் பின் குத்தகைப் பெறுமதியை நூற்றுக்கு 15 வீதத்தால் அதிகரித்திருப்பதுடன் 02 வருட குத்தகை வடகையான ரூ. மில்லியன 504 இனையும் ஒரே தடவையில் செலுத்த வேண்டும் என்ற விதிமுறையையும் ஏற்றிருந்தனர்.

அதே போல் அரச தலைமை மதிப்பீட்டாளரின், மதிப்பீட்டின்படி அக் கட்டிடத்தின் சந்தையில் நிலவும் மாதாந்த வாடகைப் பெறுமதி ரூ. மில்லியன் 13.5 ஆக இருந்த போதிலும், அதனை மிகைத்ததான ரூ. மில்லியன் 21 வாடகையாக கொடுப்பதற்கு இணங்கப் பட்டிருந்தது. அதன்படி 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ. மில்லியன் 1,229.58 க்கான குத்தகைப் பணம் (**VAT** மற்றும் **NBT**) அடங்கலாக, சேவைக் கட்டணம் ரூ. மில்லியன் 229.20 உம், மின்சாரக் கட்டணத்துக்கு ரூ. மில்லியன் 63.64 மற்றும் நீர்க் கட்டணத்துக்கு ரூ. மில்லியன் 2.02 மாக மொத்தமாக ரூ. மில்லியன் 1,524.44 செலவு செய்யப் பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக இக்கட்டிடத்ததை அலுவலகத் தொகுதியாக பாவிப்பதற்குத் தேவையானவாறு அறைகளாக பிரிக்கப்பட்டு வேறுபடுத்துவதற்கும், கம்பளம் இடப்படுவதற்கும், தகவல் தொடர்புகளுக்கான தொகுதிகள் அமைக்கப் படுவதற்கும், அலுவலகத் தளபாடப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கும் ரூ. மில்லியன் 342.70 செலவளிக்கப் பட்டிருந்தது. இவ்வாறு பணம் செலுத்தப் பட்டிருந்த போதிலும், ஒப்பந்தத் திகதியிலிருந்து ஆரம்ப 15 மாதங்களுக்கான அலுவலக வசதிகள் (அறைகளாக பிரிக்கப்பட்டு வேறுபடுத்தல், கம்பளம் இடப் படுதல், தகவல் தொடர்புகளுக்கான தொகுதிகள் பொறுத்தப் படுதல்) அல்லாத காரணத்தால் கட்டிடம் அலுவலக தேவைகளுக்கு பயன்படுத்தப் பட்டிருக்க வில்லை. எனினும் செயற்குழு முறைமையை நிறுவுவதற்கான கருமங்களுக்கு "விவசாய வங்கி" பூரணமாக பயன்படுத்தப் பட்டிருக்க வில்லை ஆகையால் அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் படி 2020 ஜனவரி 31 ஆம் திகதி முதல் மீண்டும் அமைச்சு பழைய அலுவலகத் தொகுதியான "கொவிஜன மந்திரய" (விவசாய இல்லத்) க்கு எடுத்துச் சென்றிருந்த போதிலும் 2020 ஜனவரி மாதம் தொடக்கம் 2020 ஆகஸ்ட் மாதம் வரை ஒப்பந்தப்படி ரூ. மில்லியன் 28.05 க்கான பணம் குத்தகை வாடகை மற்றும் சேவைக் கட்டணம் என்ற வகையில் செலுத்தப் பட்டிருந்தது. அதேபோல் 2021 ஏப்ரல் 01 ஆம் திகதி வரையும் ஒப்பந்தப்படி குத்தகை வாடகை மற்றும் சேவைக் கட்டணங்கள் செலுத்தப் படுவதற்கு அமைச்சு கட்டுப் பட்டிருந்தது.

### இறக்குமதி செய்யப்பட்ட பசளைகளின் செயற்திறன்

தேசிய இரசாயனங்கள் மற்றும் பசளைகள் செயலாளர் அலுவலகத்தால் தேசிய பசளைகள் நிவாரணக் கொடுப்பனவு நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்கு தரமான பசளை இறக்குமதி செய்யப்படும்போது கீழ் குறிப்பிடப்படும் குறைபாடுகள் தெரியவந்துள்ளன.

- தேசிய இரசாயனங்கள் மற்றும் பசளைகள் செயலாளர் அலுவலகம் நெற் பயிர்ச் செய்கைக்கான பசளைத் தேவைப்பாட்டை தீர்மானிக்கும் போது முன்னைய போகத்தின் மிகுதி பசளைத் தொகை, இற்றைப்படுத்தப்பட்ட பசளை பரிந்துரைப்பு கவனத்தில் எடுக்கப்படாமை மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல் தொகுதியொன்று பேணப்பட்டு வராமை.
- போட்டிப் பெறுகை செயல்முறையொன்று இன்றி இரசாயனப் பசளை இறக்குமதி செய்வதற்கு கம்பனிகள் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்ன.
- இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பசளைகளின் தரங்களைப் பரீட்சிப்பதற்கு மாதிரிகளைப் பெற்றுக் கொள்வது துறைமுகத்தின் உள்ளே செய்யப்பட

வேண்டிய ஒரு செயற்பாடு என்றிருந்த போதிலும், பசளை இறக்குமதி செய்யும் கம்பனிகளுக்குரிய திறந்த களஞ்சிய சாலைகளில் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

- இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பசளைகளைப் பரீட்சிப்பதற்கு ஆய்வு கூடங்களைத் தேர்ந்தெடுத்தல், ஆய்வு கூடங்களுக்கு மாதிரிகளை அனுப்புதல், ஆய்வு கூட அறிக்கைகளைப் பொறுப்பேற்றல், பரிசோதித்தல் மற்றும் வர்த்தக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாக பசளைகள் செயலாளர் அலுவலகத்தில் முறையான மற்றும் போதுமான கட்டுப்பாடுகள் மற்றும் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.
- தேசிய இரசாயனங்கள் மற்றும் பசளைகள் செயலாளர் அலுவலகம் 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களில் இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பசளைகளின் தரங்களை பரீட்சிப்பதற்கு பெற்றுக் கொடுக்கும் மாதிரிகளுக்குரிய ஆய்வுகூட அறிக்கைகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனைகளின் போது போலியாக தயாரிக்கப்பட்ட 55 ஆய்வுகூட அறிக்கைகள் அளவில் காணப்பட்டதுடன், அதன்படி 9 வகைப் பசளைகளுக்குரிய மெ.தொ. 81,655 குறைந்த தரமுடைய நியமங்கள் அற்ற பசளைகள் சந்தைக்கு விடப்பட்டுள்ளன.

### விவசாயக் கிராமத் தொழில் முனைவோர்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

விவசாயக் கிராமத் தொழில் முனைவோர்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்துக்கு 2019 டிசம்பர் 31 திகதி வரை ரூ. மில்லியன் 83.97 செலவிடப் பட்டிருந்தது. இந் நிகழ்ச்சித் திட்டம் கனத்தேவெல கிராமத்தில் செயற்படுத்தப் பட்டிருந்ததுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிவந்துள்ளன.

- 2015 மே 20 ஆம் திகதி 11/2015 ஆம் இலக்கமுடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் பொது நியதிகயைப் பயன்படுத்தி உத்தியோகபூர்வ விழாக்களை நடாத்தும்போது அவை வரையறைக்கு உட்பட்ட விதத்தில் செய்துகொள்ள வேண்டும் என்பதாகவும், செலவுகளை குறைந்த அளவில் செய்யும் விதத்தில் அந் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறை வழங்கப் பட்டிருப்பினும், இந் நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்திய விழாவின் பேரில் ரூ. மில்லியன் 1.49 செலவிடப் பட்டிருந்தது.

- விவசாயச் சங்கங்கள் பலவற்றின் ஒத்துழைப்புடன் மிக சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமொன்றை உருவாக்கிக் கொள்ள முடியுமாகவிருந்த போதிலும், கனத்தேவெல லிமிட்டட் என்ற பெயரில் அமைச்சின் நேரடி தயைீடு மற்றும் மேற்பார்வை இன்றி இந் நிகழ்ச்சித் திட்டத்தால் இயக்கப்படும் மக்கள் கம்பனியொன்று நிறுவப்பட்டிருந்தது. அக் கம்பனியை அமைக்கும் நோக்கில் சிலர் ஒன்று கூடி 2018 ஆம் ஆண்டில் விவசாய சங்கமொன்றை அமைத்திருந்த போதிலும் அவ் விவசாய சங்கம் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செயயப் பட்டிருக்க வில்லை
- கம்பனியின் அலுவலகத் தளபாடங்கள் மற்றும் இயந்திராதிகளுக்காக ரூ. மில்லியன் 1.41 மற்றும் விவசாயிகளுக்கு ரூ. மில்லியன் 45.91 உம் செலவு செய்யப்பட்டு பாதுகாப்பான இல்லங்கள் கொடுக்கப் பட்டிருந்தன. அப் பாதுகாப்பு இல்லங்களின் பெறுமதியில் நூற்றுக்கு 50 வீதத்தை பயனாளியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்க வேண்டும் என்றிருந்தபோதிலும், மதிப்பீட்டாண்டின் இறுதி வரை அதன்படி நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

- அதே போல் ரூ. 770,000 பெறுமதியான 35 மின்சுற்றுக்கள் மக்கள் கம்பனிக்கு பெற்றுக் கொடுக்கப் பட்டிருந்ததுடன் ஒரு மின்சுற்றுக்கு மாதாந்தம் ரூ. 1,000 வாடகை அடிப்படையில் விவசாயிகளுக்கு கொடுத்து வருமானம் ஒன்றை பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்; எனினும் அவ்வாறான வருமானம் சேகரிக்கப் பட்டிருக்கவில்லை. இயந்திராதிகளைக் களஞ்சியப் படுத்தப்படுவதற்கும் காய்கறிகள் பழங்கள் சேகரிக்கும் நிலையமொன்றுடன் கூடிய முன்மாதிரிப் பண்ணை என மேம்படுத்தப்பட்ட சங்கராஜ பிரிவெனாவின் சுற்றுப்புறச் சூழல் மாதாந்தம் ரூ. 1.000 என்ற குறைந்த

வாடகையில் மக்கள் விவசாய கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது.

- அதேபோல் ரூ. மில்லியன் 10 அளவு பெறுமதியுடைய பாதுகாப்பு இல்லம், பழக் கன்றுகள், விவசாய உபகரணங்கள் மற்றும் தேன்பூச்சி வளர்ப்பு மற்றும் உபகரணங்கள் மேற்படி மக்கள் விவசாய கம்பனியின் பங்குதாரர்களுக்கு இலவசமாக எவ்வித அடிப்படையும் இன்றி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.

### காப்புறுதிப் பொறுப்புப் பெறுமதி மேலதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டு மீள் காப்புறுதிக்கு முனைதல்

2018 சிறுபோகம் மற்றும் 2018/2019 பெறும் போகங்களில் எதிர்பார்க்கப்பட்ட பாதிப்பு களுக்காக நட்டஈடு செலுத்துவதற்கு செயற்படுத்தப்பட்ட இலவசக் காப்புறுதி காரணமாக விவசாய மற்றும் வேளாண்மைக் காப்புறுதி சபை, மலேசியாவின் மீள் காப்புறுதி கம்பனியொன்றுடன் மீள் காப்புறுதி ஒப்பந்தமொன்றை செய்துகொள்ளும் போது, பொறுப்புகள் மேலதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அப் போகத்தின் மீள் காப்புறுதிப் பொறுப்பையும் விட அதிகமாக பாதிப்பு அறிக்கையிடப் படவில்லை என்பதுடன் அவ்வாரான சந்தர்ப்பத்தில், விவசாயக் காப்புறுதி சபை அனுகூலங்களை அடைந்து கொள்வதற்கான குறித்த விதிமுறையை ஒப்பந்தத்தில் உள்ளடக்காத காரணத்தால் எவ்வித அனுகூலத்தையும் பெற்றுக் கொள்ள சபைக்கு முடியாமல் போனதன் காரணமாக வெளிநாட்டு நிறுவனத்துக்கு செலுத்தப்பட்ட ரூ. மில்லியன் 473 மீள் காப்புறுதி தவனைக் கட்டணம் உபயோகமின்றி காணப்பட்டது.

### பயிர் நட்டத்தை மதிப்பீடு செய்வதற்கு புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டம்

விவசாய மற்றும் வேளாண்மைக் காப்புறுதி சபை, உலக வங்கியுடன் ஒன்றிணைந்த சர்வதேச நிதியத்துடன் இணைந்து 2016 மே 05 ஆம் திகதி தொடக்கம் 2019 மே மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் 6 மாவட்டங்களின் புள்ளி விபரங்களின் அடிப்படையிலான காப்புறுதித் திட்டமொன்றைத் தயாரித்து செயற்படுத்துவதற்கு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தது. 2018/2019 பெரும் போகத்தில் வவுனியா, அனுராதபுரம், கிளிநொச்சி மற்றும் முள்ளைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பரிசோதணை மட்டத்தில் அது செயற்படுத்தப் பட்டிருந்தது. பாதிப்பு மதிப்பீடுகளைக் கண்டறிய நவீன முறைகளை அறிமுகப்படுத்த புள்ளிவிபரங்கள் அடிப்படையில் காப்புறுதி முறைமையை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப் பட்டிருந்த போதிலும் வவுனியா மாவட்டத்தில் மாத்திரமே இம் முறையின் கீழ் நட்டஈடு கணிப்பிடப் பட்டிருந்தது.

### இலங்கைக்கான டிஜிட்டல் (எண்முறை) பொருளாதார தந்திரோபாயத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

இலங்கைக்கான டிஜிட்டல் (எண்முறை) பொருளாதார தந்திரோபாயத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் விவசாய அமைச்சினால் செயற்படுத்தப் பட்டிருந்தது. அச் செயற்திட்டத்தின் கீழ் விவசாய மற்றும் வேளாண்மைக் காப்புறுதி சபை கம்பஹ மற்றும் பதுலை மாவட்டங்களை முற்படுத்தி விவசாயிகளின் தகவல்கள் உற்படுத்தப்பட்ட தரவுத் தொகுதி ஒன்றை உருவாக்குதல், இலங்கைக்கான விவசாய நிலங்களை இனங்காணல், மற்றும் அவற்றை கணினிமயப் படுத்துவதற்கான முன்னோடித் திட்டங்களைச் செயற்படுத்தி இருந்தது. கம்பஹ மாவட்டத்துக்கு விவசாய அபிவிருத்தித் திணைக்களம் மூலம் தயாரிக்கப்பட்ட தரவு அடிப்படைகளை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், சபை செயற்திட்டத்தை செயற்படுத்தும்போது குறித்த தரவுத் தொகுதியை நேரடியாக பயன்படுத்திக்கொள்ள முடியாமல் இருந்துள்ளது. விவசாய ஆய்வு உத்தியோகத்தர்களிடமிருந்து எழுந்த எதிர்ப்பு மற்றும் நிதி ரீதியான தடைகள் காரணமாக கம்பஹா மாவட்டத்தின் 26 கமநல சேவை நிலையங்களின் 80,006 காணித் துண்டுகளில் 10,825 காணித் துண்டுகள் மாத்திரமே நில வரைபடம் வரையப் பட்டிருந்தன. பதுள்ளை மாவட்டத்தின் 10 கமநல சேவை நிலையங்களின் 27,139 காணித் துண்டுகளில் 9,995 காணித் துண்டுகள் மாத்திரமே நில வரைபடம் வரைந்து முடிக்கப் பட்டிருந்தன. இச் செயற்திட்டம் 07 மாதங்கள் அளவிலான காலத்தில் மாத்திரம் செயற்படுத்தப்பட்டு இடை நடுவில் செயற்திட்டம் நிறுத்தப் படுமாயின் செலவு செய்யப்பட்டிருந்த ரூ. மில்லியன் 9.61 க்கான செலவு உபயோகமற்றதாக ஆக்கப்படவிருந்தது.

### மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டம்

தள்ளாத வயதில் அல்லது பேரிடரின்போது மீனவர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்குவது, மீனவர் ஒருவர் மரணித்தால் அம் மீனவரில் தங்கியிருந்தோர்க்கு நிவாரணம் வழங்குவது, சீவனோபாயத்தில் தொடர்ச்சியாக ஈடுபடுவதற்கு மீனவர்களை ஊக்கமூட்டுவது, இளைஞர்களை மீன்பிடித் தொழிலின்பால் ஈடுபடச் செய்வது, மீனவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குதல் மற்றும் முன்யோசனைகளை மேம்படுத்துதல் ஆகிய இலட்சியங்களை அடைந்துகொள்ளவதற்கு மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மை திட்டத்தை நிறுவியிருந்தனர்.

மதிப்பீட்டாண்டு முடிவன்று செயற்திட்டத்தின் மீனவர் ஓய்வூதிய நிதியத்தின ஒட்டுமொத்த மீதி மறைப் பெறுமதி ரூ. மில்லியன் 3,288.94 ஆக இருந்தது. அம் மறைப் பெறுமதி முன்னைய ஆண்டைவிட நூற்றுக்கு 11.58 வீதத்தால் மேலும் அதிகரித்திருந்தது. இதன் காரணமாக திட்டத்தை தொடர்சியாக செயற்படுத்தவதற்கு முடியாத நிலையில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. மேலும் எதிர்வரும் வருடங்களில் இந்நிலைமை மேலும் அதிகரிக்கக்கூடும் அகையால் செயற்திட்டம் மீள் கட்டமைக்கப்பட்டு நிதிச் சாத்தியத் தன்மையுடன் செயற்படுவதற்கு நிறுவனம் மதிப்பீட்டாண்டின் முடிவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### நிலுவை ஓய்வூதியக் கொடுப்பனவு செலுத்தப்படாமை

60 வருடம் பூர்த்தியான தினத்திலிருந்து விவசாய ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் உருப்பினர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட வேண்டும் என குறிப்பிப் பட்டிருந்தாலும், அதற்கு மாற்றமாக நிறுவனம் ஓய்வூதியம் தயாரிக்கப்பட்ட தினத்திலிருந்து கொடுப்பனவுகளைச் செய்துள்ளது. 2017 ஏப்ரல் மாதம் தொடக்கம் 2019 டிசம்பர் மாதம் வரை 27,049 விவசாயிகளுக்கு செலுத்த வேண்டியிருந்த ஓய்வூதியத்தின் கூட்டு மொத்தம் பெறுமதி ரூ. மில்லியன் 584.36 ஆகவிருந்தது. அதேபோல் நிதி நெருக்கடி காரணமாக 2012 – 2013 ஆண்டு காலப் பகுதிக்கான விவசாயிகள் 90,573 பேர்களுக்கு உரித்தான ஓய்வூதியம் ரூ. மில்லியன் 3,033.33 வும் கொடுக்கப் பட்டிருக்வில்லை.

### தகவல்கள் இற்றைப்படுத்தப்படாமை

2012 ஆம் ஆண்டு முடிவில் விவசாய ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் செயற்பாடுடைய பங்களிப்போரின் எண்ணிக்கை 959,254 பேர்களாக இருந்ததுடன், 2012 ஆம் ஆண்டின் பின் திட்டத்திலிருந்து வெளியேறிய, பலவீனமடைந்த, மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் தவணைக் கட்டணம் செலுத்தாத காரணத்தால் வெளியேறியமை சம்மந்தமான தரவுகள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக மதிப்பீட்டாண்டின் இறுதியில் செயற்படாத உருப்பினர் தொகை, வருடாந்தம் ஒன்றுசேரும் பங்களிப்புத் தொகை மற்றும் செலுத்தப்பட வேண்டிய சரியான ஓய்வூதியப் பெறுமதி எவ்வளவு என கணக்கிடுவதற்கு முடியாதுள்ளது.

### நீண்டகால கடன்பட்டோர் மீதி

விவசாய சேமலாப நிதியத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று காணப்பட்ட ரூ. மில்லியன் 26.03 க்கான கடன்பட்டோர் மீதி அறவிடப்படாமல் 03 வருட காலம் தொட்டு 08 வருடங்கள் வரையான கால வித்தியாசங்களில் நிலுவையாக உள்ளது.

### திட்டமிடப்பட்ட செயற்திட்டம் ஆரம்பிக்கப் படாமை

விவசாயிகளின் நம்பிக்கை நிதியம் ஸ்தாபிக்கப படுவதற்கான நம்பிக்கை உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் சிறு விவசாயிகளின் விவசாயத்துறை அபிவிருத்தி மற்றும் நல்வாழ்வுக்கும் இந் நிதியம் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. மதிப்பீட்டாண்டில் ரூ. மில்லியன் 755.00 நிலையான வைப்புகளிலும் ரூ. மில்லியன் 93.51 திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டு வட்டி வருமானமாக ரூ. மில்லியன் 131.78 உழைக்கப் பட்டிருந்தது. மதிப்பீட்டாண்டில் ரூ. மில்லியன் 826.40 கிரயத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட 78 செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதில் கிரயம் ரூ. மில்லியன் 197.40 பெறுமதியான 32 செயற்திட்டங்கள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டு அவற்றுக்கான அபிவிருத்திச் செலவுகள் என்ற வகையில் ரூ. மில்லியன் 40.30 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

### கெவிலியர்களின் நெல் உற்பத்தி

பொலொன்னறுவை மாவட்டம் முழுவதிலும் பரந்துள்ள 3000 ஏக்கர் நெற்காணிகளில் Global Gap உறுதிப்படுத்தும் முறைக்கு அமைவாக 2018/2019 ஆம் ஆண்டுகளில் பயிரிடல், சர்வதேச தரப்படுத்தற் செயல்முறை சம்மந்தமாக விவசாயிகளுக்கு அறிவுறுத்துதல் மற்றும் சூழல் பாதுகாப்புடனான நிலையான விவசாய முறையைப் பின்பற்றி பொளாதார நலன்களை அடைந்து கொள்வதை நோக்காகக் கொண்டு ரன் கெவிலி சமூக தொழில் முனைவோர் பொதுக் கம்பனி ஸ்தாபிக்கப் பட்டிருந்தது. பொலொன்னறுவை மாவட்ட விவசாயப் பணிப்பாளரின் பரிந்துறையின் கீழ் விவசாயிகளின் நம்பிக்கை நிதியத்தின் ரூ. மில்லியன் 5.9 க்கான வட்டியில்லா கடன், ஒரு வருடத்தினுள் செலுத்தப் படவேண்டியதன் அடிப்படையில் அக் கம்பனியின் பேரில் விடுவிக்கப் பட்டிருந்தது. செயற்திட்ட கால வரையறையின் படி 2019 மார்ச் மாதமளவில் கெவிலியர்களின் நெல் உற்பத்திக்கான GAP (Good Agriculture Practice) சான்றிதழை பெற்றுக்கொள்ள காத்திருந்த போதிலும், 2020 ஜுன் மாதம் அளவிலும் ஒரு கெவிலியாவது எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை நெருங்கி இருக்கவில்லை. நிதியம் பெற்றுக் கொடுத்த கடன் தொகை மதிப்பீட்டாண்டின் முடிவிலும் திருப்பிச் செலுத்தப் பட்டிருக்க வில்லை.

### விவசாய இயந்திரமயப்படுத்தல் மற்றும் கரிம விவசாயத் துறையின் பட்டப் பின்படிப்பு

பட்டப் பின் படிப்புக்காக வெளிநாட்டுகளுக்கு அனுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் ஆய்வாளர்கள் இலங்கை விவசாயத் துறையில் தற்போது முகம் கொடுத்து வரும் அல்லது எதிர்காலத்தில் முகம் கொடுக்க எதிர்பார்க்கப்படும் பிரச்சினைகள் மற்றும் கேள்விகள் சம்மந்தமாக கவனம் செலுத்தப்பட்டு தமது ஆய்வுத் தலைப்புகளை தேர்ந்தெடுக்க வேண்டும் என விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபை சுட்டிக் காட்டியுள்ளது. இலங்கையின் விவசாயத் துறை வளர்ச்சிக்கான விருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் என இனங்காணப்பட்ட விவசாய இயந்திர மயமாக்கல் மற்றும் கரிம விவசாயத்தறை பட்டப் பின் படிப்புக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மிக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இந்நிலமையை தவிர்ப்பதற்கு விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபை திட்மிடப்பட்ட ஒரு நடவடிக்கையையும் எடுத்திருக்க வில்லை.

### கரிம விவசாயக் கொள்கை தொடர்பான ஆய்வு

விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபை கரிம (இயற்கைப் பொருட்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும்) விவசாயக் கைத்தொழிலுக்கு கவனம் செலுத்தப்படுவதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அத் துறைகளின் ஆய்வுகளை மேம்படுத்த வேண்டிய 07 முன்னணித் துறைகள் தற்போது இலங்கையில் உள்ள ஆய்வு நிறுவனத்திடம் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது. எனினும் கரிம விவசாயக் கொள்கை, நடைமுறையில் சந்தையில் காணப்படும் இயற்கைப் பொருட்களால் உருவாக்கப்படும் உணவு வகைகளின் குணநலன்கள் பற்றிய ஆய்வு 2017 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப் பட்டிருக்க வில்லை.

### தரவுத் தொகுதிகள் இற்றைப் படத்தப்படாமை மற்றும் வருடாந்த அறிக்கைகள் வெளியிடாமை

விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபை விவசாயத் துறை ஆய்வு நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் எண்ணிக்கை, ஆய்வுகளுக்கான நிதி ஏற்பாடுகளை செய்தல், ஆய்வு உத்தியோகத்தர் (Research officer ), விஞ்ஞானிகள் (Scientist) மற்றும் ஏனைய ஊழியர் படை பற்றிய தகவல்கள் மற்றும் நிறுவனத்தில் உள்ள பௌதீக வளங்கள் தொடர்பான தரவுகள் மதிப்பீட்டாண்டு வரை சேகரிக்கப் பட்டிருந்தபோதிலும், 2016 ஆம் ஆண்டின் பின் தரவுத் தொகுதியை இற்றைப் படுத்தல் (Information for Agricultural Research Managers) மற்றும் 2010 ஆம் ஆண்டின் பின் அத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு வருடாந்தம் வெளியிடப்பட வேண்டிய அறிக்கைகள் வெளியிடப்படவில்லை.

# கால்நடை வளங்கள்

கால்நடை வள துறையின் உற்பத்தியினை உயர்த்துவதற்கு தேவையான வசதிகள் வழங்குவதற்காக மற்றும் கால்நடை வள தொடர்பான உற்பத்தி அபிவிருத்தி, விளம்பரம் மற்றும் அபிவிருத்திக்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற பணிகள் விவசாய, கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வள அபிவிருத்தி, நீர்பாசன மற்றும் நீர் வள அபிவிருத்தி அமைச்சு, அதன் கீழ் காணப்படும் ஒரு திணைக்களம் மற்றும் 03 நியதிச் சட்ட நிறுவனங்களினூடாக நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

மேற்கூறப்பட்ட பணிகள் நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆண்டு வரை ரூபா 22,257.32 மில்லியன் ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 16,387.01 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாராளுமன்றத்தினால் அந்த காலப்பகுதிக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் 26.37 சதவீதம் ஆன, அதாவது ரூபா 5,870.31 மில்லியன் ஆன நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. தகவல்கள் உரு 23 மூலம் காட்டப்படுகின்றது.




உரு 23 - பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு மற்றும் பயன்பாடு
மூலம் - திறைச்சேரியின் இறுதி கணக்கறிக்கை

அமைச்சு மற்றும் அதன் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த நிறுவனங்களினால் மேற் குறிப்பிடப்பட்ட பணிகள் நிறைவேற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வின் போது அடையாளப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

## பாற்பசுக்களை இறக்குமதி செய்தல்

மகாவலி, விவசாயம், நீர்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சினால் 20,000 பாற்பசுக்கள் நிறுவனத்திற்கு திருத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டமானது இரண்டு கட்டங்களாக செயற்படுத்துவதற்கும், அங்கு உடன்பட்டுள்ள ஆடர் (வேண்டுகோள்) கால அட்டவணையின் பிரகாரம் அதில் முதலாம் கட்டத்தின் கீழ் 5,000 பசுக்களின் இறக்குமதி 7 மாதங்களுக்குள் நிறைவு செய்வதற்கும், அதன் வெற்றியின் அடிப்படையில், இரண்டாம் கட்டத்தின் கீழ் முற்பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டு 12 மாதங்களுக்குள் 15,000 பசுக்கள் இறக்குமதி செய்யப்படுவதற்கும் உடன்பட்டிருந்தது. எனினும், 2017 மே 16 ஆம் திகதி வரவு செலவு பணிப்பாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்பட்ட கடிதத்தின் ஊடாக அதற்கான நிதிஏற்பாடு கோரப்பட்டிருந்தது. தேசிய வரவுசெலவு பணிப்பாளர் நாயகம் பெற்றுக்

கொடுக்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் 2,500 பசுக்களும் 2019 ஆம் ஆண்டில் 7,500 பசுக்களும் 2020 ஆம் ஆண்டில் 5,000 பசுக்களுமாக இறக்குமதி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

கணக்காய்வினால் பண்ணைகளின் ஊடாக பெறப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் மற்றும் பிரசித்தமான ஊடகத்தினால், முன்னர் கொண்டுவரப்பட்ட பசுக்களின் வெற்றியின்மை காண்பிக்கப்பட்டிருப்பினும், அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் 2018 ஆம் ஆண்டினுள் அதற்காக பாராளுமன்ற நிதிஏற்பாடு காணப்பாதிருக்கையில் எஞ்சிய 15,000 பசுக்கள் இறக்குமதி செய்வதற்காக 55,465,541 ஐ.அ. டொலர்கள் ஆன பணத்தில் 20 சதவீதம் முற்பணமாக 2018 மே மாதம் 08 ஆம் திகதி 11,093,108 ஐ. அ. டொலர்கள், அதாவது ரூபா 1,749.67 மில்லியன் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தின் கீழ் எந்தவொரு பாற்பசுக்களும் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கவில்லை.

இந்த பசுக்கள் இறக்குமதி செய்யப்படுவதற்காக உடன்பட்டிருந்த ஒப்பந்தம் ரத்து செய்வதறகாக சட்டமா அதிபரிடம் ஆலோசனைகள் கோரப்பட்டிருந்ததுடன் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தமையின் காரணத்தினால் உடண்படிக்கை ரத்து செய்ய இயலாமை குறித்து 2019 மே 03 ஆம் திகதி சட்டமா அதிபர் தெரிவித்திருந்தார். முற்பணம் செலுத்தல் வெளிநாட்டு வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் பணத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தமையினால் அதற்கான வட்டி மற்றும் அந்நிய செலவாணி மதிப்பிழப்பினையும் இலங்கை அரசாங்கம் ஏற்க வேண்டியிருந்தது. அந்த செயற்திட்டத்தின் வெற்றியின்மை தெளிவாக காணப்படுகையில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தமையினால் அரசாங்க பணம் வேறு தரப்பினரால் தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்.

பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு போட்டியான சந்தையொன்று பெற்றுக் கொடுத்தலினூடாக விவசாயிகளின் வருமானத்தினை மேம்படுத்தல் மற்றும் பால் சேகரித்தல், குளிர்ப்படுத்தல், பால் போக்குவரத்து போன்றன தொடர்பாக விவசாயிகளின் பங்கேற்பு மேம்படுத்தும் நோக்கில் பிரான்ஸ் அரசின் கீழ் 0.0016 சதவீதம் ஆன வருடாந்த வட்டியின் கீழ் 10 ஆண்டுகளுக்கு பின்னர் ஆரம்பிக்கப்பட்டு 34 ஆண்டுகளுக்குள் மீண்டும் செலுத்தல் அடிப்படையில் 11.4 மில்லியன் யூரோ சலுகை கடன் உதவியின் கீழ் மற்றும் ரூபா 15 மில்லியன் ஆன அரசின் நிதிஏற்பாடு மற்றும் ரூபா 50 மில்லியன் ஆன பயனாளிகளின் பங்களிப்பின் அடிப்படையில் சிறிய அளவிலான பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் 12 கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்யும் செயத்திட்ட முன்மொழிவு 2013 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2018 செப்தெம்பர் 28 ஆம் திகதி ஒப்பந்தங்களுக்கு உடன்படும் போது மேற் குறிப்பிட்ட அதே வட்டி வீதத்தின் கீழ் 13.9 மில்லியன் யூரோ, பிரான்ஸ் சலுகை கடன் உதவி பெற்றுக் கொடுப்பதற்கு உடன்பட்டிருந்தது. 2018 ஒக்தோம்பர் 03 ஆம் திகதிய அமைச்சரவை அனுமதியின் கீழ் பயனாளிகளினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற கடன் பணத்தில் 50 சதவீதம் உடன்பட்ட காலத்திற்குள் மீண்டும் பெற்றுக் கொள்வதற்கும், தொடர்புடைய உபகரணங்களுக்கான குத்தகை சலுகை பெற்றுக் கொடுப்பதற்கும் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது.

அந்த அமைச்சரவை அனுமதி பெறப்படுவதற்கு முன்னர், அதாவது 2017 ஆம் ஆண்டில் முறையாக வெளிநாட்டு கடனின் கீழ் ரூபா 400 மில்லியன் மற்றும் உள்நாட்டில் ரூபா 40 மில்லியனும், 2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டு கடனின் கீழ் ரூபா 900 மில்லியன் மற்றும் உள்நாட்டில் ரூபா 300 மில்லியன் ஆன நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிஏற்பாட்டில் 99 சதவீதமும் எஞ்சியிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்காக மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்கு வெளிநாட்டு கடனின் கீழ் ரூபா 2,000 மில்லியன் ஆன முழுமையான நிதிஏற்பாடுமே எஞ்சியிருந்ததுடன் உள்நாட்டு நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 65 மில்லியனில் 99 சதவீதம் ஆன நிதிஏற்பாடும் எஞ்சியிருந்தது.

### பயன்படுத்தப்படாத காணிகள்

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை, மட்டுப்படுத்தப்பட்ட மகாவளி லைவ்ஸ்டொக் என்டர்பிரைசஸ் லிமிடட் மற்றும் இலங்கை கோழிகள் கட்டுப்பாட்டு அபிவிருத்தி (தனியார்) நிறுவனம் ஆகிய மூன்று நிறுவனங்களுக்கு 12,617.43 ஆன ஹேக்கர் நிலம் சொந்தமாக காணப்பட்டதுடன் 2019 மே மாத இறுதியில் கால்நடை வள அபிவிருத்தி சபையின் 2,266.05 ஹேக்கரும், மகாவளி லைவ்ஸ்டொக் என்டர்பிரைசஸ் லிமிடட் கம்பனியின் 9.7 ஹேக்கரும், இலங்கை கோழிகள் கட்டுப்பாட்டு அபிவிருத்தி (தனியார்) நிறுவனத்தின் 35.6 ஹேக்கருமாக மொத்தமாக 2,311.35 ஹேக்கர் நிலம் பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் காணப்பட்டது.

## பயன்படுத்தப்படாத பசு உணவு பொருட்கள் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள்

ஒரே தடவையில் நாளொன்றுக்கு பசு உணவு 3.75 தொண் உற்பத்தி செய்யக்கூடிய 4 இயந்திரங்கள் கால்நடை அபிவிருத்தி சபையின் 4 பண்ணைகளில் காணப்பட்டது. அதன் பிரகாரம் மாதத்திற்கு ஒரு இயந்திரத்தில் பசு உணவு 900 ஆன மெட்ரிக் தொண் (3.75*30 நாட்கள்*8 மணித்தியாலங்கள்) உற்பத்தி செய்யப்படுவதுடன் ஆண்டிற்கு 10,800 மெட்ரிக் தொண் உற்பத்தி செய்யக்கூடியதாக காணப்பட்டது. அவ்வாறான உற்பத்தி திறன் கொண்ட இயந்திரங்கள் 01 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலம் செயலற்று காணப்பட்டது.

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் கீழ் 22 பண்ணைகளில் 10,088 ஆன பசுக்கள் காணப்படுவதுடன் அந்த பசுக்களுக்காக 2018 ஆம் ஆண்டில் மாதத்திற்கு பசு உணவு 1,198.75 மெட்ரிக் தொண் தேவைப்படுகின்றது. அதன் பிரகாரம், 14,385 ஆன மெட்ரிக் தொண் வருடாந்த தேவைக்காக ரூபா 876.72 மில்லியன் தனியார் நிறுவனங்கள் 3 இற்காக செலவிடப்பட்டிருந்தது. 04 பண்ணைகளின் கணக்குகளின் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களுக்காக அந்த பண்ணைகளில் பசு உணவுக்கான செலவு பால் செலவில் 69 சதவீதமாக காணப்பட்டது.

## பசு உணவுகளை உற்பத்தி செய்தல்

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் கீழுள்ள 3 பண்ணைகளில் கோழி உணவுகள் தயாரிக்கும் 05 இயந்திரங்கள் காணப்பட்டன. அதற்கு மேலதிகமாக மகாவளி லைவ்ஸ்டொக் என்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு சொந்தமான கோழி உணவுகள் தயாரிக்கும் ஆலை மற்றும் கலக்கும் இயந்திரமும், இலங்கை கோழி கட்டுப்பாட்டு சபை அபிவிருத்தி (தனியார்) நிறுவனத்திற்கு சொந்தமான கோழி உணவு தயாரிக்கும் ஆலை மற்றும் 2 கலக்கும் இயந்திரங்களும் காணப்பட்டன. அந்த இயந்திரங்களில் கோழி உணவு மாதத்திற்கு 2,580 மெட்ரிக் தொண் (10.75*30நாட்கள்*8மணித்தியாலங்கள்) ஆக ஆண்டிற்கு 30,960 மெட்ரிக் தொண் உற்பத்தி செய்யும் திறன் காணப்பட்டது. எனினும், 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அந்த 8 இயந்திரங்களினால் உற்பத்தி செய்யப்படாமல் 01 ஆண்டு தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதி செயலற்றதாக காணப்பட்டது.

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபைக்குரிய 12 பண்ணைகளுக்கு 2,319 மெட்ரிக் தொண் உம், இலங்கை கோழி கட்டுப்பாட்டு அபிவிருத்தி (தனியார்) சபைக்கு 559.6 மெட்ரிக் தொண் உம், மகாவளி லைவ்ஸ்டொக் நிறுவனத்திற்கு 1,674.7 மெட்ரிக் தொண் ஆக ஆண்டிற்கு 4,553.3 மெட்ரிக் தொண் கோழி உணவு தேவையொன்று காணப்பட்டது. அந்த கோழி உணவு வழங்கப்படுவதற்காக சபை மற்றும் இரண்டு நிறுவனங்களுக்கான மொத்தம் ரூபா 248.77 மில்லியன் 3 தனியார் நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த செலவு ஒவ்வொரு நிறுவனங்களின் சாரசரி வருமானத்தில் முறையாக 39 சதவீதம், 64 சதவீதம் மற்றும் 54 சதவீதமாக காணப்பட்டது.

இந்த பண்ணைகள் அதிகமாக நட்டம் ஈட்டப்படுவதனால் இந்த நட்டத்தினை குறைத்துக் கொள்வதற்காக மேற்குறிப்பிட்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு, பயன்படுத்தப்படாத நிலம் பயன்படுத்தப்பட்டு கால்நடை உணவுகள் உற்பத்திக்கு தேவையான பயிர் செய்யக்கூடிய பிரதான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் பரிசோதனை பயன்படுத்தப்பட்டு தரத்தில் உயர் கால்நடை உணவு உற்பத்தியில் கால்நடை உணவு செலவு குறைத்து கொள்வதில் பண்ணை இலாபம் மேம்படுத்தப்பட்டு இந்த

நிறுவனம் இலாபமாக இயக்கப்படுவதற்காக நடவடிக்கை எடுத்தலில் கவனம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### இயந்திரங்களின் திறனுக்கேற்ற பால் உற்பத்தி காணப்படாமை

2017 திசெம்பர் 31 இல் மில்கோ (தனியார்) நிறுவனத்தின் தொழிற்சாலை நவீனமையப்படுத்தலுக்காக ரூபா 5,854.66 மில்லியன் செலவிடப்பட்டு தொழிற்சாலை நவீனமையப்படுத்தல் செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலாக படல்கம பால் உற்பத்தி ஆலை ஸ்தாபிப்பதற்காக ரூபா 9,932.71 மில்லியன் ஆன கிரயம் மதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டு 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அதற்காக ரூபா 8,083.22 மில்லியன் செலவிடப்பட்டு செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டு வந்தது. நிறுவனத்தின் முகாமைத்துவம் மற்றும் செயலாற்றல் அறிக்கை பிரகாரம் நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பால் உற்பத்தி செய்கின்ற அம்பேவல தொழிற்சாலையில் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் இயந்திர திறனில் முறையாக 26 சதவீதம் மற்றும் 25 சதவீதம் மட்டும் பயன்படுத்துவதற்கு போதுமான பால் பெறப்பட்டிருந்தது. நிகழ்காலத்தில் படல்கம தொழிற்சாலையில் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் இயந்திரங்களின் திறன் அதிகரிப்பதில் நாளொன்றுக்கு நிறுவனத்திற்கு 600,000 லீட்டர் பால் தேவைப்படும் என அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும் நிகழ்காலத்தில் நிறுவனத்திற்கு சேகரிக்கக்கூடிய தினசரி பால் 200,000 லீட்டர் அளவாக மட்டும் காணப்பட்டது. அதன் பிரகாரம், போதுமான அளவு பால் வழங்கல் இல்லாமையினால் பால் வழங்கல் அதிகரித்துக் கொள்வதற்கான கவனம் செலுத்தப்படாமையினால் இந்த இயந்திரங்களின் முழுமையான திறன் பயன்படுத்துவதற்கு முடியாது காணப்பட்டது.

### பால் உற்பத்தி குறைதல்

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையினால் 2012/2013 ஆண்டில் ரூபா 1,655 மில்லியன் ஆன வெளிநாட்டு கடன் செலவிடப்பட்டு 2,000 பசுக்கள் மற்றும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,807 மில்லியன் வெளிநாட்டு கடன் செலவிடப்பட்டு 2,495 பாற்பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அந்த பாற்பசுக்கள் காணப்பட்ட 04 பண்ணைகள் உட்பட 20 பண்ணைகளில் காணப்பட்ட அனைத்து பாற்பசுக்களிலும் 2016 ஆம் ஆண்டில் 24.75 மில்லியன் பால் லீட்டர் உம், 2017 ஆம் ஆண்டில் 20.10 மில்லியன் பால் லீட்டர் மற்றும் 2018 ஆம் ஆண்டில் 20.03 மில்லியன் பால் லீட்டர் ஆக பால் உற்பத்தி பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் வருடாந்தம் பால் உற்பத்தி குறையும் விதத்தில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. எதிர்பார்க்கப்பட்ட பால் விளைச்சல் குறையும் விதத்தில் திட்டமிடப்பட்டிருக்கையில் அந்த பால் விளைச்சல் அடையப்படுவதற்கு சபைக்கு இயலாதிருந்தது. அதன் பிரகாரம் 2016,2017 மற்றும் 2018 ஆண்டுகளில் உண்மையான பால் உற்பத்தி முறையாக 17.5 மில்லியன் பால் லீட்டர் உம், 14.37 மில்லியன் பால் லீட்டர் மற்றும் 14.00 மில்லியன் பால் லீட்டர் ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் பால் உற்பத்தி 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் உண்மையான உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 18 சதவீதத்தினால் மற்றும் 2.5 சதவீதத்தினால் மேலும் குறைந்திருந்தது.

### பாற்பசுக்களின் உணவுச் செலவு அதிகரித்தல்

தேசிய கால்நடை வள சபையின் எதிர்பார்க்கப்பட்ட பால் விளைச்சல் குறைந்திருப்பினும், மெனிக்பாலம, போபத்தலாவ, டயகம மற்றும் ரிதியாகம பண்ணைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது பசு உணவுச் செலவு 2017 ஆம் ஆண்டில் ரூபா 780.21 மில்லியன் மற்றும் 2018 ஆம் ஆண்டில் ரூபா 735.99 மில்லியன் ஆக காணப்பட்டது. பால் வருமானத்தின் சதவீதமாக பாற்பசுக்களின் செலவு முறையாக 68 சதவீதம் மற்றும் 69 சதவீதமாக காணப்பட்டது. பால் செயற்திட்டத்தின் நேரடி செலவு குறைக்கப்பட்டதன் பின்னர் 2017 ஆம் ஆண்டில் ரூபா 220.4 மில்லியன் மற்றும் 2018 ஆம் ஆண்டில் ரூபா 411.53 மில்லியன் ஆன நட்டங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தது.

விவசாயம்

# பெருந்தோட்டத் துறை

நாட்டின் வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதிச் சந்தையை இலக்காக வைத்து, பிரதான பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்தி, இலாபத்தன்மை மற்றும் நிரந்தரத் தன்மையை விருத்தி செய்வதும் இத் துறையிலிருந்து எதிர்பார்க்கப் படும் பயன்களாகும். அப் பெறுபேறுகளை அடைந்து கொள்ள பெருந்தோட்ட அமைச்சு மற்றும் அதன் கீழ் அமைந்துள்ள ஒரு திணைக்களம் மற்றும் 22 நியதிச்சட்ட நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து பின்வரும் செயற் பொறுப்புக்களை நிறைவேற்றியிருக்க வேண்டும்.

- பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்திகளை அதிகரிக்கத் தேவையான பீடபூமி மற்றும் ஏனைய வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- பெருந்தோட்டக் கைத்தொழிலில் துறையின் உற்பத்திகளுக்கான சர்வதேச போட்டித்தன்மையை அதிகரித்தல்.
- பெருந்தோட்ட உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்டு பெறுமதி சேர்ப்புகளை அதிகரித்தல் தொடர்பான நிறுவனங்களை எழுச்சியுறச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- தேயிலை மற்றும் இறப்பர் தொடர்பான உத்தரவுப் பத்திரங்களை பிறப்பித்தல்.
- தேயிலை ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- தேயிலை மற்றும் இறப்பர் காணிகளை துண்டாடுதல் சம்பந்தமான உத்தரவுப் பத்திரம் வழங்குதலும் கட்டுப்படுத்தலும்.
- பல்பயிர் செய்கை மற்றும் கலவைப் பண்ணை முறையூடாக பெருந்தோட்டக் காணிகளை உச்ச அளவில் பாவனைக்கு எடுத்தல் மற்றும் அதனூடாக விளைச்சல்களையும் உழைப்பாளிகளையும் அதிகரித்தல்.

மேற்குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தால் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதிக்கு ரூ. மில்லியன் 41,974.14 நிதி ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்பதுடன் அதில் ரூ. மில்லியன் 30,727.83 பயன்படுத்தப் பட்டிருந்தது. அதன்படி அக் காலப்பகுதிக்காக பாராளுமன்றம் ஏற்பாடு செய்திருந்த நிதி ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 29.79 வீதம் அதாவது ரூ. மில்லியன் 11,246.31 நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. விபரம் உரு 24 இல் காட்டப்பட்டுள்ளது.




அட்டவணை ...... – பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் பயன்படுத்தல்
மூலம் - திறைசேரியின் இறுதிக் கணக்கறிக்கை

மேற்குறித்த கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது சம்மந்தமாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வின்போது அறியக்கிடைத்த கணக்காய்வு அவதானிப்புகள் சுருக்கமாக பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

### வருடாந்த வாடகை வருமானம்

பெருந்தோட்டத்துறை அமைச்சினால் 1992 ஆம் ஆண்டில் 23 பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு பெற்றுக் கொடுக்கப் பட்டிருந்த அரசுக்குச் சொந்தமான மொத்தமாக 617,486 ஏக்கர் தோட்டங்களில், ஒரு ஏக்கரிலிருந்து கிடைக்க வேண்டிய வருடாந்த வாடகை ரூ.456 இலிருந்து ரூ.3,067 வரை வேறுபட்ட விதங்களில் குறைந்த பெறுமதியுடைய வருமானமாக கிடைத்துள்ளது. நடைமுறையில் காணிகளின் வர்த்தகப் பெறுமதிகளுடன் ஒப்பிட்டுப்பார்த்து அறவிடப் படும் வாடகைகளை திருத்தியமைப்பதற்கு மதிப்பீட்டாண்டின் இறுதிவரை பெருந்தோட்டத் துறையால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

1992 ஆம் ஆண்டில் அரசுக்குச் சொந்தமான காணிகள் பிரதேச பெருந்தோட்ட கம்பனி களுக்கு குத்தகைக்கு கொடுக்கப்படும் போது, குத்தகைப் பெறுமதியைக் கணிப்பிடுவதற்கு தேறிய சொத்து மதிப்பு ரூ. மில்லியன் 200 ஐ விட அதிகமாக காணப்பட வேண்டும் என்ற கொள்கை இருந்தது. அதன்படி அன்றைய தினத்தில் அப்பெறுமதியைவிட குறைவான 03 பெருந்தோட்ட கம்பனிகளுக்கு 20,757 ஹெக்டேயர் வாடகை இல்லாமல் பெற்றுக் கொடுக்கப்பட்டு தற்போது 27 வருடங்கள் கடந்துள்ளது. மதிப்பீட்டாண்டில் அவற்றின் இரண்டு கம்பனிகளின் தேறிய சொத்துப் பெறுமதி ரூ. மில்லியன் 200 ஐத் தாண்டி யுள்ளதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் செயலாற்ற வேண்டிய முறை தொடர்பில் குத்தகை ஒப்பந்த ஏற்பாடுகளில் குறிப்பிடப் படாத காரணத்தால் வாடகை அறவிட முடியாதுள்ளது.

### இலங்கை தேயிலை உற்பத்தி குறைவடைதல்

உலகின் ஒரு உன்னத தேயிலை உற்பத்தியாளராக திகழும் இலங்கை உலக தேயிலைச் சந்தையில் முன்னனி இடத்தை பெற்றிருந்தது. தற்போதைய நிலையில் அந்நிலைமை படிப்படியாக கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. தேயிலை உற்பத்திசாலை நிர்மாணித்தல் மற்றும் நடாத்திச் செல்லல், ஒழுங்கு முறைப்படுத்தல் ஆகியன சபையின் கடமைப் பொறுப்பாக இருந்தது. எனினும் மதிப்பீட்டாண்டின் முடிவில் சபையில் பதிவு செய்யப்பட்ட தேயிலை உற்பத்தித் தொழிற்சாலைகள் 920 ஆக காணப்பட்டது. எனினும் அத் தொழிற்சாலை எண்ணிக்கைகளில் 190 தொழிற்சாலைகள் இயங்கும் நிலையில் காணப்படவில்லை. அதன்படி பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளுடன் ஒப்பிடுகையில் செயற்படாத தொழிற்சாலைகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 21 வீதமாகக் காணப்பட்டது. இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தி 2014 ஆம் ஆண்டிலிருந்து மதிப்பீட்டாண்டு வரை தொடர்ச்சியாக கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

### பூகோள தேயிலைச் சந்தைப் பங்கு கீழ் நோக்கிச் செல்லல்

இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் தேயிலை விற்பனைக்கு ஒத்துழைப்பு நல்குதல், தைரியமூட்டுதல் மற்றும் உலக சந்தையில் தேயிலைக்கான கேள்வி மற்றும் தேயிலை ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்தல் போன்றவை தேயிலைச் சபையின் கடமைப் பொறுப்பாக இருந்தது. 2011 ஆம் ஆண்டில் இலங்கை தேயிலைக்கு உலக சந்தையில் 18 வீதப் பங்கு காணப்பட்டது. உற்பத்தி மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கான தேவையின் பேரில் ஐந்து வருட தந்திரோபாய திட்டம் தயாரிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அவ்வாறெனினும் ஐந்து வருட காலம் கடந்து, இரண்டு வருடங்கள் மேலதிகமாகச் சென்றுள்ள நிலையில், அத்திட்டத்தை செயற்திறனாக நடைமுறைப் படுத்த முடியாமல் போயுள்ளது. சபையினால் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் தொழில் விருத்திச் செலவுகள் அதிகரிக்கப் பட்டிருந்த போதிலும், மதிப்பீட்டாண்டின் முடிவில் உலக தேயிலைச் சந்தையில் இலங்கையின் பங்கு நூற்றுக்கு 15 விதமாக குறைந்துள்ளதாக சர்வதேச தேயிலைச் சங்கத்தின் புள்ளிவிபரத் தகவல்களின் படி அறிய முடிகின்றது. இலங்கைத் தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி குறைவடைந்துள்ளதை உரு 25 காட்டுகிறது.




உரு 25 - இலங்கைத் தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி
மூலம் - சர்வதேச தேயிலைச் சபை அறிக்கை

## தேயிலை மீள் நடுகை

உச்ச விளைச்சலை பெற்றுக் கொள்ள தேயிலை பயிரிடப்படும் நிலப் பரப்பை நிலையாக பாதுகாத்துச் செல்வதற்கு தேசியக் கொள்கை ரீதியாக சிறு தேயிலை விவசாய பூமியில் நூற்றுக்கு 2 விதமான நிலப்பரப்பில் தேயிலை மீள் நடுகை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன், 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை ஐந்து படிமுறைகளின் கீழ் தேயிலை மீள் நடுகை உதவிக் கொடுப்பனவு என்ற வகையில் ரூ. மில்லியன் 1,744.67 கொடுக்கப் பட்டிருந்தது. தேயிலை மீள் நடுகை உதவிக் கொடுப்பனவின் முதல் மூன்று கட்டங்களுக்கு மாத்திரம் ரூ. மில்லியன் 918.11 ஐப் பெற்றுக்கொண்ட விவசாயிகள், மிகுதி உதவி தொகையினைப் பெற்றுக் கொள்ளவோ தேயிலை மீள் நடுகை செய்யவோ நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. கடந்த 5 வருட காலத்தினுள் கொடுக்கப்பட்ட மீள் நடுகை உதவித் தொகை பணத்தில் நூற்றுக்கு 50 வீதத்தை எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தின் பேரில் கவனம் செலுத்த சிறு தோட்ட அபிவிருத்தி அதிகார சபைக்கு முடியாமல் போயுள்ளது. அவ்வாறெனினும், உதவித் தொகை பெற்றவர்களை மீண்டும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்துவதற்கு அல்லது அப் பணத்தை மீண்டும் அறவிடுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## தேயிலைத் தோட்டங்களின் பாவனைக்கு முள் கொள்வனவு

தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின் கீழ் தேயிலைத் தோட்டங்களின் பயன்பாட்டுக்கு சூடாக்கப்பட்ட உலோக அச்சில் வார்க்கப்பட்ட அலகும் பிடியும் ஒருமித்து உருவாக்கப்பட்ட முள் மிகவும் ஏற்ற முள்ளாக காணப்பட்டது. சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை முள்ளு கொள்வனவுக்கு விலைமனுக் கோரியிருந்தது. முள் தொடர்பான விவரக்குறிப்பு விலைமனுவில் அணைக்கப் பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இரும்புப்பிடி மற்றும் கிண்டும் அலகை உலோக ஒட்டுதல் கொண்டு தயாரிக்கப்பட்ட 9,450 முள்ளுகள் ரூ. மில்லியன் 27.15 செலவு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி விவசாயிகளுக்கு தேயிலைத் தொழிலுக்கு பயன்படுத்தக் கூடிய மிகப் பொருத்தமான முள்ளு கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## ஆகக் குறைந்த உற்பத்தி மட்டத்தை பேணிச் செல்லாமை

தேயிலைச் சபையின் நிர்ணயங்களுக்கு அமைய, பயன்படுத்தப்படும் 100 கிலோ கிராம் பச்சைத் தேயிலைக் கொழுந்தில் இருந்து ஆகக் குறைந்தது 21.5 கிலோ கிராம் தேயிலைத் தூள் முடிவுப் பொருளாக பெற்றுக்கொள்ளும் உற்பத்தி மட்டத்தை பேணிச் செல்லவேண்டி இருந்தது. வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பனி மதிப்பீட்டாண்டில் கம்பனிக்குரிய 04 தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்தி அக் குறிப்பிட்ட நிர்ணயிக்கப்பட்ட மட்டத்தை அடைந்திருக்கவில்லை. அதன் காரணமாக பச்சைத் தேயிலைக் கொழுந்துகளுக்கு ரூ. மில்லியன் 24.10 சிக்கனமற்ற செலவு செய்யப்பட்டிருந்தது. செழிப்பான உயர்தரத்திலான பச்சைத் தேயிலை கொழுந்து உற்பத்திக்கு பயன்படுத்தப் படாமை இதன் பிரதான பாதிப்புக் காரணியாக அமைந்திருந்தது. சிறந்த தரமுடைய பச்சைத் தேயிலை கொழுந்துகள் உற்பத்திக்காக பெற்றுக் கொள்வதற்கு மிகச் சிறப்பாக கொழுந்தைப் பெறும் எண்ணத்தின் அடிப்படையில் ரூ. மில்லியன் 1.57 செலவிடப் பட்டிருந்தது. எனினும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைந்துகொள்ள முடியாமல் போயுள்ளது.

### உற்பத்தி கொள்திறனை விட குறைந்த செயற்பாடு

கம்பனிக்குரிய தேயிலை உற்பத்திசாலை மதிப்பீட்டாண்டில் உற்பத்தி கொள்திறனை விட கீழ் மட்டத்தில் செயற்படுவதாக கண்டுபிடிக்கப் பட்டதுடன், ஹினிதும மற்றும் மனிக்திவெல தொழிற்சாலைகள் முறையே நூற்றுக்கு 71 வீதம் மற்றும் 72 வீதம் குறை பாவனை நிலையில் காணப்பட்டது. அது ஒரு கிலோ தேயிலை உற்பத்தியில் உள்ளடக்கப் பட்டுள்ள நிலையான கிரயம் அதிகரிப்பதற்கு ஏதுவாகியதால் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு கிலோ தேயிலைக்கான உற்பத்திக் கிரயம் அதிகரிப்பதற்கு செல்வாக்குச் செலுத்தியுள்ளது. ஹினிதும மற்றும் தாரங்கல தேயிலை தொழிற்சாலைகளின் உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்கில் மதிப்பீட்டாண்டில் கொழுந்து வழங்குபவர்களுக்கு பச்சைக் கொழுந்து ஊக்கத் தொகையாக முறையே ரூ.**1,531,453** வும் ரூ.**1,543,417** வும் கொடுக்கப் பட்டிருந்த போதும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்படவில்லை.

### வங்கி மிகைப்பற்று நிலுவை அதிகரிப்பு

வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி, நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு **2015/16** வருடத்தில் நிலையான வைப்புகளை பிணையாக வைத்து மிகைப்பற்று வசதியை பெற்றிருந்ததுடன் அவ்வருட முடிவில் ரூ. மில்லியன் **63.07** க்கான வங்கி மிகைப்பற்று காணப்பட்டது. மதிப்பீட்டாண்டின் இறுதியன்று அது ரூ. மில்லியன் **87.06** வரை அதிகரித்திருந்தது. வங்கி மிகைப்பற்று அதிகரித்ததன் காரணமாக **2019/20** வருடங்களில் வங்கி மிகைப்பற்றுக்காக ரூ. மில்லியன் **13.51** இனை வட்டியாக செலுத்தியிருந்ததுடன், தேறிய மூலதன வருமானம் மறைப் பெறுமதியை பெற்றதற்கு காரணமாக அமைந்தது. கம்பனியின் நிதி நிலைமையை சிறந்த முறையில் பேணிச் செல்வதற்கு, முகாமைத்துவம் தவறியுள்ளது.

### மொத்த இறப்பர் உற்பத்தி தொடர்ச்சியாக குறைவடைதல்

இறப்பர் பயிரிடப்படும் நிலப் பரப்பை அதிகரிப்பதற்கும் இறப்பர் பயிரிடப்படும் பரப்பின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் நிவாரண உதவித் திட்டங்களை செயற்படுத்தி இருந்தது. எனினும் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை கூட்டுமொத்த இறப்பர் உற்பத்தி தொடர்ந்தேர்ச்சியாக குறைந்து கொண்டே செல்கிறது என்பதுடன் 2017 ஆம் வருடத்தில் 83,070 மெற்றிக் தொன்களாக இருந்த இறப்பர் உற்பத்தி 2018 ஆம் வருடத்தில் 82,560 மெற்றிக் தொன்கள் வரை குறைந்ததுடன் அது 2019 ஆம் வருடத்தில் 74,753 மெற்றிக் தொன்கள் வரை குறைந்துள்ளது. விபரம் உரு 26 இல் காட்டப்பட்டள்ளது.




உரு 26 – ஒட்டுமொத்த இறப்பர் உற்பத்தி

மூலம் - .இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2019

## இறப்பர் ஏற்றுமதி வருமானம் குறைவடைதல்

2018 ஆம் ஆண்டில் 13,982 மெற்றிக் தொன் ஆகவிருந்த இறப்பர் ஏற்றுமதி 2019 ஆம் ஆண்டில் 13,003 மெற்றிக் தொன்கள் வரை நூற்றுக்கு 7 வீதத்தாலும், 2018 ஆம் ஆண்டு ரூ. மில்லியன் 5,088 ஆக இருந்த இறப்பர் ஏற்றுமதி வருமானம் 2019 ஆம் ஆண்டில் ரூ. மில்லியன் 4,321 வரை நூற்றுக்கு 18 வீதத்தாலும் குறைந்திருந்தது. விபரம் உரு 27 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 27 - இறப்பர் ஏற்றுமதி அளவு மற்றும் வருமானம்

மூலம் - பெருந்தோட்ட மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2019

## இறப்பர் மீள் நடுகை

மதிப்பீட்டாண்டில் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் காணிகள் 870 ஹெக்டேயர்களும், பெருந்தோட்டக் கம்பனிகளின் காணிகள் 900 ஹெக்டேயர்களிலும் இறப்பர் மீள் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப் பட்டிருந்த போதிலும் மதிப்பீட்டாண்டின் இறுதியன்று முறையே 578 ஹெக்டேயர்களிலும் 463 ஹெக்டேயர்களிலும் மாத்திரம் இறப்பர் மீள் நடுகை மேற்கொள்ளப் பட்டிருந்தது. அதன்படி இறப்பர் மீள் நடுகை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த காணிப் பரப்பளவில் முறையே நூற்றுக்கு 34 வீதமும் நூற்றுக்கு 49 வீதமுமான காணிகளில் இறப்பர் மீள் நடுகை மேற்கொள்வதற்கு முடியாமல் போயுள்ளது.

அதேபோல் மதிப்பீட்டாண்டில் சம்பிரதாய மற்றும் சாம்பிரதாயமற்ற பிரதேசங்களில் புதிதாக 350 ஹெக்டேயர்களில் இறப்பர் நடப்பட திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதில் 215

ஹெக்டேயர் காணிகளில் மாத்திரம் இறப்பர் நடுகை செய்யப்பட்டிருந்தது. அதன்படி திட்டமிடப் பட்டிருந்த பரப்பளவில் நூற்றுக்கு 39 வீதமான பரப்பளவில் இறப்பர் பயிர் செய்யப் பட்டிருக்கவில்லை.

### விதிமுறைகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் XV அத்தியாயத்தின் 4:7 ஆம் பிரிவுக்கு அமைய, கல்வி நடவடிக்கைகளுக்காக பிணைமுறியில் கையொப்பமிட்டு சம்பளமற்ற லீவு பெற்றிருந்த 04 உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றிருந்தனர். அவ் உத்தியோகத்தர்கள் இணங்கிக் கொண்டதற்கு மாற்றமாக பிணைமுறி விதிமுறைகளை மீறியதன் காரணமாக இறப்பர் ஆராய்ச்சி சபைக்கு ரூ. மில்லியன் 3.51 அறவிடப்பட வேண்டியிருந்தது. அந் நிலுவையாக இருந்த தொகை 2 வருடங்கள் முதல் 28 வருடங்கள் வரையான கால வித்தியாசங்களில் காணப்படுவதுடன் மதிப்பீட்டாண்டின் இறுதி வரையில் அப் பணத்தை அறவிட்டுக்கொள்ள முடியாமல் போயுள்ளது.

### வருடாந்த விளைச்சல் குறைதல்

தேசிய இறப்பர் உற்பத்தியை அதிகரிப்பது இறப்பர் ஆராய்ச்சி சபையின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. அதன்படி வருடாந்த விளைச்சல் ஒரு ஹெக்டேயருக்கு 1,500 கிலோ கிராமிலிருந்து 3,000 கிலோ கிராம் வரையான இடைவெளியில் பேணப் பட்டிருக்க வேண்டும். உயர் தரத்திலான நகலி (clone) பயிரி னத் தொகுதியொன்று 2009 ஆம் ஆண்டளவில் அறிமுகப் படுத்தப் பட்டிருந்த போதிலும், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 2018 ஆம் ஆண்டின் செயற் திறன் அறிக்கையின் படி, வருடாந்த விளைச்சல் ஒரு ஹெக்டேயருக்கு 780 கிலோ கிராம் என்ற அளவில் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

### சிறிய தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களின் புணர்வாழ்வுச் செயற்திட்டம்

- சிறிய தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களின் புணர்வாழ்வுச் செயற்திட்டத்தின் மூலம் 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் 06 மாவட்டங்களில் 729.77 ஹெக்டேயர்கள் தேயிலைப் பயிர்ச் செய்கையின் பேரில் 3,331 பயனாளிகளுக்கு ஆரம்ப நிவாரணக் கொடுப்பனவாக மொத்தமாக ரூ. மில்லியன் 109.26 செலுத்தப் பட்டிருந்தது. காணி அளவை செய்வதில் ஏற்பட்ட கால தாமதம், அளவீடுகள் குறிக்கப் படுவதில் ஏற்பட்ட தாமதம், விவசாயிகள் நிவாரண திட்டத்திலிருந்து வெளியேறியமை, மற்றும் தேயிலைச் சாகுபடி வழிகாட்டல்களை பின்பற்றாமை, ஆகிய காரணங்களால் குறித்த நிவாரண உதவி வழங்கப்படுவது நிறுத்தப் பட்டிருந்தது.

- திட்டம் நிறைவேற்றப் பட்டமைக்கான அறிக்கையின் படி, 2016 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் 2 மாவட்டங்களில் மொத்தமாக 3,000 ஹெக்டேயர்களில் இறப்பர் பயிர் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி செயற்திட்டம் 5,295 ஹெக்டேயர் நிலத்தை இனங்கண்டிருந்ததுடன், அதில் 2,575 ஹெக்டேயர்களுக்கு மாத்திரம் உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. விவசாயிகள் செயற்திட்டப் பணிகளில் இருந்து வெளியேறியமை மற்றும் வேறு பயிர்ச் செய்கைகளுக்கு மாறிச் சென்றமை ஆகிய காரணங்களால் 2019 ஆம் ஆண்டிறுதியில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 2,094 ெ ஹக்டேயர்களில் மாத்திரம் பயிரிடுவதற்கு சாத்தியப்பட்டுள்ளது.

- திட்டம் நிறைவேற்றப் பட்டமைக்கான அறிக்கையின் படி, தேயிலை மீள் நடல் மற்றும் புதிதாக இறப்பர் பயிரிடல் முறையே தேயிலை கொழுந்து பறிக்கப்படும் வரை மற்றும் இறப்பர் பால் வெட்டப்படும் வரை விவசாயிகள் இழக்கும் வருமானங்களை ஈடு செய்து கொள்வதற்கு வேறு குறுங்கால வருமானங்களை உருவாக்கிக் கொள்ளத் தேவையான நிதி வசதிகளைச் செய்துகொள்வதற்கு ரூ. மில்லியன் 422.6 க்கான கடன் வசதி பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருந்தது. மதிப்பிட்டாண்டின் முடிவிலும் அது செயற்படுத்தப் படவில்லை.

### தேங்காய் தட்டுப்பாடு நிலவுதல்

2010 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுவரையான கால இடைவெளியில் தென்னைப் பயிர்ச் செய்கை சபை தென்னங் கன்றுகளை வழங்குதல், அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் செயற்திட்டச் சேவைகளுக்கு ரூ. பில்லியன் 6.38 செலவிட்டிருந்தது. எனினும் மதிப்பீட்டாண்டில் நாட்டினுள் வருடாந்தம் 625.29 மில்லியன் காய்களுக்கான (சாதாரணமாக) பற்றாக்குறை நிலவியது.

## பெருந்தோட்டச் சக்தி கிராமியப் படையணிச் செயற்திட்டம்

தெங்குக் கைத் தொழிலுக்கு பயிற்றப்பட்ட கிராமிய படையணி ஒன்றை நிறுவும் பிரதான நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு பெருந்தோட்ட சக்தி கிராமியப் படையணி செயற் திட்டம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. அச் செயற்திட்ட யோசனையின் படி செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 76 வீதம் பயிற்றுவிப்புப் பணிகளுக்கும், நூற்றுக்கு 24 வீதம் கள உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் பயன்படுத்தவதற்கும் எதிர்பார்க்கப் பட்டிருந்தது. மதிப்பீட்டாண்டின் இறுதியாகும் போது தென்னை பயிர்ச் செய்கை சபை பயிற்றுவிப்புகளுக்கு நூற்றுக்கு 21 வீதமும் கள உபகரணங்கள் மற்றும் டெப் கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கு 79 வீதமும் என்றவாறு நிதி ஒதுக்கத்தைப் பயன்படுத்தி இருந்தது. அதன்படி திட்டத்தின் நோக்கங்களுக்கு மாற்றமாக நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப் பட்டிருந்தது.

## தெங்கு சார்ந்த உற்பத்தி ஏற்றுமதி

இலங்கையில் தெங்கு சார்ந்த உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளில் விருத்தி செய்வதற்கான நோக்கத்தில் தென்னை அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை மொத்தமாக ரூ. மில்லியன் 130.77 செலவிட்டிருந்தது. மதிப்பீட்டாண்டின் இறுதியில் ஏற்றுமதி செய்யப் பட்டுக் கொண்டிருந்த 37 தென்னை சார்ந்த உற்பத்திப் பொருட்களில் 16 பொருட்களுக்கான ஏற்றுமதி அளவு குறைந்திருந்தது. அதன்படி அதிகார சபை தென்னை சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு தவறியுள்ளது.

## விதைத் தேங்காய் உற்பத்தியை அதிகரித்தல்

தென்னை ஆராய்ச்சி சபையால் 2004, 2012 மற்றும் 2013 ஆகிய வருடங்களில் கப்ருக, கப்செத மற்றும் கப்சுவய ஆகிய தென்னை இனங்கள் அறிமுகப் படுத்தப் பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டு முதல் 2019 அம் ஆண்டுவரை அவ் இன விதைத் தேங்காய் உற்பத்தி 97,097 காய்களாக இருந்தது. அது அக்காலத்தின் சபையின் ஒட்டுமொத்த விதைத் தேங்காய் உற்பத்திகளின் நூற்றுவீதமாக நூற்றுக்கு 1.22 வீதமாக மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதன்படி இவ் விசேட தேங்காய் இனத்துக்கான விதைத் தென்னம் பூங்காக்கள் ஸ்தாபிக்கப்பட்டு அதனூடாக விதை தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து மக்கள் மத்தியில் பரவச் செய்வதற்கு சபைக்கு முடியாமல் போயுள்ளது.

## தென்னம் மைட்டாவால் ஏற்படும் நட்டம்

வருடத்தில் தேசிய தென்னை விளைச்சலில் கிட்டத்தட்ட நூற்றுக்கு 10 தொடக்கம் 15 வீதம் வரையான வித்தியாச அளவில் தென்னம் மயிட்டாவால் நட்டம் ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2019 ஆம் வருடத்தில் தென்னைப் பயிர்ச்செய்கை சபை மற்றும் தென்னை ஆராய்ச்சி சபைக்குரிய தோட்டங்களில் உண்மையான தேங்காய் விளைச்சல்களில் முறையே நூற்றுக்கு 9 வீதம் மற்றும் நூற்றுக்கு 6 வீதம் அளவு பாதிப்புக்கு உள்ளாகி இருந்தது. தென்னை ஆராய்ச்சி சபை 2000 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மயிட்டா பீடையை இல்லாதொழிப்பதற்கான ஆராய்ச்சிக்காக ரூ. மில்லியன் 13.77 செலவழித்திருந்தது. அவ் ஆய்வு மூலம் பெற்றுக் கொடுக்கப் பட்டிருந்த பரிந்துரைப்புக்கள் (இரை மயிட்டாக்களை இடுதல், பாம்/மரக்கறி எண்ணெயக் கலவையை தடவுதல் மற்றும் எண்ணெயக் கலவையை தடவுதல்) ஆகிய செயல்முறைகளை செயற்படுத்தும்போது களத்தில் உருவாகும் செயல்முறை சார்ந்த இயலாமை காரணமாக மயிட்டா பீடையை கட்டப்படுத்துவதற்கு முடியாமல் போயுள்ளது.

## சீனித் தொழிற்சாலை நாட்டினுள் முறையாக நிறுவப்படாமை

1981 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க கரும்பு ஆய்வுச் சட்டத்தினூடாக வர்த்தக ரீதியில் கரும்பு உற்பத்தி செய்தல், உள் நாட்டு சீனித் தொழிற்சாலைக்கு தேவையான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளல், உள் நாட்டு சீனித் தொழிற்சாலையைக் கட்டுப்படுத்தல், மற்றும் அறிமுகப்படுத்தப்படும் கரும்பு இனங்களின் வர்த்தக ஏற்பிசைவினைத் (Commercial Adoption) தீர்மானித்தல் போன்றவைகளுக்கு கரும்பு ஆய்வு நிலையத்துக்கு அதிகாரம் வழங்கப் பட்டிருந்தது. நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு 35 வருடங்கள் கடந்த நிலையிலும் சீனிக் கைத்தொழில் நாட்டினுள் சரியான முறையில் ஸ்தாபிக்கப் பட்டிருக்க வில்லை. இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் படி, உள் நாட்டு சீனித் தேவையின் நூற்றுக்கு 92 வீதமான சீனி இறக்குமதி செய்யப்படுவதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

## கரும்புச் செய்கையில் வெள்ளை இலை நோயை இல்லாதொழித்தல்

கரும்பு ஆய்வு நிறுவனத்தால் கரும்புச் செய்கையில் ஏற்படும் நோய்களுக்கு எதிரான இனங்களை அறிமுகப்படுத்தல், மரபணு ஊன்மக சேகரிப்பில் காணப்படும் எதிர்விளைவு இனங்களைத் தேர்ந்தெடுத்து, அவ் இனங்களை இனப்பெருக்க நகல்எடுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தல், நோய் பரப்பும் சிறுஇலைப் பூச்சிகளை இனங்காணல் மற்றும், அப்பூச்சிகளை அழிப்பதற்குத் தேவையான பரிந்துரைகளைப் பெற்றுக் கொடுத்தல், வெந்நீர் சிகிச்சை அலகுகளை நிறுவுதல், நோய்கள் மற்றும் பீடை நாசினிக் கட்டுப்பாடு தொடர்பில் விவசாயிகளை அறிவுறுத்தல், பயிற்சிப் பாசறைகளை நடாத்துதல், அறிவுறுத்தல் பத்திரங்களை விநியோகித்தல், ஆரம்ப நாற்றுப் பண்ணை ஆரம்பித்தல் ஆகிய நடவடிக்கைகள் நோய்த் தடுப்புக்காக மேற்கொள்ளப் பட்டிருந்தன. 1972 ஆம் வருடத்தில் இனங்காணப்பட்ட வெள்ளை இலை நோயை 2019 டிசம்பர் வரை இல்லாதொழிக்க முடியாதுள்ளது.

## கரும்பு விநியோகம் குறைவடைதல்

செவனகல சீனி உற்பத்தித் தொழிற்சாலைக்கு உரித்தான கரும்பு பயிரிடத்தக்க மொத்த நிலப்பரப்பு 4251 ஹெக்டேயர்களாக இருந்தபோதிலும், 2018 ஆம் ஆண்டளவில் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் நிறுவனம் 3355 ஹெக்டேயர் நிலப் பரப்பில் கரும்பு சாகுபடி செய்திருந்தது. அதன்படி தொழிற்சாலையின் இயக்கம் அதி உச்ச கொள்ளளவில் நடாத்திச் செல்வதற்குத் தேவையான கரும்பு வழங்கீட்டை பெற்றுக்கொள்ள போதுமான அளவு காணிகள் நிறுவனத்திடம் காணப்பட்ட போதிலும், அக் காணிகளில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு தொழிற்சாலையின் உற்பத்தியை அதிகரிக்க நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் கரும்பு வழங்கீடு குறைவடைந்ததன் காரணமாக நிறுவனத்தின் தொழிற்சாலைகளில் உச்ச கொள்ளளவான 897,500 மெற்றிக் தொன் கரும்பில் நூற்றுக்கு 34 வீதமான கொள்ளளவே மதிப்பீட்டாண்டில் பாவனைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

## பயன்படுத்தப் படாத சொத்துக்கள்

2013 ஆம் ஆண்டில் ரூ. மில்லியன் 128.91 பெறுமதிவாய்ந்த குத்தகை வசதி அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பாரம் துக்கி (க்ரேன்) இயந்திரத்தை வழங்குநர் வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி கம்பனி உடன்பட்டதன் பிரகாரம் தொழிற்சாலையின் உள்ளே நிறுவி இருக்கவில்லை. இதன் காரணமாக இயந்திரத்தை கொள்வனவு செய்த நாளில் இருந்து எதுவித தேவைக்கும் பயன்படுத்தப் படாமல் செயல் இழந்து கிடந்தது. அதேபோல் இவ் இயந்திரம் தொடர்பில் மேலும் செலுத்தப் பட வேண்டிய குத்தகைத் தவணைக் கட்டணம் ரூ. மில்லியன் 11.81 ஆக இருந்தது.

## வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனி தொழிற்சாலை

தொடர்ச்சியாக 25 வருட காலத்திலிருந்து உள்நாட்டுச் சீனி உற்பத்திக்கு எதுவித பங்களிப்பையும் செய்வதற்கு தவறியுள்ள மற்றும் அரசு பூரண உரிமை கொண்டிருந்த கந்தலாய் சீனித் தொழிற்சாலையை 2015 ஆம் ஆண்டு மீளமைப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தது. எனினும் மீளமைப்புச் செய்ததனூடாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்ள முடியுமாக இருக்கவில்லை. மீளமைப்புச் செய்ததன் மூலம் தொழிற்சாலையில் இருந்த ஆதனங்களின் உரிமை அரசிடமிருந்து நீங்கியிருந்தது. மேலும்

தனியார் தரப்பு ஒன்றுக்கு சிங்கப்பூர் டொலர் 894,516.83 மற்றும் அமெரிக்க டொலர் 211,913.93 க்கான நட்டஈடொன்றையும் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. இச்செயற்திட்டத்தின் கிரயம் நூற்றுக்கு 15 வீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், மதிப்பீட்டாண்டின் முடிவிலும் கூட குறித்த செயற்திட்டத்தை செயற்படுத்தி உள்நாட்டுச் சீனி உற்பத்தியை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

### வரையறுக்கப்பட்ட கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) நிறுவனம்

வரையறுக்கப்பட்ட கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி 2019 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்தில் ரூ. மில்லியன் 1,817.58 தேறிய நட்டத்தை பெற்றிருந்தது. அத் திகதியாகும் போது கம்பனியின் மொத்த சொத்துக்களையும் விடவும் அதிகமாக ரூ. மில்லியன் 6,234.98 க்கான பல்வேறு பொறுப்புக்கள் காணப்பட்டதால் கம்பனி தொடர்ந்து நிலைப்பது நிச்சயமற்றதாக இருந்தது. கம்பனியால் 2014/2015 இன் நிதி ஆண்டு முடிவில் ரூ. மில்லியன் 2,177 கடன் மீதிகள் காணப்பட்டன. அவ் ஆண்டில் அதற்காக ரூ. மில்லியன் 529 வட்டி செலுத்தப் பட்டிருந்தது. 2018/2019 நிதியாண்டு வரை பெற்றுக் கொள்ளப் பட்டிருந்த கடன்களின் அளவு ரூ. மில்லியன் 7,400 வரை நூற்றுக்கு 239 வீதத்தால் அதிகரித்திருந்தது. அதன்படி ரூ. மில்லியன் 1,803 வட்டியாக செலுத்தப் பட்டிருந்ததால் கடன் வட்டி 2014/2015 ஆண்டில் செலுத்தப் பட்டிருந்த வட்டியுடன் ஒப்பீட்டளவில் நூற்றுக்கு 240 வீதத்தால் கூடியிருந்தது. கம்பனியின் இயக்கச் செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்கும் செயற்படு மூலதனத் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கும் தொடர்ந்தேர்ச்சியாக கடன் பெற்றுள்ளதன் காரணமாக கம்பனியின் நிதி நிலைமை மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

### முறையான அங்கீகாரமின்றி கொடுப்பனவுகள் செலுத்தப்படல்

குருணாகலை பெருந்தோட்ட கம்பனி முப்பத்தி ஆறு உத்தியோகத்தர்களுக்கும் சிலாபம் பெருந்தோட்ட கம்பனி இருபத்தி எட்டு உத்தியோகத்தர்களுக்கும் திறைசேரியின் அனுமதியின்றி தொழிலாளிகளை வேலையில் ஈடுபடுத்திக் கொள்வதற்காக வேண்டி பெற்றுக் கொடுக்கப்படும் கொடுப்பனவாக, அவ் உத்தியோகத்தர்களுக்கு மதிப்பீட்டாண்டில் முறையே ரூ. மில்லியன் 13.24 மற்றும் ரூ. மில்லியன் 9.89 கொடுக்கப் பட்டிருந்தது.

### ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிப்பு செய்யாமை

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 10(2) ஆம் பிரிவின் படி ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புப் பணம் செலுத்தும்போது குறித்த மாதத்தின் பங்களிப்புப் பணம் அடுத்த மாத இறுதித் தினத்துக்கு முன் செலுத்தப் பட்டிருக்க வேண்டும். இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் 2019 மே, ஜுன், ஜுலை மாதங்களுக்கான கூட்டு மொத்தம் ரூ. மில்லியன் 4.96 பங்களிப்புப் பணம் 2020 ஜுன் 30 ஆம் திகதியன்று வரையும் செலுத்தியிருக்கவில்லை.

### காணிகளின் உரிமைகள் அறுதியிடப்படாமை

2012 ஜுலை 24 ஆம் திகதி நடைபெற்ற பொது வர்த்தகம் தொடர்பான செயற்குழு, கூட்டுத்தாபனத்துக்கு சட்டரீதியான உரிமையற்ற காணிகளின் சட்டரீதியான உரிமையை இலங்கை மர முந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு அறுதியிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்திருந்தது. கூட்டுத்தாபனத்திடமிருந்த 09 மரமுந்திரிகைத் தோட்டங்கள் மற்றும் 04 விதைப் பூங்காக்களுக்கும் உரித்தான 12,044 ஏக்கர் நிலத்தின் சட்டரீதியான உரிமையை கூட்டுத்தாபனத்துக்கு அறுதியிட்டுக் கொள்ள 2020 ஜுன் 31 ஆம் திகதிவரை முடியாமல் போயுள்ளது.

# மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள்

மீன் நுகர்வினை அதிகரித்தல் மூலம் உயர் போசணை மட்டத்துடனான மக்களை, உயர் அண்மிய செலவாணியை ஈட்டுதல் மற்றும் கடற்றொழில் துறையில் வேலைவாய்ப்புக்களை அதிகரித்தலும் மீன்பிடிக்கும் மக்களுக்கு உயர் வாழ்க்கைத்தரத்தினை வழங்குவதும் இந்த துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுகையாக காணப்பட்டது. அந்த பெறுபேற்றினை அடைந்து கொள்வதற்காக விவசாய, கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வள அபிவிருத்தி, நீர்ப்பாசன மற்றும் கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களம் மற்றும் நான்கு நீதிச்சட்ட நிறுவனங்களினால் பின்வரும் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது.

- கடல், உவர்நீர் (களப்பு) மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு கைத்தொழிழல் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்
- அரசிற்கு சொந்தமான மீன்பிடி வளங்களின் முகாமைத்துவம் மற்றும் மேவுகை
- தனித்துவமான பொருளாதார வலயத்தினுள் கடற்றொழில் அலுவல்களின் அபிவிருத்தி மற்றும் முகாமை செய்தல்.
- நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி கடற்றொழில் மற்றும் கால்நடை வளத்துறை தொடர்பில் ஆராய்ச்சிகளை விரிவுபடுத்துதல்.

மேற்குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ரூபா 25,655.05 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 15,759.76 மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டில் 38.57 சதவீதம் அல்லது ரூபா 9,895.29 சதவீதமான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் உரு 28 இல் காண்பிக்கப் பட்டுள்ளது.




உரு 28 – பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் செலவினம்
மூலம் - பொதுத் திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கைகள்

அமைச்சு, திணைக்களம் மற்றும் நீதிச்சட்ட நிறுவனங்களினால் மேற்குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்பினை நிறைவேற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு

பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

## மீனவச் சமூகத்தினை வலுவூட்டுதல்

மீன்பிடிக் கைத்தொழில் அபிவிருத்தி செயற்திட்டத்தில் மீனவ சமூகத்தினை வலுவூட்டுவதற்கான 2019 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் அமைச்சிற்கு ரூபா 100 பில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. கடற்றொழில் மற்றும் நீரக வள மூலகங்கள் திணைக்களம் மற்றும் தேசிய நீர்வாழ் உயரின செய்கை அபிவிருத்தி அதிகாரசபையினால் அதற்காக ரூபா 62 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டினுள் இனங்காணப்பட்ட 76 பணிப்பொறுப்புக்களில் 11 பணிப்பொறுப்புக்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் நிதியேற்பாடுகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தது

## கடற்கரைகளை புனரமைத்தல் மற்றும் வள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 70 மில்லியனான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீன் இனவிருத்தி தொகுதிகளை (ர்யவஉாநசல) நிர்மாணிக்கும் தேசிய நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபைக்கு நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையினால் அதற்காக ரூபா 57.29 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக கடந்த வருடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் அதற்காக பயன்படுத்தப்படாது ஏனைய பணிகளுக்கு தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## கடலை அண்மித்த 10 மாவட்டங்களின் கிராமங்களை அபிவிருத்தி செய்தல்

ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு உள்ளடங்கலாக கடலை அண்மித்த 10 மாவட்டங்களின் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 100 மில்லியனான நிதி வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதியீட்டப்பட்ட செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த நிதியினை பயன்படுத்தி திணைக்களம் மற்றும் தேசிய நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையினால் கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட தியவற பியச மீனவ வீடமைப்பு மற்றும் சுகாதார வசதிகள் வழங்கும் உதவி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 46.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## குளத்துடனான கிராமமொன்று நிகழ்ச்சித்திட்டம்

குளத்துடனான கிரமமொன்று நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமோதானித நன்நீர் மீன்படிக் கிராமத்தினை உருவாக்குவதற்காக 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 200 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் திணைக்களத்தினால் இனங்காணப்பட்டிருந்த 102 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிடையே 68 செயற்திடட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 92 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறு பூர்த்தி செய்யப்பட வேண்டியெ சயற்திட்டங்களில் 18 செயற்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகும்.

## 10 களப்புகளை சுத்திகரித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், பிரதான அபிவிருத்தி திட்டங்களை (ஆயளவநச ீடயஅள) தயாரித்தலின் கீழ்தெரிவு செய்யப்பட்டிருநுத 10 களப்புகளை சுத்தப்படுத்துவதற்காக ரூபா 60 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 23.60 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அடையப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றம் 70 சதவீதமாக காணப்பட்டது. அவ்வாறே, 2019 ஆம்

ஆண்டின் போது களப்பின் இயலளவினை (ஊயசசலைெ ஊயியஉவைல) தேசிய நீரியல் வள ஆராய்ச்சிகளை நடாத்தி, அறிக்கையொன்றினை தயாரிப்பதற்காக ரூபா 9.8 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும்,அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தேசிய நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரகத்தினால் அந்த நிதியில் ரூபா 6.5 மில்லியன் வேறு பணிகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே, யாழ்ப்பாணம், பானம மற்றும் அறுகம்பே களப்புகளை சுத்திகரித்தல் மற்றும் வண்டல் மண் அகற்றுவதற்காக (dredging) ரூபா 40 மில்லின் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பணி நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### அளவிடைத் திட்டங்கள் மற்றும் களப்புகளின் பௌதீக எல்லைகளை அடையாளப்படுத்தல்

களப்புகளுக்கான அளவிடைத் திட்டங்கள் மற்றும் களப்புகளின் பௌதீக எல்லைகளை அடையாளப்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 25 மில்லயன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 22 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், எதிர்ப்பார்த்த இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

### களப்புகளில் மீன் குஞ்சுகளை இடுதல் மற்றும் கூடுகளை அமைப்பதற்கு தேவையான பொருட்களை விநியோகித்தல்

கடற்றொழில் மற்றும் நீரகவளமூல திணைக்களத்தினால் களப்புகளில் மீன் குஞ்சுகளை இடுதல் மற்றும் கூடைகளை அமைப்பதற்கு பொருட்களை விநியோகித்தல் எனும் செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 48 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போதும் அதற்காக ரூபா 157 மில்லியன் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் ரூபா 68 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட பணிகளை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது.

### செயற்கையான தூண்டில் வலைகளின் உற்பத்தி

தனியார் கம்பனியொன்றினால் முன்வைக்கப்பட்டிருந்த செயற்கையான தூண்டில் வலைகளின் உற்பத்தி தொடர்பான செயற்திட்ட முன்மொழிவொன்றினை அடிப்படையாக் கொண்டு, அதனை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சினால் 2018 ஒக்தோபர் 03 ஆந் திகதி தேசிய நீரகவளமூல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரகத்திற்கு ரூபா 2.50 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அந்த கொடுப்பனவுக்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. முகவராண்மையால் அரச பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு முரணாக செயற்பட்டு செயற்கையான தூண்டில் வலைகள் 1,500 இனை உற்பத்தி செய்து கையளிக்கும் ஒப்பந்தம் தனியார் கம்பனியொன்றிற்கு கையளிக்கப்பட்டிருநுந்தது. அத்துடன், 2018 ஒக்தோபர் 16 ஆந் திகதி அறி மொத்த தொகையும் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. குறித்த பொருட்கள் இணங்கிய அமைப்புக் குறிப்பீடுகளுடன் மற்றும் அளவுகளில் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. தேசிய நீரகவளமூல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரகம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த ஆராய்ச்சி அறிக்கையின் முடிவுரையில் அந்த செயற்கையான தூண்டில் வலைகளுக்கு மீன்கள் கவரப்படாமையால் அரசினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் விளைவற்றதாகியிருந்தது.

### வட மாகாண நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டம்

2017 மார்ச் 20 ஆந் திகதி இலங்கை அரசு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், வட மாகாணத்தின் நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2018 யூன் 01 ஆந் திகதியளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கிரயம், ரூபா 24,24,035 மில்லியனாக இருந்தது. அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது 2020 மே 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டக் காலம் நீடிப்பு செய்யப்பட்டிருந்தது.

பருத்தித்துறை மற்றும் பேசாலை மீன்படித் துறைமுகங்களை நிர்மாணிக்கும் பணிகளை திட்டமிடுதல் செயற்திட்டப் பணியொன்றாகியிருந்தது. பேசாலை மீன்பிடித் துறைமுகத்தினை நிர்மாணிப்பதற்காக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 18.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் போது அது செயற்திட்டத்தின் விடயப்பரப்பிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. முன்வைக்கப்பட்டிருந்த செயற்திட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மொத்த செயற்திட்ட செலவினம் ரூபா 185.4 மில்லியனாக இருந்ததுடன், ரூபா 24,035 மில்லியனான மொத்த செயற்திட்ட செலவினத்துடன் ஒப்பிடும் போது செயற்திட்டத்தின் நிதி செயன்முன்னேற்றம் 0.77 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியது.

2020 சனவரி 08 ஆந் திகதி வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுரையின் அடிப்படையில செயற்திட்டப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தமையால், செயற்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் நிலை பாதிப்பிற்குள்ளாகியிருந்தது. சமூக எதிர்ப்புகள் காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கியால் செயற்திட்டத்திற்கு கடன் வழங்குதல் மறுக்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டம் 2020 மே 31 ஆந் திகதி நிறுத்தப்பட்டிருந்தது.

### மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடும் இடங்களை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல்

2019 ஆம் ஆண்டிற்காக மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடும் இடங்களை நிர்மாணித்தல் உள்ளடங்களான 20 பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,586.57 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 05 மீன்பிடித் துறைமுகங்களை நிர்மாணித்தல் உள்ளடங்களாக 11 பணிகளுக்காக ரூபா 1,066.78 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

வெல்லமங்கர புதிய மீன்பிடித் துறைமுகத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன, அதற்காக ரூபா 2,355 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது அதற்காக ரூபா 639.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மொத்த நிர்மாணச் செலவினம் ரூபா 1,003 மில்லியனாக இருந்ததுடன், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அலைதாங்கியின் நிர்மாணத்திலான பௌதீக செயன்முன்னேற்றம் 40 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

கலமெட்டிய புதிய மீன்பிடித் துறைமுகத்தினை நிர்மாணித்தல் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் போது அதற்காக ரூபா 105.24 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டம் நிறைவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்ய வேண்டியதாக காணப்பட்ட சிலாபம் பசுமை மீன்படித் துறைமுகத்தின் நிர்மாணத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 27.82 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

மிரிஸ்ஸ பசுமை மீன்படித் துறைமுகத்தின் நிர்மாணிக்கும் எஞ்சிய பணிகளுக்காக ரூபா 350 மில்லியனான மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அந்த செயற்திட்டம் 2018 யூன் மாதம் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் போது இதற்காக ரூபா 18 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித பயன்பாட்டிலும் ஈடுபடுத்தியிருக்கவில்லை.

2019 மே மாதமளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக காணப்பட்ட மொத்த கிரய மதிப்பீடு ரூபா 392 மில்லியனான மயிலிடட் துறைமுகத்தினை மீன்படித் துறைமுகமொன்றாக மாற்றுதல் மற்றும் தேவையான வசதிகளை நிறுவும் செயற்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 87.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அலைதாங்கியினை நிர்மாணித்தல் நிறைவு செய்யப்படாமையால் அதன் செயன்முன்னேற்றம் அடையப்பட்டிருக்கவில்லை.

காலி படகுத்துறையில் மீன்படித் துறைமுகத்தினை நிர்மாணித்தல் மற்றும் பெருலிய நங்கூரமிடும் இடத்தினை நிர்மாணித்தல் ஆகிய செயற்திட்டங்கள் முறையே 2018 யூன் மாதம் மற்றும் 2017 யூலை மாதங்களில் நிறைவு செய்ய வேண்டியதாக காணப்பட்டது. அந்த செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 21.72 மில்லியன் மற்றும் 17.00 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

காரைநகர் படகுத்துறையினை நிர்மாணிக்கும் கட்டம் I, II, III ஆம் செயற்திட்டங்கள் 2018 சனவரி மாதத்தின் போது நிறைவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது. அந்த செயற்திட்டங்களுக்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 39 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 13 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

நீர்கொழும்பு களப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் III ஆம் கட்டம் 2019 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2019 திசெம்பர் மாதம் நிறைவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது ரூபா 63.24 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் மொத்த செயன்முன்னேற்றம் 38 சதவீதமாக காணப்பட்டது.

### 3 மாடிக் கட்டிடமொன்றினை நிர்மாணித்தல்

கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சு அமைந்துள்ள 6 மாடிகளை கொண்ட புதிய பிரதம செயலாளரின் கட்டிடத்தில் அமைச்சினை நடாத்திச் செல்வதற்கு இடவசதி தொடர்பில் பாரிய நெருக்கடி நிலவுவதாக தகவல் முன்வைத்து ஆம் அமப17/1318/718/077/ரீபீஆர் இலக்க அமைச்சரவைப் பிரமாணக்குறிப்பொன்று முன்வைக்கப்பட்டிருந்ததுடன், அமைச்சிற்காக ரூபா 242.5 மில்லியன் கிரயமான 03 மாடிகளைக் கொண்ட 29,000 கன அடிகள் பரப்புடைய கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. ஒப்பந்தமானது அரசின் பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு இணங்காத மற்றும் ஒப்பந்த நிரமாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பதிவின் அடிப்படையில் பொருத்தமற்ற ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 2019 ஒக்தோபர் 30 ஆந் திகதியளவில் ஒப்பந்ததாரருக்கு ரூபா 68 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

### இரணைமடு இனவிருத்தி நிலையத்திற்காக முறையான நீர் விநியோகத்தினை பெற்றுக்கொள்ளல்

நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் கீழான இரணைமடு இனவிருத்தி நிலையத்திற்கு முறையான நீர் விநியோகத்தினை பெற்றுக்கொள்வதற்காக உரிய வியூகங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 16.60 மில்லியன் பெறுமதியின் அடிப்படையில 2018 யூலை 25 ஆந் திகதி தனியார் கம்பனியொன்றிற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த ஒப்பந்தத்தினை நிறைவு செய்ய ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்காக விலகல் கட்டளையின் மூலம் செலவிடப்பட்டிருந்த ரூபா 368,081 தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது.

### கடலோர மற்றும் சமுத்திர நீரியல் வாழ் உற்பத்தியினை அபிவிருத்தி செய்தல்

மன்னார் மாவட்டத்தின் வெடத்தல் தீவில் அமைந்துள்ள வனசீவராசிகள் பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்ட இடமொன்றில் கடலோர மற்றும் சமுத்திர நீரியல் வாழ் உற்பத்தியினை அபிவிருத்தி செய்தலை நோக்காக கொண்டு 2016 ஆகஸ்ட் மாதம் முதல் 2018 ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியினுள் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு வரையிலும் சுற்றாடல் மதிப்பாய்வு அறிக்கைகள், சாத்தியவளக் கற்கைகள் மற்றும் அபாய மதிப்பீட்டு அறிக்கைகள் ஆகியன பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், செயற்திட்டத்திற்காக நீர் மற்றும் மின்சாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 25.19 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## மீன் பொய்கைகளின் பாதுகாப்பு

உடவளவ திலாப்பியா இனவிருத்தி நிலையத்தின் மீன் பொய்கைகளின் பாதுகாப்புக்காக காணியைச் சுற்றி அமைந்துள்ள வேலியை புனரமைப்பு செய்த போது அதற்காக மேலதிக வேலைகளுடன் ரூபா 4.52 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மேலதிக பணிகளுக்காக ரூபா 1.65 மில்லியன் செலவிடப்பட்டமையால் 550 மீட்டர் நீளத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த வேலியானது குறித்த நிதி எல்லையினுள் சுமார் 343.45 மீட்டர்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மீன் பொய்கைகள் பாதுகாக்கப்படும் வகையில் வேலிகள் நிர்மாணிக்கப்படாடை, நிர்மாணிக்கப்பட்டிருந்த வேலியில் சில இடங்களில் இடைவெளிகள் காணப்பட்டமையாலும், மீன் பொய்கைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிராததுடன், ரூபா 4.52 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பணியின் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை.

## 04 பொய்கைகள் மற்றும் 04 செங்கல் நீர்த்தாங்கிகளை நிர்மாணித்தல்

உடவளவை திலாப்பியா இனவிருத்தி நிலையத்தில் 04 பொய்கைகள் மற்றும் 04 செங்கல் நீர்த்தாங்கிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 17.07 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 யூன் 18 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகளின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட 04 பொய்கைகளில் 03 இல் மற்றும் 04 நீர்த்தாங்கிகளில் 02 இலும் மீன்கள் காணப்படவில்லை.

## நீர் விநியோக முறைமையொன்றினை வழங்கி பொருத்துதல்

உடவளவ நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி நிலையத்திற்கு நீர் விநியோக முறைமையினை வழங்கி பொருத்தும் பணிகளுக்காக ரூபா 8.63 மில்லியன் செலவிடப்பட்டு 2018 பெப்ரவரி 11 ஆந் திகதி பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 2019 யூன் 19 ஆந் திகதி வரையிலும், நீர் உந்தும் இயந்திரத்திற்காக மின்சாரம் பெறப்பட்டிருக்காமையால் ரூபா 8.63 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட செயற்திட்டத்திலிருந்து உச்ச செயற்திறனைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## உடவளவை காப் இனவிருத்தி நிலையம்

உடவளவை காப் இனவிருத்தி நிலையத்தில் தலைமை அலுவலகத்தினை பழுதுபார்த்தல் மற்றும் திலாபியா இனவிருத்தி நிலையத்தின் தொழிலாளர் இல்லத்தினை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 2.46 மில்லியன் மற்றும் 14.06 மில்லியன் செலவிடப்பட்டு, 2018 யூலை 03 ஆந் திகதி பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. 2019 யூன் 19 ஆந் திகதி வரையிலும் இனவிருத்தி நிலையம் மற்றும் தொழிலாளர் இல்லங்கள் 02 வதிவின்றி விளைவற்றுக் காணப்பட்டது.

## திலாப்பியாவிற்காக மீன் உணவு அலகொன்றினை தாபித்தல்

திலாப்பியாவிற்காக மீன் உணவு அலகொன்றினை தாபிப்பதற்காக செயற்திட்ட அறிக்கையொன்றினை தயாரித்து தரமான உணவினை குறைவான உற்பத்திக் கிரயத்துடன் அதிகாரசபையினால் உற்பத்தி செய்வதற்கும், ஆண்டொன்றில் ஆகக் குறைந்தது மீன் உணவிற்காக செலவிடப்படும் தொகையில் ரூபா 05 மில்லியனையாவது சேமிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம், பெறுகைகள் குழுவொன்றினை நியமிக்குமாறு கோரிக்கை விடுப்பதற்கு முன்னர் அடிப்படை சுற்றாடல் ஆராய்ச்சி அறிக்கையொன்று, சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பான மதிப்பீடு, சமூக தாக்கம் தொடர்பான மதிப்பீடொன்று மற்றும் செயற்திட்டத்திற்குரிய ஏனைய அனைத்து பெறுகைக்கு ஆயத்தமாகும் பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறு மேற்கொள்ளாது திலாப்பியா உடவளவ காப் அனவிருத்தி நிலையத்தின் உணவு உற்பத்தி இயந்திரத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 10.23 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இயந்திரத்தினை பொருத்துவதற்குரிய கட்டிடம் தயார்படுத்தப்படாமை, மின்சாரம் பெற்றுக்கொள்ளப்படாமை, உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு 2019 ஆகஸ்ட் மாதம் முதல் 2020 ஆகஸ்ட் மாதம் வரையிலும் இயந்திரத்தினை செயற்படு நிலைக்கு உள்ளாக்க முடியாது போயிருந்தது. அதன் காரணமாக, மீன் உணவிற்காக மீளாய்வாண்டின் போதும் ரூபா 57.79 மில்லியன் செலவிட நேர்ந்திருந்தது. மேலும், இயந்திரத்தின்

உத்தரவாதக் காலத்தினுள் இயந்திரம் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன், ரூபா 10.23 மில்லியன் செலவிடப்பட்ட செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை.

### இயந்திரத்தினை கொள்வனவு செய்தல்

நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரச்சபையினால் களப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 161.40 மில்லியன் பெறுமதியான புதர்கள் மற்றும் குப்பைகளை அகற்றும் 03 இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருந்தது. அந்த கொள்வனவுகளுக்காக அதிகாரசபையினால் 2018 யூலை 13 ஆந் திகதி ரூபா 42.57 மில்லியன் முற்பணமாக ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரால் போலியான பிணைமுறி கடிதங்கள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், அவற்றின் சரியான தன்மை தொடர்பில் உறுதிப்படுத்தாது அவருக்கு முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. முற்பணம் செலுத்துவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், தாபனவிதிக் கோவையின் ஐஐ ஆம் தொகுதியின் ஆம் XLUIII அத்தியாயாத்தின் பிரகாரம் எவ்வித ஒழுக்காற்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு முறையற்ற விதத்தில் செலுத்தப்பட்ட 42.57 தொகையானது 06 மாதங்கள் தனிப்பட்ட பாவனைக்கு இடமளிக்கப்பட்டு பின்னர் மீள அறவிடப்பட்டிருந்தது. மேலும், 4 உத்தியோகத்தர்கள் இந்த இயந்திரத்தினை பரீட்சிப்பதற்காக வெளிநாடு சென்றிருந்ததுடன், அதற்காக ரூபா 363,504 தொகை அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தது.

### மீன் கழிவுகளை பயன்படுத்தி அமினோ அமிலத்தினை (Peptides) பிரித்தெடுத்தல் மற்றும் வகைப்படுத்தல்

டுனா மீன்களை தயாரித்து ஏற்றுமதி செய்யும் கைத்தொழிற்சாலைகளிலிருந்து அப்புறப்படுத்தப்படும் மீன் கழிவுகள் உரிய பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது அப்புறப்படுத்தப்படுவதனால் இடம்பெறும் சூழல் மாசடைதலை குறைப்பதற்காக மீன் கழிவுகளை பயன்படுத்தி அமினோ அமிலம் (ீநிவனைநள) பிரித்தெடுத்தல் மற்றும் வகைப்படுத்துவதற்கான தேசிய நீரக வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையினால் ரூபா 1.75 மில்லியன் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதற்காக ரூபா 771,569 செலவிடப்பட்டிருந்தது. ஆராய்ச்சியின் அடிப்படை நோக்கமான அமினோ அமிலம் (ீநிவனைநள) வகைப்படுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை என்பது பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. இந்த செயற்திட்டத்தினை தெரிவு செய்வதற்கான அடிப்படையாக தொழிற்சாலைகளிலிருந்து அப்புறப்படுத்தப்படும் மீன் கழிவுகளை உரிய முறையில் பயன்படுத்தாமை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த கழிவானது மீன் உணவு உற்பத்திக்காக பயன்படுத்தப்படுவதனால் உரிய மதிப்பாய்வொன்றினை மேற்கொள்ளாது செயற்திட்டம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

### அதிகுளிரூட்டியுடனான நெடுநாள் மீன்பிடி வள்ளங்களின் மீன்களின் தரத்தினை பரிசோதித்தல்

அதிகுளிரூட்டியுடனான நெடுநாள் மீன்பிடி வள்ளங்களின் மீன்களின் தரத்தினை பரிசோதிப்பதற்காக ரூபா 3 மில்லியனான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் மேற்படி ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக ரூபா 3.61 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த ஆராய்ச்சி செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கமானது உயர் குளிரூட்டல் கட்டமைப்புடனான மேம்படுத்தப்பட்ட நெடுநாள் வள்ளங்களில் மீன்களின் தரத்தினை மதிப்பீடு செய்தல் என செயற்திட்டத்தின் நோக்கமாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், முகவராண்மையினால் 50 அடிகளுக்கு மேற்பட்ட குளிரூட்டிகள் இல்லாத நெடுநாள் வள்ளங்களின் மீன்களின் தரத்தினை மதிப்பீடு செய்தல் இடம்பெற்றிருந்தமை செயலாற்றல் அறிக்கையினை பரிசோதித்த போது வெளிப்படுத்தப்பட்டது.

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையினால் 2017 ஆம் ஆண்டிற்கு முன்னரும் அதிகுளிரூட்டி இல்லாத நெடுநாள் வள்ளங்களில் மீன் பிடிக்கப்பட்டதன் பின்னர் பிடிக்கப்பட்ட மீன்களின் சேதம் 40 சதவீதமாக உள்ளமை கண்டறியப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் அறுவடைக்குப் பின்னரான சேதத்தினை குறைப்பதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு

பதிலாக தொடர்ந்தும் அறுவடைக்குப் பின்னரான நட்டத்தினை மதிப்பீடு செய்வதற்காக 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 7.49 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

நெடுநாள் வள்ளங்களில் மீன்களின் தரம் மற்றும் அதன் நட்டத்தினை குறைக்கும் நோக்கில் ரூபா 950,130 செலவிடப்பட்டு அதிகுளிரூட்டி கட்டமைப்புடனான நெடுநாள் வள்ளங்களை நிர்மாணிப்பதற்கான பரிந்துரை அறிக்கையொன்று 2017 ஆம் ஆண்டின் போது மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த அறிக்கையினை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தி நெடுநாள் வள்ளமொன்றினை நிர்மாணிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பணிப்பாளர் நிதிப் பதவிக்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திராத ஒருவருக்கு தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரகத்தின் பணிப்பாளர் நிதிப் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தருக்கு 2017 மே மாதம் முதல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக ரூபா 5.44 மில்லியன் சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது.

குறித்த தகைமையினை பூர்த்தி செய்திராத உத்தியோகத்தர் ஒருவர் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரகத்தின் ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு 2014 மே மாதம் முதல் இணைத்துக் கொள்ளப்பட்டு 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2.89 மில்லியன் கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

# கைத்தொழில்

உலகளாவிய ரீதியில் போட்டிமிக்க மற்றும் சாதகமான வியாபாரச் சூழலொன்றினை உருவாக்குதல் இந்த துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறாக இருந்தது. அந்த பெறுபேற்றினை அடைந்து கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் வியாபார அலுவல்கள், நீண்ட காலம் புலம்பெயர்ந்த நபர்களை மீள்குடியமர்த்துதல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களமொன்றும் 04 நியதிச்சட்ட நிறுவனங்களாலும் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது.

- கைத்தொழில் மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி
- முயற்சியாண்மையினை தேசிய பொருளாதார மூலங்களுடன் இணைப்பதற்கான மூலோபாயங்களை தயாரித்தல்.
- இலங்கையின் புடவைக் கைத்தொழில் உற்பத்திக்காக வடிவமைப்பு அபிவிருத்தி மற்றும் பிரபல்யப்படுத்தல்.

மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ரூபா 42,219.94 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 21,820.27 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாராளுமன்றத்தினால் காலப்பகுதிக்கு உரியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 48.32 சதவீதமான ரூபா 20,399.67 மில்லியனான நிதயேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் உரு 29 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 29 – பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் பயன்பாடு
மூலம் - பொது திறைசேரியின் இறுதி நிதிக்கூற்றுக்கள்

அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களினால் மேற்குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

## கைத்தொழில் பேட்டைகள்

2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கைத்தொழில் பேட்டைகளின் கீழ் 25 செயற்திட்டங்களுக்காக ரூபா 212.74 மில்லியன் நிதியேற்பாமு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 23 செயற்திட்டங்களில் எவ்வித பௌதீக

செயன்முன்கேற்றதிதினையும் பெற்றிராததுடன், 02 செயற்திட்டங்களில் ஒரு சதவீதமான செயன்முன்னேற்றமொன்று அடையப் பெற்றிருந்தது. அதன் பிரகாரம், மேற்குறிப்பிடப்பட்ட 25 செயற்திட்டங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒட்டுமொத்த நிதியேற்பாட்டில் ரூபா 199.48 மில்லியனான நிதியேற்பாடாக பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

அமைச்சினால் ரூபா 279.28 மில்லியன் செலவிடப்பட்டு 02 கைத்தொழில் பேட்டைகளில் 05 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த கட்டிடங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. அவ்வாறே, தற்போது செயற்படு நிலையிலுள்ள 17 கைத்தொழில் பேட்டைகளினுள், கைத்தொழில் பேட்டைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிலப்பரப்பு 634.97 ஏக்கர்களானதுடன், அவற்றுள் 235.58 ஏக்கர் அல்லது மொத்த நிலப்பரப்பில் 37.1 சதவீதம் 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

“நக்வமு லங்கா” செயற்திட்டத்திற்குரிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 136.16 மில்லியனாக இருந்ததுடன் கடப்பாடுகளின் பெறுமதி ரூபா 4.30 மில்லியனாக இருந்தது. அந்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் எந்த செலவினங்களை உள்ளடக்கியுள்ளது என்பது தொடர்பிலான தகவல்கள் 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அமைச்சிடம் காணப்படவில்லை. புடவைக்கைத்தொழில் மற்றும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில்களை மேம்படுத்தும் செயற்திட்டமொன்றின் அடிப்படை பணிகளுக்காக 2015 ஆம் ஆண்டின் போது 3 தரப்பினருக்கு ரூபா 167.9 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், காணிகளை கைப்பற்றுதல் தொடர்பில் எழுந்த சிக்கல் காரணமாக அந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாது கைவிடப்பட்டதுடன், 2020 யூலை 01 ஆந் திகதி வரையிலும் அந்த பணத்தை மீள அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## இருமாடிக் கட்டிடத்தினை ஆக்கபூர்வமான பணியொன்றிற்காக பயன்படுத்தப்பட்டாமை

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியின் உரித்தினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது, 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 60.12 மில்லியன் செலவிடப்பட்டு புதிய இருமாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்தக் கட்டிடத்தின் வளிச் சீராக்கிகள் பொருத்தப்படாமையால் அது 2020 மே மாதம் வரையிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2020 மே 30 ஆந் திகதி வரையிலும் அந்தக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் பயன்படுத்தக் கூடிய நிலை வரையில் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த காரணத்தினால், நிலையத்தின் கல்விப் பிரிவுகளை நடாத்திச் செல்வதற்கு மாதமொன்றிற்கு ரூபா 84,975 ஆன வாடகை அடிப்படையில் கட்டிடமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1.02 மில்லியனும், 2020 ஆகஸ்ட் மாதம் வரையிலும் ரூபா 339,900 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

## நிதியை ஆக்கபூர்வமான செயலில் ஈடுபடுத்தாமை

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) நிதியிடல் கீழ், 2014 திசெம்பர் முதல் 2016 திசெம்பர் மாதம் வரையான 02 வருட காலப்பகுதியினுள் கலைஞர்களின் தொழில்நுட்ப திறனை அபிவிருத்தி செய்தல் மற்றும் மதியுரை உதவிகளை வழங்கும் செயற்திட்டமொன்று தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டளவில் இந்த செயற்திட்டம் காலம் நிறைவடைந்து 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அந்த செயற்திட்டத்திற்காக கிடைத்த நிதியில் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 2.32 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செயற்திட்டத்திலிருந்து கிடைத்த நிதி, எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய முறையில் ஆக்கபூர்வமான பணியொன்றில் ஈடுபடுத்தியிராததுடன், அந்த நிதியில் ரூபா 2.32 மில்லியன் மற்றுமொரு வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்ற விதத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### தையல் இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்படல்

தேசிய கைப்பணிப் பொருட்கள் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் பொல்கொல்ல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2016 திசெம்பர் 28 ஆந் திகதி ரூபா 459,900 செலவிடப்பட்டு 10 தையல் இயந்திரங்கள் மற்றும் 01 மோட்டார் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த 10 தையல் இயந்திரங்களுக்கு மேலதிகமாக 04 சாதாரணமான தையல் இயந்திரங்கள் மற்றும் சிக்சக் தையல் இயந்திரங்கள் 04 உள்ளடங்கலாக 18 தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கலைஞர்களின் தேவைப்பாட்டிற்காக பகிர்ந்தளித்தல் அல்லது கலைஞர்களின் பயிற்சிக்காக பயன்படுத்தாது மீளாய்வாண்டின் இறுதியளவில் சுமார் 03 வருட காலமாக அந்த தையல் இயந்திரங்கள் பொல்கொல்ல மாகாண பயிற்சி நிலையத்தின் பயிற்சிப் பிரிவினுள் எவ்வித ஆக்கபூர்வமான பணிக்காகவும் பயன்படுத்தாது அவை பொதியிடப்பட்டவாறு விளைவற்ற விதத்தில் குவிக்கப்பட்டிருந்தது.

### கைவினைப்பொருட்களுடன் தொடர்புடைய சுயதொழில்வாய்ப்புக்களை ஆரம்பித்தல்

தேசிய கைப்பணிப் பொருட்கள் சபையினால் 600 கலைஞர்களுக்கு நலன்களைப் பெற்றுக்கொடுக்கும் எதிர்பார்ப்புடன், கைவினைப்பொருட் கைத்தொழிலுடன் தொடர்புடைய சுயதொழில்வாய்ப்புக்களை உருவாக்க வசதிகளை வழங்குதல் (மூலப்பொருட்கள்/ உபகரணங்கள்) கீழ் ரூபா 2.30 மில்லியன் வருடாந்த பாதீட்டு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது அவற்றுள் ரூபா 629,000 செலவிட்டு 31 நலனாளிகளுக்காக நலன்கள் வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் நிதிச் செயலாற்றல் 27 சதவீதமாக காணப்பட்டதுடன், பௌதீக செயலாற்றல் 5 சதவீதமான குறைவான மட்டத்தில் நிலவியது.

### கலைஞர்களுக்கு இந்திரங்கள் மற்றும் உபகரணங்களை பகிரந்தளித்தல்

முயற்சியாண்மையாளர்களுக்கு உரிய கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாட்டில் ரூபா 1.29 மில்லியன் தேசிய கைவினைப் பொருட்கள் சபையினால் செலவிடப்பட்டு மன்னார் தாராபுரம் கிராமத்தில் கலைஞர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான கைஇயந்திர தையல் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அந்த உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டியதாக இருந்தது. 2020 யூன் மாதம் வரையிலும் அந்த பொருட்கள் நலனாளிகளுக்கு பகிர்ந்தளித்தல் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### முதலீடுகளுக்கான நலன்கள் கிடைக்காமை

2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தினால் மகாவலி மெரின் சீமெந்து தனியார் கம்பனியில் ரூபா 6.40 மில்லியனான பங்கு மூலதனமாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. அந்த முதலீட்டிற்காக 2016 ஆம் ஆண்டின் போது மாத்திரம் நலன்கள் கிடைத்திருந்ததுடன் அதன் பின் எந்த நலனும் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் முதலீட்டுத் திட்டம் கணக்கு வைக்கப்பட்ட விதம் மற்றும் முதலீட்டிற்கு உரிய பங்குகள் தொடர்பில் போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### சுண்ணாம்பு கல் படிவினை குத்தகைக்கு வழங்கும் உடன்படிக்கை

1996 ஆகஸ்ட் 23 ஆந் திகதி ஹொல்சிம் கம்பனிக்கு சுண்ணாம்பு படிவினை குத்தகைக்கு வழங்குவதற்காக இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம் இலக்கம் 495 கொண்ட குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் சில 2019 நவம்பர் 07 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட 268 ஆம் இலக்க மேலதிக குத்தகை உடன்படிக்கையில் திருத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் திருத்தப்பட்ட குத்தகை வாடகையாக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் ரூபா 58.02 மில்லியன் 2 தவணைகளில் பெற்றுக்கொண்டிருந்தது. திறைசேரியிடம் இருந்து எழுத்துமூலமாதன அனுமதியினை பெற்றுக்கொள்ளாது மேலதிக குத்தகை

உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டமையினால் 1993 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய அதிகரிக்கப்பட வேண்டிய ஐக்கிய அமெரிக்க டொலர் 1.37 மில்லியனான குத்தகை வாடகை கூட்டுத்தாபனத்திற்கு இழக்கப்பட்டிருந்தது, பாதகமான திருத்தங்கள் குத்தகை உடன்படிக்கையில் மேற்கொள்வதற்காக சட்டமா அதிபரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியொன்றினை வங்கியில் அடவு வைத்தல்

2019 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளபடியாக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள காணியொன்று வங்கிக்கு அடவு வைக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 97.70 மில்லியனான கடன் தொகை இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்டிருந்தது. அந்த கடன் தொகை யூன் 25 ஆந் திகதி வங்கியினால் பதிவேட்டிற்கு உட்படுத்தியிருந்ததுடன் அந்தக் கடனுக்காக 2019 ஆம் ஆண்டினுள் கடன் தவணையாக ரூபா 24.00 மில்லியன் கூட்டுத்தொகையும் கடனுக்கான வட்டியும் ரூபா 11.54 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியிலிருந்து ரூபா 73.70 பில்லியனான நிலுகைக் கடனும் செலுத்த வேண்டியதாக இருந்தது. அவ்வாறே நிலுவைக்கடன் செலுத்த வேண்டியுள்ள போது 2019 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 19.26 மில்லியன் மற்றும் 2020 சனவரி மாதத்தில் ரூபா 51.50 மில்லியன் கடன் வட்டியினை விட குறைவான வட்டி வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்கான எழுத்து மூலமான அங்கீகாரமின்றி அந்த தொகை அரச வங்கியொன்றில் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

# காணி அலுவல்கள்

நிலைபேறுருடைய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு காணி நில வளங்களை உகந்த விதத்தில் பயன்படுத்துவதே காணிப் பிரிவிலிருந்து எதிர்பார்க்கப்படும் பிரதான பெறுபேறாக அமைந்துள்ளது. அந்த எதிர்பாரப்பை நிறைவேற்றுவதை அடிப்படையாகக்கொண்டு காணி அமைச்சு, 4 திணைக்களையும் 2 நியதிச்சட்ட சபைகளையும் இணைத்து பின்வரும் பணிகளை நிறைவேற்றியிருக்க வேண்டும்.

- காணி விடயங்கள் தொடர்பான கொள்கை நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.
- நிலைபேறுடைய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு காணிப் பயன்பாட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் படி குறிப்பிட்ட பிரிவுகளுக்கான அறிவுறைகளை வழங்குதல்.
- அரச காணிகளை நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்
- சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காணிகளை கையேற்றல்
- தேசிய தேவைகளுக்காக காணிகளை சுவீகரித்தல்.
- அரசாங்க காணிகளின் உடமையை உறுதிப்படுவதற்கு சொத்துரிமைப் பத்திரங்களை வழங்குதல்
- அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு தேவைகளுக்கு அரசாங்க காணிகளை நீண்ட காலங்களுக்கும் குறுகிய காலங்களுக்கும் குத்தகைக்கு கொடுத்தல்.
- காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு உரித்தாவணங்களை பதிவு செய்தல்.
- தேசிய திட்டமிடலை இலக்காகக் கொண்டு நிலஅளவை செய்தல், நில அளவை வரைபடங்களை தயாரித்தல் மற்றும் துணை ஆவனங்களை தொகுத்தல்.
- அரசாங்க காணிகள் சம்பந்தமான தகவல் முறைமையொன்றை தயாரித்தல்.

மேற்குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளமன்றத்தினால் 2017 முதல் 2019 வரையான காலத்தில் ரூபா 26,585.71 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 22,492.68 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 15.40 சதவீதம் அல்லது ரூபா 4,093.03 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே உரு 30 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.




உரு 30 - பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடும் அதன் பயன்பாடும்.
மூலம் : பொதுத் திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கை.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களால் மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம்

2019 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த முன்மொழியப்பட்ட செயற்பாடுகளில் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- காணி அபிவிருத்திப் பிரிவின் பிரச்சார நிகழ்ச்சிகளின் போது தீர்வுசெய்தல் காணி உறுதிகளை பெற்றுக்கொள்தல் தொடர்பில் 50,000 துண்டுப் பிரசுரங்களையும் கைநூல்களையும் தயாரித்து விநியோகித்தல்.
- இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக 05 கலந்துரையாடல்களை நடாத்துவதன் மூலமும் 05 குறு விளம்பரங்களை பிரசுரிப்பதன் மூலமும் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல் நிகழ்ச்சித்திட்டங்களின் போது உரிமைத்துவ விசாரணை உத்தியோகத்தர்கள், சட்ட உத்தியோகத்தர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், பிரதேச மற்றும் மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட 600 உத்தியோகத்தர்களிற்காக 04 நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- 100 உள்ளூராட்சி உத்தியோகத்தர்களுக்காக 02 நிகழ்ச்சிகளை நடாத்துதல், கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஏனைய 500 வெளிக்கள உத்தியோகத்தர்களிற்காக 04 நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் கணனி மயப்படுத்திய தகவல் தள முறைமையொன்றை பேணுதல், வசதியான முறையில் உரித்தாவணங்களை வழங்குதல் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட அமைச்சின் பிரிவுகளிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

### சட்டத்தை திருத்தியமைத்தல்

காணிக் கொள்கைகள் பிரிவினால் தொடர்புடைய நிறுவனங்களை ஒருங்கிணைத்து சட்ட வரையுநர் மற்றும் சட்டமா அதிபரின் அவதானிப்புக்களைப் பெற்று காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டம், நிலச்சுவாந்தர் சட்டம், அரசாங்க காணிகள் வங்கிச் சட்டம் மற்றும் தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கைகள் சட்டம் என்பவற்றை திரத்தியமைத்து வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### காணிகளை கையேற்றல்

1950 இன் 09 ஆம் இலக்க காணிச் சட்டத்தின் 38(அ) ஆம் இலக்க இடைக்கால கட்டளையின் படி அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு தேவையான காணிகளை தனியார் துறையிடமிருந்து சுவீகரித்துக்கொள்ளும் செயல்முறையை காணி அமைச்சு, அபிவிருத்திச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள், விலைமதிப்பீட்டுத் திணைக்களம், பிரதேச செயலாளர் அலுவலகம், நில அளவையாளர் திணைக்களம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களும் ஒன்றாக இணைந்து செயற்படுத்துதல் வேண்டும். மேலும், அப்பணிகளை நிறைவேற்றுவதற்கு காலம் வரையறுக்கப்பட்டு திட்டமிடப்பட்ட செயல்முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறான வேலைத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பட்டிருக்காமை காரணமாக 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அவ்வாறு காணி சுவீகரிப்புகளிற்காக 38(அ) கட்டளை மற்றும் 38(அ) இடைக்கால கட்டளை வழங்கப்பட்டு முடிவடைந்திருந்த 1,311 கோப்புகளில் மதிப்பீட்டாண்டு முடிவில் 315 கோப்புகளே முடிவுறுதத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, 1980 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியினுள் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான இழப்பீடு வழங்க தாமதம் ஏற்பட்டதன் காரணமாக மதிப்பீட்டாண்டில் இழப்பீட்டு வட்டியாக ரூபா 920.54 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு பெருமளவு தொகையினை இழப்பீட்டு வட்டியாகச் செலுத்துவதற்கான காரணம் யாதெனில் சுவீகரித்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை அமைச்சினதும்

தொடர்புடைய நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்கள் வினைத்திறனாக மேற்கொண்டிருக்காமையாகும். அவ்வறு,

- 18 ஆண்டுகள் கடந்த பின்னரும், வலதர கனிஷ்ட வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக காணிகளை கையேற்கும் பணிகள் முடிவடைந்திருக்காமை,
- 12 ஆண்டுகள் கடந்த பின்னரும், மகாமாஎலிய அரச கனிஷ்ட வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தையும் கட்டிடத்தையும் நிர்மாணிப்பதற்காக காணிகளை கையேற்கும் பணிகள் முடிவடைந்திருக்காமை,
- தகவல் தொழில்நுட்ப தொழில் பயிற்சி நிலையமொன்றை நிர்மாணித்தல் செயற்திட்டத்திற்காக 2001 முதல் 18 ஆண்டுகள் கடந்த பின்னரும் இழப்பீட்டினைச் செலுத்தியிருக்காமை,
- மதுகம ஆனந்த சாஸ்திராலயத்தை நிர்மாணித்தல் செயற்திட்டத்திற்காக 2004 முதல் 15 ஆண்டுகள் கடந்த பின்னரும் இழப்பீட்டினைச் செலுத்தியிருக்காமை, மற்றும்
- ஹங்குரன்கெத சாஸ்திராலயத்தை நிர்மாணித்தல் செயற்திட்டத்திற்காக இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு 05 ஆண்டுகள் எடுத்திருந்தமை,

போன்றன தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

### அரச காணித் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமை

தகவல் தொழிநுட்பங்களை உபயோகித்து அரச காணிகளின் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமையொன்றை உருவாக்கி, 2013 ஆம் ஆண்டு முதல் பேணிவரப்படுவதுடன் அதற்காக 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 129.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. குத்தகைக்கு விடப்பட்ட காணிகள் சம்பந்தமான தகவல்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த முறைமைக்கு உள்வாங்கப்பட்டிருக்காமையால், குத்தகையினை அறிவிடுதல் சம்பந்தமாக தேவைப்படும் தகவல்களை இந்த முறைமையிலிருந்து பெறமுடியாதுள்ளது.

### காணி குத்தகை வருமான முகமைத்துவம்

மாகானங்களுக்கு இடையிலான விவசாய குடியேற்றப் பிரதேசங்களிலிருந்து காணி குத்தகை வருமானத்தை சேகரிக்கம் பணி காணி ஆணையாளர் நாயக திணைக்களத்தினால் மேற்கொள்ளபடுவதுடன் அவ்வருமான சேகரிப்புக்குரிய பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன. இதன் காரணமாக மதிப்பீட்டிண்டு இறுதியில் ரூபா 28.75 மில்லியன் வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

மாகாணங்களுக்கிடையிலான விவசாயக் குடியேற்றங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் குத்தகை வருமானங்களை சேகரிப்பது மாகான காணித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அப் பிரதேசங்களில் அரச காணிகள் நிர்வாகம் மற்றும் நிர்வாகம் சம்பந்தமான உத்தியோகத்தர்களை கண்காணிமக்கும் பூரண அதிகாரம் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 91 வது பிரிவு மற்றும் 2010 ஆம் ஆண்டின் பெப்ரவரி 03 ஆம் திகதிய SP/RD/02/10 ஆம் இலக்கமுடைய சனாதிபதி அலுவலகத்தின் சுற்றுநிருபத்தின் படி காணி ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாக இருந்தபோதிலும், குத்தகைக்கு கொடுக்கும் செயல்முறைகள் மற்றும் குத்தகை வருமானங்களை சேகரித்தல் தொடர்பிலான நீதிமன்ற நடவடிக்கைகள் பலவீனமடைந்து காணப்படுவதால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,913.07 மில்லியன் வருமானம் நிலுவையாக உள்ளது.

### இலக்குகளை அடைந்திருக்காமை

பிம்சவிய வேலைத்திட்டம் 2002 ஆம் வருடம் ஆரம்பித்து 2021 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டு முடிவடையும் போது அதற்காக 17 வருடங்கள் கடந்திருந்தது. எனினும் அந் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படும் 57 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குமுறிய 3621 கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் 1359 பிரிவுகள் அதாவது 46 வீதமான பிரிவுகளில் மட்டுமே நில அளவை வேலைகள் முடிக்கப்பட்டிருந்தன.

அதேபோல் உரித்துகளை தீர்த்துவைத்தல் செயற்பாடுகளின் போது 2019 ஆம் ஆண்டின் 34,660 கோவைகள் கிடப்பில் போடப்பட்டிருப்பதுடன் 2019 டிசெம்பர் 31 ஆம் திகதிவரை கிடப்பில் போடப்பட்டுள்ள கோவைகளின் எண்ணிக்கை 449,203 ஆக இருக்கிறது. 2019 இல் கிடப்பில் போடப்பட்ட அக் கோவைகளில் 10,508 கோவைகளின் பிணக்குகள் தீர்க்கப்பட்டு உரித்தாவணங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. அதன்படி கிடப்பில் போடப்பட்டிருந்த கோவைகளின் பணிகளை நிறைவுசெய்யும் வீதம் நூற்றுக்கு 30 வீதமாக காணப்பட்டது.

### காணிகளை குத்துகைக்கு வழங்கும் நடைமுறையினை பின்பற்றுதல்

காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் கைத்தொழில் துறைக்கு குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்குகையில் அரசாங்க விலைமதிப்பில் 6 சதவீத குத்தகையினை அறவிடுதல் பொதுவான நடைமுறையாகும். லேலன்ட வத்த காணியை கைத்தொழில் நடவடிக்கைக்காக குத்தகைக்கு விடுகையில் விலைமதிப்பீட்டில் 4 சதவீத வருடாந்த குத்தகையினை அறவிட்டிருந்தமையால் ரூபா 17.20 மில்லியன் ஆணைக்குழுவிற்கு இழப்பாகியிருந்தது. அவ்வாறே லேலன்ட் வத்த காணியில் 06 ஏக்கர் 2005 செப்தெம்பர் 09 ஆந் திகதி குத்தகைக்கு எடுப்போன் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 14 ஆண்டுகள் கடந்த பின்னரும் குத்தகை உடன்படிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. டெம்பல்பேர்க் வத்த காணியில் 80 பேர்ச் 2003 திசெம்பர் 19 ஆந் திகதி குத்தகைக்கு எடுப்போன் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 16 ஆண்டுகள் கடந்த பின்னரும் குத்தகை உடன்படிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, கொடகல வத்த காணியில் 75 ஏக்கர் முப்பது ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் 10 ஆண்டுகள் கடந்திருந்த பின்னரும் உடன்படிக்கையினை புதுப்பிப்பதற்கு அல்லது புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டங்களிற்காக குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்குகையில் குத்தகைக்கு எடுப்போருடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட வேண்டிய போதிலும், அவ்வாறு உடன்படிக்கைகள் ஏதுமின்றி காணிகள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### காணிகள் தொடர்பான பதிவேடொன்றை பேணுதல்

1972 ஆம் ஆண்டின் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்ட தினம் முதல் சுவிகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் அக் காணிகளின் விஸ்தீரணம், ஒவ்வொரு காணியும் அமைந்துள்ள பிரதேசம், யாரிடமிருந்து சுவீகரிக்கப்பட்டது? தற்போது உரிமை யாருக்குள்ளது? போன்ற விவரங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் காணி விடுவிக்கப்பட்டமை தொடர்பிலான சகல விவரங்களும் உள்ளடங்களான பதிவேடொன்று, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் பேணப்பட்டிருக்கவில்லை, அதேபோல் அது தொடர்பாக பயன்பாட்டு ஆவணமொன்றினால் விளக்கமளிப்பதற்கு ஆணைக்குழு தவறியுள்ளது. அதன்படி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 676.17 மில்லியன் ஆக காட்டப்பட்டுள்ள சுவீகரிக்கப்பட்ட காணிகளின் இருப்பு மற்றும் பெறுமதி பற்றிய உண்மைத் தன்மைகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

### அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துதல்

2002 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டுவரை காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் கருத்திட்டங்களுக்காக காணிகள் குத்ததைக்கு விடப்படும் செயல்முறைக்கு புறம்பாக காணிகள் பிரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் காணிகளை பிறருக்கு வழங்குவதை தடைசெய்திருந்தது. அக் காணிகளை பயன்பாட்டிற்காக பிறருக்கு வழங்கப்படுவதற்கும் வழங்கப்படாதிருப்பதற்கும் 02 வழிமுறைகள் பட்டியலிடப்பட்டிருந்தன. உரித்தாட்சிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த காணிகளில் 760 ஏக்கர் 31 பேர்ச் திருப்பி எடுக்கப்படவில்லை. உரித்தாட்சி ஒப்புதல் அளிக்கப்படாத 1689 ஏக்கர்களுக்கு பெறப்பட்டிருந்த முற்பணங்களை அவ் விண்ணப்பதார்களுக்கு திருப்பி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## நில அளவை தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு தவறியமை

நில அளவையாளர் திணைக்களம் 37 வருடங்களுக்கு முன்பிருந்து, நில அளவையாளர் ஒருவர் ஒரு மாதத்துக்கு நில அளவை செய்யவேண்டிய ஆகக் குறைந்த காணித் துண்டுகளின் அளவு (Norms) 20 என்ற தீர்மானத்தின் படி பணியாற்றியுள்ளது. இந்நிலைப்பாடு, நில அளவை நுட்பங்கள் உபகாரங்களின் தொழிநுட்ப வளர்ச்சியுடன் தற்காலத்துக்கு ஏற்ற விதத்தில் மறுசீரமைக்கப்பட்டு தீர்மானங்களை மாற்றியமைப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமையால் 10 ஆண்டுகளிற்கும் மேலாக நிலவுகின்ற 3.6 மில்லியனும் அதிகமான அரசாங்கக் காணிகளின் நில அளவைகள் மேற்கொள்வதற்கும் திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை கிடைத்திருந்த 38,879 நில அளவைக் கட்டளைகளில் 25,809 கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு தவறிடப்பட்டிருந்தது.

## காணிகள் பயன்பாட்டத் திட்டத்தினை தயாரித்தலும் அதற்கான கொள்கையினை அமுல்படுத்துதலும்

2010 மே 20 ஆம் திகதிய 1654/21 ஆம் இலக்க (அதிவிஷேட) வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினூடாக தேசிய காணி கையாளும் திட்டத்தை வடிவமைத்து காணி கையாளுதல் கொள்ளைகளை செயற்படுத்துவதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு, காணி கையாளும் கொள்கை திட்டமிடல் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இத்திணைக்களத்தினால் காணி கையாளும் திட்டங்களை தயாரித்தல் மற்றும் காணி கையாளும் கொள்கைகளை செயற்படுத்துவதற்கு தேவையான சட்டப் பின்புலங்க உருவாக்குதல் என்பன மீளாய்வாண்டின் இறுதிவரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## நில அளவையாளர்களின் தொழில்சார் ஒழுங்கீனங்கள் மீதான முறைப்பாடுகள்.

2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்துக்கு அமைய தொழில்சார்ந்த நெறிமுறைகளை முறையாக நடைமுறைப்படுத்துவதாகவும், தொழிலில் ஈடுபடுபவர்கள் கடமையாற்றும்போது அதியுயர்ந்த தரநியமங்களை கடைப்பிடிப்பதையும் உறுதிசெய்யும் நோக்கில் நிலஅளவை சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டாண்டில் நில அளவையார்களின் தொழில்சார் ஒழுங்கீனங்கள் தொடர்பாக பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 103 ஆக இருந்தது. இவற்றின் 54 முறைபாடுகள் அதாவது 52 சதவீதமான முறைப்பாடுகள் மாத்திரமே தீர்க்கப்பட்டுள்ளன. சபையில் பதிவு செய்யாது நில அளவை பணிகளை செய்யும் நபர்களைப்பற்றி உசாவுவதற்கு ஆணைக்குழு போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

# பயணிகள் போக்குவரத்து

மக்களின் வாழ்க்கை நிலைமையை உயர்த்தும் நோக்கில் புதிய தொழில்நுட்ப தந்திரோபாயங்களை பயன்படுததி மிகவும் உயர்ந்த உட்கட்மைப்பு வசதிகளுடன் செயற்படுத்துதல், அபிவிருத்தி மற்றும் நிலைபேறாக நடாத்திச் செல்லல் இத்துறையின் செயற்பணியாகும். அச்செயற்பணியை நிறைவேற்றுவதற்காக போக்குவரத்து மற்றம சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் அதன் கீழ் இரண்டு திணைககளங்கள் மற்றம 08 நியதிச்சட்ட நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- புதிய தொழில்நுட்பத்த பயன்படுத்தி ஒன்றிணைந்த பயணிக்ள போக்குவரத்து மற்றும் பொருள் போக்குவரத்து சேவைகளை செயற்திறனாக்குவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- சுற்றாடலுக்கு சாதமான போக்குவரத்து முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்
- தனியார் பயணிகள் போக்குவரத்து சேவைகளை ஒழுங்குபடுத்துதல்
- புதிய புகையித வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் காணப்படும் புகையிரத வீதிகளை விரிவாக்கலும் அதற்குரிய காணிகளை கயேற்றலும்மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்தல், அனுமமதபிப்த்திரங்களை வழங்குதல் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்
- மோட்டார் வாகனங்களுக்குரிய சட்டவிதிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதலும் ஒழுங்குபடுத்தலும்
- விமாபன நிலைய அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள்
- விமான நிலையங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகளின் முன்னேற்றம், கட்டணங்கள் மற்றம் தரத்தை ஒழுங்குபடுத்துதல்
- சர்வதேச விமான பயணங்களை விரிவுபடுத்துதல்
- இலங்கையின் துறைமுகங்களை வெளிநாடுகளினால் பயன்படுத்துவதற்கு உரிய மேம்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்
- உள்நாட்டு விமான பிரயாணங்களை மேம்படுத்துதல்
- தனியார் விமான பிரயாண சேவைகளின் கணகாணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்துதல்
- விமானங்களை பதிவுசெய்தல்
- பசுமை புகை வெளியேற்றத்தை குறைப்பதற்காக தந்திரோபாய நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்

மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை இப்பிரிவிற்கு ரூபா 202,224.71 ஆன நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அம் 03 ஆண்டுகளுக்காக ரூபா 164,446.48 மில்லின் பயன்படுத்தப்பட்டிருந்தத, அதன் பிரகாரம் 03 ஆண்டுகளுக்குரிய பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளிலிருந்து 18.68 சதவீதம் அதாவது ரூபா 37,778.23 ஆன நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் உரு 31 இல் காட்டப்பட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்து




உரு 31 - பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடும் அதன் பயன்பாடும்.
மூலம் : பொதுத் திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கை.

### மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரையிலான புகையிரத வீதியை அமைக்கும் திட்டம்

மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரையிலான பாதையை அமைக்கும் திட்டம் ரூபா. 36,166 மில்லியன் கிரய மதிப்பீட்டின் படி 2013 ஆகஸ்ட் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஜுலை 31 ஆம் திகதியன்று இத் திட்டம் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த போதும், அதற்கான கால எல்லை 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டு பெலிஅத்த வரையிலான புகையிரத போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அதற்காக ரூபா. 38,159 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இப் பாதைக்குத் தேவையான காணிகளைப் பெற்றுக்கொள்ளலானது அரச விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு பிரதேச செயலகங்களின் ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அதற்கு உடன்படாத வகையில் செயற்திட்ட உத்தியோகத்தர்களின் தலையீட்டில் முறையற்ற விதத்தில் காணிகளை கையேற்றமை காரணமாக பின்வரும் குறைபாடுகள் இடம்பெற்றிருந்தன.

- நிலச் சொந்தக்காரர்களின் இடங்களை முதலில் இடைத்தரகர்கள் மூலமாக குறைந்த பெறுமதிக்கு பெற்றுக்கொண்டதன் பின்னர் அவர்களிடமிருந்து கூடிய பெறுமதிக்கு நன்கொடையாக புகையிரத பொது முகாமையாளரினால் பெற்றுக்கொண்டமை.
- முறையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளுக்கு மேலதிகமாக 62 கைமாற்றல் உறுதிகளின் கீழ் மொத்தம் ரூபா. 57.58 பெறுமதியான 4 ஏக்கர் 31.37 பேர்ச் அளவான காணி இடைத்தரகர்களிடமிருந்து பெறப்பட்டு அவை பயன்பாடற்றுக் காணப்பட்டன.
- பெறப்பட்ட காணிகள் சட்ட விரோதமாக நபர்களால் பயன்படுத்தப்படல்.

கடன் ஒப்பந்த நிபந்தனை 1.3 இற்கமைவாக கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து 04 வருடங்கள் பூர்த்தியாகும் 2017 ஏப்ரல் மாதத்தினுள் ஒப்பந்தம் செய்யப்பட்ட கடன் தொகை பெறப்பட வேண்டியிருந்தது. வீதியை அமைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2017 மே மாதம் தொடக்கம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலத்திற்காக ரூபா. 5.35 மில்லியன் அந்நியச் செலாவணி நட்டம் ஏற்பட்டிருந்தது.

### களனிவெலி புகையிரதப் பாதை

ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் செயற்படுகின்ற களனிவெலி புகையிரத

பாதையின் சாத்திய வள ஆய்வு, நிர்மாணத் திட்டம் மற்றும் ஆலோசனைகள் 2018 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அது 202 0ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தது. திட்டத்திற்கான கடனை வழங்குவதற்கான திட்டத்தினைத் தயாரிப்பதற்காகவும், ஏல ஆவணங்களைத் தயாரிப்பதற்காகவும் 256,030 மில்லியன் யூரோ, 6.48 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் ரூபா. 379.21 மில்லியன் பெறுமதிக்கான ஒப்பந்தம் 2017 டிசம்பர் 13 ஆம் திகதி நியமிக்கப்பட்ட மதியுரை நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வொப்பந்தத்திற்கமைவாக 2019 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் பொழுது குறித்த ஆலோசனை நிறுவனத்தினால் கொழும்பிலிருந்து களுத்துறை, கொழும்பிலிருந்து ரம்புக்கனை மற்றும் ராகமையிலிருந்து நீர்கொழும்பு வரையிலான புகையிரதப் பாதைகளின் இறுதி சாத்திய வள ஆய்வு அறிக்கைகள் மற்றும் மருதானையிலிருந்து பாதுக்கை வரையிலான விபரங்கள் அடங்கிய திட்டத்துடனான ஏல ஆவணங்கள் மற்றும் பிரதான பாதையின் விபரங்கள் அடங்கிய திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் களனிவெலி பாதையின் திட்டம் மற்றும் ஏல ஆவணங்கள் 60 வீதம் வரை முடிக்கப்பட வேண்டியிருந்த போதும், அதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று 2019 மார்ச் 15 ஆம் திகதிய 1/2019 இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு முரணாக திட்டப் பணிக் குழுவுக்காக ரூபா. 12.89 மில்லியன் சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது. ஆலோசனை சேவை ஒப்பந்தத்தின் இணைப்பு D இற்கமைவாக ஆலேசனை நிறுவனத்தினால் உறுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள கால எல்லைக்கமைவாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டியிருந்த போதும், மீளாய்வாண்டில் ஆலோசனை நிறுவனத்திற்கு ரூபா. 390.22 மில்லியன் கொடுப்பனவு மாதாந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

### புகையிரதங்கள் தாமதமடைதல் மற்றும் ஓடும் முறைகளின் எண்ணிக்கை குறைதல்

மீளாய்வாண்டில் 69,716 பயணிகள் புகையிரத தாமதங்களும், 5160 பொருளபுகையிரத தாமதங்களும் ஏற்பட்டிருந்தன. இதில் 30 நிமிடங்களை விட அதிகமான தாமதங்கள் முறையே 18,152 மற்றும் 4,256 ஆகவிருந்தது. அதேபோன்று மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட பயணிகள் புகையிரத போக்குவரத்து முறைகளின் எண்ணிக்கை 124,950 ஆகவிருந்த போதும், மேற்கொள்ளப்பட்ட பயணிகள் புகையிரத போக்குவரத்து முறைகளின் எண்ணிக்கை 115,232 ஆகவிருந்தது. இரத்துச் செய்யப்பட்ட முறைகள் 5,710 ஆகவிருந்ததுடன், இவற்றில் 59 வீதமானவை புகையிரதப் பணிப் பகிஷ்கரிப்பினால் ஏற்பட்டிருந்தன.

### புகையிரத என்ஜின்கள் கொள்வனவு செய்யப்படாமை

2019ஆம் ஆண்டில் புகையிரத என்ஜின்களைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு நிதியின் மூலமாக ரூபா. 1,600 மில்லியனும், வெளிநாட்டு நிதியின் மூலமாக ரூபா. 100 மில்லியனுமாக மொத்தம் 1,700 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் பேரூந்து என்ஜின்கள் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக அந் நிதியினை குறித்த தேவைக்காகப் பயன்படுத்த முடியாது போயிருந்தது.

### திட்டமிடப்பட்ட காரியங்களை செயற்படுத்தாமை

இலங்கை தொடரூந்து திணைக்களத்தினால் தற்பொழுது செயற்படுத்தப்படுகின்ற நேர அட்டவணைகள் மற்றும் தொடரூந்து பணியாளர்களின் அடிப்படையில் தற்பொழுதுள்ள புகையிரதப் பாதைகளில் புதிய புகையிரதகளை ஓட விடுவது இயலாத காரியமாகவிருந்தது. இதன் காரணமாக தொடரூந்துப் பாதைகளை நிர்மாணிப்பதற்கும் புனர் நிர்மாணம் செய்வதற்குமான தேவை ஏற்பட்டது. இதற்காக மீளாய்வாண்டில் வெறிநாட்டுக் கடன் நிதியின் கீழ் ரூபா. 4,674.86 மில்லியனும் வெளிநாட்டு நிதி மற்றும் இணைந்த உள்நாட்டு நிதியின் கீழ் ரூபா. 500 மில்லியனுமாக மொத்தம் ரூபா. 5,174.86 மில்லியன் நிதி பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் இந் நிதியில் ரூபா. 2,915.54 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மஹவை தொடக்கம் ஓமந்தை வரையிலான புகையிரதப் பாதையை விரிவாக்கல், 160 பயணிகள் புகையிரதப் பெட்டிகளைக் கொள்வனவு செய்தல், மஹவை தொடக்கம் ஓமந்தை வரையிலான சமிக்ஞை தொகுதிகளை பொருத்துதல், பொல்பஹவெல –

குருனாகலை வரையிலான இரட்டை புகையிரதப் பாதையை அமைத்தல், இரத்மலானை வேலை நிலையத்தை தரப்படுத்தல், 02 டீசல் என்ஜினுடன் கூடிய பெட்டித் தொகுதிகளைக் கொள்வனவு செய்தல் ஆகிய தேவைகள் இனங்காணப்பட்டு அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், 160 பயணிகள் புகையிரதப் பெட்டிகளைக் கொள்வனவு செய்வதுடன் தொடர்பான விலைமனுக் கோருவதற்கான முற்பணம் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்த போதும் 2020 ஜுன் 20ஆம் திகதி வரையும் குறித்த பயணிகள் புகையிரதப் பெட்டிகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### புகையிரத என்ஜின் மற்றும் என்ஜினுடனான பெட்டித் தொகுதிகளைக் கொள்வனவு செய்தல்

- இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் மூலம் புகையிரத என்ஜின்களைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் தீர்மாணக் குழுவினால் அமெரிக்க நிதி பக்கேஜின் கீழான 3000 குதிரைப் பலம் கொண்ட என்ஜினது மதிப்பீட்டுர் றெறுமதி மற்றும் இந்திய கடன் உதவியின் கீழ் எம்.எஸ்.ரயிட்ஸ் நிறுவனம் சமர்ப்பித்த விலைகளுக்கான தூய தற்கால பெறுமதிகளை ஒப்பிடல் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனடிப்படையில், தூய தற்கால பெறுமதிகளை நன்கு ஆராய்ந்ததன் பின்னர் அமெரிக்க என்ஜின் இந்திய என்ஜினை விடவும் பொருளாதார ரீதியாக மிகவும் இலாபகரமானதென வெளிநாட்டு வளத் திணைக்களம் தீர்மாணித்திருந்தது. எனினும் அமெரிக்க பக்கேஜினை கைவிட்டு இந்திய கடன் உதவியின் கீழ் புகையிரத என்ஜின்களைக் கொள்வனவு செய்ததால் 10.5 மில்லியன் அமெரிக்க டொலர் அதாவது ரூபா. 1,905.23 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.
- டொலர் கடன் வரிசை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2017 ஜுன் 06ஆம் திகதி இந்திய Exim வங்கியின் மூலம் புகையிரதப் பாதை புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்காக 136 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. அத் தேவைக்காக முக்கியத்துவம் வழங்காமை மற்றும் 2018ஆம் ஆண்டின் தரவுகளின் அடிப்படையில் 111 சேவையில் ஈடுபடுத்தக்கூடிய என்ஜின்கள் உள்ளடங்கலாக 150 புகையிரத என்ஜின்கள் கொண்ட ஒரு தொகுதி பேருந்துத் திணைக்களத்திடம் காணப்பட்டது. புகையிரதப் போக்குவரத்துக்குத் தேவையாக ஏனைய விடயங்களில் முன்னேற்றமடையச் செய்யாது மற்றும் தற்பொழுதுள்ள கால அட்டவணை தேவைகள் மற்றும் எதிர்காலத்தில் திட்டமிடப்படுகின்ற கால அட்டவணைத் தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும் போது, புதிய புகையிரத என்ஜின்களைக் கொள்வனவு செய்வதனூடாக என்ஜின் எண்ணிக்கையை மாத்திரம் அதிகரிப்பதன் மூலம் போக்குவரத்து செயலாற்றலை அதிகரிப்பது சிரமமான காரியமாக இருந்தது.
- புகையிரதத் திணைக்களத்திற்கு ரோலிங் தொகை (புகையிரத எண்ணிக்கை) கொள்வனவு செய்வதற்காக டொலர் கடன் வரிசை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 177 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீட்டில் S 13 ரக 06 என்ஜினுடனான பெட்டித் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இங்கு திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொறியிலாளர் மதிப்பீட்டிற்கு மேலதிகமாக ரூபா. 236.10 மில்லியன் கூடுதலாக செலவிடப்பட்டு என்ஜினுடனான பெட்டித் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### வாகன காப்புறுதி மூலம் பெறப்படும் வருமானம்

காப்புறுதி நிறுவனங்களில் மூன்றாம் தரப்பு வாகன காப்புறுதிகள் மூலம் அறவிடப்படுகின்ற 1 வீத வரி வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் பிரதான வருமான மூலமாக இருந்தது. காப்புறுதி நிறுவனங்களால் வைப்புச் செய்யப்படுகின்ற வருமானத்தின் சரியான

தன்மையினை உறுதி செய்துகொள்வதற்கு சபை தவறியிருந்தது.

## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலுக்கமைவாக அனைத்து வீதி விபத்துக்களையும் குறைத்தல் மற்றும் பாதுகாப்பான வீதித் தொகுதியொன்றினை உருவாக்குதல் ஆகிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதில் ஒரு முன்னேற்றம் 2019ஆம் ஆண்டு புலப்படுகின்றது. 2017ஆம் ஆண்டு 37,596 வாகன விபத்துக்கள் இடம்பெற்றிருந்த அதேவேளை, 2019ஆம் ஆண்டாகும் பொழுது அதை 30,433 விபத்துக்களாகக் குறைத்துக்கொள்ள முடியுமாகியுள்ளது. விபரம் உரு 32 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 32 - நாட்டில் ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கை
ஆதாரம் - இலங்கை பொலிஸ் ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் தகவல் அறிக்கை

மேற்குறிப்பிட்டவாறு விபத்துக்களைக் குறைத்துக்கொள்வதில் ஒரு முன்னேற்றம் நாட்டில் ஏற்பட்டிருந்த போதும், 2019 டிசம்பர் 31ஆம் திகதியாகும் பொழுது வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை உருவாக்கப்பட்டு 22 வருடங்கள் கடந்திருந்த நிலையிலும் அதனை ஒரு ஆணைக்குழுவாக பிரகடனப்படுத்தி அதற்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்படாததன் காரணமாக வீதிப் பாதுகாப்பிற்கான சில நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது போயிருந்தது. அதேபோன்று 1988ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தின் 05ஆம் பிரிவின் பிரகாரம் 04 முறை சபை கூடியிருந்த போதும், 18 அங்கத்தவர்களும் ஒன்றுசேர்ந்து சபையின் செயலாற்றல் தொடர்பாக கலந்தாலோசித்திருக்கவில்லை.

## பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குதல்

- தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2019 டிசம்பர் 31ஆம் திகதியாகும் பொழுது 3103 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் 223 அனுமதிப்பத்திரங்கள் விலைமனுக் கோரல் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. 2880 அனுமதிப்பத்திரங்கள் விலைமனுக் கோரல் செயன்முறைக்கு முன்பதாக வழங்கப்பட்டிருந்ததுடன், அவை வருடாந்தம் ரூபா. 3,000 மற்றும் ரூபா. 15,000 கட்டணத்தின் மீது புதுப்பிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களாகும். இதனடிப்படையில், ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட வழிகாட்டல் இன்றி அனுமதிப்பத்திரம் வினியோகித்தலானது

பல்வேறு முறைகளின் அடிப்படையில் நடைபெற்றிருந்தது.

- அதிவேக பாதையில் ஒரு நாளைக்கு குறைந்த தொழில்நுட்ப மதிப்பீட்டின் மீது 61 சேவை அனுமதிப்பத்திரங்களும், ரூபா. 2,500 கட்டணத்தின் மீதான 16 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்தன. பேரூந்து உரிமையாளர்களினால் நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ள ஒரு வழக்கின் காரணமாக ஒரு நாளைக்கு ரூபா. 2,500 கட்டணம் அறவிடுவதற்குத் தீர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், 2020 ஜனவரி மாதம் வரையிலும் வழக்கின் தீர்வு வெளியிடப்பட்டிருக்கவில்லை.
- 2019 ஆம் ஆண்டு பயணிகள் ஆய்வு மேற்கொள்ளப்படுவதன் மூலம் புதிய பாதைகள் இனங்காணப்பட்டிருந்த போதும், ஆணைக்குழுவினால் நிலையான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாயினும் அதிகளவில் பயணிகளின் வேண்டுகோல் காணப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒரு நாளைக்கு ரூபா. 2,000, ரூபா. 1,000 மற்றும் ரூபா. 1,00 எனும் அடிப்படையில் நாளாந்தக் கட்டணம் அறவிடும் அடிப்படையில் தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### கிளிநொச்சி பேரூந்து தரிப்பிட நிர்மாணம்

கிளிநொச்சி பேரூந்து தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்காக 2016 டிசம்பர் 29ஆம் திகதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 12 மாதங்களில் நிறைவு செய்கின்ற வகையில் ரூபா. 48.77 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் தனியார் நிறுவனம் ஒன்றுடன் கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிர்மாண வேலைகளை முடிக்கத் தவறியதன் காரணமாக ஆணைக்குழுவினால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. முடிக்கப்பட்ட வேலைகளுக்காக ஆணைக்குழுவினால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா. 16.47 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர் தொழில்நுட்ப ரீதியாகவும் நிதி ரீதியாகவும் வல்லமை பொருந்தியவர் என பெறுகைகள் குழு உறுதியளித்திருந்த அதேவேளை, ஒப்பந்தக்காரர் தோல்வியடைந்ததன் காரண்மாக அவரின் விருப்பத்தின் பேரில் ஒப்பந்தத்தை நிறைவு செய்து அவருக்கு சார்பான வகையில் ஒப்பந்த விதிமுறைகளுடன் இணைந்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதனால் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒப்புக்கொண்ட தொகையின் மீது நிர்ணயிக்கப்பட்ட காலத்தினுள் முடிக்கப்பட வேண்டியிருந்த இந் நிர்மாணம், ஒப்பந்தக்காரரின் பலவீனம் காரணமாக 50 வீதமான வேலைகள் மாத்திரம் முடிக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டதன் காரணமாக பேரூந்து தரிப்பிடம் பயன்பாடற்று காணப்பட்டது. நிர்மாண ஒப்பந்தத்தின் படி தேவையான நடவடிக்கைகள் எடுக்காமை காரணமாக நிறுவனத்திற்கு ரூபா. 16.47 மில்லியன் நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது.

### PAS (Process Automation System) திட்டம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் PAS (Process Automation System) திட்டத்தினை செயற்படுத்துவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் ரூபா. 31.74 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தத்தின் மீது 2017 டிசம்பர் 31 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. குறித்த திட்டத்தினை 2018 நவம்பர் 15 ஆம் திகதியாகும் பொழுது நிறைவு செய்து ஆணைக்குழுவுக்கு கையளிக்க வேண்டியிருந்த போதும், 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நிறைவு செய்து கையளிக்கப்படவில்லை. 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரை குறித்த திட்டத்தின் பௌதிக செயலாற்றல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத அதேவேளை, குறித்த ஒப்பந்தக்காரருக்கு ரூபா. 23.06 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அதன் நிதி முன்னேற்றம் 72 வீதமாகக் காணப்பட்டது.

### உதிரிப்பாகங்கள் கொள்வனவு

இலங்கை போக்குவரத்து சபையின் பிரதான காரியாலயக் களஞ்சியசாலைக்கு ரூபா. 6.65 மில்லியன் பெறுமதியான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ்வுதிரிப்பாகங்கள் பரிசீலனைக் குழுவின் மூலம் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் தேவையான விவரக் குறிப்புகளுடனான இணக்கமின்மை காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்தன.

அவ்வாறாயினும், குறித்த உதிரிப்பாகங்கள் குறித்த நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்படாதிருந்ததுடன், 2019 ஜுன் மாதம் ஆகும் பொழுது இரண்டு வருடங்கள் களஞ்சியசாலையில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. அவை பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்திருந்ததுடன் இதன் காரணமாக களஞ்சியசாலையில் இடப் பற்றாக்குறையும் காணப்பட்டது. மேலும் திணைக்கள பெறுகைகள் குழுவின் மூலம் அனுமதிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உதிரிப்பாகங்களில் ரூபா. 5.83 மில்லியன் பெறுமதியான உதிரிப்பாகங்கள் குறித்த விவரக் குறிப்புகளுடன் இணக்கமடைந்திருக்கவில்லை. அவ்வுதிரிப்பாகங்கள் 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதியாகும் பொழுது குறித்த நிறுவனங்களுக்கு திருப்பி வழங்கப்பட்டிருந்தன. 2018 நவம்பர் 26 ஆம் திகதி மீண்டும் அவ்வுதிரிப்பாகங்கள் பொறுப்பேற்கப்பட்டிருந்தன.

### காணிகளின் உரிமையினை உறுதி செய்துகொள்ளாமை

இலங்கை போக்குவரத்து சபையின் 114 டிப்போக்கள், 12 பிராந்திய காரியாலயங்கள், 19 சாரதி பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் 12 பிரதேச வேலைத்தளங்கள் ஆகியன சபையினால் கைப்பற்றப்பட்ட அல்லது குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட காணிகளில் அமைக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியில் அக் காணிகளின் அளவு, பெறுமதி மற்றும் உரிமை தொடர்பான தகவல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் சபையினால் தற்பொழுது பேணப்பட்டு வருகின்ற காணிகள் தொடர்பான ஆவணத்தின் அடிப்படையில் சபையின் டிப்போக்கள் அமைந்துள்ள சுமார் 160 ஏக்கர் பரப்பான காணியின் உரிமையை உறுதி செய்துகொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### பேருந்து பயணம்

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமாக 2015 ஆம் ஆண்டு இறுதியில் 7,779 பேருந்துகள் காணப்பட்டதுடன், இது 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 7,012 ஆகக் குறைந்திருந்தது. இதில் 2015ஆம் ஆண்டு 6,268 பேருந்துகள் போக்குவரத்துச் செய்யும் நிலையில் இருந்ததுடன், 2019 ஆம் ஆண்டாகும் பொழுது இது 6,098 ஆகக் குறைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டு இறுதியில் 1,511 பேருந்துகள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் இருந்ததுடன், இது 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 914 ஆகக் குறைந்திருந்தது. இதனடிப்படையில் 2015 ஆம் ஆண்டு காணப்பட்ட பேருந்துகளில் 24 வீதமானவை போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டு இறுதியில் அது 14.98 வீதமாகக் குறைந்திருந்தது. விபரம் உரு 33 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 33 - இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளின் எண்ணிக்கைஆதாரம் - போக்குவரத்து அமைச்சின் இணையத்தளம்

### பயன்பாடற்ற சொத்துக்கள்

- 2018 ஆகஸ்ட் 24 ஆம் திகதி நடாத்தப்பட்ட நிலைய கணக்காய்வுப் பரிசோதனையின் போது இலங்கை போக்குவரத்து சபையின் கம்பஹா பிரதேசக் களஞ்சியசாலையில் ரூபா. 1.85 மில்லியன் பெறுமதியான பேரூந்து உதிரிப்பாகங்கள் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்படாத நிலையில் பயன்பாடற்றுக் காணப்பட்டன. தேவைக்கு ஏற்ற வகையில் கொள்வனவு செய்யப்படாமை காரணமாக இந் நிலை ஏற்பட்டிருந்தது.
- 2018 ஜனவரி 12 ஆம் திகதி ரூபா. 5.69 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த வர்ட்ரல் போரிப்ன் மிலிங் இயந்திரம் மற்றும் 2018 ஆகஸ்ட் 16 ஆம் திகதி ரூபா. 3.14 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சிலின்டர் லைன் போரிங் இயந்திரம் ஆகியன கொள்வனவு செய்யப்பட்ட தினத்திலிருந்து 2019 செப்தெம்பர் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் உபகரணங்கள் (tools) காணப்படமை மற்றும் என்ஜின் வெட்டின் போது அளவை குறைபாடுகள் காணப்பட்டமை காரணமாக இலங்கை போக்குவரத்து சபையின் குருணாகல் பிரதேச வேலைத்தளத்தில் பயன்பாடற்றுக் காணப்பட்டன.
- இலங்கை போக்குவரத்து சபையினால் ஒன்பது மாகாணங்களிலும் 09 வாகன புகை பரிசோதிப்பு நிலையங்களை அமைப்பதற்குத் தேவையான ரூபா. 89.84 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதி கொண்ட உபகரணத் தொகுதியொன்றிற்காக 2018 ஏப்ரல் 26 ஆம் திகதி மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் புகை பரிசோதிப்பு நிதியத்தின் மூலம் ரூபா. 22.48 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந் நிலையங்களை நிர்மாணித்தல் தொடர்பான சாத்திய வள ஆய்வினை மேற்கொள்ளல், செலவு பிரதிபலன் மீளாய்வு அல்லது வேறெந்த ஆய்வுகளும் மேற்கொள்ளப்படாது நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இப் புகை பரிசோதிப்பு நிலையங்களில் குருணாகல் மற்றும் மதவாச்சி ஆகிய நிலையங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருந்த போதும், சட்டம் தொடர்பான ஒரு சிக்கல் காரணமாக அது செயற்பாடற்று மூடிய நிலையில் காணப்பட்டது.

### பேரூந்து அனுமதிச்சீட்டு இயந்திரம் கொள்வனவு செய்தல்

2018 ஆம் ஆண்டு இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகைகள் திட்டத்தின் அடிப்படையில் 1,000 இலத்திரனியல் பேரூந்து அனுமதிச்சீட்டு இயந்திரங்களை ரூபா. 35 மில்லியன் செலவில் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2018 பெப்ரவரி 19 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் சபையினால் 2018 ஒக்டோபர் 22ஆம் திகதி 2,000 இயந்திரங்கள் ரூபா. 75.90 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் விதிமுறைகளுக்கு முறனாக சபையினால் வெளியிடப்பட்டிருந்த விவரக்குறிப்புகளில் தற்பொழுது பாவனையில் உள்ள இயந்திரங்களில் காணப்படுகின்ற உள்ளீடுகளுடன் (applications) குறித்த இயந்திரங்கள் இணக்கமடைதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக பழைய வழங்குனருக்கும் விலைமனு சமர்ப்பிக்க சந்தர்ப்ப் வழங்கப்பட்டிருந்தது. இக் கொள்வனவின் போது தொழில்நுட்ப மதிப்பீடோ விலைமனுக் கோரலோ மேற்கொள்ளப்படாது குறித்த பழைய வழங்குனருக்கே ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரருடன் இவ்வியந்திரங்களைக் கொள்வனவு செய்யும் போது பெறுமதியில் 35 வீதம் பொள் வினியோகிக்கப்படுவதற்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும் என்ற கோரிக்கையுடன் உடன்பட்டிருந்த அதேவேளை பொருள் வினியோகம் 2 மாதங்கள் தாமதமடைந்திருந்தது. இயந்திர வழங்குனர் மாத்திரம் விலைமனு சமர்ப்பித்திருந்த அதேவேளை ஏல ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட ஏனைய நிறுவனங்கள் விலைமனு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதனடிப்படையில் பெறுகை செயற்பாடுகள் தெளிவான முறையில் இடம்பெற்றிருக்கவில்லை. இவ் அனுமதிச்சீட்டு இயந்திரங்களின் விசுப்பலகை போதிய வெளிச்சமின்றிக் காணப்பட்டமை, அனுமதிச்சீட்டு வினியோகிப்பதில் உள்ள தாமதம்,

மின்கலங்களின் ஆயட்காலம் குறைந்ததாகக் காணப்படல் மற்றும் அனுமதிச்சீட்டு சுருளைகளை சரிசெய்யும் பொத்தான் காணப்படாமை ஆகிய காரணங்களால் கணக்காய்வின் போது பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட 10 டிப்போக்களில் 03 டிப்போக்களில் கிடைத்த புதிய அனைத்து இயந்திரங்களும் அதாவது 55 இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### சொகுசு பேரூந்துகளுக்கான கமரா மற்றும் ஜீ.பீ.எஸ் தொகுதிகளை பராமரித்தல்

- சபையின் 125 சொகுசு பேரூந்துகளுக்கான கமரா மற்றும் ஜீ.பீ.எஸ் (GPS) தொகுதிகளை பராமரிப்பதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் ரூபா. 33.63 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.
- சபையின் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகாமையாளரினால் இத் திட்டத்தின் தேவை உணரப்பட்டிருந்ததுடன், சொகுசு பேரூந்துகளில் நடைபெறுகின்ற ஏமாற்றல்கள் மற்றும் முறையற்ற செயற்பாடுகள் அதற்கான காரணங்களாக முன்வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறாயினும், இத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் அடிப்படை சாத்திய வள ஆய்வு, செலவு பிரதிபலன் மீளாய்வு மற்றும் பெறுபேறுகளை வெளிப்படுத்தும் முறை தொடர்பாக ஆராயப்பட்டிருக்கவில்லை.
- இக் கமராத் தொகுதி மற்றும் ஜீ.பீ.எஸ் தொகுதிகளை கண்காணிப்பதற்காக பிரதான காரியாலயத்திலாவது டிப்போ அதிகாரிகள் நியமிக்கப்படாதிருந்ததுடன், திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பிரதிபலன்களை அடைந்துகொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- 125 சொகுசு பேரூந்துகளுக்கான கமராக்கள் மற்றும் உபகரணங்கள் 2018 ஒக்டோபர் 25 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும், சபைக்குச் சொந்தமான பேரூந்துகளின் எண்ணிக்கை 112 மாத்திரமாக இருந்தது. கணக்காய்வுத் தினமாகிய 2019 ஏப்ரல் 27 ஆம் திகதியாகும் பொழுது ரூபா. 7.26 மில்லியன் பெறுமதியான 27 கமரா உபகரணங்கள் களஞ்சியத்தில் பயன்பாடற்றுக் காணப்பட்டன.
- குறித்த ஒப்பந்தம் செய்த நிறுவனம் 2019 மே 10 ஆம் திகதி வரை சேவை வழங்கல் கணினி (ளநசஎநச) வினியோகித்தல் மற்றும் பொருத்துதல் தொழில்நுட்ப விவரக் குறிப்புகள் மற்றும் மொத்த தொகுதியையும் பரிசீலனை செய்தல் மற்றும் சபையின் ஊழியர்களுக்கு பயிற்சியை வழங்கி மொத்த தொகுதியையும் சட்டரீதியாக கையளித்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- 125 சொகுசு பேரூந்துகளுக்கான ஜீ.பீ.எஸ் (GPS) மென்பொருள்கள் மற்றும் உபகரணங்கள் பொருத்துகையில் குறித்த பெறுகைகள் ஒப்பந்தத்தின் 8 ஆவது பிரிவின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமாகிய ரூபா. 3.36 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### மருத்துவ சேவைகள் வழங்கல்

- 1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனச் சட்டத்தின் 3 (அ) பிரிவின் பிரகாரம் கனரக வாகனங்கள் அடங்கலாக அனைத்து ரக மோட்டார் வாகன ஓட்டுனர்கள் மற்றும் பயணிகளுக்கான மருத்துவ சேவைகளை வழங்கல் மற்றும் நன்கொடைகளை வழங்கல் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் ஒரு தொழிற்பாடாக குறிப்பிடப்பட்டிருந்தது. நிறுவனம் உருவாக்கப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் வேறு அரச அல்லது தனியார் நிறுவன ஊழியர்களுக்காக மருத்துவ சேவைகள் வழங்கல் அல்லது மருந்துகளை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பான சட்ட ரீதியான ஒரு வரையறை அமைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாயினும், மருத்துவ நிறுவன சட்டத்திற்கு முறனாக அரச அல்லது தனியார் நிறுவனங்களுக்கான மருத்துவ வசதிகள், கடன் அடிப்படையில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 2019 நவம்பர் மாதம் வரை இலங்கை போக்குவரத்து சபையினதும் மற்றும் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தினதும் ஊழியர்களுக்கு முறையே ரூபா. 1.63 மில்லியன் மற்றும் ரூபா. 0.21

மில்லியன் பெறுமதியான மருத்துவ வசதிகள் மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டிருந்தன.

- 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 ஜுன் 02ஆம் திகதிய பீஈடி/12 இலக்க அரச வர்த்தக சுற்றுநிருபத்தின் 9.12 பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஊழியர்கள் அனைவருக்கும் ஒரு வருடத்திற்கு ரூபா. 6,000 என்ற வரையறையின் அடிப்படையில் மருந்துகள் வழங்கப்பட்டிருந்தன. நீண்ட கால சுகவீனமுற்ற (இரத்த அமுக்கம், நீரிழிவு, மாரடைப்பு) ஊழியர்களுக்கு மாதாந்தம் ரூபா. 2,000 வரையறையின் கீழ் மருந்துகள் வழங்கப்படுகின்றன. இதற்காக தலைவரின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டிருந்ததுடன், நலன்புரித் திட்டங்களுக்காக பொதுத் திரைசேரியின் அனுமதி பெறப்பட வேண்டியிருந்த போதும், நிறுவனம் அவ்வனுமதியைப் பெற்றிருக்கவில்லை. அவ்வாறு அனுமதி பெறப்படாது 2019 ஆம் ஆண்டு ஊழியர்களுக்கான மருந்துகளை வழங்குவதற்காக நிறுவனம் ரூபா. 2.84 மில்லியன் செலவிட்டிருந்தது. நிலைய கணக்காய்வுப் பரிசோதனையின் அடிப்படையில் 4 அதிகாரிகள் ரூபா. 6,000 வருடாந்த எல்லையை மீறி மருந்துகளைப் பெற்றிருந்தனர்.

### குருதி ரக பரிசோதனை தொகுதிகள்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டு பெறுகை நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு 2017 ஆகஸ்ட் 17 ஆம் திகதி தொடக்கம் 2018 ஆகஸ்ட் 16 ஆம் திகதி வரை 21,600 குருதி ரக பரிசோதனை தொகுதிகளை ரூபா. 21.73 மில்லியன் செலவில் (வரி அடங்கலாக) கொள்வனவு செய்வதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதேபோன்று தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தினால் இதற்காக ரூபா. 1.85 பெறுமதியான செயலாற்றுகைக் காப்புறுதி பெறப்பட்டிருந்ததுடன், அதன் செல்லுபடிக் காலம் 2018 ஆகஸ்ட் 16 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது. இது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படாது இருந்ததுடன், ஒப்பந்தம் செய்யப்பட்ட எண்ணிக்கை நிறைவடைந்ததன் பின்னரும், 2019 ஒக்டோபர் மாதம் வரை 10,800 குருதி ரக பரிசோதனை தொகுதிகள் ரூபா. 10.87 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2019ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகை செயற்பாட்டினை இரத்துச்செய்து 2018ஆம் ஆண்டு கொள்வனவு செய்த நிறுவனத்திடமே கொள்வனவு செய்வதற்கான காரணம் கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்படாத அதேவேளை, அதற்காக தலைவரின் அனுமதி பெறப்பட்டிருந்த போதும் திணைக்கள பெறுகைகள் குழுவின் மூலம் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

### மருத்துவக் காப்புறுதி பெறல்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவன ஊழியர்களின் சுகாதார நலனை மேம்படுத்தும் நோக்கில் 2005ஆம் ஆண்டு முதல் மருத்துவக் காப்புறுதித் திட்டமொன்று நிறுவனத்தினுள் செயற்பட்டு வந்தது. இதற்காக திரைசேரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவனம் சந்தையிலுள்ள காப்புறுதி நிறுவனங்கள் மத்தியில் போட்டி நிலையை உருவாக்கி விலைகளை ஒப்பீடு செய்து பார்க்காது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து இக் காப்புறுதி பெறப்பட்டிருந்ததுடன், 2019/2020 வருடங்களுக்கான காப்புறுதித் தவணைக் கொடுப்பனவாக மீளாய்வாண்டில் ரூபா. 8.82 மில்லியன் செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புத் திட்டம்

- 2009 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட சுமுகமான நிலை காரணமாக அதிகரித்த விமானப் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் கடுநாயக சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) நிறுவனம் திட்டமிட்டிருந்தது. இத் திட்டத்தின் கீழ் “புதிய விமானப் போக்குவரத்து முனைப்புக் கட்டடம் மற்றும் அதனைச் சார்ந்த நிர்மாணங்கள்” பக்கேஜ் A எனவும் “புதிய விமான நிறுத்துமிடம் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவத்

தொகுதி" பக்கேஜ் B எனவும் இரண்டு பிரிவுகளாக இனங்காணப்பட்டிருந்தன. இத் திட்டம் 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 3 வருடங்களினுள் அதாவது 2015ஆம் ஆண்டு நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களால் ஒப்பந்தம் தாமதமாகக் கையளிக்கப்பட்டிருந்தது. இதன்படி முதலில் "B" பிரிவுக்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அது 2017 ஏப்ரல் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 பெப்ரவரி 29 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தது. 2020 ஜுன் 21 ஆம் திகதியாகும் பொழுது திட்டத்தின் முன்னேற்றம் 78.42 வீதமாக மாத்திரமே காணப்பட்டது.

- மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவில் 92 வீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான நிர்மாணச் செயற்பாடுகள் அடங்கிய "A" பக்கேஜிற்காக 2020 மார்ச் 12 ஆம் திகதி ஒப்பந்தக்காரருடன் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) நிறுவனம் ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்தது.
- கட்டுநாயக சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புத் திட்டத்தின் "A" பக்கேஜின் கீழ் புதிய விமானப் பயணிகள் முனைப்புக் கட்டிடம் மற்றும் அதனைச் சார்ந்த நிர்மாணங்களை மேற்கொள்வதற்காக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) நிறுவனத்தினால் ஜப்பானிய சர்வதேச உதவி நிறுவனத்திடம் (JICA) மொத்தம் 74,397 ஜப்பானிய யென் வெளிநாட்டுக் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக முறையே 2012 மார்ச் 28ஆம் திகதி மற்றும் 2016 மார்ச் 24 ஆம் திகதி இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. இத் திட்டம் செயற்படுத்தப்படாததன் காரணமாக 2020 ஏப்ரல் 20 ஆம் திகதியாகும் பொழுது JICA நிறுவனத்திற்கு வெளிநாட்டுக் கடன் குறை பயன்பாடு காரணமாக இணைப்புக் கட்டணமாக ரூபா. 290.3 மில்லியன் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

### சிவில் விமானப் போக்குவரத்து சட்டத்துடன் இணங்காமை

2019 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) நிறுவனத்தின் மூலமாக விமான நிலைய வலயங்களை உருவாக்கல் அல்லது அபிவிருத்திக்கான பிரதான திட்டம் ஒன்றினைத் தயாரித்து இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் அனுமதி பெறப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

### சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்படாமை

2006 ஏப்ரல் 28ஆம் திகதிய PE/COMC/33/02 இலக்க திரைசேரி பிரதிச் செயலாளரின் கடிதத்தின் படி விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) நிறுவனத்தின் மூலம் அரசிற்குச் சொந்தமான காணிகள், கட்டடங்கள் மற்றும் ஏனைய அசையும் அசையாச் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்படாது பொறுப்புகள் மாத்திரம் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் தேறிய சொத்துக்களை வழங்குவதற்காக இலங்கை அரசுக்கு பங்குகளை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருக்கும் தன்மை

2019 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்தின் நட்டம் ரூபா. 44,022.67 ஆகவிருந்ததுடன், திறண்ட நட்டம் ரூபா. 230,890.07 மில்லியனாகவிருந்தது. அன்றைய தினம் நிறுவனத்தின் நடைமுறைச் சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப் பொறுப்புகள் ரூபா. 186,339.26 மில்லியனாகவும் மொத்த சொத்துக்களை விஞ்சிய மொத்த பொறுப்புக்கள் ரூபா. 177,725.40 மில்லியனாகவும் காணப்பட்டது. இதன்படி ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருக்கும் தன்மை தொடர்பான போதிய சந்தேகங்கள் காணப்பட்ட போதும், 2019 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் இலங்கை அரசின் ஒத்துழைப்பினை ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்திற்கு வழங்குவதனை உறுதிப்படுத்தி திரைசேரி செயலாளரின் 2019 செப்தெம்பர் 16 ஆம் திகதிய கடிதத்தின் அடிப்படையில் தொடர்ச்சியான நிலைத்திருக்கும் தன்மை

உள்ளது எனும் எடுகோலின் கீழ் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

### பெற்றுக்கொண்ட கடனுக்கான தவணைக் கொடுப்பனவை செலுத்தாமை

2016/2017 வருடத்தினுள் திரைசேரி பிணையின் மீது ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்தினால் குறுகிய கால நிதித் தேவைகளுக்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் ரூபா. 31,115 மில்லியன்) மற்றும் ரூபா. 26,250 மில்லியன் கடன் வசதிகளை 02 அரச வங்கிகளிடமிருந்து பெற்றிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அக் கடன் தொகையின் ஆரம்பக் கடன் எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### A 350-900 ரக விமானங்கள் 04 கொள்வனவு செய்தல்

2020 மற்றும் 2021 வருடங்களினுள் பெற வேண்டியுள்ள A 350-900 ரக 04 விமானங்களுக்குப் பதிலாக A 330-900 ரக விமானங்கள் 04 அல்லது A 321 Neo ரக விமானங்கள் 08 இனைக் கொள்வனவு செய்வதற்காக ஸ்ரீ லங்கன் விமான நிறுவனம் மற்றும் எயார்பஸ் நிறுவனம் ஆகியவற்றுக்கிடையிலான கலந்துரையாடல் 2020 மார்ச் 31ஆம் திகதி வரை நிறைவுறாதிருந்ததுடன், அதற்கான பெறுவதற்கு முன்பான கட்டணமாக ரூபா. 2,528.12 மில்லியன் (19.21 மில்லியன் அமெரிக்க டொலர்) 2019 மார்ச் 31ஆம் திகதியாகும் பொழுது செலுத்தப்பட்டிருந்தது.

### A 330-200 ரக 4R-ALS விமானத்தின் குறை பயன்பாடு

2016 ஆம் ஆண்டில் செயற்பாட்டு வீதவரி பெறுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த A 350-900 விமானங்கள் 03 தொடர்பான ஒப்பந்தத்தை நிறைவு செய்யும் போது நட்டஈட்டினைக் குறைத்துக்கொள்வதற்காக இன்டர்நெஷனல் லீஸ் பினான்ஸ் நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்டிருந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நிபந்தனைக்கமைவாக A 330-200 ரக 4R-ALS விமானம் 2017ஆம் ஆண்டிலிருந்து 10 வருடங்களுக்கு செயற்பாட்டு வீதவரி அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. இவ் விமானத்திற்காக மாதாந்தம் வீதவரி தவணைக் கொடுப்பனவாக முதல் 72 மாதங்களுக்கும் 485,000 அமெரிக்க டொலரி வீதமும், எஞ்சிய காலத்திற்காக 485,000 அமெரிக்க டொலர் வீதமும் வீதவரி தவணைக் கொடுப்பனவு மேற்கொள்ள இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில் இவ் விமானத்தை 2018 செப்டம்பர் மாதம் வரை Hi fly Transporter நிறுவனத்திற்கு 490,000 அமெரிக்க டொலர் மாதாந்த வாடகை அடிப்படையில் உப வாடகைக்கு விடப்பட்டிருந்தது. 2018 ஒக்டோபர் மாதம் உப குத்தகைக் காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து விமானம் நிறுவனத்திற்கு திரும்பக் கிடைத்திருந்ததுடன் 2018 ஒக்டோபர் முதல் 2019 ஜனவரி வரை விமானம் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2019 ஜனவரி முதல் ஜூன் வரை போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டிருந்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை 169 ஆகக் காணப்பட்டது. (இவ்வகை விமானமொன்றின் நாளாந்த போக்குவரத்தின் அளவு சுமார் 12 மணித்தியாலங்களாகும்) உப வாடகைக் காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து 2018 ஒக்டோபர் 02 ஆம் திகதி விமான பராமரிப்புப் பொறியியலாளர் மூலம் விமானம் தொடர்பாக நடாத்தப்பட்ட தொழில்நுட்ப பரிசோதனையின் அடிப்படையில் குத்தகையளரினால் குறித்த பராமரிப்பு நடவடிக்கைகள் போதியளவு மேற்கொள்ளப்படாமை காரணமாக விமானம் தொழில்நுட்ப ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### கூட்டு ஒப்பந்தங்கள் இற்றைப்படுத்தப்படாமை

ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் நிறுவனத்தின் மூலம் 2014 ஜூன் 01 ஆம் திகதி முதல் 2017 மே 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக 05 தொழிற்சங்கங்களுடன் 05 கூட்டு ஒப்பந்தங்களை செயற்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் 2014 செப்தெம்பர் 12 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தன. இதற்கான பணிப்பாளர் சபை அங்கீகாரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருடம் கழித்து 2015 செப்டம்பர் 21 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இக் கூட்டு ஒப்பந்தங்களின் செல்லுபடிக் காலம் 2017 மே 31 ஆம் திகதி முடிவடைந்திருந்த போதும், 2019 நவம்பர் 30 ஆம் திகதி வரை அவற்றை புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இவ் வொப்பந்தங்களுக்காக 2019 நவம்பர் 30

ஆம் திகதி வரை குறித்த அமைச்சினதும் திரைசேரியினதும் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள்

இடையூறின்றி சமுத்திரத் துறைமுக வசதிகளை ஒழுங்கமைத்தல் இந்தப் பிரிவின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறாக இருந்தது. அந்த எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்காக துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் 04 நிதிச் சட்ட நிறுவனங்களினால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்களின் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களை உருவாக்கல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு.
- வியாபாரத் துறைமுகங்களின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்.
- அட்மிரலுக்கு உரியவை தவிர ஏனைய துறைமுக எண்ணெய்த் தாங்கி உபகரணம், வெளிச்ச வீடு மற்றும் வெளிச்ச வீடுகளின் அபிவிருத்தியும் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளும்.
- கப்பற்துறைச் சேவை வழங்குனர்கள் மற்றும் பயனாளிகளுக்கும் இடையிலான பிரச்சனைகளைத் தீர்த்தல்.
- கப்பற்துறைச் சேவைகளுக்காகப் போட்டி விதிக் கோவைகளை விதித்தல்.
- கப்பற்துறை வழங்குனர்களுக்கும் மற்றும் பயன்படுத்துவோருக்குமிடையில் மதியுரைத் தொடர்புபடுத்தலை உறுதிப்படுத்தல் மற்றும் உதவுதல்.
- பூத் படகு மற்றும் சமுத்திர நாடோடிப்படகு மீதிகளைக் கையேற்றல்.
- கப்பற்துறை நடவடிக்கைகளின் அபிவிருத்தி நிதியத்தை நிர்வாகித்தல்.
- கப்பல் கட்டணம் மற்றும் கப்பற்துறைச் சேவை நடவடிக்கைகள்.
- கடற்கரையோரப் பிரயாணிகளின் போக்குவரத்து.

மேலே கூறப்பட்ட பணிப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் ரூபா.8,869.39 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா.4,033.96 மில்லியன் மட்டுமே உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய அந்தக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் 54.52 சதவீதம் அதாவது ரூபா.4,835.43 மில்லியன் நிதி பயன்படுத்தப்படாதிருந்தது. விபரம் உரு 35 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 35 - பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதி மற்றும் பயன்பாடு
மூலம் - பொது திறைசேரியின் இறுதி நிதிக்கூற்றுக்கள்

### நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அண்மிக்காமை

இளைஞர் யுவதிகள் உள்ளிட்ட பெண்கள் மற்றும் ஆண்களுக்காக வினைத்திறனான வேலை வாய்ப்புகள் மற்றும் சிறந்த வேலை வாய்ப்புகளை எட்டுவதற்கான முக்கிய நீண்டு நிலைக்கக்கூடிய அபிவிருத்தி இலக்கின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் உயிரியல் அம்சங்களைச் சேகரிப்பதன் மூலம் ILO உடன்படிக்கைக்கு இணங்க அனைத்து இலங்கை கப்பற்றுறையினருக்கான அடையாள ஆவணமொன்றை விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்தச் செயற்றிட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வு ஆண்டு வரையிலும் ரூபா.53.46 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக சுயவிபரச் சான்றிதழ் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் 2020 ஜுலை 31 ம் திகதி வரையிலும் உயிரியல் அம்சங்களுடனான (biometric features) அடையாள ஆவணமொன்றை விநியோகிப்பதற்கு முடியாதிருந்தது.

### பொதுத் துறையில் கப்பல் பொருட்கள் போக்குவரத்து

அரச கம்பனியான வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் வியாபார ரீதியான மற்றும் நிதி ரீதியாக சுயாதீன நிறுவனமாக தன்னாற்றல் அடிப்படையில் பேணிச் செல்வதற்கு ஏற்ற வகையில் பொதுத் துறையில் பொருட்கள் இறக்குமதியின் போது முன்னுரிமை பெற்றுக் கொடுப்பதற்கு 2004 திசெம்பர் 21 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்கமைய அனைத்து அரச நிறுவனங்களும் தெளிவுறுத்தப்பட்டு 2005 மே 06 ஆம் திகதி 415 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் அரச நிறுவனங்கள் அதற்கமைய நடவடிக்கை எடுக்காமையினால் 2016 ஜனவரி 13 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கூறிய தீர்மானம் மீளவும் உறுதி செய்யப்பட்டிருந்தது. அதற்கமையவும் மற்றும் மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் உறுதியாகப் பின்பற்றப்பட வேண்டுமென மீண்டும் அறிவுறுத்தல் செய்யப்பட்டு 2016 பெப்ரவரி 18 ஆம் திகதி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டிருந்தது.

அரச துறையில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களில் 2018 ஆம் ஆண்டில் 34 அரச நிறுவனங்களினாலும் மற்றும் 2019 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரையிலும் 24 அரச நிறுவனங்களினாலும் நிர்வாக நடவடிக்கைச் சேவைகள் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பாரியளவில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடும் அரச நிறுவனங்களினால் கம்பனியின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கம்பனியால் அதிகளவில் சேவை வழங்கப்பட்டிருந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 14 ஆக இருந்தது. அந்த 14 அரச நிறுவனங்களினால் 2018 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2019 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரையிலான காலத்தினுள் 9,461,406 மெட்ரிக் டொன் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பினும், அந்த நிறுவனங்களில் 45,331 மெட்ரிக் டொன் அதாவது 0.48 சதவீதமான அளவு மட்டுமே கப்பல் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதிச் சேவை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்தக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதிச் சேவையினை பெற்றுக் கொடுத்த மொத்த நிறுவனங்களில் 85 சதவீதமான 14 அரச நிறுவனங்களில் 05 அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே, ஒருசில அரச நிறுவனங்கள் வேறு வெளிநாட்டுக் கப்பல் கம்பனி மூலம் இறக்குமதியினை மேற்கொள்ளுவதற்குப் பல்வேறு காரணங்களைத் தெரிவித்து விண்ணப்பித்திருந்தமை வெளிப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் 557 சந்தர்ப்பங்களில் 2019 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரையிலும் 398 சந்தர்ப்பங்களில் அவ்வாறாக விண்ணப்பித்திருந்ததுடன் கம்பனியினால் விட்டுவிடல் அறிவிப்புக் கடிதங்கள் (waivers) வழங்கப்பட்டிருந்தன.

இதற்கமைய அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் இறக்குமதி மற்றும் தொடர்புடைய வியாபார சந்தர்ப்பங்களை உகந்ததாகப் பயன்படுத்தி கம்பனியின் சந்தைப் பங்கினைப் பெருக்கிக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த அரச அனுசரணையின் பயன்பாட்டிற்கு கம்பனி பொருத்தமான செயற்பாடொன்றைச் செயற்படுத்தியிருக்கவில்லை.

### கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கைகளில் சர்வதேச நிலை மற்றும் துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையின் சந்தைப் பங்கு

மீளாய்வாண்டில் சர்வதேச கப்பல் நடவடிக்கைக்காகக் கொழும்பு துறைமுகத்தின் 03 பிரதான கொள்கலன் நிலையங்கள் செயற்பட்டு வந்ததுடன் அதில் ஜயா கொள்வலன் நிலையம் மட்டும் இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. தெற்காசிய நுழைவு கொள்கலன் நிலையங்கள் மற்றும் கொழும்பு சர்வதேசக் கொள்கலன் நிலையங்கள் இரு தனியார் கம்பனிகளிடம் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. இந்த கொள்கலன் நிலையங்களில் தற்காலப் போக்கான பாரிய கொள்கலன் கப்பல்கள் வரக்கூடிய ஆழமான 18 மீற்றர் கொண்ட ஒரே கொள்கலன் நிலையம் கொழும்பு சர்வதேசக் கொள்கலன் நிலையம் மட்டுமே ஆகும். மேலும் 18 மீற்றர் ஆழம் கொண்ட கிழக்கு கொள்கலன் முனையத்தின் I ஆவது படிமுறை 2016 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டு முடிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 ஒகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலுமே அந்த முனையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2019 ஆம் ஆண்டிற்காக உலகத் துறைமுகங்கள் தொடர்பான அல்பா லைன் அமைப்பினால் வழங்கப்பட்ட அல்பா லைனர் அறிக்கையின் (Alpha liner Report) பிரகாரம் கொழும்புத் துறைமுகம் இருபதுக்கு இருபது சம அலகு (Twenty Equivalent Unit) 7,228,337 ஆக செயற்பாடுகளை மேற்கொண்டு 2019 ஆம் ஆண்டில் கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கைகளுள் உலகின் 22 ஆவது இடத்தில் தரித்திருப்பதுடன், 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அந்த நடவடிக்கைகளில் 2.6 சதவீத அதிகரிப்பினை எட்டியிருந்தது.

### கப்பல் சரக்கு கையாளல் செயற்பாடு

கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதான துறைமுகங்களுக்கு 2016 ஆம் ஆண்டில் வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை 5,023 ஆக இருந்த போதிலும், அது 2019 ஆம் ஆண்டில் 4,708 வரையிலும் குறைவடைந்திருந்தது. எனினும், கையாளப்பட்ட இருபதுக்கு இருபது (TEUs) கொள்கலன்

அலகுகளின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டில் 4.9 மில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் 7.2 மில்லியன் வரையிலும் அதிகரித்துக் காணப்பட்டது. மேலும் கையாளப்பட்ட மரபு ரீதியிலான கப்பல் சரக்குகளின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டில் 7.81 மில்லியன் மெட்ரிக் டொன்னாக இருந்து 2019 ஆம் ஆண்டில் 6.6 மில்லியன் மெட்ரிக் டொன்னாக குறைவடைந்துள்ளது. விபரங்கள் அட்டவணை 18 இல் காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை | 4,298 | 4,760 | 5,023 | 4,942 | 4,933 | 4,708 |
| கையளிக்கப்பட்ட இருபது (TEUs) கொள்கலன் அலகுகளின் எண்ணிக்கை (அலகு 000) | 4,908 | 5,185 | 5,735 | 6,209 | 7,047 | 7,228 |
| கையளிக்கப்பட்ட பாரம்பரிய கப்பல் பொருட்களின் அளவு (000 மெட்ரிக் டொன்) | 6,339 | 7,156 | 7,811 | 7,735 | 7,438 | 6,673 |

அட்டவணை 18 - பிரதான துறைமுகங்களில் கையளிக்கப்பட்ட கொள்கலன் அலகுகள் மற்றும் பாரம்பரிய கப்பல் சரக்குத் தொகை

மூலம் - இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் செயலாற்றல் மீளாய்வு அறிக்கை

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் கொழும்புத் துறைமுகத்திற்கு கொள்கலன் கப்பல்களின் வருகை 133 கப்பல்களால், அதாவது 3.1 சதவீதத்தால் குறைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்திற்குக் கொள்கலன் கப்பல்களின் வருகை அதிகரிப்பைக் காட்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டில் கொள்கலன் கப்பல்களின் வருகை குறைவாகவே இருந்துள்ளது.

### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் கொள்கலன் கையாளல் நடவடிக்கைகள் வீழ்ச்சியடைதல்

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு இறுதி வரையிலுமான பத்தொன்பது ஆண்டு காலத்தினுள் கொள்கலன் செயற்பாட்டுப் பங்களிப்பு மொத்தக் கொள்கலன் அடுக்குதலின் சதவீதமாகக் கருதுகையில் 81 சதவீத்திலிருந்து 32 சதவீதம் வரையிலும் துரித வீழ்ச்சியடைந்திருந்தது. இதற்கிடையில் கொழும்பு துறைமுகத்தினுள் போட்டி செயற்பாடுகளில் ஈடுபடும் இரண்டு தனியார் கம்பனிகளில் 2013 ஆம் ஆண்டில் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த கம்பனி 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் 40 சதவீதமான பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்திருந்தது. மற்றைய கம்பனி 2001 ஆம் ஆண்டில் 19 சதவீதமாக இருந்த அதன் சந்தைப் பங்குகள் 2019 ஆம் ஆண்டளவில் 28 சதவீதமாக அதிகரிப்பைப் பெற்றுக் கொண்டிருந்தது. கடந்த பத்தொன்பது ஆண்டுகால கொள்கலன் கையாளல் தொடர்பான விபரங்கள் உரு 36 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 36 - இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் கொள்கலன் கையாளல் நடவடிக்கைகள்
மூலம் - இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் 2019ஆம் ஆண்டின் செயலாற்றல் மீளாய்வு அறிக்கை

மேற்கூறிய தரவுகளுக்கமைய இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு கொள்கலன்களைக் கையாள்வதற்கு உரித்தாக இருந்த சந்தைப் பங்குகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளது என்பதும் அதிகாரசபைக்கு அதி கூடிய கொள்கலன்களின் கொள்திறனை எட்டுவதற்கு முடியாதிருந்தது.

### கிழக்குக் கொள்கலன் முனையத்தில் கையாளல் நடவடிக்கைகளை ஆரம்பிக்காமை

கொழும்பு துறைமுகத்தில் தற்போது கொள்கலன் கையாள்வதற்காக செயற்படும் முடிவிடங்களுள் ஆழம் (Draft) 14.25 மீற்றர்களை விட அதிக கப்பல் வரக்கூடிய ஒரே முனையம், கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (C.I.C.T) மாத்திரமாக உள்ளது என்பதுடன் அதன் கொள்திறன் வருடத்திற்கு 2.4 மில்லியன் இருபது சம அலகுகளாக இருந்தது. 2019 ஆம் ஆண்டில் அந்த முடிவிடத்திற்கு 14.25 மீற்றரை விடக் கூடிய 374 கப்பல்கள் வருகை தந்திருந்ததுடன் மொத்த கொள்கலன் இலகுகள் 2.6 மில்லியனை விட அதிக எண்ணிக்கையில் கையாளப்பட்டிருந்தது. அது அதி கூடிய கொள்திறனை விஞ்சியிருந்த நிலைமை என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8 சதவீத அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டில் ஸ்கொட் மற்றும் வில்சன் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டளவில் கொழும்பு துறைமுகத்தில் நிலவும் முடிவிட கொள்திறன் அதி உச்சத்தை எட்டும் எனவும் அப்போது உருவாகும் கேள்விக்கு முகங்கொடுப்பதற்காகக் கிழக்கு முடிவிடத்தை செயற்படும் நிலையில் பேணுதல் வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வு ஆண்டு இறுதியளவிலும் கிழக்கு முடிவிடம் சேவை கேள்வி தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட தொகை ஆவணங்கள் இல்லாமையால் உரிமையற்றுப் போன முடிவிட கேள்வி மற்றும் அதற்கமைய துறைமுக ரீதியில் இழக்கப்பட்ட வருமானம் தொடர்பில் கணக்கிட முடியாதிருந்தது.

எவ்வாறாயினும் கொழும்பு துறைமுக விரிவாக்கல் செயற்றிட்டத்திற்கு உரியதான இலங்கை வங்கியின் நிதித் திரட்டில் ரூபா.11,168 மில்லியன் செலவிட்டு 18 மீற்றர் ஆழம் கொண்டதும் மற்றும் 440 மீற்றர் நீளம் கொண்டதும் வருடாந்த செயற்றிறன் 800,000 கொள்கலன் அலகினைத் கொண்டதுமான கிழக்கு கொள்கலன் முனையத்தில் I ஆவது கட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2016 ஏப்பிரல் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கப்பல் பொருட்களை கையாளுவதற்குத் தேவையான கிரேன் உள்ளிட்ட உபகரணங்களை வழங்கி இந்த முனையத்தின் கையாளல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு 2020 மே 30 ஆம் திகதி வரையிலுமே அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், 2019 மே 28 ம் திகதி இந்த முடிவிடத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கை, இந்தியா மற்றும்

ஜப்பான் ஒன்றிணைந்து கூட்டு ஒப்பந்தமொன்றை (Memorandum of Corporation) கைச்சாத்திட்டிருந்தனர்.

### அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்களில் 2017 நவம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறாக அதிகாரசபையின் கணக்குகளில் காணப்பட்ட மீதியாக ரூபா.147,746 மில்லியனான கடன் மீதியை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் அல்லது அமைச்சரவையின் அங்கிகாரமின்றியும் அதிகாரசபையினால் நிதிக் கூற்றுக்களிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக அரசின் எந்தவொரு கணக்கிலும் அந்தக் கடன் தொகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2017 ஜூலை 20 ஆம் திகதியிலான இலக்கம் MPS/SEC/2017/32 கொண்ட "அம்பாந்தோட்டை துறைமுக நிவாரண உடன்படிக்கை" எனும் பெயரிடப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட அனுமதியின் மூலம் மேற்கூறிய கடன் மீதியை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு பொதுத் திறைசேரியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஆவணங்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் அந்தக் கடன் மீதி ரூபா.178,628 மில்லியனாகக் காணப்பட்டது.

மேலும், மேற்கூறிய கடன்தொகைக்கு உரியதான 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் திரட்டிய அந்நிய செலாவணி பரிமாற்றல் நட்டம் ரூபா.58,442 மில்லியனும், பொதுத் திறைசேரியினால் அல்லது அதிகாரசபையின் கணக்குகளில் உள்ளீர்க்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டின் இறுதி வரையில் மேற்கூறிய அந்நிய செலாவணி பரிமாற்றல் நட்டம் உள்ளிட்ட கடன் மீதியைக் கணக்கிடுவது தொடர்பில் பொதுத் திறைசேரி மற்றும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே 2020 ஜூலை 06 ஆம் திகதியிலான நிதி அமைச்சின் செயலாளரின் கடித்திற்கு அமைய 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 12 ஆவது பந்தியின் பிரகாரம் நிதி அமைச்சரினால் குறித்த சொத்துக்கள் மற்றும் கடன்கள் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் ஏடுகளில் உட்சேர்க்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது என்பதும், அதற்கமைய 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் தேவையான பொருத்தப்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரசபையின் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

### துணைக் கம்பனியொன்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுக்காக பிணையாளியாக இருத்தல்

2017 நவம்பர் மாதம் தொடக்கம் செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறுத்தியிருந்த அதிகாரசபையின் நிர்வாகக் கம்பனியான மாகம்புர துறைமுகங்கள் முகாமைத்துவச் சேவை (தனியார்) கம்பனியினால் 2014 ஆம் ஆண்டில் தனியார் வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 24 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் கடன் தொகையில் 22.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் திருப்பிச் செலுத்தப்படாது இருந்ததுடன் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் கடனை மீளச் செலுத்துவதற்காக கம்பனியிடம் போதியளவு காசு மீதியொன்று காணப்படவில்லை. இதற்கிடையில், கடன் தொகைக்கான பிணையாளியாக மற்றும் தாய்க் கம்பனி எனும் வகையிலும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு எதிராக நிலுவைக் கடன் மீதியான 22.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரினை அறவிடுவதற்கு வழக்கு தொடுப்பதாக குறித் வங்கியினால் கோரிக்கைக் கடிதம் ஒன்று 2019 ஏப்பிரல் 02 ஆம் திகதி அதிகாரசபைக்கு அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபையினால் இதற்காக நிகழத்தக்க பொறுப்புகளுக்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### துறைமுக வளாகத்தினுள் CCTV கமரா முறைமையொன்று பொருத்தப்படாமை

உயர் பாதுகாப்பு வலயமாகப் பெயரிடப்பட்டுள்ள துறைமுக வளாகத்தின் பாதுகாப்பினை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மூலதன வரவு செலவுகளில் அனைத்து நுழைவாயில்கள் மற்றும் இறங்கு துறைமுகங்களுக்காக முறையே ரூபா.60 மில்லியன் மற்றும் ரூபா.150 மில்லியன் செலவில் CCTV கமரா முறைமையொன்று

பொருத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் அதற்காக ரூபா.150 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்டவாறு குறித்த செயற்பாடு மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலுமே நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இந்த உயர் பாதுகாப்பு வலயத்தின் பாதுகாப்பு தொடர்பிலான சிக்கலின் போது தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாத ஆபத்து காணப்படுகின்றது.

## சுங்கத் தண்டப் பணத்தினைத் தளர்த்துவதற்காக மேன்முறையீடு செய்தல்

2011 ஆம் ஆண்டில் இலங்கை சுங்கத்தின் அறிவுறுத்தலின்றி இறக்குமதி செய்யப்பட்ட 27 பாரம்தூக்கிகக் தொடர்பாக சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த ரூபா.1,580 மில்லியன் சுங்கத் தண்டப் பணத்தினைத் தளர்த்திக் கொள்வதற்காக சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 165 ஆவது பந்தியின் பிரகாரம் சுங்க விசாரணைத் தீர்ப்பின் அடிப்படையில் நிதி அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யப்படக் கூடியதாக இருப்பினும், அதிகாரசபையினால் அமைச்சருக்கு அவ்வாறான மேன்முறையீடொன்றினைச் சமர்ப்பித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் ரூபா.1,577.7 மில்லியன் நிகழத்தக்க பொறுப்பு காட்டப்பட்டிருந்தது. மேற்கூறிய காரணிகள் தொடர்பில் அதிகாரசபை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பின் அந்த கட்டளைக்கு எதிராக மேன்முறையீடொன்று உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்தது.

## பொதுத் திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய நிதி

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணச் செயற்றிட்டத்திற்காகப் பெற்றுக் கொண்ட கடனுக்காகத் தவணைத் தொகையாக அதிகாரசபையினால் 2017 ஆம் ஆண்டில் செலுத்தியிருந்த ரூபா.4,777 மில்லியனும் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா.372 மில்லியனும் உள்ளிட்ட 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.5,149.9 மில்லியன் பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகையாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கையின் திகதி வரையிலும் அந்தத் தொகை அதிகாரசபைக்குக் கிடைத்திருக்கவில்லை. மேலும், இது தொடர்பான மீதியை உறுதிப்படுத்த அதிகாரசபையினால் கேட்கப்பட்ட போதிலும், பொதுத் திறைசேரியினால் அந்த மீதி நிரூபிக்கப்படுவதாக உறுதிப்படுத்தப்படவில்லை. 2019 ஆம் ஆண்டுக்கான அரசின் நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதியாக இந்தத் தொகை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## நிதி அதிகாரச்சட்டத்துடன் இணங்காமை

1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 10(5) ஆம் பகுதிக்கு அமைய அரச கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் ஒரு வருடத்தில் மேலதிகமாக இருக்குமாயின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகள் செய்யப்பட்டதன் பின் மீதியை திரண்டநிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். அவ்வாறிருக்க 2016 தொடக்கம் 2019 வரையான ஆண்டுகளில் அதிகாரசபை பெற்றிருந்த மொத்தம் ரூபா.30,253 மில்லியனான நிகர இலாபங்களில் திறந்த நிதியத்திற்கு ரூபா.600 மில்லியனளவில் மட்டுமே செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும், மேற்கூறிய இலாபத்தில் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் தனியார் துறையினருக்கு வழங்கியிருந்த தெற்காசிய நுழைவு முனைவிடம் (SAGT) மற்றும் கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைவிடம் (CICT) போன்ற முனைவிடங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இரு கம்பனிகளில் அதிகாரசபையினால் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலும் மொத்தம் ரூபா.8,514 மில்லியனை குத்தகைப் பணம் மற்றும் அந்தக் காலத்திற்குரிய அரசிறையாக அறவிடப்பட்ட ரூபா.11,250 மில்லியனும், உள்ளடங்கி இருந்தது. அந்த வருமானம் துறைமுகத்தின் நேரடி செயற்பாட்டு வருமானம் அல்ல என்பதும் மேலதிகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## உத்தியோகத்தர்களினால் செலுத்தப்பட வேண்டிய உழைக்குப் போது செலுத்தும் வரி அதிகாரசபையால் செலுத்தப்படல்

2016 ஏப்பிரல் 29 ஆம் திகதியிலான பீஈடீ/03/2016 ஆம் இலக்க அரச வியாபார சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் உழைக்கும் போது செலுத்தும் வரி, தனிநபர் வேதனத்தில்

கழிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டி இருந்ததுடன், அதிகாரசபையின் உத்தியோகத்தர்களின் அந்தத் தொகையானது அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டுக்காக அவ்வாறு செலுத்தப்பட்ட ரூபா.384 மில்லியன் உள்ளிட்ட 2011/2012 மதிப்பீட்டு ஆண்டு தொடக்கம் 2019 திசெம்பர் மாதம் வரையான மொத்தம் ரூபா.3,166 மில்லியன் வருமானத்தில் செலுத்தப்பட வேண்டிய வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த 2015 ஜூலை 06 ஆம் திகதி எஸ்ஈசீ/2015/05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு வெகுமதித் தொகை வழங்குகையில் அதன் அடிப்படையில் உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்பட வேண்டியிருந்தது. ஆயினும் 2019 ஆம் ஆண்டுக்காக அந்த வரியினை உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படாது அதிகாரசபையின் நிதியத்திலிருந்து ரூபா.52 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

### சம்பளத்தினை அதிகரிப்பதற்கு அனுமதி பெற்றுக் கொள்ளாமை

2018 ஜூலை 18 ஆம் திகதியிலான 03/2018 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்பினைத் தவிர 2018 ஆம் ஆண்டு தொடக்கம் அதிகாரசபையின் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் 560 பேருக்கு பதவிக்கு ஏற்ப மாதாந்தம் ரூபா.15,225 தொடக்கம் ரூபா.31,150 வரையான வீச்சிலான அளவில் வேதனம் அதிகரிக்கப்பட்டிருந்தது. அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### சொத்துக்களின் குறைப்பயன்பாடு

அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பு துறைமுக வளாகத்தினுள் அமைந்துள்ள 6,400 மெட்ரிக் டொன் கொள்திறனுள்ள பண்டைய 10 எண்ணெய் தாங்கிகள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் குறை பாவனையுடன் காணப்பட்டது.

### காணி குறைப்பயன்பாடு

பிரதிப் பிரதான முகாமையாளரின் (வளாகம்) 2020 ஜூலை 13 ஆம் திகதியிலான 1/1/156ஆம் இலக்கம் கடிதத்திற்கமைய 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் துறைமுகங்கள் அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பு துறைமுகத்தின் நிலையான சொத்துக்கள் ஏட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள காணிகளுள் ரூபா.2,284.42 மில்லியன் பெறுமதி கொண்ட 36 ஏக்கர் 2 ரூட் 26.43 பேர்ச்சஸ் காணி குறை பாவனையுடன் காணப்பட்டது.

### காணிகளை குத்தகைக்கு வழங்கல்

பிரதிப் பிரதான முகாமையாளரின் (வளாகம்) 2020 ஜூலை 13 ஆம் திகதியுடைய வளாகம் 1/1/156 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்மைய 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக அதிகாரசபையினால் 236 ஏக்கர், 32.74 பேர்ச்சஸ் மற்றும் 375.44 சதுர மீற்றர் கொண்ட காணிகள் மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து மதிப்பீட்டு பெறுமதியினைப் பெற்றுக் கொள்ளாது குத்தகைக்குக் வழங்கப்பட்டிருந்தது.

# நெடுஞ்சாலைகள்

உயர் போக்குவரத்து முறைமை ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் பிரயாண நேரம் மற்றும் கிரயத்தை இழிவுபடுத்தி, வீதிப்பாதுகாப்பு மற்றும் சொகுசான வீதிகள் மற்றும் நுழைவாயில்களுடன் கூடிய சுற்றாடல் தோழமையுள்ள நெடுஞ்சாலைகளை அமைத்து அவற்றை பயன்படுத்துவோரின் சமூக, பொருளாதார மற்றும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல் இந்த துறையிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறாகும்.

அந்த பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்காக வீதி அபிவிருத்தி மற்றும் கனியவள அபிவிருத்தி அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய 2 பிரதான நியதிச்சட்ட நிறுவனங்களால் பின்வரும் பணிகள் நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- தேசிய அபிவிருத்தி இலக்ககளை அடைந்துகொள்ளக் கூடிய விதத்தில் நெடுஞ்சாலைகள் விடயத்துடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை வடிவமைத்தல்.
- நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிக்கக் கூடிய விதத்தில் வீதி வலைப்பின்னலுடன் சம்பந்தப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்
- கிராமிய, முன்னேற்பாட்டு நகரங்கள், மற்றும் நகர்ப்புற பிரதேசங்களை ஒருங்கிணைத்து விரிவானதும் மக்களை மையமாகக் கொண்டமையப்பெற்ற பொருளாதார மற்றும் சமூகப் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் விதத்தில் உயர் தரத்திலான வீதி முறைமைகளை முன்னேற்றுதல் மற்றும் வதிவிட நிலையினை பேணிச்செல்லும் விதத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய வீதிகள் தொடர்பிலான தேசிய கொள்கையின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை ஒருங்கிணைத்து செயற்படுத்துதல்.

நெடுஞ்சாலைகள் ஒர நாட்டின் மிகப் பெறுமதிமிக்க பாரிய சமூகச் சொத்தாக கருதப்படுவதுடன், அது பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார ரீதியாகவும் சமூக நலனோம்பலுக்குரிய பிரதான சமூகச் சொத்தொன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை 21 மில்லியன் மக்கள் தொகையினையும் 65,610 சதுர கிலோமீற்றர் பரப்பளவினையும் கொண்டமைந்த நாடாக இருப்பதுடன். சதுர கிலோமீற்றர் ஒன்றுக்கு 1.76 கி.மீ. வீதிக் கட்டமைப்பினையும் கொண்டுள்ளது. இந்த வீதிக் கட்டமைப்பு தெற்காசியாவிலுள்ள அநேக நாடுகளை மிகைத்ததாக காணப்படுகின்றது. இலங்கையின் வீதிப் போக்குவரத்து, பிரதான போக்குவரத்து முறையாக காணப்படுவதுடன் பயணிகள் போக்குவரத்தில் 94 சதவீதமும், பொருட் போக்குவரத்தில் 98 சதவீதமும் நாளாந்தம் நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கையின் தேசிய நெடுஞ்சாலை வலைப்பின்னல் 2019 ஆம் ஆண்டில் இறுதியளவில் ஏறத்தாழ 12,438 கி.மீ. ஆகக் காணப்படுவதுடன், அது ஏ தரத்திலான 4,215 கி.மீ. இனையும் பீ தரத்திலான 8,005 கி.மீ. இனையும் 217 கி.மீ. அதிவேகப் பாதையினையும் உள்ளடக்கியதாகும். அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 48 கி.மீ. அதிவேகப் பாதை மாத்திரம் தேசிய போக்குவரத்திற்கு சேர்த்தக் கொள்ளப்பட்டிருந்தது. மேலும், பிரதானமாக ஆண்டின் பொது இலக்கிடப்பட்டிருந்த 518.41 கி.மீ. வீதி அபிவிருத்தி வேலைகளில் 150.34 கி.மீ. வேலைகள் மாத்திரம் பூரணப்படுத்தப்பட்டிருந்தது.

மேற்குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளமன்றத்தினால் மீளாய்வாண்டு மற்றும் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் ரூபா 659,456 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 515,416 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 144,040 மில்லியன் நிதி ஏற்பாடு

பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே உரு 34 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.




உரு 34 - பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடும் அதன் பயன்பாடும்.
மூலம் : பொதுத் திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கை.

அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விஞ்சி ஆட்சேர்த்தல்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மீளாய்வாண்டில் பதவியணியினருக்கான சம்பளம் மற்றும் வேதனாதிகளிற்காக ரூபா 11,866.02 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அச்செலவினத்தில் ரூபா 6,500 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலம் நிதியிடப்பட்டிருந்தது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஊழியர் கோப்பினை விஞ்சி 1,298 ஊழியர்களிற்கு வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் 395 மிகையான நேரடித் தொழிலாளர்கள் உள்ளிட்ட தொழிலாளர்களிற்காக ரூபா 2,866.38 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அத்துடன், வீதிகளை பராமரிக்கின்ற தொழிலாளர்களை தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்டமைக்காக மேலும் ரூபா 482.96 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### பதவியணியிலுள்ள பொறியியலாளர்களை ஏனைய செயற்திட்டங்களிற்கு விடுவித்தல்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகரித்த பதவியணியில் 82 பொறியியலாளர் சேவை வெற்றிடங்களும் 116 தொழில்நுட்பச் சேவை வெற்றிடங்களும் காணப்பட்டன. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான பணி வீதிகளை நிர்மாணித்து பேணிச் செல்வதாக காணப்படுகின்றமையால் அத்துறைக்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற மேற்படி வெற்றிடங்களை நிரப்பாதிருத்தல் பொதுமக்களிற்கு பயனுள்ள மற்றும் வினைத்திறன் மிக்க சேவையினை வழங்குவதில் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. அவ்வாறே, இவ்வாறு வெற்றிடங்கள் காணப்படுகின்ற பின்னணியில், அதிகாரசபையில் சேவையில் ஈடுபட்டுள்ள பொறியியலாளர்களில் 32 சதவீதத்தினரான 213 பேர் அதிகாரசபையின்

ஏனைய செயற்திட்டங்களிற்குரிய முகாமையாளர் பதவிகளிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

### அதிவேகப் பாதைகளிலிருந்து கிடைத்த வருமானங்களை புறம்பான பணிகளிற்கு பயன்படுத்துதல்.

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவேகப்பாதைகளிலிருந்து மொத்தம் ரூபா 45,236 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன், அந்த வருமானத்திலிருந்து ரூபா 38,770 மில்லியன் செலவிடப்பட்டு ரூபா 6,499 முதலீட்டிற்காகவும் கைவசமுள்ள காசாகவும் வைக்கப்பட்டிருந்தது. 2015 ஏப்ரல் 27 ஆம் திகதியிட்ட 1912/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் 10 ஆம் பந்தியின் பிரகாரம், அதிவேகப்பாதைகளின் வருமானம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கணக்கில் செலவு வைக்கப்பட வேணடும். அந்த பணமானது தேசிய அதிவேகப்பாதை முறைமையின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பின் நோக்கத்திற்காக பளன்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும், அவ்வாறு சேகரிக்கப்பட்டிருந்த வருமானத்தில் ரூபா 15,657 மில்லியன் அந்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அன்றாட செலவினங்களுக்காகவும் பொது திறைசேரிக்கான கொடுப்பனவுக்காகவும் செலவிடப்பட்டிருந்தது.

### பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு வசதிகளை வழங்குதல்

அதிவேகப் பாதைகளில் கடமைகளில் ஈடுபட்டுள்ள இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், விசேட அதிரடிப்படையினருக்கு சேவைகளை வழங்குவதற்காக சொத்துகள் மற்றும் எரிபொருட்களை கொள்வனவு செய்வதற்காக அதிவேகப் பாதைகளின் வருமானத்தில் ரூபா 492 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அச்செலவினத்திற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து மானியத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யாது ஒரு அரசாங்க நிறுவனம் மற்றொரு அரசாங்க நிறுவனம் சார்பில் செலவு செய்திருந்தது.

### செயற்திட்டங்களை ஆரம்பிக்காதிருத்தல்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் பிரிவினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வீதிகளை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்தலின் கீழுள்ள மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 5,941.01 மில்லியன் தொகையான 113 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயன்முன்னேற்ற அறிக்கையின் படி அச்செயற்திட்டங்கள் 2019 திசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### இலக்கிடப்பட்ட வேலைகளை பூரணப்படுத்தியிருக்காமை

2019 திசெம்பர் 31 இல் பூரணப்படுத்தப்பட வேண்டுமென இலக்கிடப்பட்டிருந்த வேலைகளில் 50 சதவீதத்திற்கும் குறைவான பௌதீக செயன்முன்னேற்றம் அடையப்பட்டிருந்த ரூபா 1,272.38 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமுடைய 40 செயற்திட்டங்கள் காணப்பட்டன. இவற்றில் ரூபா 791.99 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயம் கொண்ட 25 செயற்திட்டங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தற்ற ஏனைய வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்களாகக் காணப்பட்டன. அச்செயற்திட்டங்களிற்குரிய மதிப்பீட்டுக் கிரயத்தில் 10 சதவீதமான ரூபா 80.29 மில்லியன் மாத்திரம் மிளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது.

### தெற்கு அதிவேகப் பாதை நீடித்தல் செயற்திட்டம்

#### அதிவேகப் பாதையின் சர்வதேச கரடுமுரடான சுட்டெண்

தெற்கு அதிவேகப் பாதை நீடித்தல் செயற்திட்டத்தின் தொழில்நுட்ப குறித்துரைப்புக்களின் 401.7.1 பிரிவின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளவாறு அதிவேகப் பாதையின் கரடுமுரடான சுட்டெண் 1.5 - 2.3 கி.மீ. இற்கு இடைப்பட்டதாகக் காணப்படுதல் வேண்டும். தொழில்நுட்ப பரிசோதனை அறிக்கையில் ஒப்பந்தகாரர்களினால் அந்தச் சுட்டெண்கள் அடையப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், பௌதீகப் பரிசோதனையில்

அவதானிக்கப்பட்டவாறு அதிவேகப் பாதைகளின் சில இடங்களில் அவ்வாறான சொகுசுத் தன்மையுடன் பயணிக்கக் கூடியதாக வீதிகள் காணப்படவில்லை.

### சேவைவழங்கும் நிலையத்தினை நிர்மாணித்தல்

தெற்கு அதிவேகப் பாதை நீடித்தல் செயற்திட்டத்தின் சாத்தியக்கூற்று அறிக்கையின் 8.33 ஆம் பிரிவின் படி, சேவைவழங்கும் பல பிரிவுகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், சேவை நிலையங்களை நிர்மாணிப்பதற்கான எந்தவொரு திட்டத்திற்கும் வேலை அளவுத்திட்ட படிவத்தின் மூலம் நிதி ஏற்பாடுகள் செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன்படி, தெற்கு அதிவேகப் பாதையின் 46 ஆவது கிலோமீற்றரில் அமைந்துள்ள வெலிபன்ன சேவை நிலையத்தின் பின்னர் 173 கீ.மீ. நீளமான அதிவேகப் பாதையின் இறுதி வரையிலும் வீதியினைப் பயன்படுத்துவோருக்குத் தேவையான வசதிகளை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

### ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இரண்டாம் கட்ட ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்

### கேள்விப் பத்திரங்களை முறையாக மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல்

2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டிலுள்ள 2.4 மற்றும் 2.6 ஆம் வழிகாட்டல்களின் பிரகாரம் கொள்வனவுச் சபை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையினால் கேள்விப் பத்திரங்கள் முறையாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். இரண்டாம் கட்ட ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 02 ஒப்பந்தப் பொதிகளின் கீழான வேலைகளிற்குரிய கேள்விப் பத்திரங்கள் முறையாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, பொறியியலாளர் மதிப்பீட்டிற்கும் கேள்விப்பத்திரங்களிற்கும் இடையே காணப்பட்ட விலை வீதங்களின் வேறுபாடுகள் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 28.73 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

### பயனற்ற கடப்பாட்டுத் தரகுப்பணம் செலுத்துதல்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்த கடன்தொகையின் அளவுக்கு அமைய ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இரண்டாம் கட்ட ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் முறையே ரூபா 1,180.44 மில்லியன் மற்றும் ரூபா 2016.03 மில்லியன் கடப்பாட்டுத் தரகுப் பணமாக கடன் முகவர் நிலையத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, மொத்தமாக ரூபா 1,386.47 மில்லியன் பயனற்ற செலவினம் இடம்பெற்றிருந்தது.

### மத்திய அதிவேகப் பாதை

நான்கு கட்டங்களுடன் கூடிய மத்திய அதிவேகப் பாதையின் சாத்தியக்கூற்று ஆய்வினை மேற்கொள்வதற்காக அவுஸ்திரேலிய கம்பனி ஒன்றுக்கு ரூபா 1,759 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அக்கம்பனியிடமிருந்து சாத்தியக்கூற்று ஆய்வு அறிக்கையினை பெற்றுக்கொள்ளாது மேலுமொரு தொடர்புடைய சாத்தியக்கூற்று ஆய்வினை மேற்கொள்வதற்காக பல்வேறு உள்நாட்டு நிறுவனங்களுடன் ரூபா 97 மில்லியன் தொக்கான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன.

### மத்திய அதிவேகப் பாதையின் III ஆம் கட்டம்

பொதுஹர முதல் கலகெதர வரையான மத்திய அதிவேகப் பாதையின் III ஆம் கட்ட நிர்மாண வேலைகளிற்காக 2018 மே 04 ஆந் திகதி ஒப்பந்தத்தினை கையளித்தல் கடிதம் வழங்கப்பட்டிருந்தது. யப்பான் ஒப்பந்த காரருடன் இணங்கியிருந்த நடைமுறைகள் மற்றும் டோக்கியோ மிட்சுபிசி யூஎவ்ஜே லிமிட்ட வங்கியுடன் இடம்பெற்ற நிதி இணக்கப்பாடுகளை பூரணப்படுத்துவதற்கு 2020 மார்ச் 01 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. மேலும், செயற்திட்டப் பணிப்பாளரின் 2019 யூலை 12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் மதியுரைச் சேவைக் கம்பனியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் முடிவிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. இவற்றின் படி, அச்செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளை தொடர்ந்து மேற்கொள்தல் நிச்சயமற்றதாக காணப்படுகின்றது.

### இழப்பீடுகள் செலுத்தப்பட்ட காணித் துண்டுகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையேற்காமை

1986 இன் 13 ஆம் இலக்க காணிக் கட்டளைச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் படி, வீதி நிர்மாண வேலைகளிற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளிற்குரிய இழப்பீட்டுத் தொகைகள் செலுத்தப்பட்ட பின்னர் அக்காணிகளின் உரிமையினை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையேற்றல் வேண்டும். அவ்வாறான 05 செயற்திட்டங்களிற்குரிய 12,980 காணித் துண்டுகளை சுவீகரிப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ரூபா 19,816.86 மில்லியன் தொகை இழப்பீடாகச் செலுத்தப்பட்டிருந்தது. அக்காணித் துண்டுகளில் 412 மாத்திரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெயருக்கு பதிவுசெய்யப்பட்டிருந்தது.

### கடன் தொகையினை பயன்படுத்தியிருக்காமை

வீதிச் செயற்திட்டங்களிற்காக பெற்றுக் கொண்டிருந்த வெளிநாட்டுக் கடன் தொகைகளை கடன் உடன்படிக்கைக் காலங்களினுள் பயன்படுத்தி திட்டமிடப்பட்டிருந்த வேலைகளை செய்து முடித்திருத்தல் வேண்டும். 03 செயற்திட்டங்களிற்காக பெற்றுக்கொண்டிருந்த கடன் தொகைகளில் ரூபா 28,829.53 மில்லியன் தொகை உடன்படிக்கையிடப்பட்ட காலத்தில் பயன்படுத்தியிருக்காமையால் அக்கடன் தொகையினை வழங்கிய நிறுவனங்களிற்கே அவற்றை மீளளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த வேலைகளில் ஒரு பகுதி பூரணப்படுத்தாதிருந்ததுடன் பயன்படுத்தாத நிதிகளிற்காக கடப்பாட்டுக் கட்டணத்தை செலுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தது.

### அந்நியச்செலாவணி நட்டம்

வெளிச்சுற்று அதிவேகப் பாதைச் செயற்திட்டத்தின் III ஆம் கட்டத்திற்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,527 மில்லியன் தொகையான அந்நியச் செலாவணி நட்டம் ஏற்பட்டிருந்தது. அது பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 62,702 மில்லியன் தொகையில் 15 சதவீதமாகக் காணப்பட்டது. டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி சடுதியாக வீழ்ச்சியடைந்தமை, நிர்மாண உடன்படிக்கைகளிலுள்ள பாதகமான கொடுப்பனவு நிபந்தனைகள், நிர்மாண வேலைகள் தாமதமடைதல் மற்றும் கடன்தொகையில் 50 சதவீதம் மாத்திரமே உடன்படிக்கைக் கால முடிவில் பயன்படுத்தியிருந்தமை போன்ற காரணங்கள் இதற்குத் தாக்கமளித்திருந்தன. அத்தாக்கங்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் திரும்பியிருக்கவில்லை.

### செயற்திட்ட வேலைகள் முடிவடைந்த பின்னரும் அவற்றை கலைத்து விடாமை

வெளிநாட்டுதவிகளின் மூலம் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவுகளின் வேலைகள் முடிவடைந்த பின்னர் அப்பிரிவுகளை விரைவாக கலைத்துவிடுதல் வேண்டும். வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் வெளிநாட்டு நிதியுதவிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 05 செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் முடிவடைந்து குறித்த சொத்துக்கள் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டங்களின் உரிமையினை அதிகாரசபைக்குக் கையளிக்காது செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவுகளினால் 02 முதல் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் தொடர்ந்து பேணிவரப்பட்டிருந்தன.

# மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி மூலாதாரங்களிலிருந்து மின்வலு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் எரிசக்தி துறையில் தன்னிறைவு உடையதாக மாறும் எதிர்பார்ப்புடன் மின்வலு மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 08 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்கள் என்பவற்றால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விடயங்களுடன் சம்பந்தப்பட்ட கொள்ளைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்.
- மின்வலு வளமூலங்களின் கட்டுப்பாடு, ஒழுங்குபடுத்துகை, பயன்பாடு ஆகியவற்றுக்குத் தகுந்த மின்வலுக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல்
- நீர், அனல், நிலக்கரி மற்றும் காற்று ஆகிய மூலவளங்களின் மூலம் மின் சக்தியை உற்பத்தி செய்தல் தொடர்பான அலுவல்கள் மீதான ஆராய்ச்சிகளும், திட்டமிடலும் கண்காணிப்பும் அபிவிருத்தியும்
- கிராமிய மின்வலுப்படுத்துகை
- எரிசக்தி வினைத்திறன் ஏற்படக்கூடிய வகையில் கேள்வியை முகாமை செய்தலும், புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை அபிவிருத்தி செய்தலும்
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அபிவிருத்தி செய்தல்.

மேற்படி பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளிற்காக ரூபா 11,894 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 10,339 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய அக்காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து 13 சதவீதம் அல்லது ரூபா 1,555 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் உரு 37 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.




உரு 37 - பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடும் பயன்பாடும்
மூலம் - பொதுத் திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கை

மேற்படி பணிகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

### உழைக்கும் போது வரி செலுத்துதல்

2007 திசெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டில் சம்பள திருத்தம் மூலம் உழைக்கும் போது வரி ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும் இலங்கை மின்சார சபையினால் அது செலுத்தப்பட்டிருந்தது. அதன் படி, 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை மின்சார சபையினால் ரூபா 4,919 மில்லியன் மேலதிக செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### பதவியணியினருக்கு படிகளைச் செலுத்துதல்

2007 நவம்பர் 14 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானம் மற்றும் 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவையில் சுற்றறிக்கைக்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் இலங்கை மின்சார சபையினால் அதன் பதவியணியினருக்கு ரூபா 1,712 மில்லியன் மீளாய்வாண்டின் போது பல்வேறு படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### பெறவேண்டிய கணக்குகள்

05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 3,322.20 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறுவனவு மீதிகளை அறவிடுவதற்கு இலங்கை மின்சார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### நுகர்வோரின் வைப்புகளுக்காக வட்டி செலுத்துதல்

இலங்கை மின்சார சபையில் வைத்திருக்கப்பட்டுள்ள பாவனையாளர்களின் வைப்புகளுக்காக 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் 28(3) உப பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 1,592 மில்லியனாக இருந்தது. அதன்படி, முன்னைய நான்கு ஆண்டுகளிற்குரிய மொத்தம் ரூபா 5,118 மில்லியன் வட்டிக்கு நிதிக்கூற்றுக்களில் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

### மின்வலுச் சட்டத்திற்கு முரணாக கொள்வனவு செய்தல்

இலங்கை மின்சார சபையினால் 2013 இன் 31 ஆம் இலக்கமுடைய (திருத்திய) மின்வலுச் சட்டத்தின் 43 ஆம் பிரிவிற்கு முரணாக 2016 ஏப்ரல் மாதம் தொடக்கம் 2019 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் 2,165 கி.வொட் மணித்தியால மின்வலுவினை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 54 பில்லியன் செலவிட்டு பிறப்பாக்க அனுமதிப்பத்திரம் இல்லாத மின்சார ஆலைகளிலிருந்து அவசர கொள்வனவுகள் செய்யப்பட்டிருந்தன.

### பிறப்பாக்க திட்டத்திற்கு முரணாக கொள்வனவு செய்தல்

நீண்டகால மின் பிறப்பாக்கத் திட்டத்தின் (2018-2037) படி 2019 ஆம் ஆண்டில் அனல் மற்றும் புதுப்பிக்கத்தக்க மார்க்கங்களிலிருந்து முறையே 370 மற்றும் 287 மெகா வொட் மின்வலுவினை முறைமைக்கு சேர்த்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆண்டின் போது புதுப்பிக்கத்தக்க எரிசக்தியாக 25.2 மெகா வொட் முறைமைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், பிறப்பாக்கத் திட்டத்திற்கு முரணாக 222 மெகா வொட் அனல் மின்சாரம் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 22.2 பில்லியன் பெறுமதியுடை 735 கிகா வொட் மணித்தியால மின்வலு அவசர மின்வலுவாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### நீதிமன்ற தீர்ப்புக்கு முரணாக சம்பளம் செலுத்துதல்

CA/WRIT/193/2015 ஆம் இலக்க நீதிமன்ற தீர்ப்புக்கு முரணாக இலங்கை மின்சார சபையினால் அதன் ஊழியர்களிற்காக மீளாய்வாண்டில் ரூபா 38,508 மில்லியன் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது..

### மொரகல்ல நீர் மின்வலு ஆலையினை நிர்மாணித்தல்

தேசிய மின்சார முறைமைக்கு 31 மெகாவாட் இயலளவொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மொரகொல்ல நீர் மின் நிலைய நிர்மாணம் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அச்செயற்திட்டம் 3 வருட கால

தாமதத்தின் பின்னர் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயமான ரூபா 16,780 மில்லியனில் ரூபா 14,851 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைத்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பௌதீக முன்னேற்றம் 31 சதவீதமாக இருந்தது. திட்டத்தின் ஆலோசனை சேவைகள் ஒப்பந்தத்தை வழங்குதல் தாமதமாகியதன் காரணத்தினால் அச்செயற்திட்டத்தை உரிய திகதியில் ஆரம்பிக்காமையால் பெற்றுக்கொண்ட கடனுக்காக ரூபா 28 மில்லியனுக்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 177,931 தொகையினை தண்டக் கொடுப்பனவாக (Commitment Charges) செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

### தேசிய பரிமாற்ற, விநியோக வலையமைப்பு மேம்பாட்டு மற்றும் எரிசக்தி திறன் அபிவிருத்திச் செயற்திட்டம்

இச் செயற்திட்டத்திற்காக ரூபா 23,720 மில்லியன் பணத்தொகை பெறப்பட்டிருந்ததுடன் இத்திட்டம் 2015 சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2018 சனவரி மாதம் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்ட மதியுரைச் சேவைக்கான நோக்கெல்லையினை JICA நிறுவனத்துடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வருவதில் ஏற்பட்ட தாமதம், ஒப்பந்தகாரர்களின் முன்தகுதி (PQ) இற்கு JICA இன் அங்கீகாரத்தைப் பெறுவதில் தாமதம் மற்றும் பெறுகை கோவைக்காக JICA அனுமதி இன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதில் தாமதம் என்பன காரணமாக இச்செயற்திட்டத்தை உரிய திகதியில் பூர்த்தி செய்வதற்கு இயலாது காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பூர்த்தி செய்தலின் முன்னேற்றம் 2 சதவீதமாக மட்டும் காணப்பட்டது.

### புரோட்லேன்ட நீர் மின்வலு ஆலைச் செயற்திட்டம்

35 மெகா வோட்டுடன் கூடிய புரோட்லேன்ட் நீர் மின்வலுச் செயற்திட்டம் 2013 ஆகஸ்து மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆகஸ்து மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.
செயற்திட்டத்திற்காக காணிகளை கையேற்பதில் காணப்பட்ட தாமதம் மற்றும் சமூகப் பிரச்சினைகள் உருவாகியிருந்தமை காணரமாக செயற்திட்டத்தை பூரணப்படுத்துவதில் பின்னடைவு ஏற்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக ரூபா 9,424 மில்லியன் பெறப்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 வரையிலும் அதில் அதில் ரூபா 6,426 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அத்திகதி வரையிலும் செயற்திட்டத்தின் நிதிசார் செயன்முன்னேற்றம் 69 சதவீதமாக காணப்பட்டதுடன் பௌதீகச் செயன்முன்னேற்றம் 74 சதவீதமாக காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் செயற்திட்டத்திற்காக எவ்வித செலவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

# எரிசக்தி

தேசிய கனியவளம் மற்றும் இயற்கை வாயு மிகச் சிறந்த உற்பத்தியுடன் இலங்கையை எரிசக்தித் துறையில் தன்நிறைவடைந்த நாடாக மாற்றுவதே எரிசக்தி துறையின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கமாகவிருந்தது. அப் நோக்கை அடைந்து கொள்வதற்கு பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி மற்றும் கனியவள அபிவிருத்தி அமைச்சும் 03 நியதிச்சட்ட சபைகள்/நிறுவனங்கள் பின்வரும் பணிகளை நிறைவேற்றியிருக்க வேண்டும்.

- எண்ணை வள அபிவிருத்தி தொடர்பான விடயங்களுக்கு உரிய கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் வகுத்தல், மீளாய்வு செய்தல்.
- கனிய எண்ணையுடன் தொடர்புடைய உற்பத்திகள் மற்றும் இயற்கை எரிவாயு இறக்குமதி, சுத்திகரித்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்.
- கனிய எண்ணை உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு தொடர்பான நடவடிக்கைகள்.
- கனிய எண்ணை அகழ்வாராய்ச்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள்.
- கனிய எண்ணை உற்பத்தி ஆதாரத்துடன் எரிவாயு உற்பத்தியும் விநியோகமும்.
- எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகத்துடன் தொடர்புடைய அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

மேற்குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தால் மதிப்பீட்டாண்டு மற்றும் முன்னைய இரண்டு வருடங்களில் மொத்தமாக ரூ. மில்லியன் 911.84 நிதி ஒதுக்கீட்டைச் செய்திருந்ததுடன் அதில் மொத்தமாக ரூ. மில்லியன் 756.69 நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி கடந்த இரண்டு வருடங்களில் மற்றும் மதிப்பீட்டாண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 17.02 வீதம் அதாவது ரூ. 155.15 மில்லியன் நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தி இருக்கவில்லை. விபரம் உரு 38 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 38 - பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கமும் பயன்பாடும்
மூலம் - திறைசேரியின் இறுதிக் கணக்கறிக்கை

மேற்குறித்த வேலைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கோள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வில் தெளிவாகிய கணக்காய்வு அவதானிப்புகள் சுருக்கமாக பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

### ஒழுங்குமுறைக்கு அமைய விளம்பரம் செய்தல்

2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதி EC/EDR/01/2019 ஆம் இலக்கமுடைய தேர்தல் ஆணையாளரின் சுற்றறிக்கையின் படி,

தேர்தல் காலங்களில் மற்றும் தேர்தல் திகதி அறிவிப்பதற்கு அண்மித்த காலப் பகுதியில் பொதுமக்களின் பணத்தை அதிகமாக செலவு செய்து பல்வேறு செயற்திட்டங்கள் அல்லது வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக அல்லது விடயம் சம்மந்தமாக பிரச்சார அறிவித்தல் அச்சு ஊடகங்கள் அல்லது இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக காட்சிப்படுத்தல் மற்றும் அவற்றினூடாக அரசியல்வாதிகளின் நன்மதிப்பினை கூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்கு உடன்படாத விதத்தில் எண்ணை வள அபிவிருத்தி செயலாளர் அலுவலகம் (எண்ணை வள அகழ்வாராய்ச்சிக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக காட்டப்படும்) பத்திரிகை விளம்பரங்களைச் செய்வதற்கு ரூ. மில்லியன் 5.55 செலவிடப்பட்டிருந்தது.

### திட்டமிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றாமை

எண்ணை வள அபிவிருத்திச் செயலாளர் அலுவலகம் 2019 ஆம் வருடத்துக்கான 09 செயற்பாடுகள் அடங்கிய செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரித்திருந்ததுடன், அச் செயற்பாடுகளுக்காக ரூ. மில்லியன் 60 நிதி ஏற்பாடுகளைச் செய்திருந்தது. அச் செயற்பாட்டுத் திட்டங்கள் அடங்கிய செயற்பாடுகளில் ரூ. மில்லியன் 50 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 05 செயற்பாடுகள் 2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மற்றும் இரண்டு செயற்பாடுகள் மீது ரூ. மில்லியன் 10 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், அச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட கால வரையறைக்குள் முடிவுறுத்துவதற்கு தவறியுள்ளனர்.

### நாடளாவிய சமுத்திரச் சூழல் தகவல்களை சேகரிக்கும் ஆய்வுச் செயற்திட்டம்.

இலங்கை கடற்பரப்பை இலக்காகக்கொண்டு நாடளாவிய சமுத்திரச் சூழல் தகவல் சேகரிக்கும் ஆய்வுச் செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பது தொடர்பில் எண்ணைவள அபிவிருத்திச் செயலாளர் அலுவலகம், தேசிய நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனமான (நாரா நிறுவன) த்துடன் 2015 செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி ஒப்பந்தமொன்றுக்காக இணங்கியிருந்தனர். 2018 செப்தெம்பர் 28 ஆம் திகதியளவில் இச் செயற்திட்டத்தின் மொத்த ஒப்பந்தப் பெறுமதி ரூ. மில்லியன் 37.16 நாரா நிறுவனத்துக்கு செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளை உட்படுத்தியதன் மூலம் தயாரிக்கப்பட்ட தகவல் தொகுதி மற்றும் இணையம் அடங்கிய சேவர் இயந்திரம் ரூ. மில்லியன் 1.20 செலவும் அவ் ஒப்பந்த பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் தரவுகள் தொடர்பாக தகுந்த அறிவுடன் தரவுத் தொகுதியை செயற்படுத்துவதற்கு முடியுமான பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்கள் இல்லாத தாலும் தேவையான அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தாலும் இத் தரவுகள் உட்படுத்தப்பட்ட வெப் சேர்வர் இயந்திரத்தை எண்ணை வள அபிவிருத்திச் செயலாளர் அலுவலகத்தினுள் மதிப்பீட்டாண்டு முடிவிலும் ஸ்தாபிப்பதற்கு முடியாமல் போயுள்ளது. இந்த வெப் சேர்வர் இயந்திரத்தின் இயக்கம் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை நாரா நிறுவனம் தற்போதைக்கு மேற்கொண்டு வந்த போதிலும், செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி அச் செயற்பாடுகள் உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. அச் செயற்பாடுகளையும் உட்படுத்தி பிரிதொரு உப ஒப்பந்தமொன்றை செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

### இலங்கை கிழக்கு கடலோரங்களில் ஆராய்ச்சிக்கான செயற்திட்டம்

இலங்கையின் கிழக்கு கடலோரங்களில் JS 5 மற்றும் JS 6 நிலப் பகுதிகளில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கைக் குடியரசு மற்றும் பிரான்ஸின் டோடால் நிறுவனமும் 2016 பெப்ரவரி 18 ஆம் திகதி ஒன்றிணைந்த ஆராய்ச்சி ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவ் ஒப்பந்தம் 2018 பெப்ரவரி 18 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. எனினும் 2019 ஆகஸ்ட் 27 ஆம் திகதிவரையான 1 ½ வருட காலமாக முறையான ஒப்பந்தமொன்றில்லாமல் செயற்திட்டம் செயற்படுத்தப் பட்டிருந்தது. 2016 பெப்ரவரி 18ஆம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டபோது பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய முன்னேற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாமையால் 2019 ஆகஸ்ட் 27 ஆம் திகதி மீண்டும் திருத்தப்பட்ட ஒன்றிணைந்த ஒப்பந்தமொன்றுக்கு உடன்பட்டிருந்தனர்.

### இலங்கையின் கிழக்கு மற்றும் மேற்குக் கரையிலிருந்து சற்று விலகிய கடற்பரப்பின் இருமுகட்டு மற்றும் முப்பரிமாண தரவுகளை சேகரிப்பதற்கான செயற்திட்டம்

இலங்கையின் கிழக்கு மற்றும் மேற்குக் கரையிலிருந்து சற்று விலகிய கடற்பரப்பின் இருமுகட்டு மற்றும் முப்பரிமாண தரவுகளை சேகரிப்பதற்கான செயற்திட்டத்திற்கு 2016 செப்தெம்பர் 06 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. இச் இச்செயற்திட்டம் நாட்டுக்கு பொருளாதார ரீதியில் விசேட செயற்திட்டம் என்பதால் முக்கியத்துவ அடிப்படையில் உடனடியாக செயற்படுத்துமாறு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுவினால் அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. எனினும் இச் செயற்திட்டம் சம்மந்தமான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்கு 1 ½ வருடங்களுக்கும் அதிகமாக கால தாமதப் படுத்தப்பட்டு 2018 மே 30 ஆம் திகதி ஒப்பந்தம் செய்துள்ளனர்.

### மன்னார் வடிநிலத்தின் M2 ஆய்வு நிலப்பகுதியில் கனிய எண்ணை ஆய்வு நடவடிக்கைச் செயற்திட்டம்

மன்னார் வடிநில M2 ஆய்வு நிலப்பகுதியில் கனிய எண்ணை ஆய்வு நடவடிக்கைச் செயற்திட்டத்திற்கு 2007 ஆம் ஆண்டில் சர்வதேச விலை மனுக்கோரல் ஒரு சுற்றின் பின் கெயார்ன் லங்கா (தனியார்) நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின்போது இரண்டு இயற்கைவாயுக் குதங்கள் கண்டுபிடிக்கப் பட்டிருந்தன. இந் நிறுவனம் மன்னார் படகுத்துறையில் ஆய்வு நடவடிக்கைளை இடை நடுவில் நிறுத்தி 2015 ஒக்டோபர் 15 ஆம் திகதி ஒப்பந்தத்தை முடித்திருந்தது. அத் தினம் முதல் இந்நிலப்பரப்பில் ஆய்வு நடவடிக்கைகள் மூலம் 04 வருடங காலமாக எதுவித முன்னேற்றமும் அடையப் பெற்றிருக்கவில்லை என்பதுடன் ஆய்வு நடவடிக்கைகளை இடைநடுவில் நிறுத்தியிருந்தனர். மேலும் முதலீட்டாளர்களினால் ஆராய்ச்சி நடவடிக்கைகள் இடைநிறுத்தம் செய்ததன் காரணமாக மீண்டும் மீண்டும் விலைமனுக் கோரும் சுற்றுவட்டம் நடைமுறைப்படுத்தப் படவேண்டிய நிலை உருவானதுடன், அதன் காரணமாக அதிகளவான விற்பனை மேம்படுத்தல் செலவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

### மன்னார் வடிநிலத்தின் $M_2$ நிலப்பகுதியில் ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் இயற்கை வாயு வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்வதற்கான சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் செயற்திட்டம்

மன்னார் வடிநிலத்தின் $M_2$ நிலப்பகுதியில் ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் இயற்கை வாயு வர்த்தக ரீதியாக உற்பத்தி செய்வதற்கான சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கு 2016 ஆம் ஆண்டு சர்வதேச போட்டி விலைமனுக்கோரல் ஊடாக ஐ.எச்.எஸ். குலோபல் நிறுவனம் (IHS Global) தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்கு 2016 டிசம்பர் தொடக்கம் 2018 ஆகஸ்ட் வரை சந்தைப்படுத்தல் வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கு ஐ.அ.டொலர் 300,000 அதாவது ரூ. மில்லியன் 46.61 செலவிடப்பட்டிருந்தது. எனினும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் தோல்வியுற்றிருந்தன

### மன்னார் வடிநிலப்பகுதியை அண்மித்த பகுதிகளில் வான்வழியாக மேற்கொள்ளப்பட்ட புவியீர்ப்பு மற்றும் காந்த ஆய்வு மூலம் தரவுகளைச் சேகரிக்கும் செயற்திட்டம்

மன்னார் வடிநிலப் பகுதியை அண்மித்த வான் வழியாக சென்று நடாத்தப்பட்ட புவியீர்ப்பு மற்றும் காந்த ஆய்வு மூலம் தரவுகளைத் திரட்டும் செயற்திட்டத்தின் ஆரம்ப பணிகள், 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அச் செயற்திட்டம் 07 வருட காலம் முழுவதிலும் விலை மனுக் கோருதல், விலை மனுதாரர்களை தேர்ந்தேடுத்தல் ஆகிய பணிகளைத் தவிர வேறு எதுவித வளர்ச்சியையும் கண்டிருக்கவில்லை.

### எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் தொடர்பாக அமைச்சின் கண்காணிப்பு நலிவடைந்தமை.

எரிபொருள் நிரப்பு நிலையங்களின் தரச் சிறப்பு மற்றும் நம்பிக்கைத் தன்மைகளை மேம்படுத்துவது எண்ணை வள அபிவிருத்தி அமைச்சு நிறுவப்படுவதற்கான மற்றுமொரு காரணமாகும். இதற்காக குறித்த கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்திட்டங்களை வடிவமைப்பதும், பின்னூட்டங்களை பெறுவதும் அமைச்சின் பிரிதொரு பணியாகும். எரிபொருள் விற்பனைக்கு 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று வரை நாடு முழுவதிலும் 1461 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காணப்பட்டதுடன், அவற்றில் 1254 இலங்கை

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு உரியதாகவும் மிகுதி 207 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இலங்கை இந்திய எண்ணைக் கம்பனிக்குச் சொந்தமானவைகளாகும். 2017 ஜனவரி 25 ஆம் திகதி நடைபெற்ற அரச தொழில் முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற செயற்குழுவின் விசேட பரிசோதனைக் குழுவொன்றை ஈடுபடுத்தி பிராந்தியப் பரிசோதகர்களின் சோதனை நடவடிக்கைகளை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சுக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அப் பரிந்துரையின் படி எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்பும் இயந்திரங்கள் மூலம் சரியான அளவு எரிபொருள் வெளியேற்றப்படுகின்றதா என பரிசோதிப்பதும் பிராந்திய மதிப்பாய்வு உத்தியோகத்தர்களின் மதிப்பாய்வு நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு எண்ணைவள அபிவிருத்திக் குழுவொன்றின் மூலம் 2018 ஆம் ஆண்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குரிய 1461 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காணப்பட்டதுடன், அவற்றில் 73 நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 28 நிலையங்கள் அதாவது நூற்றுக்கு 38 வீதம் பின்தங்கிய நிலையில் காணப்பட்டன. மேலும், 2018 ஆம் ஆண்டில் இலங்கை இந்திய எண்ணைக் கம்பனிக்கு சொந்தமான 207 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மத்தியிலிருந்து 03 நிலையங்கள் மாத்திரம் பௌதீக ரீதியாக பரீட்சிக்கப் பட்டிருந்ததுடன், அதில் 02 நிலையங்கள் சாதாரண நிலையிலும் பலவீனமான நிலையிலும் காணப்பட்டது. கணக்காய்வின் போது மாதிரி அடிப்படையில் கம்பஹா மற்றும் காலி மாவட்டங்களில் 24 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகளின் போது அவற்றில் 21 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எரிபொருள் விநியோக சேவையில் அளவைக்குரிய குறைபாடுகள் காணப்பட்டன. அதன்படி எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பாக எண்ணைவள அபிவிருத்திப் பிரிவின் கண்காணிப்பு நடவடிக்கைகள் விரிவாக்கப்படவேண்டிய கட்டாய நிலையில் 2019 ஆம் ஆண்டில் எண்ணைவள அபிவிருத்திப் பிரிவு மூலம் எதுவித எரிபொருள் நிரப்பு நிலையமும் பரிசோதிக்கப்பட்டிருக்க வில்லை.

## செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள தாமதம்

### 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளல்

2004 ஆம் ஆண்டு முதல் கனிய எண்ணைக் கைத்தொழில் சம்மந்தமாக கட்டுப்பாட்டு அதிகார சபையொன்று காணப்படாத காரணத்தால் எண்ணைக் கைத்தொழிலும் 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கமுடைய இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படும் கைத்தொழில்களுக்கு இடையே உட்படுத்துவதற்கு 2006 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் யோசனையொன்று நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன்படி கைத்தொழில் கட்டுப்பாடுக்கு தேவையான கருவிகள் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் பொறுப்பளிப்பதற்கு 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெறறோலிய உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கமுடைய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டம் ஆகிய இரு சட்டங்களையும் திருத்துவதற்கான அடிப்படை நடவடிக்கைகள் 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டிருந்த போதும், 2019 டிசம்பர் 31 ஆம் திகதியதுவரை அது முடிக்கப் பட்டிருக்கவில்லை.

### தேசிய வளிக் கொள்கையை உருவாக்கல்

2015 செப்தெம்பர் 21 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின் மூலம் இயற்கை வாயு சம்மந்தமான தேசியக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கு கனிய எண்ணெய் வள அபிவிருத்தி அமைச்சுக்கு அதிகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. 2018 ஜுன் மாதம் அளவில் தயாரித்து முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த இத் தேசிய வளக் கொள்கை 2019 டிசம்பர் 31 திகதியன்றும் பூர்த்தி செய்யப் பட்டிருக்கலில்லை.

### புதிய எரிபொருள் மொத்த களஞ்சியமொன்றை வட மாகாணத்தில் ஸ்தாபித்தல்

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டத்தாபன காணியில் நிறுவப்பட்டுள்ள எண்ணெய் மொத்தக் களஞ்சியத்தை அவ் இடத்திலிருந்து அகற்றிக்கொள்ளுமாறு 2011 ஆம் ஆண்டில் சீமெந்து கூட்டுத்தாபனம் இலங்கை கனிய எண்ணை மொத்த களஞ்சிய தள நிறுவனத்துக்கு அறிவித்திருந்தது. புதிய மொத்தக் களஞ்சிய சாலையொன்று நிறுவுவதற்குப் பொறுத்தமான காணியை பெற்றுக்கொள்ள முடியாமற் போன

காரணத்தால் தற்போதுள்ள எண்ணெய் மொத்தக் களஞ்சியசாலையை நவீனமயப்படுத்தி விரிவாக்கம் செய்து நடாத்திச் செல்வதற்கு 2016 ஒக்டோபர் 19 ஆம் திகதி அமைச்சரவை முடிவின் படி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் கனிய எண்ணெய் மொத்தக் களஞ்சியத் தள நிறுவனம் சீமெந்துக் கூட்டத்தாபனத்துக்கு செலுத்த வேண்டிய ரூ. மில்லியன் 142.98 நிலுலைப் பணம் செலுத்தியிருக்காததால் இச் செயற்திட்டம் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியதுவரை செயற்படுத்த முடியாமல் போயுள்ளது.

### நிலையான அபிவிருத்தி நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான இலக்கை நோக்கிய ஆரம்பம்

- 2017 ஜுலை மாதம் 31 ஆம் திகதி BD/CBP/4/1/2-2018 ஆம் இலக்கமுடைய தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின்படி நிலையான அபிவிருத்தி நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக எண்ணெய் வள அபிவிருத்தி அமைச்சுடன் நேரடித் தொடர்புடைய நிலையான அபிவிருத்தி நோக்கமாக “சாத்தியமான மாசற்ற எரிசக்தி” தெரிவு செய்யப்பட்டபோதும், அந் நிலையான அபிவிருத்தி நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் விதத்திலான 2019 ஆம் ஆண்டில் எதுவித செயற்திட்டமும் திட்டமிடப்பட்டோ செயற்படுத்தப்பட்டோ இருக்கவில்லை.

- அமைச்சினால் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அமைச்சின் பணிக்குழு செயலாற்றுகை தொடர்பாக 2019 செப்தெம்பர் 31 ஆம் திகதியன்று வரை எதுவித உள்ளக சுற்றறிக்கை ஒன்றையோ வழிகாட்டல் ஒன்றையோ வெளியிட்டிருக்கவில்லை. அது சம்மந்தமாக கரிசனையுள்ள தரத்தவர்களுக்கு அறியச் செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அல்லது செயற்படுத்தல்களையோ செய்திருக்கவில்லை.

- அமைச்சினால் நிலையான அபிவிருத்தி இலக்கை நோக்கி நெருங்கும்போது குறித்த நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு நாடியுள்ள திருப்பு முனை மற்றும் அட்டவணை உறுதியாக அடையாளம் கண்டுகொள்ளப் பட்டிருக்கவில்லை. மேலும் அது தொடர்பான தரவுகளை சேகரிக்கும் செயல்முறையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதற்கான உத்தியோகத்தரையும் நியமித்திருக்கவில்லை.

- எண்ணெய் வள அபிவிருத்தி அமைச்சினால் நிலையான அபிவிருத்தியை நோக்கி நெருங்குவதற்கு தேவையான நிதி ஒதுக்கத்தை இணங் கண்டுகொள்ளப்பட்டிருக்க வில்லை என்பதுடன் அமைச்சில் தற்போது நிலவும் பௌதீக வளங்கள் மற்றும் பணிக்குழுவை அதனை நோக்கி நகர்த்துவதற்கான செயல்முறையொன்றையோ நிலையான அபிவிருத்தி இலக்கினை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான முறையொன்றோ இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### மனித வள முகாமைத்துவம்

#### அத்தியவசிய பதவிகளில் கவனிக்கத்தக்க வெற்றிடம் காணப்படுதல்

பகுத்தாய்வுமுறை சார்ந்த சேவை மட்டத்தை பேணுதல் மற்றும் ஊழியர் எண்ணிக்கை சம்மந்தமாக சரியான சமயத்தில் நிகழ்தப்பட வேண்டிய மீளாய்வொன்றை செய்ய முடியாமல் போனதன் காரணமாக 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அமைச்சின் கனிய எண்ணெய் வள பிரிவின் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான 04 வெற்றிடங்களும், மூன்றாம் நிலை மட்டத்தில் 02 வெற்றிடங்களும், இடைநிலை மட்டத்தில் 18 வெற்றிடங்களும், ஆரம்ப மட்டத்தில் 08 வெற்றிடங்களும் என்றவாறு 32 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதன்படி 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிறுவனத்தின் வெற்றிட எண்ணிக்கை நிறுவனத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 33 வீதம் அளவில் காணப்படுவதை அவதானிக்க முடிந்தது.

### மனிதவள அபிவிருத்தியை முறையாக திட்டமிடாமை

2018 ஜனவரி 24 ஆம் திகதியிடப்பட்ட 02 / 2018 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சின் கனிய எண்ணெய் வள அபிவிருத்தி பிரிவு மூலம் பின்வரும் மனித உரிமை அபிவிருத்தியுடன் தொடர்புடைய திட்டம் முறையாக செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை.

- சேவையிலுள்ள சகல ஊழியர்களும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தப் படிவத்தில் கையொப்பம் இட்டிருக்கவில்லை.
- வருடாந்த செயற்திறன் திட்டத்தின் படி எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றை அடைந்து கொள்வதற்கு ஊழியர் படையணியை பிரயோகிக்கும் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.
- ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் நிபுணத்துவங்களை வெவ்வேறாக இனங்கண்டு கொள்ளத் தவறியுள்ளதுடன் அதற்குத் தகுந்த செயல்முறையொன்று தயாரிக்கப் பட்டிருக்காமை.
- 2019 ஆம் ஆண்டில் 22 நடாத்தப் படவிருந்த பயிற்சிநெறிகளில் 14 பயிற்சி நெறிகள் மாத்திரமே செயற்படுத்தப் பட்டுள்ளன.
- 2019 ஆம் ஆண்டில் மனித வள அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் நூற்றுக்கு 79 வீதம் பயன்படுத்தப்படாமை.

### உள்நாட்டு கனிய எண்ணெய்ச் சந்தை

2019 ஆம் ஆண்டில் உள்நாட்டு கனிய எண்ணெய்ச் சந்தையின் நூற்றுக்கு 87 வீதமான விநியோகத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கியுள்ளது. மதிப்பீட்டாண்டில் மொத்த கனிய எண்ணெய் இறக்குமதிகளுக்கு ஐ.அ.டொலர். மில்லியன் 3,677 செலவிடப் பட்டிருந்தது. மொத்தக் கனிய எண்ணெய்ச் சந்தை விலை மாற்றங்களின் பிரதிபலிப்பாக 2019 ஆம் ஆண்டில் மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் சாதாரண விலை முன்னைய ஆண்டில் நிலவிய ஐ.அ.டொலர் 76.25 உடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டோலர். 68.8 வரை நூற்றுக்கு 9.8 வீதம் குறைவடைந்திருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட கனிய எண்ணெய் உற்பத்தி மெற்றிக் தொன் ஒன்றின் பொதுவான விலை 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ஐ.அ.டொலர். 592 உடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 571 வரை நூற்றுக்கு 3.6 வீதம் குறைந்திருந்தது.

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமைகளும் தேறிய சொத்துக்களின் நிலையும்

கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் படி மதிப்பீட்டாண்டில் கூட்டுத்தாபனம் ரூ. மில்லியன் 4,260.66 மொத்த இலாபமாக அறிக்கையிட்டிருந்ததுடன் அது முன்னைய வருடம் அறிக்கையிட்டிருந்த மொத்த நட்டமான ரூ. மில்லியன் 4,124.21 விட ஒப்பீட்டளவில் ரூ. மில்லியன் 8,384.87 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. அதேபோல் மதிப்பீட்டாண்டில் ரூ. மில்லியன் 11,835.6 வரிக்கு முந்திய தேறிய நட்டமாக அறிக்கையிட்டிருந்ததுடன் சென்ற வருடம் ரூ. மில்லியன் 106,140.40 நட்டம் பெறப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் அரை இறுதி வரையில் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய உற்பத்திகளுக்கு அமைச்சரவையின் அங்கிகாரத்துடன் விலைச் சூத்திரமொன்று செயற்படுத்தப் பட்டதன் காரணமாக மொத்த இலாபம் அறிக்கையிடப் பட்டபோதிலும், குறித்த விலைச்சுட்டிக்கு புறம்பாக விசேடமாக பெற்றோல் ( 92 ஒக்டேன்), டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய பிரதான கனிய எண்ணெய் உற்பத்திகளின் விலை திருத்தியமைக்கப் படும்போது உற்பத்திச் கிரயத்தை விட குறைவாக விலை நிர்ணயிக்கப் பட்டமையால், மதிப்பீட்டாண்டில் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை மேலும் பலவீனமான மட்டத்தில் காணப்படுவதற்கு காரணமாகியது. அதன்படி முன்னைய வருடத்துடன் ஒப்பீட்டளவில் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முந்திய நட்டம் ரூ. மில்லியன் 94,304.80
வினால் குறைவடைவதற்கு முன்னைய வருடத்தில் ரூ. மில்லியன் 82,717.29 வாக காணப்பட்ட நாணயப் பரிமாற்று விகித விலகல் நட்டம் ரூ. மில்லியன் 8,397.55 நட்ட நிலைமை உருவாவதற்கு அடிப்படைத் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மதிப்பீட்டாண்டினதும் கடந்த 5 வருட காலத்தின் நிதிப் பெறுபேறுகளின் மாற்றங்கள் உரு 39 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 39 - கூட்டுத்தாபனத்தின் இலாபம்/(நட்டம்)
மூலம் - இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கைகள்

**கடன்பட்டோர்களின் நிலுவை அதிகரித்தல்**

கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டாண்டின் நிதி அறிக்கைகளின் படி 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மொத்த வர்த்தக கடன் பட்டோர்களின் பெறுமதி ரூ. மில்லியன் 153,221.90 ஆகவிருந்தது. அது முன்னைய ஆண்டின் கடன் பட்டோர்களின் பெறுமதி ரூ. மில்லியன் 86,652.10 பெறுமதியுடன் ஒப்பீட்டளவில் நூற்றுக்கு 76.82 வீதம் அதிகரித்திருந்தது. இக் கடன் நிலுவைகள் அரசதுறை கடன்பட்டோர் ரூ. மில்லியன் 135,35.80 இனையும் தனியார் துறை கடன் பட்டோர் ரூ. மில்லியன் 17,886.10 யும் கொண்டிருந்தது. அதில் இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனம் ஆகியவற்றிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை முறையே ரூ. மில்லியன் 85,911.5 மற்றும் ரூ. மில்லியன் 48,385.3 ஆகவிருந்தது.

**கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் மறைப் பெறுமதியை அடைதல்**

கடந்த ஆண்டில் ரூ.மில்லியன் 281,462.4 ஆக காணப்பட்ட கூட்டுத்தாபனத்தின் மறைப் பெறுமதியடைந்த தேறிய சொத்துக்களின் அளவு மதிப்பீட்டாண்டின் முடிவில் ரூ. மில்லியன் 293,213.5 வரை ரூ. மில்லியன் 11,751.1 ஆல் மேலும் அதிகரித்திருந்தது. விற்பனை மற்றும் விநியோக செலவுகளும் நிதிச் செலவுகளின் அதிகரிப்புகளும், அவ் ஒட்டுமொத்த நட்டம் ஏற்பட பிரதானமாக செல்வாக்குச் செலுத்தியிருந்தது. ஆகையால் அரசின் நிதி உதவியின்றி கூட்டுத்தாபனத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கான ஆற்றல் தொடர்பில் கருத்து வேறுபாடு ஏற்பட காரணமாகியது.

**முற்பாதுகாப்பு கொடுக்கல் வாங்கல் (ஹெஜின்)**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முற்பாதுகாப்பு கொடுக்கல் வாங்கல்களின் படி சில வர்த்தக வங்கிகளுடன் செய்துகொள்ளப்பட்ட முற்பாதுகாப்பு ஒப்பந்தங்கள் சம்மந்தமாக தீர்வு செயற்பாட்டின் ஒரு தரப்பினராக கூட்டுத்தாபனம் அழைக்கப்பட்டது. கட்சிக் காரர்களிடையே செய்துகொள்ளப்பட்ட தீர்வு உறுதிகளின் கீழ் ஐ.அ.டொலர் மில்லியன் 60 (ரூ. மில்லியன் 7,613) ஸ்டாண்டட் சார்ட்டர்ட் வங்கிக்கு (SCB) 2013 ஜுன் 03 ஆம் திகதி செலுத்தியிருந்ததுடன், ஐ.அ.டொலர் மில்லியன் 27 ( ரூ. மில்லியன் 3,881) டொயிஷ் வங்கிக்கு 2016 ஆகஸ்ட் 04 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகலல்களின் படி 2019 ஆம் ஆண்டளவில் இக் கொடுக்கல் வாங்கல் காரணமாக கூட்டுத்தாபனம் ரூ. மில்லியன் 13,641 நட்டமடைந்திருந்தது. கூட்டுத்தாபனத்தின் முற்பாதுகாப்பு கொடுக்கல் வாங்கல் (ஹெஜின்) சம்மந்தமாக இலங்கை மத்திய வங்கி சட்டச் செலவுகள் என்றவகையில் ரூ. மில்லியன் 941.2 செலவு செய்திருந்தது. இதில் ரூ. மில்லியன் 370.6 இலங்கை மத்திய வங்கி பொறுப்பேற்றிருந்ததுடன். ரூ. மில்லியன் 567

இனை 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டுவரையான கால இடைவெளியில் கூட்டுத்தாபனம் இலங்கை மத்திய வங்கிக்கு திருப்பிச் செலுத்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும் ரூ. மில்லியன் 3.1 இனைக் கூட்டுத்தாபனம் மதிப்பீட்டாண்டின் இறுதிவரை திருப்பிச் செலுத்தியிருக்கவில்லை. மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு எதிராக ஐ.அ. டொலர் 8.6 க்காக உரிமை கோரி கொமர்ஷியல் வங்கி கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுத்திருப்பதுடன் அவ் வழக்கு 2019 ஆம் ஆண்டின் இறுதிலியிருந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

### எண்ணெய் விநியோக குழாய்த் தொகுதி

பல்லாண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட குழாய்கள் வழியாக கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவை எண்ணெய்ச் சாலை வரையில் கனிய எண்ணெய் உற்பத்திகள் போக்குவரத்து செய்யப்படுவதுடன் அக்குழாய் வழிகள் புனருத்தானம் செய்யப்படவேண்டிய நிலையில் இருந்தது. அதில் சில குழாய் வழிகள் மறுசீராக்கம் செய்ய முடியாத நிலையில் இருந்த காரணத்தால் ஏற்கனவே கைவிடப்பட்டிந்தது. தற்போது பாவனையில் உள்ள 10 அங்குலம் மற்றும் 14 அங்குல எண்ணெய்க் குழாய்களில் பலமுறை கசிவுகள் ஏற்பட்டதென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆகையால் இக் குழாய் வழிகள் புனருத்தானம் அல்லது நவீனமயப்படுத்தப்படுவது மிக அவசர தேவையாகவுள்ளது.

இதற்கிடையில் முத்துராஜவெல எண்ணெய்ச் சாலை மற்றும் கொலன்னாவ பெற்றோலிய சாலைக்குமிடையே எதுவித உள்ளக தொடர்புகளும் காணப்படவில்லை என்பதுடன் அவ் இடர்பாடு அச் சாலைகள் சிறப்பாக இயங்குவதற்குத் தடையாகவிருந்தது. மேலும் 2012 செப்தெம்பர் 13 ஆம் திகதி “ நாட்டை ஊடறுத்துச் செல்லும் குழாய் பொறுத்தம் செயற்திட்டம்” செயற்படுத்தப் படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் அது அமுல்படுத்தப் பட்டிருக்க வில்லை.

50 ஆண்டுகளுக்கு முன் கொழும்புத் துறைமுகம் (தெற்கு கப்பல் துறை) யிலிருந்து கொலொன்னாவ வரை எண்ணெய் போக்குவரத்துக்கு ஸ்தாபிக்கப்பட்ட 12 அங்குல விட்டமுடைய குழாய் பத்தாண்டு காலமாக தொழிற்படும் நிலையில் இருக்கவில்லை. இவ் எண்ணெய்க் குழாய் 2011 ஆம் ஆண்டு மஹவத்த பிரதேசத்தில் 300 மீட்டர்கள் நவீனமயப்படுத்தப் பட்டதெனினும், பூர்த்தியான செயற்பாட்டு மட்டத்துக்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. 2015 பெப்ரவரி 13 ஆம் திகதி CPSTL நிறுவனத்தின் பணிப்பாளர் சபை சமர்ப்பித்த ஆவணமொன்றின் பேரில் நவீனமயப்படுத்துவதன் நிமித்தம் ரூ. மில்லியன் 260 க்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி 2015 ஆம் ஆண்டில் ரூ. மில்லியன் 120 செலவில் 2,171 மீட்டர்களும் 2016 ஆம் ஆண்டில் ரூ. மில்லியன் 153 செலவில் 2,573 மீட்டர்களும் நவீனமயப் படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறெனினும் எண்ணெய்க் குழாய் வளியை செயற்படும் நிலைக்கு கொண்டுவருவதற்கு புனருத்தானம் செய்வதற்கு மிகுதமாகவுள்ள நீளம் 1000 மீட்டர்களை விடவும் குறைவானது எனினும் நாட்டினுள் எண்ணெய் விநியோக இடையூறுகளை தவிர்ப்பதற்கு குழாய் வளியை நவீனமயப்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகள் மதிப்பிட்டாண்டின் முடிவிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### திருகோணமலை எண்ணெய்த் தாங்கி தொகுதியும் புனர்நிர்மானமும்

பூகோள அமைவிடத்தின் படி முழு உலகினது கவனத்தையும் திருப்பியுள்ள உலகின் இரண்டாவது ஆழமுடைய இயற்கைத் துறைமுகமான திருகோணமலைத் துறைமுகத்தினுள் 1930 ஆம் ஆண்டுகளில் ஸ்தாபிக்கப்பட்ட எண்ணெய்த் தாங்கி தொகுதியில் 12,500 சதுர மீட்டர் கொள்ளளவு கொண்ட 102 தாங்கிகள் மற்றும் அதனுடன் கூடிய பல்வேறு வசதிகளும் காணப்படுகின்றன. நாட்டின் பெற்றோலியத் துறையின் பிரதான இயக்குபவராக இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு, களஞ்சிய சாலை வசதிகள் செயற்திறனுடன் சரக்குளை இறக்குவதற்கான வசதிகள் போக்கு வரத்துக் குழாய்த் தொகுதி மற்றும் ஏனைய பிற வசதிகளையும் உள்ளடக்கிய போதுமான அளவு அடிப்படை வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படுவதன் மூலம் இலாபகரமான மாற்று வர்த்தக வாய்ப்புகள் மற்றும் மாற்று வர்த்தகங்களான, தார், மசகுப் பொருட்கள், மற்றும் திரவமயப் படுத்தப்பட்ட வாயு, இயக்கச் செயற்பாடுகள் போன்ற வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கும் இத் தாங்கிகளை அபிவிருத்தி மற்றும் புனருத்தானம் செய்து பாவிப்பது மிகவும்

பயனுடையதாகும். தற்போது மொத்தமாக காணப்படும் 99 தாங்கிகளில் கீழ் பாகத்தில் உள்ள 14 தாங்கிகள் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனி பாவிப்பதுடன் கைவிடப்பட்டுள்ள மிகுதித் தாங்கிகளை நவீனமயப்படுத்துவதற்கான ஆரம்ப தீர்மானமெடுக்கும் நடவடிக்கை 2015 ஏப்ரல் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், அது தொடர்பான கடைசி முடிவு எடுக்கப்படாத காரணத்தால் நவீனமயப்படுத்தப்படும் செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கு மதிப்பீட்டாண்டின் முடிவிலும் இயலாமல் போயுள்ளது.

### புதிய மொத்த எண்ணெய்க் களஞ்சியமொன்றை வட மகானத்தில் நிறுவுதல்

யுத்த நிலைமைகளின் பின் வேகமாக வளர்ச்சியுற்ற வடக்கு மக்களினதும் பாதுகாப்புப் பிரிவினதும் எரிபொருள் தேவைகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன மொத்த எண்ணெய்க் களஞ்சிய சாலை நிறுவனம் மூலம் நடாத்திச் செல்லும் மொத்த எண்ணெய்க் களஞ்சியங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. அவ் எரிபொருள் மொத்தக் களஞ்சியம் காங்கேசந்துறை சீமேந்துக் கூட்டுத்தாபன காணியில் அமைந்துள்ளதுடன் சீமெந்துக் கூட்டுத்தாபனம் இம் மொத்த எண்ணெய்க் களஞ்சியத்தை அவ் விடத்திலிருந்து அகற்றிக்கொள்ளுமாறு 2011 ஆம் ஆண்டு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன மொத்த எண்ணெய்க் களஞ்சிய சாலை நிறுவனத்துக்கு அறிவித்திருந்தது. தற்போது மொத்த எண்ணெய்க் களஞ்சியசாலை அமைந்துள்ள சீமேந்துக் கூட்டுத்தாபனத்துக்குரிய காணியிலேயே அக் களஞ்சியம் நவீனமயப்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட்டு எரிபொருற் களஞ்சியசாலை நடாத்திச் செல்லப்படுகிறது. 2016 ஒக்டோபர் 19 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி காணியின் உரிமை தொடர்பான பிச்சினை தீர்க்கப்பட்டு முறையான குத்தகை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடப்பட்டதன் பின் இக் களஞ்சிய சாலையை நடாத்திச் செல்வதற்கும், ஏதேனும் நிலுவை குத்தகைக் கட்டணங்கள் இருப்பின் அதனை சீமேந்துக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தவும் தீர்மானிக்கப் பட்டிருந்ததெனினும், அத் தீர்மானத்துக்கமைய மதிப்பீட்டாண்டின் இறுதியிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### உள்ளக நிறுவனக் கொடுக்கல் வாங்கல் நிலுவைகளும் ஒப்பந்தங்களும்

அரச கூட்டுத்தாபனமொன்றால் ஏதேனும் நிலையான நோக்கமொன்றுக்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள உப நிறுவனங்களின் நடவடிக்கைகள் முறையாக கண்காணிப்புச் செய்யப்படுவதும் வழிகட்டப்படுவதும் மிக அத்தியவசிய பணியாகவிருந்தது. அவ்வாறாயினும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பரிபாலிக்கும் நிறுவனமான இலங்கைப் பெற்றோலிய மொத்தக் களஞ்சிய சாலை நிறுவனத்தின் பணிகளை முறையாக மதிப்பீடு செய்திருக்கவில்லை. 2003 ஆம் ஆண்டின் PED/12 ஆம் இலக்கமுடைய அரச வர்த்தக சுற்றறிக்கை 4.2.3 (ஆ) பந்திக்கு அமைய தாய்க் கம்பனியின் பணிப்பாளர் சபையால் அரை ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது உப கம்பனிகளின செயலாற்றிறன்களை மீளாய்வு செய்து செயற்திறன் அறிக்கையை தயாரித்து அதனை அரச வர்த்தகத் திணைக்களத்துக்கு சமர்ப்பித்திருக்க வேண்டும் எனினும், அவ்வாறு செய்திருக்கவில்லை. ஆனாலும் குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சம்மந்தமான முறையான விழிப்புணர்வு கூட்டத்தாபனத்திடம் காணப்படவில்லை. உதாரணமாக கூட்டுத்தாபனத்தின் மூலம் நடாத்தப்பட்டுவரும் பிரதான வர்த்தக நடவடிக்கையொன்றான கப்பல்களுக்கான எரிபொருள் வழங்குதல் வர்த்தகம், அதன் உப நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் தீர்மனத்தின்படி செயற்படுத்தப் பட்டிருப்பினும், அது தொடர்பாக கூட்டுத்தாபனம் எதுவித விழிப்பையும் பெற்றிருக்கவில்லை. அதேபோல் உள்ளக நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக இரு நிறுவனங்களுக்கும் இடையே தொடர்பு காணப்படாத காரணத்தால் நீண்ட காலமாக இரு தரப்பினர்களதும் நடைமுறைக் கணக்குகளுக்கு இடையே குறிப்பிடத்தக்க வித்தியாசங்கள் காணப்பட்டது. மதிப்பீட்டாண்டு முடிவில் அது ரூ. மில்லியன் 1,623.13 வித்தியாசமாக உள்ளது.

# நீர்ப்பாசனமும் சுத்திகரிப்பும்

1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் 1 ஆம் பகுதியின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தப்பட, விவசாய நடவுடிக்கைகளுக்குத் தேவையான பாசன நீர் சேகரிப்பு, உறுதிப்படுத்தல் ஆகியன இவ் இலாகாவினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களாகும். அப்பிரதிபலன்களை அடைந்துகொள்வதற்கு விவசாயம், கிராமியப் பொருளாதார நடவடிக்கைகள், கால்நடை வள அபிவிருத்தி, நீர்ப் பாசனம் மற்றும் மீன்பிடியும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களம் மற்றும் கூட்டுத்தாபனம் மூலம் பின்வரும் பணிகள் நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும்.

- தேசிய கொள்கைகளுக்கு அமைய இலங்கையின் நீர்ப்பாசனக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.
- நீர்ப்பாசன மற்றும் நீர் விநியோகத் தொகுதிகளை நிர்மாணித்தல், முறையான பராமரிப்பு செய்வதனூடாக விவசாயத்தக்குத் தேவையான நீர் வழங்கலை ஒழுங்கு முறையாக பெற்றுக் கொள்ளல்.
- நீர் போசிப்பு பிரதேசங்கள், ஆற்று நீர் வடிநிலப் பகுதிகள் உறுதியாக தீர்மானிக்கப்பட்டு அவற்றை உறுதியான முறையில் பாதுகாத்து அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நீர் மாசுரலைக் கட்டுப்படுத்தல் மற்றும் நீரின் குணநலனைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குதல்.
- நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற்படுத்துதல்.
- புவிக் கீழ் நீரூற்று உருவாகும் இடங்களை பாதுகாப்பதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்திட்டங்களை உருவாக்குதல்.

மேற்குறித்த பணிக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கு ரூ. மில்லியன் 173,732.76 நிதி ஒதுக்கீட்டை ஏற்பாடு செய்திருந்தது. அதில் ரூ. மில்லியன் 117,341.42 பயன்படுத்தப் பட்டிருந்தது. அதன்படி அக் கால வரையரைக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 32.46 வீதம் அதாவது ரூ. மில்லியன் 56,391.34 நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தி இருக்கவில்லை. விபரம் உரு 40 இல் காட்டப் பட்டுள்ளது.




உரு 40 – பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் பய்படுத்தல்
மூலம் - திரைசேரியின் இறுதிக் கணக்கறிக்கை

### நிலையான அபிவிருத்தி இலக்கை நெருங்குதல்

நீர்ப்பாசனத் திணைக்களத்தால் நடைமுறைப் படுத்தப்படும் விடயங்கள் தொடர்பில் "24 அதிகாரமுடைய உத்தியோகத்தர்கள் 2017 மார்ச் 30 ஆம் திகதி நியமிக்கப் பட்டிருந்தனர். 2015 ஆம் ஆண்டின் பின்பு நீர்ப்பாசனத் தொகுதியினுள் ஆக்கிரமிப்பு தாவரங்களின் வியாபிப்பு சம்மந்தமாக ஆய்வொன்று நடாத்தப் பட்டிருக்கவில்லை. எனினும் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது அதன் பரவல் அதிகரித்துள்ளது. அதன்படி கடமையாற்றுவதற்கு நியமிக்கப் பட்டிருந்த அதிகாரமுடைய உத்தியோகத்தர்கள் போதுமான அளவு எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைந்திருக்கவில்லை.

### ஆக்கிரமிப்புத் தாவரங்களின் பரவல்

நீர்ப் பாசனத் திணைக்களத்தின் கீழ் நாடு முழுவதிலும் அமைந்துள்ள பாரிய நீர்பாசன தொகுதிகளில் ஸல்வீனியா மற்றும் ஜப்பான் ஜபர பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு புதர்ச்செடி பாதுகாப்புச் சேவை மூலம் உயிரியல் கட்டுப்பாட்டு வண்டுகள் அறிமுகப் படுத்தப் பட்டிருந்தன. ஜப்பான் ஜபர தாவரத்துக்கு அச் செயல்முறை வெற்றிகரமாக செயற்படவில்லை என அந் நிறுவனம் அறிவித்திருந்தது. ஜப்பான் ஜபர பரவலைத் தடுப்பதற்கு 30 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு முன்பிருந்து இவ் வண்டு அறிமுகப் படுத்தப்பட்டிருந்த போதிலும், அது வெற்றியளித்திருக்க வில்லை. அதற்குப் பதிலாக ஆய்வுகள் மூலம் அல்லது வேறு செயல்முறைகளின் மூலம் அவ் ஜப்பான் ஜபர பரவலை தடுப்பதற்கான பொருளாதார ரீதியிலும் வெற்றியளிக்கக்கூடிய முறையொன்றை மதிப்பீட்டாணடின் முடிவிலேனும் குறித்த பொறுப்புவாய்ந்த நிறுவனம் சமர்ப்பிக்கத் தவறியுள்ளது.

### எதிர்பார்க்கப்பட்ட முடிவுறுத்தல் மட்டம் அடையப் பெறாமை

வெல்லஸ்ஸ உதயச் செயற்திட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூ. மில்லியன் 196.88 க்கான நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்ட 6 செயற் திட்டங்களின் பணிகள் மதிப்பீட்டாண்டின் முடிவிலும் முடிக்கப் பட்டிருக்கவில்லை. அச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நீண்ட காலம் கடத்தப்பட்ட நிலையிலும் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன் அப் பிரதேச விவசாயிகளுக்கு கிடைக்காமல் தாமதமாகி வருகிறது. மேலும், பொத்துபிட்டிய குளத்தின் குளக்கட்டை மேம்படுத்துவதற்கு ரூ. மில்லியன் 28.99 க்கான கிரய மதிப்பீடொன்றின் பேரில் சிறிய ஒப்பந்தம் என கருதப்பட்டு ஒப்பந்தம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. அக் குளங்களின் மேம்படுத்தல் நடவடிக்கைகள் முடிவுறுத்தப் பட்டிருக்கவில்லை என்பதுடன், முடிவுறுத்தப் படாத பணிகளின் பெறுமதி ரூ. மில்லியன் 15.55 ஆகவும் இருந்தது.

### உத்தியோகத்தர் ஒருவரின் இழப்பீடு திணைக்களத்தால் செலுத்தப்படல்

நீர்ப் பாசனத் திணைக்களத்தில் பணியாற்றும் பொறியியலாளர் முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் திணைக்களத்துக்குரிய வாகனமொன்றை ஓட்டிச் சென்று 2003 செப்தெம்பர் 15 ஆம் திகதி விபத்து நேர்ந்து மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் ஒருவர் மரணித்துள்ளார். குறித்த பொறியியலாளர் குற்றவாளியாக்கப்பட்டு 02 வருட சிறைத் தண்டனை 03 வருடங்களுக்கு பிற்போடப் பட்டிருந்தது. அவ் விபத்து காரணமாக பாதிப்புக்குள்ளான கட்சிக் காரர்களால் இழப்பீடு கேட்டுத் தொடுக்கப்பட்ட வழக்கின் கட்டளைப் பிரகாரம் திணைக்களம் வர்த்தக வங்கியொன்றில் பேணி வந்த நடைமுறைக் கணக்கிலிருந்து இரண்டு சந்தர்ப்பங்களில் ரூ. மில்லியன் 3.91 ஐ நீதி மன்றம் அறவிட்டிருந்ததடன் அதில் ரூ. 90,000 த்தைக் குறித்த பொறியியலாளரிடமிருந்து அறவிட்டிருந்தது. அவ்வாறு வங்கி செலுத்தியிருந்த ரூ. மில்லியன் 3.82 பெறுமதி திணைக்களத்தின் தீர்க்கப்படாத முற்பண மீதியாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. அம் மீதியை சரிசெய்வதற்கு மதிப்பிட்டாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### செயலற்ற சொத்துக்கள்

- 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குழாக் கிணறு அமைக்கும் செயற்பாடுகள் குறைந்து செல்லும் போக்கு காணப்படுகின்ற நிலையில், அந் நிலைமையைப் பொருட்படுத்தாது அமைச்சின் நிதி ஒதுக்கத்திலிருந்து ரூ. மில்லியன் 280 செலவு செய்யப்பட்டு நீர்வளச் சபையால் புதிய துளையிடும் இயந்திரமொன்றும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப் பட்டுள்ளன. சபையிடம் பாவனைக்கு எடுக்க முடியுமான துளையிடும் இயந்திரங்கள் பல பாவனைக்கு எடுக்கப்படாமல் களஞ்சியப் படுத்தப்பட்டு இருந்த நிலையில் இத் துளையிடும் இயந்திரம் கொள்வனவு செய்யப் பட்டுள்ளது. அத் துளையிடும்

இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு 08 மாதங்கள் அளவில் பாவிக்கப் படாமல் உள்ளது.

- 2009 ஆம் ஆண்டில் சமூக சேவைத் திணைக்களத்திடமிருந்து கிடைத்திருந்த 1 ½ அங்குல தண்ணீர் பம்புகள் 50 பாவனைக்கு எடுக்கப் படாமலும் இவ் இயந்திரங்கள் இயங்கக் கூடியதா இயங்காதவையா என பரீட்சித்துப் பார்க்கப் படாமல் மதிப்பீட்டாண்டின் முடிவிலும் களஞ்சிய சாலையில் பயன்படுத்தப்படாமல் பிடித்து வைக்கப்பட்டிருந்தது.

# நீர் வழங்கல்

பாதுகாப்பான குடிநீர் மற்றும் மேம்படுத்தப்பட்ட அனைவருக்கும் சுத்திகரிப்பு வசதிகளை வழங்குதல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கும் பெறுபேறொன்றாக இருந்தது. அப்பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்காக கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றியிருந்தது.

- நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் விடயங்களுடனான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைதயாரித்தல் மற்றும் உரிய திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் என்பவற்றின் விடயத்தின் கீழ் வருகின்ற அதனுடன் தொடர்புபட்ட விடயங்களையும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்.
- விசேட நகர திட்டமிடலும் அபிவிருத்தியும்
- நகர அபிவிருத்தி செயற்பாடுகளில் தேசிய பௌதீகத் திட்டங்களின் அடிப்படையில் நகர நிர்மாணப் பணிகளையும் நெறிப்படுத்தலும், ஒழுங்குபடுத்துதலும்
- சகல பிரஜைகளுக்கும் சுத்தமான குடிநீர் பெற்றுக்கொடுப்பதை உறுதிச்செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நீர்வழங்கல் சேவைகள், வடிகாலமைப்பு முறைமைகள் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் குறித்த ஆய்வு, திட்டமிடுகை, வடிவமைப்பு, நிர்மாணித்தல், தொழிற்படுத்துகை மற்றும் பராமரித்தல்.
- சமுதாய நீர்வழங்கல் சேவைகள் மற்றும் கருத்திட்டங்களை வினைத்திறனாகவும் முறையாகவும் மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மீளாய்வாண்டிலும் முன்னைய இரண்டு ஆண்டு காலப்பகுதிக்கும் ரூபா 124,896.30 ஆன நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 109,274.15 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இக்காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் 12.51 சதவீதம் அதாவது ரூபா 15,622.15 மில்லியனான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் உரு 41 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 41 - பாராளுமன்றத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடும் பயன்பாடும்
மூலம்:- பொது திறைசேரியன் இறுதி கணக்கு கூற்றுக்கள்

மேற்குறித்த கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது சம்மந்தமாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வின்போது அறியக்கிடைத்த கணக்காய்வு அவதானிப்புகள் சுருக்கமாக பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

## குழாய் நீர் மற்றும் குழாய் மல வடிகாலமைப்பு வசதிகளை ஏற்படுத்தல்

நீர் வினியோகம் மற்றும் சுகாதார வசதிகளை இலக்காகக் கொண்டு தேசிய நீர் வினியோக மற்றும் வடிகாலமைப்பு சபையினால் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் வெளிநாட்டு உதவியுடன் கூடிய 22 பாரிய நீர் வினியோத் திட்டங்களும், வெளிநாட்டு உதவியுடன் கூடிய 03 பாரிய கழிவகற்றல் திட்டங்களும், உள்நாட்டு நிதி மூலமான 17 நீர் வினியோகத் திட்டங்களும், 03 சிறிய மற்றும் நடுத்தரத் திட்டங்களும், நீரை அடிப்படையாகக் கொண்ட பொது வசதிகளுக்கான 06 முன்மொழிவுத் திட்டங்களும் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக அமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழ் உலக வங்கி உதவியுடன் இரத்தினபுரி, கேகாலை, பதுளை, மொனராகலை, நுவரெலியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் செயற்படுகின்ற நீர் விநியோக மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் மூலமும் அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் விநியோக சபையின் வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதியில் குழாய் நீர் மற்றும் குழாய் மல வடிகாலமைப்பு வசதிகளை ஏற்படுத்தல் முறையே 53.2 வீதம் மற்றும் 2.24 வீதத்தை அடைவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உண்மையாக முறையே 51.8 வீதம் மற்றும் 2.07 வீத முன்னேற்றம் மாத்திரமே அடையப்பெற்றிருந்தது. மேலும் 2016 – 2020 வருடங்களை உள்ளடக்கி சபையின் ஒட்டுமொத்த திட்டமிடல் தயாரிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் மொத்த குழாய் நீர் வினியோகத்தினை 60 வீதம் வரை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த குழாய் நீர் வினியோகம் 51.8 வீதம் மாத்திரம் அடையப்பெற்றிருந்தது. 2020ஆம் ஆண்டின் எதிர்பார்த்த இலக்கினை அடைவதற்கான சாத்தியம் தொடர்பான பலத்த சந்தேகம் காணப்படுகின்றது. 03 பாரிய கழிவகற்றல் திட்டங்கள் மீளாய்வாண்டில் செயற்பாட்டில் இருந்த போதும், மொத்த சனத்தொகையில் 2.07 வீதத்தினருக்கான மல கழிவகற்றலுக்கு மாத்திமே வசதிகளை வழங்குவதற்கு சபைக்கு முடிந்துள்ளது.

மேலும், மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த புதிய நீர் இணைப்புகளின் எண்ணிக்கை 108,850 ஆகவிருந்ததுடன், இது கடந்த வருடம் வழங்கப்பட்ட 109,482 நீர் இணைப்புகளுடன் ஒப்பிடுகையில் 0.6 வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இதனடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதியில் வழங்கப்பட்டிருந்த மொத்த நீர் இணைப்புகளின் எண்ணிக்கை 2,437,504 ஆகவிருந்தது. கடந்த 07 வருடங்களினுள் சபையின் நீர் வினியோகம் தொடர்பான விபரம் உரு 42 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 42 - தற்போதுள்ள மற்றும் புதிய இணைப்புகளின் எண்ணிக்கை
மூலம் - 2019ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கை

### நீர் உற்பத்தி மற்றும் பாவனை

தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு சபையின் சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி, பாவனை மற்றும் வருமானம் ஈட்டாத நீர் தொடர்பான கடந்த 05 வருடங்களின் தரவுகள் உரு 43 இல் காட்டப்பட்டுள்ளது.




அட்டவணை----- - சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி, பாவனை மற்றும் வருமானம் ஈட்டாத நீர்
மூலம் - செயலாற்றுகை அறிக்கை 2019

கடந்த ஆண்டில் 24.93 வீதமாகவிருந்த முழு நாட்டிலும் மொத்தமாக வருமானம் ஈட்டாத நீர் விகிதாசாரம் மீளாய்வாண்டில் 24.95 வீதமாக அதிகரித்திருந்தது. கடந்த ஆண்டில் 41.65 வீதமாகவிருந்த கொழும்பு நகரத்தின் வருமானம் ஈட்டாத நீர் விகிதாசாரமும் மீளாய்வாண்டில் சுமார் 41 வீதத்தை அண்டிய வீதத்தைக் கொண்டிருந்தது. கொழும்பு நகரத்தில் வருமானம் ஈட்டாத நீர் விகிதாசாரத்தினைக் குறைக்கும் நோக்கில் செயற்படுத்தப்படுகின்ற பெரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முதலீட்டு அபிவிருத்தித் திட்டம் I மற்றும் ii ஆகியவற்றில் ஒப்பந்தக்காரரின் பலவீனமான செயலாற்றுகை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட கால எல்லையினுள் நிறைவு செய்ய முடியாது போயிருந்ததுடன், அதற்கான கால எல்லை நீடிப்பும் வழங்கப்பட்டிருந்தது. கொழும்பு நகரம் மாத்திரமன்றி காலி, கேகாலை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, பண்டாரவலை, கண்டி, திரிகோணமலை ஆகிய பிரதேசங்களில் மீளாய்வாண்டில் வருமானம் ஈட்டாத நீரின் சதவீதம் 25 இலும் அதிகமாகக் காணப்பட்டது. சட்டத்திற்கு முரனான நீர் இணைப்புகள் காணப்பட்டமை, 70 வருடங்களுக்கும் மேல் பழைமை வாய்ந்த நீர்க் குழாய்களை புனர் நிர்மாணம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்காமை, மானி வாசிப்பாளர்களின் முறையற்ற செயற்பாடுகள், வருமானம் ஈட்டாத நீர் தொடர்பில் நேரடியாக தாக்கம் செலுத்தும் பாவனையாளர்களின் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படாமை ஆகியன இதில் தாக்கம் செலுத்திய பிரதான காரணங்களாக இருந்தன.

### திட்டங்களை நிறைவு செய்வதில் ஏற்பட்ட தாமதம்.

ஒப்பந்தக்காரர்களின் பலவீனமான செயலாற்றுகை, காணி பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உள்ள தாமதம், சுற்றாடல் சார்ந்த மற்றும் மீள் குடியேற்றல் தொடர்பான பிரச்சினைகள் காணப்பட்டமை, ஒப்பந்தங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் ஒப்பந்தக்காரர்களினால் குறைந்த தரத்திலான நீர்க் குழாய்களை வினியோகித்தல் ஆகிய காரணங்களினால் நீர் வினியோக மற்றும் வடிகாலமைப்பு சபையினால் செயற்படுத்தப்பட்ட வெளிநாட்டு உதவியுடன் கூடிய 08 பாரிய நீர் விநியோத் திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் 184 நாட்கள் தொடக்கம் 1825 நாட்கள் வரையான கால தாமதம் அடைந்திருந்தன.

அமைச்சின் நேரடித் தலையீட்டின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற நீர் வினியோகம் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தல்

திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கிராமிய நீர் வினியோகத் திட்டங்கள், புனர் நிர்மாணத் திட்டங்கள் மற்றும் நகர சுகாதாரத் திட்டங்கள் ஆகியவற்றின் திட்டக் கால எல்லை, திட்டங்களை ஆரம்பிக்க முன்னர் சரியாக மதிப்பீடு செய்வதில் உள்ள பலவீனங்கள், ஒப்பந்தக்காரர்களின் பலவீனமான செயலாற்றல், சுற்றாடல் சார்ந்த மற்றும் மீள் குடியேற்றல் தொடர்பான பிரச்சினைகள் ஆகிய காரணங்களினால் எதிர்பார்க்கப்பட்ட தினங்களில் முடிக்கப்பட்டிருக்கவில்லை. இதனடிப்படையில் 2017 மற்றும் 2018 வருடங்களில் ரூபா. 3,630.41 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த 04 நகர நீர் வினியோகத் திட்டங்கள் 2020 மே 31 ஆம் திகதியன்று 150 நாட்கள் தொடக்கம் 481 நாட்கள் வரை கால தாமதமாகியிருந்தன. மேலும் 2017 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை கேகாலை, பதுளை, நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 776.6 மில்லியன் பெறுமதியான 06 புனர்வாழ்வுத் திட்டங்களும் 07 கிராமிய நீர் வினியோகத் திட்டங்களும், 2020 மார்ச் 30 ஆம் திகதியன்று 83 நாட்கள் தொடக்கம் 320 நாட்கள் வரை கால தாமதமாகியிருந்தன. அவ்வாறு கால தாமதமாகிய திட்டங்களுக்காக அவ்வப்போது கால நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்த அதேவேளை நிலைய கணக்காய்வுப் பரிசோதனையின் அடிப்படையில் 10 நீர் வினியோகத் திட்டங்களுக்காக 01 தொடக்கம் 06 சந்தர்ப்பங்களில் கால எல்லை நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், கிராமிய சுகாதார வசதிகளின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் 25,420 மலசலகூடங்கள் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும், 13,908 மலசலகூடங்கள் மாத்திரம் அமைக்கப்பட்டிருந்ததுடன், நிறுவன ரீதியான சுகாதார வசதிகளை வழங்கும் 31 திட்டங்கள் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கான 491 சுகாதார வசதி அலகுகளை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதியில் அவ்வாறான ஒரு அலகாவது அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### பெரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முதலீட்டு அபிவிருத்தித் திட்டம் ( செயற்திட்டம் I மற்றும் ii)

2013 செப்டம்பர் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த திட்டம் i இன் வேலைகளை 2016 டிசம்பர் 31 ஆம் திகதி அளவில் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர்களின் பலவீனமான செயலாற்றல் காரணமாக 2020 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இரண்டு சந்தர்ப்பங்களில் கால நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியில் அதன் பௌதிக முன்னேற்றம் 75.22 வீதமாக மாத்திரமே காணப்பட்டது. திட்டம் ii இன் வேலைகளும் 2019 ஜூன் 30 ஆம் திகதியாகும் பொழுது நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும் அதன் ஒப்பந்தக்காலம் 2022 ஒக்டோபர் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியில் திட்டத்தின் முன்னேற்றம் 46.65 வீதமாக மாத்திரமே காணப்பட்டது.

### பாரிய கொழும்பு புனரமைப்பு நீர் செயற்திட்டம்

2012 ஜனவரி மாதம் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த திட்டத்தின் செயற்பாடுகள் ஒப்பந்தக்காரரின் பலவீனமான செயலாற்றல் காரணமாக 2017 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2015 ஜூன் 20ஆம் திகதியாகும் பொழுது திட்டத்துடன் தொடர்பான கடன் ஒப்பந்தம் முடிவடைந்திருந்ததன் காரணமாக ஒப்பந்தத்துடன் தொடர்பான எஞ்சிய வேலைகளை முடிப்பதற்காக 2015ஆம் ஆண்டில் ரூபா. 346.59 மில்லியன் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் பூர்வாங்க அனுமதியின்றி ஒப்பந்தக்காரரின் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

ஆரம்ப வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 02 காரியாலயக் கட்டடங்கள் ரூபா. 180.41 மில்லியன் செலவில் கொலன்னாவை மற்றும் மாளிகாகந்தை ஆகிய பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. வரி ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடாது 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இடத்திற்கான வீத வரி வாடகையாக ரூபா. 5.17 மில்லியன் கொலன்னாவை மாவட்ட செயலாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டிலிருந்து அக் கட்டடங்கள் கொழும்பு மாநகர சபை ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

கோடிகாவத்தை, முல்லேரியா ஆகிய பிரதேசங்களில் நீர் வினியோகத்தினை முன்னேற்றுவதற்காக ரூபா. 258.1 மில்லியன்

செலவில் அம்பத்தலையில் ஒரு நீர் பம்பு நிலையத்தையும் கொத்தட்டுவையில் நிலக்கீழ் நீர்த்தேக்கமொன்றையும் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவை நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

**கொழும்பு மாவட்ட கிழக்கு நகரத்திற்கான நீர் வினியோகத் திட்டம் - பக்கேஜ் இல.01 மற்றும் 03**

அளவீட்டுப் பத்திரத்திற்கமைவாக தற்காலிக புனர் நிர்மாணங்களின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ள முடிவது பாதைகளில் மோட்டார் வாகன போக்குவரத்து பகுதியில் ஏற்படுத்தப்படுகின்ற பழுதுகளுக்கு மாத்திரமாக இருந்த போதும், மோட்டார் வாகன போக்குவரத்து பகுதிக்கு வெளியே பாதையை பழுதாக்கி நீர்க்குழாய் பொருத்தப்பட்ட பிரதேச சபை பாதை நியதியொன்றை பரிசோதனை செய்த போது, வெளியிலிருந்து மண் கொண்டுவரப்படாது அவ்விடத்தில் தோண்டப்பட்ட மண்ணைப் பயன்படுத்தி மீண்டும் நிரப்பப்பட்ட போதும், அதற்காக தற்காலிக புனர் நிர்மாணத்தின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனடிப்படையில் கொழும்பு மாவட்ட கிழக்கு நகரத்திற்கான நீர் வினியோகத் திட்டத்தின் பக்கேஜ் இல.01 இல் தற்காலிக புனர் நிர்மாணத்திற்காக 82,448 மீற்றருக்காக ரூபா. 225.7 மில்லியனும் பக்கேஜ் இல. 03 இல் தற்காலிக புனர் நிர்மாணத்திற்காக 184,740 மீற்றருக்காக ரூபா. 506.4 மில்லியனுமாக மொத்தம் ரூபா. 732.1 மில்லியன் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

பக்கேஜ் இல. 03 இற்காக சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட 10,000 நீர் மாணிகள் 2018ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அம் மாணிகளின் பொதுவான சந்தை விலை மற்றும் நீர் வினியோக சபையின் வருடாந்த விலை மதிப்பீட்டு ஆவணங்களின் விலைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா. 79.78 மில்லியன் கூடுதலாகச் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

நீர் மாணிகளுடன் சேர்த்து அதன் ஒரு அங்கமாக Brass union பகுதிகள் நீர் மாணி பொதியுடன் வினியோகிக்கப்படுகின்ற அதேவேளை பக்கேஜ் இல.01 இற்காக Brass union வேறொரு அளவீட்டுப் பத்திரத்தில் உள்ளடக்கி கொள்வனவு செய்யப்பட்டமை காரணமாக ரூபா. 2.61 மில்லியனும், பக்கேஜ் இல. 03 இல் தொகை A மற்றும் B ஆகியவற்றிற்காக 20,000 Brass union கொள்வனவு செய்வதற்காக ரூபா. 22.70 மில்லியன் புறம்பாக செலுத்தப்பட்டிருந்தது.

**கிரிதர நீர் விநியோகத் திட்டம்**

திட்ட செயற்பாடுகள் 2020 பெப்ரவரி 14ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த போதும், ஒப்பந்தக்காரரின் பலவீனமான நிதி செயலாற்றல் காரணமாகவும் போதிய தொழிலாளர்கள் மற்றும் உபகரணங்களை பிரயோகிப்பதற்குத் தவறியமை காரணமாகவும் திட்டக் கால எல்லை 2020 நவம்பர் 04 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2020 ஜுலை 31 ஆம் திகதி திட்டத்தின் பௌதிக முன்னேற்றம் 31 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது.

ஒப்பந்தமானது பொறியிலாளர் மதிப்பீட்டினை விட 29.71 வீதம் குறைந்த விலைக்கு வழங்கப்பட்டிருந்த போதும், அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.9.11(அ) வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தக் காரரினால் மீளாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கலடுவாவை நீர் வினியோகத் திட்டத்திலிருந்து நீரைப் பெற்றுக்கொள்ளும் போது வெளிப்படும் இடமாக ஹங்வெல்ல பாலம் இனங்காணப்பட்டிருந்த போதும், பாலத்திற்குக் குறுக்கே நீர்க் குழாய்களைப் பொருத்துவதற்கான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி 2020 ஜனவரி 16ஆம் திகதி வரை பெறப்பட்டிருக்கவில்லை.

குறித்த ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தத்தை கையளிக்கின்ற சந்தர்ப்பத்திலும் அவரால் பொலன்னறுவை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற 02 ஒப்பந்தங்களும், மெதிரிகிரிய மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு ஒப்பந்தமும் எதிர்பார்த்த கால எல்லையினுள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக கவனம் செலுத்தப்படாது இவ்வொப்பந்தமும் அவருக்கே கையளிக்கப்பட்டிருந்தது.

நீர் வழங்கல்

வீடமைப்பு மற்றும் நிர்மாணம்

# வீடமைப்பு மற்றும் நிர்மாணம்

சகல பிரசைகளுக்கும் நல்ல வாழ்க்கை நிலைமையொன்றை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு சகல குடும்பங்களுக்காகவும் வீட்டு வசதிகளை வழங்குதல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கும் பெறுபேறாக காணப்பட்டதுடன், அப்பெறுபேறுகளை அடைந்துக்கொள்வதற்காக வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, 02 திணைக்களங்கள் மற்றும் 8 நியதிச்சட்ட சபைகளினால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- அரசாங்க உத்தியோகப்பூர்வ விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்கான நியமங்களையும் தராதரங்களையும் விதித்துரைத்தல்
- குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் விசேட பிரசைக் குழுக்கள் உள்ளடங்கலாக பொதுமக்களின் வீடமைப்புத் தேவையை பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திட்டங்களையும் வீடமைப்பு நிதிசார் திட்டங்களையும் செயற்படுத்தல்.
- சூழலுக்கு நேயமிக்க விதத்தில் செலவுக்கேற்ற நன்மையளிக்கும் வீடமைப்பு தொழில்நுட்ப முறைகள் பற்றிய கிராமிய மக்களுக்கு வழிக்காட்டல்.
- பிரதானமாக அரச நிறுவனங்களுக்கு எந்திர பொறியியல் சேவைகளை வழங்குதல்.
- தொடர்புடைய சட்ட திட்டங்கள் மற்றும் தரவளவுகளுக்கு ஏற்றதாக கட்டுமானக் கைத்தொழில் துறையின் பணிகளை ஒழுங்குப்படுத்துதலும், பதிவு செய்தலும், விதிமுறைப்படுத்தலும், தரப்படுத்தலும்.
- நிர்மாண கைத்தொழிலுக்கான ஆலோசனை மற்றும் ஒழுங்குறுத்துகை சேவைகளையும் வழங்கல் மற்றும் கட்டுமான உபகரணங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான பயிற்சி அளித்தலும்.
- கூட்டாதான சொத்து முகாமையும் ஒழுங்குறுத்துகை பணிகளும்.
- பொதுசன கூட்டாதன மறுசீரமைப்பு செய்தல் மற்றும் வினைத்திறனுடனும் துரிதமாகவும் வீடுகளின் உரிமை மாற்றல் செய்தல்.

மேற்கூறப்பட்ட பணிகளை நிறைவேற்று வதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ரூபா 34,497.74 மில்லியன் ஆன நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 31,815.95 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காலப்பகுதிக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 0.78 சதவீதம், அதாவது ரூபா 2,681.79 மில்லியன் ஆன நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் உரு 44 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.




உரு 44 - பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் மற்றும் பயன்பாடு
மூலம் - திரைச்சேறியின் இறுதி கணக்கறிக்கை.

மேற் கூறப்பட்ட பணிகள் நிறைவேற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வீடமைப்பு நிர்மாண செயற்திட்டம்

இந்த வேலைத் திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 10 வீடமைப்பு திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் செயற்திட்டத்திற்காக ரூபா 7,500 மில்லியன் ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருப்பினும், அதில் ரூபா 5,530 மில்லியன் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 74 சதவீதம் ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் 25,050 வீடுகள் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருப்பினும் ஆண்டு இறுதியில் அந்த இலக்கில் 35 சதவீதம் ஆன, அதாவது 8,908 வீடுகள் மட்டும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

### அரை ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் நிறைவு செய்யும் வீடமைப்பு செயற்திட்டம்

03 வீடமைப்பு திட்டங்களின் கீழ் இந்த வீடமைப்பு செயற்திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் வீட்டு நிர்மாண பணிகளுக்காக ரூபா 1,000 மில்லியன் ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருப்பினும், அதில் ரூபா 839 மில்லியன் ஆன , அதாவது 84 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 17,367 வீடுகள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருப்பினும், ஆண்டு இறுதியில் அந்த இலக்கில் 69 சதவீதமான, அதாவது 11,973 வீடுகள் மட்டும் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

### பழைய வீடுகள் பழுதுபார்த்தல் தொடர்பான வீட்டு செயற்திட்டம்

இந்த வீட்டு வேலைத் திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 23 வீடமைப்பு திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 200 மில்லியன் ஆன நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருப்பினும் அதில் ரூபா 9 மில்லியன் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதி முன்னேற்றம் 4.5 சதவீதம் ஆக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டில் 4,992 வீடுகள் பழுதுபார்ப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருப்பினும், மீளாய்வாண்டு இறுதியில் அந்த இலக்கில் 33 சதவீதம் ஆன பௌதீக முன்னேற்றம் மட்டுமே பெற்றிருந்தது.

### கிராம பிரதேசங்களில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

இந்த செயற்திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 1,250 மில்லியன் ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 54 சதவீதமான, அதாவது ரூபா 670 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பௌதீக முன்னேற்றம் 59 சதவீதமாக காணப்பட்டது.

### கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்கான இழப்பீடு

2019 ஆம் ஆண்டு ஆரம்பத்தின் போது 64 ஆன தனிப்பட்ட காணிகளில் அமைச்சின் கீழ் வீடமைப்பு திட்டத்தினூடாக வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இவை காணிகள் கையகப்படுத்தல் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்கப்பட்டு கையகப்படுத்த வேண்டியிருந்தது. மீளாய்வாண்டில் அந்த காணிகள் கையகப்டுத்துவதற்கு ரூபா 100 மில்லியன் ஆன நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருப்பினும், அதில் ரூபா 27 மில்லியன் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் கையகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 26 காணிகளில் 08 காணிகளுக்கு மட்டும் இழப்பீடு வழங்கப்பட்டு கையகப்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் 31 சதவீத ஆன பௌதீக முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது.

# நகர அபிவிருத்தி

மேல் மாகாண வலயம் மற்றும் ஏனைய மாநகர பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியில் அபிவிருத்தியடைந்த சமுதாயமொன்றை உள்ளடக்கிய அதி நவீன கட்டிட கலையுள்ள நகராக வடிவமைத்தல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளாக இருந்தது. அந்த பிரதிபலனை அடைந்துகொள்வதற்கா மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழான இரு திணைக்களங்களும் நியமிச்சட்ட நிறுவனங்கள் 02 இனாலும், துறைமுகங்கள் மற்றும் கடற்படை பணிகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு, விசேட பிரதேச அபிவிருத்திக்கான அமைச்சரவை அல்லாத அமைச்சு மற்றும் புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சினால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது.

- மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி விடயங்களுக்குரிய நீதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- நகர பிரதேசங்களின் பொருளாதார, சமூக மற்றும் பௌதீக அபிவிருத்தியினை ஒருங்கிணைத்து முறையாக மேம்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு பணிகள்
- தொழில்நுட்ப அபிவிருத்தி நகர செயற்திட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள்
- மேல்மாகாண மாநகர திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள்
- நகர திண்மக் கழிவு முகாமைத்துவம்
- தாழ்நிலங்களை மீட்டுதல் மற்றும் அபிவிருத்திற்குரிய பணிகள்
- நகர பிரதேசங்களில் அமைந்துள்ள சேவை மற்றும் வசதிகள் குறைவான பிரதேசங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் ஆகியவற்றை பொது திட்டமொன்றின் பிரகாரம் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான வழிகாட்டல்கள்
- தேசிய பௌதீக திட்டங்கள் மற்றும் பிரதேச பௌதீக திட்டங்களை தயாரித்தல்.
- ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தியினை சான்றுபடுத்துவதற்காக தேசிய பௌதீக திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட அனைத்து நிர்மாண பணிகளையும் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை
- கைத்தொழில் மேம்படுத்தல் உள்ளடங்கலான தெற்கு பொருளாதார வலயத்தினை பலப்படுத்துதல் மற்றும் அதற்காக பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினை இணைப்புச் செய்தல்.
- அம்பாந்தோட்டை பொருளாதார வலயம், தெற்கு சுற்றுலா அபிவிருத்தி வலயம், அம்பாந்தோட்டை விமான, கடற்படை அணியினை வழங்கும் நிலையம் உள்ளடங்கலான தெற்கு மாகாணத்தினுள் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- அம்பாந்தோட்டை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையினை தாபித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள்
- அமைச்சரவையினால் இனங்காணப்பட்ட மலைநாட்டு விசேட பிரதேசங்களின் சமூக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு உரிய கொள்கைகளை தயாரித்தல், அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- வடமேல் மாகாணத்தினுள் பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களின் இணைப்பு மற்றும் கொள்கைகளை இணைப்புச் செய்வதற்கான செயலகத்தை தாபித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் ரூபா 168,038.10 மில்லியனான நிதியேற்பாடுகள்

மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 111,547.07 மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய காலப்பகுதிக்குரியதாக பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 33.62 சதவீதம் அல்லது ரூபா 56,491.03 மில்லியனான நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் உரு 45 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 45 – பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் பய்னபாடு
மூலம் - பொது திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கைகள்

மேற்குறிப்பிடப்பட்ட செயற்பணியினை நிறைவேற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

### மேல்மாகாண வலயத்தின் இலகு புகையிரத கட்டமைப்பு செயற்திட்டம்

கொழும்பு நகரின் பிரதான வீதிகளில் நிலவும் அதிக வாகன நெரிசல் நெரிசலுக்கு நீண்டகாலத் தீர்வொன்றாக மற்றும் செயற்திறனான பொதுப் போக்குவரத்து முறைமையொன்றின் தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு அதிவேக போக்குவரத்து கட்டமைப்பொன்றினுள் தூண்களின் அடிப்படையில் மேலே ஓடக்கூடிய இலகு புகையிரத கட்டமைப்பு வலையமைப்பொன்றினை தாபித்தல் இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகவதுடன் அதற்காக யப்பானின் நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான இலக்கிடப்பட்ட காணிகளை சுவீகரித்தல், சுற்றாடல் செயற்பாடுகள், பயன்பாட்டு விலகல்கள், பாராளுமன்ற சட்டமொன்றினை அங்கீகரித்துக் கொள்ளல், சமூக செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் பராமரிப்பதற்கான நிறுவனமொன்றினை தாபித்தல், செயற்திட்ட முகாமைத்துவ அலகொன்றினை நடைமுறைப்படுத்துதல், செயற்திட்டத்தினை திட்டமிடுதல், நிர்மாணத்தின் மேற்பார்வைக்காக பெறுகைகள் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளுதல் ஆகிய பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் இந்த செயற்திட்டத்திற்காக JICA நிதிகளிலிருந்து ரூபா 1,791 மில்லியனும் பொதுத்திறைசேரியின் நிதிகளிலிருந்து ரூபா 571 மில்லியனுமாக ரூபா 2,364 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த செயற்திட்டத்தினை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையினால் அதற்கான மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினங்கள் விளைவற்றதாக இருந்தது.

### பாரிய கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டம் - நகர அபிவிருத்தி அலகு (3K செயற்திட்டம்)

கொழும்பு நகரின் அதிக வாகன நெரிசலுக்கு தீர்வொன்றினை வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டமாவதுடன் 2007 ஆம் ஆண்டு ஜப்பான் சர்வதேச வங்கி (JICA) மற்றும் இலங்கை அரசு ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட முழுமையான கடன் ஒப்பந்தமொன்றின் பிரகாரம் இந்த செயற்திட்டத்திற்கு நிதியளிக்கப்பட்டவாறு காணப்படுவதுடன், 2015 மே மாதத்தின் போது செயற்திட்டத்தினை பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதுவரையிலும்

JICA நிறுவனத்தினால் வழங்குவதற்கு இணங்கியிருந்த மொத்த பணத்தினை பயன்படுத்தியிருந்தது. அதன் பிரகாரம் 2015 மே மாதத்திற்கு பின்னர் மொத்தமாக திறைசேரியின் நிதியினை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் செயற்திட்டமொன்றாக இந்த செயற்திட்டம் காணப்பட்டது. செயற்திட்டத்தின் நலிவான செயற்பாட்டின் அடிப்படையில் தொடர்ந்தும் அதனை நிறைவு செய்வதற்குரிய காலத்தினை நீடிப்புச் செய்யப்பட்டு தொடர்ந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அந்த காலப்பகுதிக்குரிய நிர்வாக மற்றும் மேவுகை செலவினங்களாக சராசரியாக மாதமொன்றிற்கு ரூபா 2 மில்லியனுக்கு அதிகமான தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தினை உரிய காலப்பகுதியில் நிறைவேற்றிக்கொள்ளாமையினால் கடந்த 4½ வருட காலத்தினுள் திறைசேரியின் நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 110 மில்லியனுக்கு அதிகமான தொகை செயற்திட்டத்தின் நிர்வாக மற்றும் மேவுகை பணிகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 700 மில்லியனான நிதியேற்பாட்டில் ரூபா 596.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அதன் நிதி செயன்முன்னேற்றம் 81 சதவீதமாக இருந்தது. இந்த செயற்திட்டத்தின் 2019 ஆம் ஆண்டிற்காக இலக்கிடப்பட்ட மாகம்புற பல்லூடக நிலையத்தின் மேலதிக பணிகள் பல்லூடாக நிலையத்திற்கான வசதிகளை வழங்குதல் MMC இன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், சூரிய வலு கட்டமைப்பொன்றினை பொருத்துதல், O&M கட்டிடத்தினை நிர்மாணித்தல், உபகரணங்களை கொள்வனவு செய்தல், MMC இற்காக பராமரிப்பு திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றிற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதியுரை சேவைகளை வழங்குதல் மற்றும் கண்காணிப்பு போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து கட்டமைப்பினை பராமரித்தல் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட பணிப்பொறுப்புக்கள் மாத்திரம் நிறைவேற்றுவதற்கு உரியதாக இருந்ததுடன் அவற்றின் பௌதீக செயன்முன்னேற்றம் 9 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

### மூலோபாய நகர அபிவிருத்தி செயற்திட்டம்

### அனுராதபுரம்

அனுராதபுர நகரத்தின் புனித பிரதேசத்தினை மற்றும் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களிடையே சமமான அபிவிருத்தியொன்றினை பேணுதல் மற்றும் அதன் கலாச்சாரம் மற்றும் இயற்கை உரித்துக்களை பாதுகாத்தவாறு நகரத்தின் கவர்ச்சியான பிரதேசங்களை பாதுகாக்கும் நோக்கில் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் 2019 ஆம் ஆண்டிற்குரிய இலக்கிடப்பட்ட வேலைத்தளங்களினை அளப்பதற்கு மற்றும் அதனை தீர்ப்பதற்கு உரிய இலக்கு (Site Clearing & Land Survey) செயன்முன்னேற்றம் 1 சதவீதமாக இருந்தது. 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 600 மில்லியனான நிதியேற்பாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 9.8 சதவீதம் அல்லது 58.80 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாநகரசபை அதிகாரப் பிரதேசத்தினுள் பொது வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் இலக்கிடப்பட்ட AB 31 வீதியினை புனரமைக்கும் பணியின் செயன்முன்னேற்றம் 62 சதவீதமாக இருந்தது. 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 970 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 97 சதவீதம் அல்லது ரூபா 940.45 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் இறுதியளவில் மூலோபாய நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக உலக வங்கியின் நிதிகளிலிருந்து ரூபா 9,013 மில்லியன் மற்றும் திறைசேரி நிதிகளிலிருந்து ரூபா 2,799 மில்லியனுமாக ரூபா 11,812 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

### பாரிய கொழும்பு திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்திட்டம்

மீதொட்டுமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்ததுடன் இலங்கை அரசினால் திண்மக் கழிவினை நிலைபேறான வகையில் முகாமை செய்வதல் தேசிய மட்டத்தில் முன்னுரிமை பணியாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்காக அரசினால் உலக வங்கியின் உதவி

கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உலக வங்கி ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் முதலீட்டு வங்கி (AIIB) ஆகியவை இணைந்து இந்த அவசர நிலைமைக்காக அரசிற்கு உதவி வழங்குவதற்கு இணக்கப்பாட்டினை வெளியிட்டிருந்தது. செயற்திட்ட முகாமைத்துவ அலகொன்றினை மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சில் தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் கழிவு முகாமைத்துவ அலகொன்றினை தாபிக்கும் அடிப்படை பணிகளுக்காக AIIB மூலம் ஐக்கிய அ.டொலர் 700,000 ஆன நிதி உதவியினை வழங்குவதற்கான இணக்கப்பாடு வெளியிடப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ஐக்கிய அமெரிக்க டொலர் 200,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும் அறுவைக்காடு குப்பை நிலையத்தினை நிர்மாணிப்பதற்கு முன்னர் உலக வங்கியின் பரிந்துரைகள் பின்பற்றப்பட வேண்டிய செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு முடியாது போனமையினால் இலங்கை அரசிற்கு உலக வங்கியின் நிதியினை வழங்குவதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் எஞ்சிய அனைத்து செலவினங்களும் இலங்கை அரசின் நிதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பாரிய கொழும்பு திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டிற்காக அமைச்சின் செலவினத் தலைப்பிலிருந்து ரூபா 10,568 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 8,585.75 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதி செயன்முன்னேற்றம் 81 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஒட்டு மொத்த செலவினம் ரூபா 12,228.75 மில்லியனாக இருந்தது. இந்த செயற்திட்டம் 04 கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அந்த ஒவ்வொரு கட்டத்தினதும் செயன்முன்னேற்றம் பின்வருமாறனாதாகும்.

**கட்டம் A – களணி மற்றும் அறுவைக்காடு கழிவு பரிமாற்றல் நிலையத்தினை நிர்மாணித்தல்**

களணி கழிவு பரிமாற்ற நிலையத்தினை நிர்மாணிக்கும் பணிகள் 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டத்தின் 29 சதவீதம் ஆன அளவு மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அறுவைக்காடு கழிவு பரிமாற்று நிலையத்தினை நிர்மாணிக்கும் பணிகளும் 30 சதவீத அளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

**கட்டம் B - அறுவக்காலு சுகாதார முறையில் பாதுகாப்பான கழிவினை சேகரிக்கும் நிலையத்தினை நிர்மாணித்தல்**

அமைச்சினால் இந்த பணியினை நிறைவேற்றுவதற்கான சீன கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்பில் சுமார் 80 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த கழிவு சேகரிப்பு நிலையத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்ட பகுதிக்கு குப்பைகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் குப்பைகளை அகற்றும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

**கட்டம் C – புகையிரத வீதி இணைப்பினை மேம்படுத்துதல்**

பலாவி முதல் அறுவக்காலு வரையான புகையிரத வீதி இணைப்பினை மேம்படுத்தும் திட்டத்தினை தயாரிக்கும் பணிகள் 2019 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட வேண்டியதாக இருந்த போதிலும், அதன் மதியுரைப் பணிகள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தது.

**கட்டம் D – 4 புகையிரத என்ஜின் அலகுகள், 34 கழிவு கொள்கலன்கள் மற்றும் 94 கொள்கலன் பெட்டிகளை கொள்வனவு செய்தல்**

2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஐ.அ.டொலர் 8,271,224 பெறுமதியான 4 புகையிரத என்ஜின் அலகுகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. எனினும் அதன் இறுதிக்கொடுப்பனவு பணிகளை மேற்கொள்ள உரிய பரிந்துரைகள் புகையிரத திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அதன் இறுதி பற்றுச்சீட்டினை செலுத்துதல் தாமதமடைந்திருந்தது. 34 கழிவுக் கொள்கலன்கள் ஐ.அ.டொலர் 2,373,200 இற்கு கொள்வனவு செய்வதற்கு உரிய ஒப்பந்தம் தாமதிக்கப்பட்டு 2019 ஒக்தோபர் 21 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித

செயன்முன்னேற்றமும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. 94 கொள்கலன் பெட்டிகள் ஐ.அ.டொலர் 844,854.23 ஆன ஒப்பந்தப் பெறுமதிக்கு கொள்வனவு செய்யும் பணிக்காக 2019 ஆகஸ்ட் 23 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் பணிகளில் எவ்வித செயன்முன்னேற்றமும் அடையப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறெனினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் 82 சதவீதமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 75 சதவீதமாக இருந்தது.

நகர மற்றும் ஏனைய கழிவு முகாமைத்துவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் நகரங்களில் பாதகமான தனிநபர் சுற்றாடல் தாக்கங்களை குறைத்துக் கொள்ளுதல் இந்த செயற்திட்டத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்காகும். எனினும், அந்த செயற்திட்டத்தின் பணிகளினை நிறைவேற்றுவதில் மந்தமான செயற்பாடுகள் காரணமாக இந்த இலக்குகளை அடைய முடியாதிருந்தது.

### துறைமுக நகர அபிவிருத்தி செயற்திட்டம்

தெற்காசிய வலயத்தில் வாழ்வதற்கு, பணியாற்றுவதற்கு மற்றும் செயற்படுவதற்கு பொருத்தமான சூழ்நிலையொன்றுடனான மிகவும் கவர்ச்சியான நகரமாக கொழும்பு நகரத்தினை நிர்மாணிக்கும் நோக்கில் 269 ஹெக்டயர் சமுத்திர பூமியின் அளவினை மீட்டி கொழும்பு துறைமுக நகரினை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. துறைமுக நகர எல்லை வரையிலும் மணலை நிரப்பும் பணிகள் 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 43 சதவீதமான அளவு நிறைவு செய்யப்பட்டிருந்தது. அத்திகதியளவில் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றம் 74 சதவீதம் நிறைவு செய்வதற்கு இலக்கிடப்பட்ட போதிலும், அதன் செயன்முன்னேற்றம் 67 சதவீதமாக இருந்தது. 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 400 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 52 சதவீதம் அல்லது ரூபா 229 மில்லியனான நிதி செயன்முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது.

### கொழும்பு நகரை அண்மிய நகர அபிவிருத்தி செயற்திட்டம்

நீர்நிலைகளால் போஷிக்கப்படும் பிரதேசங்களில் வெள்ளமேற்படுதை குறைத்து, கொழும்பு தலைநகரை அண்மிய பிரதேசங்களில் உள்ளூராட்சி நிறுவனங்களில் இயலளவினை வலுப்படுத்துதல், கொழும்பு நகரினை அலங்கரித்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த இலக்கிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 9,197 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அவற்றுள் ரூபா 8,676 மில்லியன் அல்லது 94 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த செயன்முன்னேற்றம் அட்டவணை 46 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| நிறைவேற்றப்படும் பணிப்பொறுப்புக்கள் | உள்ளபடியான செயன்முன்னேற்றம் இலக்கிடப்பட்ட செயன்முன்னேற்றத்தின் சதவீதமாக |
|---|---|
| தேவிபாலிகா கல்லூரிச் சந்தியின் அருகில் உள்ள வடிகால் கட்டமைப்பினை மேம்படுத்துதல் | 7 |
| நோரிஸ் கால்வாயினை மேம்படுத்துதல் | 49 |
| முத்துராஜவல மற்றும் டொறிங்டன் நீர் செல்லும் சுரங்கவழி திட்டமிடல் மற்றும் கட்டியெழும்புதல் | 0 |
| அம்பத்தலை நீரேற்று நிலையத்தினை மேம்படுத்துதல் | 50 |
| புனித செபஸ்டியன் நீரேற்று நிலையத்தினை மேம்படுத்துதல் | 38 |
| புனித செபஸ்டியன் நீரேற்று நிலையத்தின் வடக்கு வீதி (North Log Gate) திட்டமிடல் மற்றும் கட்டியெழுப்புதல் | 60 |

| | |
|---|---|
| கோட்டே கொடுபம்பன ஈர வலய பூங்காவினை அபிவிருத்தி செய்தல் | 36 |
| Establishment of Real Time Control System | 38 |
| தலங்கம குளத்தின் வான்கதவுடன் கூடிய சுரங்கத்தினை நிர்மாணித்தல் மற்றும் பௌத்தாலோக மாவத்த வான்கதவினை நிர்மாணித்தல் | 56 |

அட்டவணை 46 – கொழும்பு தலைநகரை அண்மிய நகரங்களின் அபிவிருத்தி செயற்திட்டத்தின் இலக்கிடப்பட்ட செயன்முன்னேற்றம்
மூலம் - மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயன்முன்னேற்ற அறிக்கை 2019

அந்த செயற்திட்டத்தின் கீழேயான 04 உப செயற்திட்டங்களின் இலக்கிடப்பட்ட செயன் முன்னேற்றமொன்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந்த உப செயற்செயற்திட்டங்கள் நடைமுறைப்ப டுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் போது செயன்முன்னேற்றமொன்று அடையப் பெற்றிருக்கவில்லை.

### நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இலக்கிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றாமை

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நகர அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக அறிவிக்கப்படும் பிரதேசங்களில் பொருளாதார, சமூக மற்றும் பௌதீக ரீதியான அபிவிருத்திக்காக ஒருங்கிணைந்த திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல், நகர அபிவிரத்தி அதிகாரசபையின் பிரதான நோக்கமாகும். அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட இலக்கிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,584.54 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிதியேற்பாட்டில் 61 சதவீதமான ரூபா 1,009 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் இலக்கிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பிலான செயன்முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

- பொரலஸ்கமுவ குளத்தினை அண்மிய பிரதேசங்களினை அபிவிருத்தி செய்யும் கட்டம் IV இற்காக ரூபா 40 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறே முல்லைத்தீவு டவுன் சென்டர் - உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பாராளுமன்ற விளையா ட்டுத் திடல் - உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கலிடோ கடற்கரை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்ப டுத்துதல் ஆகிய பணிகளில் எவ்வித செயன்முன்னேற்றமும் அடையப் பெற்றிருக்கவில்லை.

- நாவல நகர சதுக்கம் மற்றும் தொடர்பாடல் நிலையத்தினை நிர்மாணித்தல் நிறைவு செய்யும் பணியின் செயன்முன்னேற்றம் 45 சதவீதமும் பொரலஸ்கமுவ குளத்தை அண்மிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கட்டம் II நிறைவேற்றும் செயன்முன்னேற்றம் 20 சதவீதமுமம, சாலாவ – கொஸ்கமுவ நகர அபிவிருத்தி செயற்திட்டம் - கட்டம் நிறைவேற்றும் செயன்முன்னேற்றம் 20 சதவீதமாகவும் குறைவான செயன்முன்னேற்றம் வெளிப்படுத்தப்பட்டது.

### மனிங் பொதுச்சந்தையினை பேலியகொடையில் மீள்நிறுவுதல்

2019 ஆம் ஆண்டிற்காக பேலியகொட மனிங் சந்தைத் தொகுதி கட்டிடத்தின் வியூகம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யும் இலக்கிடப்பட்ட பணிக்காக ரூபா 1,500 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 1,263.87 மில்லியன் அல்லது 84 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இலக்கிடப்பட்ட பணி நிறைவு செய்வதற்கு முடியாது (Work in Progress) ஆக இருந்தது.

### பொதுப்போக்குவரத்து சேவைகளை மேம்படுத்துவதற்காக பேருந்து சேவையினை முன்னேற்றுதல்

பொதுப் போக்குவரத்தினை வியாபிப்பதன் மூலம் அனைவருக்கும் பாதுகாப்பான, தாங்கக்கூடிய விலையில் பெற்றுக்

கொள்ளக்கூடிய வகையில், இலகுவில் அடையக்கூடிய மற்றும் நிலைப்பேறான போக்குவரத்துக் கட்டமைப்பொன்றிற்கு பிரவேசிப்பதற்கு சந்தர்ப்பத்தினை பெற்றுக்கொடுத்தல் மற்றும் வீதிப் பாதுகாப்பினை மேம்படுத்தும் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது அதன் செயலாற்றல் பின்வருமாறாகும்.

- பேருந்து போக்குவரத்து நிரலினை நடைமுறைப்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 800 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 571.14 மில்லியன் அல்லது 71 சதவீதமான நிதி செயலாற்றல் காண்பிக்கப்பட்டிருந்தது.

- பொதுப் போக்குவரத்து சேவையின் ஓட்டக்காலத்தை குறைக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் 2019 ஆம் ஆண்டின் போது கொழும்பு மற்றும் அதனை அண்மிய பிரதேசங்களினுள் பேருந்து போக்குவரத்து நிரல் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தும் இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அவற்றுள் 40 கிலோமீற்றரான ஓட்ட நிரல் மாத்திரம் நடைமுறைப்படுத்த இயலுமானதாக இருந்தது.
- கடவத்த பல்லூடக போக்குவரத்து நிலையத்தினை நிர்மாணித்தல் - கட்டம் 2 இனை நிறைவு செய்வதற்காக ரூபா 172.77 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்குரிய நிர்மாண ஒப்பந்தம் கையளிக்கும் பணிகள் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

- பொல்துவ கிளை வீதியினை நிர்மாணிக்கும் கட்டம் III இற்காக ரூபா 445.72 மில்லியனான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்ய முடியாதிருந்தது.

**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகர அபிவிருத்தி செயற்திட்டம்**

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ், மாலபே, ஹோமாகம, கடுவல மற்றும் அத்துருகிரிய ஆகிய நகரங்களினை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் மூன்றாம் நிலைக் கல்வி வலயம், விஞ்ஞான ஆராய்ச்சி அபிவிருத்தி வலயம், தொழில்நுட்ப முயற்சியாண்மை வலயம், நனோ தொழில்நுட்பம், உயிர் பல்வகைமை தொழில்நுட்ப காட்சிகூட வலயம் ஆக 05 வலயங்களுக்கு பிரித்து அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2017 மார்ச் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 01 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சு மற்றும் கொரிய அரசின் காணிகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று 2016 மே 24 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் சாத்தியவள கற்கையொன்று அந்த நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் தொழில்நுட்ப நகர செயற்திட்டத்திற்காக தாபிக்கப்பட்டிருந்த செயற்திட்ட முகாமைத்துவ அலகு பதவியணி சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்களாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 66.21 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது மேலும் ரூபா 48.23 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் மூலம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகரத்தின் பொது வசதிகளை அபிவிருத்தி செய்யும் அடிப்படை நோக்கமாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகர அபிவிருத்தி செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**மேல்மாகாண வலய மாநகர திட்ட செயற்திட்டம்**

மேல் மாகாண வலய மாநகரத் திட்டமிடல் செயற்திட்டம் 2015 மே மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2017 செப்தெம்பர் மாதமளவில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக ரூபா 330.23 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 10.22 மில்லியன் மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 19.45 மில்லியன் செயற்திட்டத்தின் பதவியணிக்கு சம்பளம் மற்றும் படிகள், செயற்பாட்டு செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

அந்த செயற்திட்டம் மேல் மாகாணத்திற்குரிய திட்ட செயற்திட்டம் எனும் புதிய செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டு பழைய செயற்திட்டமே முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது. புதிய செயற்திட்டத்தினை பூர்த்தி செய்யும் காலச்சட்டகம் அல்லது செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய விசேட பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### மேல் மாகாண வலய சமுத்திர நகர அபிவிருத்தி செயற்திட்டம்

நீர்கொழும்பு கடற்கரையிலிருந்து களுத்துறை கலிடோ கடற்கரை வரையிலான கரையோரப் பிரசேதத்தை 03 பகுதிகளாக பிரித்து கொள்ளுப்பிட்டி முதல் தெஹிவளை வரை களியாட்டங்களுக்கான கடற்கரையாகவும் கொழும்பு துறைமுகத்தை அண்மிய செயற்பாடுகளின் அபிவிருத்திக்காக புளுமென்டல் கிபுலா கால்வாய் பிரதேசமும், வெலிசர கடற்பரை தலைமையகம் அமைந்துள்ள பிரதேசம் வழங்கல் மற்றும் சேவைகள் வலையமைப்பினை உருவாக்கும் நோக்கில் விசேட செயற்திட்டமொன்றும் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 47.2 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியவள கற்கையொன்று அல்லது செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஏற்படும் சூழல் தாக்கங்களினை மதிப்பீடு செய்யும் அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளாது செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டினுள் செயற்திட்ட பதவியணியின் சம்பளம் மற்றும் ஏனைய செயற்திட்ட அலுவலக செயற்பாட்டு செலவினங்களுக்காகரூபா 30.01 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### விமான நகர மற்றும் நிர்வாக நகர செயற்திட்டம்

மாநகர மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் விமான நகர செயற்திட்டம் மற்றும் நிர்வாக நகர செயற்திட்டம் ஆகிய இரு செயற்திட்டங்களின் பதவியணியின் சம்பளம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்களுக்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 80.7 மில்லியன் மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 29.13 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அந்த செயற்திட்டம் தொடர்பில் முறையான சாத்தியவள கற்கையொன்று செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதால் சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தினை தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 02 செயற்திட்டங்களின் திட்டமிடப்பட்ட பணிகளை மேற்கொள்வ தற்காக முதலீட்டாளர்கள் கண்டறியப் பட்டிராமையால் அந்த செயற்திட்டங்களும் முழுமையாக திறைசேரியின் நிதியில் தங்கியிருந்தது. திட்டவட்டமான திட்டமொன்று இல்லாது மிகவும் மந்தமான முறையில் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது.

# கலாச்சாரமும் கலைகளும்

நாட்டின் கலாச்சாரத்தை மேம்படுத்து வதன் மூலம் நிலைபேறான சமூக அபிவிருத்தியை உறுதிப்படுத்துதல் இத்துறை யின் குறிக்கோளாகக் காணப்பட்டது. இந்தக் குறிக்கோளை அடைந்து கொள்வதற்காக வீடமைப்பு மற்றும் கலாச்சார அமைச்சின் கீழ் நான்கு திணைக்களங்களும் எட்டு நியதிச்சட்ட நிறுவனங்களும் தொழிற்பட்டிருந்தன. அவற்றினால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- இலங்கையின் தேசிய கலை மற்றும் கலாச்சார நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல்
- தேசிய சின்னங்களை பாதுகாத்தல், நடாத்திச் செல்லல் மற்றும் பாவனை க்கு எடுத்தல் என்பன மன்றத்தின் பிரதான நோக்கங்களாகும்.
- வெளிநாடுகளுடன் கரலாச்சார தொடர்பகளை பேணுதல்
- இனங்களிடையே நல்லுறவை வளர்த்தல்
- அரசாங்க ஆவணங்களை பாதுகாத் துப் பேணுதல்

அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மீளாய்வாண்டு மற்றும் கடந்தி 2 ஆண்டுகளிற்காக ரூபா 22,681.88 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் மொத்தமாக ரூபா 18,046.58 மில்லியன் உபயோகிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் 20.44 சதவீதமான ரூபா 4,635.30 உபயோகிக்கப்படாது இருந்தது. விபரம் உரு 47 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 47 – பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் பயன்பாடு
மூலம் - பொது திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கைகள்

மேற்படி பணிகளை நிறைவேற்றுவது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

### வாடகையினை அறவிடுதல்

1980 ஒக்தோபர் 08 ஆந் திகதிய விசேட அளிப்பு பத்திரத்தின் வழிகாட்டலின் பிரகாரம் மன்றத்திற்கு சொந்தமான சவ்சிரிபாய கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள நிலப்பகுதி வேறு செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தக்கூடாக போதும் அச்சொத்துக்கள் அரச மதிப்பீடின்றி முப்பது ஆண்டிற்கு முன்னர் அறவிடப்பட்ட குத்தகை தொகையான ரூபா 06 மில்லியனான வாடகையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு உடன்படிக்கை மேற்கொண்ட காரணத்தினால் மன்றத்திற்கு பாரியளவு நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. முன்னைய குத்தகை உடன்படிக்கை 2016 மே 15 ஆந் திகதி முடிவடைந்திருநத போதும் கடந்த காலத்திற்கு அமுலாகும் வகையில் மீண்டும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டமையால் 2019 மார்ச் 19 ஆந் திகதி வரையான கால தாமதமொன்று இடம்பெற்றிருந்ததுடன் அக்காலப்பகுதிக்கு எவ்வித குத்தகை வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## சட்டவிதிகளை இயற்றாமை

இலங்கையின் கலாசார உரிமைகளை உலகலாவிய ரீதியில் பிரதிபலிக்கச் செய்வதனை நோக்காக கொண்டு 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய சட்டத்தின் 04 (எ) உப பிரிவின் பிரகாரம் நிர்வாக சபைக்கு நிதியத்தின் செயற்பாடு மற்றும் தொடர்புடன் அனைத்து காரணங்களுக்குரிய விதிகளை தயாரிக்க அதிகாரம் நிதித்திற்கு இருந்த போதும் நிதியத்தின் ஆரம்பத்திலிருந்து இதுவலை அதற்காக நிதியினால் ஆரம்பத்திலிருந்து இது வரையும் அதற்காக பின்பற்ற வேண்டிய விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## அலுவலக வாகனக் கொடுப்பனவு

2015 மே 25 ஆம் திகதிய PED1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் நியதிகளுக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனமொன்று இணைக்கப்பட தகுதி பெறப்படாத 05 ஊழியர்களுக்காக இணைக்கப்பட்ட நாள் தொடக்கம் சேவை நிறைவு செய்யப்பட்ட திகதி வரையில் இந்த சுற்றறிக்கையின் விதிகளுக்கு முரணாக ரூபா 2.79 மில்லியன் எரிபொருள் மற்றும் போக்குவரத்து படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

## முதலீடுகளை மீளப் பெறுதல்

நிதியச் சட்டத்தின் 4 (ஊ) உப பிரிவின் பிரகாரம் நிதியத்திற்கு சொந்தமான பணம் சபையின் விருப்பத்தின் பேரில் முதலீடு செய்வதற்கு மற்றும் அந்த முதலீட்டை மீண்டும் பெறுவதற்கும், மீண்டும் முதலீடு செய்வதற்கு மற்றும் மாற்றுவதற்கு மற்றும் அந்த முதலீடுகளில் பெறப்படுகின்ற வருமானத்தயும் பெற்றுக்கொள்ள முடியும். எனினும் நிதியத்தினால் முதலீட்டை மீண்டும் பெற்றுககொள்வதற்கு முன்னர் சபையின் கருத்தினை பெற்றுக் கொள்ளாமல் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 2,058.4 மில்லியன் ஆன முதலீடு மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

## அகழ்வாராய்ச்சி நடவடிக்கைளை ஆரம்பித்திருக்காமை

2019 ஆம் வருடத்திற்கு தொடர்புடைய மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 340.8 மில்லியன் ஆன 53 அகழ்வு பாதுகாப்பு செயல்பாடுகள் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 332 அறநெறிப் பாடசாலைகளை நிர்மாணித்து வழங்குதல்

332 அறநெறி பாடசாலை கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு நன்கொடையாக வழங்குவதற்கு 2019 ஆம் வருடத்தினுள் “சிசு தஹம் செவன” பெயரில் இந்த நிகழ்ச்சி செயற்படுத்தப்படும் போது அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களிலிருந்து மாத்திரம் நிர்மாணிப்பதற்கு கட்டுப்பாட்டு சபையின் அனுமதி பெற்றுக்கொண்டிருந்த போதும் இதற்காக அமைச்சினால் பணிக்கப்படுகின்ற பெறுகை சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
இந்நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்காதிருந்தமை
- கட்டிடங்கள் வேறு நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை
- சில கட்டிடங்களை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காமை
- நலனாலிகளால் வேண்டுகோள் விடுக்காமல் இருந்துதும் கட்டிடங்களை நிர்மாணித்திருந்தமை
- பிரதேச செயலாளர்களால் அனுப்பபட்ட வேண்டுகோள் கடித பட்டியல்களுக்கு புறம்பாக கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை

போன்ற காரணங்களின் பேரில் நிதியத்தினால் தேவைப்பாடு தொடரப்பாக முறையான ஆய்வொன்று இல்லாமல் இச்செயற்திட்டம் செயற்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## தொல்பொருளியல் இடங்களை பராமரித்து முகாமைத்துவம் செய்தல்

2011 பெப்ரவரி 10 திகதிய அமப11/0169/555/004 இலக்கமுடைய அமைச்சரவையின் தீர்மாணத்தின் பிரகாரம் நிதியத்தின் வருமானத்தில் 25 சதவீதம் பாரம்பரிய இடங்களின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்திற்காக தேசிய மரபுரிமைகள் அமைச்சுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டியிருப்பினும் 2019 ஆம் ஆண்டில் நிதியத்தின் வருமானம் (நுழைவுச்சீட்டு) ரூபா 3,330.9 மில்லியனால் 25 சதவீதமாக ரூபா 832.7 மில்லியன் வழங்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 658.9 மில்லியன் மாத்திரம் அமைச்சுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.

# கல்வி

தேசிய கல்வி கொள்கை கட்டமைப்பில் தேசிய பொது நோக்கங்களை நிறைவேற்றுவதை நோக்கி மாறும் உலகிற்கு பொருந்தும் வகையில் தரமான கல்வியை மீள்நிர்மாண நோக்காக கொண்டு ஆக்கபூர்வமாக செயற்படுத்தும் முழுமையான பொறுப்பினை வகிக்கும் கல்வி அமைச்சு, 02 திணைக்களங்களும் 04 நியதிச்சட்ட நிறுவனங்களாலும் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டன.

- இலங்கையின் சிறுவர் மற்றும் இளைஞர் சமூகத்திற்கு தன்னம்பிக்கையுடனும் வெற்றி தொடர்பான சுய நம்பிக்கையுடனும் உலக போட்டித்தன்மைக்கு நம்பிக்கையுடன் பிரவேசிப்பதற்கு இயலுமையை ஏற்படுத்துகின்ற விதத்தில் தேசிய கல்வி முறைமையை வடிவமைத்தல்
- இலங்கையில் காணப்படும் சகல பாடசாலைகளும் தேசிய கல்விக் கொள்கைக்கு இணங்க செயற்படுகின்றதா என்பதனைக் கண்காணித்தல்
- கல்வி விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், பின்தொடர் நடவடிக்கை மற்றம் மதிப்பாய்வு செய்தல்
- தேசிய பாடசாலைகளுக்கு பௌதீக மற்றும் மனிதவளங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்
- இலவச பாடபுத்தகங்கள், சீருடைகள் பாதணிகள் மற்றும் மதிய உணவு ஆகியவற்றை வழங்குதல்
- ஒட்டுமொத்த கல்விக் கட்டமைப்பினுள் மற்றும் மாணவரிடையே கல்வியின் தரம் மற்றும் ஒழுக்கத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளல்
- இலங்கை கல்வி நிருவாக சேவையினதும், அதிபர் சேவையினதும், இலங்கை கல்வியியலாளர் சேவையினதும் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவையினதும் நிருவாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவ நடவடிக்கைகள்
- பௌத்த மற்றும் பாளி கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துதுல் மற்றும் பிரிவெனாக்கல்வியை மேம்படுத்தல்.
- வாசிப்பினால் பிள்ளை பூரணமாக்குவதற்காக பாடசாலை நூலகங்களை மேம்படுத்துதலும் அபிவிருத்தி செய்தலும்
- அரச பதிவேடுகளின் முறையான முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல்
- விசேட தேவையுடைய மாணவர்களுக்காக கல்வி வாய்ப்புக்களை உறுதிப்படுத்துதல்

மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மீளாய்வாண்டிலும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்கும் ரூபா 325,397.60 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 253,097.00 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இக்காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் 27.75 சதவீதம் அதாவது ரூபா 90,303.60 மில்லியனான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் உரு 48 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 48 - பாராளுமன்றத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடும் பயன்பாடும்
மூலம்:- பொது திறைசேரியன் இறுறுதி கணக்கு கூற்றுக்கள்

அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களால் மேற்குறிப்பிட்ட பணிகள் நிறைவேற்றப்படுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### தேசிய கல்வி கொள்கை

கல்வி அமைச்சு கடமைகளின் பிரகாரம் உலக போட்டிக்கு மன உறுதியுடனும் அதன் வெற்றி தொடர்பான நம்பிக்கையுடனும் நுழைய உதவும் ஒரு தேசிய கல்வி முறைமையை உருவாக்கும் செயற்பாட்டிற்காக 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் விதிகளின்படி தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 2003 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பரிந்துரைகளை வழங்கியிருந்தது. இருப்பினும், 2019 ஆம் ஆண்டின் இறுதிக்குள், ஒரு திட்டவட்டமான மற்றும் நிலையான தேசிய கல்வி கொள்கை வகுக்கப்படவில்லை.

அவ்வாறே 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் III ஆம் பாகம் கல்விக்குரிய 2 ஆவது உறுப்புரையின் பிராரம் கல்வி அமைச்சின் பிரதான செயற்பாடுகளாக இனங்காணப்பட்டிருந்த முன்பள்ளி பாடசாலைள் மேற்பார்வை மற்றும் முகாமைப்படுத்துவதற்காக தேசிய கல்விக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

தேசிய கல்வி கொள்கைக்கு இணங்க 1961 இன் 8 ஆம் இலக்க உபகார பாடசாலை பயிற்சி கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் 05 வருடங்கள் முதல் 14 வருடங்கள் வரையான வயதமைப்பினை தாண்டும் பிள்ளைகளுக்காக கல்வியை வழங்குவதற்கு எந்தவொரு நபருக்கும் தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாதென குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகள் பாரியளவில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அவை கல்வி அமைச்சின் மேற்பார்வைக்கு உட்பட்டிருக்கவில்லை.

### மாணவர்களை திறமையான விளையாட்டு வீரர்களாக மாற்றும் வேலைத்திட்டம்

உடல் மற்றும் மன சமநிலையுடன் கூடிய ஆரோக்கியமான தலைமுறையை நாட்டிற்கு வழங்குவதற்காக விளையாட்டில் திறமையுடைய மாணவர்களை திறமையான விளையாட்டு வீரர்களாக உருவாக்குவதற்காக கல்வி அமைச்சின் செயற்றிட்ட ஆலோசனைக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது. மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக 07 குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டிலிருந்து 5 எதிர்வரும் வருடங்களாக நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 18,394.5 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் இவ் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படாது இருந்ததுடன் 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்காக முறையே ரூபா 250 மில்லியன் 300 மில்லியன் மற்றும் 150

மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் அவ் ஆண்டுகளில் மொத்தமாக ரூபா 237.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 5 வருட திட்டமிடப்பட்ட காலத்தில் 4 வருடங்கள் கடந்திருந்ததுடன் வேலைத்திட்டம் திட்டமிடப்பட்ட படி செயற்படுத்தப்படவில்லை.

### இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு

2008 செப்தெம்பர் 24 ஆந் திகதிய அமப/08/1742/316/086 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தில் இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு உருவாக்கப்பட்டதுடன் அது தொடர்புடைய அல்லது அடுத்தடுத்த விடயங்கள் தொடர்பான ஏற்பாடுகளை செய்வதற்காக யாப்பொன்று 2008 ஒக்டோபர் 29 இல் சட்ட வரைவுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் யாப்பின் செயற்பாடுகள் நிறைவடைந்திருக்கவில்லை.
ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமித்தல் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இடம் பெற வேண்டியிருந்தாலும் சட்ட அங்கீகாரமின்றி அமைச்சரவையின் அங்கீகாரத்தில் கொடுப்பனவுகள் இடம்பெற்றிருந்தது. பிரான்சின் பரிஸ் நகரத்தில் அமைந்துள்ள யுனெஸ்கோ சட்ட ஆலோசனை அலுவலகத்திற்கு இடம் மாற்றம் பெற்றிருந்த இணை அலுவலகரின் ஊதியமாக மாத்திரம் 2007 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை மொத்தமாக ரூபா 45.85 மில்லியன் கல்வி அமைச்சின் மூலம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. இவ் ஆணைக்குழுவிற்காக வருடாந்தம் ரூபா 42 மில்லியனுக்கும் அதிக தொகை செலவு செய்திருந்த போதாலும் ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாச்சார அமைப்பின் விரும்பிய நோக்கங்களை அடைவது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### விளையாட்டு பாடசாலைகளை ஆரம்பித்தல்

மாணவர்களுக்கு சகல வசதிகளுடனும் வதிவிட விளையாட்டுக்களை பயிற்றுவிப்பதற்கு புலமைப்பரசில்களை வழங்குவதற்கும் விளையாட்டு திறமையுள்ள உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் விளையாட்டு வரர்களை உருவாக்கும் நோக்கில் 1989 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த 22 விளையாட்டு பாடசாலைகள் செயற்பாட்டு நிலைமையில் காணப்படாமை காரணமாக விளையாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கான வதிவிடங்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் என்பன குறைப்பயன்பாட்டில் காணப்பட்டன.

### கல்விக்கான சமமான அணுகுமுறையொன்றை உறுதிப்படுத்துதல்

கல்வி நியதிகளின் பிரகாரம் கற்றல் பொருட்களை வழங்குவதினூடாக கல்விக்கான சமமான அணுகுமுறையொன்றை உறுதிப்படுத்தலுக்காக அடிப்படையாக செயற்படுகின்ற கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் உயர்தரத்தில் ஆங்கில பாடத்தைக் கற்கும் க.பொ.த உயர்தர விடயப்பரப்பில் பிரதான பாடங்களுக்கான புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை பாடங்களுக்கு உரிய 393,500 புத்தகங்கள் மேலதிகமாக அச்சிடப்பட்டிருந்ததுடன் அப்புத்தகங்கள் நேரடியாக பாடசாலைகளுக்கு வழங்காமல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டிருந்தன. அதன் காரணமாக அனைத்து உயர்தர மாணவர்களுக்கும் அப்புத்தகத்தை பயன்படுத்துவதற்காக சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை.

### பாடசாலைகளில் இடை நிலை வகுப்புகளுக்காக மாணவர்களை அனுமதித்தல்.

2016 மே 16 ஆந் திகதிய 17/2016 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும் போது வகுப்பொன்றுக்கு தெரிவுசெய்ய வேண்டிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 39 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது, தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் அந்த எல்லையை மிகைத்து 2017 ஆம் ஆண்டின் போது 109 தேசிய பாடசாலைகளில் 6,337 பேரும் 2018 ஆம் ஆண்டின் போது 73 பாடசாலைகளில் 3,339 பேரும் 2019 ஆம் ஆண்டின் போது 81 பாடசாலைகளில் 6,366 மாணவர்கள் என மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

தேசிய பாடசாலைகளில் இடை நிலை வகுப்புகளுக்காக மாணவர்களை அனுமதிப்பதற்காக விண்ணப்பங்களை கோரி கல்வி அமைச்சினால் 2019 யூலை 03 ஆந்

திகதி பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த அறிவித்தலில் ஒவ்வொரு பாடசாலைகளில் 2019 மே 19 இல் உள்ளவாறு காணப்பட்ட வெற்றிடங்கள் எண்ணிக்கை மற்றும் அனுமதி நடைமுறையும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும் வெற்றிடங்கள் இல்லாதிருந்த அட்டவணை 19 இல் குறிப்பிட்பட்ட தேசிய பாடசாலைகளுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

| பாடசாலைகள் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை | 32 |
| மாத்தறை ராகுல வித்தியாலயம் | 33 |
| நுகேகொட அனுலா வித்தியாலயம் | 41 |
| கண்டி தர்மராஜ் வித்தியாலயம் | 32 |
| குருணாகல் மலிதேவ வித்தியாலயம் | 62 |
| கொழும்பு நாலந்தா கல்லூரி | 52 |
| கொழும்பு விஷாக்கா வித்தியாலயம் | 28 |
| கொழும்பு ரோயல் வித்தியாலயம் | 54 |
| கொழும்பு சுஜாதா கல்லூரி | 31 |
| கொழும்பு ஆனந்தா கல்லூரி | 63 |

அட்டவணை 19 - வெற்றிடங்கள் இல்லாதிருந்த பாடசாலகளுக்கு மாணவர் அனுமதி

அவ்வாறே கொழும்பைச் சுற்றிக் காணப்படும் கீழே காட்டப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளில் அதிகளவு எண்ணிக்கையான வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் அப்பாடசாலைகளுக்கு அனுமதிபெறுவதற்கு மாணவர்களிடம் போட்டியொன்று காணப்படவில்லை.

- பத்தரமுல்ல ஶ்ரீ சுபூதி வித்தியாலயத்தில் 466 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 243 ஆண்டு 9 இற்காகவும் 96 ஆண்டு 10 இற்காகவும் இருந்தன. குறித்த விண்ணப்பங்கள் கோரல் ஊடாக 24 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

- கொலன்னாவ பெண்கள் கல்லூரியில் 76 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் உரிய விண்ணப்பங்கள் கோரல் உடாக 23 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

- கோட்டே ஆனந்த ஷாஸ்ராலயத்தில் 308 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 25 இற்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

- கொட்டிகாவத்த ஶ்ரீ ராஜசிங்ஹ மத்திய மஹா வித்தியாலயத்தில் 163 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 09 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

- கொழும்பு கொட்டஹேன மத்திய மஹா வித்தியாலயத்தில் 109 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 08 மாணவர்களை அனுமதிக்க கூடியதாக இருந்தது.

### கடமை மேவுகைக்காக உத்தியோகத்தர்களை நியமித்தல்

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் பிரகாரம் நிரந்த நியமனம் ஒன்று வழங்கப்படும் வரை தற்காலிக நியமனம் வழங்கப்பட முடியும். அவ்வாறாயினும் பல வருடங்களாக 373 தேசிய பாடசாலைகளில் 278 இற்கு வேலை பார்க்கும் அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அதற்குத் தீர்வாக 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் 102 உத்தியோகத்தர்கள். இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம்

வகுப்பின் 14 உத்தியோகத்தர்களும் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 11/111 ஆம் வகுப்பில் 28 உத்தியோகத்தர்களும் விசேட வகுப்பில் 9 உத்தியோகத்தர்களுமாக 153 பேர் தேசிய பாடசாலைகளுக்கு நிரந்தர அடிப்படையில் அதிபர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

### ஆசிரியர் சமப்படுத்தல் இடமாற்றம் பணிப்பொறுப்பு ஒப்படைத்தல்.

2019 ஆம் ஆண்டு வரை ஆசிரியர்களை சமப்படுத்தாத காரணத்தினால் 143 தேசிய பாடசாலைகளில் 1,490 பாடங்களுக்காகக் காணப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை 1,859 ஆகும். 787 பாடங்களுக்காகக் காணப்பட்ட ஆசிரியர் மிகை 1,202 என்பனவற்றை குறைப்பதற்கு முடியாதுள்ளது. வருடாந்த ஆசிரியர் இடமாற்ற முறையை நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பித்திருந்தாலும் 146 தேசிய பாடசாலைகளில் 8 தொடக்கம் 35 ஆண்டுகள் வரையான சேவைக் காலத்தை உடைய 2,790 ஆசிரியர்கள் காணப்படுவதுடன், 128 தேசிய பாடசாலைகளில் 602 ஆசிரியர்கள் தமது நியமனப் பாடம் தவிர்ந்த ஏனைய பாடங்களும் வழங்கப்பட்டிருந்தது. 107 தேசிய பாடசாலைகளில் காணப்படும் விசேட கல்வி அலகினுள் 1,220 மாணவர்கள் கல்வி கற்பதுடன் அவ்வலகிற்காக 305 ஆசிரியர்கள் இருக்க வேண்டியதுடன் 224 ஆசிரியர்களை மாத்திரம் இணைத்திருந்த காரணத்தினால் 81 ஆசிரியர் பற்றாக்குறை நிலவியது.

2015 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய 1928/28 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை ஏற்பாடுகளுக்கு அமைய பட்டியலிடப்பட்ட 64 தேசிய பாடசாலைகளிற்கு கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டியிருந்தாலும் அவ்வாறு நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தேசிய பாடசாலைகளில் பிரதி அதிபர்களுக்கு, உப அதிபர்களுக்கு, ஆசிரியர்களுக்கு முறையே 10,12,35 பாடவேலைகள் ஒதுக்கப்பட வேண்டுமாயினும் 2019 ஆம் ஆண்டில் 71 தேசிய பாடசாலைகளில் 148 பிரதி அதிபர்கள், 26 தேசிய பாடசாலைகளில் 52 உதவி அதிபர்கள், 125 தேசிய பாடசாலைகளில் 389 ஆசிரியர்களுக்கும் பாடவேளைகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

### கல்வி பொதுத்தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சை பெறுபேறுகள் மற்றும் ஆசிரியர் இயலளவு

பரீட்சை திணைக்களத்தின் புள்ளிவிபரவியல் பதிவேடுகளின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல், இணைந்த கணிதம், அளவையியலும் விஞ்ஞான முறையும், தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம், விவசாயம், பொருளியல், புவியியல், அரசியல் விஞ்ஞானம், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், ஆங்கிலம் மற்றும் பொது ஆங்கிலம் போன்ற உயர்தர பாடங்களைக் கற்ற மாணவர்களில் 30 சதவீதமான மாணவர்கள் அப்பாடங்களில் சித்தியடையத் தவறியிருந்தனர். கடந்த ஆண்டுகளில் இருந்து நிலவிவரும் இப்பெறுபேறுகள் குறைவடைவதற்கான காரணங்களைக் கண்டறிவதற்கும் அதற்கான பரிகாரங்களாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன், 2019 ஆம் ஆண்டில் அனைத்துப் பாடத்துறைகளிலும் மூன்று பாடங்களும் சித்தியெய்தாத மாணவர் தொகை 23,404 ஆகும்.

### ஆசிரியர் கைநூல்களை விநியோகித்தல்

2017, 2018, 2019 ஆகிய ஆண்டுகளில் உயர்தரத்திற்காக அச்சிடப்பட்ட 388,990 ஆசிரியர் கைநூல்களில் 232,924 விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அவை உயர்தரம் கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்கு உதவியாக அச்சிடப்பட்டாலும் உரிய கால வரையறையினுள் பகிர்ந்தளிப்பதற்காக நடைமுறையொன்று காணப்படாத காரணத்தினால் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாதுள்ளது.

### ஒழுக்காற்று மற்றும் விசாரணை

மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாத ஒழுக்காற்று விசாரணைகள் 479 காணப்பட்டதுடன் அவற்றுள் 19 கல்வியியல் கல்லூரியிலும் 72 அமைச்சிலும் 48 கொழும்பு மாவட்ட பாடசாலைகளுக்கும் உரியவையாகும்.

### மனித வள முகாமைத்துவம்

2,276 மூன்றாம் நிலை மற்றும் சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களில் பற்றாக்குறை நிலவுதல் முகாமைத்துவ முடிவுகள் எடுத்தல், 3,235 ஏனைய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை நிலவுதல் என்பன அமைச்சரவை

நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இடையூறாகக் காணப்படுகின்றது.

பல்வேறு சேவைகளுக்கு உட்பட்ட 242 பேர் 6 ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகள் வரை இடமாற்றம் பெற்றுக் கொள்ளாது கல்வி அமைச்சினுள் சேவையாற்றுவதுடன் 14 கல்வியியல் கல்லூரிகளுக்கு உரிய கல்விசார் உத்தியோகத்தர்கள் 190 பேர், 15 கல்வியியல் கல்லூரிகளுக்கு உரிய கல்விசாரா உத்தியோகத்தர்கள் 240 பேர் 8 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் இடமாற்றம் பெற்றுக் கொள்ளாது ஒரே இடத்தில் சேவையாற்றுகின்றனர். அவ்வாறே, 19 கல்வியியல் கல்லூரிகளில் 376 கல்விசார், கல்விசாரா ஊழியர்களின் பற்றாக்குறை நிலவுகின்றது.

### ஆசிரியர் சம்பளம் வழங்குதல்

கல்வி அமைச்சில் பேணப்படும் தகவல்களுக்கு அமைய 2019 திசம்பர் 31 ஆம் திகதி 9 மாகாணங்களில் காணப்படும் தேசிய பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்கள் என்பனவற்றில் ஆசிரியர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த நிலுவை சம்பளங்களின் மொத்தம் ரூபா 411.38 மில்லியன் ஆகும். மாகாண அலுவலகங்களில் பேணப்படும் தகவல்களுக்கு அமைய 2019 திசம்பர் 31 ஆம் திகதி 9 மாகாணங்களிலும் ஆசிரியர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவை சம்பளங்களின் மொத்தம் ரூபா 828.70 மில்லியன் ஆகும். அவ்வாறே இலங்கையில் 8 வலயங்களில் 6,695 அதிபர்கள், ஆசிரியர்களுக்கு 2004 ஆம் ஆண்டில் இருந்து 2019 திசம்பர் 31 வரை தற்போதைய சம்பளப் படிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### பெறுகைகள்

2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டத்தின் பிரகார் ரூபா 10,031.48 மில்லியனான 59 மேற்கொள்ள அமைச்சினால் திட்டமிடப்பட்டிருந்தன. அதில் ரூபா 25.5 மிலலியன் அதாவது .035 ஆன பெறுவனவுகள் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் 44.1 இன் கீழ் 2030 அளவில் ஆக்கபூர்வமான கற்றல் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு சமமான மற்றும் தரமான உயர்ந்த கல்வியொன்றை பூர்த்தி செய்வதனை நோக்காக கொண்டு கல்வி அமைச்சினால் 4 நிகழ்ச்சித்திட்டங்கை செயற்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்விலக்குகளில் 20 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவில் அடையப் பெற்றிருந்தது.

### வினாத்தாள் அச்சிடுவதற்காக டேர்ன் கீ இயந்திரமொன்றை கொள்வனவு செய்தல்

2018 ஆம் ஆண்டில் வினாத்தாள்களை அச்சிடுவதற்காக ரூ 54.26 மில்லியன் செலவில் ஒரு அச்சீட்டு இயந்திரம் வாங்கப்பட்டது. அதன் உத்தரவாத காலம் ஒரு வருடம் வரையான குறுகியதாக இருந்தது. இந்த இயந்திரம் 2019 ஆம் ஆண்டிற்கான க.பொ.த (சா.த) பரீட்சைக்குரிய வினாத்தாள்களில் 08 சதவீதம் மட்டுமே அச்சிடப்பட்டிருந்தது. திணைக்களத்திற்கு சொந்தமான 8 பழைய இயந்திரங்களில், க.பொ.த. (உ.த) மற்றும் புலமைப்பரிசில் வினாத்தாள்கள் 100 சதவீதமும் க.பொ.த (சா.த) பரீட்சைக்குரிய வினாத்தாள்களில் 92 சதவீதமான வினாத்தாள்களும் அச்சிடப்பட்டிருந்தன. அதன்படி, 2019 ஆம் ஆண்டில் புதிய இயந்திரத்திற்காக கொள்வனவு செய்த ரூபா 26.21 மில்லியன் பெறுமதியானள மூலப்பொருட்களில் ரூபா 22.22 மில்லியன் பெறுமதியான மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படமால் விளைவற்றுக் காணப்பட்டன.

தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உத்தியோகத்தர்களால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் பின்னர் சமர்ப்பித்த அறிக்கையின்படி, டேர்ன் கீ அச்சுப்பொறியின் Wrapping Solution பகுதி வினாத்தாள்களின் ரகசியத்தன்மையைப் பாதுகாப்பதற்கு ஒரு அத்தியாவசிய அங்கமாக பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் ஆனால் கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து ரூ .8.43 மில்லியன் பெறுமதியான பகுதிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

### தனித்துவமான இணையததளமொன்று வடிவமைத்தல்

இ - அரச கொள்கைக்காக 2009 டிசம்பர் 16 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டதுடன் 2010 மே 31 திகதிய SP/SB/03/10 ஆம் இலக்க சனாதிபதி

செயலாளரின் சுற்றறிக்கை மூலம் இந்த ஈ-அரசு கொள்கைகளைப் பின்பற்றுமாறு அரசு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கும் அரசு நிறுவனங்களாலும் பின்பற்ற வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. பரீட்சைத் திணைக்களத்தினால் வலைத்தள வடிவமைப்பு, ஆன்லைனில் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் பெறுபேறுகளை உறுதிப்படுத்துதல் இலத்திரனியல் - சேவைகளை வழங்கும் போது ஈ-அரசு கொள்கைகளுக்கு இணங்க, தகவல்களை அணுகுவதற்கு முன்னர் வெளிப்படுத்தாமை, அனைத்து ஊழியர்களுக்கும் பயிற்சி அளித்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்த கொள்கைகளை தயாரித்தல் இணையத்தள முகவரி திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### தாபன பரீட்சைகளை ஒழுங்குபடுத்துதல், மதிப்பீடு செய்தல் மற்றும் பெபேறுகளை வெளியிடல்

நிறுவனங்களுக்கு வினாத்தாள்களைத் தயாரிப்பதற்கும் விடைத்தாள்களை பரிசோதிப்பதற்கும் உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் அடிப்படை, உத்தியோகத்தர்களுக்கு இருக்க வேண்டிய தகவல்கள், வயது, தொழில் தகைமை மற்றும் அனுபவம் ஆகியவற்றைக் குறிக்கும் வகையில் எழுத்துமூல குறித்துஜரக்கப்பட்ட நியதிகள் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1976 இன் 17 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1968 இன் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைகள் சட்டத்தின் கீழ் தனியார் நிறுவனங்கள் சார்பாக நடத்தப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகளை ஒழுங்கு செய்வதற்கும் நடாத்துவதற்கும் ஏற்பாடுகள் காணப்படவில்லை. எவ்வாறாயினும், திணைக்களம் ஆரம்பத்தில் இருந்தே தனியார் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகளை நடத்துவதற்கான தொடர்ந்து ஆண்டுதோறும் பரீட்சைகளை ஒழுங்கு செய்து நடத்திய போதும், தேவையான சட்ட ஏற்பாடுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவில்லை.

2015 ஒக்தோபர் 14 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் மற்றும் 2008 செப்தம்பர் 19 ஆந் திகதிய 37 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் தேசிய பாடசாலைகளின் ஆரம்ப தரங்களின் சமமான வகுப்பொன்றில் இருக்க வேண்டிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 40 ஆகவும் இரண்டாம் நிலை தரங்களில் சமமான வகுப்பொன்றில் இருக்க வேண்டிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆகவும் 2018 ஆம் ஆண்டில் முதலாம் வகுப்பிற்கு 38 உமாக ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2018 ஆம் ஆண்டின் போது 73 தேசிய பாடசாலைகளில் அந்த எல்லையை மிகைத்து 3,339 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

# உயர் கல்வி

உயர் கல்வி நிறுவன முறைமையை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் கட்டியெழுப்பும் நோக்கில் கல்வியின் தரத்தை விருத்தி செய்தல், உள்நாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதன் மூலம் அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமொன்றை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் உயர் கல்வி சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதன் மூலம் இந்த துறைகளில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளாக இருந்தன. இந்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக நகரத் திட்டமிடல், சமூக நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு, ஒரு திணைக்களம், 17 பல்கலைக்கழகங்கள் மற்றும் 20 நியதிச் சட்ட நிறுவனங்கள் என்பவற்றினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிர்வாகத்திற்குரிய அரசாங்க பல்கலைக்கழங்களின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி.
- உயர் கல்வியின் தரத்தன்மையை கட்டியெழுப்புவதற்காக சர்வதேச கல்வி நிறுவனங்கள் ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைத்தல் மற்றும் ஒத்துழைப்பினை மேம்படுத்துதல்.
- உயர் கல்விக்காக உள்ள நுழைவு வழிகளை விரிவுபடுத்துதல்.
- தகைமை உள்ள மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களுக்காக உள்நுழைவதற்கு முடியுமான வகையில் புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- தொழில்புரிய முடியுமான பட்டதாரிகளை பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் பல்கலைக்கழக முறைமையினை வலுப்படுத்துதல்.
- பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்படுகின்ற பட்டப் பாடநெறிகளுக்காக சர்வதேச அங்கீகராங்களை பாதுகாத்தல்.
- தனியார் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல்.
- இளைஞர் சமூகத்தை நோக்காகக் கொள்ளும் வகையில் உயர் கல்விக்கான வசதிகளை வழங்குதல்.

மேற்கூறப்பட்ட பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 196,928.54 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 173,471.87 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாட்டில் 11.91 சதவீதம் அதாவது ரூபா 23,456.67 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரம் உரு 49 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 49 - பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் அதன் பயன்பாடு.
மூலம் : பொது திறைசேரியின் இறுதி கணக்கு கூற்று

மேலே கூறப்பட்ட பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொளிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

### வைப்புக்கள் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமை

அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களினால் அமைச்சில் பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கும் போது அந்த நிறுவனங்களில் நிறுவனரீதியான மற்றும் பாடநெறிகள் மீளாய்விற்காக அமைச்சில் வைப்புச் செய்யப்படுகின்ற பணம் அந்த உயர் கல்வி நிறுவனங்களுக்குரிய மீளாய்வு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டியிருந்தது. அரச சார்பற்ற 51 உயர் கல்வி நிறுவனங்களுக்குரியதாக 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அறவிடப்பட்டிருந்த ரூபா 24.1 மில்லியன் கூட்டுத் தொகையான வைப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்பட்டமை

2018 ஏப்ரல் 17 ஆம் திகதி முதல் 36 மாதங்களில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 1,300 மில்லியன் கிரயமுடைய கராப்பிட்டிய வைத்தியசாலையின் பேராசிரியர் அலகினை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிர்மாண ஒப்பந்தபாரரை தெரிவு செய்யும் ஆரம்ப பெறுகை நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### ருஹுணு பல்கலைக்கழகத்தின் கப்பல் கற்கை மற்றும் கடல்சார் நடவடிக்கைகள் தொடர்பாக அலகொன்றை ஸ்தாபித்தல்

2018 இன் வருடாந்த பாதீட்டு முன்மொழிவின் படி ரூபா 943 மில்லியன் கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட ருஹுணு பல்கலைக்கழகத்தின் கப்பல் கற்கை மற்றும் கடல்சார் நடவடிக்கைகள் தொடர்பான அலகினை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்குரிய ஆரம்ப பெறுகை நடவடிக்கைகள் 2019 மே 28 ஆம் திகதி வரையிலும் தாமதிக்கப்பட்டிருந்தது. இதற்காக ஒப்பந்தகாரருக்கு வேலை ஆரம்பித்தல் முற்பணமாக ரூபா 50.1 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றம் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

### இரத்தினபுரி வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்படுகின்ற பேராசிரியர் அலகினை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

இரத்தினபுரி வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்படுகின்ற பேராசிரியர் அலகு

நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 48 மாதங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. செயற்திட்ட கிரயம் ரூபா 2,655 மில்லியன் ஆக இருந்ததுன், அதன் ஆரம்ப வேலை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**இலத்திரனியல் கற்கை வள நிலையமொன்றை ஸ்தாபித்தல்**

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது இலத்திரனியல் கற்கை வள நிலையமொன்று ரூபா 250 மில்லியன் கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் களனி பல்கலைக்கழகத்தில் ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 39 மில்லயன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அத்திகதி வரையில் அதன் பௌதீக செயல்முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**வைத்திய பீட கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

ருஹுணு பல்கலைக்கழகத்தில் ரூபா 1,180 மில்லயன் மதிப்பீட்டுடனான கிரயத்தின் கீழ் 12 மாடிகளை உடைய வைத்திய பீட கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2018 சனவரி 17 ஆம் திகதி ரூபா 200 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிர்மாணங்கள் 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழங்கப்பட்ட முற்பண தொகையை மேவுகை செய்யும் வகையில் போதியளவான வேலை பகுதிகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் செயலாற்றல்.**

- சுனாமியால் பாதிப்புக்கு உட்பட்ட மாகாணங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களை மீளமைத்தல் மற்றும் மீள நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மேலும் குவைத் தீனார் 231,626 கடன் மீதியொன்று எஞ்சி காணப்பட்டது. அந்த கடன் மீதிக்குரிய அமுல்படுத்தப்படுகின்ற மூன்றாவது கட்டத்தின் பணிகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 47 சதவீதம் ஆன கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

- இலங்கை அரசாங்கத்தினதும் சவுதி அரசாங்கத்தினதும் நிதி உதவியின் அடிப்படையில் ரூபா 4,077 மில்லியன் கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்தி செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்ப பெறுகை நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- இலங்கை அரசாங்கத்தினதும், குவைத் அரசாங்கத்தினதும் நிதி உதவியுடன் ரூபா 6,617.5 மில்லியன் கிரய மதிப்பீடொன்றில் அமுல்படுத்தப்படுகின்ற கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாரார பாதுகாப்பு விஞ்ஞான பீட செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தது. செயற்திட்ட பணிகளை ஆரம்பித்தல் 2019 யூன் 01 ஆம் திகதி வரையும் தாமதிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்ட நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் 25 சதவீதம் ஆன மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

- இலங்கை அரசாங்கத்தினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் நிதி உதவியுடன் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 26,400 மில்லியன் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் 2108 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இந்த செயற்திட்டத்திற்கு ரூபா 212.5 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் பௌதீக செயல்

முன்னேற்றம் 16 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்ளீர்க்கும் கொள்கை

நாடலாவிய ரீதியில் நடாத்தப்படுகின்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சைக்கு தோற்றியிருந்த அதிக Z பெறுமதி உரித்துடைய விண்ணப்பதாரருக்கு பல்கலைக்கழகத்தில் உள்நுழைவதற்காக காணப்படுகின்ற தகுதி பரிசோதனை பரீட்சை சித்தியடையாமையின் காரணமாக க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் அதிக Z பெறுமதியை அடைந்திருந்த போதிலும், விருப்பம் தெரிவிக்கப்பட்ட பாடநெறிகளில் நுழைவதற்கோ அல்லது பல்கலைக்கழகத்தில் உள்நுழைவதற்கான சந்தர்ப்பங்கள் உரித்தற்ற நிலைமையொன்று காணப்பட்டது. எனினும், மேலும் இந்த திட்ட முறைமையினை திருத்துதல் அல்லது கைவிடுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2019/2020 கற்கை ஆண்டுகளின் போது பல்கலைக்கழகத்தில் மாணவர்களை உள்ளீர்க்கும் போது, தகுதி பரீட்சை நடத்தும் செயல்முறை தொடர்ந்தும் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### பகடிவதையை குறைத்தல்

பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் பகடிவதையை குறைப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட Centre for Gender Equity and Equality பிரிவிற்காக 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான காலப்பகுதியில் 17 மில்லியன் அளவில் செலவிடப்பட்டிருந்த போதிலும், அதன் செயலாற்றல் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

### பல்கலைக்கழக மாணவர்களை உள்ளீர்த்தல் மற்றும் புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துதல்

- அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்ளீர்க்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தரவின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் உள்ளீர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 52 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. கடந்த 05 வருட காலத்தில் பல்கலைக்கழகங்களுக்காக செலவிடப்பட்ட திறைசேரி நிதி ஏற்பாடு மற்றும் உழைக்கப்பட்ட நிதியங்களின் கூட்டுத்தொகை ரூபா 519,326 மில்லியனாக இருந்த போதும், அதற்கு ஈடாக ஒவ்வொரு பல்கலைக்கழங்களிலும் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளுக்காக மாணவர்களை உள்ளீர்க்குதல் மற்றும் பல்கலைக்கழகங்களில் புதிய பாடங்களை அறிமுகப்படுத்தும் செயலாற்றலும் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

- இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகச் சட்டத்தின் 4(XV) ஆம் பிரிவின் பிரகாரம் குத்தகை மற்றும் வாடகை அடிப்படையின் கீழ் விடுதி வசதிகளை வழங்கக் கூடியதாக இருந்தது. பல்கலைக்கழகத்தின் விடுதிகளின் இடவசதிகள் போதியளவு இல்லாதிருந்தமை குறிப்பிடப்பட்டு கடந்த 05 வருட காலத்தில் பல்கலைக்கழக நுழைவிற்காக விண்ணப்பித்த 1,752 மாணவர்களுக்கிடையில் 37 சதவீதமான அதாவது, 652 மாணவர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர். அவ்வாறே பல்கலைக்கழத்திற்கு சொந்தமான 32 விரிவுரை மண்டபங்கள் மற்றும் 2,000 மாணவர்களுக்கு அதிக இயலளவிற்காக போதியளவான வசதிகள் காணப்படுகின்ற போதும், வருடத்தில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 110 பேர்கள் முதல் 140 பேர்களுக்கு இடையிலான வீச்சில் காணப்பட்டது.

### தெஹிவளை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் கட்டிடங்களை பயன்பாட்டிற்கு எடுக்காகமை

HETC செயற்திட்டத்தின் கீழ் ரூபா 512 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் தெஹிவளை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் 05 மாடிகளையுடைய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. கட்டிடத்தின் 03 மாடிகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2017 பெப்ரவரி 21 ஆம் திகதி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. மிகுதி 03 மாடிகளில் தலைமைத்துவ தர அபிவிருத்தி நிலையமொன்று நடாத்திச் செல்லப்படுகின்றது. மிகுதியான இரண்டு மாடிகளின் நிர்மாண

நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக இந்த கட்டிடம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. அவ்வாறே இந்த நிர்மாணத்திற்குரிய ஒப்பந்தத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 113.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த உபகரணங்கள் 04 வருடங்களுக்கு அண்மித்த காலமொன்று பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையின் காரணமாக உபகரணங்களில் அனேகமானவை உத்தரவாத காலத்தில் பயன்படுத்தாமல் முடிவடைந்திருந்தது.

## கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

தெஹிவளை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர்களின் பாவனைக்காக வெளி மலசல கூட முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக மேலும் மலசல கூட முறைமையொன்றை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தகாரர் ஒருவருக்கு ரூபா 2.48 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிர்மாண நடவடிக்கைகள் அத்திவார மட்டத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே நிர்மாணிப்பதற்கு என வழங்கப்பட்ட பாரிய அளவிலான கம்பி அளவொன்றும் நிறுவனத்தின் வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

## விரிவுரைக் கட்டணம் செலுத்துதல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்காக தாபன கோவையின் பிரகாரம் பாடநெறிகளுக்கு போதியளவான தகைமைபெற்ற ஆசிரியர் குழாமொன்று இல்லாதிருக்கும் போது புதிதாக பாடநெறி ஆரம்பிக்க முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரையாளர்கள் பதவிகள் 12 வெற்றிடமாக காணப்பட்டது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வெளிவாரி விரிவுரையாளர்கள் 24 பேர் சேர்க்கப்பட்டு அவர்களுக்காக ரூபா 4.6 மில்லியன் விரிவுரைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

## ஜீயூன் பௌத்த ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு நிதியம்

பௌத்த கல்விக்கும் பாலி மொழிக்கும் வரையறுக்கப்பட்ட ஆராய்ச்சிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் ஜீயூன் பௌத்த ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிதியத்தில் ரூபா 1.3 மில்லியன் மீதியொன்று காணப்பட்ட போதும், 2017 ஆம் ஆண்டு முதல் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## கற்கை விடுமுறை வழங்குதல்

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் மொழித் திறன் அபிவிருத்தி கற்கைக்காக 2016 ஆம் ஆண்டின் போது 03 விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அந்த விரிவுரையாளர்கள் 03 வருடம் கடப்பதற்கு முன்னர் 05 வருடங்கள் வரையான காலத்திற்காக கற்கை விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடங்களுக்காக மீண்டும் வெளிவாரி விரியுரையாளர்களின் சேவைகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கற்கை விடுமுறை பெற்ற விரிவுரையாளர்களுக்கு பிரான்ஸில் பட்டப்பின் பாடநெறியை பின்பற்றுவதற்காக மஹோபாத்தியாய நிதியத்தின் நிதி ஒதுக்கப்பட்டு ரூபா ஒரு மில்லியனுக்கு கற்கை படியொன்று அங்கீகரிக்கப்பட்டு அதில் ரூபா 500,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த விரிவுரையாளர் வெளிநாடு செல்லாதிருந்ததுடன் அந்த பல்கலைக்கழத்திலேயே வெளிவாரி பிரிவில் முதுமாணி பட்டத்திற்கு தோற்றியிருந்தார். பல்கலைக்கழகத்தினால் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## வாகனம் மற்றும் எரிபொருள் படி கொடுப்பனவு

2015 செப்தெம்பர் 18 ஆம் திகதிய 13/2015 ஆம் இலக்க மற்றும் 2016 சனவரி 09 ஆம் திகதிய 13/2015(i) ஆம் இலக்க நிறுவன சுற்றிக்கைகளுக்கு முரணாக 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பதில் கடமை புரியும் நிதியாளரின் சேவைக்காலத்திற்காக ரூபா 1.74 மில்லியன் வாகன படியும், ரூபா 710,360 எரிபொருள் படியும் செலுத்தப்பட்டிருந்தது.

## குறைவாக பயன்படுத்தப்பட்ட நிதியம்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களனி பல்கலைக்கழகத்தின் கீழ் 04 நிதியக்

கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 1.63 மில்லியன் தொகையும், பாலி மற்றும் பௌத்த கற்கைப் பிரிவில் வெளிநாட்டு மாணவர்களுக்காக விடுதி வசதிகளை நிர்மாணிப்பதற்காக கிடைக்கப் பெற்ற கூட்டுமொத்தமான ரூபா 6.45 மில்லியன் மானியத் தொகையும், One Asia Foundation நிகழ்ச்சித் திட்டத்திற்காக கிடைக்கப் பெற்ற மானியத்தில் எஞ்சியிருந்த ரூபா 205,589 தொகையும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்த ரூபா 4.15 மில்லியன் மற்றும் சர்வதேச மாநாடுகள், செயலமர்வுகளுக்காக பெறப்பட்ட தொகையில் எஞ்சியிருந்த ரூபா 6.91 மில்லயின் தொகையும் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் மற்றும் 35 திணைக்களங்களின் அபிவிருத்தி நிதியக் கணக்குகளில் கூட்டுமொத்தமாக ரூபா 13.16 மில்லியன் தொகையொன்று மீளாய்வாண்டின் போது விளைவற்று காணப்பட்டது. 27 நிதியக் கணக்குகளில் கூட்டுமொத்தமாக ரூபா 50.47 மில்லியன் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கூட்டு மொத்தமாக ரூபா 4.55 மில்லியன் தொகையான 26 புலமைப்பரிசில் நிதியம் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. புலமைப்பரிசில் கையளித்தல் நியதிகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் அதற்கான காரணமாக இருந்தன.

### ஆராய்ச்சிகளை அமுல்படுத்துவதற்காக கிடைத்த நிதியம்

சகல விரிவுரையாளர்களையும் நிரந்தரமான ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும், அந்த ஆராய்ச்சிகளை அமுல்படுத்துவதற்காக 29 நிதியங்களில் இருந்து ரூபா 8.10 மில்லியன் கிடைத்திருந்தது. களனி பல்கலைக்கழகத்தினால் அந்த ரூபா 8.10 மில்லியன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

ருஹுணு பல்கலைக்கழகத்தில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 31.06 மில்லியன் தொகையான ஆராய்ச்சி நிதி உதவி மீதியில் 2014 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையாக காலத்தில் ரூபா 2.13 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த உதவி தொகையை ஆக்க பூர்வமாக பயன்படுத்துவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெளிநாடு செல்லல்

- களனி பல்கலைக்கழகத்தில் பட்டபின் மற்றும் கலாநிதி பட்டங்களுக்காக 2011 ஆம் ஆண்டு முதல் 22 விரிவுரையாளர்கள் வெளிநாடு சென்றிருந்ததுடன் குறித்த காலத்தின் போது மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. அந்த விரிவுரையாளர்கள் கைச்சாத்திட்டுருந்த பிணை முறி ஒப்பந்தத்தை மீறியமையினால் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 97.26 மில்லியன் அறவிட வேண்டி காணப்பட்டது. அவ்வாறே அனுபவம் மற்றும் தகைமைபெற்ற விரிவுரையாளர்கள் வெளிநாடு சென்று மீண்டும் சமூகம் அளிக்காமையினால் அந்த அறிவினை பல்கலைக்கழகத்திற்கு வழங்கும் சந்தர்ப்பங்களும் இழக்கப்பட்டிருந்தது.
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் 42 விரிவுரையாளர்கள் பட்டப்பின் பாடநெறிகளுக்காக வெளிநாடு சென்று மீண்டும் சேவைக்கு சமூகமளிக்காமையின் காரணமாக உடன்படிக்கையை மீறியமையின் அடிப்படையில் 2020 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 113.71 மில்லியன் பிணை முறி பெறுமதி அறவிட வேண்டியதாக காணப்பட்டது.
- மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற 37 விரிவுரையாளர்களின் உடன்படிக்கை மற்றும் பிணை மீறப்பட்டமையின் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 76.86 மில்லியன் அறவிட வேண்டி காணப்பட்டது. 09 விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 5.83 மில்லியன் 20 வருட காலமாக நிலுவையாக காணப்பட்டது.

### பட்டபின் படிப்பு தகைமைகளை பூர்த்தி செய்யாமை

களனி பல்கலைக்கழகத்தின் பட்டபின் படிப்பு தகைமைகளை பூர்த்தி செய்வதற்காக முழுச் சம்பளம் மற்றும் படிகளுடன் கற்கை விடுமுறை மற்றும் மூலதன மானியங்களைப் பெற்று வெளிநாடு சென்ற 05 விரிவுரையாளர்கள் அந்த தகைமைகளை பூர்த்தி செய்யாமல் மீண்டும் சேவைக்கு சமூகமளித்திருந்தனர். இதன் காரணத்தினால் விரிவுரையாளர்களின் அறிவினுள் கல்வியின் தரத்தன்மையை அதிகரிக்கும் அடிப்படை நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### நிர்வாக கட்டிடத்தை விரிவுபடுத்துதல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிர்வாக கட்டிடத்தை விரிவுபடுத்துவதற்காக 2016 மார்ச் மாதத்தின் போது அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் ரூபா 49.14 மில்லியன் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) இன்றி கிரய மதிப்பீடொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், 10 மாதத்தில் ஒட்டுமொத்த நிர்மாண நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2020 யூன் 30 ஆம் திகதி வரையிலும் இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

### விளையாட்டுத் தொகுதியொன்றை நிர்மாணித்தல்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் 50 ஆவது ஆண்டு நிறைவை பூர்த்தி செய்து சர்வதேச மட்டத்தில் மாநாட்டு மண்டபம் ஒன்றும், ஓய்வு மண்டபம் ஒன்றும் மற்றும் நீச்சல் தடாகம் ஒன்றுடன் விளையாட்டுத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 618 மில்லியன் மதிப்பீட்டினைக் கொண்ட செயற்திட்டமொன்று நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு 2014 பெப்ரவரி 13 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. ஆரம்ப பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பந்தத்தை கையளித்தல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### உலக பல்கலைக்கழக தரமிடல்

உலக பல்கலைக்கழக தரமிடலின் பிரகாரம் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் 2012 ஆம் ஆண்டின் போது 2758 ஆவது இடத்தை பெற்றிருந்த போதிலும் 07 வருடங்கள் கடந்ததன் பின்னர் மீளாய்வாண்டில் அந்த இடம் 2960 வரை பின்னடைந்திருந்தது. உலக பல்கலைக்கழக தரமிடலின் போது ஆராய்ச்சி மற்றும் அடைவுகளுக்காக 60 சதவீதமான புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தமையினால் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி செயல் முன்னேற்றத்தை அதிகரிக்காமை அதற்கான காரணமாக இருந்தது.

### புலமைப்பரிசில் நிதியத்தின் குறைவான பயன்பாடு

மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 101 பரிசு மற்றும் புலமைப் பரிசில் நிதியத்தின் கீழ் ரூபா 32 மில்லயன் காணப்பட்டது. அந்த நிதியத்தில் ரூபா 5 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. 30 நிதியங்களின் கீழ் உள்ள ரூபா 20.39 மில்லியன் உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்று காணப்பட்டது. அவ்வாறே 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 36 ஆராய்ச்சி நிதியத்தின் கணக்குகளில் ரூபா 40.07 மில்லியன் தொகையொன்று 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முழுவதும் எந்தவொரு பயன்படுத்தலுமின்றி காணப்பட்டது. மேலும், 08 ஆராய்ச்சி நிதியங்களின் கூட்டுமொத்தம் ரூபா 4.70 மில்லியன் தொகையொன்றும், 15 விஷேட நிதியக் கணக்குகளின் கீழுள்ள ரூபா 73.07 மில்லியன் தொகையொன்றும் மீளாய்வாண்டின் போது எவ்விதமான பயன்பாடும் இன்றி பயனற்று காணப்பட்டது.

### “BIT” பாடநெறி நடத்துதல்

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிறுவனத்தின் மூலம் ஒன்றிணைக்கப்படுகின்ற “BIT” பாடநெறிக்காக தனியார் நிறுவனங்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனங்களினாலும் வருடமொன்றில் 60 பேர்களையுடைய ஆகக் குறைந்த மாணவர்களின் எண்ணிக்கை சேர்க்கப்பட வேண்டியிருந்தது. காலப் பகுதியில் 14 மாணவர்கள் முதல் 40 மாணவர்கள் வரையான அளவில் சேர்க்கப்படாமையினால் இரண்டு தனியார் நிறுவனங்களில் இருந்து நிறுவனத்திற்கு ரூபா 8.255 மில்லியன் அறவிட வேண்டியிருந்தது. 2020 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரையிலும் அந்த நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் “BIT” பாடநெறிக்காக உழைக்கப்பட்டிருந்த

வருமானத்தில் உடன்படிக்கையின் தரப்பினர் அல்லாத கம்பனிக்கு நிர்வாக கட்டணமாக ரூபா 13.02 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

### பூங்காவினை அலங்கரித்தல்

மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் பூங்காவை அலங்கரித்தல் சரியான திட்டமிடலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக தனியார் ஒப்பந்தகார கம்பனியொன்றுக்கு செலுத்தப்பட்ட ரூபா 3.09 மில்லியன் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது.

### பரிசு மற்றும் நன்கொடை

ருஹுணு பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பரிசு மற்றும் நன்கொடை கணக்கில் ரூபா 612.91 மில்லியன் கூட்டுமீதியொன்று காணப்பட்டது. அந்த கணக்குகளுக்கிடையே கூட்டுமொத்தமாக ரூபா 12.92 மில்லியன் தொகையான 22 கணக்குகள் 03 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான வீச்சில் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

### கருவா ஆராய்ச்சி செயற்திட்டம்

ருஹுணு பல்கலைக்கழகத்தினால் அமுல்படுத்தப்பட்ட கருவா ஆராய்ச்சி செயற்திட்டத்தின் மூலம் ரூபா 3.95 மில்லியன் செலவில் 2018 ஏப்ரல் 26 ஆம் திகதி GC உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த உபகரணங்கள் எவ்வித ஆராய்ச்சி நடவடிக்கைகளிலும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், அது பயன்படுத்தும் நிலையிலும் காணப்படவில்லை.

### செலுத்தப்படாத மாணவர் உதவி பணம்

ருஹுணு பல்கலைக்கழகத்தின் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செலுத்தப்படாத மாணவர் நிதி உதவி ரூபா 9.79 மில்லியன் ஆக காணப்பட்டது. அந்த மீதியில் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 9.54 மில்லியன் செலுத்தப்படாத மாணவர் நிதி உதவி மீதியொன்று காணப்பட்டது. அந்த மாணவர் நிதி உதவியை செலுத்துவதற்காக கட்டுப்பாட்டு அதிகார சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

# திறன்கள் அபிவிருத்தி

நிகழ்கால மற்றும் எதிர்கால உழைப்பாளர் படை மிகவும் சிக்கலான பொருளாதார முறைக்கு ஏற்றவாறு நவீனமயாமான கல்வி மற்றும் திறன்களையுடைய நபர்களை கொண்டிருத்தல் மிகவும் முக்கியமானதாகும். அதற்காக திறன்கள் மற்றும் அறிவு இடையேயான இடைவேளியைக் குறைப்பதற்கு பொருளாதாரத்தில் காணப்பகின்ற உயர் மற்றும் மூன்றாம் நிலை கல்வி வாய்ப்புக்களை மேம்படுத்தல் வேண்டும். அந்த நோக்கத்தினை நிறைவு செய்வதற்காக தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் பற்றிய அமைச்சின் கீழ் திணைக்களமொன்று மற்றும் 10 நியதிச் சட்ட அதிகார சபைகளின் கீழ் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- பல்கலைக்கழக கல்விக்கான தகைமைகள் கிடைக்கப்பெறாத மாணவர்களுக்கு தொழிற்கல்வி தேவைப்பாட்டினை விரிவுப்படுத்துவதற்கு கொள்கைகளை தயாரித்தல் மற்றும் வசதிகளை அளித்தல்.
- வேலைச் சந்தைக்கு ஏற்றவாறான உழைப்பாளர் படையினை உருவாக்குவதற்கு தொழில்நுட்ப மற்றும் மூன்றாம் நிலை கல்வியினை நவீனமயமாக்கல்.
- பயிற்சி வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தொழில் கல்விக்கான ஆழத்தினை மேம்படுத்துவதற்கான உபாய நுட்பங்களை தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல்.

மேற்குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த இரு ஆண்டுகளுக்காக ரூபா 33,702.53 மில்லியன் ஆன நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 28,132.01 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காலக்கட்டத்தினுள் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் 16.53 சதவீதம் ஆன, அதாவது ரூபா 5,570 மில்லியன் ஆன நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. தகவல்கள் வரைப்படம் 50 மூலம் காட்டப்படுகின்றது.




வரைப்படம் 50 பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு மற்றும் பயன்பாடு

மூலம் - திறைச்சேரியின் இறுதி கணக்கறிக்கை

### பாடநெறி தொடர்பான விழிப்புணர்வு

தொழிற் கல்விக்கான போக்கினை மேம்படுத்துவதற்கான உத்திகளை வகுத்து செயற்படுத்தல் அமைச்சின் பணியாக இருப்பினும், அமைச்சின் கீழ் காணப்படும் தொழிற் பயிற்சி மத்திய நிலையங்களில் செயற்படுத்தப்படுகின்ற சில பாடநெறிகளுக்காக மாணவர்களை ஈர்ப்பதற்கான முறைமையான வேலைத் திட்டங்கள் இல்லாத காரணத்தினால் மாணவர்களின் பங்களிப்பு குறைவான மட்டத்தில் காணப்பட்டது. அதன் பிரகாரம் அதிகளவு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக போதுமான திறன் மற்றும்

தேவையான அனைத்து வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்த வளங்கள் வினைத்திறனாக மற்றும் விளைதிறனாக பயன்படுத்துவதற்கு தேவையான உயர்நதபட்ச மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு தவறப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அமைச்சிற்கு சொந்தமான பயிற்சி நிறுவனங்களில் மாணவர் கொள்திறன் 136,920 ஆக இருப்பினும், இணைக்கப்பட்டிருந்த மாணவர் எண்ணிக்கை 111,642 ஆக காணப்பட்டது.

சில பாடநெறிகளுக்கான மாணவர்களின் விருப்பமின்மை, பாடநெறிகளுக்காக இணைத்துக் கொள்ளும் மாணவர்களில் கணிசமான வீதத்தினர் பாடநெறிகளை விட்டுச்செல்லல், மிகவும் பிரபல்யமான சில பாடநெறிகளுக்காக மட்டும் மாணவர்கள் அதிகளவாக உந்தப்படல் போன்ற காரணங்களினால் வேலை சந்தைகளில் கேள்வி காணப்படுகின்ற துறைகளுக்கான மாணவர்களின் கவனம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### பாடநெறி அபிவிருத்தி

பயிற்சி தரங்களை நிறுவுதல் மற்றும் பாடத்திட்ட அபிவிருத்தி தொழிற் கல்வியில் மிகவும் முக்கியமான காரணியாக காணப்பட்டது. பூகோளரீதியான தேவைப்பாடுகள் மற்றும் தொழில் தேவைப்பாடுகளின் அடிப்படையில் பயிற்சி துறைகளுக்கு தொடர்புடைய பயிற்சி தரவுகளை நிறுவுதலும், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப பாடநெறி நவீனமயமாக்கப்படுவதற்கு பாடதிட்ட அபிவிருத்தியும் தேவைப்படுகின்றது. இது தொடர்பான கவனம் குறைவாக காணப்பட்டதுடன் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு 2017 சனவரி மாதத்திலிருந்து 2019 செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் தொழில்துறையின் தேவை மற்றும் கேள்வி ஆகியவற்றின் அடிப்படையில் 317 வேலை வாய்ப்புக்களுக்காக பாடதிட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் 170 வேலை வாய்ப்புக்களுக்கான தேசிய தொழில் தகைமைகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த வெளியிடப்பட்ட சான்றிதழ்களில் 21 சதவீதமான, அதாவது அதிகளவு எண்ணிக்கையிலான சான்றிதழ்கள் கணினி மற்றும் அதற்கு தொடர்புடைய வேலை வாய்ப்புக்களிற்குரியவையாக காணப்பட்டன. எவ்வாறாயினும், நிறுவனங்களின் கேள்வி மற்றும் தொழில் துறையின் தேவையின் அடிப்படையில் ஆணைக்குழு பாடதிட்டங்களை அபிவிருத்தி செய்திருப்பினும், முறையாக அடையாளப்படுத்தப்பட்டு செயற்படாமையினால் நவீன உலகத்திற்கு பொருந்தக்கூடிய வண்ணம் வேலைவாய்ப்புக்களுக்கு உடன்படும் போக்கொன்று காணப்படவில்லை. கடந்த 3 ஆண்டுகளில் 50 பாடநெறிகள் மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன.

### தொழிற்பயிற்சி பாடநெறிகளின் தரத்தில் அபிவிருத்தி காணப்படாமை

1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் பிரகாரம் தேசிய தொழிற் தகைமையுடைய (NVQ) பாடநெறிகள் நடத்தப்படுவதற்கு பயிற்சி பாடநெறிகள் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் தரமான பாடநெறிகள் பெற்றுக்கொடுப்பதற்கு அந்த பாடநெறிகளுக்கான அங்கீகாரம் பெற வேண்டியிருப்பினும் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற சில பாடநெறிகளுக்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. உயர் தரத்திலான தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளும் கல்வி மற்றும் பயிற்சி பெற்றுக் கொடுப்பதென்றால் பாடநெறிகளுக்கான அங்கீகாரம் பெறப்படுதல் அவசியமானதாகும். கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற 06 பல்கலைகழக கல்லூரிகள் உள்ளடங்கலாக 06 நிறுவனங்களில் நடத்தப்படுகின்ற 2566 பாடநெறிகளில் 683 பாடநெறிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை..

நிகழ்கால வேலைச் சந்தையில் தேசிய தொழிற் தகைமைக்கான (NVQ) கேள்வியொன்று காணப்படுவதுடன் அவ்வாறான பாடநெறிகளினூடாக உருவாக்கப்பட்ட பயிற்சியளிக்கப்பட்ட உழைப்பாளர் படையொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. அரச துறையை போலவே தனியார் துறை நிறுவனங்களிலும் கணிசமான அளவில் அங்கிகரிக்கப்படாத பாடநெறிகள் நடத்தப்படுகிறதுடன், தனியார் துறை நிறுவனங்களினால் நடத்தப்படுகின்ற பாடநெறிகளின் தரத்தினை உருவாக்குவதற்காக பாடநெறிகளின் அங்கீகாரம் தொடர்பில் முறையான கவனம் செலுத்தப்படல் வேண்டும். மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல்களிற்கமைய 2019 ஆண்டு வரையில்

தொழிற்பயிற்சி பாடநெறிகள் நடத்தப்படுகின்ற செல்லுபடியாகும் பதிவினை கொண்ட தனியார் துறை நிறுவனங்கள் 729 மட்டுமே காணப்பட்டன. அவ்வாறே, தனியார் துறையில் பதிவுசெய்யப்பட்ட 2788 பாடநெறிகள் காணப்பட்டாலும், அதில் 613 பாடநெறிகள் மட்டுமே அங்கீகாரம் பெற்றிருந்தன.

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்த தொழிற்பயிற்சி பாடநெறிகள் நடத்தப்படுகின்ற அனைத்து நிறுவனங்களும் 2017 ஆம் ஆண்டிலிருந்து தர முகாமைத்துவ அமைப்பொன்று நிறுவப்பட்டு இதன் தரம் தொடர்பில் சான்றிதழொன்று ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும் என திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் 2016 பெப்ரவரி 26 ஆம் திகதிய MSDVT/SSDP/2016-1 இலக்க சுற்றறிக்கையில் அத்தியாவசியமாக்கப்பட்டிருந்தது. எனினும், தொழிற்கல்வி பாடநெறிகள் நடத்தப்படுகின்ற தனியார் மற்றும் அரச துறையில் 2740 பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் நாடு முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டிருப்பினும், 2019 நவம்பர் 19 ஆம் திகதி வரையில் அதில் 224 நிறுவனங்களில் மட்டும் தர முகாமைத்துவ சான்றிதழ்களை பெற்றிருந்தன.

### பயிற்சி சந்தர்ப்பங்கள் அபிவிருத்தி செய்யப்படாமை

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற 1,368 பயிற்சி நிலையங்களில் 2019 ஆம் ஆண்டு வரையில் இணைக்கப்படகூடிய மொத்த மாணவர் கொள்திறன் 136,920 ஆக காணப்பட்டது.

தேசிய தொழிற்தகைமை 5,6 பாடநெறிகள் கற்கும் மாணவர்களுக்கு தேசிய தொழிற் தகைமை 7 இனை உடைய பட்டம் மட்டத்திற்கு செல்வதற்கு தொழில் பயிற்சி துறையின் பட்டம் மட்ட பாடநெறி நடத்தப்படுகின்ற அரச துறைக்கு உரிய ஒரே பல்கலைகழகம் தொழில்நுட்ப பல்கலைகழகமாக காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டிவிருந்து 2019 ஆம் ஆண்டு வரை NVQ 5,6 பாடநெறிகள் பூர்த்தி செய்து பயிற்சி நிறுவனங்களிலிருந்து வெளியேறுகின்ற பட்ட மட்டத்தின் பாடநெறிகள் பயில்வதற்கு எதிர்பார்க்கும் மாணவர்களின் கூட்டுத்தொகை 7099 ஆன நபர்களின் பல்கலைகழகத்தின் கொள்திறன் பிரகாரம் 1,920 மாணவர்கள் மட்டும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். இந்த காரணத்தினால் தேசிய தொழிற் தகைமை 5,6 பாடநெறிகள் கற்கும் பட்டம் எதிர்பார்க்கின்ற மாணவர்களுக்கு பல்கலைகழக கல்வி பெறப்படுகின்ற சந்தர்ப்பம் தவறியிருந்தது.

6 பல்கலைகழ கல்லூரிகளில் தற்போது தேசிய தொழிற் தகைமை 5,6 மட்டத்தில் 22 பாடநெறிகள் நடத்தப்படுகின்றது. பட்டம் மட்டத்தில் பாடநெறிகள் நடத்தப்படுகின்ற தொழில்நுட்ப பல்கலைகழகம் மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு இணையாக கட்டிட சேவை தொழில்நுட்பம், உணவு தயாரிப்பு தொழில்நுட்பம், சினிமா மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு தொழில்நுட்பம், அளவு ஆய்வு பாடநெறி, கட்டுமான தொழிநுட்ப பாடநெறி, ஹோட்டல் முகாமைத்துவ பாடநெறி மற்றும் மெகாடொனிக்ஸ் தொடர்பான 7 பட்டப் படிப்புக்கள் மட்டுமே நடத்தப்படுகின்றன. கல்லூரிகளில் நடத்தப்படுகின்ற ஏனைய 15 பாடநெறிகளுக்காக இணையான பாடநெறிகள் இல்லாமையின் காரணத்தினால் அந்த பாடநெறிகள் பயிலும் மாணவர்களுக்கு தாங்கள் பயிலும் விடயபரப்பில் பட்டம் மட்டம் வரை கல்வி பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

### கல்வி பணிநிலையினரின் பதவி வெற்றிடங்களை குறைத்தல் மற்றும் பயிற்றுனர்களின் பயிற்சி

தரமான தொழிற்பயிற்சியொன்று பெற்றுக் கொடுப்பதென்றால் கல்வி பணிநிலையினர் அதற்கான போதுமான அறிவினை உடையவர்களாக இருத்தல் வேண்டும். அவ்வாறே, தொழிற்பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களின் தரத்தினை உயர்த்துவதற்கு தொடர்புடைய போதுமான கலவ்வி பணிநிலையினரை இணைத்தல், அவர்களின் கல்வியின் தரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக கற்றுக் கொடுக்கும் பாடம் துறைக்கு தொடர்புடையதாக போதுமான பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களுக்கு பங்கேற்பதற்கு சந்தர்ப்பத்தினை வழ்ங்கல் வேண்டும். எவ்வாறாயினும், இங்கு அனுபவமுள்ள பயிற்றுனர்களின் பற்றாக்குறை மற்றும் போதுமான பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களும் காணப்படவில்லை.

### பூகோள ரீதியான வேலைவாய்ப்பு தேவைகளை அடையாளப்படுத்தி அதன் பிரகாரம் பாடநெறிகளை அபிவிருத்தி செய்தல்

இளைஞர், பெண்கள் மற்றும் உயர் கல்வி தகைமை உடைய தரப்பினர் இடையில்

காணப்படும் உயர் வேலையின்மை பொருளாதாரத்தில் நீண்ட காலமாக காணப்படும் பிரச்சனையாக உள்ளது. தொழிற் பயிற்சி நிறுவனங்களின் ஊடாக உருவாக்கப்படும் தொழிற்லாளர்கள் தேசிய மற்றும் சர்வதேச தொழில்களின் வேலைகளுக்கு பொருந்தாமை, வெவ்வேறு கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடநெறிகளை பின்பற்றும் பயிற்சி முறையிலிருந்து அந்த தேவைகளை விரித்திசெய்வதற்கு போதுமானதாக காணப்படாமை, முதன்மை வேலை இலக்கை நோக்கி பாடநெறிகள் அபிவிருத்தி செய்யப்படாமை, வேலை சார்ந்த பாடநெறிகளின் பற்றாக்குறை போன்று தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப கல்வி நவீனமயப்படுத்தப்படாமையின் காரணத்தினால் உழைப்பாளர் சந்தையில் தொழில் மற்றும் திறன்கள் இடையில் பொருத்தம் காணப்படாமை, திறன்களின் பொருத்தமின்மையுடன் தொழில் நோக்கான பயிற்சி பாடநெறிகள் காணப்படாமையினால் தொழிற் சந்தைக்கு பொருத்தமான உழைப்பாளர் படை உருவாக்குதல் கடினமானதாக காணப்பட்டது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை சந்தையின் தேவைகளை அடையாளம் கண்டு அதன் அடிப்படையில் புதிய பாடநெறிகளை உருவாக்குதல் மற்றும் பாடதிட்டங்கள் அபிவிருத்தி செய்வதற்கான கவனம் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. அதன் பிரகாரம், 2017 ஆம் ஆண்டில் பல்கலைகழக கல்லூரிகள் உட்பட 12 நிறுவனங்களில் 4 நிறுவனங்கள் மட்டும் 16 புதிய பாடதிட்டங்கள் அறிமுகப்படுத்தியிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் 03 நிறுவனங்கினால் மட்டும் 21 பாடநெறிகள் அறிமுகப்படுத்தியிருந்தன.

### தொழிற்பயிற்சி பாடநெறிகள் நிறைவு செய்த மாணவர்கள் தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கைகள்

அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற பல மத்திய நிலையங்களில் தொழிற்பயிற்சியினை நிறைவு செய்த பயிற்சியாளர்களின் வேலைவாய்ப்பு தொடர்பான பின்னூட்டல் நிகழ்ச்சி திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, பயிற்சியாளர்களின் தொழில் தொடர்பான தரவுத்தளங்கள் இல்லாமையினால் தற்போது நடத்தப்படுகின்ற பாடநெறிகள் தொழிற் சூழலுக்கு எவ்வாறு பொருந்துகின்றது, அதை நவீனமயமாக்கல் அவசியமானதா தொடர்பான மதிப்பீடிற்கான சந்தர்ப்பம் இழந்திருந்தது. அவ்வாறே அரச மட்டத்தில் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களை ஒருங்கிணைத்தல், அரச மற்றும் தனியார் கூட்டு வாய்ப்புக்களை அடையாளப்படுத்தி மாணவர்கள் வேலைக்கமர்த்தல், சுய வேலைவாய்ப்புக்கான பங்களிப்பினை பெற்றுக் கொடுத்தல் தொடர்பான முறையான பின்னூட்டல் வேலைத்திட்டங்களின் தேவை காணப்பட்டது.

### திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்களின் செயலாற்றல்

அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி துறையில் 11 நிறுவனங்கள் மற்றும் அதன் கீழ் நாடு முழுவதும் பரவியுள்ள தொழிற்பயிற்சி மத்திய நிலையங்களின் வலைப்பின்னலினூடாக திறமைகளுடன் கூடிய இளைஞர்களை உருவாக்குவதற்காக தொழிற்பயிற்சி பாடநெறிகள் நடத்தப்படுகின்றன. அதன் பிரகாரம், திறன்களை கொண்ட உழைப்பாளர் படையை உருவாக்குவதற்கான அமைச்சின் பணிகள் நிறைவேற்றிக் கொள்வதற்கு வலுவான பங்களிப்பொன்று திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 258 திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்கள் 264 பிரதேச செயவாளர் அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தனர். தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்குவதுமே திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்களின் முதன்மை பணியாக காணப்பட்டது. அதன் கீழ் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான இலக்குடைய குழுக்களை அடையாளம் காணல், தொழில் வழிக்காட்டல் மற்றும் ஆலோசனை வேலைதிட்டங்களை செயற்படுத்தல், பயிற்சிக்காக மாணவர்களை வழிநடத்தல், பயிற்சியாளர்களுக்கான வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்பு மற்றும் சுய தொழில் சந்தர்ப்பங்களை ஒருங்கிணைத்தல் பணிகள் நிறைவேற்ற வேண்டியிருந்தது. அந்த உத்தியோகத்தர்களினால் தங்கள் பணிகள் நிறைவேற்றப்படும் போது பின்வரும் பலவீனமான செயலாற்றல் அடையாளப்படுத்தப்பட்டது.

- அனுமதிக்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் திட்டத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களில் கல்வி பொது தராதர (சாதாரண) மாணவர்களுக்கான 3,167 தொழிற் வழிக்காட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படவேண்டியிருப்பினும், அதில் 50 சதவீதம் ஆன, அதாவது 1,575

வேலைத்திட்டங்கள் மட்டும் நடத்தப்பட்டன. அவ்வாறே கல்வி பொது தராதர (உயர்தர) மாணவர்களுக்கான 2,175 வேலைத்திட்டங்கள் நடத்தப்பட வேண்டியிருப்பினும், அதில் 1,617 வேலைத்திட்டங்கள் மட்டும் நடத்தப்பட்டிருந்ததுடன், பாடசாலையை விட்டு சென்ற இளைஞர் குழுக்களுக்காக தொழிற் பயிற்சி தொடர்பாக 2,578 விழிப்புணர்வு வேலைதிட்டங்கள் நடத்தப்படவேண்டியிருப்பினும், அதில் 1,731 வேலைத் திட்டங்கள் மட்டும் நடத்தப்பட்டிருந்தன.

- ஒவ்வொரு துறையின் கீழும் அடையாளப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் பயனாளிகளை அடையாளம் காணல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. பாடசாலை விட்டுச்சென்ற இளைஞர் குழுக்கள் தொழிற் பயிற்சிக்கு பணித்தலுக்காக எதிர்பார்பார்க்கும் பயனாளிகள் அடையாளப்படுத்தல் முன்னேற்றம் 10 சதவீதமும், தொழில் துறையின் வேலை வாய்ப்பு ஒருங்கிணைத்தல் வேலைத்திட்டங்களின் கீழ் அடையாளப்படுத்துவதற்கு எதிர்பார்க்கபட்ட பயனாளிகளில் 5 சதவீதமும், சுய தொழில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற இளைஞர் யுவதிகள் அடையாளப்படுத்தல் 1 சதவீதமுமாக காணப்பட்டது. தொழில்துறையில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட எந்தவொரு பயனாளிகளும் அடையாளப்படுத்தப்படவில்லை.

### சுய வேலைவாய்ப்பினை உருவாக்கும் கடன் (SEPI) திட்டத்தின் II ஆம் கட்டம்

தொழிற் பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சுய தொழில் ஆரம்பிப்பதற்கு உதவும் நோக்கத்துடன் நிதி அமைச்சு, திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியுடன் சுய தொழில் வாய்ப்பு உருவாக்கும் கடன் (SEPI) திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. 2010 ஆண்டில் அதன் முதலாம் கட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. 1,088 கடன் பெறுநர்களுக்காக ரூபா 225 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்தது. கடன் திட்டத்தின் II ஆம் கட்டம் 2016 மார்ச் 29 ஆம் திகதியிலிருந்து 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை செயற்படுத்துவதற்காக மேற்குறிப்பிட்ட தரப்பினர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றுக்கு உடன்பட்டிருந்தனர். திறன்களுடன் கூடிய உழைப்பாளர் படை சுய தொழில்களினூடாக வலுப்படுத்தல், கடன் திட்டத்தின் பிரதான நோக்கமாக காணப்பட்டது. இந்த கடன் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மீண்டும் செலுத்தல் அடிப்படையில் 7 சதவீத கடன் வட்டியின் கீழ் ரூபா 500,000 ஆன கடன் பணம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

- புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் சுய வாய்ப்பினை உருவாக்கும் (SEPI) கடன் திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குள் ரூபா 375 மில்லியன் ஆன கடன் வழங்குவதற்கு உடன்படிக்கை மேற்காள்ளப்பட்டிருந்தது. கடன் பெற்றுக் கொள்வதற்காக முன்வந்த கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் தேவையின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் ரூபா 50 மில்லியன் உம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 60 மில்லியன் ஆக மேலதிக நிதிஏற்பாடு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அமைச்சின் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு பெறப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை கடன் வழங்கலுக்காக ரூபா 409.67 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

- தேசிய தொழிற் தகைமை உடைய இளைஞர் யுவதிகள் வாழ்வாதார பாதைக்கு வழிநடத்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ் கடன் பெற்றுக் கொள்வதற்காக தேசிய தொழிற் தகைமையுடைய பாடநெறியொன்று கற்க வேண்டியதுடன், 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 790 நபர்களுக்காக ரூபா 352.22 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இந்த கடன் திட்டத்தின் கீழ் கடன் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யும் பொறுப்பு அமைச்சுக்கு கொடுக்கப்பட்டிருப்பினும், அமைச்சின் தலையீடு இல்லாமல் அனுமதிக்கப்பட்ட வங்கியினால் கடன் பெறுபவர்கள் தெரிவு செய்யப்பட்டு கடன் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 618 கடன் பெறுநர்களில் தோராயமாக தெரிவுசெய்யப்பட்ட 50

கடன் பெறுநர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது தேசிய தொழிற் தகைமையை பூர்த்தி செய்யாத மூன்று நபர்களுக்கு கடன் உடன்படிக்கையை மீறி ரூபா 1.50 மில்லியன் ஆன கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கடன் உடன்படிக்கையின் பிரகாரம் சுய தொழில் வியாபாரமொன்று ஆரம்பிப்பதற்காக தேவையான பிரதான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக கடன் பெற்றுக் கொடுக்க முடிந்திருப்பினும், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் ஏறத்தாழ 38 சதவீத அளவு வியாபாரம் விரிவுப்படுத்துவதற்காக கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், கடன் திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- நாடு முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்காக அமைச்சின் 264 திறன்கள் அபிவிருத்தி உதவியாளர்கள் இணைக்கப்பட்டிருக்கையில் கடன் பெறுநர்கள் தொடர்பான பின்னூட்டல் ஆய்வு அந்த உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்படாமல் 2006 ஆம் அண்டில் அரசின் பெறுகை வழிக்காட்டி கோவைக்கு முரணாக தனியார் நிறுவனத்திற்கு ரூபா 1.73 மில்லியன் மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தெரிவு செய்யப்பட்ட கடன் பெறுநர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது போதுமான பின்னூட்டல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- கடன் திட்டத்தில் பல்வேறு திருப்தியற்ற நிபந்தனைகள் அடையாளம் காணப்பட்டு இருந்ததுடன், அங்கு கடன் பெற்றுக் கொடுக்கும் போது நீண்ட காலம் செல்லல், வங்கி SEPI கடனை தொடர்பான குறைந்த கவனம் செலுத்தல், வங்கி SEPI கடன் திட்டம் தொடர்பாக அறிந்திராமை, SEPI கடன் திட்டத்தின் வட்டி வீதத்திற்கு அதிக வட்டி வீதத்தின் கீழ் கடன் பெற்றுக் கொடுத்தல் போன்ற குறைப்பாடுகள் கடன் பெறுநர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிட்ட ஆய்வின் போது அவதானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஆய்வு நிறுவனத்தின் மாதிரி பரிசோதனையின் பிரகாரம் கடன் பெறுநர்களில் 14 சதவீதத்திற்கு கிட்டிய அளவு தொடர்புடைய கடன் பணத்தில் எந்தவொரு வியாபாரமொன்றும் ஆரம்பித்தல் அல்லது அந்த வியாபாரம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிராததுடன் அமைச்சின் தலையீடு குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அதற்கு காரணமாக காணப்பட்டது.

## உலக இளைஞர் திறன்கள் தினம்

2019 உலக இளைஞர் தினத்தை முன்னிட்டு அமைச்சின் கீழ் காணப்படும் தொழில்நுட்ப கல்லூரிகள் / தொழிற்பயிற்சி நிறுவனங்களின் மாணவர்களின் உதவியுடன் நாடு முழுவதும் மாவட்ட ரீதியில் சமூக பராமரிப்பு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. மேற்கொள்ளப்பட வேண்டிய சமூக பராமரிப்பு உறுதியாக அடையாளம் காணப்படாமல் 25 மாவட்டங்களுக்காக ரூபா 4.91 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. உலக இளைஞர் திறன்கள் தினத்தை முன்னிட்டு திறன்களினூடாக வெற்றிகரமான வாழ்க்கை என்ற கருப்பொருளின் கீழ் ரூபா 2.08 மில்லியன் செலவிடப்பட்டு திறன்கள் தினம் கொண்டாட்டம் நடத்தப்பட்டிருந்த போதிலும் தற்போது தொழிற்கல்வி பெறும் மாணவர்களின் திறன்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டிருக்கவில்லை.
செலவிடப்பட்ட மொத்த செலவில் 70 சதவீதம், அதாவது ரூபா 1.42 மில்லியன் விழா ஒழுங்கமைப்பு, விழா ஹால் கட்டணம், சீருடை, மதிய உணவு மற்றும் தேநீர் விருந்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

## கிண்ணியா பிரதேசத்தில் பல்கலைகழக கல்லூரியொன்று நிர்மாணித்தல்

2017 யூன் 20 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மாணத்தின் பிரகாரம் 2017 – 2019 நடுத்தர வரவு செலவின் கீழ் ரூபா 434 மில்லியன் ஆன கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பல்கலைகழக கல்லூரியொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 50 மில்லியன் ஆன நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிஏற்பாடுகளில் பல்கலைகழகத்தினை சுற்றி சுவர் நிர்மாணித்தல் மற்றும் பல்கலைகழகம் நிர்மாணித்தலுக்காக ஆலோசனை சேவை பெற்றுக்கொள்வதற்கு சரியான நிறுவனமொன்று தெரிவு செய்தல் உட்பட சில செலவுகளுக்காக ரூபா 5.90 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

தேசிய தொழிற் தகைமை 5 மற்றும் 6 மட்டங்களின் பாடநெறிகள் ஆரம்பிப்பதற்காக 2020 ஆம் ஆண்டு வரையில் இந்த செயற்திட்டம் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், மீளர்யவாண்டின் இறுதி வரையிலும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 20 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிஏற்பாடுகளில் கல்லூரி பணிநிலையினரின் விடுதி நிர்மாணிப்பதற்காக 2019 ஒக்தோம்பர் 15 ஆம் திகதி வரையிலும் ரூபா 3.03 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தேவை மதிப்பீடு அறிக்கையின் பிரகாரம் இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளுக்கு மேலதிகமாக செலவு செய்வதற்கு தேவையேற்படின் அது துறை திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தினூடாக நிதியளிக்க வேண்டுமென கூறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் துறை திறன் அபிவிருத்தி செயற்திட்டம் 2020 ஆண்டுடன் நிறைவடைகின்றது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிர்மாண பணிகள் மேற்கொள்ளப்படாதிருக்கையில் தேவையான மேலதிக நிதியம் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தினூடாக பெற்றுக்கொள்ளும் திறன் தொடர்பாக அபாயம் காணப்பட்டது.

### இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தின் மாணவ விடுதியொன்று நிர்மாணித்தல்

கிளிநொச்சி இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தின் 400 மாணவர்களுக்காக ரூபா 300 மில்லியன் மொத்த செலவில் மாணவ விடுதியொன்று நிர்மாணிப்பதற்கு அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் ஆலோசனை சேவை கட்டணம் செலுத்துவதற்காக ரூபா 6.03 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 100 மில்லியன் ஆன நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதி வரையிலும் விடுதி நிர்மாணிப்பதற்காக தகுதியான ஒப்பந்தக்காரரொருவர் தெரிவு செய்தல் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வரவுசெலவு திட்டத்தினூடாக ஒதுக்கப்பட்ட ரூபா 200 மில்லியன் இற்கு மேலதிகமாக ஏற்கப்பட வேண்டிய செலவு திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிதிஏற்பாட்டின் கீழ் செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருப்பினும், அந்த செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவிருந்தது.

### இலங்கை பெருங்கடல் பல்கலைகழகம் இடவசதியுள்ள சூழலில் நிர்மாணித்தல்

பெருங்கடல் பல்கலைகழகத்தில் தரமான பட்ட பாடநெறிகள் செயற்படுத்தப்படுவதற்காக மேலும் இட வசதியுள்ள சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் புதிய பல்கலைகழக சூழலொன்னு அபிவிருத்தி செய்வதற்காக கொரிய சர்ததேச ஒத்துழைப்பு நிறுவனம் (KOIKA) கடன் வசதி பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்திருந்தது. 2017 ஆம் ஆண்டிலிருந்து அதற்காக தகுதியான காணியொன்று கையகப்படுத்துவதற்கு தவறிய காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2019 செப்தெம்பர் 05 ஆம் திகதிய இலங்கை பெருங்கடல் பல்கலைகழகத்தின் மாணவர் சங்கத்தின் கடிதமொன்றின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு நடுவில் செயற்திட்டம் செயற்படுத்துவதற்கு காணி பெறப்படாத பட்சத்தில் செயற்திட்டம் இழக்கப்படும் என செயற்திட்ட உத்தியோகத்தர்களினால் பல்கலைகழக நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தியமை குறிப்பிடப்பட்டிருந்து.

### இயக்க குத்தகை முறையின் கீழ் அமைச்சின் செயலாளருக்கு வாகனமொன்று பெற்றுக் கொள்ளல்

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் முன்னாள் அமைச்சின் செயலாளருக்கு 2016 செப்தெம்பர் 19 ஆம் திகதிய 01/2016 (i) இலக்கமுடைய சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 2016 மார்ச் 17 ஆம் திகதிய 01/2016 இலக்கமுடைய தேசிய வரவுசெலவு சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் ஆலோசனைகளுக்கு முரணாக உடன்படிக்கையொன்றுக்கு உடன்படல் காரணத்தினால் 2016 ஒக்தோம்பர் 21 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் 60 மாத காலத்திற்காக மாதத்திற்கு ரூபா 345,230 இற்கு (குத்தகை இல்லாமல்) இயக்க குத்தகை அடிப்படையில் வாகனமொன்று பெறப்பட்டிருந்தது. அமைச்சின் முன்னாள் செயலாளர் ஓய்வு பெறல் காரணத்தினால் 2018 நவம்பர் மாதத்திலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரையிலும் வகனம் செயலற்று காணப்பட்டது. அதன் பிரகாரம், மாதத்திற்கு ரூபா 345,230 வீதம் (குத்தகை இல்லாமல்) 14 மாதங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 5.62

மில்லியன் பொருளாதாரமற்ற செலவாக காணப்பட்டது.

### செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதில் தாமதம்

- தொழிற்நுட்ப பல்கலைகழகத்தின் பல்நோக்கு ஸ்டுடியோ வளாகம் மற்றும் விரிவுரை அறை வளாகமொன்றுடன் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்கு 2011 ஏப்ரல் 27 ஆம் திகதிய அமப/11/2152/539/017-1 இலக்கமுடைய அமைச்சரவை தீர்மாணத்தின் ஊடாக அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரையிலும் திறைச்சேறியிலிருந்து மற்றும் துறை திறன்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தினூடாக ரூபா 434.9 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதி வரையில் அதில் ரூபா 304.50 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் கணக்காண்டு இறுதி வரையிலும் ஸ்டுடியோ வளாகம் பயன்படுத்துவதற்கான நிலையொன்றிற்கு கொண்டு வரப்படவில்லை.
- 2017 சனவரி 03 ஆம் திகதி நடைப்பெற்ற அமப/16/2673/720/030 இலக்கமுடைய அமைச்சரவை தீர்மாணத்தின் பிரகாரம், தொழிநுட்ப பல்கலைகழகத்திற்காக வேலைத்தளம், விடுதி மற்றும் உணவகம் நிர்மாணிப்பதற்காக அனுமதி பெறப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 927.34 மில்லியன் ஆன நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மொத்தம் ரூபா 268 மில்லியன் நிதிஏற்பாடு வருடாந்த வரவுசெலவு மதிப்பீட்டினூடாக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருப்பினும், ஆலோசனை கட்டணமாக ரூபா 23.60 மில்லியன் மட்டும் செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### பணிப்பயில்வர்களை ஆய்வு செய்வதில் தாமதம்

2018 ஆம் ஆண்டில் மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 13 பயிற்சி நிலையங்களில் நடத்தப்பட்ட சுற்றுலா ஹோட்டல் துறைக்கு தொடர்புடைய 28 பயிற்சி பாடநெறிகளின் பணிப்பயில்வர்களின் ஆய்வு கணக்காய்வு திகதியாகிய 2019 திசெம்பர் 03 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### தேசிய திறன்கள் தரத்தினை இற்றைப்படுத்தப்படாமை

மூன்றாம்நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட சுற்றுலா தொழில் துறை திறன்கள் சபைக்கு தேசிய திறன்கள் தரத்தினை தயாரிப்பதற்காக துறை திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடாக 2018 ஆம் ஆண்டில் ரூபா 2.03 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், தலைமை சமையற்காரர் (செ.ஃப்) மற்றம் பேக்கரி பாடநெறிகளுக்காக தேசிய திறன்கள் தரம் இற்றைபடுத்தப்பட்டிருக்கவில்லை.

### பட்டம் பாடநெறிகளுக்காக மாணவர்கள் பதிவுசெய்தல்

கடற் தெழிலில் ஈடுப்ட்டுள்ள அல்லது ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கும் நபர்களின் தொழிநுட்ப மற்றும் முகாமைத்துவ திறமைகள் அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை பெருங்கடல் பல்கலைகழகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் 04 பட்ட பாடநெறிகளுக்காக 87 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். 2016 ஆம் ஆண்டு வரையில் மாணவர் எண்ணிக்கை 156 வரை வளர்ச்சி கண்டிருப்பினும், அதன் பின்னர் போதுமான வளர்ச்சியொன்று காணப்படவில்லை. 2019 ஆம் ஆண்டு வரையில் 05 பாடநெறிகளின் கீழ் 207 மாணவர்கள் பதிவு செய்திருந்தனர். 2015 ஆம் ஆண்டில் தொழிற்கல்வி பாடநெறிகள் கற்கும் மாணவர்கள் 466 ஆக காணப்பட்டதுடன் அங்கு போதுமான வளர்ச்சி காணப்படவில்லை. மீளாய்வாண்டில் அவ்வாறான 14 பாடநெறிகளின் கீழ் 604 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம், பட்ட பாடநெறிகள் மற்றும் தொழிற்கல்வி பாடநெறிகளுக்காக அதிகளவான மாணவர்கள் பதிவு செய்தல் குறித்து முகாமைத்துவதத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### கட்டிட வாடகை

இலங்கை பெருங்கடல் பல்கலைகழகத்தின் நிர்வாகம் மற்றும் கல்வி பணிநிலையினருக்கு வகுப்பு அறைகள், நூலகத்திற்காக, பயன்படுத்தும் நோக்கில் 2017 திசெம்பர் மாதத்திலிருந்து மாதாந்த வாடகை ரூபா 2.3 மில்லியன் வீதம் 16,800 சதுர அடி அளவான புதிய கட்டிடமொன்று வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மாதாந்த வாடகைக்கு மேலதிகமாக அந்த கட்டிடத்தின் உள்ளக தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா

22 மில்லியனம் செலவிடப்பட்டிருந்தது. எனினும், இதனால் இணைக்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை அல்லது நடத்தப்படுகின்ற பாடநெறிகள் அபிவிருத்தியடைந்திருந்தமை குறித்து உறுதி செய்வதற்கு போதுமான சாட்சிகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அது வரையில் பல்கலைகழகத்தினால் பயன்படுத்திய கட்டிட வளாகத்தில் 11,778 சதுர அடி ஆன அளவு நிகழ்காலத்தில் செயலற்று அல்லது குறைப்பயன்பாடுடன் காணப்பட்டது.

### செயலற்று காணப்பட்ட சொத்துக்கள்

2014 இன் 13 ஆம் இலக்க பெருங்கடல் பல்கலைகழக சட்டத்தின் 5.1 (25) உறுப்படியின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட வேண்டிய Sea Training Vessel Maintainance அலகு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. 1994 ஆம் ஆண்டிலிருந்து 2015 காலத்திற்குள் பெறப்பட்டிருந்த இந்த அலகிற்காக பயன்படுத்தக்கூடிய Inboard, Outboard மற்றும் அதிவேக படகு உட்பட 13 படகுகள் பிரதேச கல்லூரிகளில் செயலற்று மற்றும் குறை பயன்பட்டுடன் காணப்பட்டது.

### அஹுங்கம சுற்றாடல் ஹோட்டல் செயலற்று காணப்படுகின்றமை

1995 இன் 12 இலக்கமுடைய இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரகசபை ஸ்தாபித்தல் சட்டத்தின் நோக்கங்களுக்காக மற்றும் காணி கையகப்படுத்தல் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணாக 2016 மார்ச் 11 திகதிய 186/4 இலக்க பணிப்பாளர் சபை பத்திரிக்கை தீர்மாணத்தின் பிரகாரம் சுற்றுலா ஹோட்டலாக நவீனமயப்படுத்தல் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தலுக்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 148.92 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முன் திட்டம் இல்லாமல் நிர்மாணிக்கப்பட்ட அஹுங்கம சுற்றுலா ஹோட்டல், சுற்றுலா பயனிகளின் தங்குமிட வசதிகளுக்காக மற்றும் பயிற்சி பாடநெறிகள் கற்கும் பணிப்பயிலுனர்களின் பயிற்சி தேவைக்காக பயன்படுத்தப்படாமல் 2018 மார்ச் 8 ஆம் திகதியிலிருந்து செயலற்று காணப்பட்டது. நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் காரணத்தினால் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆரம்ப அரை ஆண்டு வரையுமே பயிற்சி பாடநெறிகளுக்காக பணிப்பயிலுனர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் அந்த காலத்தினுள் பயிற்சி பாடநெறிகள் நடத்துவதற்காக ரூபா 183.75 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட புதிய ஹோட்டல் பாடசாலையின் வேலைகள் 2019 யூலை 10 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தது.

### காரைநகர் ஹோட்டல் பாடசாலை சூழல் செயலற்று காணப்படுகின்றமை

சுற்றுலா பயனாளிகளுக்காக பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் மற்றும் யாழ்பாணம் மாவட்டத்தின் காரைநகர் ஹோட்டல் பாடசாலை சூழலினுள் முறையாக ரூபா 33.89 மில்லியன் மற்றும் ரூபா 57.13 மில்லியன் செலவிடப்பட்டு காற்று பதனாக்கம் மேற்கொள்ளப்பட்ட 12 முழுமயான அறைகள் மற்றும் காற்று பதனாக்கம் மேற்கொள்ளப்படாத 10 அறைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் சுற்றுலா பயனாளிகளை பங்குப்பெற செய்தல் மற்றும் ஹோட்டல் அறைகள் பேணல் மற்றும் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுவதற்காக பணிநிலையினர் இணைத்தலின் முன் திட்டமிடல் தயாரிக்கப்பட்டிராமை போன்ற காரணங்களினால் 2017 ஆம் ஆண்டிலிருந்து தொடர்புடைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் செயலற்று காணப்பட்டது.

### குச்சிவெளி மற்றும் அஹுங்கம விடுவிதிகள் செயலற்று காணப்படுகின்றமை

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் அஹுங்கம புதிய ஹோட்டல் பாடசாலையல் இரண்டு தட்டுக்கள் மற்றும் குச்சுவெளி ஹோட்டல் பாடசாலையில் 02 இரட்டை மாடிகளில் 12 அறைகளிலான பெண்கள் மற்றும் ஆண்கள் விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. விடுதி நிர்வாகி பதவிகளுக்காக இணைத்தல் திட்டமிடப்படாமையின் காரணத்தினால் குச்சுவெளி விடுதி 2017 ஆம் ஆண்டிலிருந்தும், அஹுங்கம விடுதி 2019 ஆம் ஆண்டிலிருந்தும் பயன்படுத்தப்படாமல் செயலற்றதாக காணப்பட்டது.

# தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள்

பயனுறுதிமிக்க, கைத்தொழில் பிணக்குகளற்ற தொழிலாளர் உறவினை ஏற்படுத்தும் நோக்கில் அமைச்சரவை அந்தஸ்தற்ற தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சும் அதன் கீழான இரண்டு திணைக்களங்களும் 07 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களும் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

- தொழில் மற்றும் தொழில்சங்க உறவுகள் தொடர்பான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடுதலும்
- ஊழியச் சேமலாப நிதியம் தனியார் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றை நிர்வகித்தல்
- சர்வதேச தொழிலாளர் நியமங்கள், பதவியணி நிர்வாகம் மற்றும் நலன்புரி சம்பந்தமான கொள்கைகளை தயாரித்தலும் செயற்படுத்தலும்
- சர்வதேச தொழிலாளர் நிறுவனம், சர்வதேச சமூக பாதுகாப்பு அமைப்புக்களுடன் ஒத்துழைப்பை பேணுதல்.
- தொழில் சங்கங்களை பதிவு செய்தலும் அரச மற்றும் தனியார் பிரிவுகளின் அனைத்து தொழிற்சங்கங்க நடவடிக்கைகளை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதற்குத் தேவையான விதத்தில் சாதகமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துதல்.
- தேசிய மனிதவலு மற்றும் தொழில்துறைக் கொள்கைகளைச் செயற்படுத்துதல்
- தொழில்சார் மற்றும் தொழில்துறை வழிகாட்டி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழிற் பிணக்ககளைத் தீர்த்து வைத்தல்
- தொழில் உறவுகளுக்குரிய சட்டதிட்டங்களை தயாரித்தலும் ஒழுங்குபடுத்தலுக்கான நடவடிக்கைகளை எடுத்தலும்.

மேற்குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளமன்றத்தினால் மீளாய்வாண்டிலும் முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் ரூபா 17,618 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 14,308.54 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 18.79 சதவீதம் அல்லது ரூபா 3,310.24 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே உரு 51 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.




உரு 51 - பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடும் அதன் பயன்பாடும்.
மூலம் : பொதுத் திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கை.

அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களால் மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## இலங்கையின் ஊழியப் படையின் கூட்டு

மீளாய்வாண்டில் இலங்கையின் மொத்த ஊழியப் படை 8.59 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அதில் 8.81 மில்லியன் வேலைசெய்வோர்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது. 0.41 மில்லியன் அல்லது 4.77 சதவீதம் வேலையற்றோர் என அறிவிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் உரு 52 இல் தரப்பட்டுள்ளன.




உரு 52 - இலங்கையின் ஊழியப் படை
மூலம்: வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கை, குடிசன மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம்

## ஊழிய நலன்களை தீர்த்துவைத்தல் செயற்திறன்

தொழில் திணைக்களத்தினால் நீதிமன்றத்தின் மூலமும் தொழில் அலுவலகங்களின் ஊடாகவும் அறவிடப்பட்டிருந்த ரூபா 394.4 மில்லியன் ஊழிய சேமலாப நிதிய நிலுவைகள் 2019 திசெம்பர் 31 வரையிலும் ஊழியர்களிற்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 332.43 மில்லியன் மீதியினை தீர்ப்பதற்கு 2020 யூன் 24 ஆந் திகதி வரையிலும் முடிந்திருக்கவில்லை.

## நிறுத்திவைக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியினை ஊழியர்களிற்கு தீர்த்து வைத்திருக்காமை

தொழில் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஊழிய சேமலாப நிதிய நிலுவையான ரூபா 600 மில்லியனை 2019 யூன் 30 ஆந் திகதியளவில் தீர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், அதில் ரூபா 189 மில்லியன் மீதி மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது.

## ஊழியர் இழப்பீடுகளை தீர்வுசெய்யமை

தொழிலில் ஈடுபட்டிருக்கையில் ஊழியர்களிற்கு ஏற்படுகின்ற மரண விபத்துக்கள் மற்றும் ஏனைய விபத்துக்கள் காணரமாக வேலை கொள்வோர்களிடமிருந்து இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தினால் அறவிடப்பட்டிருந்த ரூபா 8,451.3 மில்லியன்* தொகை 2019 ஒக்தோபர் மாதம் வரை உரித்தாளர்களுக்கு செலுத்தப்படாமல் தொழில் திணைக்களத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஊழியர்களினதும் அவர்களில் தங்கியிருப்போரினதும் சரியான தகவல்கள் இன்மை, நலனாளிகளின் இழப்பீட்டினைச் செலுத்துவதற்குத் தேவையான ஆவணங்களிலுள்ள குறைபாடுகள் மற்றும் அவற்றை அலுவலகலத்திற்குச் சமர்த்திருக்காமை போன்ற காரணங்களால் இந்த இழப்பீட்டுத் தொகையினை செலுத்த முடிந்திருக்கவில்லை. அவ்வாறு தீர்வுசெய்யப்படாது 2 மாதங்கள் முதல் 3 ஆண்டுகள் வரை நிலுவையிலுள்ள இழப்பீட்டுத் தொகைகளை தீர்ப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.


* ரூபா 8.4513 மில்லியன் ஆக திருத்தம் செய்யப்பட வேண்டும்

## தங்கியிருப்போரை தேடிக்கண்டறியத் தவறியமை

தொழிலில் ஈடுபட்டிருக்கையில் ஊழியர்களிற்கு ஏற்படுகின்ற மரண விபத்துக்கள் மற்றும் ஏனைய விபத்துக்கள் காணரமாக வேலை கொள்வோர்களிடமிருந்து இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தினால் அறவிடப்பட்டிருந்த ரூபா 1.89 மில்லியன் இழப்பீடுகள், உரிய தங்கிவாழ்வோரை கண்டறிய முடியாமை காரணமாக தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள 06 சேமிப்புக் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## பராயமடையாதோர் பராயமடைந்த பின்னரும் நலன்களை விடுவித்திருக்காமை

தொழிலில் ஈடுபட்டிருக்கையில் ஊழியர்களிற்கு ஏற்படுகின்ற மரண விபத்துக்கள் காணரமாக மரணமடைந்திருந்த ஊழியர்களின் பருவ வயதை அடைந்திருக்காத பிள்ளைகளிற்கு உரித்தான இழப்பீடுகள் அவர்கள் பருவ வயதை அடைந்த பின்னரும் உரியவர்களிற்குச் செலுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரை அவ்வாறு பருவ வயதை அடைந்திருந்தும் செலுத்தப்படாது உரிய நபர்களின் 392 கணக்குகளில் வைத்திருக்கப்பட்டிருந்த தொகை ரூபா 10.3 மில்லியன் ஆகும்.

## பொது வேலைவாய்ப்புச் சேவை நிலையம்

வேலை வாய்ப்புக்களை எதிர்பார்த்துள்ளோரின் தகைமைகள் வெற்றிடங்களுடன் பொருந்தியிருந்த போதிலும், குறித்த நபர்களிற்கு தொழில் தொடர்பான உரிய பயிற்சி இன்மையால் வெற்றிடங்களிற்கு தேர்ந்தெடுத்தல் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. வேலை வாய்ப்புக்களை எதிர்பார்த்துள்ளோர்களிற்கு குறித்த தொழில் தொடர்பான தேவையான பயிற்சிகள் இந்த நிலையத்தினால் வழங்கப்படுகின்றது. இருப்பினும், மீளாய்வாண்டில் தொழில்களிற்காக அனுப்பிவைக்கப்பட்டோரின் எண்ணிக்கை மிகக் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. அந்த நிலையத்தில் வேலை வாய்ப்புக்களை எதிர்பார்த்து பதிவுசெய்திருந்தோரின் எண்ணிக்கை 25,864 ஆகக் காணப்பட்ட போதிலும் அவர்களில் 921 நபர்களிற்கு மாத்திரம் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, கம்பஹா, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கோலை, கிளிநொச்சி, மாத்தறை, நவரெலியா மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் எவ்வித தொழிற்பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## சுய தொழில் வாய்ப்புக்களிற்கு ஆர்வமூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை தொழில் உருவாக்க மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல்கள் பிரிவினால் 25 மாவட்டங்களில் 362 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. இவற்றில் 12,774 நலனாளிகள் பங்குபற்றியிருந்ததுடன், அவர்களில் 7 சதவீதமான 911 பேர்களினால் மாத்திரம் சுய தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதன்படி, சுய வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியிருந்தோர்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே சுய தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். முன்னைய ஆண்டிலும் இதே நிலைமையே காணப்பட்டது. இதற்கான காரணங்களைக் கண்டறிந்து செயன்முன்னேற்றத்தை அதிகரிக்கும் விதத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுதல் தொடர்பில் திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகம்

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகத்தினை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந்தக் காணியினை கையேற்றல் நடவடிக்கைகள் முடிவடைவதற்கு முன்னர் 2017 ஏப்ரல் 07 ஆந் திகதி கட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டிருந்தது. அதற்காக குறித்த காணியினை தயார்படுத்துவதற்காக 2017 மார்ச் 09 ஆந் திகதி ரூபா 81,400 செலவிடப்பட்டிருந்தது. அத்துடன், அடிக்கல் நாட்டும் வைபவத்திற்காக ரூபா 274,400 செலவின மதிப்பீடு இரத்தினபுரி தொழில் அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாண வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் திணைக்களத்திற்கு 2017 திசெம்பர் 14 ஆந் திகதி ரூபா 24.98 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 வரையிலும் அந்த நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 யூன் 15 ஆந் திகதி வரை இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகம் தனியார் கட்டிடமொன்றில் வாடகை அடிப்படையில் செயற்பட்டு வந்திருந்ததுடன் பழைய கட்டிடத் தொகுதி கைவிடப்பட்டிருந்தது.

## வாகன நிர்வாகம்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் தொழில் ஆணையாளர் நாயகத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்த வாகனங்களின் பட்டியலில் காணப்படுகின்ற வாகனங்களை தற்போது திணைக்களத்தில் காணப்படுகின்ற வாகனங்களுடன் ஒப்பிடுகையில் 22 வாகனங்கள் திணைக்களத்திடம் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. மேலும், அந்த வாகனங்கள் தொடர்பான ஆவணங்களும் திணைக்களத்திடம் இருக்கவில்லை. பௌதீகரீதியில் காணப்படாத 2 வாகனங்கள் தொடர்பில் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்காக வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்தது.

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் தொழில் அமைச்சின் செயலாளரது பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்த வாகனங்களின் பட்டியலில் காணப்படுகின்ற வாகனங்களை தற்போது திறன் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படுகின்ற வாகனங்களுடன் ஒப்பிடுகையில் 09 வாகனங்கள் அமைச்சிடம் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. அந்த வாகனங்கள் காணப்படுதல் தொடர்பிலான எழுத்துருவிலான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## அங்கத்தவர்களை இனங்கண்டு நலன்களை தீர்வு செய்திருக்காமை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் 1981 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 7,946 அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 862.34 மில்லியன் உதவு தொகையும், 1995 முதல் காணப்பட்டு வருகின்ற உரிமை கோரப்படாத ரூபா 14.45 மில்லியன் மரண நலன்களும், 2001 முதல் நிலவி வருகின்ற ரூபா 14.86 மில்லியன் பிடித்துவைக்கப்பட்ட நலன்களும் என்ற வகையில் மொத்தம் ரூபா 891.66 மில்லியன் தொகையினை உரிய அங்கத்தவர்களிற்குத் தீர்வு செய்வதற்கு 2019 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## சிக்கனமற்ற செலவினம்

அமைச்சரவையின் அங்கீகாரமின்றி நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவர் அமைச்சிற்கு அல்லது ஏனைய நிறுவனமொன்றிற்கு விடுவிக்க முடியாதென்பதுடன் அவ்வாறு விடுவிக்கப்பட்ட காலத்திற்கு எவ்விதக் கொடுப்பனவும் செலுத்தப்படுதலாகாது. இருப்பினும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் 2006 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களிற்கும் 13 உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டு சம்பளமாக ரூபா 22.68 மில்லியன் தொகையும் மேலதிகநேர மற்றும் விடுமுறை தின படியாக ரூபா 1.03 மில்லியன் தொகையும் பதிற்கடமை படியாக ரூபா 0.15 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 23.86 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அது சபைக்கு சிக்கனமற்ற செலவினமாக காணப்பட்டது.

## ஊழியர் சேமலாப நிதியத்தினால் தீர்வுசெய்யப்படாத உதவுதொகைகளும் நலன்களும்

ஊழியர் சேமலாப நிதியத்தில் நீண்ட காலமாக தொழில் ஆணையாளரின் பெயரில் கணக்கொன்று காணப்படுகின்றது. அக்கணக்கில் வேலைகொள்வோர்களிற்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்குகளின் மூலம் அறவிடப்பட்டிருந்த தொகைகள் காணப்பட்டதுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 10,711 மில்லியன் மீதியொன்று காணப்பட்டது. வழக்குத் தொடர்ந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 398 மில்லியன் தொகை உரிய தரப்பினருக்குத் தீர்க்கப்படும் வரை பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அந்தத் தொகைகள் செலவு வைக்கப்பட வேண்டிய அங்கத்தவர்களின் கணக்குகளை இனங்காண்பதற்கு முடியாது போயிருந்தது. மேலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் “நடப்பாண்டு உதவுதொகை இலக்கம் 01” என்ற கணக்கில் வைக்கப்பட்டிருந்த ரூபா 30,435 மில்லியன், பிடித்துவைக்கப்பட்ட நலன்கள் மற்றும் உரிமை கோரப்படாத ரூபா 860 மில்லியன் மற்றும் பற்றாக்குறை.்.மிகைக் கணக்கில் வைக்கப்பட்டிருந்த ரூபா 1,843 மில்லியன் என்பன அங்கத்தவர் நிதியத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதியினை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## அங்கத்தவர் மீதி சரிபார்த்தல் இயந்திரங்களின் (Kiosk) செயற்பாட்டுத்தன்மை

ஊழியர் சேமலாப நிதியத்தினால் அங்கத்தவர்கள் தமது கணக்கு மீதிகளை சரிபார்ப்பதற்காக KIOSK இயந்திரங்களை பொருத்துதல் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் நாடு பூராவும் அமைந்துள்ள தொழில் அலுவலகங்களில் 30 KIOSK இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையில் 27 KIOSK இயந்திரங்கள் செயலிழந்து காணப்பட்டதுடன் 5 இயந்திரங்கள் அவை பொருத்தப்பட்ட நாளிலிருந்து பல்வேறு காரணங்களால் செயலிழந்து காணப்பட்டன. உரிய மதிப்பீடின்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை, இயந்திரங்களை செயற்படுத்துதல் தொடர்பில் வழிகாட்டல்களை பெற்றுக் கொண்டிருக்காமை, முறையான பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்காமை, தொடர்ச்சியாக செயன்முன்னேற்றத்தை மதிப்பிட்டிருக்காமை, இயந்திரத்திரங்களின் பொறுப்புக்கள் மற்றும் உத்தரவாதங்கள் உரிய விதத்தில் கையளிக்கப்பட்டிருக்காமை போன்றன காரணமாக இச்செயற்திட்டம் முழுவதும் தோல்வியடைந்திருந்தது. அவ்வாறே, பொருத்தப்பட்ட நாளிலிருந்து 5 ஆண்டுகளிற்கு முன்னரே இவ்வாறு இந்த இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத நிலைக்கு உட்பட்டுள்ளமை காரணமாக செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த செலவினம் பயனற்றுப் போயிருந்தது.

### மோசடியாக ஊழிய நலத் தொகைகளை விடுவித்தல்

ஊழியர் சேமலாப நிதியத்தின் நலத்தொகைக்கு உரித்தான அங்கத்தவர் மரணிக்கையில், அவரது சட்டரீதியான வாரிசுகள் நலத்தொகையினை பெற்றுக் கொள்வதற்கு முன்வருவதற்கு முன்னர், ஏனைய ஆட்களால் பொய்யாக உரிய அங்கத்தவர்கள் எனத் தோற்றி போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து மோசடியாக நலத் தொகைகளை பெற்றுக் கொண்டிருந்தனர். 2004 நவம்பர் 04 ஆந் திகதி முதல் 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி வரை அவ்வாறான 61 சந்தர்ப்பங்களில் ரூபா 52.32 மில்லியன் தொகை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. 3 சந்தர்ப்பகள் தொடர்பில் ரூபா 3.39 மில்லியன் இன்னும் அவ்வாறு செலுத்தப்பட வேண்டியிருந்தது. மோசடியாக நிதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளின் பிரகாரம் முறையான உள்ளக விசாரணைகளை மேற்கொண்டிருந்ததுடன் உள்ளக உத்தியோகத்தர்களால் முறைகேடுகள் இடம்பெற்றிருந்தமை தொடர்பில் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிதியம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

### வெளிநாட்டுத் தொழில் துறை

வெளிநாட்டுத் தொழிற்துறை இலங்கையின் தேசிய வருமானத்திற்கு விசேட பங்களிப்பினை வழங்குவதுடன் இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரங்களின் படி 2018 ஆம் ஆண்டில் அத்துறையிலிருந்து ரூபா 1,138,124 மில்லியன் ஈட்டிக்கொள்ளப்பட்டிருந்தது. அது மொத்த தேசிய உற்பத்தியில் 7.55 சதவீதமாக காணப்பட்டதுடன் வெளிநாட்டுச் செலாவணி உழைப்புக்களில் 96 சதவீதத்தினை பிரதிநிதித்துவம் செய்திருந்தது. அவ்வாறே, இலங்கையின் வேலையின்மையினை 4.41 சதவீதத்தினால் குறைப்பதற்கும் பங்களிப்புச் செய்திருந்தது.

### வேலை வாய்ப்புக்களிற்காக வெளிநாடுகளிற்குச் செல்வது குறைவடைந்துள்ளமை

அமைச்சின் பணிகளில் பிரதான துறைகளில் ஒன்றாக (Trust Area) வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை மேம்படுத்துதல் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், கடந்த சில ஆண்டுகளில் வேலை வாய்ப்புக்களிற்காக வெளிநாடுகளிற்குச் செல்வது தொடர்ச்சியாக குறைவடைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்புக்களிற்காக வெளிநாடுகளிற்குச் சென்றிருந்தோர் எண்ணிக்கை 262,961 ஆகும். அது 2019 ஆம் ஆண்டளவில் 203,186 ஆக 22.73 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அந்தக் குறைவானது ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலாரிலும் இடம்பெற்றிருந்தது. அது தொடர்பான விபரங்கள் உரு 53 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு 53 - இலங்கையின் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள்
மூலம்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை

## வேலை வாய்ப்புக்களிற்காக வெளிநாடு செல்வோர் பணியகத்தில் பதிவுசெய்தல் குறைவடைந்துள்ளமை

2011 ஆம் ஆண்டில் 262,961 பேர் வேலைவாய்ப்புகளிற்காக வெளிநாடுகளிற்குச் சென்றிருந்தனர். அவர்களில் 55.63 சதவீதமான 146,293 பேர் மாத்திரம் பணியகத்தில் தம்மை பதிவுசெய்து கொண்டிருந்தனர். வேலை வாய்ப்புக்களிற்காக வெளிநாடுகளிற்குச் சென்றிருந்தோர்களில் 44.36 சதவீதமானோர் ஏனைய மார்க்கங்களில் வெளிநாடு சென்றிருந்தனர். 2019 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்புகளிற்காக வெளிநாடுகளிற்குச் சென்றிருந்தவர்களில் 34.15 சதவீதமான 69,379 பேர் தம்மை பணியத்தில் பதிவுசெய்து கொண்டு வேலை வாய்ப்புக்களிற்காக வெளிநாடுகளிற்குச் சென்றிருந்ததுடன் அவர்களில் 65.85 சதவீதமானோர் ஏனைய மார்க்கங்களில் வெளிநாடு சென்றிருந்தனர். அதற்கமைய, வேலைவாய்ப்புகளிற்காக வெளிநாடுகளிற்குச் செல்வோர்களை பணியகத்தில் பதிவுசெய்து கொள்ளல் தொடர்பில் குறைவான கவனம் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் உரு 54 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு 54 - வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களிற்காக சென்றிருந்தோர்
மூலம்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை

## ஊழிய வகுப்பின் படி வேலைகளிற்காக வெளிநாடு சென்றிருந்தோர்

2011 ஆம் ஆண்டில் வீட்டுப் பணிப் பெண்களாகவும் பயிற்சியற்ற ஊழியர்களாகவும் வேலை வாய்ப்புக்களிற்காக வெளிநாடுகளிற்குச் சென்றிருந்தோர் எண்ணிக்கை முறையே 107,500 மற்றும் 63,642 நபர்களாகக் காணப்பட்டது. அது 2019 ஆம் ஆண்டளவில் முறையே 61,569 பேர் வரை 42.73 சதவீதத்தினாலும் 51,200 பேர் வரை 19.55 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. வீட்டுப் பணிப் பெண்களாகவும் பயிற்சியற்ற ஊழியர்களாகவும் வேலை வாய்ப்புக்களிற்காக வெளிநாடுகளிற்குச் சென்றிருந்தோர் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும், தொழில்சார் ஊழிய வகுப்பின் கீழ் வெளிநாடுகளிற்குச் சென்றிருந்தோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் தொழில்சார் ஊழிய வகுப்பின் கீழ் வெளிநாடுகளிற்குச் சென்றிருந்தோர் எண்ணிக்கை 3,848 ஆகக் காணப்பட்ட போதிலும், 2019 ஆம் ஆண்டளவில் அந்த எண்ணிக்கை 9,800 பேர் வரை 60.73 இனால் அதிகரித்திருந்தது. விபரங்கள் உரு 55 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு 55 – ஊழிய வகுப்பின் படி வெளிநாடு சென்றிருந்தோர்
மூலம்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை

## வெளிநாட்டு தூதரகங்களில் அமைந்துள்ள தொழிலாளர் நலன்புரி பிரிவுகளின் நிர்வாகம் முறையற்றிருத்தல்.

வேலை வாய்ப்புக்களிற்காக வெளிநாடுகளிற்குச் சென்ற பின்னர், பிரச்சினைகளிற்கு முகங்கொடுக்க நேரிட்ட எமது நாட்டுப் பிரசைகளை தற்காலிகமாக தங்கவைப்பதற்கு 16 வெளிநாட்டுத் தூதரகங்களில் தொழிலாளர் நலன்புரி பிரிவுகளும் அவற்றின் கீழ் இயங்குகின்ற 12 தங்குமிட இல்லங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டில் அப்பிரிவுகளிற்கும் இல்லங்களிற்கும் இணைப்புச் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிற்கு சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாக ரூபா 693.47 மில்லியன் தொகையும் தங்குமிட இல்லங்களின் பராமரிப்பு மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளிற்காக ரூபா 221.45 மில்லியன் தொகையுமாக மொத்த ரூபா 914.92 மில்லியன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் செலவிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டளவில் அந்தப் பிரிவுகளிற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்தப் பிரிவுகளின் நிதி நிர்வாகத்தினை முறையான உள்ளகக் கட்டுப்பாட்டின் கீழ் நடாத்திச் செல்வதற்கு பணியகம் தவறியிருந்தமையால் அந்தப் பிரிவுகளில் பல்வேறு நிதி முறைகேடுகள் இடம்பெற்றிருந்தன. கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட அவ்வாறான 3 சந்தர்ப்பங்களில் ஏறத்தாழ ரூபா 3.27 நிதி மோசடி இடம்பெற்றிருந்தது.

## நிலைபேறான அபிவிருத்தி இலக்ககளை அடைந்துகொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 8.8 இன் கீழ் “தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்தல், விசேடமாக வெளிநாடு சென்றுள்ள பெண்கள் உள்ளிட்ட இடம்பெயர்ந்தோர் மற்றும் ஆபத்துமிக்க தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் உள்ளிட்ட தொழில்புரியும் அனைத்து நபர்களினதும்

பாதுகாப்பிற்கு உகந்த வேலைச் சூழலை மேம்படுத்தல்" வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த இலக்கினை அடைந்து கொள்வதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினதும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினதும் திட்டங்களில் நேரடியான தொடர்பு காணப்படுதல் வேண்டும். இருப்பினும், கடந்த காலங்களுக்குரிய செயல்நடவடிக்கைத் திட்டங்களில் அவ்வாறான தொடர்புகள் காணப்படவில்லை. விசேடமாக, நிலைபேறான அபிவிருத்தி இலக்ககளை அடைந்துகொள்வதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களிற்காக அனுப்பிவைத்தலில் வேறுபாடுகள் அதாவது பயிற்றப்பட்ட, பகுதியளவில் பயிற்றப்பட்ட மற்றும் வீட்டுப் பணிப்பெண்கள் போன்ற ஊழிய வகுப்புக்களின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களிற்காக செல்வோர்களின் எண்ணிக்கையினை தொடர்ச்சியாக குறைத்து திறன்மிக்க ஊழியர்களை கூடிய நன்மைபயக்கும் தொழில்களிற்காக அனுப்பிவைப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், பணியகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி இலக்ககளை அடைதல் தொடர்பான செயற்பாட்டுத் திட்டங்களில் இவ்வாறு திறன்மிக்க ஊழியர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக அனுப்பிவைத்தல் என்ற விடயம் உள்ளடங்கியிருக்கவில்லை.

### ஊழிய இடம்பெயர்வுடன் சம்பந்தப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தாமதம்

ஊழிய புலம்பெயர்வுடன் சம்பந்தப்பட்ட தேசிய கொள்கையிலும் செயற்நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடங்கியுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் தொடர்புறுத்தும் வகையில் முறையான பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டு அவற்றின் இறுதிப் பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக நீண்டகால நோக்குடன் கூடிய கூட்டிணைந்த திட்டம் அல்லது நிறுவனரீதியான பெறுபேற்று சட்டகம் (organizational results frame work) வரிசை அமைச்சின் தலையீட்டுடன் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறே, அதற்குத் தேவையான குறுங்கால செயன்முன்னேற்றத்தை அளவிடக் கூடிய விதத்தில் செயலாற்றுகைச் சுட்டிகளை உள்ளடக்கியதாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். 2017 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சு மற்றும் திணைக்களங்கள் என்பன கூட்டிணைந்த திட்டத்தினைத் தயாரிக்கத் தேவையில்லை என்ற விடயத்தினை அடிப்படையாகக் கொண்டு, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் மேற்படி தேசிய திட்டங்கள் மற்றும் கொள்கைகளில் வெளியீடுகள் மற்றும் நீண்டகால பெறுபேறுகளின் தரத்தினை மதிப்பிடக் கூடிய விதத்தில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, மேற்படி கொள்கைகளில் உள்ளடங்கியுள்ள பரிந்துரைகளை கீழ் மட்டத்தில் அமுல்படுத்துகின்ற நிறுவனமான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பயனுள்ள பங்களிப்பை இதற்காகப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவிதத்திலான வேலைத்திட்டமொன்று 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### வேலைவாய்ப்புக் கட்டளைகளிற்காக ஊழியர்களை அனுப்பவைத்தல்

2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 07 தொழில் வகுப்புக்களின் கீழ் மொத்தம் 1,376,465 வேலை வாய்ப்புக்கள் நாட்டிற்கு கிடைத்திருந்தன. அதில் 473,856 வீட்டுப் பணிப் பெண்களிற்காகவும் 280,261 பயிற்றப்படாத ஊழியர்களிற்காகவும் கிடைத்திருந்தது. அவ்வாறே, பயிற்றப்பட்ட ஊழியர்களிற்காக 542,893 தொழில் வாய்ப்புக்கள் கிடைத்திருந்த போதிலும், அதற்காக 79,785 பேர் அல்லது 15 சதவீதமானோர் மாத்திரமே வெளிநாடுகளிற்குச் சென்றிருந்தனர். மாறாக வீட்டுப் பணிப்பெண்கள் பயிற்றப்படாத ஊழியர்களிற்காக கிடைத்திருந்த வேலை வாய்ப்புக்களில் 32 சதவீதம் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. அந்நியச் செலாவணியை சம்பாதித்துத் தருவதில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பொருளாதரீதியில் முக்கியமான இடத்தை வகிக்கின்ற போதிலும், தற்போது மத்திய கிழக்கு நாடுகளிற்கு வேலை வாய்ப்புக்களிற்காக சென்றுள்ள பெண் ஊழியர்கள் முகங்கொடுக்க நேர்ந்துள்ள சமூகப் பிரச்சினைகளை கருத்திற்கொள்கையில் இத்தொழிற்துறை தொடர்பில் மாற்றுவழிகள் குறித்து சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையின் பகுப்பாய்வும் ஆய்வும்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் அதன் குறிக்கோள்களையும் இலக்குகளையம் அடைந்து கொள்வதற்காக வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்தல் என்பதனை பிரதான துறையாக இனங்கண்டுகொண்டிருந்ததுடன், அதற்கான ஆய்வுகளை நடாத்துதல் என்ற விடயம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிற்கான செயல்நடவடிக்கைத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இருப்பினும் குறித்த ஆண்டுகளில் இத்துறை தொடர்பில் எவ்வித ஆய்வும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2019 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இவ்விடயம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அமைச்சின் குறிக்கோள்களையும் இலக்குகளையம் அடைந்து கொள்வதற்குத் தேவையான முக்கியமான விடயம் திட்டங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி, இலங்கையர்களிற்கான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதன்படி, பணியகத்தினால் 2013 முதல் 2019 ஆம் ஆண்டு வரை 17 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், வெளிநாட்டு தொழிற் சந்தையின் போக்கு மற்றும் நடத்தை தொடர்பிலும் நாட்டிற்கு நன்மைபயக்கும் தொழில் வாய்ப்புக்களை இனங்காண்பதற்கும் ஏற்ற வகையிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

# சுகாதாரம்

நாட்டின் பொருளாதார, சமூக, உளவியல் மற்றும் ஆன்மீக அபிவிருத்திக்குப் பங்களிப்புச்செய்கின்ற தேகாரோக்கியமான சமூகமொன்றை உருவாக்குவது சுகாதாரப் பிரிவின் நோக்காகும். சமூகத்தின் தேவைப்பாடுகளுக்கு பதிலளிப்பதுடன் ஒன்றிணைந்த செயற்பாடுகளின் ஊடாக, ஒரு பூர்த்தியான உயர்மட்டத்திலான திறன்வாய்ந்த சமமான உற்பத்தித்திறன் மற்றும் நிலையான சுகாதார சேவையை இலங்கை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதனூடாக, அடைந்துகொள்ளத்தக்க அதி உயர்மட்டத்திலான சுகாதார சேவையை நோக்கி நகர்வதே சுகாதாரப் பிரிவின் செயற்பணியாகும்.

இச் இச்செயற்பணியை நிறைவேற்றுமுகமாக செயற்படுத்தப்படவேண்டிய பிரதான விடயங்கள் வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி,

- சுகாதாரப்பிரிவுக்கு கொள்கைத் திட்டமிடல், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்துதல்.
- சுகாதார சேவை வழங்குவதற்கான நியமங்கள் வழிகாட்டல்களை தயாரித்தல்.
- மனிதவள அபிவிருத்தி,
- முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் அமைப்புமுறை அபிவிருத்தி
- வளப்பகிர்வு, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் மேற்பார்வை மற்றும் மீளாய்வு.
- பிரதான வைத்தியசாலைகளை நிர்வகித்தல்
- தனியார் சுகாதார நிலையங்களை கட்டுப்படுத்தல் மற்றும் மேற்பார்வை.
- தேசிய சுகாதார காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான நடவடிக்கைகள்
- பொதுச்சுகாதாரம் மற்றும் போசாக்கு அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல் மற்றும் செயற்படுத்தல்
- சுகாதாரப் பிரிவில் ஆய்வு நடவடிக்கைளுக்கான வாய்ப்புக்களை விரிவாக்குதல்
- கொள்ளை நோய், தொற்றுநோய், மற்றும் தொற்றாத நோய் பரவுதலை கட்டுப்படுத்தல், தடுத்தல் மற்றும் கிருமி ஒழிப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சர்வதேச தனிமைப்படுத்தல் மற்றும் தூய்மைப்படுத்தல் தொடர்பிலான சட்டங்கள், ஒழுங்குவிதிகளை செயற்படுத்துதல், மருந்துப்பொருட்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல் மற்றும் விநியோகம் தொடர்பான நடவடிக்கைகள்.
- பெருந்தோட்டத்துறை சுகாதாரப் பணிகள்.
- பாரம்பரிய வைத்திய முறைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலுக்கான நடவடிக்கைகள்.
- ஆயர்வேத, சித்த, யூனானி மற்றும் ஹோமியோபதி சிகிச்சை முறைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல்.

இச் செயற்பொறுப்புக்களை சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் அமைந்துள்ள திணைக்களமொன்று, நியதிச்சட்ட சபை / 04 நிறுவனங்கள் மற்றும் 04 அரச வர்த்தக நிறுவனங்களையும் உள்ளடக்கி செயற்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அந்நிறுவனங்களின் கீழ் பொதுமக்களுக்கு தேவையான சுகாதார வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீட்டாண்டின் முடிவின்போது அரசினதும் மற்றும் மாகாணசபைகளின் கீழும் செயற்படும் வைத்தியசாலை மற்றும் நிறுவனங்கள் தொடர்பான விவரம் அட்டவணை 20 இல் காட்டப்பட்டுள்ளது.

| வைத்தியசாலை மற்றும் நிறுவனங்கள் | அமைச்சின் கீழ் உள்ள எண்ணிக்கை | மாகாணசபைகளின் கீழ் உள்ள எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|
| தேசிய வைத்தியசாலை | 2 | 0 | 2 |
| போதனா வைத்தியசாலை | 23 | 1 | 24 |
| மாகாண பொது வைத்தியசாலை | 2 | 0 | 2 |
| மாவட்டப் பொது வைத்தியசாலை | 10 | 9 | 19 |
| ஆதார வைத்தியசாலை ஏ மற்றும் பி வகை | 7 | 74 | 81 |
| மாவட்ட வைத்தியசாலை ஏ பி மற்றும் சீ வகை | 3 | 471 | 474 |
| ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவுடன்கூடிய மகப்பேற்று இல்லம் | - | 499 | 499 |
| வேறு நிறுவனங்கள் | 73 | 226 | 299 |
| சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகம் | - | 350 | 350 |
| மொத்தம் | **120** | **1,630** | **1,750** |

அட்டவணை 20 - 2019 டிசம்பர் மாதம் 31 திகதியன்று அமைச்சு மற்றும் மாகாணசபைகளின் கீழ் காணப்படும் வைத்தயசாலைகளும் நிறுவனங்களும்
மூலம் - சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட தகவல்களின்படி

மேலே குறிப்பிடப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் பொதுமக்களுக்குத் தேவையான சுகாதார தேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கு மதிப்பீட்டாண்டின் முடிவின்போது 139,487 நபர்களை உள்ளடக்கிய பணிக்குழு பணியாற்றியுள்ளதுடன் அதன் அட்டவணை 21 இல் காட்டப்பட்டுள்ளது.

| சுகாதார பணிக்குழு | நிரல் அமைச்சின் கீழ் காணப்படும் பணிக்குழு எண்ணிக்கை | மாகாண சபைகளின் கீழ் காணப்படும் பணிக்குழு எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|
| விசேட நிபுணத்துவ வைத்திய உத்தியோகத்தர்கள் | 1,774 | 737 | 2,511 |
| வைத்திய உத்தியோகத்தர்கள் | 12,332 | 7,516 | 19,848 |
| செவிலியர் சேவை உத்தியோகத்தர்கள் | 25,198 | 13,330 | 38,528 |
| சுகாதார ஆய்வுகூட நிபுணத்துவர்கள் | 1,272 | 613 | 1,885 |
| மருந்தாளர் | 1,140 | 713 | 1,853 |
| பொதுச் சுகாதார பரிசோதகர் | 173 | 1,676 | 1,849 |
| குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் | 1,113 | 7,274 | 8,387 |
| ஊழியர்கள் | 4,181 | 4,352 | 8,533 |
| ஏனையவை | 29,520 | 26,573 | 56,093 |
| மொத்த பணிக்குழாம் | **76,703** | **62,784** | **139,487** |

அட்டவணை 21 – சுகாதாரப் பிரிவுக்கு அரசாங்கம் மற்றும் மாகாண சபைகள்
மூலம் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள பணிக்குழாம் - சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட தகவல்களின்படி

பொதுமக்களின் சுகாதார தேவைகளை நிறைவேற்றுவதற்கு வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் இப்பிரிவுக்கு 2019 ஆம் ஆண்டுக்கும் முன்னைய இரண்டு வருட காலங்களுக்கும் மொத்தமாக ரூபா. 556.21 பில்லியன் பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா. 499.21 பில்லியன் ஒதுக்கம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி முன்னைய 03 வருட காலத்தினுள் பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த

ஒதுக்கல்களில் ரூபா. 57.33 பில்லியன் என்ற 10.30 வீதம் ஒதுக்கத்தை பயன்படுத்தாது மீதப்படுத்தப்பட்டிருந்தது. விபரம் உரு 55 இ காட்டப்பட்டுள்ளது.




உரு 55 – ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கல், பயன்படுத்தியதன் பின் மீதி
மூலம் - திரைசேரியின் இறுதி நிதி அறிக்கை.

## நிலைபேறுடைய அபிவிருத்தி நோக்கத்தை நிறைவேற்றுதல்.

நிலைபேறுடைய அபிவிருத்தி நோக்கங்களின் 3.1 ஆம் பிரிவின் கீழ் 2030 ஆம் ஆண்டளவில் உலகின் தாய் மரண வீதம் 100,000 உயிர் பிறப்புகளுக்கு 70 மரணங்கள் என்ற அளவுக்கு குறைக்க வேண்டியுள்ளது. இலங்கையில் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் அவ் விகிதாசாரம் 33.7 இலிருந்து 19.2 வீதம்வரை குறைந்திருந்தது. அதேபோல் நிலைபேறுடைய அபிவிருத்தி நோக்கங்களில் 3.2 இன் கீழ் எல்லா நாடுகளிலும் பிறப்பு மரண வீதம் புதிதாக பிறக்கும் 1000 பிள்ளைகளுக்கு 12 பிள்ளைகள் என்ற அளவிலும் 5 வயதுக்கு குறைந்த பிள்ளைகளின் இறப்பு புதிதாக பிறக்கும் 1000 பிள்ளைகளுக்கு 25 பிள்ளைகள் என்ற குறைந்த வீதத்திலும் பேணவேண்டிய நோக்குடன் 2030 ஆம் ஆண்டளவில் புதிதாக பிறக்கும் மற்றும் 5 வயதிலும் குறைந்த பிள்ளைகளின் மரண வீதத்தை இல்லாதொழிக்கும் நோக்குடனும் அமைந்திருந்தது.

இலங்கையில் இறந்து பிறக்கும் பிள்ளைகளின் வீதம் 2015 ஆம் ஆண்டில் 9.16 விதத்திலிருந்து 2019 ஆம் ஆண்டு முடிவில் அது 5.9 வீதம் வரை குறைந்திருந்தது. அதன்படி இலங்கை மதிப்பீட்டாண்டு முடிவில் அந்நோக்கத்தை அடைந்திருந்தது. நிறை குறைந்த பிள்ளைப் பிறப்பு வீதம் 2015 ஆம் ஆண்டில் 6.94 ஆக நிலவியது. அது 2019ஆம் ஆண்டு முடிவில் 16.3 ஆக அதிகரித்திருந்தது. (2019 ஆம் வருடத்துக்குரிய எண்ணிக்கைகள் எதிர்வுகூறப்பட்ட பெறுமானங்களாகும்.) விவரங்கள் உரு 56 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 56 – குழந்தை இறப்புவீதம் குறைவடைதல்.

**அரச சுகாதார சேவை முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை.**

அரச சுகாதார முகாமைத்துவ உதவியளர் சேவை பிரமாணக் குறிப்பின் படி, அரச சுகாதார முகாமைத்துவ உதவியளர் சேவை நியமனத்துக்கான போட்டிப்பரீட்சை அமைச்சின் செயலாளரினால் அங்கீரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 அம் ஆண்டில் அப் பரீட்சையை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட முடியுமாக இருந்தபோதிலும், எதுவித அதிகார பலமுமின்றி குறித்த பரீட்சையை போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் பரீட்சைப் பிரிவு மூலம் நடாத்துவதற்கு பதில்கடமை செயலாளரினால் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

கீழ்வரும் அவதானிப்புகளின்படி அமைச்சின் பரீட்சைப்பிரிவு மூலம் இப்பரீட்சை வெளிப்படைத்தன்மையுடனும் சிறந்த உள்ளக கட்டுப்பாட்டுடனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை எனவும் தெளிவாகியுள்ளது.

- திறமைவாய்ந்த சுயாதீன குழுவொன்றினால் வினாப் பத்திரங்கள் தயாரிக்கப்படாமை.
- வினாப் பத்திரங்கள் தயாரிக்கப்படும்போது இரகசியத்தன்மை பாதுகாக்கப்படாமை.
- விடைத் தாள்களை மதிப்பாய்வு செய்த மற்றும் மொழியாக்கம் செய்த உத்தியோகத்தர்கள் உறுதிமொழிக் கடிதத்தில் கையொப்பமிடாமை.
- அமைச்சின் பரீட்சைப் பிரிவின் பாதுகாப்பு காணொளி கமரா தொகுதி முறையாக செயற்படும் தன்மையில் காணப்படாமை.
- அமைச்சின் உயர்மட்ட முகாமைத்துவ உத்தியோகத்தர்களினால் நுண்ணறிவு விடைத் தாள்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.
- குறித்த மதிப்பாய்வுகளை மேற்பார்வை செய்யவேண்டிய பணிப்பாளர் (பரீட்சைகள்) மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் (பரீட்சைகள்) இவ் விடைத்தாள்கள் மதிப்பாய்வு

விடைத்தாள்களை மதிப்பிடு செய்த உத்தியோகத்தர்கள் மீண்டும் ஒருமுறை விடைத்தாள்களை மதிப்பாய்வுக்கு உட்படுத்தியிருக்காமை மற்றும் விடைத்தாள்கள் வேறு ஒரு மதிப்பாய்வாளர் மூலம் மீளாய்வு செய்யப்படாமை, விண்ணப்பதாரிகளால் வழங்கப்பட்ட நிச்சயமற்ற விடைகள் தொடர்பில் விடைத்தாள் மதிப்பீட்டுக் குழுவான்றினால் கலந்தாலோசிப்புக்கு உட்படுத்தப்படாமை ஆகிய காரணங்களால் விடைத்தாள்களின் மதிப்பாய்வின் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இது தொடர்பில் நடாத்தப்பட்ட கணக்காய்வின் பின் மீண்டும் வினாப்பத்திரங்களை பரிசோதித்தபோது ஆரம்ப கட்டத்தில் 54 பதவிநியமனத்திற்கு தகுதிபெற்றிருந்த விண்ணப்பதாரிகள் அதிலிருந்து வெளியேற்றப்பட்டு தகைமை பெறாத விண்ணப்பதாரிகள் தகைமை பெற்றவர்களாக மாறியுமிருந்தனர்.

## அபிவிருத்திச் செயற்த்திட்டங்களை செயற்படுத்துவதில் உள்ள முன்னேற்றங்கள்.

சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவை அமைச்சின் 2019 ஆம் ஆண்டின் வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மெத்தச் செலவு 121,956 மில்லியன் ரூபா பெறுமதியான பிரதான 13 அபிவிருத்தி செயற்திட்டங்களில் 5,130 மில்லியன் ரூபா பெறுமதியான கராப்பிட்டிய ஹெல்மட்கோல் மகற்பேறு வைத்தியசாலை அமைக்கும் செயற்திட்டத்தை 2018ஆம் ஆண்டிறுதியில் முடித்திருக்க வெண்டும். 2019 டிசம்பர் 31 திகதி வரையிலும் அது முடிக்கப்படவில்லை, மொத்தச் செலவு ரூபா. மில்லியன் 37,529 க்கான 4 அபிவிருத்தித் திட்டங்கள் மதிப்பீட்டாண்டில் எதிர்பார்ப்பு நூற்றுக்கு 100 பௌதீக வளர்ச்சி அடையப்பெற்றிருக்கவில்லை. அந் 4 செயற்திட்டங்கள் தொடர்பான விபரம் அட்டவணை 22 இல் காட்டப்பட்டுள்ளது.

| செயற்திட்டம் | மொத்தச் செலவு | அடையப்பெற்ற பௌதீக வளர்ச்சி |
|---|---|---|
| | ரூ. மில்லியன் | நூற்றுக்கு |
| **அமைச்சின் கட்டிட நிர்மாண செயற்திட்டம்** | 5,979 | 60 |
| **வடமாகாண வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்தலுக்கான செயற்திட்டம் - (DRIVE) (இலங்கை அரசும்- நெதர்லாந்து அரசும்)** | 14,065 | 90 |
| **இலங்கை புற்றுநோய் நோயாளர்களுக்கு உயர் தரத்திலான அதிசக்தி கதிர்வீச்சு சிகிச்சை பெற்றுக்கொடுக்கும் செயற்திட்டம்.** | 7,960 | 85 |
| **சகல வசதிகளையும் உள்ளடக்கிய மாவட்டரீதியான பத்து பக்கவாத நிலையங்களை உருவாக்குதல் மற்றும் அவ் வைத்தியசாலைகளில் அவசர விபத்துச் சிகிச்சை மற்றும் சேவை வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டம்.** | 9,525 | 53 |

அட்டவணை 22 – எதிர்பார்க்கப்பட்ட பௌதீக வளர்ச்சியை அடைந்துகொள்ளாத செயற்திட்டங்கள்.

அதற்கு மேலதிகமாக மதிப்பீட்டாண்டில் 50 மூலதன செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ரூ. மில்லியன் 696 அமைச்சினால் இலங்கை தேசிய வைத்தியசாலை மற்றும் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அவ் 50 செயற்திட்டங்களில் 8 நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவே இல்லை.

மேலும் கடந்த வருடத்திலும் மீளாய்வு வருடத்திலும் நூற்றுக்கு 100 செயற்திறன் எதிர்பார்க்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூ. மில்லியன் 4,098 ஐ உள்ளடக்கிய 8 செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது மதிப்பீட்டாண்டின் டிசம்பர் 31 அம் திகதி வரை அச் செயற்திட்டங்களின் செயற்திரன் நூற்றுக்கு 50 ஐ விடவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

## வைத்தியர்களிடமிருந்தும் செவிலி மாணவர்களிடமிருந்தும் அரசாங்கத்துக்கு அறவிடப்படவேண்டிய பணம்.

பட்டப்பின்படிப்பு கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் மீண்டும் பணிக்கு சமூகமளிக்காததன் காரணமாகவும், நியமனம் பெற்ற பின் கட்டாய சேவைக்காலத்தில் நாட்டுக்கு சேவை செய்யாமை மற்றும் வேலைவாய்ப்புகாக சம்பளமற்ற விடுமுறை பெற்று வெளிநாடுகளுக்குச் சென்று மீண்டும் பணிக்கு சமூகமளிக்காமை ஆகிய விடயங்கள் காரணமாக அரசுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தம் பிணைமுறிகளை மீறிய 95 வைத்தியர்களால் ரூ. மில்லியன் 81.91 அரசு சார்பில் அறவிடப்படவேண்டியிருந்தது. வேலையை விட்டுச்சென்ற 107 வைத்தியர்களிடமிருந்து அறவிடப்படவேண்டியிருந்த பணம் தொடர்பான சரியான விபரங்கள் அறிக்கையிடப்படவில்லை.

அமைச்சின் கீழ் காணப்படும் செவிலியர்களுக்கான 16 பயிற்சிப் பாடசாலைகளில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின்படி, 1999 ஆம் ஆண்டிலிருந்து 2017ஆம் ஆண்டுவரையான 18 வருட காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட செவிலி மாணவர்களில் பயிற்சியை பூர்த்திசெய்யாது இடையில் வெளியேறிய மாணவர்களின் எண்ணிக்கை 861 ஆக காணப்பட்டது. அதில்

706 மாணவர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகை ரூ. மில்லியன் 281.99 ஆகும். எனினும் கணக்காய்வுக்கு இடைக்கிடை சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி இக்காலத்தினுள் பயிற்சியை இடையில் கைவிட்டுச் சென்ற செவிலிமாணவர்களின் எண்ணிக்கை 1,000 மாணவர்களையும் விட கூடுதலானவர்கள் என்பதுடன், அவர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய தொகை ரூ. மில்லியன் 325.33 எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி பயிற்சியை விட்டும் இடைவிலகிய மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அறவிடப்படவேண்டிய பணம் சம்மந்தமாக பூரணமான மற்றும் சரியான தகவல் அமைச்சிடம் காணப்படவில்லை .

## ஒப்பந்த நிர்வாகம்

- மதிப்பீடு செய்யப்பட்ட செலவு 35 மில்லியன் ரூபா பெறுமதிவாய்ந்த ரயிகம தோட்ட வைத்தியசாலையை நிர்மாணிக்கும் ஒப்பந்தம், 24.91 மில்லியன் ரூபா ஒப்பந்தப் பெறுமதியில் நிர்மாணிப்பதற்கு 2016 டிசம்பர் மாதம் 14 திகதி ஒப்பந்ததாரர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்படி வேலையைத் தொடர்வதற்கான முற்பணமாக 5.53 மில்லியன் ரூபா 2016 நவம்பர் மாதம் 04 ஆம் திகதி ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் நிர்மாணப்பணிகளுக்கு மும்மொழியப்பட்ட காணியை அரசமயப்படுத்தப்படாத நிலையிலும், காணி தொடர்பான சாத்திய வள ஆய்வையும் மண் ஆய்வையும் மேற்கொள்ளாத நிலையிலும் தேசிய கட்டிட ஆய்வுச் சங்கத்தினால் பிறப்பிக்கப்படும் சாத்தியவள ஆய்வுச் சான்றிதழை பெற்றுக்கொள்ளாத நிலையிலும் ஒப்பந்த நிர்மாணப்பணி கையளிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிர்மாணப்பணி ஆரம்பிப்பது தாமதமாகியதுடன் இதனால் ஏற்பட்ட விலைஏற்றம் மற்றும் மேலதிக வேலைகள் காரணமாக ஒப்பந்த பெறுமதியைவிட 7.7 மில்லியன் ரூபா செலவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

  ஒப்பந்ததாரரால் 2017 டிசம்பர் மாதம் 1ஆம் திகதி மற்றும் 2018 ஜுன் மாதம் 05 ஆம் திகதியும் சமர்ப்பிக்கப்பட்ட 2 இடைக்கால விலைப்பட்டியல்களுக்கு பணம் செலுத்துவதற்காக, அமைச்சினால் களுத்துறை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்துக்கு 2018 மார்ச் மாதம் 29ஆம் திகதியும் 2019 பெப்ரவரி 15 அம் திகதியும் அவ் விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரருக்கு 5.21 மில்லியன் ரூபா செலுத்தப்படாமல் அத் தொகை அலுவலகத்தின் பொதுவைப்புக் கணக்கில் பிடித்துவைக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரால் 2017 நவம்பர் 11 ஆம் திகதிமுதல் நிர்மாணப்பணிகள் கைவிடப்பட்டிருந்தது. அவ் விலைப்பட்டியல்களுக்கான பணம் செலுத்தப்படாது தாமதப்படுத்தப்பட்டமையை அடிப்படையாகக் கொண்டு நிர்மாண ஒப்பந்தம் புரிந்துணர்வு சம்மதத்துடன் முடிவுறுத்திக் கொள்வதற்கான யோசனையொன்றை ஒப்பந்ததாரர் 2018 மே மாதம் 06 ஆம் திகதி சமர்ப்பித்திருந்தார். 01 வருடம் 07 மாதங்களின் பின் 2019 டிசெம்பர் மாதம் 30ஆம் திகதி கொள்வனவுக் குழு அதற்கான அங்கீகாரத்தை வழங்கியிருந்தது.

  ஒப்பந்ததாரர் சமர்ப்பித்திருந்த 1.24 மில்லியன் ரூபாவுக்கான செயலாற்றுகை பிணைமுறி மற்றும் 5.53 மில்லியன் ரூபாவுக்கான முற்பண பிணைமுறி, முறையே 2018 ஜுலை 07ஆம் திகதியும் 2018 செப்டெம்பர் 01 ஆம் திகதியும் காலாவதியாகி இருந்தது.

  இவ் வைத்தியசாலையின் நிர்மாணப்பணிகள் 2017 நவம்பர் 11 திகதிமுதல் கைவிடப்பட்டிருந்ததுடன் இதுவரை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 12.6மில்லியன் ரூபாய்களாக காணப்பட்டது.

- 2017 ஆம் ஆண்டில் 2,825.44 மில்லியன் ரூபா மொத்த ஒப்பந்தப் பெறுமதிவாய்ந்த 07 நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தபோதும் ஒப்பந்தப்படி பணியாற்றத் தவறியமையால் அவ் 7 ஒப்பந்தங்களுக்குமான கைச்சாத்து 2019 செபடெம்பர் 23 ஆம் திகதியளவில் இரத்து செய்யப்பட்டிருந்தது. 2020 செப்தெம்பர் 01 ஆம் திகதியன்றும் அதில் 03 ஒப்பந்தங்களுக்காக 135.2 மில்லியன் வரை முற்பணம் செலுத்தப்பட்டிருந்தபோதிலும், அப்பணம்

அறவிடப்பட்டிருக்கவில்லை. அம் 3 ஒப்பந்தங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 168.82 மில்லியன் ரூபா முற்பண பிணைமுறிகளின் செல்லுபடியான காலம் 2019 ஆகஸ்ட் 03 ஆம் திகதியன்று காலாவதியாகியிருந்தது. அதேபோல் இவ் 7 ஒப்பந்தங்களின் மிகுதிப் பணிகள் 2020 செப்தெம்பர் 01 ஆம் திகதிவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### வரி தேவைப்பாடுகளுக்கு அமைவாக காணப்படாமை

2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகள் தொடர்பான சட்டத்திலும் அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டற் கோவையின் 5.4.12 வழிகாட்டலின் படி, அரச நிறுவனங்களால் ஒப்பந்ததாரருக்கும் வழங்குனர்களுக்கும் செலுத்தப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) தொடர்பான விபரங்கள் எதிர்வரும் மாதத்தின் 15 ஆம் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன் கணக்காய்வாளர் நாயகத்துக்கான பிரதி ஒன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பியிருக்க வேண்டும். எனினும் அமைச்சினால் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் ஒப்பந்ததாரர் செயலில் வரி செலுத்துபவரா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளாமலும் பெறுமதி சேர்க்கப்பட்ட தொகைமீது வரி சட்டத்தின் 20(1) மற்றும் 20(2) ஆகிய பிரிவுகளின் படி தொடர்பு இலக்கத்துடனான முறையான வரி விலைப்பட்டியலொன்றை பெற்றுக்கொண்டு வரிப்பணத்தைச் செலுத்தியுள்ளார். இதன் காரணமாக, 2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களில் அமைச்சும் திரீபோஷ நிறுவனமும் 32 வழங்குனர்களுக்கு 162 சந்தர்ப்பங்களில் செலுத்தியிருந்த 274.670 மில்லியன் ரூபாவுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மற்றும் அமைச்சினால் 2016 ஜுலை 07 ஆம் திகதி தொடக்கம் 2019 ஜுலை 30 ஆம் திகதி வரையான கால எல்லைக்குள் இரு ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தியிருந்த 114.59 மில்லியன் ரூபாவுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட (VAT) வரித் தொகைக்கான பணத்தை குறித்த ஒப்பந்ததாரர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பியிருக்கவில்லை.

### அங்கீகாரம் அளிக்கப்பட்ட பணிக்குழு எண்ணிக்கையை விஞ்சிய ஆட்சேர்ப்பு

12 சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான அங்கீகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட அதிகமாக 328 பேர்களும், மூன்றாம் நிலை மட்டத்திலான 4 பதவிகளுக்கு அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட அதிகமாக 8 பேர்களும், இடைநிலை மட்டத்திலான 36 பதவிகளுக்கு அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட அதிகமாக 340 பேர்களும், ஆரம்ப நிலை மட்டத்திலான 22 பதவிகளுக்கு அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட அதிகமாக 3058 பேர்களும், சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும் குறித்த சேவை நிலையங்களில் அங்கீகாரம் அளிக்கப்படாத 62 பதவிகளுடன் தொடர்புடைய 2,656 பேர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆரம்பமட்ட தொழிநுட்பம் சாராத பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கு அமைவாக அல்லாதவாறு சுகாதாரப்பணி உதவியாளர் பதவிக்கு ஒப்பந்த, தற்காலிக மற்றும் இடைவரைவாளர் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்கள் 1,946 பேர்களும் அதில் உள்ளடங்குவர்.

### அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மேலதிகமாக செலவுசெய்தல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் படி, 2019ஆம் ஆண்டின் 9 செலவுத் தலைப்புகளுக்கென பாராளுமன்றத்தால் 87,608.73 மில்லியன் ரூபாவுக்கான நிதிஒதுக்கல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முறையான விதத்தில் நிதி ஒதுக்கீட்டைச் செய்துகொள்ளாது அந் நிதி ஒதுக்கீட்டை 966.16 மில்லியன் ரூபாவால் அதிகரித்து 88,574.89 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி அறிக்கைகளுக்கு அமைய மேற்குறித்த செலவுத் தலைப்புகளுக்கு 2019 ஆம் வருடத்தில் 1,923.53 மில்லியன் ரூபா பற்று உருவாகியுள்ளது.

### அரச வைத்தியசாலைகளின் மருத்துவக் கழிவு முகாமைத்துவ செயற்திட்டம்

வைத்திய சாலைகளின் சுகாதாரம் மற்றும் தொற்றுநோய்களைக் கட்டப்படுத்துவதற்கு அரச வைத்தியசாலைகளில் மருத்துவக் கழிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்வது முக்கிய விடயமாக கருதப்படுகிறது. மத்திய சூழல் அதிகாரசபை விதித்த விதிமுறைகளுக்கு அமைய சகல மருத்துவக்

கழிவுகளும் ஆபத்தான கழிவுகள் என்பதுடன் அவ்வாறான கழிவுப்பொருள் உருவாக்கப்பட்டால் 48 மணி நேரத்துக்குள் நோய் துண்மத்தீர்வாக்கம் செய்யப்பட்டு வெளியேற்றம் செய்யப்பட வேண்டும். மருத்துவக் கழிவுகள் முகாமைத்துவத்துக்கு Meta Mizer 20 இயந்திரங்கள் மற்றும் 15 Incinerator (எரி தொட்டி/தீற்றுலை) இயந்திரங்கள் வழங்கப்பட்டு பொறுத்தப்பட்டு 5 வருடகாலம் அவற்றை பராமரிப்பதற்கு ஐ.அ. மில்லியன் டொலர் 21.11 அதாவது 452.25 மில்லியன் ரூபாவுக்கான அவுஸ்திரேலிய கடன் மற்றும் உள்நாட்டுக்கடனுதவிச் செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அச் அசயற்திட்டத்தை நாட்டின் எல்லா பிரதேசங்களும் உள்ளடங்கும் விதத்தில் 06 கொத்தணியாக வகுக்கப்பட்ட 134 அரச வைத்தியசாலைகளின் மருத்துவக் கழிவுகளை வெளியேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட 15 Incinerator (எரி தொட்டி/தீற்றுலை) களுக்குப் பதிலாக 05 இயந்திரங்கள் என்ற அளவில் குறைத்து, இயந்திரங்களுக்கு ஒப்பந்தமான ஐ.அ டொலர் 18.45 பெறுமதியை ஐ.அ. டொலர் 16.19 வரை குறைத்துள்ளதுடன் செயற்திட்டத்தை செயற்படுத்தும் இயக்கச் செலவில் மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

அமைச்சின் செயற்திட்டப்பிரிவு, அபிவிருத்திப்பிரிவு மற்றும் சூழல் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளினதும் உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சின் செயலாளரும் அறிந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட அவ் அவுஸ்திரேலிய கடன் மற்றும் உள்நாட்டுக் படுகடன் உதவிச் செயற்திட்ட ஒப்பந்தம் 2013 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அச் செயற்திட்டத்தின் மூலம் முழு நாடும் பயன்பெறும் வகையில் 134 வைத்திய சாலைகள் 06 கொத்தணிகளுக்கு பிரிக்கப்பட்டு அவ் ஒவ்வொரு கொத்தணியிலும் வெளியேற்றப்படும் மருத்துவக் கழிவுகள் முகாமைத்துவம் செய்யப்படவிருந்தது. 2014 ஆம் ஆண்டில் அமைச்சின் உத்தியோகத்தர்களினால் கிழக்கு, தெற்கு, மற்றும் மத்திய மாகாணங்களில் வெளியேற்றப்படும் மருத்துவக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கு வேறு தனியார் நிறுவனமொன்று சமர்ப்பித்திருந்த செயற்திட்டத்துக்கு சார்பான விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி அவுஸ்திரேலிய கடன் மற்றும் உள்நாட்டுக் படுகடன் உதவிச் செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு கிழக்கு, தெற்கு, மற்றும் மத்திய மாகாணங்களில் நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த 10 Meta Mizer இயந்திரங்கள் மற்றும் 08 Incinerator இயந்திரங்கள் அச் அச்செயற்திட்டதிலிருந்து வெளியேற்றப்பட்டு அம் மாகாணங்கள் 03 இலும் வெளியேற்றப்படும் மருத்துவக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கு வழியமைக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அமைச்சின் உத்தியோகத்தர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புகொண்டு கிழக்கு, தெற்கு, மற்றும் மத்திய மாகாணங்களில் வெளியேற்றப்படும் மருத்துவக் கழிவுகளை அகற்றும் ஒப்பந்தங்களை வேறு ஒரு தனியார் நிறுவனத்துக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பணியாற்றியுள்ளதுடன் அந் நிறுவனத்துக்கு நலன் பயக்கும் விதத்தில் வர்த்தக ஒப்பந்தமொன்றை செய்வதற்கும், அவுஸ்திரேலிய படுகடன் மற்றும் உள்நாட்டு படுகடன் செயற்திட்ட விடயப்பொருளின் நூற்றுக்கு 50 வீதத்தை விடக் கூடுதலாக உள்ளடக்கிய 03 மாகாணங்களை மாற்றியமைத்ததன் காரணமாக கொத்தணி திட்டம் பிளவுபடுவதற்கும், வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல், சபரகமுவ, மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் மாத்திரம் வெளியேற்றப்படும் மருத்துவக் கழிவுகளை மாத்திரம் அப்புறப்படுத்துவதற்கு பணியாற்ற அவுஸ்திரேலிய கடன் மற்றும் உள்நாட்டுக் படுகடன் உதவிச் செயற்திட்ட ஒப்பந்தத்தை திருத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன்காரணமாக அவுஸ்திரேலிய கடன் மற்றும் உள்நாட்டுக் படுகடன் உதவிச் செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொண்ட கடன் தவணைக்கட்டணம் மற்றும் அதற்கான வட்டி செலுத்தப்படுவதுடன் அதற்கு மேலதிகமாக மேற்கூறப்பட்ட 03 மாகாணங்களிலும் அமைந்துள்ள கணக்காய்வுக்கு உட்படத்தப்பட்ட 21 வைத்தியசாலைகளின் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கு 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டுவரையான 04 வருட காலத்துக்கும் அத் தனியார் நிறுவனத்துக்கும் வேறு நிறுவனங்களுக்கும் செலுத்தப்படவேண்டிய மொத்தப் பணத் தொகை ரூபா. மில்லியன் 384.12 ஆக இருந்ததுடன் அரசுக்கு அது மேலதிகமான செலவுப் பொறுப்பாகவிருந்தது.

இந்நிலைமையினுள் அவுஸ்திரேலிய கடன் மற்றும் உள்நாட்டுக் படுகடன் உதவிச் செயற்திட்டத்தின் கீழ் மருத்துவக் கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்யும் நோக்கத்தை அடைய முடியாமல் போயுள்ளது. அதேபோல் அவுஸ்திரேலிய கடன் மற்றும் உள்நாட்டுக் படுகடன் உதவிச் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த Meta Mizer இயந்திரம் மற்றும் Incinerator இயந்திரம் விவரக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறான கொள்ளளவில் செயற்பட்டிருக்கவில்லை என்பதுடன் இயந்திரங்களால் வெளியேற்றப்படும் பொருட்கள் சுற்றுச்சூழலுடன் சேர்ப்பதற்கு தகுதியான அளவில் மாற்றம் பெற்றுள்ளதா என சுயாதீன ஆய்வொன்றின் மூலம் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமொன்றான பல வைத்திய சாலைகளின் மருத்துவ கழிவுப் பொருட்களை ஒரு இடத்தில் அகற்றும் செயற்பாடு (Cluster System) முற்றாக தோல்வியடைந்துள்ளது. மேலும் இவ் இயந்திரங்கள் மூலம் வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள் முறையாக மாகாணசபை ஆணையாளர்கள் ஊடாக வெளியேற்றப்படுவதற்கு ஒழுங்கான செயல்முறையொன்று நாடு முழுவதிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### மருத்துவ உபயோகப் பொருட் கொள்வனவு

மருந்தளவு கோட்பாட்டு திருத்தற்குழுவின் பரிந்துரையின்றி எதுவித மருத்துவப் பொருட்களும் கொள்வனவு செய்யப்படலாகாது என அமைச்சு தீர்மானித்திருந்தது. 2019 டிசம்பர் 31 ஆம் திகதியதுவரை பாவனையிலுள்ள 20,698 மருத்துவ வினியோகப் பொருட்களில் 483 மருந்துப் பொருட்களும் 4,611 சத்திர சிகிச்சை பொருட்களும், 2,043 ஆய்வுகூட பொருட்களும் என்றவகையில் மொத்தமாக 7,137 பொருட்கள் அதாவது நூற்றுக்கு 34 வீதமான பொருட்கள் மருந்தளவு கோட்பாட்டு திருத்தற்குழுவின் பரிந்துரையின்றி பாவனையில் உள்ளன.

மருந்தளவு கோட்பாட்டு திருத்தற்குழுவின் பரிந்துரையின்றி பாவனையில் உள்ள 190 மருத்துவ கொள்வனவுப் பொருட்கள் 2019 ஆண்டுக்கென தருவிக்கப்படடிருந்ததடன், அதற்கு 2020 ஜுலை 09 ஆம் திகதியதுவரை ரூபா. மில்லியன் 1,711.21 செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல் 2020 ஜுலை 29 அம் திகதியதுவரை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக மருந்தளவு கோட்பாட்டு திருத்தற்குழுவின் பரிந்துரையின்றி பாவிக்கப்படும் மருந்துப்பொருள் கொள்வனவுக்கு முறையே ரூபா. மில்லியன் 3,507.28 மற்றும் ரூபா. மில்லியன் 564.79 க்கான கொள்வனவுக் கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டிருந்தன.

### Coronary stent bare metal காலாவதியான சத்திரசிகிச்சை உபகரணம்

2012 ஆம் ஆண்டின் மருந்துப் பொருட்கள் கொள்வனவு தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, மருந்தொன்றின், சத்திரசிகிச்சை உபகரணமொன்றின் அல்லது வேறு ஏதேனும் மருத்துவ வழங்கலொன்றின் கேள்வி மாறுபடின் அல்லது மெதுவான வேகத்தில் நுகரப்படும் (Non-moving/Slow moving) பொருளொன்றாயின் அது தொடர்பாக மருந்தளவு கோட்பாட்டுத் திருத்தற்குழுவிடம் சமர்ப்பித்து (Formulary Revision Committee) அப் பொருளை பாவணையிலிருந்து அகற்றுவதா இல்லையா என்பதை தீர்மானித்திருக்க வேண்டும். அதேபோல் புதிய தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக நிகழும் கேள்வி மாற்றத்துக்கான விவரக்குறிப்பை தற்காலிகமாக மாற்றியமைக்கவும், அதற்காக சுயாதீன விவரக் குறிப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவொன்றை தாபிப்பதற்கும், மருந்தளவு கோட்பாட்டுத் திருத்தற்குழுவை குறித்த நேரத்தில் கூட்டுவதற்கும், விவரக்குறிப்பு மாற்றத்திற்கேட்ப சரக்கிருப்பில் ஏற்படும் மேலதிகம் அல்லது கலாவதியாதலைத் தடுப்பதற்கும், அதில் நவீன தொழிநுட்பத்தின் மூலம் கேள்வியில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் பற்றி உடன் கண்டறிந்து குறித்த கொள்வனவுக் கட்டளையை சமர்ப்பிக்காது தவிர்த்திருக்கவும் முடியுமாகவிருந்தது. அதன்படி பணியாற்றாததன் காரணமாக, ரூபா. மில்லியன் 44.84 செலவுள்ள இருதய நோய்கள் தொடர்பான சத்திரசிகிச்சைக்கு பயண்படுத்தப்படும் coronary Stent bare metal சத்திர சிகிச்சையளிக்கும் உபகரணம் 2019ஆம் ஆண்டிலும் 2020ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலும் காலாவதியாகி இருந்தது.

### Depogestin I மருந்தின் தரம் மறைவுறலும் காலவாதியும்

கரு உருவாதலை தவிர்க்கும் மருந்தாக சுகதேகியான பெண்களுக்கு கொடுக்கப்படும் Depogestin I (Depot Medroxy Progesterone Acetate) மருந்தின் 1,200,000 அலகுகளைக்

கொள்வனவு செய்வதற்கு 2011 மார்ச் 30 ஆம் திகதி மருத்துவ வினியோகப் பிரிவு அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்துக்கு கொள்வனவுக் கட்டளையொன்றைப் பிறப்பித்திருந்தது.

இதற்குமுன் ஒரு சந்தர்ப்பத்திலும் வேறு வினியோகஸ்தர்களால் வழங்கப்பட்ட இம் மருந்தை பாவித்ததன் காரணமாக மனித மரணங்கள் உட்பட பல்வேறு சிக்கல் ஏற்பட்டிருந்ததென தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் உறுப்பினர் ஒருவர் தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் தலைவரிடம் தெரிவித்திருந்தார். எனினும் அது தொடர்பாகவோ பெறுகைக் குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொழிநுட்ப விவரக்குறிப்பினுள் உள்ளடக்கப்பட்டிருந்த கொள்வனவுக் கட்டளை விதிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாது, கிடைக்கப்பெற்றவகையில் மிகக் குறைந்த விலைமனுக் கோரலை சமர்ப்பித்திருந்த விலைமனுதாரருக்கு மொத்தப் பெறுமதி ரூ. மில்லியன் 87.03 க்கான வழங்கல் கட்டளையை ஒப்படைப்பதற்கு 2011 நவம்பர் 21 ஆம் திகதி ஒன்றுகூடிய அமைச்சின் கொள்வனவுக்குழு அங்கீகாரம் அளித்திருந்தது.

முதல் 600,000 அலகுகளுகளை உள்ளடக்கிய தொகை 2012 மார்ச் 13அம் திகதி துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகை பங்கீடு செய்யப்பட்டதன் பின் முதலாம் வாரத்தினுள் அம் மருந்தை பாவித்ததன் காரணமாக கடுமையான பாதுகாப்பற்ற எதிர்விளைவு (அயற்பொருளை தாங்க முடியாத எதிர்விளைவு) (severe anaphylactic reaction) நிகழ்ந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன் காரணமாக அவ் உற்பத்தித் தொகுதியை பாவனையிலிருந்து அகற்றுவதற்கும் (withdraw) மிகுதி 600,000 தொகைக்கான கொள்வனவை நிறுத்துவதற்கும், சர்வதேச ரீதியில் ஒப்புக்கொள்ளப்பட்ட உற்பத்தியொன்றை பெற்றுத்தர வழியமைக்குமாறும், குடும்ப சுகாதார பணிமனையின் மகளிர் மற்றும் சிறுவர் சுகாதாரப் பணிப்பாளர் சுகாதார செயலாளருக்கு பரிந்துரைத்திருந்தார்.

இந்த அரசாங்கம் மற்றும் இதற்கு முன்பிருந்த அரசாங்கத்திற்குமுரிய தரம்குறைந்த மருந்துப் பொருட்கள் என்ற காரணத்தால் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட அலகுகள் 1,131,800 மூலம் ஏற்பட்ட நட்டம் ரூபா மில்லியன் 96.4 மருத்துவப் பொருள் வளங்கள் பிரிவு அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிட்டிருந்தபோதிலும், அதில் ரூ.மில்லியன் 60.4 இனை வழங்குனர் அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்தாது தவிர்ந்துள்ளார். அக் காரணத்தால் 2016 ஒக்டோபர் 17ஆம் திகதிமுதல் குறித்த வழங்குனருடன் கொடுக்கல் வாங்கல் செய்வதை இடைநிறுத்தம் செய்வதற்கு அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனம் தீர்மானித்திருந்ததுடன் 2020 செப்டம்பர் 01 ஆம் திகதியதுவரை அப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2012 டிசம்பர் 12 அம் திகதி ஒன்றுகூடிய தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு சிறந்த உற்பத்தி பொருட்கள் தொடர்பான (Good Manufacturing Product) அறிக்கையின்படி தொழிநுட்ப ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு பரிந்துறை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன்படி பணியாற்றாது 2013 ஏப்ரல் 02 ஆம் திகதி ஒன்றுகூடிய கொள்வனவு தொடர்பாக B சபையினால் சகல விடயங்களும் ஆராய்ந்து பார்க்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டு கொள்வனவுக் கட்டளையின் மிகுதி அலகுகலான 600,000 க்கான பணம் செலுத்தப்படுவதை ரத்துச் செய்யும் தீர்மானத்தை வழங்குனரின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் நீக்கிக்கொண்டுள்ளதுடன் அதே வழங்குனருக்கு மிகுதி 600,000 அலகுகளுக்கான கொள்வனவுக் கட்டளையையும் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்போது நோயளர்களின் உயிர்களை உத்தரவாதமற்ற நிலைமைக்கு உட்படுத்தியதுடன், மருந்துவக் கொள்வனவுகளின் அடிப்டை நோக்கமான தேகாரோக்கிமான மகளிருக்கு கொடுக்கப்படும் இவ் ஊசிமருந்தின் திறன், பாதுகாப்பு மற்றும் பலாபலன் தொடர்பில் (quality, safety, efficacy) தொழிநுட்ப மதிப்பாய்வின்போது கவனத்தில் எடுக்காது இம் மருந்தை மீண்டும் இயக்க மீட்பு வசதிகளுடன் (resuscitation facilities) வைத்திய சாலைகளுக்கு பகிர்ந்தளிப்பு செய்வதற்கும் அண்மிய கண்காணிப்பொன்றை செய்துகொள்வதற்கும் அமைச்சு கொள்வனவுச் சபைக்கு 2013 ஏப்ரல் 02 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இரண்டாம் தடவையாக தரவிக்கப்பட்ட 600,000 அலகுகளின் தொகை 2013 ஆகஸ்ட் 05ஆம் திகதி குடும்ப சுகாதார பணியகத்துக்கு கிடைக்கப்பெற்றிருந்தது. எனினும் இம் மருந்தில் காணப்பட்ட ஒழுங்கின்மை

தொடர்பாக 2012 செப்டெம்பர் 18 ஆம் திகதி மற்றும் 19 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த சிறந்த உற்பத்தி அனுபவம் தொடர்பான கண்காணிப்பு (GMP Inspection Report) அறிக்கையிலும், 2014 செப்தெம்பர் 09ஆம் திகதி குடும்ப சுகாதார தேசிய சபையின் 16 வது கூட்டத்திலும், 2016 ஜனவரி 22ஆம் திகதி தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் மூன்றாம் பாதுகாப்பு மற்றும் ஆபத்துகளை மதிப்பீடு செய்யும் உப குழுவின் (Safety & Risk Evaluation sub committee) கூட்டத்திலும் மற்றும் 2018 ஏப்ரல் 24ஆம் திகதி தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் 25வது ஔடத மதிப்பீட்டு கூட்டத்திலும் இம் மருந்து பயன்பாட்டிலிருந்து அப்புறப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த பொறுப்புக்கூறத்தக்க உத்தியோகத்தர்களால் இச் சரக்கிருப்பு காலாவதியாவதற்கு முன், நிராகரிக்கப்பட்ட தரமுடையதென்பதை வெளிக்காட்டும் சுற்றுநிருபம் பிறப்பிக்கப்படுவதை வேண்டுமென்றே அல்லது கவனயீனமாக தவறவிடப்பட்டிருந்தது. 2018ஆம் ஆண்டு ஜுலை மாதம் பகிர்ந்தளிக்கப்படாமல் குடும்ப சுகாதார பணியகத்தின் உள்ளேயே வைத்திருந்து காலாவதியாகியமையால் 14 மாத கால தாமதத்தின் பின் மருத்தவப் பொருட்கள் விநியோகப் பிரிவின் பணிப்பாளரினால் 2019 ஜுன் மாதம் 17ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை ஒன்றை பிறப்பித்ததினூடாக மொத்த உற்பத்திகளையும் பாவணையிலிருந்து அகற்றியிருந்தனர். இதன் காரணமாக வழங்குனரிடமிருந்து குறித்த நட்டத்தை அறவிட்டுக்கொள்ளும் சந்தர்ப்பம் அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்துக்கு இயலாது போயுள்ளது. இக் கொள்வனவின் மூலம் அரசுக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூ. மில்லியன் 91 ஐ விட கூடுதலாகவிருந்தது.

### திரீபோஷா உற்பத்தி

இலங்கை திரீபோஷா நிறுவனம் கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார்களுக்கும், பிள்ளைகளுக்கும் இலவசமாக வழங்கும் நோக்கில் 2017, 2018 மற்றும் 2019 ஆகிய மூன்று ஆண்டுகளில் முறையே 12,239, 11,913 மற்றும் 11,712 மெற்றிக் தொன்கள் என்றளவில் திரீபோஷா உற்பத்தி செய்திருந்தனர். அதன்படி முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2018 அம் வருடத்தில் நூற்றுக்கு 2.66 வீதத்தாலும் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 1.68 வீதத்தாலும் திரீபோஷ உற்பத்தி குறைக்கப்பட்டிருந்தது. அவ்வாறெனினும் வர்த்தக நோக்கில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்த சுபோஷ உற்பத்தி அம் மூன்று வருடங்களிலும் முறையே 1,130 மெற்றிக் தொன், 2,610 மெற்றிக் தொன், 3,717 மெற்றிக் தொன் ஆகவும் இருந்தது. அதன்படி முன்னைய வருடத்துடன் ஒப்பீட்டளவில் 2018 ஆம் வருடத்தில் நூற்றுக்கு 112.19 வீதத்தாலும், 2019 ஆம் வருடத்தில 42.41 வீதத்தாலும் சுபோஷ உற்பத்திகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. அதன்படி சமூக நலன்புரி நோக்கம் தாழ்த்தப்பட்டு வர்த்தக நோக்கம் மேலெழுந்துள்ளதைக் காண முடிகின்றது.

### வருமானங்கள் ஒன்றிணைந்த நிதியத்துக்கு வரவு வைக்கப்படாமை

திரீபோஷ நிறுவனத்தால் செயற்படுத்தப்படும் திரீபோஷ உற்பத்திக்கு தேவையான சகல மூலப் பொருட்களுக்கான செலவுகளையும் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவை அமைச்சினால் இலங்கை திரீபோஷ நிறுவனத்துக்கு பெற்றுக்கொடுக்கப் பட்டிருந்தது, இலங்கை திரீபோஷ நிறுவனத்தால் உற்பத்திச் செயற்பட்டால் நீக்கப்படுகின்ற கழிவுப்பொருட்களை விற்பனை செய்வதனூடாக பெறப்படும் இலாபங்கள் ஒன்றிணைந்த நிதியத்துக்கு வரவுவைக்கப்பட்டிருக்க வேண்டும். மதிப்பீட்டாண்டில் கழிவுப்பொருட்களை விற்பனை செய்ததன்மூலம் ரூ. மில்லியன் 23.84 இலாபம் சேமிக்கப்பட்டிருந்தபோதிலும், அவ் இலாபம் அரசின் ஒன்றிணைந்த நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. 2011ஆம் ஆண்டிலிருந்து மதிப்பீட்டாண்டுவரை கடந்த 09 ஆண்டுகளில் ரூ. மில்லியன் 139.91 க்கான இலாபம் சேகரிக்கப்பட்டிருந்தபோதிலும், அப் பணம் ஒன்றிணைந்த நிதியதுக்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### பால்மாவுக்கான பணம் செலுத்தல்

அமைச்சின் தீர்மானமொன்றின் படி திரீபோஷ உற்பத்திக்காக தேவையான பால்மா மில்கோ நிறுவனத்தால் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இலங்கை திரீபோஷ நிறுவனத்தால் 2017, 2018 மற்றும் 2019ஆம் வருடங்களில் ஒரு கிலோ பால்மாவுக்கு முறையே, ரூ. 810 ரூ. 798 மற்றும் ரூ. 800 என்ற ரீதியில் மில்கோ தனியார் நிறுவனத்துக்கு பணம் செலுத்தியிருந்தது. அவ்வாறெனினும், அம் 03 வருடங்களிலும் மில்கோ தனியார் நிறுவனத்தால் திரீபோஷ நிறுவனத்தின் விற்பனை நிலையத்துக்கு

கம்பனியின் முகவர் மூலமாக 1கிலோ கிராம் பால்மா ரூ. 690 க்கு வழங்கப்பட்டிருந்தது. அதன்படி மில்கோ தனியார் நிறுவனத்தால் திரிபோஷ உற்பத்திக்கு தேவையான பால்மா ஒரு கிலோ கிராம் ரூ. 690க்கு கொள்வனவு செய்ய முடியுமாக இருந்தபோதிலும் அதற்காக 03 வருடங்களிலும் ஒரு கிலோ பால்மவுக்கு முறையே ரூ, 120, ரூ. 108, மற்றும் ரூ. 110 என்றவாறு மேலதிகமாக பணம் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி குறித்த வருடங்களில் முறையே, ரூ. மில்லியன் 77.16, ரூ. மில்லியன் 64.80 மற்றும் 66.00 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

### திட்டமிடலுக்கு அமைய பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளாமை

இலங்கை திரிபோஷா நிறுவனத்தினால் 2018/2019 கால எல்லைக்குத் தேவையான சோளம் கொள்வனவுக்கு 12,000 மெற்றிக் தொன் பெற்றுக் கொள்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் 2018 மே 23 ஆம் தகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 08 மாதங்களின் பின் அதாவது 2019 ஜனவரி 22 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின்படி, 1 கிலோ சோளம் ரூ.55.90 வீதம் பெற்றுக்கொள்வதற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2018 மே 23ஆம் திகதி முதல் 2019 ஜனவரி 22 ஆம் திகதி வரை 08 மாத காலத்தினுள் 04 சந்தர்ப்பங்களில், தேவையான சோளம் 12,000 மெற்றிக்தொன்களில் 3,100 மெற்றிக் தொன்கள் ரூ.59.50 விலையிலும் 2,775 மெற்றிக் தொன் ரூ. 59 விலையிலும் 1,250 மெற்றிக் தொன் 58.50 விலையிலும் 1,875 மெற்றிக் தொன் ரூ.66 விலையிலும் மொத்தமாக 9,000 மெற்றிக் தொன்கள் போட்டி விலைமனுக் கோரல் முறையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி பெறுகை நடவடிக்கைகள் முறையான திட்டமிடலின்படி மேற்கொள்ளப்படாத காரணத்தால் சோளக் கொள்வனவுக்கு ரூ.மில்லியன் 41.95 மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.

### அமைச்சரவைத் தீர்மானத்துக்கு எதிராக செயற்படுதல்.

2014 ஆம் ஆண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் படி, சிறுநீரக நோயாளிகள் செறிந்து வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 5 வருடம் கட்டாய சேவைக்காலத்தின் அடிப்படையில் 308 ஆயுர்வேத பொதுச் சுகாதார வைத்திய உத்தியோகத்தர்கள் 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01 ஆம் திகதிமுதல் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப வகுப்புக்கான மருத்துவ சேவை பதவிக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். அவ் அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம், மேற்கு, மத்திய மற்றும் சபரகமுவ மாகாணங்களுக்கு அம் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கக் கூடாது. எனினும் ஆயர்வேத திணைக்களத்தினால் 2018 டிசம்பர் 31 அம் திகதியன்று வரை பொதுச்சுகாதார உதவி மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவிக்கு நியமிக்கப்பட்ட 285 உத்தியோகத்தர்களில் 164 உத்தியோகத்தர்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்குப் புறம்பாக மேற்கு, மத்திய மற்றும் சபரகமுவ மாகாணங்களில் இணைக்கப்பட்டிருந்தனர்.

### சிறுநீரக நோய்த்தடுப்புக்குரிய கடமைப் பொறுப்பளித்தல்.

ஆயர்வேத திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டுமுதல் செயற்படுத்தப்பட்டு வந்த சிறுநீரக நோய்த்தடுப்பு செயற்திட்டத்துக்கு 2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் என்றவகையில் முறையே ரூ.மில்லியன் 197.28 மற்றும் ரூ. மில்லியன் 228.22 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இவ் உத்தியோகத்தர்களுக்கு சிறுநீரக நோய்த்தடுப்பு சம்மந்தமான கடமைப் பொறுப்புகள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அது சம்பந்தமாக செயற்பாட்டுத் திட்டமொன்றோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2014ஆம் ஆண்டுமுதல் 2019ஆம் ஆண்டு வரையான 5 வருட கால இடைவெளியில் சிறுநீரக நோய்த்தடுப்பு தொடர்பில் இவ் உத்தியோகத்தர்கள் உற்பத்தித்திறனுள்ள வகையில் இவ் உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்யவதற்கோ வளர்ச்சியை மதிப்பீடு செய்யத்தக்க வகையிலும் செயலாற்றுகைகளை மதிப்பீடு செய்யத்தக்க வகையில் செயல்முறையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### நோயளர்களை கவனிக்கும் சேவைகளுக்கு இடையூறு விளைவித்தல்

பொரலை ஆயர்வேத போதனா வைத்தியசாலையில் கனிஷ்ட பணிக்குழுவில் காணப்படும் ஆள் பற்றாக்குறை காரணமாக நோயாளர்களை கவனிக்கும் சேவையில் குறைபாடுகள் காணப்படுகின்றன. கனிஷ்ட பணிக்குழு முகாமைத்துவத்துக்கு முறையான உள்ளக நிர்வாகச் செயல்முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஊழியர்களின் அத்தியவசிய சேவை கருத்தில்கொள்ளப்படாமல் அவர்களின்

விருப்பத்திற்கேற்ப விடுமுறை எடுக்கப்பட்டிருந்தது.

### தொற்றாத நோய்களுக்கான சிகிச்சை முகாமைத்துவம்

தொற்றாத நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் முகாமைத்துவ தொகுதி சம்மந்தமாக ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்கான செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்கு நேரடியாக பங்குபற்றச் செய்ய வேண்டிய பணிக் குழுவொன்றுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆயுர்வேத திணைக்களம் அப் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காதது மட்டுமன்றி தேவையான ஆய்வுகூட வசதிகள் பூரணப்படுத்தப் பட்டிருக்கவில்லை. 2013, 2014 மற்றும் 2015 அகிய வருடங்களில் மொத்தமாக ரூ. மில்லியன் 164.96 செலவில் ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ் உபகரணங்கள் செயற்படாத விதத்தில் காணப்பட்டாலும், 2016ஆம் வருடத்தில் ரூ. மில்லியன் 38.05 செலவு செய்யப்பட்டு ஆய்வு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2019 செப்டெம்பர் 31 ஆம் திகதியதுவரை அவ் உபகரணங்களில் ரூ. மில்லியன் 65.07 பெறுமதியான உபகரணங்களை பாவனைக்கு எடுக்காதது பொறுப்பற்ற செயற்படாக காணப்பட்ட போதிலும், ரூ.மில்லியன் 137.94 பெறுமதிவாய்ந்த உபகரணங்கள் மந்தமான பயன்பாடுடையதாக காணப்பட்டன.

### பாரம்பரிய அறிவுப் பாதுகாப்பும் சுதேச மருத்துவ அபிவிருத்தியும்.

ஆயர்வேத திணைக்களம் பாரம்பரிய அறிவை பாதுகாக்கவும் சுதேச மருத்துவத் துறையை அபிவிருத்தி செய்வதற்குமான நோக்கத்துடன் நாடு முழுவதிலும் காணப்படும் சகல பாரம்பரிய வைத்தியர்களிடமும் காணப்படும் அறிவுகளை பாதுகாக்கவும் அதற்குத் தேவையான கட்புல செவிப்புல தகவல் உலக மத்திய நிலையமொன்றை நிறுவுவதற்கு ரூ. மில்லியன் 23.55 செலவுசெய்து அவ் அலகுக்குத் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அப் பிரிவை செயற்படுத்துவதற்கு நேரடியாக தேவையான கட்புல செவிப்புல பிரிவின் உத்தியோகத்தர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர், தொழிநுட்ப உத்தியோகத்தர், காணொளி தொகுப்பாளர், ஒலித் தொகுப்பாளர் மற்றும் உதவியாளர், கனணி இயக்குபவர் ஆகிய 07 பதவிகளும் 03 புகைப்படக் கலைஞர்கள் அகிய பதவிகளுக்கு ஒப்பதல் அளிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதிவரை அவ் உபகரணங்கள் செயற்படுத்தப்படாது காணப்பட்டன.

### பொரலை ஆயர்வேத வைத்தியசாலையில் புதிய கட்டிட நிர்மாணம்

பொரலை ஆயர்வேத வைத்தியசாலையில் புதிய கட்டிடம் ரூ மில்லியன் 1,164.13 செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று ஆயர்வேத திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அக் கட்டிடம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- நிர்மாண திட்டங்களுக்கும் பொறியியல் மதிப்பீட்டுக்கும் பிரதான கழிவு நீர்த்தொட்டி (water sump) மற்றும் சாக்கடைத் தொகுதி உட்படுத்தப்படவில்லையாகையால் அவ் இரு பணிகளும் பூர்த்தி செய்யப்படாத காரணத்தால் 2020 மார்ச் 31 ஆம் திகதிவரைக்கும் கட்டிடம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- மொத்தச் செலவு ரூ. மில்லியன் 7.37 உடைய 200 தொலைக்காட்சிப் பெட்டிகள், 108 நீர் கொதிக்கவைக்கும் வோட்டர் கெய்ஸர் (water geezers) மற்றும் 161 காற்றுப் பதனாக்கி (Air Conditioner) பொறுத்தப்பட்டிருந்தபோதும் அவற்றுக்கான உத்தரவாத காலம் முடிவடைந்துள்ள நிலையிலும் கட்டிடம் பாவிக்கப் பட்டிருக்கவில்லை.

- நிர்மாண ஒப்பந்தத்தின்படி குறித்த காலப்பகுதியில் ஒப்பந்ததாரரைப் பயன்படுத்தி பணிகள் செய்துகொள்ளப் பட்டிருக்கவில்லை. காலதாமதமின்றி ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்தத் தக்க வகையில் 2015 ஆம் ஆண்டிலிருந்து அவ் வருடங்களுக்கு போதுமான அளவு நிதி ஒதுக்கல்களை செய்து கொள்ள தவறியுள்ளதுடன் ஒப்பந்ததாரர் சமர்ப்பித்திருந்த விலைப்பட்டியல்களுக்கு உரிய காலத்தினுள் பணம் செலுத்தத் தவறியுள்ளனர். விலைப்பட்டியல்களுக்கு பணம் செலுத்தல் தாமதமாகியதன் பேரில் ஒப்பந்ததாரரால் ரூ. மில்லியன் 27.91 தாமதக் கட்டணம் பெற விண்ணப்பிக்கப் பட்டிருந்தது.

### இலத்திரனியல் ஆவண முகாமைத்துவ கணினி மென்பொருள் தொகுதி ஸ்தாபித்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பெரியாஸ்பத்திரி சபை மூலம் இலத்திரனியல் ஆவணங்கள் முகாமைத்துவ கணினி மென்பொருள் தொகுதியொன்றை ஸ்தாபிப்பதற்கு கணினி மென்பொருளொன்றை கொள்வனவு செய்வதற்கு, தகவல்களை வருடுவதற்கு Scan மக்கள் தொடர்பாடலுக்கு மற்றும் உத்தியோகத்தர் குழு கொடுப்னவுகள் போன்றவற்றுக்கு 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுவரையான காலத்துக்கு ரூ. மில்லியன் 21.5 செலவு செய்யப்பட்டிருந்தது. 2019 டிசம்பர் 31 ஆம் திகதியதுவரை குறித்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு இக் கணினித் தொகுதி பயன்படுத்தப் படவில்லை என்பதால் அதற்காக செய்யப்பட்ட செலவுகள் பயனற்றுப் போயுள்ளன. மேலும் இத் தொகுதியைப் பாவித்து நோயாளர் விவரச் சீட்டு, மற்றும் நோயாளர் பரிசோதனை அறிக்கைகளை ஆராய்ந்து நோய்கள் பற்றிய நிர்ணயிப்புகளைச் செய்வதற்கும், குறித்த குறிப்புகள் மற்ற தகவல் தொகுதியினுள் சேமித்து வைப்பதற்கும், மருத்துவமனை நோயாளர் சிகிச்சை நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கும் 2018 ஒக்டோபர் 03 ஆம் திகதி ரூ. மில்லியன் 2.82 செலவில் Laptop 25 மடிக்கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அக் கணினிகள் 2020 ஜுன் 30 ஆம் திகதியதுவரையில் குறித்த கருமங்களுக்கு பாவிக்கப்பட்டிருக்க வில்லை.

### Orthopedic எலும்பியல் சத்திரசிகிச்சையறைக்கான உபகரணங்கள் கொள்வனவு.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் Orthopedic சத்திரசிகிச்சை அறைக்கு Arthroscopy set with Full HD Camera System உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கு ரூ.மில்லியன் 1.5 மதிப்பீடொன்று தயார் செய்யப்பட்டிருந்தது. அம் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியைவிட ரூ. மில்லியன் 12.96 கூடதலான பெறுமதிக்கு அதாவது ரூ. மில்லியன் 14.46 க்கு அவ் உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அரச பெறுகை வழிகாட்டற்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமையாத விதத்தில் இப்பெறுகை இடம்பெற்றுள்ளது. அதேபோல் கட்டாய தேவை என இனங் கண்டுகொள்ளப்பட்ட விவரக் குறிப்புகள் அற்ற உபகரணமொன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ் உபகரணத்தில் உள்ளடங்கலான உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கு குறித்த விலைமனுக் கோரலுக்கு குறித்த விலைமனுதாரர் தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையிடமிருந்து பெற்றுக் கொண்ட 11 உத்தரவுப்பத்திரங்கள் விலைமனு திறக்கும் திகதியாகும்போது காலாவதியாகி இருந்தது. ஒப்பந்த விதி C 23 இன்படி, உபகரண விநியோக தாமதக் கட்டணமாக ஒவ்வொரு கிழமைக்கும் ஒப்பந்தப் பெறுமதியில் நூற்றுக்கு ஒரு வீதம் ரூ. மில்லியன் 144,558 தாமதக் கட்டணமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

### இருதய சத்திர சிகிச்சை தீவிர சிகிச்சைப்பிரிவுக்கு இயந்திரங்கள் கொள்வனவு

ஸ்ரீ ஜயவர்தனபுரம் பெரியாஸ்பத்திரி சபையினால் 2018 ஜுலை மாதம் 06 ஆம் திகதி ரூ. மில்லியன் 18.24 செலவில் இருதய சத்திர சிகிச்சை தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு Maquet Servo வகை Ventilator 02 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரச பெறுகைகள் வழிகாட்டற் கோவை விதிமுறைகளுக்கு அமையாத விதத்தில் இப் பெறுகை இடம்பெற்றிருந்தது. ஔடதங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் பெறுகை வழிகாட்டற் கோவையின் 2.1 மற்றும் 2.2 வழிகாட்டல்களின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட விலைமனுதாரர் குறித்த உபகரணத்துக்கு தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையிடமிருந்து பதிவுச் சான்றிதழை பெற்றிருக்கவில்லை என்பதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட விலைமனுதாரர் உள்நாட்டு முகவராக செயற்படுவதற்கு அதிகார பலத்தையும் பெற்றிருக்கவில்லை. மேலும் அரச பெறுகைகள் வழிகாட்டற் கோவையின் 5.6.2 வழிகாட்டலுக்கு எதிராக செயற்பட்டு குறித்த விலைமனுதாரருக்கு நலன் பயக்கும் வகையில் விவரக்குறிப்பு தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக குறைந்த விலைமனுவை நிராகரித்து மிகக்கூடிய விலைமனுவை தேர்ந்தெடுத்ததன் மூலம் சபை ரூ. மில்லியன் 12.3 இனை மேலதிகமாக செலவுசெய்திருந்தது. இயந்திரத்தை இயக்குவதற்குத் தேவையான பயற்சிமீது தொழிநுட்ப மதிப்பாய்வுக்குழுவின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், இயந்திரத்துக்கு EDI Catheters பாவிக்கப்படுமாயின் மேலதிக செலவொன்றையும் செய்யவேண்டும் என்பதும் தெரியவந்துள்ளது. இவ் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஒரு வருடத்துக்கும் மேலான காலம் கடந்துள்ளபோதும், அவை குறைவான பயன்பாட்டில் உள்ளது.

### ஔடத கொள்வனவு

- அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தினால் 2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களில் 14 தடவைகள் மருத்துவ விநியோக பிரிவுக்கு ரூ. மில்லியன் 891.18 செலவு செய்யப்பட்டு வியாபரக் குறியான Herticad எனும் Trastuzumab injection 440mg with solvent in 20ml vials 8,945 ஐ உள்நாட்டுச் சந்தையில் ஒரு வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இப் பெறுகைகள் 14 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 13 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகளின் மொத்தப் பெறுமதி ரூ. மில்லியன் 50 ஐ விட அதிகமாக இருந்ததன் காரணமாக, தொழிநுட்ப மதிப்பாய்வுக்கு 02 நிபுணத்துவ மருத்துவர்கள் உள்ளடங்கலாக 05 பேர் உள்ளடங்கிய தொழிநுட்ப பகுப்பாய்வுக் குழுவொன்றை சுகாதார அமைச்சு நியமித்திருக்க வேண்டும். இப் பெறுகைக்கு மூன்று பேர்கள் மாத்திரமே அடங்கிய தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்றையே கூட்டுத்தாபனம் நியமித்திருந்தது. அத் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவுக்கு எவ்வித நிபுணத்துவ வைத்தியரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

திணைக்கள பெறுகைக் குழுவினதும் தலைவரான கூட்டுத்தாபனத்தின் தலைவர், தொழிநுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு நிபுணத்துவ வைத்தியரின் பெயரை பரிந்துரைத்திருந்ததை அடிப்படையாகக் கொண்டு 13 தொழிநுட்ப மதிப்பாய்வு குழுக்களுக்கு ஒரு நிபுணத்துவ வைத்தியரின் உதவி மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவ் நிபுணத்துவ வைத்தியர் வழங்கியிருந்த பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு தமது பரிந்துரைகளை சமர்ப்பித்திருந்தது.

தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவுக்கு ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுக்கும் நிபுணத்துவ வைத்தியருக்கு, குறித்த மருந்து தொடர்பாக முன் அனுபவம் இல்லாத காரணத்தால் விலை மனுவை நிராகரிக்க அரச பெறுகை வழிகாட்டற் கோவையில் ஏற்பாடுகள் அமையப்பெற்றிருக்கவில்லை என்பதுடன் இப் 14 பெறுகைகளின்போதும் குறித்த நிபுணத்துவ வைத்தியர் மிகக்குறைந்த விலை மனுதாரரின் உற்பத்திகளை முன்பு பாவித்ததற்கான அனுபவம் இல்லை எனக் கூறப்பட்ட பரிந்துரையை அடிப்டையாகக் வைத்து பெறுகைக்குழு மிகக்குறைந்த விலை மனுவை நிராகரித்துள்ளதன் விளைவாக கூட்டுத்தாபனத்துக்கு ரூ. மில்லியன் 230.86 மேலதிகமாக செலவுசெய்ய நேர்ந்துள்ளது.

2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வர்த்தமானி பத்திரிகையில் வெளியாகிய அறிவித்தல் ஊடாக Trastuzumab injection 440mg ஒரு அலகு மருந்துக்கு ரூ. 95,000 அதி கூடிய கட்டுப்பாட்ட விலை நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 செப்தெம்பர் 04 திகதி வெளியிடப்பட்ட கொள்வனவுக்கட்டளையில் காட்டப்பட்டுள்ள குறித்த Trastuzumab மருந்து 500 அலகுகளுக்கு ஒரு அலகுக்கு ரூ. 135,900 வீதம் பணம் செலுத்தப்பட்டிருந்தது. கட்டுப்பாட்டு விலையைவிட கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த மொத்தப் பணம் ரூ. மில்லியன் 20.45 ஆக காணப்பட்டது.

- அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தில் மருந்துப்பொருள் வழங்கல் பிரிவுக்கு Cefriaxone Injection 500mg மருந்து குப்பி(Vial) ஒரு குப்பி ரூ. 18.72 வீதம் Vials 80,000 குப்பிகளைக் கொள்வனவு செய்வதற்கான பிரதான கொள்வனவுக் கட்டளையை முன்னைய வருடம் அனுப்பியிருந்ததுடன் சரக்கு காலதாமதமாக விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஏற்பட்டிருந்த சரக்குத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில், அம் மருந்தின் 10,998 அலகுகளை உள்நாட்டுச் சந்தையில் ஒரு குப்பி (Vial) ரூ. 490 வீதம் கொள்வனவு செய்த நிலை ஏற்பட்டிருந்தது. கொள்வனவுக் கட்டளை விதிமுறைகளுக்கு அமைய, வழங்குனரின் தாமதம் காரணமாக ஏற்பட்ட மேலதிக செலவு ரூ. மில்லியன் 5.18 இனை வழங்குனரிடமிருந்து அறவிடப் பட்டிருக்கவில்லை.

- மருத்துவ வழங்கல் பிரிவுக்கு தரமற்ற மற்றும் பழுதடைந்த மருந்துகள் வழங்கப்பட்டிருத்தல் மற்றும் குறைவான மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளமை ஆகிய காரணங்களால் ஏற்பட்ட செலவுகள், நிர்வாகச் செலவுகள் மற்றும் அச் சரக்குகளை அழிப்பதற்கான

செலவுகளை வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கு 2019 டிசம்பர் 31 ஆம் திகதியதுவரை பிறப்பிக்கப்பட்டிருந்த வரவுத்தாள்களின் மொத்தப் பெறுமதி 1,839.15 ஆக இருந்தது. 2020 ஜுன் 30 ஆம் திகதி வரை அதில் ரூ. மில்லியன் 791.31 இனை அறவிடுவதற்கு அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனம் தவறியுள்ளது.

### தொழில் முயற்சி மூலவள திட்டமிடல்

அரச ஔடத கூட்டுத்தாபனத்துக்கு தொழில் முயற்சி மூலவள திட்டமிடலை (Enterprise Resource Plan) மேற்கொள்வதற்கு 2016 டிசம்பர் 19 ஆம் திகதி ரூ. மில்லியன் 49.35 பெறுமதியில் ஒப்பந்ததாரர் ஒருவருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவ் ஒப்பந்தத்தின்படி 2018 பெப்ரவரி 19 ஆம் திகதியன்று செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். தொடர்ந்தும் செயற்திட்டத்தை நிறைவேற்றும்போது செயற்றிறன் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டபோதிலும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து 03 வருட காலத்துக்கும் மேற்பட்ட காலம் முழுவதிலும் ஒப்பந்தம் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 03 வருடங்களின் பின் 2020 பெப்ரவரி 20 ஆம் திகதி ஒப்பந்தம் (Terminate) முடிவுறுத்தப்பட்டிருந்தது.

செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூ. மில்லியன் 32.36 செலவில் கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் அடங்கிய 9 அலகுகளில் 497 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அக் கணினிகளும் உதிரிப் பாகங்களும் செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு பாவிக்கப்படாதிருந்ததுடன் அதற்கான கிரயம் ரூ. மில்லியன் 15.57 உடைய கணினி உதிரிப்பாகங்கள் 07 இன் 266 அலகுகள் கூட்டுத்தாபனத்தின் வேறு தேவைகளின் பாவனைக்கு விடுவிக்கப்பட்டிருந்தன. மிகுதி ரூ. மில்லியன் 16.79 கிரயமுடைய கணினிகளும் 07 வகை உதிரிப் பாகங்களும் அடங்கிய 231 அலகுகள் 2020 ஜுன் 30 ஆம் திகதியன்று வரையில் வீணாக களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன.

களஞ்சியத்தினுள் இருக்கும் 04 Server Computers களிலும் குறைபாடுகள் இருந்தமையால் அவற்றுக்கு பதிலாக மீண்டும் புதியவை வழங்குவதாக வழங்குனர் உடன்பட்டிருந்த போதிலும், 2020 ஜுன் 30 ஆம் திகதி வரை அவற்றை கூட்டுத்தாபனம் பெற்றுக்கொள்ள தவறியுள்ளது.

03 வருட காலத்தின் பின் இச் செயற்திட்டம் தோல்வியுற்றமை, ஒசுசல செயற்பாடுகள் உள்ளடங்கலாக கூட்டத்தாபனத்தின் சகல நடவடிக்கைகளுடனும் தொடர்புடைய தகவல் தொகுதி மீது நேரடியாக கேடு விளைவிக்கும் விதத்தில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

### ஔடதங்கள் உற்பத்தி

அரச ஔடதங்கள் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் மாதாந்த உற்பத்தி மற்றும் பொதியிடல் திட்டமிடலின்படி, மதிப்பீட்டாண்டில் 45 வகை ஔடதங்களில் 25 வகை ஔடதங்களின் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியை பூரணப்படுத்த தவறியுள்ளது. மேலும் மருத்துவப் பொருள் வழங்கல் பிரிவு கொள்வனவுக்கட்டளை அனுப்பியிருந்த 38 வகை ஔடதங்களில் 20 வகை தொடர்பில் மொத்த வருடாந்த தேவைகளின் 80 வீதத்தை தாண்டி மதிப்பீட்டாண்டில் விநியோகிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியுள்ளது. வேறு ஔடதங்கள் 13 வகை தொடர்பில் மருத்துவப் பொருள் வழங்கல் பிரிவு கொள்வனவுக் கட்டளை பிறப்பித்திருந்த மொத்த வருடத் தேவைகளில் நூற்றுக்கு 50 வீதத்தை விநியோகிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியுள்ளது. அதே போல் ஔடத உற்பத்தி தொழிற்சாலையின் உட் சூழல் காற்று தொடர்பான விவரக் குறிப்பு காணப்படாமை, உற்பத்திச் செயற்பாடுகள் மற்றும் பொதியிடல் பணிகளுக்கு போதியளவு ஊழியர்கள் காணப்படாமை, உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்கள் பற்றாக்குறை மற்றும் அவற்றை தரவித்துக் கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் தேவையான பொதியிடல் திரவியங்கள் பற்றாக்குறை ஆகிய காரணங்களால் மருத்துவ வழங்கல் பிரிவு மதிப்பீட்டாண்டுக்கான கொள்வனவுக் கட்டளை மூலம் ஔடதங்களின் விற்பனை விலை ரூ. மில்லியன் 528.86 பெறுமதி வாய்ந்த 18 வகை ஔடதங்களின் 408.23 மில்லியன் அலகுகளை 2020 பெப்ரவரி 12 திகதியன்று வரை விநியோகிப்பதற்கு முடியாமல் போயுள்ளது. மதிப்பீட்டாண்டில் 41 வகை ஔடதங்கள் 353.95 மில்லியன் அலகுகளுக்கான விற்பனை இலக்கை அடைந்துகொள்ள முடியாது போயுள்ளதுடன் அவ் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைய முடியாது போன வீதாசாரம் நூற்றுக்கு 06 இலிருந்து நூற்றுக்கு 92 வீதம் வரை பரந்த இடைவெளியுடன் காணப்பட்டது.

### கூட்டு வணிகம் ஆரம்பித்தல்

உள்நாட்டில் ஔடத உற்பத்திச் செயற்பாட்டை விரிவாக்குவதற்கு, அரச ஔடதங்கள் உற்பத்தி கூட்டுத்தாபனம் மற்றும் தகுதிவாய்ந்த தனியார் முதலீட்டாளர்களுக்கும் இடையே கூட்டு வணிகம் ஆரம்பிப்பதற்கான யோசனையின் கீழ் கூட்டுத்தாபனம் சாத்தியமான 17 முதலீட்டாளர்களுடன் மருந்துகளை விநியோகிப்பதற்கு 2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களில் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருந்தனர். 2019 ஆம் ஆண்டில் அக் கூட்டு வணிகங்களுடன் கூட்டுத்தாபனம் கொடுக்கல் வாங்கல் செய்துள்ள முறைகள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படும்.

- கூட்டு வணிக உருவாக்கம் தொடர்பாக அமைச்சினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழு (Official committee) குறித்த மருந்தை உற்பத்தி செய்யும் நிறுவனத்துடன் (Producer) கூட்டுத்தாபனம் கூட்டு வணிகம் செய்வதற்கு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என பரிந்துரைத்திருந்த போதிலும், அப் பரிந்துரைகளுக்கு புறம்பாக செயற்பட்டு சத்திரசிகிச்சை பயன்பாட்டுத்திரவம் உற்பத்தி செய்து விநியோகிக்க உள் நாட்டு உற்பத்தியாளர் மற்றும் இடைநிலை நிறுவனமொன்றுடனும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் முற்தரப்பு ஒப்பந்தமொன்றை செய்துள்ளார்.
- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வக் குழு (official committee) பரிந்துரைத்ததன்படி, கூட்டு வணிகம் தொடர்பில் கைச்சாத்திட்ட முதலீட்டாளர்களின் உற்பத்திச் செயற்பாடுகளின் தரக்கட்டப்பாடு, முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்ப உதவிகளை கூட்டுத்தாபனம் வழங்கவேண்டும் என்பதுடன், அதற்காக அம் முதலீட்டாளர்களின் வணிகப் பங்கின் 10 வீதத்தை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கவேண்டியிருந்தது. எனினும் கூட்டுத்தாபனத்திற்கு பங்குகள் விடுவிக்காத இரண்டு தனியார் நிறுவனங்கள் மதிப்பீட்டாண்டில் ரூ. மில்லியன் 2,172.65 பெறுமதிவாய்ந்த 15 விதமான மருந்துகளையும் ரூ. மில்லியன் 42.41 பெறுமதிவாய்ந்த 05 வகை சத்திரசிகிச்சை பயன்பாட்டுத்திரவங்களையும் மருத்துவ விநியோகப்பிரிவுக்கு விற்பனை செய்திருந்தது. அதேபோல் அத் தனியார் நிறுவனங்களின் உற்பத்திகள் தொடர்பில் போதுமான அளவு தரக் கட்டுப்பாடு, முகாமைத்துவம் அல்லது தொழிநுட்ப ஒத்துழைப்புகளை கூட்டுத்தாபனம் பெற்றுக் கொடுக்கத் தவறியுள்ளது.

- கூட்டு வணிக ஒப்பந்தம் செய்துகொண்ட முதலீட்டாளர் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளுக்கு கிரயத்தின் மீது நூற்றுக்கு 20 வீத இலாபமொன்று சேர்க்கப்பட்டு விற்பனைவிலை தீர்மானிக்கப்பட வேண்டியிருந்ததுடன், மதிப்பீட்டாண்டில் அவ்வாறு ஒரு முதலீட்டாளரிடமிருந்து தருவிக்கப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவுக்கு விற்கப்பட்டிருந்த 11 வகை மருந்துப் பொருட்களுக்குமான மொத்த உற்பத்திச் செலவுடன் 13.73 வீதம் முதலீட்டாளரும் விலைப் பட்டியல் விலையின் 8.28 வீத சேவைக் கட்டனம் கூட்டுத்தாபனமும் உழைத்திருந்தனர். அதன்படி மொத்த உற்பத்தி கிரயத்தின் நூற்றுக்கு 23.15 வீதம் இலாபம் மற்றும் சேவைக்கட்டணம் சேர்க்கப்பட்டு விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது.

- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவின் பரிந்துரைகளின்படி, மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் மாத்திரம் கூட்டு வணிகத்தில் ஈடுபட வேண்டும் எனினும், சத்திர சிகிச்சைக்கான உபகரணங்களை உற்பத்தி செய்யாது விநியோகம் மாத்திரம் மேற்கொள்ளும் தனியார் நிறுவனமொன்றுடன் கூட்டு வணிகத்துக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இவ் இடைநிலை முதலீட்டாளர் மதிப்பீட்டாண்டினுள் 08 சந்தர்ப்பங்களில் வேறு உற்பத்தியாளர்களிடம் கொள்வனவு செய்து விநியோகித்திருந்த சத்திர சிகிச்சை உபயோகப் பொருட்களை மருத்துவ விநியோகப் பிரிவுக்கு அவர்கள் கொடுத்திருந்த விலை சம்மந்தமாக ஆராய்ந்து பார்த்தபோது, உண்மையான விற்பனையாளரின் விற்பனை விலையைவிட நூற்றுக்கு 56 வீதத்திலிருந்து 115 வீதம்வரையான வித்தியாசங்களில் இலாபம் மற்றும் சேவைக் கட்டணம் இடைநிலை முதலீட்டாளர்களாலும் கூட்டுத்தாபனமும் பெற்றுக்கொண்டு மருத்துவ விநியோகப்பிரிவுக்கு வழங்கியிருந்ததுடன் இவ் உண்மையாக உற்பத்தியாளரின் கிரயம் தொடர்பாக கூட்டுத்தாபனம் எதுவித அவதானத்தையும் செலுத்தியிருக்கவில்லை.

- சத்திர சிகிச்சைக்கான உபகரணங்கள் எதையும் உற்பத்தி செய்யாது விநியோகத்தை மாத்திரம் மேற்கொள்ளும் அத் தனியார் நிறுவனம் மேற்குறித்த சத்திர சிகிச்சைக்கான உபயோகப் பொருள் அலகுகள் சம்மந்தமாக கூட்டுத்தாபனத்துக்கு சமர்ப்பித்திருந்த கிரயப் பத்திரங்கள் பிழையானது எனவும், அவை ஆரம்ப உற்பத்தியாளரின் உண்மையான உற்பத்திக் கிரயம் உட்படுத்தப்பட்டு தயாரிக்கப்படவில்லை எனவும், தெரியவந்துள்ளது. கூட்டுத்தாபனத்தில் எந்தவொரு பொறுப்பான உத்தியோகத்தராலும் அக் கிரய பத்திரங்கள் சரியானதென உறுதிப்படுத்தப்படவோ கிரயப் பத்திரங்களில் உள்ளடங்கியுள்ள தகவல்களை சுயாதீன தரப்பொன்றால் உறுதிப்படுத்திக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

- இவ்வாறு கூட்டு வணிகம் தொடர்பில் ஒப்பந்தம் செய்துகொண்ட முதலீட்டாளர், இலாபம் மற்றும் அதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தினால் சேவைக் கட்டணங்களும், பெறப்பட்டிருந்த காரணத்தால் கூட்டு வணிகம் துவங்கப்படவில்லை என்பதுடன் எதிர்பார்க்கப்பட்டவாறு குறைந்த கிரயத்தின் கீழ் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கமும் நிறைவேற்றப்படவில்லை.

- மருத்துவ விநியோகங்களுக்கு அரசு செலவுசெய்யும் பொதுமக்களின் பணம் சில இடைநிலை நிறுவனங்களை இலாபமடையச் செய்யும் வழிமுறையில் இது செயற்படுத்தப்பட்டுள்ளது. கூட்டு வணிகங்களின் பிரதான பங்குதாரரான கூட்டுத்தாபனம் இது தொடர்பில் போதுமான அளவு கண்காணிப்பு, இயக்கம் அல்லது நிர்வாகத்தை செய்திருக்கவில்லை.

## பொது ஆய்வுகூடம் மற்றும் பயிற்சிப் பாடசாலை ஒன்றை நிறுவுதல்

பொதுப் பரிசோதனை ஆய்வுகூடமொன்றையும் பயிற்சிப் பாடசாலை ஒன்றையும் நிறுவும் நோக்கில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ரூ. மில்லியன் 131.39 செலவில் நவீனமயப்படுத்தப்பட்ட கட்டிடம் 2019 ஆகஸ்ட் 18 ஆம் திகதி அரச ஔடதங்கள் உற்பத்திக் கூட்டத்தாபனத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வு செய்யப்பட்ட தினமான 2020 மே 20 ஆம் திகதியது வரை அதனை எதுவித பாவனைக்கும் எடுக்கப்படாமல் வீணாக மூடி வைக்கப்பட்டிருந்தது என்பதுடன் அக் கட்டிடத்துக்கு குறித்த மாகாண சபையிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய பொருத்தச் சான்றிதழையும் (coc) பெற்றிருக்கவில்லை. அதேபோல் கட்டடத்தை நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் முடிவடைந்த பின்பாவது ஆய்வு கூடத்தையும் பயிற்சிப் பாடசாலையை நிறுவுவதற்கு வழங்கப்படவேண்டிய ஏனைய எத் தேவைப்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனம் முன் ஏற்பாடுகளுடனோ தயார்நிலையிலோ இருக்கவில்லை.

## Cephalexin உற்பத்தி நிலையத்தை நவீனமயப்படுத்தல்

அரச ஔடதங்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் மதிப்பீட்டாண்டில் ரூ. மில்லியன் 88.42 செலவு செய்து Cephalexin உற்பத்தி நிலையத்தை நவீனமயப்படுத்தியதை அடுத்து 2019 ஆகஸ்ட் 09 ஆம் திகதி ஒப்பந்ததாரரினால் கூட்டுத்தாபனத்திடம் அக் கட்டிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. இவ் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்ய உத்தேசித்துள்ள Cephalexin Capsules USP 250mg மருந்து உற்பத்திக்கு சிறந்த உற்பத்தி நடைமுறைகள் தொடர்பான சான்றிதழ் (Good Manufacturing Practices) மற்றும் தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் பதிவுச் சான்றிதழையும் பெற்றுக் கொள்ளத் தவறியுள்ளமையால் 2020 ஜுலை 16 ஆம் திகதியதுவரை உற்பத்திச் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது.

## தலை மற்றும் முதுகெலும்பு தொடர்பான நோயாளிகளுக்கான நவீன மூன்றாம் நிலை சிகிச்சை மத்திய நிலையம;

சவுதி அபிவிருத்தி நிதியத்தால் நிவாரணக் கடன் அடிப்படையில் இலங்கை அரசுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த அமெரிக்க டொலர் மில்லியன் 12 க்குச் சமனான ரூ. மில்லியன் 2,791.16 க்கான கடன் தொகை மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலை தலை மற்றும் முதுகெலும்பு தொடர்பான நோயாளர்களுக்கு 300 கட்டில்களுடன் அதி நவீன மூன்றாம் நிலை சிகிச்சை மத்திய நிலையத்துடன் கூடிய புதிய பிரிவொன்று

ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டிலிருந்து நோயாளர் சிகிச்சை சேவைகளுக்கு அது திறந்து வைக்கப்பட்டிருந்தது. இப் பிரிவுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களையும் மரத் தளபாடங்களையும் கொள்வனவு செய்வதற்கு அந் நிதியிலிருந்து முறையே ரூ. மில்லியன் 43.33 உம் ரூ. மில்லியன் 820.02 உம் செலவிடப்பட்டிருந்தது. இப் பிரிவு திறந்து வைக்கப்பட்டு 09 வருட காலம் கடந்துள்ள நிலையிலும் பணிக்குழுவுக்கென 16 பதவிகள், விசேட வகுப்பு செவிலியர் 1 பதவியும், செவிலிச் சகோதரிகள் 03 பதவிகள், செவிலியர் பணிக்குழுவில் 112 பதவிகளும், கனிஷ்ட பணிக்குழுவில் 27 பதவிகளும் என்றவாறு ஊழியர் படையின் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக இப் பிரிவினுள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 06 தீவிர சிகிச்சை அலகுகளில் ஒரு அலகு நோயாளர்களுக்கு சிகிற்சையளிப்பதற்கு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. பிரிதொரு தீவிர சிகிச்சை அலகு தீவிர தற்காப்பு சேவைப்பிரிவு (High Defensive Unit ) வாக பாவிக்கப்பட்டள்ளது. அதன் காரணமாக தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் காணப்பட்ட மொத்த கட்டில்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 44 க்கு சமமான 29 கட்டில்கள் பாவிக்கப்படாதிருந்தது. திவீர சிகிச்சை பிரிவில் பணியாற்றும் செவிலியர்களுக்கான பட்டப் பின் படிப்பு ஆரம்ப தாதிமார் பாடசாலையில் பயிற்சி பெற்ற தாதி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் பிரத்தியேகமாக போதுமான அளவு பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்த போதும் 2011 ஆம் ஆண்டுக்கும் 2017ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 06 அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கு பொறுப்பாகவிருந்த 185 பேர்கள் அடங்கிய மொத்த செவிலியர் பணிக் குழுவில் நூற்றுக்கு 4 வீதத்துக்குச் சமமான 08 செவிலி உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் அப் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

### இழைய மாதிரிகளை பரிசோதிக்கும் ஆய்வுகூடம்

2018 செப்தெம்பர் மாதம் ரூ. மில்லியன் 9.89 செலவில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இழைய மாதிரிகளை பரிசோதிக்கும் ஆய்வுகூடம் (Histopathology Lab) க்கான Fully Automated slide preparation System (Biogenex fully Automated IHC Strainer With Glass Slipper) என்ற இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. இத் தொகுதி தொடர்பில் தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பித்திருக்காத விலைமனுதாரருக்கு நிதி ஒதுக்கத்தை வழங்கியிருந்ததுடன், இத் தொகுதிக்கான செயலாற்றுகை காப்பீடொன்றை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. அத்துடன் மாகாண நிதி ஒதுக்கல் குழுவின் பரிந்துரைக்கு நிறுவனத் தலைவரின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்க வில்லை என்பதுடன், இவ் இயந்திரத் தொகுதி வைத்திய சாலையின் இழையப் பரிசோதனை ஆய்வு கூடத்துக்கு 2018 செப்தெம்பர் மாதம் கிடைக்கப் பெற்றிருந்தது எனினும், இயந்திரமொன்று செயற்படுவதற்கு தேயைான மின் இணைப்பு வழங்கப்படாத காரணத்தால் 2020 ஜுன் 23 ஆம் திகதியதுவரை இவ் இயந்திரத் தொகுதி பாவனைக்கு எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருந்தது

### மின்சார துணிவெளுப்பகம்

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் துணிகளை தூய்மைப்படுத்துவதற்கான சேவையை வழங்கும் மின்சார துணிவெளுப்பகத்துக்கு 2018 மே மாதம் 23ஆம் திகதி ரூ. மில்லியன் 2.98 செலவில் மின்சார அயன் உளையொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதனை பாவிப்பது கடினமென பாவனைக்கு எடுக்காது இவ் வருட இறுதியிலும் செயலற்றுக் காணப்பட்டது.

### அத்தியவசிய மருந்துகள் மற்றும் ஊசி மருந்துகள் தட்டுப்பாடு

மகரகம அபேக்ஷா வைத்தியசாலையில் புற்று நோயாளர்களுக்கு கொடுக்கப்படும் 26 அத்தியவசிய மருந்துகள் மற்றும் ஊசி மருந்துகள் 2019 ஆம் ஆண்டில் 6 தினம் முதல் 316 தினங்கள் வரை பற்றாக்குறை நிலவியது. அதே போல் சிசு புற்று நோயாளர்களின் பெயர்களுக்கு தருவிக்கப்பட்ட 07 வகை மருந்துகள் மற்றும் ஊசி மருந்துகள் 2019 இறுதி 6 மாதங்களில் 2 முதல் 180 நாட்கள்வரையான காலப்பகுதியில் தட்டுப்பாடு நிலவியுள்ளது. மேலும் மருந்துகளுக்கான பரிந்துரைகளின் படி தொடர்ச்சியாக 6 மாதங்கள் கொடுக்கப்பட வேண்டிய சிலவகை மருந்துகளின் தட்டுப்பாடு காரணமாக குறித்த மருத்துவர்களின் பரிந்துரைகளின்படி செயலாற்றியிருக்கவில்லை.

**மருந்துகளை சேமித்துப் பாதுகாப்பதற்கு குளிரூட்டப்பட்ட கொள்கலன் ஒன்றை கொள்வனவு செய்தல்.**

அரச பெறுகைகள் வழிகாட்டலில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றாது மகரகம அபேக்ஷா வைத்தியசாலை 2018 ஆம் ஆண்டு ரூ. மில்லியன் 5.44 செலவில் விசேட புற்றுநோய் அழிப்பு மருந்துகளை பாதுகாப்பதற்காக குளிரூட்டப்பட்ட கொளகலனொன்றை கொள்வனவு செய்திருந்தது. இப் பெறுகை தொடர்பில் நியமிக்கப்பட்ட தொழிநுட்ப மதிப்பாய்வுக்குழுவிடமிருந்து நிபுணத்துவ ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளாததன் காரணமாக, தொழிநுட்பக் குழுவின் பரிந்துரைகள் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக விசேட வகையான புற்றுநோய்களை அழிப்பதற்கான மருந்துகளை சேமித்து வைக்க பொருத்தமற்ற விவரக் குறிப்புடன் கூடிய குளிரூட்டற் கொள்கலன் ஒன்றை கொள்வனவு செய்து ஒரு வருடத்துக்கும் அதிகமான காலம் செயற்படாமல் உள்ளது. அத்துடன் உத்தரவாத காலமும் முடிவடைந்துள்ளது. அரச பெறுகை வழிகாட்டற்கோவை ஏற்பாடுகளுக்கு அமைய ஒப்பந்தப் பெறுமதியில் நூற்றுக்கு 5 வீதம் ரூ. மில்லியன் 0.27 தடுத்து வைப்பு பணம் ஒரு வருடகாலம் நிறைவடையும்போது, திருப்திகரமான சேவைக்காலத்தின் பின் விவரக் குறிப்புக்கு அமைவானதென பொறியியலாளரின் சான்றிதழையும் பெற்றுக்கொண்டதன் பின் அத் தடுத்து வைக்கப்பட்ட பணம் விடுவிக்கப் பட்டிருக்க வேண்டும், எனினும் அவ்வாறு பணியாற்றாது மொத்தப் பணமும் செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல் தாமதப் பணம் அறவிடுவதற்கான ஒரு வாக்கியம் ஒப்பந்தப் பத்திரத்தில் உட்புகுத்தப் படாதன் காரணமாக 09 மாதங்களுக்கான தாமதக் கட்டணம் அறவிடமுடியாது போயுள்ளது.

**கந்தலாய் ஆதார வைத்தியசாலைக்கான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு**

கந்தலாய் ஆதார வைத்தியசாலைக்கு ரூ. மில்லியன 110.22 செலவில் 30 மருத்துவ உபகரணங்கள் மற்றும் உயிரியல் மருத்துவப் பொறியியல் சேவைப் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்டு அவ் வைத்தியசாலைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அவற்றில் பெறுமதி வெளிக்காட்டப்படாத 49 மருத்துவ உபகரணங்கள் அவ் வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. எனினும் மயக்க மருந்தேற்றும் மருத்துவர் அங்கு காணப்படாத காரணத்தால், 2016 டிசம்பர் மாதம் தொடக்கம் 2018 ஜுலை மாதம் வரையிலான காலப் பகுதியில் வைத்தியசாலை அடிக்கடி மூடப்பட்டிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் மாதத்தின் பின் அப் பிரிவை தீவிர பராமரிப்புப்பிரிவாக நடாத்திச் சென்றுள்ளனர்.

**கந்தலாய் ஆதார வைத்தியசாலையில் இரத்த சுத்திகரிப்பு பிரிவொன்றை நிறுவுதல்**

சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதை தவிர்க்கும் வகையில் சிறுநீரக நோயாளிகளைப் பராமரிக்கும் சேவையை பிரதேச ரீதியில் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 2015 ஆம் ஆண்டில் ரூ. மில்லியன் 3.78 செலவில் கந்தலாய் ஆதார வைத்தியசாலையினுள் இரத்தச் சுத்திகரிப்பு பிரிவொன்று நிறுவப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் ரூ. மில்லியன் 11.94 செலவில் டயலிஸீஸ்( Dialysis) செய்வதற்கான 03 இயந்திரங்கள் மற்றும் மல்டிபெரா மொனிடஸ் 03 (Multi Para Monitors) உட்பட அப்பிரிவுக்கு 44 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அப் பிரிவுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் பயிற்சி பெற்ற தாதிமார்களின் பணிக்குழுவும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனினும் நோய் தொடர்பான நிபுணத்துவ வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாததன் காரணமாக 2020 ஜுன் மாதம் வரை இப் பிரிவின் மூலம் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டிருக்க வில்லை. இப் பிரிவு செயற்படாதிருந்த 2 வருடமும் 06 மாத காலத்தில் ஏறக்குறைய 570 முறை இரத்தம் சுத்திகரிக்கப்பட (Dialysis) விருந்த சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டுள்ளன.

# விளையாட்டு அலுவல்கள்

சுறுசுறுப்பான சமூகமொன்றை கட்டியெழுப்பும் நோக்கிலும் இலங்கையின் கௌரவத்தினை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்யும் நோக்கிலும் உள்நாட்டு மற்றும் சர்வதேச விளையாட்டுக்களுக்கான கொள்கைகளை உருவாக்குதல், செயற்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு மேற்கொள்ளல் என்பன விளையாட்டு ஆலுவல்கள் அமைச்சினால் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளாக இருந்தன. அப்பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கு விளையாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் கீழ் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் உள்ளிட்ட 05 நியதிச்சட்ட ஸ்தாபனங்கள், விளையாட்டு நிதியம் மற்றும் 65 விளையாட்டுச் சங்கங்களும் ஒன்றிணைந்து பின்வரும் கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றியிருக்க வேண்டும்.

- தேசிய விளையாட்டுக் கொள்கைகள் மற்றும் சர்வதேச ஒலிம்பிக் நியதிகளிற்கு அமைவாக இலங்கையின் விளையாட்டு அலுவல்களை ஊக்கமூட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் விளையாட்டுத் துறைக்கு தேவையான அடிப்படை வசதிகளை அபிவிருத்திசெய்து வழங்குதல்.
- விளையாட்டுக் கல்வி, பயிற்சிகள் மற்றும் ஆய்வுகளை மேம்படுத்துதல்.
- இலங்கையின் கௌரவத்தை சர்வதேச ரீதியில் கட்டியெழுப்புவதற்கு விளையாட்டை பயன்படுத்தும் விதத்தில் புதிய தந்திரோபாயங்களை உருவாக்குதல் மற்றும் கருத்துிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பொதுமக்களின் உடல்நலனை பேணும் நோக்கில் அமைந்த வசதிகளை அபிவிருத்தி செய்தலும் அதற்கான தொடர்புகளை மேற்கொள்ளலும்.
- தேசிய விளையாட்டுச் சங்கங்களை கண்காணித்தல்.
- விளையாட்டு மருத்துவ வசதிகளை மேம்படுத்தல் மற்றும் விளையாட்டுக்களின் போது தடுக்கப்பட்ட உத்வேகமூட்டும் மருந்துகள் பயன்படுத்தப்படுவதனைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- விளையாட்டுத் தொகுதிகளை அபிவிருத்தி செய்து முகாமைத்துவம் செய்தல்.

மேற்குறித்த பணிகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 21,206.48 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 11,155.02 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய அக்காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து 47.40 சதவீதம் அல்லது ரூபா 10,051.46 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் உரு 57 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.




உரு 57 பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடும் பயன்பாடும்
மூலம் - பொதுத் திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கை

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினால் மேற்படி பணிகளை நிறைவேற்றுதல் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட

கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

### இலங்கை விளையாட்டு வீரர்களால் வென்றெடுக்கப்பட்ட சர்வதேச வெற்றிகள்

2019 ஆம் ஆண்டில் இலங்கை விளையாட்டு வீரர்கள் பங்குபற்றிய 12 சர்வதேச போட்டித் தொடர்களில் 64 தங்கப் பதக்கங்களும் 106 வெள்ளிப் பதக்கங்களும் 161 வெண்கலப் பதக்கங்களுமாகச் சேர்த்து மொத்தமாக 331 பதக்கங்கள் வெல்லப்பட்டிருந்தன. அவ்வாறே, ஆசிய வலைப்பந்தாட்ட போட்டியில் ஒரு வெண்கலப் பதக்கமும், 19 வயதின் கீழான கூடைப்பந்துப் போட்டியில் இணைப் பதக்கமும், ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிக்கிண்ணமும் கிடைத்திருந்தது.

### நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல்

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமைச்சினால் விளையாட்டுக்களுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

- விளையாட்டுக்கள் அமைச்சினால் தியகம மஹிந்த ராஜபக்ஷ தேசிய விளையாட்டு அகடமி இல் 400 மீற்றர் செயற்கை ஓட்டத் திடலையும் கழிவறை முறைமை மற்றும் உள்ளக நுழைவாயிலை நிர்மாணிக்கும் 2 செயற்திட்டங்களிற்காக முறையே ரூபா 310 மில்லியன் மற்றும் ரூபா 15.16 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் இச்செயற்திட்டங்களிற்காக முறையே ரூபா 183.85 மில்லியன் மற்றும் ரூபா 10.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த இரண்டு செய்றதிட்டங்களினதும் நிர்மாண வேலைகள் முறையே 2018 திசெம்பர் 30 மற்றும் 2018 ஏப்ரல் 29 ஆந் திகதி பூரணப்படுத்த வேண்டியிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் இறுதிவரை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- விளையாட்டுக்கள் அமைச்சினால் குருநாகல் மலியதேவ கல்லூரியின் குறிபார்த்துச் சுடும் மற்றும் ஈட்டி எறிதல் நிலைய நிர்மாண செயற்திட்டத்திற்காக ரூபா 12.23 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், அச்செயற்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 7.43 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2018 நவம்பர் 03 ஆந் திகதி பூரணப்படுத்தப்பட வேண்டிய இந்த நிர்மாண வேலைகள் 2019 மே 23 ஆந் திகதி வரை காலநீடிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் திசெம்பர் இறுதிவரை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- விளையாட்டுக்கள் அபிவிருத்தி திணைக்களத்தினால் மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டுத் தொகுதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 12 மாவட்ட விளையாட்டுத் தொகுதிகளையும் 07 மாகாண விளையாட்டுத் தொகுதிகளையும் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,000 மில்லியன் நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் 10 மாவட்ட விளையாட்டுத் தொகுதிகளையும் 07 மாகாண விளையாட்டுத் தொகுதிகளையும் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, அதற்காக ரூபா 692 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் 06 மாவட்ட விளையாட்டுத் தொகுதிகளினதும் 02 மாகாண விளையாட்டுத் தொகுதிகளினதும் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 04 மாவட்ட விளையாட்டுத் தொகுதிகளினதும் 05 மாகாண விளையாட்டுத் தொகுதிகளினதும் நிர்மாண வெலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 2019 ஆம் ஆண்டிற்கான ரூபா 101 மில்லியன் நிதி ஏற்பாட்டிலிருந்து இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிலையத்திற்கு ஆய்வு உபகரணங்களை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் நடவடிக்கைகளிற்காக ரூபா 59.28 மில்லியன் பெறுமதிக்கு தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. கொள்வனவு நடவடிக்கைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவு காலதாமதம் காரணமாக 2020 ஆகஸ்ட் மாதம் வரையிலும் குறித்த உபகரணங்கள் நிறுவப்படுதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. இயந்திரங்களை இயக்குவதற்காக உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் மற்றும் இயந்திரங்களை இயக்குவதற்குத் தேவையான நிபுணத்துவ சேவையினை பெற்றுக்கொள்வதன் தாமதத்தினால் அந்த உபகரணங்களை

பயன்பாட்டிற்கு எடுக்க முடிந்திருக்கவில்லை.

## கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

13 – 14 வயதுக்கு உட்பட்ட விளையாட்டுத் திறன்கொண்ட பிள்ளைகளை விஞ்ஞான ரீதியான அடிப்படையில் இனங்கண்டு 2024 மற்றும் 2028 இல் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் பங்குகொள்ளச் செய்வதற்கான செயற்திட்டத்தை 2016 முதல் 2018 வரையான காலத்தில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக ரூபா 474 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 160.16 மில்லியன் செலவிடப்பட்டு 2018 ஆம் ஆண்டில் இச்செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

## உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்துதல்

விளையாட்டுக்கள் அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த கிளிநொச்சி விளையாட்டுத் தொகுதியின் நீச்சல் தடாகம், கிளிநொச்சி உள்ளக விளையாட்டரங்கு, கிளிநொச்சி விளையாட்டு மைதானம் மற்றும் ஹொக்கி விளையாட்டுத் திடல் என்பன உரியவாறு பயன்படுத்தப்பட்டும் பராமரிக்கப்பட்டும் இருக்கவில்லை.

## தேசிய கிரிக்கட் விளையாட்டு அரங்கினையும் பல்நோக்கு விளையாட்டுத் தொகுதியினையும் நிர்மாணித்தல்

பொலன்னறுவ ஹிங்குரன்கொட பிரதேசத்தில் சர்வதேச தரத்திற்கு தரமுயர்த்தப்படக் கூடிய விதத்தில் தேசிய கிரிக்கட் மைதானமொன்றையும் பல்நோக்கு விளையாட்டுத் தொகுதியொன்றையும் நிர்மாணிப்பதற்காக இலங்கை கிரிக்கட் சபையினால் ரூபா 132.09 மில்லியன் தொகை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்பட்டிருந்தது. இந்த நிர்மாண வேலைகள் 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதி ஒப்பந்தகாரர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2018 ஒக்தோபர் மாதத்தில் வேலைகளை பூரணப்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. விளையாட்டரங்கினை நிர்மாணிப்பதற்காக 10 ஏக்கர் காணி விஸ்தீரணத்தை உள்ளடக்கிய உரித்துறுதிக்காக இரண்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்காமையால், அக்காணியின் உரித்து இலங்கை கிரிக்கட் சபைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த விளையாட்டு மைதானத்தில் நீர்ப்பாசன முறையின் மூலம் நீர்க்குளாய்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும், நீர்வழிந்தோடும் முறைமை உரியவாறு அமைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பாதுகாப்பு வேலியினை நிர்மாணித்தல் மற்றும் 600 மீற்றருக்கு கிட்டிய தூரத்துடன் அமைக்கப்பட வேண்டிய நுழைவாயில் என்பன நிர்மாணிக்கப்பட்டிராததுடன் விளையாட்டு அரங்கிற்கு மின்சாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவுமில்லை. விளையாட்டு அமைதானத்தின் வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## அனுசரணை உரிமைக்காக பெறவேண்டிய வருமானம்

2018 ஆம் ஆண்டில் தென் ஆபிரிக்க அணியின் இலங்கை சுற்றுப் பயணத்திற்காக அனுசரணை உரிமையினை வழங்கியமைக்காக இலங்கை கிரிக்கட் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் ஐ.அ.டொலர் 187,085 அல்லது ரூபா 33.96 மில்லியன் தொகை அனுசரணைக் கம்பனியிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இடம்பெற்றிருந்த ஐயப்பாடுடைய செயற்பாடுகள் மற்றும் முறையற்ற தலையீடுகள் காரணமாக அத்தொகையினை அறவிடுதல் ஐயத்திற்குரியதாக காணப்படுவதுடன், இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## கிரிக்கட் அறிவியல் நிலையமொன்றை ஸ்தாபித்தல்

கிரிக்கட் அறிவியல் நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்காக இலங்கை கிரிக்கட் சபையினால் முப்பது ஆண்டு குத்தகை உடன்படிக்கையின் கீழ் 2017 ஏப்ரல் 29 ஆந் திகதி கண்டி கடுகஸ்தொட இல் அமைந்துள்ள வலகும்புருவத்த என்ற 256 பேர்ச் காணி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், 30 ஆண்டுகளிற்காகச் செலுத்தப்பட வேண்டிய குத்தகை வாடகை ரூபா 26.25 மில்லியனாகக் காணப்பட்டது. இந்தக் குத்தகை வாடகைக்கு மேலதிகமாக ரூபா 25 மில்லியன் அன்பளிப்புத் தொகை 2017 ஆம் ஆண்டில் குத்தகை தாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த கிரிக்கட் அறிவியல் நிலையத்தை

நிர்மாணிக்கும் வேலைகள் 2020 ஆகஸ்ட் மாதம் வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## உழைக்கும் போதே செலுத்தவேண்டிய வரி

இலங்கை கிரிக்கட் அணியின் பயற்றுவிப்பாளர்களிடமிருந்து அறவிடப்பட்டு செலுத்தப்பட வேண்டிய ரூபா 15.54 மில்லியன் உழைக்கும் போதே செலுத்தும் வரி பயிற்றுவிப்பாளர்கள் சார்பில் இலங்கை கிரிக்கட் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன், அந்த பயிற்றுவிப்பாளர்களின் வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வரியினைக் கணிப்பிடுகையில் சில வருமானங்கள் கருத்திலெடுக்கப்பட்டிருக்காமை காரணமாக மொத்தம் ரூபா 1.59 மில்லியன் வருமான வரி, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களை பின்பற்றியிருக்காமை

1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 மற்றும் 41 ஆம் பிரிவுகளின் கீழுள்ள அமைச்சரினால் தயாரிக்கப்படுகின்ற கட்டளைகள் III ஆம் பகுதியில் தேசிய விளையாட்டுச் சங்கங்களின் பணிகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களின் கீழுள்ள XXI ஆம் பிரிவினால் ஒவ்வொரு விளையாட்டுச் சங்கத்தினாலும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களை பின்பற்றுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இலங்கை கிரிக்கட் சபையினால் அந்த கொள்வனவு வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## தேசிய விளையாட்டுக்கள் நிதியம்

ஊவா கிரிக்கட் சங்கக் கட்டிடத்தையும் விளையாட்டு மைதானத்தையும் திருத்தியமைத்து மேம்படுத்துவதற்காக தேசிய விளையாட்டுக்கள் நிதியத்திலிருந்து ரூபா 2.50 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அந்த விளையாட்டுச் சங்கத்தை தெரிவுசெய்தல் மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் தேவைகளை இனங்கண்டு கொண்ட முறை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அதன்மூலம் விளையாட்டுத் துறைக்கு கிடைக்கின்ற பங்களிப்பு மற்றும் செயலாற்றல் தொடர்பில் மீளாய்வுசெய்து பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதியத்தினால் இவ்வாறான கொடுப்பனவுகள் தொடர்பில் முறையொன்றை தயாரித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## நிதி மோசடி

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் முன்னை நாள் நிதி முகாமையாளரினால் நடுவர்கள் மற்றும் வழங்குனர்கள் போன்ற போலியான பெயர்களை உட்புகுத்தி பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக 2017 ஆம் ஆண்டின் இலங்கை கால்பந்து சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளது. இந் நிதி மோசடி சம்பந்தமாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்ளபட்டு நீமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மோசடி செய்யப்பட்ட மொத்த தொகை ரூபா 46.86 மில்லியன் எனக் கண்டறியப்பட்டுள்ளது. மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இந்த மோசடி தொடர்பில் கைமாற்றப்பட்ட தொகையென ரூபா 16.05 மில்லியன் பெறவேண்டிய கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மோசடி செய்யப்பட்ட பணத்தினை அறவிடுவதற்காக சம்மேளனத்தினால் 2020 ஆகஸ்ட் மாதம் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், இப்பணத்தினை அறவிடுவதற்கான சாத்தியத்தன்மை குறித்து கணக்காய்வில் உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

# இளைஞர் விவகாரம்

இளைஞர் பரம்பரையினரை சரியான திசையில் வழிநடத்தும் நோக்கில் தேசிய கொள்கை, பொருளாதார நடவடிக்கைகள், மீள் குடியமர்த்தல் மற்றும் புனருத்தாபனம், வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் அதன் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 05 நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- இளைஞர் விவகார விடயங்களுக்குரிய செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல்.
- இளைஞர் பரம்பரையினரை சரியான திசையில் தொடர்புபடுத்தும் நோக்கினைக் கொண்ட எண்ணக்கரு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல் மற்றும் அமுல்படுத்துதல்.
- இளைஞர் பரம்பரையினரை மையப்படுத்தப்பட்ட சர்வதேச ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தொழிலற்றுள்ள இளைஞர்களின் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துதல்.
- இளைஞர் சமூகத்தை இலக்காகக் கொண்ட தொண்டர் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல்.

மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 20,741.11 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 14,270.64 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த கால பகுதிக்காக பாராளுமன்றத்தால் ஒதுக்கியிருந்த நிதி ஏற்பாட்டில் 31.20 சதவீதம் அதாவது, ரூபா 6,470.47 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபர வரைபடம் 58 இல் காண்பிக்கப்படுகின்றது.




வரைபடம் 58 பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் அதன் பயன்பாடு.
மூலம் : திறைசேரியின் இறுதி கணக்கு கூற்று

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள 05 நியதிச்சட்ட நிறுவனங்களினால் மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொளிப்பாக்க ப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

### பயிலுனர்களை ஆட்சேர்த்தல்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் 2018 ஆம் ஆண்டின் போது 50 பயிற்சி நிலையங்களில் 21,007 பயிற்சி பயிலனர்கள் முழு நேர மற்றும் பகுதி நேர பாடநெறிகளில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், பயிற்சி பாடநெறிக்காக காணப்படுகின்ற தகைமை களை பூர்த்திசெய்வதற்கு தவறியிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது 28 நிலையங்களில் 58 முழு நேர பயிற்சி பாடநெறிகளுக்காக 2977 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன் பயிற்சிகளுக்காக 1433 விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் அந்த நிலையங்களின் பாடநெறிகளுக்காக விண்ணப்பித்த எண்ணிக்கையில் 40 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையான அளவில் பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு தவறியிருந்தது. அவ்வாறே, 2017 ஆம் ஆண்டின் போது 22 நிலையங்களில் 80 பகுதி நேர பயிற்சி பாடநெறிகளுக்காக 5,661 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் 2,386 விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் அந்த நிலையங்களில் பாடநெறிகளுக்காக விண்ணப்பித்த எண்ணிக்கையில் 40 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான அளவில் பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு தவறியிருந்தது.

### புதிய பாடநெறிகள் இனங்காணப்படாமை.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 54 நிலையங்களில் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் நடாத்தப்பட்ட பயிற்சி பாடநெறிகள் தொடர்பான ஆய்வின் போது 06 நிலையங்களில் 54 பாடநெறிகள் முதல் 46 வரை குறைவடைந்திருந்ததுடன் 20 நிலையங்களில் நடாத்தப்படுகின்ற பாட நெறிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருக்கவில்லை. மேலும், 2019 ஆம் ஆண்டின் போது 14 பயிற்சி நிலையங்களில் பாடநெறிகளில் ஒன்றோ அல்லது இரண்டோ மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### நோக்கங்களுக்கு முரணான செலவினங்கள்

இலங்கை இளைஞர்களின் கால ரீதியான தேவை மற்றும் விருப்பங்களுக்கு இணங்க முகாமைத்துவத்தை செய்து நூதன தொழில்நுட்பம் மற்றும் முறைமைகளை பயன்படுத்தி காலத்திற்கு தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை உலகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் இளைஞர்களை கட்டியெழுப்புவதன் மூலம் அவர்களின் வாழ்க்கை மற்றும் தொழில்களில் இலக்கிடப்பட்ட வெற்றியை அடைந்து கொள்வதற்காக நாட்டின் அபிவிருத்திற்கு நேரடியான பங்களிப்பினை வழங்கக் கூடிய வகையில் இளைஞர் தரப்பினரை கட்டியெழுப்புவதற்காகவும் அதன் பிரகாரம் ஏற்படுத்தப்படுகின்ற முறைமை மற்றும் செயற்திட்டங்களை அனேக எண்ணிக்கையில் ஒரே சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்துவதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் யொவுன் புற நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இளைஞர் யுவதிகளின் அறிவுத்திறன்கள் மற்றும் தலைமைத்துவத்தினை அதிகரித்துக் கொள்வதனை விட கண்காட்சி ரீதியான, விநோத ரீதியான பிரிவுகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு கூடுதலான அளவு செலவினங்களைச் செய்து 2019 மார்ச் 26 ஆம் திகதி தெபரவெவ பொது விளையாட்டரங்கில் பொது மக்களுக்காக சங்கீத நிகழ்ச்சியொன்றை நடாத்துதல், தெபரவெவ நாட்சந்தியில் தோரணமொன்றை நிர்மாணித்தல், தெபரவெவ கணகாட்சி நிலத்தில் 05 நாட்கள் முழுவதும் இரவு நேர சங்கீத நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல், தற்காலிக சினிமா மண்டபங்களை நிர்மாணித்தல், கண்காட்சி நிலத்தில் 02 தோரணங்களை நிர்மாணித்தல் போன்ற யொவுன் புற நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களுடன் நேரடியாக தொடர்புபடாதிருந்த பணிகளுக்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 40.59 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2019 ஆம் ஆண்டின் யொவுன் புற நிகழ்ச்சித் திட்டத்திற்காக தேவையான டோம்ஸ் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் போது பெறுகை நடைமுறைகள் சரியான முறையில் அல்லது உடன்படிக்கை இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. பெறுகைகளுக்கு உரிய கட்டளைகளை வழங்குவதற்கு முன் களஞ்சிய பொறுப்பாளர் வழங்கிய கூற்றின் அடிப்படையில் ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதியை விஞ்சி செலவினங்கள் அங்கீகரிக்கப்பட்டு அதனை நியாயப்படுத்துவதற்கு மற்றும் அதற்காக முறையான காரணங்களை தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இரண்டு களஞ்சியங்களுக்காக மேலதிகமாக 08 நாட்கள் மற்றும் 10 நாட்களுக்காக ரூபா 2.23 மில்லியன் செலுத்துதல் பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

# விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி

விஞ்ஞானம் சார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை பிரயல்யப்படுத்துதலினூடாக இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ரீதியில் உயர்ந்த நாடொன்றாக மாற்றுவது இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறாக இருந்தது. அப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவையின் அங்கத்தவர் அல்லாத அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நியதிச்சட்ட சபைகள் மற்றும் 18 நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அந்நிறுவனங்களினால் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், பின்தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு செய்தல்

- சர்வதேச ரீதியாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறைகளில் இடம்பெறும் கண்டுபிடிப்புகளுக்கு இணங்கும் வகையில் உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்காக தேவையான வசதிகளை ஏற்படுத்ததுல்

- விஞ்ஞானம் சார்ந்த, கைத்தொழில், சமூக மற்றும் பொருளதார ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவாக்குவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- அறிவுடன் தொடர்பான பொருளாதார அபிவிருத்தியொன்றை நோக்கி விஞ்ஞானம், தொழில்நுட்பம மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களை மேம்படுத்தல்.

- விஞ்ஞான ரீதியான, கைத்தொழில் சமூக மற்றும் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்குரிய வசதிகளை வழங்குவதினூடாக ஆராய்ச்சிகளைத் திட்டமிடலும் செயற்படுத்தலும்

- தகவல்கள், நனோ, ரோபோ, இயந்திரங்கள் இலக்ரோனிக் மற்றும் உயிர் தொழில்நுட்பம் உட்பட புதிய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களிலிருந்து கிடைக்கும் பெறுபேறுகள் மற்றும் அறிவு வியாபார சமூகம் உட்பட குறித்த தரப்பினருக்கு வழங்குதல்.

- இலங்கையில் செயற்படும் அனைத்து ஆராய்ச்சி நிறுவனங்களையும் கூட்டிணைந்து தேசிய அபவிருத்தி நோக்கங்களுக்காக நேரடி பங்களிப்பின வழங்குதல்

- புதிய கண்டுபிடிப்புகளுக்காக சமூகத்தை தொடர்புபடுத்தல் மற்றும் முன்வருவதறகாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

- நிர்மாணக் கைத்தொழில் மேம்பாடு, அபிவிருத்திக்கான ஆராய்ச்சிகளை செயற்படுத்ததல்

- சர்வதேுச விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றம் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூட்டிணைத்தல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்

- புலமைச் சொத்து தொடர்பான சர்வதேச நியதிகளை நிர்வகிப்பதற்குரிய செயற்பாடுகளின் உரிமை மற்றும் சர்வதேச புலமைச் சொத்து அலுவலகத்தின் வெளியீட்டு உரிமை தொடர்பான நடவடிக்கைகள்

மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு ரூபா 28,428.58 மில்லியனான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 18,498.01 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம்

இக்காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 34.93 சதவீதம் அதாவது ரூபா 9,930.57 மில்லியனான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் வரைபு 59 இல் காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் 58 பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் அதன் பயன்பாடு.
மூலம் : திறைசேரியின் இறுதி கணக்கு கூற்று

அமைச்சு மற்றும் அதன் நியதிச்சட்ட நிறுவனங்களால் மேற்படி கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

### வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

- தேசிய விஞ்ஞான நிலையததின் நிர்ாணங்கள் ஆரம்பிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதும் அதற்காக காணி கொள்வனவு செயற்பாடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

- கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் பெற்றோலியம் உற்பத்திகளை பரீட்சிப்பதற்காக வசதிகளை வழங்குவதற்காக ரூபா 70 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதியில் அதன் பரிசோதனை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிவல்லை.

- கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பூர்ததி செய்யப்பட வேண்டிய 56 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கு இடையே 25 செயற்திட்டங்களின் இறுதி அறிக்கை வழங்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக அக்காலப்பகுதியில மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டங்களலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு புலமைப்பரிசிலுக்காக வெளிநாடு செல்லும்போது நிறுவனத்துடன் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களின் விதிமுறைகளை உத்தியோகத்தர்கள் மீறும் போது, அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து தொடர்புடைய கட்டணம் அறவிடப்பட வேண்டும். அவ்வாறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட 20 உத்தியோகத்தர்களும் மேற்கொண்ட ஒப்பந்தங்களின் விதிமுறைகளை மீறியிருந்ததுடன் அதற்காக ரூ 16.90

மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதிக்குள், மீளாய்வாண்டின் இறுதி வரை பல ஆண்டுகள் கடந்திருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிட தவறியிருந்னர்.

### பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்காமை

விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சிற்குரிய இலங்கை கோள் மண்டலத்தின் கூடத்தில் 564 இருக்கைகளை பழுதுபார்த்தல், பொலிஷ் பண்ணுதல் மற்றும் குஷன் இடுதல் என்பவற்றிகாக ரூபா 4.52 மில்லியன் அரச பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்காமல் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது.

### பொருளாதார நலன்கள் கிடைக்காமை

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆராய்ச்சி மூலம் தொழில்நுட்ப கையளிப்பிற்காக ரூபா 1.61 மில்லியன் வருமானம் ஈட்டியுள்ளது. அந்த காலகட்டத்தில் ஆராய்ச்சி மானியங்கள் ரூபா 33.98 மில்லியனும் ஆராய்ச்சி திட்டங்களுக்கு ரூபா.61.45 மில்லியனும் என மொத்தம் ரூபா 95.43 மில்லியன் செலவிடப்பட்டிருந்தன. அதன்படி, ஆராய்ச்சி திட்டங்களுக்கு செலவிடப்பட்ட பணத்திலிருந்து எந்த பொருளாதார நன்மைகளையும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

### வழங்கப்பட்ட முற்பணத்தை தீர்வுசெய்யாமை

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட புதிய ஒன்றிணைந்த மென்பொருள் பொதி கொள்வனவு மற்றும் ஸ்தாபித்தல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனத்திற்கு ரூபா 772,000 ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அம்முறைமையின் காணப்பட்ட தொழில்நுட்ப குறைபாடுகள் காரணமாக ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டு இருந்த போதும் ஒப்பந்தகாரரடமிருந்து வழங்கப்பட்டிருந்த முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### Light Measurement முறைமை செயலற்று இருத்தல்

நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளார்க் நிலையத்தின் 2015 ஒக்டோபர் 12 முதல் 2017 ஒக்டோபர் 13 வரை இரண்டு ஆண்டு உத்தரவாதக் காலத்துடன் Light Measurement இயந்திரத்தை ரூபா 15.48 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. 2017 ஒக்டோபர் 11 இல் ஒரு பவர் அனலைசர் (xitron 2801) ஏற்பட்ட பிழை காரணமாக 2017 ஒக்டோபர் 17 இல் சிறிய கணனி செயற்படாமையால் Light Measurement இயந்திரம் செயலிழருந்தது. 2017 ஒக்டோபர் 11 முதல் 2017 நவம்பர் 09 ஆந் திகதி வரை 13 மாதங்கள் செயலற்று காணப்பட்டது. அத்தவறினை திருத்தி ஒரு வாரம் கழிந்த பின் 2018 நவம்பர் 19 ஆந் திகதி ரூபா 2.35 மில்லியன் பெறுமதியான அமேடிக் பவர் சப்ளை உபகரணம் செயலிழந்தது. அத்திகதி முதல் 2019 செப்தம்பர் 23 ஆந் திகதி வரை 2 வருட காலம் முறைமை செயலற்று காணப்பட்டது. Light Measurement முறைமை கொள்வனவு செய்யப்பட்டு 2 ஆண்டுகளின் பின்னர் அம்முறைமையின் 3 உப பாகங்கள் செயற்படாயைால் மேலதிகமாக ரூபா 3.38 மில்லியன் செலவிடப்பட்டு தவறு திருத்தப்பட்டிருந்தது. இருந்த போதும் மீண்டும் செயலற்று போனது. இதன் பிரகாரம் அம்முறைமை 25 மாதங்கள் இயங்காமல் இருந்தமையால் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 2.80 மில்லியனாக இருந்தது.

### விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டிலான சொத்துக்கள்

- கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து ' கணனி முறைமையை ஸ்தாபிக்கப்பதற்காக கணனி பிரிவற்கு ரூபா 2.55 மில்லியன் பெறுமதியான Rack Mountable Server முறைமை 2019 செப்தம்பர் 056 ந் திகதி நிறுவனத்திற்கு கிடைத்திருந்தது. 2020 யூன் 23 ஆந் திகதி வரை அது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

- நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளார்க் நிலையத்தின் நூலகத்திலிருந்து புத்தகங்களை வெளியே கொண்டு செல்வதைப் பரீட்சிப்பதற்காக RFID தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தரவு

முறைமையொன்றை ஸ்தாபிக்க தேவையான 2 RFID வாயில்கள் 2018 ஆம் ஆண்டில் ரூபா 1.37 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவை பயன்படுத்தப்படாமல் நூலக வளவில் விளைவற்றுக் காணப்பட்டன.

- தேசிய ஆராய்ச்சி பேரவை ஆராய்ச்சி தொடங்கிய நேரத்தில், ஆராய்ச்சிக்கான முழு நிதிஏற்பாடுகளையும் ஒவ்வொரு திட்டத்தின் கீழ் நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. 2015 முதல் 2019 வரையிலான காலகட்டத்தில், தொடங்கப்பட்ட 97 திட்டங்களுக்கான அரச மானியமாக ரூபா 411.51 மில்லியன் நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. 2020 செப்டம்பர் மாதம் அளவில் ரூபா 236.14 மில்லியன் மில்லியன் நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

- **வழங்கிய நிதிஏற்பாட்ட மீண்டும் கையேற்றல்**

  செயல்படுத்தப்படும் செயற்திட்டங்களின் மதிப்பீடுகள், செலவினங்கள், திட்டங்கள், பெறுகைகள் மற்றும் நிதி முன்னேற்றம் ஆகியவை தேசிய ஆராய்ச்சி பேரவை மூலம் முறையாக கண்காணிக்கப்படவில்லை. இதன் விளைவாக, 2019 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட 53 செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 67.72 மில்லியன் மீண்டும் பேரவைக்கு அறவிடப்பட்டுள்ளது. இதில், 10 திட்டங்களுக்காக வழங்கப்பட் ஒதுக்கீட்டில் 42 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையான நிதிஏற்பாடு திரும்பப் பெறப்பட்டது.

# தொடர்பாடல்

டிஜிடல் தொழில்நுட்பத்தில் வலுப்படுத்தும் ஒன்றைக் கட்டியெழுப்பும் நோக்கினை அடைந்து கொள்வதற்கான தொலைத்தொடர்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற திணைக்களங்களினாலும், மக்களின் விருப்பங்களை சரியான முறையில் அடைந்த கொள்வதற்கு மையப்படுத்தப்பட்ட பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் ரீதியான துறைகளில் முக்கியமான பணியாக செயற்படும் எதிர்பார்ப்பில் ஊடகத்துறை, அமைச்சரவையின் அங்கத்துவம் இல்லாத அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற 08 நியதிச்சட்ட நிறுவனங்களினாலும், புதிய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ முறைமையொன்றை பயன்படுத்தி தொழில்முயற்சிகளை நோக்கமாகக் கொண்டு நவீன தபால் சேவையொன்றை வழங்கும் நோக்கில் உள்ள தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற திணைக்களங்களினாலும் இந்த பிரிவில் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல்கள், பின் தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு.
- நவீன தொழில்நுட்பங்களை ஈடுபடுத்தி சகலருக்கும் தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குவதற்கு தேவையான படிமுறைகளை எடுத்தல்.
- அரசாங்க பிரிவிற்கு சேவை வழங்குதலை ஆக்கபூர்வமானதாகவும் மற்றும் செயற்திறனாகவும் கட்டியெழுப்புவதற்காக பொருத்தமான தகவல் தொழில்நுட்ப தீர்வினை ஈடுபடுத்துவதற்கு உதவுதல்.
- கணனியினை அடிப்படையாகக் கொண்ட கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துதல்.
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி ஊக்குவிப்பதற்காக தந்திரோபாயமொன்றை தயாரித்தல்.
- தேசிய கொள்கை சட்ட வாக்கத்தின் பிரகாரம் ஊடக விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை வழங்குதல், அமுல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- மக்களின் விருப்பங்களை சரியாக மையப்படுத்தப்பட்ட பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளில் முக்கியமான பணியாக பொதுசன ஊடக பங்களிப்பினை வழங்குவதற்காக தேவையான தந்திரோபாயங்களை வழங்குதல்.
- பொது மக்களின் அறிவு, எண்ணங்கள், அபிலாசைகளை அடைந்து கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.
- மக்களுக்கு சரியான தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- உயர் ஊடக கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்கு தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்.

இந்த பிரிவினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணி பொறுப்புக்களாக இருந்தன. அந்த பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக மேலே குறிப்பிடப்பட்ட 03 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நோக்கமாக இருந்தது. அந்த நோக்கங்களை நிறைவேற்றவதற்காக கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு, திணைக்களம் மற்றும் 09 நியதிச்சட்ட நிறுவனங்களினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது.

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களினால் மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் ரூபா 80,496.48 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 58,488.32 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் அந்த காலப்பகுதியில் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 27.34 சதவீதம் அதாவது, ரூபா 22,008.16 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விளக்க வரைபடம் 60 இல் காண்பிக்கப்படுகின்றது.




வரைபடம் 60 பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் அதன் பயன்பாடு.
மூலம் : பொது திறைசேரியின் இறுதி கணக்கு கூற்று

மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொளிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

### நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி சேவை பயன்படுத்துனர்களின் எண்ணிக்கை.

இலங்கையில் நிலையான சேவை பயன்படுத்துனர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டின் போது 3.6 மில்லியனாக இருந்த போதும், அது 2019 ஆம் ஆண்டு வரையில் 2.3 மில்லியன் வரை 36 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. கடந்து 12 வருட காலப்பகுதியில் கையடக்கத் தொலைபேசிப் பிரிவில் ஒன்றிணைந்த வருடாந்த அதிகரிப்பொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2005 ஆம் ஆண்டின் போது 3.36 மில்லியன் எண்ணிக்கையிலான கையடக்க தொலைபேசி பயன்படுத்துனர்களின் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 32.88 மில்லியன் வரை 879 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. தொலைபேசி பாவணையாளர்களின் எண்ணிக்கையில் நிலையான தொலைபேசி பயன்படுத்துளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை தொடர்பான விபரம் கீழே வரைபு 61 இல் காண்பிக்கப்படுகின்றது.




வரைபடம் 61 தொலைபேசி பயன்படுத்துனர்களின் எண்ணிக்கை

மூலம் : இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை

இதன் போது 2018 ஆம் ஆண்டு நிலையான தொலைபேசி பாவனையாளர்கள் எண்ணிக்கை 100 இற்கு 11.5 ஆக இருந்த போதும், அது 2019 ஆம் ஆண்டின் போது 10.5 வரை குறைவடைந்திருந்தது. இதற்கு மாற்றமாக கையடக்கத் தொலைபேசி பயன்படுத்தனர்கள் 100 இற்கு 2018 ஆம் ஆண்டின் போது 150.1 முதல் 2019 ஆம் ஆண்டின் போது அது 161.4 வரை அதிகரித்திருந்தது. செயற்பாட்டிலுள்ள பயன்படுத்துனர்களின் மொடியூல் பத்திரம் (Sim cards) கவனத்தில் கொள்ள வேண்டிய அளவில் ஒரு தனி நபரினால் பயன்படுத்தப்படுகின்றமையினால் இந்த எண்ணிக்கைகளில் உள்ளபடியான தன்மை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### இணையதள பாவனையாளர்களின் எண்ணிக்கை சனத்தொகைக்கு ஒப்பாக குறைவடைந்தமை.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் புள்ளி விபரங்களின் பிரகாரம் இணையதள பாவனையாளர்களின் எண்ணிக்கை 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது முறையே 6,747,154 , 10,562,675 மற்றும் 13,408,403 ஆக இருந்த போதிலும், அந்த அளவில் பிரதேச ரீதியில் பரவலாக்கல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இந்த பயன்படுத்துனர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், அந்த அளவு இலங்கையின் சனத்தொகையுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டுள்ளது.

### ADSL இணையதள வசதிகளின் பரவலாக்கல் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தமை.

2019 ஆம் ஆண்டு வரையில் ADSL இணையதள வசதிகளை பெற்றிருந்த அளவு 908,418 அளவில் இருந்தது. அதில் 42.66 சதவீதம் மேல் மாகாணத்திலும், 0.46 சதவீதம் முதல் 31.18 சதவீதம் வரையிலான வீச்சில் ஏனைய மாகாணங்களுக்கு இடையிலே பரவியிருந்தன. அதன் பிரகாரம் கிராமிய பிரதேசங்களில் ADSL இணையதள வசதிகளின் பரவல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### ஈ - அரசாங்க கணிப்பாய்வு அறிக்கை

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி தொடர்பான ஈ - அரசாங்க கணிப்பாய்வு அறிக்கையில் (United Nation E – Government Servey) இன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் போது 192 ஆக இருந்த இலங்கையின் ஈ - அரசாங்க அபிவிருத்தி குறிகாட்டி 2014 ஆம் ஆண்டின் போது 74 வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டின் போது அந்த குறிகாட்டி 85 வரை குறைவடைந்திருந்தது.

### நிலுவை வருமானம்

2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இரண்டு தனியார் ஊடக நிறுவனங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வணிக நிகழ்ச்சித்

திட்டங்களுக்காக அறவிட வேண்டிய வரி வருமானம் தண்டப் பணத்துடன் ரூபா 53.16 மில்லியனாக இருந்தது. 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அமைச்சரவையின் அங்கத்துவமல்லாத ஊடகத் துறை அமைச்சினால் அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

## மிகைக் கட்டணம் செலுத்துதல்.

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் சேவை முடிவுறுத்தப்படும் நாள் முதல் 30 நாட்களுக்குள் பணிக்கொடை கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டியிருந்தது. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றிய இரண்டு உத்தியோகத்தர்களுக்கு உரித்தான பணிக்கொடை கொடுப்பனவுகள் 08 மாதங்கள் தாமதிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. பணிக்கொடை கொடுப்பனவுகள் தாமதமடைந்தமையினால் தொழில் ஆணையாளரினால் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 253,884 மிகை கட்டணமொன்று விதிக்கப்பட்டிருந்தது.

## காணாமல் போன சங்கீத பொருட்கள்

2016 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் ருஹுனு சேவையில் இருந்த போது 12 சங்கீத பொருட்கள் காணாமல் போயிருந்தன. அந்த பொருட்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான பெறுமதி ரூபா 305,900 ஆக இருந்த போதிலும், அந்த நட்டத்தினை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு 2019 யூலை 31 ஆம் திகதி வரையிலும் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

## முறையான பிரகாரம் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாமை.

வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த கம் உதாவ மாதிரி கிராமங்களை மக்களின் உரித்துக்கு கையளித்தல் தொடர்பான விளம்பர நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 103.55 மில்லியன் தொகையான ஒளிபரப்பு வருமானமொன்று அறவிட வேண்டியிருந்தது. அந்த நிலுவை வருமானம் 2020 யூன் மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த அறிவித்தல் விளம்பரம் செய்தல் தொடர்பாக வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுடன் கூட்டுத்தாபனம் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடாதிருந்ததுடன் அந்த நிகழ்ச்சித் திட்டத்தை விளம்பரப்படுத்துவதற்காக பல தரப்பினர்கள் அவ்வப்போது கோரியிருந்த போதிலும், அந்த கோரிக்கைகளுக்கு முறையாக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## Earth Watchman செயற்திட்டம்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தினால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் தனியார் நிறுவனமொன்றுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் Earth Watchman செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் ஆரம்ப விழாவிற்காக கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1.72 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த விழா மாத்திரம் நடாத்தப்பட்டு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 1.25 மில்லியன் தொகை அனுசரணை மாத்திரம் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், முறையான ஆய்வுடன் மேகொள்ளப்படாமல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 470,035 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்குதல்.

நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் 12 சந்தர்ப்பங்களின் போது உத்தியோகத்தர்களுக்கு ரூபா 100,000 தொகையினை விஞ்சி முற்பணமாக ரூபா 3.06 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அந்த முற்பணங்கள் செலுத்தப்பட்ட பணிகள் முடிவடைந்ததன் பின்னர் 10 நாட்களில் அந்த முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 02 நாட்கள் முதல் 192 நாட்கள் வரையான கால வீச்சில் தாமதிக்கப்பட்டு அந்த முற்பணம் தீர்க்கப்பட்டிருந்தது.

## விழா நடவடிக்கைகளின் போது மதுபான உபசரிப்புக்கள்

1990 மே 18 ஆம் திகதிய 26/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் நிறுவனங்களின் விழா நடவடிக்கைகளின் போது மதுபான பாவணை தவிர்க்கப்பட வேண்டியிருந்தது. இலங்கை

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடாத்தப்பட்ட நவீன மயப்படுத்தல் விழாவிற்காக நிகழ்ச்சித் திட்டத்திற்காக மதுபான வரவேற்றல் (Cocktail Reception) இற்காக ரூபா 1.70 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. 1979 ஒக்தோபர் 16 ஆம் திகதிய 148 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரச உத்தியோகத்தர்களும் மதுபானம் போன்ற பகிரங்க செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்ற முடியாதிருந்த போதிலும், அதற்கு முரணாக மேலே கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவம் பங்குபற்றியிருந்தது. அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஹோட்டலை தெரிவு செய்யும் போது அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்ல.

## நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

ஐக்கிய நாடுகளின் 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தானம் அறிந்திருந்த போதிலும், அதன் பணிகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைய வேண்டிய திருப்புமுனைகள், இலக்குகளின் அடிப்படையில் அளவீடுசெய்து பார்ப்பதற்கான குறிகாட்டிகளும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
கூட்டுத்தானத்திற்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்படாதிருந்ததுடன், அதன் காரணமாக நிலைபேறான அபிவிருத்திக்கு உரித்தான பணிகள் எதுவும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
எந்தவொரு பணியினதும் சரியான செயலாற்றல்களை அளவிடுவதற்காக சரியான தரவு அடிப்படையொன்று காணப்பட வேண்டியது தேவையாக இருந்த போதிலும், கூட்டுத்தானத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதலை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படையொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 இன் நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தினால் எந்தவொரு சுற்றறிக்கையோ அல்லது ஆலோசனைக் கோவையோ விநியோகிக்கப்பட்டிருக் கவில்லை.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தயாராக இருக்கும் போது ஏனைய நிறுவனங்களுடன் சரியான தொடர்பினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் தொடர்ப வைக்கவேண்டிய ஏனைய அரசாங்க நிறுவனங்கள் இனங்காணப்படாமையின் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு திட்டங்களை தயாரித்தல் மற்றும் முன் ஆயத்தச் செயற்பாடுகள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

## ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவி உயர்வு

- அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு புறம்பாகவும், முறையான வழிமுறைகளை பின்பற்றாமலும் வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி மத்திய வலையமைப்பில் 07 பதவிகளுக்காக நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. 2019 யூன் 21 ஆம் திகதிய 325/30 ஆம் இலக்க பணிப்பாளர் சபை குறிப்பின் பிரகாரம் ஊடக வலையமைப்பின் கணக்காளர் பதவியில் ஈடுபட்டிருக்கன்ற உத்தியோகத்தர் பிரதி பொது முகாமையாளர் நிதி பதவியிலும் கடமைகளை மேவுகை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், அந்த உத்தியோகத்தர் முறையான நியமனம் இன்றி 2018 நவம்பர் 07 ஆம் திகதி முதல் முகாமையாளர் நிதி பதவியில் கடமைகள் நிறைவேற்றியிருந்தார். அந்த இரண்டு பதவிகளிலும் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அந்த உத்தியோகத்தருக்கு 2018 நவம்பர் 07 ஆம் திகதி முதல் 2019 யூலை 31 ஆம் திகதி வரையான காலத்திற்காக ரூபா 477,086 தொகை செலுத்தப்பட்டிருந்து. அந்த உத்தியோகத்தர் முகாமையாளர் நிதி பதவியில் பதவி உயர்த்தப்பட்டமை மற்றும் ரூபா 61,809 சம்பளம் மற்றும் ஏனைய படிகள், ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதி தீர்மானத்திற்கு இணங்கும் வரை வழங்குவதற்கும், பிரதி பொது முகாமையாளர் பதவியின் பதிற்கடமைக்காக ரூபா 9,635

மாதாந்த படியொன்றை செலுத்துவதற்கும் அங்கீகரிக்கப்பட்டிருந்தமை, 2019 யூலை 30 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் குறிப்பு இலக்கம் 328/35 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 செப்தெம்பர் 03 ஆம் திகதிய 329/14 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் இந்த நியமனங்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்படாதிருந்தமை மற்றும் அதற்காக மேல் காட்டப்பட்ட கொடுப்பனவுகள் சட்ட ரீதியாக இல்லாதிருந்தமையும் குறிப்பிடப்பட்டிருந்தது.

- வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பினால் முகாமையாளர் சந்தைப்படுத்தல், பிரதி பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் (மேவுகை), உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்), முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) (வானொலி), உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) (வானொலி), பிரதி பொது முகாமையாளர் (செய்திகள் மற்றும் அன்றாட நடவடிக்கைகள்) மற்றும் முகாமையாளர் வியாபார அபிவிருத்தி போன்ற பதவிகளுக்காக நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த பதவிகளுக்காக மிகவும் பொருத்தமான நபர்களை தெரிவு செய்வதற்கு முடியுமான வகையில் ஆட்சேர்ப்பு தேவைகளுக்காக விளம்பரமொன்று மேற்கொண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஆட்சேர்ப்பு நியாயமான மற்றும் வெளிப்படையான தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உத்தேசிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகளேனும் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.
- முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் உரிய பதவிகளுக்குரிய சம்பள திட்டத்தை விஞ்சி கொடுப்பனவுசெய்ய முடியாதிருந்தது. முகாமையாளர் சந்தைப்படுத்தல் பதவிக்குரிய சம்பளத்திற்கு மேலதிகமாக அந்த உத்தியோகத்தருக்கு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1.11 மில்லியன் வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பினால் செலுத்தப்பட்டிருந்தது. அந்த படிகளுக்கு மேலதிகமாக அந்த உத்தியோகத்தருக்கு 120 லீட்டர் பெற்றோல் அல்லது 140 லீட்டர் டீசல் மாதாந்த கொடுப்பனவும் வழங்கப்பட்டிருந்தது. முகாமையாளர் சந்தைப்படுத்தல் (வானொலி) பதவிக்காக உரித்தான சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக ரூபா 222,144 தொகையும் உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) (வானொலி) பதவிக்காக உரித்தான படியினை விஞ்சி ரூபா 200,544 தொகையும் 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

- வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் முகாமையாளர் நிதி பதவிக்கும் மற்றும் முகாமையாளர் வடிவமைப்பு நிகழ்ச்சித் திட்ட பதவிக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. நிறுவனத்தின் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படாமல் உத்தேச ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யாதிருந்த உத்தியோகத்தர்களுக்கு இந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன.

### அரசாங்கத்தின் தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் சந்தைப் பங்கு

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் கடந்த ஐந்து வருட காலங்களில் சந்தை நிலைமை தொடர்பான தகவல்கள் வரைபடம் 62 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




வரைபடம்:- 62 - தொலைக்காட்சி ஊடக சந்தையில் அரசாங்க ஊடகப் பங்கு

மூலம்:- MLRB அறிக்கை

அந்த தகவல்களின் பிரகாரம் இரண்டு நிறுவனங்களினதும் சந்தைப் பங்கு தொடர்ச்சியாக வருடத்திற்கு வருடம் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது மீண்டும் சிறு உயர்வொன்று காணப்பட்டது. அவ்வாறே சந்தைப் பங்கு குறைவடைந்தமையினால் நிறுவனத்தின் பிரதான வருமான வழிகளான வான் கால விற்பனை வருமானமும் வருடாந்தம் விரைவாகக் குறைவடைந்திருந்தது. விபரம் வரைபடம் 63 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




வரைபடம்:- 63 – பறக்கும்நேர விற்பனை வருமானம்

மூலம்:- வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

இவ்வாறு வான் கால விற்பனை வருமானம் குறைவடைந்தமையினால் சந்தைப் பங்கு குறைவடைந்திருந்ததுடன் சேவை பங்களிப்பாளர்கள் தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளில் கவரப்பட்டிருந்தனர். இவ்வாறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இரண்டிலிருந்தும் விலகிய சேவை பங்களிப்பாளர்களை மீண்டும் கவர்ந்து கொள்வதற்காக அந்த சேவை பங்களிப்பாளர்களுக்கு இரண்டு அலைவரிசைகளிலும் காணப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட வியாபார அறிவித்தல்களுக்காக அறவிடப்படுகின்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட வீதத்தை விட மிகவும் குறைந்த வீதத்தில் அதாவது, 65 சதவீதத்தை விஞ்சும் கழிவுடன் வான் காலம் வழங்கப்பட வேண்டி ஏற்பட்டிருந்தது. அவ்வாறு, கழிவினை வழங்குவதற்கு மேலதிகமாக அந்த சேவை பங்களிப்பாளர்களுக்காக கட்டணம் அறவிடப்படாமல் வழங்கப்படுகின்ற நிரல் வரிசை அறிவித்தல், மேலதிக அறிவித்தல் என மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தன.

### புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட செய்திப்பத்திரிகையை நிறுத்தியமையும் செய்திப் பத்திரிகையின் விற்பனை குறைவடைந்தமையும்.

வரையறுக்கப்பட்ட இலங்கையின் ஐக்கிய செய்தி பத்திரிகை கம்பனியினால் 2019 ஆம் ஆண்டின் போது சிலுமின, தினமின, ரெச, சண்டே ஒப்சேவர், டெய்லி நிவ்ஸ், தினகரன் மற்றும் வாரமஞ்சரி என்ற பெயரில் 07 வகைகளில் செய்திப்பத்திரிகைகளும் இளைஞர் தருணி, சரசவிய, மிஹிர உள்ளடக்கிய 10 வார சஞ்சிகைகளும் வெளியிடப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட நாளாந்த செய்திப் பத்திரிகையான "ரெச" 2020 சனவரி 30 ஆம் திகதி நிறுத்தி வைப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது. "ரெச" செய்திப்பத்திரிகையிலிருந்து விற்பனை செய்யப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் 52 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. ஏனைய 06 பத்திரிகைகளில் ஒட்டுமொத்தமாக விற்பனை செய்யப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் 7 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவடைந்திருந்தது. 10 வாராந்த சஞ்சிகைகளில் 08 சஞ்சிகைகளின் விற்பனை செய்யப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் 7 சதவீதம் முதல் 22 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவடைந்திருந்தது.

### ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு ஊழியர்களை விடுவித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் போது ஒன்பது பத்திரிகை கலைஞர்களும், நான்கு எழுத்தாளர்களும், ஒரு முகாமைத்துவ உதவியாளரும், ஒரு புகைப்பட கலைஞரும், சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரும் மற்றும் ஒரு நிதி சேகரிப்பாளரையும் உள்ளடக்கிய பதினேழு பேர் ஏனைய அரசாங்கத்தின் நிறுவனங்களின் சேவைகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்களின் சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய படிகளாக ரூபா 8.83 மில்லியன் வரையருக்கப்பட்ட இலங்கையின் ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் செலவிடப்பட்டிருந்தது. ஒன்பது பத்திரிகை கலைஞர்களும், நான்கு எழுத்தாளர்களும், விடுவிக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்த அடிப்படையில் இருபத்தாறு பத்திரிகை கலைஞர்களும், இருபத்திமூன்று எழுத்தாளர்களும் மீளாய்வாண்டில் கம்பனியினால் சேர்க்கப்பட்டிருந்தனர்.

### கம்பனிக்கு எதிராக காணப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகள்

1981 ஒக்தோபர் 14 ஆம் திகதிய 162/5 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியில் ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை என்ற அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளித்தரப்பினர்களினால் வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகைக் கம்பனிக்கு எதிராக 15 அவதூறு வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. அந்த 15 அவதூறு வழக்குகளில் ஒரு வழக்கிக்காக முறைப்பாட்டாளரினால் ரூபா 500 மில்லியன் இழப்பீடொன்று கம்பனியில் இருந்து கோரப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டில் அந்த வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது பிரதிவாதியும் கம்பனி சட்டத்தரணியும் வழக்கு அறையில் சமூகம் அளிக்காமையின் காரணமாக தீர்ப்பு முறைப்பாட்டாளருக்கு சாதகமான வகையில் வெளியிடப்பட்டிருந்தது. அந்த தீர்ப்புக்கு எதிராக கம்பனி முதலாவதாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திலும், இரண்டாவதாக சிவில் முறைப்பாட்டு நீதிமன்றத்திலும் முறைப்பாடொன்று சமர்ப்பித்திருந்த போதிலும், முன்னைய தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டமையினால் கம்பனியினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்

முறைப்பாடொன்று சமர்ப்பிப்பதற்கு ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய எப்104.19 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தில் சனாதிபதி சட்டத்தரணியை ரூபா 18.23 மில்லியன் கட்டணமொன்றில் தெரிவு செய்வதற்கு கம்பனி தீர்மானித்திருந்ததுடன் அந்த தொகை 2019 ஒக்தோபர் 09 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

## செலசினே தொலைக்காட்சி நிறுவனம்

செலசினே தொலைக்காட்சி நிறுவனம் 2001 திசெம்பர் 20 ஆம் திகதி மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து ஊடகத் துறை அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும், அதன் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தீர்மானிக்கப்பட்டு அதிகாரங்களை அமுல்படுத்துவதற்கு அதிகாரச் சட்டத்தினாலோ அல்லது ஏனைய சட்டங்களினாலோ ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிறுவனம் “செலசினே லிமிடெட்” ஆக கம்பனிச் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனியாக பதிவுசெய்வற்கு 2009 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது. எனினும், 2010 ஆகஸ்ட் 12 ஆம் திகதிய 10/1682/407/014 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களின் அறிவித்தல் மற்றும் விளம்பர நடவடிக்கைகள் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. அதற்காக தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களின் தேவையினை பூர்த்தி செய்துகொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், 09 வருட காலம் கடந்திருந்தும் அந்த தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் தனியார் நிறுவனங்களுக்கு உப ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் நிறுவனத்தின் பொதுவான முறைமையாக இருந்தது. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் நிகழ்ச்சித் திட்டத்தில் 07 தயாரிப்பு பணிகளுக்காக ரூபா 37.42 மில்லியன் வருமானம் கிடைத்திருந்த போதிலும், அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் தயாரிப்பிற்காக ரூபா 24.29 மில்லியன் வெளித்தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

நிறுவனத்தினால் பெறுகைப் பணிகளை மேற்கொள்ளும் போது அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டிகளை பின்பற்றுதல் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. அராசங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4 வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 500,000 மேற்பட்ட சேவை வழங்கலொன்றுக்காக பெறுகை குழு நியமிக்கப்பட்டு வழங்கல்கள் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 03 அச்சிடல் பணிகளை நிறைவேற்றுவதற்காக வெளி வழங்குனரை தெரிவு செய்யும் போது அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டி பின்பற்றப்படாமல் வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டு வெளித்தரப்பினர்களுக்கு ரூபா 5.04 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

நெவில் பிரனாந்து தனியார் வைத்தியசாலையை அரசாங்கத்திற்கு கையளிக்கும் நிகழ்வினை ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகள் ரூபா 13.57 மில்லியனில் மேற்கொள்வதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அதன் பிரதான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 4.54 மில்லியன் மதிப்பீட்டிற்கு வெளி நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அந்த நிறுவனத்திற்கு பணம் செலுத்தப்பட்டிருந்த போதும், அந்த தொகை பெற்றமைக்கு தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் அதிகார தரப்பு உத்தியோகத்தரினால் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த வழங்குனருடன் முறையான உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. சேவைகளுக்காக கூறு விலை நிர்ணயிக்கும் போது 15 வீத அளவில் இலாப எல்லை பயன்படுத்தப்பட்டதாக நிறுவனத்தினால் குறிப்பிடப்பட்ட போதும், இந்த விழாவிற்குரிய சுகாதார அமைச்சிற்கு கூறு விலை சமர்ப்பிக்கும் போது, ரூபா 13.57 மில்லியன் அதாவது, கிரயத்தில் 152 சதவீத இலாபமொன்று சேர்க்கப்பட்டு கூறு விலை சமர்ப்பிக்கப்பட்டமையினால் கூறு விலை தீர்மானிக்கும் போது முறையான திட்டத்துடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## செயற்திட்டத்தை அமுல்படுத்துதல்.

2019 ஆம் ஆண்டின் போது பாடசாலைகளுக்காக கணனி மற்றும் கணனி துணைப்பாகங்களை செய்யும் உள்ளடக்கி டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும்

தகவல் தொழில்நுட்ப அமைச்சின் அங்கத்தவர் அல்லாத அமைச்சின் கீழ் பொருளாதாரத்தை டிஜிட்டல் மயமாக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 1,055 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 194 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்த வேண்டியிருந்த பட்டியலின் பெறுமதி ரூபா 363 மில்லியனாக காணப்பட்டது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதி செயலாற்றல் 53 சதவீதமாக இருந்ததுடன் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 14 செயற்திட்டங்களுக்கு இடையில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை 04 மாத்திரமாக இருந்தது. மேற்கொள்ளப்பட வேண்டிய பெறுகைகள் குறித்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்படாமையினாலும், திறைசேரியினால் கட்டுநிதி வழங்கப்படாமையினாலும் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்ட பிரகாரம் இலக்கினை அடைவதற்கு முடியாதிருந்தது.

### தாமரைக் கோபுர செயற்திட்டம்

2010 ஒக்தோபர் 29 ஆம் திகதிய 10/2473/401/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தாமரைக் கோபுர நிர்மாண ஒப்பந்தம் 02 சீனக் கம்பனிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2012 சனவரி 03 ஆம் திகதி தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு இந்த கம்பனியுடன் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. இதன் ஒப்பந்த பெறுமதி ஐ.அ. டொலர் 104,300,000 ஆக இருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் 2012 நவம்பர் 12 ஆம் திகதி முதல் 2015 மே 12 ஆம் திகதி வரையான 912 நாட்களில் இந்த ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2017 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரை ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்காக ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இந்த நிர்மாண ஒப்பந்தத்திற்காக நிதியத்தை வழங்குவதற்கு 2012 செப்தெம்பர் 17 ஆம் திகதி இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, EXIM வங்கியுடன் கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. அந்த கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியில் 85 சதவீதம் அதாவது ஐ.அ டொலர் 88.655 மில்லியன் பெற்றுக் கொள்வதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆகஸ்ட் 18 ஆம் திகதி அளவில் கடன் தொகை பெறப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது.

2011 திசெம்பர் 14 ஆம் திகதிய அமப/11/2262/501/026/டிபீஆர் ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தாமரைக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்ட 2.59 ஹெக்டேயர் அளவான காணி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

நிர்மாண ஒப்பந்தத்திற்குரிய கால அட்டவணையின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக மொத்த கடன் தொகையும் குறித்த பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் உரிய காலத்தின் போது ஐ.அ. டொலர் 67,259,758 தொகை அதாவது கடன் தொகையிவ் 76 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் போது ஐ.அ. டொலர் 21,395,242 கடன் தொகை அளவினை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்த போதிலும், அந்த கடன் தொகைக்காகவும் காப்புறுதிக் கட்டணம் இணக்கப்பாட்டுக் கட்டணம் மற்றும் முகாமைத்துவ கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. இவ்வாறு பெறப்படாத கடன் தொகைக்கு சமமான விகிதத்தில் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ஐ.அ. டொலர் 2,091,257 தொகை, இணக்கப்பாட்டுக் கட்டணம் ஐ.அ. டொலர் 627,789 தொகை மற்றும் முகாமைத்துவ கட்டணம் ஐ.அ. டொலர் 192,557 ஆக கூட்டுமொத்தமாக ஐ.அ.டொலர் 2,911,633 தொகை பயனற்ற செலவினமாக ஏற்பட்டிருந்தது.

இந்த செயற்திட்டத்திற்குரியதாக தயாரிக்கப்பட்ட நிதி சாத்தியவள அறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு முதல் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு வருடாந்தம் ரூபா 1,685 மில்லியன் வருமானம் ஒன்றை உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதமானதன் அடிப்படையில் அந்த வருடாந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

2010 ஒக்தோபர் 29 ஆம் திகதிய 10/2473/401/031 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் 5.4(viii) ஆம் இலக்கத்தின் மூலம் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் உரிமையின் கீழ் முகாமைத்துவ ஆலோசனைக் கம்பனியொன்றை ஸ்தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த

போதிலும், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் அவ்வாறான கம்பனியொன்றை ஸ்தாபிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் காணப்படவில்லை. அதனால், 2019 செப்தெம்பர் 11 ஆம் திகதிய அமப/19/2305/103/140 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கொழும்பு தாமரைக் கோபுரத்தின் வணிகமயப்படுத்தல் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்யும் வகையில் அரசாங்க கம்பனியொன்றை ஸ்தாபிப்பதற்கு திறைசேரிக்கு அங்கீகாரம் கையளிக்கப்பட்ட போதிலும், அந்த நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தாமரைக் கோபுர நிர்மாண ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2017 ஒக்தோபர் 31 ஆம் திகதி கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் தாமதமான காலம் 1035 நாட்களாக இருந்த போதிலும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணங்களை அறவிடல் 200 நாட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் வருமானத்தில் கடன் தவணைகளை செலுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், திட்டமிடப்பட்ட முறையில் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஐ.அ. டொலர் 39,335,307 தொகையான கடன் தவணைப் பணம் மற்றும் வட்டியாக ஆணைக்குழுவின் பணத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு கடன் மற்றும் தவணைப் பணத்தை செலுத்த வேண்டி ஏற்பட்டதன் காரணமாக திரண்ட நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட அனுப்புதல்கள் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 5,200 மில்லியன், ரூபா 6,150 மில்லியன் மற்றும் ரூபா 19,050 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 30,400 மில்லயின் குறைவடைந்திருந்தது.

தாமரைக் கோபுர நிர்மாணத்திற்காக கடன் தொகையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டதன் காரணத்தினால் இணக்கப்பாட்டுக் கட்டணம், முகாமைத்துவ கட்டணம், காப்புறுதிக் கட்டணம் மற்றும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட்டித் தொகையாக முறையே ஐ.அ. டொலர் 1,573,054 தொகை, ஐ.அ. டொலர் 797,895 தொகை, ஐ.அ. டொலர் 8,665,620 மற்றும் ஐ.அ. டொலர் 12,738,807 தொகையாக கூட்டுமொத்தமாக ஐ.அ டொலர் 23,775,376 தொகையினை மேலதிகமாக செலவிடுவதற்கு ஆணைக்குழுவிற்கு ஏற்பட்டிருந்தது.

# வன சீவராசிகள்

நிகழ் கால மற்றும் எதிர்கால சந்ததிகளுக்காக வன சீவராசிகளின் பிறப்புரிமையை பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு பங்களிப்பை முகாமைத்துவம் செய்வதனூடாக வன சீவராசிகளின் பிறப்புரிமையை பாதுகாப்பதை உறுதிப்படுத்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றுவதற்கு, சுற்றுலா அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிரிஸ்தவ அலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் கீழ் அமைந்துள்ள திணைக்களம் மற்றும் கூட்டுத்தாபனம் ஒன்றின் மூலம் பின்வரும் பணிகள் நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும்.

- வன சீவராசிகளைப் பாதுகாத்தல்
- வன சீவராசிகள் பாதுகாப்பாக உள்ள பகுதிகளில் சுற்றுலாத் தொழிற்துறையை மேம்படுத்தும் நடவடிக்கைகளின் போது குறித்த சூழற்றொகுதியினை பாதுகாக்க அழுத்தம் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்
- அருகிச் செல்லும் ஆபத்தான நிலைக்கு முகம் கொடுக்கும் உயிரின வகையின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான சமவாயம் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள்

மேற்குறிப்பிட்ட பணிக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ரூ. மில்லியன் 7,641.40 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூ. மில்லியன் 6,191.89 பயன்படுத்தப் பட்டிருந்தது. அதன்படி பாராளுமன்றத்தால் அக் கால வரையறைக்கு ஏற்பாடு செய்திருந்த நிதி ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 18.97 வீதம் அதாவது ரூ. மில்லியன் 1,449.51 நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. விபரம் உரு 63 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 63 – பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கம் மற்றும் பயன்பாடு
மூலம் - திரைசேரியின் அறுதிக் கணக்கறிக்கைகள்

### நிலுவை வருமானம்

வன உயிர்ப் பாதுகாப்பு அமைப்பு மூலம் ஹோட்டன்தென்ன மற்றும் யால வனப்பூங்காக்களின் வன சீவராசிகள் திணைக்களத்துக்குரிய கட்டிடங்களில் சிற்றுண்டிச் சாலைகள் நடாத்திச் செல்லப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டுமுதல் 2018 ஆம் ஆண்டுவரை அக் கட்டிடங்களின் பேரில் ரூ. மில்லியன் 9.30 வாடகை மதிப்பீட்டாண்டின் இறுதி வரை திணைக்களத்துக்கு செலுத்தி இருக்கவில்லை.

## காட்டு யானைகள் அழிவுறல்

வன சீவராசிகள், காட்டு மரங்கள் மற்றும் அவற்றின் வதிவு நிலங்கள் வர்த்தக ரீதியிலும் வேறு முறையற்ற விதங்களில் பாவனைக்கு எடுக்கப் படுவதன் காரணமாக இலங்கையின் காட்டு யானைகளின் இனப்பெருக்கம் மற்றும் அவற்றில் உயிர்வாழ்வுக்கு தடையாக அமைந்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் மொத்த யானை மரணங்கள் துப்பாக்கிப் பாவனை, மின்சாரத்தால் தாக்குறுதல், சக்கைப் பட்டாசு, நஞ்சூட்டப்படல், ஆகிய காரணங்களால் நூற்றுக்கு 50 வீதத்துக்கும் மேலான மரணங்களை ஏற்படுத்தி இருந்தது.

அபிவிருத்திப் பணிகளுக்கும் சட்ட விரோதமாக இடம்பெறும் காடழிப்பு காரணமாக நிலப் பயன்பாட்டின் போக்கில் மாற்றம் நிகழ்ந்துள்ளமை, பயன்படுத்தத் தக்க தூர்ந்துபோன வதிவிடங்கள் சீர்கெடல் மற்றும் குறைந்து போதல், யானைகளின் உணவு பற்றாக்குறை ஏற்படுதல் காரணமாக யானைகள் கிராமங்களுக்கு வருதல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் காரணமாக யானைகள் இடம்பெயரும் பாதைகளில் தடை ஏற்படுதல் ஆகிய காரணங்களால் யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல் மதிப்பீட்டாண்டின் இறுதியளவில் வேகமாக கூடியுள்ளது. யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல் அதிகரிப்பு காரணமாக கடந்த 05 வருட காலத்தில் யானைகளின் மரணம் மற்றும் மனித மரணம், சொத்து நட்டங்கள் அதிகரிப்பு தொடர்பான விபரங்கள் உரு 64 உள்ளவாறு இடம்பெற்றிருந்தன.




உரு 64 – காட்டு யானைகள், மனித மரணங்கள் மற்றும் சொத்து நட்டங்களின் அதிகரிப்பு மூலம் ……..- (குறிப்பிடவும்)

## காட்டு யானை இடப் பெயர்ச்சி வாயில் (இடம்பெயரும் பாதை) உருவாக்குதல்

காட்டு யானைகளுக்கு சுதந்திரமாக நடமாடுவதற்கு வழியமைப்பதன் பேரில் 2019 செப்தெம்பர் மாதம் வரை 3 வாயில்கள் மாத்திரம் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்ட அறிவித்தல் ஊடாக பிரகடனப் படுத்தப் பட்டிருந்தது. 2015 மே மாதம் மேற்கொள்ளப்பட்ட காட்டு யானை மனித மோதல் முகாமைத்துவத்துக்கான செயற்திட்டங்கள் யோசனைகள் மூலம் மேலும் 16 செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு, மதிப்பீட்டாண்டு இறுதியில் 7 வாயில்களுக்கான ஆய்வு வேலைகள் இடம்பெற்றிருந்தன. எனினும் 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை யானைகள் இடம் பெயரும் ஒரு பாதையையாவது அறிவிப்பதற்குத் தவறியுள்ளனர்.

## மின் வேலிகளை அமைத்தல்

2019 அவ் வருடத்தின் செயற்திறன் திட்டத்தின்படி 221 மின் வேலிகள் அமைப்பதற்கு ரூ. மில்லியன் 24.20 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருந்தது. 2019 இறுதி வரை அதன் அமைப்புப் பணிகள் முடிக்கப் பட்டிருக்கவில்லை. மின்சார வேலிகள் அமைக்கப்படும் போது சமூக ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதும் குறித்த காணிகளை பிரச்சினைகளில் இருந்து விடுவித்துக் கொள்வதும் முதற்கட்டப் பணியாகவிருந்தது.

அம் முதற்பணிகளை செய்யாது மின்சார வேலிகளை அமைப்பதற்கான பணிகளை சிவில் பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. அக் காரணங்களால் மேலெழுந்திருந்த பிரச்சினை நிலைமைகள் காரணமாக 2019 ஆகஸ்ட 31 ஆம் திகதிவரை 11 மின்சார வேலிகள் அமைக்கும் பணிகள் நிறைவடையாமல் இருந்தது.

## ஹொரவ்பொத்தன யானைக் காப்பகம்

ஹொரொவ்பொத்தன யானைக் காப்பகத்திற்கு உட்படுத்தப்பட்ட 51 யானைகளில் 15 யானைகளின் உடல்நலம் குன்றிய நிலையில் காணப்பட்டதாக யானைகளை பொறுப்பேற்கும் பதிவேட்டில் குறிப்பிடப் பட்டிருந்தது. அவ்வாறு சுகயீனமற்ற யானைகள் பற்றி எதுவித பின்னூட்டலும் செய்யப் பட்டிருக்க வில்லை.

2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம் மேற்கொள்ளப்பட்ட யானைகள் தொடர்பான கணிப்பீட்டு அறிக்கையின் படி ஹொரொவ்பொத்தன யானைக் காப்பகத்திற்கு உட்படுத்தப்பட்ட 52 யானைகளில் 09 யானைகள் மாத்திரம் மிகுதமாக இருந்ததுடன், 12 யானைகள் பல்வேறு காரணங்களால் இறந்துள்ளன. மிகுதி 31 யானைகளும் அவ்விடத்திலிருந்து பாய்ந்து சென்றனவா அவ்வாறன்றி இறந்து போய்விட்டனவா என்பது தொடர்பான தகவல்கள் திணைக்களத்திடம் காணப்படவில்லை.

# சுற்றாடல் முகாமைத்துவம்

நிலையான சூழல் ஒன்றை நோக்கிச் செயற்படுவதற்கு மகாவலி அபிவிருத்தி மற்றும் சூற்றாடல்துறை அமைச்சின் கீழ் இரு திணைக்களங்கள் மற்றும் 08 கூட்டுத்தாபனங்கள் பின்வரும் பணிகள் நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும்.

- சூற்றாடல் துறைக்கான கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்தல்.
- நிகழ்கால மற்றும் எதிர்காலப் சந்ததிகளுக்கான சூற்றாடலைப் பாதுகாத்தல்
- சூழல் மாசுறலைத் தடுப்பதற்கான நிழச்சித்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் பயனுள்ள விதத்தில் செயற்படுத்துதல்
- கடல் மாசுறலை வெளிக் கொணரும் நடவடிக்கைகள் மற்றும் நகர திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல்
- வனம், வனவலங்குகள் மற்றும் மரங்களைப் பாதுகாத்தல் மற்றும் பேணிக்காத்தல்
- நாட்டின் விறகுத் தேவையை நிறைவேற்றுவதற்கு வர்த்தக காடுவளர்ப்பு மேம்படுத்தல்
- இரத்தினக் கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில், வர்த்தக மேம்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல்.
- வர்த்தகப் பாதுகாப்பு மற்றும் பேணிக் காத்தல்.

மேற்குறிப்பிட்ட பணிக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தால் 2017 ஆம் ஆண்டுக்கும் 2019 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்துக்கென ரூ. மில்லியன் 142,888.53 நிதி ஒதுக்கீடு செய்திருந்ததுடன் அதில் ரூ. மில்லியன் 116,324.63 பயன்படுத்தப் பட்டிருந்தது. அதன்படி பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கத்தில் நூற்றுக்கு 18.59 அதாவது 26,563.90 பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. விவரம் உரு 65 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 65 - பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் பயன்பாடு
மூலம் - திரைசேரியின் இறுதிக் கணக்கறிக்கை

மேற்குறித்த நிறுவனத்தால் செயற் பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளவை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வின்போது வெளியான கணக்காய்வு அவதானிப்புகள் சுருக்கமாக பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

## உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டம்

உமா ஓயா வடிநிலத்தின் சூழல் மற்றும் ஏனைய நீர்த் தேவைகளுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் அவ் வடி நிலத்திலிருந்து நீர் தேவைக்காக தவிக்கும் தெற்கு தொகுதியின் கிரிந்தி ஓயா வடிநிலத்துக்கு நீர் சதுர மீற்றர் 145 மில்லியன் வருடாந்தம் திருப்புவதற்கான பிரதான நோக்கத்துடன் இலங்கை அரசும் ஈரான் குடியரசுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் 2007 நவம்பர் 27 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதற்காக திட்டமிடப்பட்ட பணத்தை ஈரான் ஏற்றுமதி வங்கி (EDBI) ஊடாக கிடைக்கும் வெளிநாட்டுக் கடன் ஐ.அ.டொலர் 450,000,000 மற்றும் இலங்கை அரசு பெற்றுக் கொடுக்கும் ஐ.அ.டொலர் 79,059,198 மற்றும் ரூ. மில்லியன் 15,474.25 வினையும் கொண்டிருந்தது. செயற்திட்டத்தின் சகல செயற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட வேண்டிய அல்லது முடிவுறுத்தப்பட வேண்டிய கால வரையறையில் செய்து முடிக்காத காரணத்தால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போயுள்ளது.

## திண்மக் கழிவுகள் அப்புறப்படுத்தல் வசதிகளை ஏற்படுத்தம் செயற்திட்டம்

பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கொரியா நாட்டின் கடன் உதவியின் கீழ் திண்மக் கழிவுகள் அப்புறப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்தும் செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட மொத்தக்கிரயம் ஐ.அ.டொலர் 41,886,000 வாக இருந்ததுடன் அதில் கொரிய நாட்டின் கடனுதவி ஐ.அ.டொலர் 33,536,000 ஆகவும் இருந்ததுடன் அக்கடன் வருடாந்த வட்டி 0.15% இன் கீழ் 10 வருட நிவாரண காலம் உட்பட 40 வருடங்களில் செலுத்த வெண்டும். செயற்திட்டத்தின் உள்நாட்டு நிதி ஒதுக்கீடு ஐ.அ.டொர் 8,350,000 ஆகும். இக் கடன் ஒப்பந்தம் 2013 ஜூலை 23 திகதி கைச்சாத்திட்டிருப்பதுடன் 04 வருட (48 மாதம்) ங்களுக்கு உட்பட்ட கொத்தணி முறையின் கீழ் மாகாண சபைகளின் நியாயாதிக்க எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உருவெடுக்கும் கழிவுகள் கடைசியாக அப்புறப்படுத்துவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு 04 சுகாதார கழிவகற்றல் நிலையங்களை அனுராதபுரத்தின் கீரிக்குளம், ஹிக்கடுவ மொனறோவியா வத்த, பாணந்துறை மாலமுள்ள மற்றும் உடுநுவர கோனாடிகாவத்த ஆகிய இடங்களில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

முறையான சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு சுகாதாரக் கழிவுகளை அகற்றுவதற்கான நிலையங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு செயற்திட்டத்தின் ஆரம்பத்திலேயே நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை என்பதுடன் பாணந்துறை மாலமுள்ள மற்றும் உடுநுவர கோனாடிகாவத்த ஆகிய இடங்களில் அமைப்பதற்குப் பதிலாக, யாழ்ப்பாணம் கீரிமலை மற்றும் மதிரிகிரிய யுதகனாவ ஆகிய இடங்களில் மாத்திரம் இக் கழிவகற்றும் நிலையங்களை ஆரம்பித்து 2 வருடமளவு கடந்திருந்தன. அதன்படி செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் பெறுபேறு சரியான நேரத்தில் மற்றும் பயனுள்ளவாறு அடைந்து கொள்வதற்கு முடியாமல் போயுள்ளதுடன் கழிவகற்றும் நிலையங்கள் இதுகாலவரை ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை.

2020 ஜூலை 03 ஆம் திகதி 20/0933/227/013-i இலக்கமுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இச் இச்செயற்திட்டத்தை கை விடுவதற்கு முடிவெடுக்கப்பட்டிருந்தது. தற்போதுவரை செயற்திட்டத்தின் முதற்கட்ட வேலைகளுக்கென செலவு செய்யப்பட்ட ரூ. மில்லியன் 457 பணம் பயனற்றுப் போயுள்ளது.

## சூழல் தொகுதியை பேணிப் பாதுகாக்கும் முகாமைத்துவச் செயற்திட்டம்.

இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் காணப்படும் முக்கிய சூழற்றொகுதி களைப் பேணிக் காத்து முகாமைத்துவம் செய்வதனூடாக மக்களுக்கு அவற்றின் பயன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு உலக வங்கியுடன் ஒன்றிணைந்த சர்வதேச அமைப்புச் சங்கமான (IDA) மூலம் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் மில்லியன் 45 க்கான கடன் தொகை ஊடாக இச் இச்செயற்திட்டத்துக்கான நிதி ஏற்பாடு செய்து கொள்ளப் பட்டிருந்தது. செயற்திட்ட ஆக்கக்கூறு என்றவகையில் ஆரம்ப நிலக் காட்சித் திட்டம் தயார்த்தல் மற்றும் முகாமைத்துவம், வருமான வழிகளை மேம்படுத்துவதற்கான இயற்கை வளங்களை நிலையாகப் பயன்படுத்தல் மற்றும் மனிதனின் வருமான வழிகளைப் பாதுகாப்புடையதாக்குவதற்கு, யானைகள் மனிதர்களுக்கிடையே ஒருமைப்பாட்டை உண்டாக்கும் விதத்தில் பாதுகாக்கப்பட்ட

வனப் பகுதிகளை முகாமைத்துவம் செய்தல், ஒன்றுபட்ட திறமைகளை அபிவிருத்தி செய்தல் ஆகியவை பற்றி செயற்திட்ட முகாமைத்துவத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன. செயற்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து மதிப்பீட்டாண்டின் இறுதிவரை செயற்திட்டத்தின் நிதிச் செயலாற்றுகை, நிதி ஒதுக்கீட்டின் நூற்றுக்கு 24 வீதம் என்ற கீழ் மட்டத்தில் நிலவியதுடன் செயற்திட்டத்தின் காலம் நூற்றுக்கு 70 வீதத்தைத் தாண்டியிருந்தது.

### தேசிய சுற்றுச்சூழல் சட்டம் திருத்தப்படுதல்

தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டிருந்த போதிலும், மதிப்பீட்டாண்டின் இறுதிவரை அது முடிக்கப் பட்டிருக்கவில்லை.

### பாவிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவ தேசிய செயற்திட்டம்

பாவிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள் முகாமைத்துவச் செயற்திட்டச் செயற்பாடுகள் இடைநடுவில் நிறுத்தப் பட்டிருந்தது. கழிவுகளை முகாமைத்துவம் செய்வதனூடாக உருவாகும் பிரதிப் பயனான கொம்போஸ்ட் கலப்பு உர உற்பத்தி மூலம் இரசாயன உரப் பயன்பாட்டை குறைப்பதற்கு முதலிடம் வழங்கும் சுற்றுச் சூழல் சட்டத்திற்கு ஏற்புடைய அதிகாரம் வழங்கப்பட்டிருப்பினும், அதற்கான கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை.

### தேக்கு மரங்கள் காணாமல் போதல்

2015 ஆம் ஆண்டில் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மின்னேரியா பிரதேச அலுவலகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஹல்மில்லேவ வேலைத் தளத்தில் வனப் பாதுகாப்பு திணைக்களம் பெற்றிருந்த 7,840 தேக்கு மரங்களில் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கும்போது அதில் 69 மரங்கள் ( 358,890 $dm^3$) காணாமல் ஆக்கப்பட்டதன் காரணமாக கூட்டுத்தாபனத்துக்கு ரூ. மில்லியன் 2.99 நட்டம் ஏற்பட்டிருந்தது.

### வீட்டுத் தளபாடங்கள் உற்பத்தியும் விற்பனையும்

அரச மரக் கூட்டுத்தாபனம் பூஸ்ஸ மரத் தளபாடங்கள் கட்டடத் தொகுதிக்கான தளபாடங்களை உற்பத்தி செய்துகொள்வதற்கு ஆறு ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த முற்பணங்களில் மதிப்பீட்டாண்டு முடிவில் அதன் மொத்தப் பெறுமதி ரூ. மில்லியன் 13.78 வருமதி நிலுவை ஒன்று காணப்பட்டது. அந்நிலுவையை ஈடு செய்யும் வகையில் குறித்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அப்பெறுமதிக்குச் சமமான பொருட்களை தருவித்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை. மேலும் அரச பெறுகை வழிகாட்டற் கோவையின் 5.4.4 வழிகாட்டலுக்கமைய ஒப்பந்தப் பெறுமதியின் நூற்றுக்கு 20 வீதத்துக்கு மேற்படாத தொகையை முற்பணமாக செலுத்த முடியுமாக இருந்த போதிலும், அவ் எல்லையைத் தாண்டி ஒப்பந்தப் பெறுமதியில் நூற்றுக்கு 54.4 வீதம் அதாவது 80.2 வீதம் இடை வித்தியாசத் தொகை, பணி துவக்க முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளது.

களஞ்சிய சாலையினுள் ரூ. மில்லியன் 10.51 பெறுமதிவாய்ந்த மரத் தளபாடங்கள் இருந்த நிலையில் அவற்றை விற்பனைக்கு உகந்த விதத்தில் மாற்றியமைக்காது அம் மரத்தளபாட அலகுகளை மீண்டும் உற்பத்தி செய்ய புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் மரத்தளபாட உற்பத்திகளைச் செய்துகொண்டு அவற்றை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுவரை உற்பத்தி நிலையத்திலிருந்து களஞ்சிய சாலைக்கு வழங்கப்பட்டிருந்த ரூ. மில்லியன் 14.90 பெறுமதிவாய்ந்த மரத் தளபாடத் தொகையொன்று களஞ்சிய சாலையினுள் நீண்ட காலமாக தக்க வைத்துக் கொண்டதாலும் அம் மரத்தளபாடங்களை முறையற்ற விதத்தில் பாதுகாப்பற்ற விதத்திலும் களஞ்சிய சாலையில் ஆங்காங்கே குவித்து வைத்திருந்ததால் பழுதான நிலைகளுக்கும் உட்பட்டு விற்பனைக்குத் தகுதியற்ற நிலைக்கு உள்ளாகியிருந்தது.

2019 ஜனவரி மாதம் தொடக்கம் 2019 டிசம்பர் மாதம் 17ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பூஸ்ஸ மரத்தளபாட கட்டடத் தொகுதியின் உற்பத்தி தொழிற்பாடுகளில் நூற்றுக்கு 88 வீதம் ஒப்பந்த அடிப்படையில் வெளிப்புற ஒப்பந்ததாரர்கள் மூலம் நிறைவேற்றப் பட்டிருந்தது. உற்பத்திச் செயற்பாட்டில் நூற்றுக்கு 12 வீதம் மாத்திரமே கூட்டுத்தாபன ஊழியர்களால் நிறைவேற்றப்பட்டிருந்தது. இக் கால எல்லையில் மரத்தளபாட கட்டடத் தொகுதியில் பணியாற்றிய ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகள் என்ற வகையில் ரூ. மில்லியயன் 10.85 செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி

கூட்டுத்தாபன ஊழியர்களிடமிருந்து உற்பத்திச் செயற்பாட்டுக்கு கிடைத்த பங்களிப்பு மிக கீழ் மட்டத்தில் நிலவியதுடன் அவர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் அடங்கலான செலவுகள் உற்பத்திக் கிரயத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது. கிடைக்கப் பெற்றிருந்த கொள்வனவுக் கட்டளைகளில் நூற்றுக்கு 93 வீதம் அரச நிறுவனங்கள் மூலம் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் தனியார் துறையிலிருந்து கிடைக்கப் பெற்றிருந்த கொள்வனவுக் கட்டளை நூற்றுக்கு 7 வீதம் அளவில் மிக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. எனவே கூட்டுத்தாபனம் தனியார் துறையிடமிருந்து கேள்விகளை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை..

## கடப்பாடுடைய நிலுவை

தனியார் நிறுவனமொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. மில்லியன் 11.87 தொகை 36 வருட காலமாக நிலுவையாக காணப்படுகிறது. அக் கடப்பாடுடைய மீதியை புத்தகத்திலிருந்து அகற்றிவிடுவதற்கு 2012 செப்தெம்பர் 06 ஆம் திகதி அப்போது பதவியில் இருந்த சூழல் அமைச்சின் செயலாளர் அமைச்சரவை குறிப்பாணையொன்றைச் சமர்ப்பித்திருந்த போதிலும், மதிப்பீட்டாண்டு இறுதி வரையில் அது தொடர்பில் விடையளிக்கப் பட்டிருக்கவில்லை.

## மாதம்பிட்டி சுத்திகரிப்பு இறைப்பகம்

மாதம்பிட்டி சுத்திகரிப்பு இறைப்பகத்துக்கு வெளி நிறுவனங்களால் மலம் மற்றும் அசுத்த நீர் கொண்டுவரப்படும் பவுசர்களால் பெறப்படும் மாதிரிகளில் சில மாதிரிகள் மாத்திரமே அங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப் படுகின்றன. அங்கு பெரும்பாலும் கழிவு நீரின் PH அளவு மாத்திரமே பரிசோதிக்கப் படுகின்றது. கடற் சூழல் பாதுகாப்பு அதிகார சபையில் போதுமான அளவு ஊழியர்கள் காணப்படாமையால் ஒரு ஆய்வாளரை மாத்திரம் ஈடுபடுத்தி மேற்கொள்ளப்படும் இவ் ஆய்வு பிரயோசனமற்ற செயலாக இருந்தது. அவ் இறைப்பகத்தில் இறக்குவதற்கு முன் முறையான தரக் கட்டுப்பாட்டுக்கு உட்படாத அசுத்த நீரை கொண்டுவரும் பவுசர்களை இனங்கான முடியாத காரணத்தால் கடல் மாசுறலைத் தடுக்க முடியாமல் உள்ளது.

## நிலையான அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

நிலையான அபிவிருத்தி நோக்கத்தை அடைவதற்கு 05 குறியீடுகள் இனங்காணப் பட்டிருந்ததுடன் பிளாஸ்டிக் பொலிதீன் பாவனையைக் கட்டுப் படுத்துவதற்கு சரியான ஒழுங்கிலான செயற்திட்டமொன்று காணப்படவில்லை. சூழல் அமைச்சு மட்டத்தில் முறையான செயற்திட்டமொன்று காணப்படாத காரணத்தால் இலக்கை அடைந்து கொள்ள முடியாத சிக்கலான நிலை உருவாகியிருந்தது.

## காலநிலை பாதிப்புகளை குறைப்பதற்கான செயற்திட்டம்

மதிப்பீட்டாண்டின் முடிவில் செயற்திட்டத்துக்குரிய 73 மாதங்களில் 65 மாதங்கள் கடந்திருந்ததுடன் அது மொத்த காலத்தின் நூற்றுக்கு 89 ஆகவிருப்பினும் செயற்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடான ஐ.அ.டொலர். மில்லியன் 110 இல் ஐ.அ.டொலர். 79.32 அதாவது ரூ.மில்லியன் 12,388.92 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. அது மொத்த ஒதுக்கீட்டின் நூற்றுக்கு 72.1 வீதமாக இருந்தது. அதன்படி மொத்த ஒதுக்கீட்டின் நூற்றுக்கு 27.9 வீதத்தை 08 மாதங்களில் பயன்படுத்த வேண்டியிருந்தது.

மதிப்பிட்டாண்டின் இறுதியில் நிறைவடைய வேண்டிய பணிகளின் பெறுமதி ரூ.மில்லியன் 1,540.7 க்கான 30 ஒப்பந்தப் பொதிகளின் பணி நிறைவடையாது காணப்பட்டதுடன், தொடர்ந்து செய்யப்படும் வேலையாக காட்சியளித்தது. அவ்வாறான ஒப்பந்தப் பொதிகள் 01 மாதத்திலிருந்து 34 மாதங்கள் வரை கால வித்தியாசத்தில் கால தாமதம் இடம்பெற்றிருந்தது.

## போலி ஆவணங்களைப் பயன்படுத்தி அரச காணிகளை தவறாகப் பயன்படுத்தல்

நபர் ஒருவரால் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுராதபுர பிராந்தியத்தில் 10,000 ஏக்கர் அளவு அரச காணிகள் பல்வேறு தரப்பினரின் ஒத்தழைப்பை பெற்றுக்கொண்டு போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி கபடமாக தங்களது பெயர்களுக்கு உரித்தாக்கிக் கொண்டு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. அவ் ஆதனங்களுக்கு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் கடன்களும் பெறப்பட்டிருந்தது. அவ்வாறு விற்கப்பட்ட காணிகளின் நிதிப் பெறுமதி அண்ணளவாக ரூ.

மில்லியன் 2,000 அளவில் காணப்பட்டது. இது சம்மந்தமாக கெபிதிகொள்ளாவ நீதவான் நீதிமன்றத்தில் பி அறிக்கை 405/2018 ஆம் இலக்கத்தின் கீழ் விடயங்கள் அறிக்கையிடப்பட்டபோதிலும் மதிப்பீட்டாண்டின் இறுதியிலும் தீர்வொன்று பெற்றிருக்கவில்லை.

### புத்தளம் பிராந்தியத்தில் வீரக்குழிச்சோலை பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் சட்டவிரோத விறகு வெட்டுதல்

புத்தளம் பிராந்தியத்தின் மேற்குறிப்பிட்ட பாதுகாப்பு வனம் 23,354 ஹெக்டேயர் பரப்பளவு பூமியை கொண்டமைந்துள்ளது. வனப் பாதுகாப்பு திணைக்களத்தால் செயற்படுத்தப்படும் வனப் பாதுகாப்பு முகாமைத்துவ செயற்திட்டம் (FRMP) மூலம் அளவை செய்யப்பட்டு 2013 ஒக்டோபர் மாதம் 28 அம் திகதி 1834/13 ஆம் இலக்கமுடைய வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின் மூலம் பாதுகாக்கப்பட்ட வனம் என பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது.

பாதுகாக்கப்பட்ட வனத்திலிருந்து அனுமதியின்றி விறகு அகற்றப்படுவது 2016 இறுதிக் காலாண்டிலும் 2017 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நடைபெற்றிருந்ததுடன் அனுமதியின்றி விறகு அகற்றுவது சம்மந்தமாக 2018 மே 11 ஆம் திகதி முதல் 2020 ஜூலை 30 ஆம் திகதி ஆகும்போது 02 வருடங்களை விட அதிகமான காலம்தொட்டு 04 ஆரம்ப விசாரணைக் குழுக்கள் நியமிக்கப் பட்டிருந்தபோதும், ஒவ்வொரு குழுவும் எதுவித அறிக்கையும் சமர்ப்பித்திருக்கவில்லை.

பாதுகாக்கப்பட்ட வனத்திலிருந்து தரிக்கப்பட்டு அகற்றப்பட்டிருந்த மரத் துண்டங்கள் மற்றும் வேறு மரங்கள் 1,443 இல் 139 மரங்கள் விறகு பரும அளவு டெசி மீட்டர் 263,977 ஆக காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி ரூ. மில்லியன் 6.93 என அறியவந்துள்ளது. வேறு வகை மரங்கள் 1,304 இன் விறகுப் பரும அளவு மற்றும் நிதிப் பெறுமதி கணக்கிடப் பட்டிருக்க வில்லை.

வனக் குற்றவாளிகள் வீரக்குழிச்சோலை பாதுகாக்கப்பட்ட வனத்திலிருந்து தரிக்கப்பட்டு வெளியேற்றியுள்ள விறகுகளை கொண்டு சென்ற அல்லது அவ் விறகுகள் தற்போது இருக்குமிடத்தையாவது அறிந்திருக்க வில்லை என்பதுடன் வனக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்கள் சம்மந்தமாக சட்டரீதியான நடவடிக்கைளும் எடுக்கப் பட்டிருக்கவில்லை.

### ஹுருளு சூழல் வனப் பூங்காவிலிருந்து வெளிவாரி தொண்டர் நிறுவனம் இலாபமீட்டல்

ஹுருளு சூழல் வனம் 2008/10/21 ஆம் திகதி 1572/10 ஆம் இலக்கமுடைய விசேட வர்த்தமானி பத்திரிகை மூலம் பாதுகாக்கப்பட்ட வனமாக பிரகடனப் படுத்தப் பட்டிருந்ததடன் 1767/03 ஆம் இலக்க 2012.07.16 ஆம் திகதி விசேட வர்த்தமானி பத்திரிகை மூலம் பாதுகாக்கப்பட்ட வனமாக பிரகடனப் படுத்தப் பட்டிருந்தது. இப் பாதுகாக்கப்பட்ட வனம் 18,268 ஹெக்டேயர் பரப்பளவுடையது. அதில் 2,700 ஹெக்டேயர் அளவுள்ள காணியில் ஹுருளு சூமல் வனப்பூங்கா அமைந்துள்ளது.

2006 ஆம் ஆண்டிலிருந்து இப் பூங்காவினுள் வனப் பாதுகாப்புத் திணைக்களத்துடன் தொடர்பற்ற வெளிவாரி தொண்டர் அமைப்பொன்று செயற்பட்டுக் கொண்டிருப்பதுடன் அவர்களால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளிடம் வழிகாட்டற் கட்டணமொன்று அறவிடப்படுகிறது.

அதன்படி திணைக்களத்துக்குரிய வனப் பூங்காவிலிருந்து அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருமானமொன்றை அரச ஒத்துழைப்பு அல்லது அங்கீகாரமின்றி மேற்குறித்த தொடர் அமைப்பு 2006 ஆம் ஆண்டுமுதல் 2019 டிசம்பர் 31 திகதி வரை இலாபமீட்டியிருந்தது. அதன் மொத்தப் பெறுமதி எவ்வளவு என மிகச் சரியாக அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் உள்ளது எனினும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2020 மார்ச் மாதம் வரை மட்டும் தொண்டர் குழு கிட்டத்தட்ட ரூ. மில்லியன் 92.98 வரை இலாபமீட்டியிருந்தது.

திணைக்களத்தால் உல்லாசப் பிரயாணிகளுக்கு வழங்கப்பட வேண்டிய சேவை முறைசாரா விதத்தில் வெளித் தொண்டர் நிறுவனமொன்று நடாத்திச் செல்வதற்கு இடமளித்திருப்பன் மூலம் அரசுக்கு ஆதாயம் பெற்றுக்கொள்ள முடியுமான வருமானமொன்றை தடைசெய்திருந்ததுடன் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிகளில் தேவையற்ற விதத்தில் தலையிடுவதற்கு மேற்கூறப்பட்ட தொண்டர் நிறுவனத்துக்கு இட வசதிகள் பெற்றுக் கொடுக்கப் பட்டிருந்தது. திணைக்களத்தின் ஒன்றிணைந்த நிறுவனமாகக் காட்டும் விதத்தில் திணைக்களத்தின் பெயரையும் பயன்படுத்தி கடிதத் தலைப்புகள் பாவிப்பதனூடாக திணைக்களத்தின் நற்பேருக்கு இத் தொண்டர் நிறுவனம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

### திருத்தப்பட்ட புதிய அனுமதிக் கட்டணம் காரணமாக ஹூறுலு சூழல் வனப் பூங்காவின் வருமானம் கீழ் நோக்கிச் செல்லல்

திணைக்களம் அனுமதிக் கட்டணத்தை திருத்தம் செய்து அதனூடாக அரச வருமானத்தை நூற்றுக்கு 20 வீதத்தால் கூட்டிக் கொள்வதற்கு முயற்சி எடுத்திருப்பினும் இப் பூங்காவின் திருத்தப்பட்ட கட்டணம் காரணமாக 2019 டிசம்பர் 16 ஆம் திகதி முதல் 2020 ஜனவரி 31 ஆம் திகதி வரையான கால இடைவெளியில் மாத்திரம் திணைக்களம் இழந்த வருமானம் ரூ. மில்லியன் 13.07 ஆகவிருந்தது.

### வவுனியா பிராந்திய வனத்துறை அலுவலகம் கருங்கல் வேலைத் தளங்களை பரிசோதித்தல்

மேற்படி பிராந்திய வனத்துறை அலுவலகத்தின் கீழ் காணப்படும் கருங்கல் வேலைத் தளங்கள் மத்தியில் மாதிரிப் பௌதீக பரிசோதனை ஒன்று மேற் கொள்ளப்பட்டதுடன் அது தொடர்பில் நிலவியல் மற்றும் சுரங்க அகழ்வு பணியகத்தின் மூன்று புவியியல் வல்லுநர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. வனத் திரவியங்களை அளவீடு செய்வதற்கு நடைமுறையில் வளர்சியடைந்த நாடுகள் பாவிக்கும் EDM (Electronic Distance Measurement) உபகரணத்தை அளவீடு செய்வதற்கு பயன்படுத்தியதுடன் அவ் அளவைத் தரவுகளைப் பயன்படுத்தி கருங்ககற்பாறையில் உள்ளடங்கிய உண்மையான கன சதுர அளவு கணக்கிப்பட்டது.

பிராந்தியத்தக்குரிய உத்தரவுப் பத்திரதாரிகள் மூலம் கருங்கற் பாரையிலிருந்து தற்போதுவரை உடைத்து அகற்றப்பட்டுள்ள பிரமாணத்தை கணிப்பிடுகையில் நில அளவையாளர் திணைக்களத்தின் ஒத்துழைப்பையும் பெற்று 2009 ஆம் ஆண்டின் DEM (Digital Elevation Model) தரவுகளை அடிப்படையாகக் எடுக்கப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் EDM உபகரணத்தின் ஊடாக GPS வாசிப்பை அடிப்படையாகக் கொண்ட அளவைத் தரவுகளும் அடிப்படையாக எடுக்கப்பட்டது. அதன்படி 2009 மற்றும் 2019 க்கும் இடைப்பட்ட கால இடைவெளியின் கணக்கிடப்பட்ட கன சதுர அளவுக்கும் இடையில் காணப்படும் இடை வித்தியாசம் தற்போது உடைத்து எடுக்கப்பட்டுள்ள மொத்த கருங்கல் கன சதுர அளவென கணிப்பீடு செய்யப்பட்டது.

அதன்படி வவுனியா பிராந்திய வனப் பாதுகாப்பு அலுவலகத்தின் கீழ் கருங்கல் வேலைத் தளங்களை நடாத்திச் செல்லும் உத்தரவுப் பத்திரதாரிகள் அனுமதிக்கப்பட்ட உத்தரவுப் பத்திர அளவை மீறி கூடுதலாக கருங்கல் உடைப்பதில் ஈடுபட்டுள்ளனர். திணைக்களம் குறித்த கருங்கல் வேலைத்தளங்களை முறையாக கண்காணிப்பு செய்திருக்கவில்லை என்பதுடன் அதன் காரணமாக அரசின் பேரில் அறவிடப்பட வேண்டிய நிலுவை கட்டணம் அறவிடப் பட்டிருக்கவில்லை.

### இலங்கையின் வன அடர்த்தி

நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் 15.2 இன் கீழ் 2020 ஆகும் போது சகல வகையான காடுகளும் நிலையான விதத்தில் முகாமைத்துவம் செய்தல், மேம்படுத்தல் காடழிப்பைத் தடுத்தல், அழிவுக்குள்ளான காடுகளை முன்னைய நிலைக்கு கொண்டு வருதல் மற்றும் உலகளாவிய மட்டத்தில் காடு வளர்ப்பும் காடு மீள் நடுகையை விருத்தி செய்தல் ஆகியவை ஊடாக திணைக்களம் இனங்காணப் படுகிறது.

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டின் செயற்திறன் அறிக்கையின்படி இலங்கை மொத்த வனக்கவசம் மொத்த நிலப் பகுதியின் நூற்றுக்கு 35.12 என கூகல் செயற்கைக்கோள் புகைப்படங்களை பயன்படுத்தி on screen digitizing முறையின் கீழ் கண்டுபிடிக்கப் பட்டிருந்தது. அவ்வாறு பயன்படுத்தப்பட்ட செயல்முறையை மாற்றத்துக்கு உட்படுத்தி மீண்டும் வனக் கவச வரைபடமொன்றை திணைக்களம் தயாரித்திருந்ததுடன் அதன்படி முழு நாட்டினதும் வனக்கவசம் நூற்றுக்கு 29.3 என தெரியவந்துள்ளது.

2030 ஆம் ஆண்டளவில் மொத்த வனக்கவசம் நூற்றுக்கு 32 வீதம் வரை மேல் நோக்கிக் கொண்டு செல்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்ததெனினும், அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காணிகள் விடுவிக்கப்படுவது நடைபெற்றுள்ளதால் வனக்கவசத்தின் தேறிய வளர்ச்சியை அடைந்துகொள்ள முடியாமல் போயுள்ளது. 2010-2015 வருடங்களில் மாத்திரம் திணைக்களத்தக்கு சொந்தமான 26,158 ஹெக்டேயர் காணிகள் விடுவிக்கப் பட்டிருந்தது.

# கிராமிய பொருளாதார அலுவல்கள்

விவசாய, கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் மீண்பிடி நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் ஒரு செயற்திட்டமாக கிராமியப் பொருளாதார அலுவல்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் கிராமிய பொருளாதார அலுவல்களிற்காக நிதி வழங்குதல் பிரதான பணியாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே, தேசிய கொள்கைகள், பொருளாராத அலுவல்கள், மீளக் குடியமர்த்தலும் புனர்வாழ்வும், வட மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சியும் திறன் அபிவிருத்தியும் மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி மற்றும் வீட்டுத்தோட்ட பொருளாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பண்முகப்படுத்திய பாதீடு, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்திச் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

மேற்படி பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 172,225.36 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 102,825.55 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய அக்காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து 40.30 சதவீதம் அல்லது ரூபா 69,399.81 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் உரு 66 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.




உரு 66 - பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடும் பயன்பாடும்
மூலம் - பொதுத் திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கை

மேற்படி பணிகளை நிறைவேற்றுதல் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## பண்முகப்படுத்திய பாதீடு

உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ரூபா 10 மில்லியன் வீதம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டில் 21,263 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 2,350 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1,418 மில்லியன் தொகையினைப் பயன்படுத்தி 20,612 செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டிருந்தன. அதன்படி, அங்கீகரிக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 40 சதவீதம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், 651

செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவுமில்லை.

### கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திச் செயற்திட்டம்

கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் ரூபா 13,825 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மாவட்டச் செயலாளர்களிற்கும் அமைச்சுக்களின் செயலாளர்களிற்கும் 8,248 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 13,154 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 4,528 செயற்திட்டங்களின் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு ரூபா 4,584 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 63.69 சதவீதம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், 3,272 செயற்திட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டிருக்கவில்லை.

### கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்திச் நிகழ்ச்சித்திட்டம் - 2019 உட்கட்டமைப்பு வசதிகளின் தரத்தினை முன்னேற்றி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு உதவுதல் மற்றும் பொருளாதார அபிவிருத்தியினை துரிதப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்திச் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் ரூபா 48,000 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 117,354 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 47,283 மில்லியன் நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் 105,203 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு ரூபா 34,480 மில்லியன் பெறுமதியுடைய 101,391 செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன், 12,151 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

# பிரதேச நிர்வாகம்

உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபை, மாகாண நிர்வாக அமைச்சு மற்றும் அதன் கீழ் அமைந்துள்ள 09 மாகாண சபைகள், 25 மாவட்ட செயலாளர் அலுவலகங்கள் மற்றும் இரண்டு கூட்டுத்தாபனங்கள் ஊடாக பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும்.

- மாகாண சபைகளுக்குரிய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல்.
- மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அதிகார சபை உறுப்பினர்களையும், உத்தியோகத்தர்களையும் பயிற்றுவித்தல்.
- உள்ளுராட்சி அதிகார சபைகளுக்கான அரச கருமங்களை ஒப்படைத்தல்.
- பொது வசதிகள் அபிவிருத்திக்கு உள்ளுராட்சி அதிகார சபைகளுக்கான கடன் வசதிகயைப் பெற்றுக் கொடுத்தல்.
- மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி அதிகார சபைகளின் சகல பரிமாணங்கள் சம்மந்தமாகவும் ஆய்வுகளை நடாத்தல்
- மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களின் செயற்பாடுகள், செயற்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், மற்றும் வளங்களை ஒருங்கிணைத்தல்
- பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புப் பதிவுகளுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மேற்குறித்த கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தால் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதிக்கு ரூ. மில்லியன் 800,087.00 நிதி ஒதுக்கீட்டை ஏற்பாடு செய்திருந்ததுடன் அதில் ரூ. மில்லியன் 725,536.74 பயன்படுத்தப் பட்டிருந்தது. அதன்படி பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 9.32 வீதம் அதாவது ரூ. மில்லியன் 74,550.26 க்கான நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. விபரம் உரு 67 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 67 – பாராளுமன்றத்தால் ஏற்படு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் பயன்படுத்தல்
மூலம் - திரைசேரியின் இறுதிக் கணக்கறிக்கை

அமைச்சு, மாவட்டச் செயலகம் மற்றும் கூட்டுத்தாபனங்களால் மேற்கூறப்பட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட கணக்காய்வுத் தகவல்கள் சுருக்கமாக பின்வருமாறு காட்டப் பட்டுள்ளது.

### பசுமைச் சமூக செயற்பாட்டுச் செயற்திட்டம்

கேகாலை மாவட்டத்தின் 03 பிரதேச செயளாலர் பிரிவுகளில், களுத்துறை மாவட்டச் செயலகம் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் 02 பிரதேச செலாளர் பிரிவுகளிலும் பசுமைச் சமூக செயற்பாடுகள் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு மீள்நிரப்புகை மதிப்பீட்டு நிதி ஒதுக்கத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஓதுக்கத்தின் கூட்டத்தொகை ரூ. மில்லியன் 9.11 பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.

### செயற்திட்டம் நிறைவேற்றப் படாமை

- மஹியங்கனை பிரதேச செயளாலர் அலுவலகம் ரூ. மில்லியன் 2.21 க்கான மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட பத்தலயாய வித்தியாலயத்தின் கரப்பந்தாட்ட விளையாட்டு மைதான அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம், பஸ்ஸர பிரதேச செயளாலர் அலுவலகம் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூ.மில்லின் 3.60 க்கான பொது விளையாட்டு மைதானத்தின் பக்கச் சுவர் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் மற்றும் பண்டாரவெல பிரதேச செயளாலர் அலுவலகம் ஒப்பந்தப் பெறுமதி ரூ. மில்லியன் 3.97 மற்றும் ரூ. மில்லியன் 3.64 பெறுமதிவாய்ந்த 02 செயற்திட்டங்கள் மதிப்பீட்டாண்டில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

- பண்டாரகம பிரதேச செயளாலர் அலுவலகத்துக்கு உட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பணியாற்றும் கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்தி உத்தியோகத்தர்கள், மற்றும் விவசாய பரிசோதனை மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கு வசதிகளுடன் கூடிய அலுவகங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 2015 மற்றும் 2016 ஆகிய வருடங்களில் ரூ. மில்லியன் 10.75 செலவில் ஆரம்பிக்கப் பட்டிருந்த 4 பல்நோக்குக் கட்டிடங்கள், 5 சேவை நிலையங்கள், உத்தியோகபூர்வ இல்லம் ஒன்றுடன் கூடிய கட்டிடங்களின் பணிகள் பூர்த்தியாக முடிவுறாது இடைநடுவில் நிறுத்தப் பட்டிருந்தது.

- களுத்துறை பிரதேச செயளாலர் அலுவலகத்துகான புதிய நான்கு மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் ரூ. மில்லியன் 108.48 க்கு 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் அதன் பணிகள் முடிவுறுத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும் பணிகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மொத்தப் பணிகளில் நூற்றுக்கு 22.5 வீதம் மாத்திரமே முடிக்கப்பட்டிருந்தது என்பதுடன் அதற்காக ரூ. மில்லியன் 42.90 செலவளிக்கப் பட்டிருந்தது.

- கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி, பிரதேச செயளாலர் அலுவலகத்தின் தேசிய நீர் விநியோக செயற்திட்டத்துக்கான காணியைக் கொள்வனவு செய்வதற்கு கடந்த 4 வருட காலம் தொட்டு மதிப்பீட்டாண்டு வரையான காலப் பகுதியில் ரூ. மில்லியன் 2.15 பெற்றுக் கொடுக்கப் பட்டிருந்தது. அச் செயற்பாடுகள் மதிப்பீட்டாண்டு முடிவுவரை மேற்கொள்ளாது கிடைத்த பணங்களை சேமிப்புக் கணக்குகளில் சேமித்து வைத்திருந்தனர்.
- ஒகேவெல பிரதேச செயளாலர் அலுவலகத்தின் கட்டிடம் திட்டமிடப் படும்போதும் அலுவலகக் கட்டிடம் திட்டமிடப்படும் போதும் பொறியியளாலர் மதிப்பீடு தயாரிக்கப் படும்போது நிலம் மற்றும் சேவை பெறுநரின் தேவைப்பாடு கவனத்தில் எடுக்கப் பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக கட்டிடம் நிர்மாணிக்கப்படும் போது கட்டிட திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்ததுடன், மேலதிகப் பணிகள் என 72 அலகுகளுக்கு ரூ. மில்லியன் 5.40 செலுத்தப் பட்டிருந்தது. மேலும், முதலாம் ஒப்பந்ததாரர் போலியான ஆவணங்கள் சமர்ப்பித்திருந்ததன் பேரில் அவ் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு இரண்டாம் விலை மனுதாரருக்கு ஒப்படைத்தன் பேரில் ரூ. மில்லியன் 3.68 மேலதிகமாக செலவு செய்யப்பட்டிருந்தது.

- ஹோமாகம பிரதேச செயளாலர் அலுவலகத்தின் கட்டிடம் நிர்மாணிப்பதன் பேரில் ரூ. மில்லியன் 188 நிதி ஒதுக்கம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அலுவலகக் கட்டிட நிர்மாணம் 2017 ஆம் வருடம் இடைநடுவில் நிறுத்தப் பட்டிருந்ததுடன், மதிப்பீட்டாண்டின் இறுதிவரை மீண்டும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை.

## சொத்துக்களின் குறைவான உபயோகம்

- பாணந்துறை பிரதேச செயளாலர் அலுவலகத்தின் கொரகான விளையாட்டு மைதான அபிவிருத்திக்காக 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டுவரை ரூ. மில்லியன் 7.52 செலவிடப்படடிருந்தது. அவ் விளையாட்டு மைதானம் பாவனைக்கு எடுக்கத் தக்க விதத்தில் தயார்படுத்தப் பட்டிருக்கவில்லை என்பதுடன் பராமரிப்பு நடவடிக்கைகள் உரிய முறையில் செய்யப் பட்டிருக்கவில்லை. மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் அழிவுறுகின்றது.

- பாணந்துறை பிரதேச செயளாலர் பிரிவிலும் பண்டாரகம பிரதேச செயளாலர் பிரிவிலும் சேவையாற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் 2014-2016 க்கும் இடைப்பட்ட வருடங்களில் ரூ. மில்லியன் 19.09 செலவில் நிர்மாணிக்கப் பட்ட பல்நோக்கு கட்டிடங்கள் 9 மற்றும் சேவை நிலையமொன்று 2020 ஜூன் 10 ஆம் திகதிவரை பாவனைக்கு எடுக்கப் பட்டிருக்க வில்லை.

- மன்னார் மாவட்டச் செயலகம் நல்லெண்ணெய் உற்பத்தி இயந்திரத்தை 2018 ஆம் ஆண்டு ரூபா 4,978,350 க்கு கொள்வனவு செய்துள்ளது. மதிப்பீட்டாண்டின் இறுதிவரை நல்லெண்ணெய் உற்பத்திக்குரிய இயந்திரத்தை பாவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

- 2019 ஆம் ஆண்டில் மீள் குடியேற்ற, புணர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இந்துக் கலாச்சார அமைச்சின் நிதி ஒதுக்கத்தின் கீழ் மாவட்டச் செயலகத்தால் மடு பிரதேசத்தில் பழச்சாறு உற்பத்தி செய்யும் நோக்கில் ரூ. மில்லியன் 15.95 பெறுமதிவாய்ந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட மடு கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைத்திருந்தது. அவ் இயந்திரம் குறித்த நோக்கத்துக்கு பாவிக்கப்படாமல் ஒரு வருடத்துக்கும் அதிகமான காலம்தொட்டு செயற்படுத்தப் படாமல் இருக்கிறது.

- மன்னார் மாவட்டத்தில் 03 பிரதேச அலுவலகங்களில் 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் அரச நிதியில் நிர்மாணிக்கப்பட்ட ரூ. மில்லியன் 151.60 பெறுமதிவாய்ந்த 208 வீடுகள் பாவனைக்கு எடுக்கப் படாமல் இருந்தது. வீடுகளை பொறுப்பேற்றவர்கள் அவற்றைப் பராமரிக்காத காரணத்தாலும் பொருத்தமற்ற இடம் தெரிவுசெய்யப் பட்டமையாலும் 05 வருடத்துக்கும் அதிகமான காலம் தொட்டு அவ் வீடுகள் பாதிப்படைந்துள்ளன.

- மாந்தாய் வடக்கு பிரதேச செயலகம் 2018 ஆம் ஆண்டில் நீண்ட காலமாக இடம்பெயர்ந்த சிங்கள முஸ்லிம் மக்களுக்காக அடிப்படை வசதிகள் செயற்திட்டத்தின் கீழ் ரூ. மில்லியன் 2.00 க்கான மதிப்பீட்டின் பேரில் பிரதேச அலுவலகத்துக்கு உரிமையில்லாத காணி ஒன்றில் முன்பள்ளி கட்டிடமொன்றை கட்டுவதற்கு ரூ. மில்லியன் 1.98 ஐ செலவு செய்திருந்தது. 2018 டிசம்பர் மாதம் அக் கட்டிடத்தின் பணிகள் நிறைவடைந்திருந்த போதிலும், அது பாவனைக்கு எடுக்கப் பட்டிருக்கவில்லை. மதிப்பீட்டாண்டின் இறுதிலும் காணியின் உடமையை உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எதையும் எடுத்திருக்கவில்லை.

- 2017 ஆம் ஆண்டில் ஹிக்கடுவ பிரதேச செயலகத்துக்குரிய 02 உப அலுவலகங்கள் ரத்கம மற்றும் மாதம்பாகம வாடகை கட்டிடமொன்றில் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. 2019 ஜூன் மாதம் அளவில் உப அலுவலகங்கள் இரண்டினதும் பராமரிப்பு வேலைகளுக்கு ரூ. மில்லியன் 8.33 செலவளிக்கப் பட்டிருந்தது. எவ்வாறெனினும், அவ் உப அலுவலகங்களால் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சத்துணவு முத்திரை வழங்குதல் மற்றும் கிராம அலுவலர் சான்றுப் பத்திரம் வழங்குதல் ஆகிய கருமங்கள் மாத்திரமே நடைபெற்று வந்துள்ளது.

- பொறியியலாளரின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. மில்லியன் 4.88 க்கான அனுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் சைக்கிள் தரிப்பிட புணர்நிர்மாணத்துக்கான பெறுகை போட்டி யான விலைமனுக் கோரல் இன்றி ரூ.

மில்லியன் 4.64 பெறுமதிக்கு ஒப்பந்தம் கையளிக்கப் பட்டிருந்தது.

### நட்டங்களும் பாதிப்புகளும்

- காலி மாவட்டச் செயலக உத்தியோகபூர்வ இல்லப் பாதுகாப்புக்கு கேபியன் கற்சுவர் சரியான தரநிர்ணயத்தக்கு அமைய நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக 2019 ஒக்டோபர் மாதம் 02 தினங்களில் கற்சுவர் பாதிப்புக்குள்ளானதன் காரணமாக ரூ. மில்லியன் 7.69 க்கான நட்டம் ஏற்பட்டிருந்தது.

- அம்பலன்தொட்ட பிரதேச செயலகப் பிரிவின் லயன்கஸ்தொட்ட பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படும் கருங்கல் வேலைத்தளம் 2017 ஒக்டோபர் மாதத்திலிருந்து 2019 ஒக்டோபர் மாதம்வரை 26,244 கிலோ கிராம் வெடிமருந்து விநியோகிக்கப் பட்டிருந்தது. அவ்வாறெனினும் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியக உத்தியோகத்தர்கள் 2019 ஒக்டோபர் மாதம் மேற்கொண்ட கள ஆய்வு அறிக்கையின் படி அகழ்தெடுக்கப்பட்ட மொத்த கருங்கல் பரும அளவு கனசதுரம் 12,656 ஆக இருந்ததுடன் அதற்கு செலவாகும் ஆகக் குறைந்த வெடி மருந்தின் அளவு 6328 கிலோ கிராம் ஆகவிருந்து. அதன்படி மிகுதி 19,916 கிலோ கிராம் வெடி மருந்து அதாவது விநியோகிக்கப்பட்ட அளவின் நூற்றுக்கு 76 வீதம் மேலதிக வெடிமருந்து பாவிக்கப்பட்டு செய்யப்பட்ட கருமங்கள் வெளிப்படவில்லை.

- ஒகேவெல பிரதேச செயலாளர் பிரிவில் நடாத்தப்பட்டு வந்த கருங்கல் வேலைத்தளம், 240 ஆம் இலக்கமுடைய கடைசிக் கிராம நிலவரைபடத்தில் தனது தனிப்பட்ட எல்லையைத் தாண்டி அரச காணி எல்லையில் 0.6227 ஹெக்டேயர் நிலத்தில் அகழ்வு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு அனுமதியின்றி அகழ்ந்தெடுக்கப்பட்ட 10,911 கியுப் கருங்கலுக்கு சுற்றறிக்கையின் படி பிரதேச செயலாளர் அலுவலகம் அரச கட்டணங்களை அறவிட்டிருக்கவில்லை.

# சமூக அபிவிருத்தி

வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும், நிறுவனத்தின் சேவை வலையமைப்பு மற்றும் தொழிற்தகைமையாளர் ஊடாக பிரபலமானதும், செயற்திறனுமான வேகத்துடன் ஆக்கபூர்வமாக மக்களுக்கு சாதகமான சமூக மற்றும் பொருளாதார ரீதியான சேவைகளை வழங்கும் வகையில் உள்நாட்டு மற்றும் உலகலாவிய முகவராண்மை நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து வடிவமைக்கப்பட்ட முறைமையின் ஊடான கொள்கைகள், தந்திரோபாயங்கள் என்பவற்றை வழங்கி அமுல்படுத்துதல் மற்றும் பெறுபேறுகளை உருவாக்குதல் மற்றும் அந்த பெறுபேறுகளை கைப்பற்றுதல் போன்ற சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தேசிய ரீதியில் அமுல்படுத்துதல் இந்த பிரிவின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களாக இருந்தன.

அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற 03 திணைக்களங்கள் மற்றும் 04 நியதிச் சட்ட நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- ஆரம்ப கைத்தெழில் சமூகத்தை வலுப்படுத்தும் விடயங்களுக்குரிய கொள்கை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல், பெறுமதிகளை ஒன்று சேர்த்தல், ஏற்றுமதி சந்தை சந்தர்ப்பங்களை அதிகரித்தல் மற்றும் கைத்தொழில் பாதுகாப்பினை ஏற்படுத்திக் கொண்டு விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் மற்றும் சிறிய அளவிலான விவசாய தொழில் முயற்சியாளர்களுக்கும் உலகலாவிய பொருளாதாரத்துடன் தொடர்புபடுத்துவதற்கான உபாய வழிகளை வழங்குதல்.

- பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தினை உள்ளடக்கி நிலைபேறான வளப்பயன்பாடு மற்றும் உயிரியல் பாதுகாப்பு போன்றவற்றை மேம்படுத்துதல்.

- கமநல அபிவிருத்தி வலயங்கள் மற்றும் மீனவ ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்களுக்கான வசதிகளை வழங்குதல்.

- முதியோர்களை கண்காணித்தல் மற்றும் பாதுகாத்தல்.

- விஷேட தேவைகளையுடைய நபர்களின் பலவீனங்களை இனங்காணல் மற்றும் புனர்வாவாழ்வு நடவடிக்கைகளைச் செய்தல்.

- சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் கிராமிய மற்றும் பிரதேச பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்.

- பொது மக்கள் உதவி முன்மொழிவுத்திட்டத்தை மீளாய்வு செய்தல், மீள ஒழுங்கமைத்தல் மற்றும் பொருத்தமான புதிய மீளமைப்புக்களை அறிமுகப்படுத்துதல்.

- காச நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள், வெண்குஸ்ட நோயாளிகள், புற்று நோய் மற்றும் இரத்தச்சோகை நோயாளிகள் மற்றும் அவர்களில் தங்கி வாழ்பவர்களுக்கு நிதி உதவிகளை வழங்குதல்.

- ஆலோசனைச் சேவைகளை அமுல்படுத்துதல்.

- ஊனமுற்ற நபர்களுக்காக தொழில் பயிற்சிளை வழங்குதல் மற்றும் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதற்கு தேவையான உபாய வழிகளை வழங்குதல்.

- சமூக பாதுகாப்பு மற்றும் காப்புறுதி திட்டங்களை அமுல்படுத்துதல்.

மேற்குறிப்பிட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் முதல் 2019 ஆம் ஆண்டு வரை பாராளுமன்றத்தினால் கூட்டுமொத்தமாக ரூபா 228,020.02 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 209,884.51 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 7.95 சதவீதம் அதாவது, ரூபா 18,135.51 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரம் வரைபடம் 68 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




வரைபடம் 68 - பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் பயன்பாடு

மூலம்.:- பொதுத் தறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்று

மேலே கூறப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## சமுர்த்தி நிதி உதவி செயற்திட்டம்

2018 ஆம் ஆண்டின் போது நாடு முழுவதும் பரந்து காணப்படுகின்ற திவிநெகும மற்றும் சமுர்த்தி நிதி உதவி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 1,384,021 ஆக இருந்த போதும், மீளாய்வாண்டின் போது அந்த அளவு 416,161 இனால் அதாவது, 30.06 சதவீதத்தினால் அதிகரித்து 1,800,182 குடும்பங்களாக காணப்பட்டது. ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் 1.1 இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் 2030 வரையில் சகல பிரதேசங்களிலும் இருக்கின்ற மிகவும் வறுமையில் வாடுகின்ற சகல மக்களினதும் வறுமையை நீக்க வேண்டியிருந்த போதிலும், 2015 இல் இலங்கையின் சமுர்த்தி நலன் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 1,453,078 ஆக இருந்தும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையில் குடும்பங்களின் எண்ணிக்கை 1,800,182 வரை அதிகரித்துக் காணப்பட்டது. அவ்வாறே 2015 ஆம் ஆண்டின் போது போசணை படிகள் பெற்ற நலனாளிகளின் எண்ணிக்கை 101,200 ஆக இருந்த போதும், அது 2019 ஆம் ஆண்டு வரையில் 300,246 வரை அதிகரித்திருந்தது. விபரம் வரைபடம் 69 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




வரைபடம் 69 சமுர்த்தி நிதி உதவி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை
மூலம்.:- இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2019

## குறைந்த வருமானம்பெறும் 70 வயதிற்கு மேற்பட்ட பிரஜைகளுக்கான படி வழங்குதல்.

தேசிய முதியோர் செயலகத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ரூபா 3,000 தொகையினை விட குறைவான வருமானம் பெறுகின்ற முதியோர்களில் ஒரு நபருக்கு ரூபா 2,000 வீதம் மாதாந்த படியொன்று செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 10,000 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 416,667 முதியோர்களுக்கு ரூபா 9,855.5 மில்லியன் நலன்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன், மேலும் காத்திருக்கும் பதிவேட்டில் இருக்கின்ற 157,720 முதியோர்களுக்கு நலன்களை செலுத்துவதற்கு முடியாதிருந்தது. 2016 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த படியை ரூபா 100 இற்கு குறைக்கப்பட்டு பிரதேச செயலகங்களின் மூலம் முதியோர் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 502.8 மில்லியன் தொகை அந்த நிதியத்திலிருந்து கட்டியெழுப்பப்பட்ட முதியோர் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிதியத்தின் மீதி ரூபா 1.93 பில்லியன் ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது அந்த நிதியத்திலிருந்து முதியோர் சமூகத்திற்கான 14 பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 1.1404.8 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக ரூபா 297.2 மில்லியன் அதாவது 21 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

## ஊனமுற்றோர் படி செலுத்துதல்

2019 மே மாதம் முதல் ரூபா 2,000 தொகையான ஊனமுற்றோர் படி ரூபா 5,000 வரை அதிகரிக்கப்பட்டதுடன், 72,000 ஊனமுற்ற நபர்களுக்கு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2019 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 4,320 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், முதலாவது 04 மாதங்களின் போது ரூபா 3,000 வீதமும், அடுத்த 08 மாதங்களுக்காக ரூபா 5,000 வீதமும் 72,000 ஊனமுற்ற நபர்களுக்கு படிகள் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது இதற்காக ரூபா 2,810 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 35 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## ஊனமுற்ற நபர்களுக்கு கட்டிடங்களுக்குள் உள்நுழைவதற்கான நுழைவு வசதிகளை வழங்குதல்.

2016 இன் 01 ஆம் இலக்க ஊனமுற்ற நபர்களுக்காக நுழைவு கட்டளையின் கீழ் ஊனமுற்ற நபர்களுக்கு கட்டிடங்களுக்குள் உள்நுழைவதற்கான நுழைவு வசதிகளை வழங்குவதற்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் நுழைவு வசதிகளை பூர்த்தி செய்வதற்குரிய பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை

நடவடிக்கைகள் ஊனமுற்ற நபர்களுக்கான சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. தேசிய ஊனமுற்றோர் செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதிவியணியினரை உள்ளடக்கிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆட்சேர்க்கப்படாமையினால் அந்த பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

### பயனற்று காணப்பட்ட காணி

முதியோர் இல்லங்களை நிர்மாணிப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது நன்கொடை உரித்துறுதி மூலம் ரூபா 13 மில்லியன் பெறுமதியான காணியொன்றும், ரூபா 3.2 மில்லியன் பெறுமதியான இன்னுமொரு காணியொன்றும் முதியோர்களுக்கான தேசிய சபைக்கு கிடைத்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த காணிகளில் முதியோர் இல்லங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அந்த காணிகள் பயனற்று காணப்பட்டது.

### முதியோர்களுக்கான தேசிய கொள்கை

நாட்டில் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் போது முதியோர் கொள்கையொன்று எழுந்ததன் பிரகாரம் மோசமான சவால்கள் ஏற்படாத வகையில் எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டின் போது முதியோர் செயலகத்தினால் இலங்கையில் முதியோர்களுக்காக தேசிய கொள்கையொன்றை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட அந்த கொள்கையை சமூகமயப்படுத்துவதற்காக ரூபா 5 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த சமூகமயப்படுத்தல் இடம் பெற்றிக்கவில்லை.

### இலங்கை சமூக பாதுகாப்பு சபைக்கு முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை கொள்வனவு செய்தல்.

சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முன்மொழிவு திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 12.51 மில்லியன் நிதி ஏற்பாடு இலங்கை சமூக பாதுகாப்பு சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த கணனி முறைமையைக் கொள்வனவு செய்தல் 04 வருடங்கள் அளவிலான காலம் தாமதிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு முதல் சபையில் காணப்பட்ட முகாமைத்துவ தகவல் முறைமையில் பிரச்சினையான நிலைமை காணப்பட்டமையின் காரணமாக குறித்த பங்களிப்பு பணத்தை செலுத்தி செயற்படு நிலையில் உள்ள மற்றும் செயற்பாடற்ற பங்களிப்பாளர்களை இனங்காண்பதற்கு சபைக்கு முடியாதிருந்தது.

### சட்டத்தின் ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படாமை

1999 இன் 33 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை (திருத்தப்பட்ட) சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சபையினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிகள் நிறைவேற்றப்பட்டிக்கவில்லை.

- சுய தொழில்களில் ஈடுபடுகின்ற நபர்களை ஊக்குவித்தல்.
- அவர்களின் இயலுமை மற்றும் திறன்களை அபிவிருத்தி செய்தல்.
- சுய தொழில்களில் ஈடுபடுவதற்கு இளைஞர்களை ஊக்கவிப்பதற்கும் முடியுமான வகையில் திறன்களை அபிவிருத்தி செய்தல்.
- சிக்கனம் மற்றும் வள முகாமைத்துவத்தின் நலன்கள் தொடர்பாக சுய தொழில்களில் ஈடுபடுவர்களுக்கு அறிவுறுத்தல்.
- சுய தொழில்களில் ஈடுபடும் நபர்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்தல்.

### கிராம அபிவிருத்தி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் விடுதிகளை நடாத்திச் செல்லுதல்

அமைச்சின் கீழ் பொரளையில் காணப்படுகின்ற கிராம அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனத்திற்குரிய 30 உத்தியோகத்தர்களுக்கு வதிவிட பயிற்சி வசதிகளுடன் விடுதியினை மீளமைக்கம் நடவடிக்கைகளுக்காக 2018 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த மீளமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் பயிற்சி நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்கு முடியாமல் காணப்பட்டது. மேலும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது விடுதிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3.38 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் களஞ்சியத்தில் பயனற்றுக் காணப்பட்டது.

## வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டம்

வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் சமூர்த்தி நலனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வலுப்படுத்தும் நோக்காகக் கொண்டு 09 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சமூர்த்தி நலனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் அங்கத்தவர்களின் பொருளாதார மற்றும் சமூக மட்டங்களை உயர்வடையச் செய்தல், சுகாதார மற்றும் போசணை மட்டங்களை உயர்த்துதல், தொழில் பயிற்சி வழங்குதல், சட்ட நடவடிக்கைகளுக்காக உதவுதல், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்தல் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தியை ஏற்படுத்துதல் என்பன செய்யவேண்டியிருந்தது. அந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ரூபா 504.85 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

திட்டமிடப்பட்ட 02 பிரதான பணிகள் மற்றும் 7,938 செயற்திட்டங்கள் என்பவற்றை அமுல்படுத்துவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 199.78 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பணிகள் மற்றும் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## நிலுவை ஊழியர் கடன்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திற்கு இணைக்கப்பட்ட, 02 திணைக்களங்களுக்கு இடம் மாற்றலாகிச் சென்ற, மரணமடைந்த, வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையிலிருந்து விலக்கப்பட்ட 204 உத்தியோகத்தர்களிடமிருந்து 03 மாதங்கள் முதல் 05 வருடங்கள் வரையான கால வீச்சில் இருந்து அறவிடுதல் நிலுவையாகக் காணப்படுகின்ற கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3.98 மில்லியனாக இருந்தது. மேலும் திணைக்களத்திற்கு இணைந்துள்ள 03 அதிகார சபைகளின் ஊழியர்களின் கடன்களை உள்ளடக்கி ஊழியர் கடன் சுழற்சி நிதியத்திற்கு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கடன் மீதி ரூபா 130.16 மில்லியனாக இருந்தது. அதிகார சபைகளிலிருந்து திணைக்களத்திற்கு வந்த உத்தியோகத்தர்கள் இந்த நிதியத்திலிருந்து கடன்களைப் பெற்றிருந்த போதும், அதற்காக திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும், 2014 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் கடன் சுழற்சி நிதியத்தில் கிடைக்க வேண்டிய கடன் மீதி மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

## காத்திருத்தல் தொடர்ஒழுங்கிற்கு முரணாக சமூர்த்தி நிதி உதவி வழங்குதல்.

21 மாவட்டங்களில் காத்திருத்தல் பட்டியல்களில் உள்ளடக்கப்பட்ட 589,472 குடும்பங்களில் 135,106 குடும்பங்களுக்கு சமூர்த்தி நிதி உதவி வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கம்பஹா மாவட்டத்தின் பிரதேச செயலகங்களில் காத்திருத்தல் பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 43,853 குடும்பங்களில் காத்திருத்தல் தொடர் ஒழுங்கிற்கு முரணாக தெரிவுசெய்யப்பட்ட 33,398 குடும்பங்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

# சமூக நிவாரணம்

"நோக்கம் நிர்ணயிக்கப்பட்ட சமூக உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஆற்றல் மிக்கவர்களாக அவர்களை மாற்றுவதன் ஊடாக சமூக ஒருங்கிணைப்பை நோக்கி நிறுவனங்கிடையிலான ஒருங்கிணைப்பையும் தொழில்முறை சார்ந்த தலையீடுகள் ஊடாக புத்தாக்கங்களை உருவாக்க வழியமைப்பதன் மூலம் வேகமாகவும், செயற்திறனாகவும், பெறுபேற்றுடனான ஆய்வுகளை நடாத்துதல், கொள்கைத் தயாரிப்பு மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றை அடைந்துகொள்ளல்" இப் பிரிவு சார்ந்த நோக்கங்களாகும். இந் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு ஆரம்ப மட்டக் கைத்தொழில், சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் ஒரு திணைக்களம் மற்றும் 04 கூட்டுத்தாபனங்கள் மூலம் பின்வரும் பணிகள் நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும்.

- முதியோர்களைப் பராமரித்தலும் பாதுகாத்தலும்
- விசேட தேவையுடைய நபர்களின் பலவீனங்களைக் கண்டறிந்து புணர்வாழ்வளித்தல்
- பொதுமக்கள் உதவித் திட்டத்தை மீளாய்வு செய்தல், மீள் ஒழுங்கமைத்தல், மற்றும் பொருத்தமான புதிய மீள்சுழற்சிகளை அறிமுகப்படுத்தல்.
- காசநோயாளர்களுக்கும், சிறுநீரக நோயாளர்களுக்கும், தொழு நோயாளர்களுக்கும், புற்று நோயாளர்களுக்கும் மற்றும் தெலசீமியா நோயாளர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்போர்க்கும் உதவித் தொகை பெற்றுக் கொடுத்தல்.
- அறிவுறுத்தற் சேவைகளை நடைமுறைப்படுத்தல்.
- வலது குறைந்த நபர்களுக்கு தொழிற்பயிற்சி பெற்றுக் கொடுப்பதற்கும், தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்குத் தேவையான தந்திரோபாயங்களை வகுத்தல்.

மேற்குறித்த கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுமுகமாக பாராளுமன்றத்தால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான கால இடைவெளிக்கு ரூ. மில்லியன் 2,371.46 நிதி ஏற்பாடு செய்யப் பட்டிருந்ததுடன் அதில் ரூ. மில்லியன் 2,008.64 பயன்படுத்தப் பட்டிருந்தது. அதன்படி அக் காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 15.30 வீதம் அதாவது ரூ. மில்லியன் 362.82 நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப் பட்டிருக்க வில்லை. விபரம் உரு 70 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 70 - பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடு மற்றும் பயன்பாடு
மூலம் - திறைசேரியின் இறுதிக் கணக்கறிக்கை

## கொட்டாவ சிறுவர் வழிகாட்டல் நிலையத்தை அமைத்தல்

மதிப்பிடப்பட்ட கிரயம் ரூ. மில்லியன் 48.9 ஆன சமூக சேவை திணைக்களத்துக்குரிய கொட்டாவ சிறுவர் வழிகாட்டல் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2017 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப் படுவதற்கு திட்மிடப் பட்டிருந்தது. எவ்வாறெனினும், செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு கால தாமதமாகியதன் காரணமாக 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று வரை நிர்மாணப் பணிகள் முடிக்கப்படவில்லை. அத்திகதியது வரை நிர்மாணப் பணிகளுக்கு ரூ. மில்லியன் 43.06 செலவளிக்கப் பட்டிருந்ததெனினும் செயற்திட்டம் முடிவுறுத்தப் படாமையால் தொழிற் பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்க முடியாமல் இருந்தது.

## மட்டக்களப்பு தொழிற் பயிற்சி நிலையத்தை அமைத்தல்

மட்டக்களப்பு தொழிற்பயிற்சி நிலையத்தை அமைக்கும் பணி 2016 ஆம் வருடம் துவங்கப்பட்டு 2017 ஆம் வருடம் முடிக்கப்படுவதற்கு திட்மிடப் பட்டிருந்தது. அதன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூ. மில்லியன் 100 ஆகவிருந்தது. 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரை குறித்த நிர்மாணப் பணிகளுக்கு 04 வருடங்கள் கடந்திருந்த நிலையில் ரூ. மில்லியன் 97.43 செலவிடப் பட்டிருந்தது. திட்டத்தின் படி மதிப்பீட்டாண்டில் போதனாசிரியர்கள் நியமிக்கப்பட்டு குறித்த பாடநெறிகள் ஆரம்பிக்கப் படுவதற்கு எதிர்பார்க்கப் பட்டிருந்த போதிலும், நிர்மாணப் பணிகள் நிறைவடையாத காரணத்தால் பயிற்சி நடவடிக்கைகள் மதிப்பீட்டாண்டின் முடிவிலும் ஆரம்பிக்க முடியாதிருந்தது.

## கிளிநொச்சி தொழிற் பயிற்சி நிலையத்தை அமைத்தல்

வட மாகாண இளைஞர் சமூகத்தின் பொருளாதார அபிவிருத்திக்காக தொழிற்பயிற்சி நிலையமொன்றை கிளிநொச்சியில் நிறுவுவதற்கு 2017 ஆம் ஆண்டில் திட்மிடப் பட்டிருந்தது. அதன் முதலாம் கட்ட வேலைகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூ. மில்லியன் 90.43 ஆகவிருந்தது. 2018 ஒக்டோபர் மாதம் இவ் ஒப்பந்தத்தின் முதலாம் படிமுறையின் கீழ் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதி மற்றும் வகுப்பறைகள் கட்டி முடிக்கப் பட்டிருந்தன. எவ்வாறெனினும் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகளின் சமையலறைகள் மற்றும் உணவகம் அமைக்கும் பணி இரண்டாம் கட்ட பணிகளில் உள்ளடக்கப் பட்டிருந்ததன் காரணமாக மாணவர்களை உள்ளீர்த்து பயிற்சி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது.

## பயிலுநர்களுக்கு கருவித் தொகுதிகளை பெற்றுக் கொடுத்தல்

வலது குறைந்தோர்க்கு நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிழச்சித் திட்டங்களின் கீழ் முறையாக தொழிற்பயிற்சியை நிறைவு செய்த பயிலுநர்களுக்கு கருவித் தொகுதிகள் மற்றும் தையல் இயந்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு மதிப்பீட்டாண்டில், ரூ. மில்லியன் 3.19 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மதிப்பீட்டாண்டில் 13 பாட நெறிகளின் பயிற்சி நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு பரீட்சையில் சித்தியடைந்த 169 பயிலுநர்கள் அனைவரும் இக் கருவித் தொகுதி மற்றும் தையல் இயந்திரம் பெற்றுக்கொள்ள தகுதி பெற்றிருந்தனர். அவ்வாறெனினும் 2019 ஆம் வருடத்தில் கருவித் தொகுதிகள் எதுவும் பெற்றுக் கொடுத்திருக்க வில்லை என்பதுடன் 2020 செப்தெம்பர் மாதமளவில் 02 பாட நெறிகளின் 10 பயிலுநர்களுக்காக வேண்டி மாத்திரம் ரூ. 174,439 பெறுமதிவாய்ந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன்படி உபகரணத் தொகுதி கையளிக்கப் படுவது தாமத நிலையில் இருந்தது.

## ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் உதவிச் செயற்திட்டம்

மாகாண சபைகளால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் சிறுவர் நிகழச்சித் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்வதற்கு ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் உதவிகளின் கீழ் மாகாண சபைகள் மற்றும் மாகாணசபை அமைச்சுகளின் செலவுத் தலைப்புகளின் கீழ் 2019 ஆம் ஆண்டுக்காக ரூ. மில்லியன் 50 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களின் வேண்டுகோள்களுக்கு அமைய அம் மாகாண சபைகளால் சிறுவர் பாதுகாப்புப் பணிகள், கல்வி நிகழ்ச்சிகள், மற்றும் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப் படுவதற்கு ரூ. மில்லியன் 35.93 க்கான நிதி அமைச்சின் செலவுத்தலைப்பின் கீழ் திறைசேரியினால் விடுவிக்கப் பட்டிருந்தது. அதன்படி இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கத்தின் நூற்று வீதமாக 28 வீதம் அதாவது ரூ. மில்லியன் 14.07 நிதி ஒதுக்கம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

# சமூக பாதுகாப்பு

சிறுவர்களினதும் மகளிரினதும் உரிமைகள் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற நல்லெண்ணமுள்ள சிறந்த சமூகமொன்றை கட்டியெழுப்பும் எதிர்பார்ப்புடன் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சு, இரண்டு திணைக்களங்கள் மற்றும் நிதியச் சட்ட அதிகார சபையொன்றின் கீழ் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் உருவாக்கம், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு.
- அரச அலுவல்களின் போது தீர்மானமெடுத்தல் மற்றும் அரசியல் துறைகளில் பெண்களின் பங்குபற்றல் மற்றும் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்களைத் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்தல்.
- பிரச்சனைகளுக்கும் வறுமைக்கும் உட்பட்டுள்ள பெண் தலைமைத்துவ வீட்டுக் குழுக்களை விசேட நோக்கமாகக் கொண்டு பெண்களை வலுப்படுத்துவதற்கு தேவையான வழிமுறைகளை எடுத்தல் மற்றும் ஆண், பெண் சமத்துவத்தினையும் நியாயத் தன்மையிமையும் ஏற்படுத்தல்.
- பெண்கள் மற்றும் சிறுவர் துன்புறுத்தல்ளை தடுப்பதற்கான சட்டம் மற்றும் கொள்கைகளை வலுப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல்.
- சிறுவர் அலுவல்களுக்குரிய துரித அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றும் கொள்கைகளை அமுல்படுத்தல்.
- மகளிர் மற்றும் சிறுவர் விஞ்ஞாபனங்களை நிறைவேற்றல்.
- உடலியல் ரீதியான மற்றும் மனோ ரீதியான ஆரோக்கியமான பிள்ளையொன்றை தோற்றுவிக்கும் அபிலாஷையில் முன்பள்ளி சிறுவர் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்ற பிள்ளைகளுக்காக தேசிய கொள்கை மற்றும் சர்வதேச அங்கீகாரத்துடன் பொருந்துகின்ற திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்தல்.
- “செவன சறன கெபகறு மவ்பிய” உத்தேச திட்டத்தை அமுல்படுத்தல்.

அவ்வாறே அரச சேவை ஓய்வூதியக்காரர்கள் மற்றும் அவர்களின் பயனாளிகளுக்காக தகவல் தொழிநுட்பம் மற்றும் நிலைபேறான முகாமைத்துவ முறைமைகளை பயன்படுத்துவதன் மூலமும், தனியார் மற்றும் அரசதுறை இடைமுகத்துடன் அவர்களில் உயர் சேவை பெறுனர் மற்றும் சேவை வழங்குனர்களின் திருப்தியை உறுதிபடுத்துவதனூடாக சட்டரீதியான சலுகைகளை வழங்குவதன் மூலம் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக திருப்திகரமான ஓய்வூதிய சமூகமொன்றினை உருவாக்குவதற்காக 1934 பெப்ரவரி 05 ஆம் திகதி நிருவப்பட்ட ஓய்வூதிய சட்ட விதிக்கோவையின் கீழ் ஓய்வூதியக் கொடுப்பனவும், 1898 இன் 01 ஆம் இலக்க விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதிய கட்டளை சட்டம் மற்றும் 1983 இன் 24 ஆம் இலக்க விதவைகள் தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய சட்டத்தின் கீழ் விதவைகள் தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவும் 1942 இன் 18 ஆம் இலக்க கட்டளை சட்டம் பிரகாரம் அரச சேவைகள் சேமலாப நிதிய முகாமைத்துவம் மற்றும் கொடுப்பனவு செயன்முறை ஒழுங்குப்படுத்தலும் இந்த பிரிவினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளாகும்.

மேற்குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக இந்த பிரிவிற்காக மீளாய்வாண்டில் மற்றும் கடந்த இரு ஆண்டுகளிலும் பாராளுமன்றத்தினால் ரூபா 742,064.59 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 733,531.00 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த காலகட்டத்திற்குள் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள் 1.15 சதவீதமான, அதாவது ரூபா 8,533.59 மில்லியன் ஆன நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. தகவல்கள் வரைப்படம் 71 மூலம் காட்டப்படுகின்றது.




வரைப்படம் 71 – பாராளுமன்றத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாடு மற்றும் பயன்பாடு
மூலம் - திறைச்சேரியின் இறுதி கணக்கு அறிக்கை

மேற்குறிப்பிட்ட பணிகள் நிறைவேற்றப்படும் போது அடையாளப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### மகளிர் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல் தொடர்பாக கையாளுதல்

ஆதரவற்ற பெண்கள் மற்றும் சிறுவர்களுக்காக நலன்புரி மற்றும் மறுவாழ்வு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு பெற்றுக் கொடுத்தல் அமைச்சின் பிரதான பணியாக காணப்பட்டது. மீளாய்வாண்டில் அமைச்சின் பெண்கள் குழுவின் 1938 இலக்கமுடைய தொலைப்பேசிக்கு பெண்களுக்கு எதிரான பல்வேறு வகையாக வன்முறைகள் குறித்து 1,806 புகார்கள் கிடைக்கப் பெற்றிருந்தன. அவ்வாறே பத்திரிக்கைகளில் மகளிர் மற்றும் சிறுவர் துன்புறுத்தல், துஸ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பாக 1,664 செய்திகள் அறிக்கையிடப்பட்டிருந்தன. அந்த புகார்கள் மற்றும் செய்திகள் தொடர்பாக அமைச்சினால் எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### சிறுவர்களின் பாதுகாப்பினை உருவாக்குவதற்காக சிவில் சமூகத்தினை வலுப்படுத்தல்

அனைத்து வகையான துஷ்பிரயோகங்களிலிருந்தும் சிறுவர்கள் பாதுகாக்கப்பட்டு அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதற்காக வயது வந்தோர் சமூகத்தினை தெளிவிப்படுத்தல் மற்றும் அது தொடர்பாக சிவில் சமூகத்தினை வலுப்படுத்தல் நோக்குடன் சிவில் சமூக ஆர்வலர்களை அடையாளம் காணும் தீவு ரீதியான நிகழ்ச்சித்திட்டமொன்றாக 2018 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக “ஜன பவுர” நிகழ்ச்சித்திட்டம் கிராம மட்டத்தில் ஆரம்பிப்பதற்கு ரூபா 6.58 மில்லியன் ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த மொத்த நிதி ஏற்பாடுகளும் பயன்படுத்தப்பட்டு அநுராதபுர மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் அலுவலகங்களை தெளிவுப்படுத்தும் நிகழ்ச்சி திட்டங்கள் நடத்தப்பட்டு பிரதேச சிவில் சமூக ஆர்வலர்களை அடையாளப்படுத்தல் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### உலர் வலய அபிவிருத்தி செயற்திட்டம்

உலர் காலநிலை வலையத்தில் வாழ்கின்ற சமூகத்தின் சமூக - பொருளாதார மேம்பாட்டிடற்கான செயற்திட்டங்கள் செயற்படுத்தல், அவர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சனையான நிலமைகளை குறைத்தல் மற்றும் அந்த பகுதிகளினுள் காலநிலை தாக்கங்களினால் ஏற்படுகின்ற நிலைமைகளை தணிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தல் நோக்கில் உலர் வலய அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. உலர் வலயத்தினுள் காணப்படுகின்ற மாவட்டங்களில் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த மாவட்டங்கள்

தெரிவு செய்வதற்காக முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, உலர் வலயத்தின் மிகப்பெரிய மாவட்டமான அநுராதபுர மாவட்டத்தில் மட்டும் உலர் வலய அபிவிருத்திக்கு தொடர்புடைய செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது. 12 நபர்களை கொண்ட மேலதிக பணிநிலையொன்று செயற்திட்டத்திற்காக இணைக்கப்பட்டு மீளாய்வாண்டினுள் ரூபா 4.63 மில்லியன் ஆன சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 331 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருப்பினும், அதில் 67.37 மில்லியன், அதாவது 20 சதவீதம் நிதி ஏற்பாடு மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக சட்டம் இயற்றப்படாமை

1956 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களம் 64 வருடங்களை கடந்திருப்பினும், சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில் உலக விஞ்ஞாபனத்திற்கு ஏற்ப தேசிய கொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் அதற்கு தொடர்புடைய சட்டம் இயற்றப்படுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தவறியது.

### சிறுவர் இல்ல மறுவாழ்வாக்கம்

மீளாய்வாண்டில் சிறுவர் இல்ல மறுவாழ்வாக்கத்திற்காக ரூபா 3.50 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 3.25 மில்லியன் 10 சிறுவர் இல்லங்கள் மறுவாழ்வாக்கப்படுவதற்காக மாகாண நன்னடத்தை ஆணையாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்டிருந்த மறுவாழ்வு நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு முன்னராக பணம் அனுப்பப்பட்டமையினால் அந்த பணம் பொது வைப்பு கணக்குகனில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, திட்டமிடப்பட்டிருந்த பணிகள் பணம் பெறப்பட்ட பின்னர் மாற்றப்பட்டிருந்நதுடன், விலைகள் கோரப்படுவதற்கு முன்னர் பணம் அனுப்பப்பட்டிருந்ததுடன் பணிகள் அதற்கு குறைந்த செலவில் மேற்கொள்ளப்பட்டமையினால் அனுப்பப்பட்ட பணம் எஞ்சியிருந்தது. பணிகள் நிறைவேற்றலின் முன்னேற்றம் தொடர்பாக பின்னூட்டல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### புகார்களுக்கான தீர்வு வழங்குவதில் தாமதம்

2011 வருடத்திலிருந்து 2019 ஆம் வருடம் இறுதி வரையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிக்கையிடப்பட்டிருந்த 81,259 புகார்களில் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் 41,142 புகார்கள், அதாவது பெறப்பட்டிருந்த புகார்களில் 50 சதவீத அளவு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு ஆண்டும் அதிகாரசபைக்கு பெறப்படும் புகார்கள் தொடர்பான தகவல்கள் சேகரித்து அறிக்கையிடுவதற்கு பிரதேச மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்களின் செயற்திறனின்மை, தகவல்களை கோருதல் மற்றும் விசாரணை நடவடிக்கை தொடர்பாக பின்னூட்டல் மேற்கொள்ளப்படாமை மற்றும் முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்படாமை போன்றவையினால் தீர்க்கப்படாத புகார்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்திருந்தது. 1998 இன் 50 இலக்கமுடைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக தேசிய தரவு அடிப்படையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படவில்லை.

### தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கை சட்டமாக்கப்படாமை

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிருவப்பட்டு 20 வருடங்கள் கடந்திருந்த போதிலும், தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கை சட்டமாக்கப்படுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தவறப்பட்டிருந்தது.

### முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

இலங்கையில் உயர் பண்புடைய முன்பள்ளி சிறுவர் கட்டத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 50 மில்லியன் ஐ.அ.டொலரகள், உலக வங்கி கடன் நிதியின் கீழ் முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2019 வருடத்திற்காக செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்காக ரூபா 1,200 மில்லியன் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,186.78 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. 2019 ஆம் வருடத்தில் செயல் நடவடிக்கை திட்டத்திற்குள்

உள்ளடக்கப்பட்டிருந்த தோட்ட பிரிவின் 75 முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி மத்திய நிலையங்கள் கட்டுவித்தல், 03 முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி வள மத்திய நிலையங்கள் கட்டுவித்தல், 12 புதிய முன்பள்ளி சிறுவர் மத்திய நிலையங்கள் கட்டுத்தல் போன்ற பணிகளுக்காக ரூபா 254 மில்லியன் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருப்பினும், திட்டமிடப்பட்ட வண்ணமாக அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 1,700 முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி மத்திய நிலையங்களின் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 375 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருப்பினும், 2019 வருட இறுதியில் 92 முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி மத்திய நிலையங்களுக்கு மட்டும் நிதி ஏற்பாடு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன், அதில் 03 மத்திய நிலையங்கள் மட்டும் பணிகளை நிறைவு செய்திருந்தன.

### பொருளாதாரத்தில் அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்தின் தாக்கம்

2019 திசெம்பர் 31 திகதி இல் ஓய்வூதிய திணைக்களத்தினால் 639,984 செயற்பாட்டிலுள்ள ஓய்வூதியம் பெறுவோருக்கு பிரதிலாபங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் 2019 வருடத்தின் ஓய்வூதிய செலவீனமாக ரூபா 272,463 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அது அரசின் மொத்த நடைமுறை செலவின் 11.8 சதவீதமாக காணப்பட்டதுடன் அது மொத்த அரச வருமானத்தில் 11.6 சதவீதமாக காணப்பட்டது. மீளாய்வாண்டு உட்பட கடந்த 7 வருடங்களின் மொத்த ஓய்வூதிய செலவினத்தின் வளர்ச்சி வரைப்படம் 72 மூலம் காட்டப்படுகின்றது.




வரைப்படம் - 72 - ஓய்வூதியம் பெறுகின்ற ஓய்வு பெற்றவர்கள் எண்ணிக்கை மற்றும் ஓய்வூதிய செலினம்
மூலம் - ஓய்வூதிய தரவு முறைமை, நிதி நிலைமை கூற்று 2019

### நிதிய நிர்வாகம்

ஓய்வூதிய திணைக்களத்தினால் 05 ஓய்வூதிய நிதியங்கள் நிர்வகிக்கப்படுவதுடன் அதில் அரச சேவை சேமலாப நிதியம் மாத்திரம் செயற்படும் மட்டத்தில் காணப்பட்டது. 1993 ஆம் ஆண்டில் மாகாண அரச சேவை ஸ்தாபிக்கப்பட்டதுடன் மாகாண அரசாங்க அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ஓய்வூதியம் மற்றும் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நலன்கள் உரித்தாகிமையினால் 1993 செப்தெம்பர் 03 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டு வரை உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியம், உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம், உள்ளூராட்சி தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்காக புதிய அங்கத்தவர்கள் அதிகரிப்பொன்று இடம் பெற்றிருக்கவில்லை. அவ்வாறு புதிய அங்கத்துவ பணம் கிடைக்காததன் பேரில் கொடுப்பனவு செய்யப்பட போதியளவு பணம் நிதியங்களில் காணப்படாமை காரணமாக ஓய்வூதிய திணைக்கள செலவினத் தலைப்பின்

கீழ் நிதிஏற்பாடுகள் பெறப்பட்டு தேவையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய சட்டக் கட்டளையின் இலக்கம் 04 இன் பிரகாரம் ஆசிரியர் விதவைகள் அநாதை பங்களிப்புத் தொகை மூலம் ஆசிரியர் விதவைகள் அநாதை ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், பங்களிப்பு தொகையை சேகரித்தல் மற்றும் செலவினங்களை மேற்கொள்வதற்காக நிதியத்திற்காக வங்கி கணக்கொண்று பேணப்படாமல் இருந்ததுடன் பங்களிப்பு தொகை ஓய்வூதியத் திணைக்களத்தின் விதவைகள் அநாதைகள் பங்களிப்புத் தொகை வங்கி கணக்கிற்கு சேகரிக்கப்பட்டிருந்தது. ஓய்வூதியத் திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் பாதீட்டு நிதிஏற்பாடுகள் பெறப்பட்டு அதற்காக செலவிடப்பட்டிருந்தது.

### கொழும்பு மாநகர சபைக்கு தீயணைப்பு வாகங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கல்

கொழும்பு மாநகர சபைக்கு தீயணைப்பு வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ஆஸ்திரேலியா அரசிடமிருந்து கடன் தொகை பெற்றுக் கொள்ளப்படுவதற்கு 2018 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் அதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. 2019 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரை கடன் உடன்படிக்கையொன்றுக்கு உடன்படல் தாமதமாகி காணப்பட்டது. அந்த காரணத்தினால் 2019 ஆம் ஆண்டில் அந்த செயற்திட்டத்திற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு தவறிய காரணத்தினால் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிதிஏற்பாடும் எஞ்சியிருந்தது.

# நிதிச் சேவைகள்

இலங்கையின் பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக செயல்முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்காக அரச வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் அரசாங்க நிதிச் செயற்பாடுகளுக்கு உரித்தான கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை வழங்கி அமுல்படுத்துதல் மற்றும் மக்களின் விருப்புக்களுக்கு இசைவானதாக மையப்படுத்தப்பட்ட பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளில் பங்களிப்பினை வழங்குதல் இந்த பிரிவின் பணிப்பொறுப்பாகும்.

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 20 திணைக்களங்கள் மற்றும் 19 நியதிச்சட்ட நிறுவனங்களினால் மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்காக ரூபா 6,235,441.91 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 5,878,065.95 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 5.73 சதவீதம் அதாவது, ரூபா 357,375.96 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரம் வரைபடம் 73 இல் காண்பிக்கப்படுள்ளது.




வரைபடம் 73 - பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் அதன் பயன்பாடு.
மூலம் : பொது திறைசேரியின் இறுதி கணக்கு கூற்று

மேலே கூறப்பட்ட பணிப்பொறுப்புக்கள் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களினால் மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப் பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

### அரசாங்கத்தின் வருமானம்

- மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வருமான வரி மூலம் சேகரிக்கப்பட்டுள்ள வருமானம் ரூபா 428 பில்லியன் தொகை அதாவது, மொத்த வரி வருமானத்தில் 25 சதவீதமும், ஒட்டுமொத்த அரசாங்க வருமானத்தில் 22 சதவீமும் ஆக காணப்பட்டது. அது முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமான வரியுடன் ஒப்பிடும் போது 38 சதவீதம்

அதாவது, ரூபா 117 பில்லியனால் அதிகரித்திருந்தது. 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை செயற்படுத்தியதன் காரணமாக கூட்டிணைக்கப்பட்ட வரிக் கட்டமைப்பிலும், வரி விகிதாசாரங்களிலும் ஏற்பட்ட வேறுபாடுகள், வருமான வரி மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் உயர்வடைந்து செல்வதற்கு அடிப்படையாக தாக்கமளித்திருந்தது.

- மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வரி வருமானத்தில் உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகளின் அடிப்படையில் விதிக்கப்பட்ட வரி வருமானம் ரூபா 974 பில்லியன் அதாவது மொத்த வரி வருமானத்தில் 56 சதவீதமும், மொத்த அரசாங்க வருமானத்தில் 51 சதவீதமும் ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டின் போது அது ஒட்டுமொத்த வரி வருமானத்தில் 62 சதவீதமும், மொத்த அரசாங்கத்தின் வருமானத்தில் 55 சதவீதமும் ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகளின் அடிப்படையில் விதிக்கப்பட்ட வரி வருமானம் குறைவடைந்தது தொடர்பில் மீளாய்வாண்டில் நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாத தாக்குதலின் காரணமாக பொருளாதாரத்தில் சில பிரிவுகள் பாரியளவில் பாதிக்கப்பட்டமை மற்றும் மீளாய்வாண்டில் திசெம்பர் மாதம் முதல் பெறுமதி சேர் வரி விகிதம் 15 சதவீம் முதல் 8 சதவீதம் வரை குறைக்கப்பட்டமை மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரியை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தமை காரணங்களாக இருந்தன. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகளின் கீழ் வருகின்ற பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிகளின் மூலம் 29 சதவீதத்திற்கும் மேற்பட்ட பங்களிப்பொன்று மொத்த அரசாங்கத்தின் வருமானத்திற்கு பெறப்பட்டிருந்தது.

- மதுபானம் மற்றும் சிகரெட் போன்ற பொருட்களின் அடிப்படையில் விதிக்கப்பட்ட வரிகளில் அரசாங்கத்தின் மொத்த வருமானத்திற்கு 10.5 சதவீத பங்களிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், மோட்டார் வாகனங்கள் மற்றும் கனிய எண்ணெய் உற்பத்தியின் அடிப்படையில் விதிக்கப்பட்ட உற்பத்தி (விஷேட ஏற்பாடுகள்) வரிகளில் இருந்து 10 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்களிப்பொன்று அரசாங்கத்தின் மொத்த வருமானத்திற்கு பங்களித்திருந்தது.

- அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படையில் விதிக்கப்பட்ட வரிகளின் மூலம் ரூபா 333 பில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த வரி வருமானத்தில் 10 சதவீதமும், ஒட்டுமொத்த அரசாங்கத்தின் வருமானத்தில் 17 சதவீதமும் ஆக காணப்பட்டது. சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படையில் விதிக்கப்பட்டுள்ள வரிகளின் மூலம் வருமானம் சேகரித்தல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 3 சதவீதத்தினால் அதாவது ரூபா 8 பில்லியனினால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டில் விஷேட வியாபார பொருட்கள் வரி ரூபா 5.4 பில்லியனினால் குறைவடைந்தமை இதற்காக அடிப்டையாக தாக்கமளித்திருந்தது.

- மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் அரசாங்கத்தின் வருமானக் கட்டமைப்பில் வரி வருமான உள்ளடக்கத்தின் மாற்றங்களுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் போதியளவில் தாக்கமளித்திருந்த போதிலும் அந்த தாக்கங்களில் நிதி ரீதியான பெறுமதியை கணிப்பிடுவதற்காக வருமானத்தை சேகரிக்கின்ற திணைக்களத்தினால் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக வருமானம் சேகரிக்கின்ற திணைக்களங்களின் சரியான செயலாற்றல்களை அளவிடுவதற்காக சேகரிக்கப்பட்ட வருமானத்தின் அதிகரிப்பு மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டமை போதியளவானதாக

இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- அரசாங்கத்தினால் வரி விகிதங்களை திருத்துதல்
- பொருட்கள் மற்றும் சேவைகளின் வெளிநாட்டு சந்தை விலைகள் உயர்வடைந்து சென்றமையினால் ஏற்படுகின்ற வரி வருமானத்தின் அதிகரிப்பு
- விஷேட சந்தர்ப்பங்களின் போது ஏற்படுகின்ற இறக்குமதிகளின் அதிகரிப்பு காரணமாக ஏற்பட்ட வரி வருமான அதிகரிப்பு
- விஷேட வெளிநாட்டு நாணய மாற்று விகிதாசாரத்தின் வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட ஏற்றுமதி அதிகரிப்பின் அடிப்படையில் வருமான வரி அதிகரித்தமை
- மேலும் வெளிநாட்டு வர்த்தக உடன்படிக்கை மற்றும் ஏனைய சட்டங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற வரி கைவிடல்கள், சலுகைகள் மற்றம் வரி விடுதலை போன்றவற்றின் காரணமாக அரசாங்கத்தின் வருமானத்திற்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாக விரிவான தகவல்கள் உரிய திணைக்களங்களின் செயலாற்றல்களை அளவிடும் போது கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- இலங்கை சுங்கத்தினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் அத்திகதியில் அறவிட வேண்டிய நிலுவை வரி வருமானம் ரூபா 22.9 பில்லியனாக இருந்தது. அந்த நிலுவை வரி அறிக்கைகளில் ரூபா 4.9 பில்லியன் நிலுவை வருமானம் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடக் கூடிய வரி மற்றும் தண்டப் பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 264 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிலுவை வருமான சேகரித்தலுக்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் தரம்

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்கள் குறித்த தரத்திற்கு இணங்க காணப்படுகின்றதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இலங்கை சுங்கத்தினால் அதற்காக பொறுப்புவாய்ந்த நிறுவனங்களின் உதவியை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அந்த நிறுவனங்களின் உறுதிப்படுத்தல்கள் பெறப்படும் வரை உரிய பொருட்கள் தனியார் பிணை முறியின் அடிப்படையில் இறக்குமதியாளர்களின் இடங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதும், அந்த பொருட்கள் தொடர்பான இலங்கை சுங்கத்தின் கண்காணிப்புக்கள் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.

### இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் உள்ளடக்கப்பட்ட கொள்கலன்களின் ஆழத்தினை பரிசோதனைக்கு உட்படுத்தல்

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் உள்ளடக்கப்பட்ட கொள்கலங்களின் ஆழத்தினை பரிசோதிப்பதற்கு உட்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமையின் காரணமாக சட்ட விரோத போதைப் பொருட்கள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டமை, வெளியிடப்படாத பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதன் மூலம் வரி மோசடி இடம் பெற்றமை, வெளியிடப்பட்ட அளவினை விட அதிகரித்த அளவில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு சுங்க வரி மோசடி செய்யப்பட்டமை, பிழையான வகைப்படுத்தல் இலக்கங்களின் கீழ் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வரி மோசடிகளில் ஈடுபட்டமை போன்ற சுங்க தவறுகள் கணிசமான அளவில் இடம்பெற்றமை சுங்க உத்தியோகத்தர்களின் விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

### புதிய வரி நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) அமுல்படுத்துதல்

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் புதிய வரி நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) அமுல்படுத்துதல் 2016 சனவரி 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அத்திகதி முதல் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய வரி

செலுத்துனர்கள் 323,979 பேர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த 764,251 வரி அறிக்கைகள் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு மீள கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற வரி அறிக்கைகளுக்கு இடையே வரி செலுத்துனர்கள் 210,572 பேர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற 283,055 வரி அறிக்கைகள் 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி வரையிலும் முறைமையின் செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அறிக்கையின் அடிப்படையில் நிலுவை வரி அறிக்கையிடப்படாமை, அறிவிடல் போன்ற நடவடிக்கைகள் காலரீதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வருமான முகாமைத்துவ நிர்வாக தகவல் முறைமையின் பராமரிப்பு நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தினால் கையேற்கப்பட வேண்டியிருந்தது. அதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே புதிய வருமான வரி சட்டத்தின் பிரகாரம் வரி நிர்வாக முறைமையின் வேறுபாடுகளை உள்ளடக்கி இனங்காணப்பட்ட ஏனைய திருத்தங்களுக்காக RAMIS 2.0 செயற்திட்டத்திற்கான ஒப்பந்தம் உரிய வழங்குனருக்கு கையளிப்பதற்கு கவனத்தில் கொள்ளக்கூடிய கால தாமதம் ஏற்பட்டிருந்ததுடன், முதலாவது கட்டத்திற்குரிய உடன்படிக்கை 2019 செப்தெம்பர் மாதத்திலும், இரண்டாம் கட்ட உடன்படிக்கை 2020 யூலை மாதத்திலும் கையொப்பமிடப்பட்டிருந்தன.

### செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் மந்தகதியில் காணப்பட்டமை

நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்நாட்டு நிதியம், வெளிநாட்டு கடன் மற்றும் நிதி உதவிகளை பயன்படுத்தி அமுல்படுத்தப்படுகின்ற 07 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,894.60 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த 07 செயற்திட்டங்களில் ஒரு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எஞ்சிய 06 செயற்திட்டங்களின் நடவடிக்கைகளும் மந்த கதியில் மேற்கொள்ளப்பட்ட நிலையில் காணப்பட்டது. இந்த குறைபாடுகளின் காரணமாக செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 72 சதவீதம் அதாவது ரூபா 1,364.68 மில்லியன் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

### நிதி நிறுவனமொன்றில் வைப்புச்செய்தவர்களுக்கு நட்டஈடு செலுத்துதல்

2015 ஆம் ஆண்டின் போது மேல்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் நிதி நிறுவனமொன்றில் வைப்புச்செய்தவர்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் கீழ் ரூபா 1,055.00 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிதி ஏற்பாடுகளில் 34 சதவீதம் அதாவது ரூபா 355.10 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. திறைசேரியினால் தேவையான கட்டுநிதி அமைச்சிற்கு வழங்கப்படாமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் அனுமதிப்பத்திரதாரர்களுக்கு வழங்கப்பட்ட மின் உற்பத்தி அனுமதிப் பத்திரங்களின் நிபந்தனை இலக்கம் 11 இன் பிரகாரம் உரிய ஆண்டின் யூன் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அல்லது முறைமைக்கு மின்சாரத்தை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் 30 நாட்களுக்குள் வருடாந்த ஒழுங்குபடுத்துதல் கட்டணம் ஆணைக்குழுவிற்கு செலுத்தப்படல் வேண்டும். இலங்கை மின்சார சபையை உள்ளடக்கிய 25 அனுமதி பத்திரதாரர்களிடம் இருந்து குறித்த தினத்தில் அறவிட வேண்டிய ஒழுங்குபடுத்தல் கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 184.93 மில்லியனாக காணப்பட்டது. அந்த கட்டணங்களில் ரூபா 82.13 மில்லியன் தொகை 2020 செப்தெம்பர் மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 81.85 மில்லியன் நிலுவையாக இருந்த ஒழுங்குபடுத்தல் கட்டணத்தை அறவிடுவதற்குரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் ஆணைக்குழுக்கு உரியதாக இருந்த போதும், அந்த சட்ட ரீதியான நடவடிக்கைகள் 2020 செப்தெம்பர் மாதம் வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயல்முன்னேற்றம்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் 10 பிரிவுகளின் கீழ் 123 செயற்பணிகளை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 339.26 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த செயற்பாடுகளில் கனிய எண்ணெய் கைத்தொழில்களுக்குரிய 15 செயற்பாடுகளுக்காக ரூபா 80.30 மில்லியன் தொகையும், நீர்க் கைத்தொழில்களுக்குரிய 10 செயற்பாடுகளுக்காக ரூபா 55.14 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடும் வழங்கப்பட்டிருந்தன. திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் இருந்து ரூபா 104.46 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 41 செயற்பாடுகளில் எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு தவறியிருந்தது.

## ஆணைக்குழுவின் அதிகாரங்களை அமுல்படுத்துதல்

இலங்கை மின்வலு துறைகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்ட போதும், ஒன்றிணைக்கப்பட்ட அனுமதிபத்திரதாரர் மற்றும் பகிர்ந்தளிக்கும் அனுமதிப்பத்திரதாரரான இலங்கை மின்சார சபை தகவல்களை வழங்குதல் மற்றும் ஏனைய தேவைகளை நிறைவேற்றாமையின் காரணமாக ஆணைக்குழுவின் நியதிகள் மற்றும் பரிந்துரைகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

# அரசாங்க சேவைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் 54 மற்றும் 55 ஆம் உறுப்புரைகளில் அரச சேவைக்கு நியமனம் வழங்குதல், இடமாற்றல், சேவை வரிதாக்குதல் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் ஒழுக்க கட்டுப்பாடு அமைச்சரவைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரச சேவையில் உத்தியோகத்தர்களுடன் தொடர்புடைய பணிகள் அரச நிர்வாக அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரச நிர்வாகம் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சினால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.

- அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவத்துடன் தேசிய விளைதிறன் விடயங்களுடன் உரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- தாபன விதிக்கோவையின் கீழான பணிகள்
- நாடளாவிய ரீதியிலும் ஒருங்கிணைந்த சேவைகளுக்கு உரியதுமான நிர்வாக மற்றும் ஆளணி முகாமைத்துவம்
- அரச சேவை பயிற்சி
- ஓய்வூதிய பிரமாணக் குறிப்பினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அரசின் அனைத்து ஓய்வூதிய முறைமைகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுத்தல்
- புதிய நல்லாளுகை முறைமைகளை அறிமுகப்படுத்துதல்.

அவ்வாறே வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட செலவின அலகுகள், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, தேசிய ஒருங்கிணைந்த, அரச மொழிகள், சமூக மேம்பாட்டு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு, தேசிய கொள்கைகள், வணிக அலுவல்கள், மீளக் குடியமர்த்துதல் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சரவையின் அங்கத்தவர் அல்லாத அமைச்சு மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு ஆகிய அமைச்சுக்களின் கீழ் அரச சேவைக்குரிய பணிப்பொறுப்புக்கள், அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் 04 நியதிச்சட்ட நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது.

மேற்குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ரூபா 198,300.02 மில்லியனான நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 144,913.31 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் 26.92 சதவீதம் அல்லது ரூபா 53,386.97 மில்லியன் நிதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் உரு 74 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 74 – பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் பயன்பாடு

மூலம் - பொது திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றுக்கள்

## முதலீடுகளை மேற்கொண்டிராமை

2017 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக்கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்திற்கு சொந்தமாக நிலவுகள் மிகை நிதிகள் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சேமிப்பு கணக்கு நிலவிய ரூபா 51.2 பில்லியன் மீதி முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தினை பெற்று குறுங்கால மற்றும் நீண்டகால பிணையங்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## இலத்திரனியல் ஊடகங்களை உபயோகித்து நிகழ்ச்சித்திட்டங்களை ஒளிபரப்பு செய்தல்

தேசிய மொழிக் கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 40.90 மில்லியனான மொத்த செலவினத்தில் 48.07 சதவீதமான ரூபா 19.66 மில்லியன் செலவினம் வானொலிச் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் 210 மற்றும் 37 தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் எந்தளவுதூரம் மக்களுடன் தொடர்பாடுகின்றது என்பது எந்தளவிற்கு பயனுள்ளது என்பது தொடர்பில் பின்தொடர்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

தேசிய மொழிக்கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் போது தெரிந்தால் கற்பியுங்கள் இல்லையென்றால் கற்றுக்கொள்ளுங்கள் நிகழ்ச்சித்திட்டம் வானொலியில் ஒளிபரப்புச் செய்வதற்கு மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளுக்காக ரூபா 15 மில்லியன் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 4.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## அலுவலகத்தினை ஏனைய இடமொன்றிற்கு கொண்டு செல்லுதல்

அமைச்சரவையினால் 2016 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் மூன்று சந்தர்ப்பங்களில் அலுவலகத்தினை வேறு கட்டிடங்களில் தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அலுவலகத்தினை தாபிப்பதற்கு உத்தேசித்த கட்டிடம் மற்றும் திகதி தொடர்பில் திட்டவட்டமான தீர்மானமொன்றினை எடுப்பதற்கு தவறியிருந்தது.

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அலுவலக வளாகத்தினை மாற்றியிராததுடன் அவ்வாறே அங்கீகாரம் பெற்று பயன்படுத்தப்படாத இரு கட்டிடங்களுக்காக தரச்சான்றிதழ்களை

பெற்றுக்கொள்வதற்கு பாதுகாப்பு பணிகள், நீர் மற்றும் மின்சார பட்டியல்கள் ஆகியவற்றுக்காக 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 2.4 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது.

### மல்மடுவாவ கிராமத்தின் கிராமவாசிகளுக்கு நீரினைப் பெற்றுக்கொடுத்தல்

மல்மடுவாவ கிராம வாசிகளுக்கு நீரினைப் பெற்றுக்கொடுக்கும்நோக்கில் நீர்த்தாங்கிகள் மற்றும் நீர்க்குழாய் கட்டமைப்பொன்றினை ஒழுங்குபடுத்துவதற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு அமைச்சினால் முறையே ரூபா 2.9 மில்லியன் மற்றும் ரூபா 5.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக நீரினைப் பெற்றுக்கொள்ளும் பொதுக்கிணறில் நீர்மட்டத்தினை அதிகரித்துக் கொள்வதற்கு கிணறை தூர்வார்வதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 446,576 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், உத்தேசித்தவாறு குழாய் நீரினை வழங்கும் பணி நிறைவடைந்திருக்கவில்லை.

### யாழ்ப்பாண மாவட்டத்தினுள் மழைநீர் சேகரிப்பு அலகு (நீர்த்தாங்கி) 3000 நிர்மாணித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டத்தினுள் மழைநீர் சேகரிப்பு அலகுகள் (நீர்த்தாங்கி) 3000 இனை 03 வருட காலத்தினுள் நிர்மாணிப்பதற்காக இந்திய அரசினால் ரூபா 300 மில்லியன் நிதியுதவி வழங்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2017 சனவரி 13 ஆந் திகதி இந்திய அரசு மற்றும் இலங்கை அரசிற்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது அந்த செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு பணியகம் செயற்பட்டிருந்தது. எனினும், மூலப்பொருட்களின் பற்றாக்குறை, ஒப்பந்தகாரர்களிடம் அனுபவம் மற்றும் இயலுமை உடைய ஊழியர்கள் இல்லாதிருந்தமை, ஒப்பந்ததாரர்கள், செயற்திட்ட பதவிணயி மற்றும் நலனாளிகளிடையே போதியளவான தொடர்பினை பேணமுடியாமை போன்ற விடயங்களின் காரணமாக ஒப்பந்தகாரர்கள் இடைநடுவில் பணியை நிறுத்தியிருந்தனர். அதன் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்த்த அடைவ மட்டத்தில் 16 சதவீதத்திற்கு சமமான 489 நீர்த்தாங்கிகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. மேலும்,அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 17 சதவீதத்திற்கு சமனான ரூபா 51.19 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் எதிர்பார்த்த செயன்முன்னேற்றத்தை அண்மிக்க முடியாதிருந்தது.

### பயன்படுத்தப்படாத மென்பொருட்கள்

அரச மொழிகள் திணைக்களத்தினால் சிங்களம் - தமிழ் மற்றும் தமிழ் - சிங்களம் மொழிபெயர்ப்பு மெய்பொருட்கள் இரண்டினை தயாரிப்பதற்காக ரூபா 7.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது சிங்களம் - தமிழ் மொழிபெயர்ப்பு பணிகள் எவையும் இடம்பெற்றிருக்கவில்லை.

### பொதுமக்களினால் நேரடியாக பயன்படுத்தப்படும் விண்ணப்படிவங்கள்

தேசிய ஒருங்கிணைப்பாடு மற்றும் அரச மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் மக்கள் நேரடியாக பயன்படுத்தப்படும் 36 விண்ணப்பபடிவங்களை சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த மொழிபெயர்க்கப்பட்ட விண்ணப்பபடிவங்கள் இறுவட்டொன்றின் மூலம் மற்றும் அமைச்சின் வலைத்தளத்தில் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட விண்ணப்பபடிவங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தரைவிறக்கம் செய்வதற்கு முடியாதிருந்தது.

### தாமரைத் தடாகம் அரங்கின் வருமானம்

சனாதிபதி அலுவலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் தாமரை தாடக அரங்கின் வருமானம் அரசியலமைப்பு சட்டத்தின் 149(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சேகரிக்கப்பட்ட வருமானத்தினை அரச வருமானத்திற்கு செலவு வைக்காது பொது

வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்து வைப்புக் கணக்கிலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### உயர் கல்விக்கான நிபுணத்துவ நிலையமொன்றினை தாபித்தல்

உயர் கல்விக்கான விசேடத்துவ நிலையமொன்றினை தாபிப்பதற்காக அரச மற்றும் தனியார் பங்குடமையுடன் வரையறுக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப நிறுவனம் 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டிருந்தது. தேசிய கொள்கைகள் மற்றும் வாணிப அலுவல்கள், உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சர்களினால் "வரையறுக்கப்பட்ட உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் ஒரு மில்லியன் நிதி உதவியினை வழங்குதல்" எனும் தலைப்பில் முன்வைக்கப்பட்ட ஒருங்கிணைந்த அமைச்சரவை பிரமாணக் குறிப்பிற்கு 2017 திசெம்பர் 05 ஆந் திகதி அமைச்சரவையினால் வெளிநாட்டு நிறுவனமொன்றிற்காக நிறைவேற்றப்படும் சேவைக்காக செலுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் ஒரு மில்லியன் தொகையினை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த நிறுவனத்துடன் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேற்படி அமைச்சரவையின் தீர்மானம் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் புதிய வியாபார பாடசாலையின் முகாமைத்துவத்திற்கான முறையான கட்டுப்பாட்டுச் சபையொன்றினை தாபிப்பதற்கு உரிய நிரந்தர திட்டமொன்றினை ஒழுங்கமைப்பதற்கு அந்த வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து உரியசேவையினை பெற்றுக்கொள்வதற்காகரூபா 113.75 மில்லியன் தொகை 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 40 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரு வருட காலம் கடந்திருந்த போதிலும் விரிவான செயற்திட்ட அறிக்கையொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### பயிற்சி செயற்திட்ட உதவியாளர்களை இணைத்துக்கொள்ளல்

அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் மேற்பார்வைக்காக பயிற்சி செயற்திட்ட உதவியாளர்கள் 7,500 பேரினை இணைத்துக் கொள்வதற்காக 2019 மார்ச் 19 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும், அதற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் ஆட்சேர்ப்பு செய்வதற்காக நேர்முகப் பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த ஆட்சேர்ப்புக்குரிய பணிகளுக்காக தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீளக்குடியமர்த்துதல் மற்றும் புனர்வாழ்வழிப்பு, வடமாகாண அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் ரூபா 6.95 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 18 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த ஆட்சேர்ப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

### அரச சேவைகள் நலன்புரி நிதியம்

2015 யூலை 23 ஆந் திகதிய 2015 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 11 மற்றும் 12 ஆம் பிரிவுகள் மற்றும் 1942 இன் 18 ஆம் இலக்க அரச சேவைகள் நலன்புரி நிதிய கட்டளைச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் அரச சேவைகள் நலன்புரி நிதியத்தின் அனைத்து அங்கத்தவர்களினதும் கணக்குகளில் உள்ள கட்டாய பங்களிப்பு பணத்திற்கு மற்றும் அரசின் பங்களிப்பு பணத்திற்கு கூட்டுவட்டியொன்று உரித்தாக வேண்டும். அந்த நியமங்களுக்கு புறம்பாக டொறன்டோ கவுன்சிலன் ஜெனரல் அலுவலகத்தின் தொடர்பாடல் உதவி உத்தியோகத்தர் ஒருவரின் 2008 ஆகஸ்ட் மாதம் முதல் 2018 ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்காக அரச சேவைகள் நலன்புரி நிதியத்தின் அரசின் பங்களிப்புத் தொகையான ரூபா 2.8 மில்லியன் மற்றும் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் ஒருவரின் 2017 யூன் மாதம் முதல் 2018 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக அரச சேவைகள் பங்களிப்பு நலன்புரி நிதியத்தின் அரச பங்களிப்பான ரூபா 1.4 மில்லியன் தொகை வெளியுறவுகள் அமைச்சினால் ஓய்வூதிய திணைக்களத்திற்கு 2019 மார்ச் மாதத்தின் போது அனுப்பப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தர்களுக்கு உரித்தாகவுள் கூட்டுவட்டி இழக்கப்பட்டிருந்தது.

## வெளிநாட்டு தூதரகங்களுக்காக ஆதனங்களை சுவீகரித்தல்

மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு தூதரகங்களின் அலுவலகங்கள், தூதரக பிரதானியின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் ஏனைய பதவியணியினருக்கான இல்லங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கட்டிடங்கள் ஆகியவற்றுக்காக வருடாந்த வாடகையாக ரூபா 1,720 மில்லியன் வெளியுறவுகள் அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மாற்றீடாக நிதிரீதியில் நலனொன்றினை பெற்றுக்கொள்ளும் வகையில் தூதரகங்களுக்காக ஆதனங்களை சுவீகரிப்பதற்கு அமைச்சினால்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினை தாபிக்கும் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கமொன்று அல்லது பணிப்பொறுப்பொன்று அல்லாத மற்றும் நிறுவனத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உரித்தற்ற வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் 37 மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்தன.

## அங்கீகாரமின்றி ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை செலுத்துதல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஎடீ.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஊக்குவிப்பு படிகளுக்கான நடைமுறைகளுக்காக பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக இருந்தது. அவ்வாறு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 6.0 மில்லியனும், 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 7.4 மில்லியனும் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 2.3 மில்லியனுமாக நிறுவனத்தின் பதவியணியின் 95 பேருக்கு ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட்டிந்தன.

## விளைவற்ற சொத்துக்கள்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டின் போது "சங்தரனி" ஆராய்ச்சி நிறுவனம் ரூபா 3.4 மில்லியன் செலவிடப்பட்டு புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆராய்ச்சி நிலையத்தின் தளபாடங்கள், கணனி மற்றும் ஏனைய இலத்திரயில் உபகரணங்கள் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## இரட்டை படிகளை செலுத்துதல்

2013 ஏப்ரல் 19 ஆந் திகதிய அமப/13/0237/0523/001 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் இரட்டை கல்வி சார் பதவியணியினருக்கு 50 சதவீதமான இரட்டைப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அந்தக் கொடுப்பனவுகளுக்காக 2014 நவம்பர் 14 ஆந் திகதி பொது முயற்சிகள் கணக்குகள் குழுவின் கட்டளையின் பிரகாரம் மாதாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய ஆகக்குறைந்த மணித்தியாலங்கள் அளவான 45 மணித்தியால எல்லையினை அண்மிக்க வேண்டியதென்பது குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த கட்டளைகளுக்கு முரணாக நிறுவனத்திற்கு 2015 யூலை முதல் நிறுவனத்திற்கு 2015 யூலை மாதம் வரை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 9.1 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த பணம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய தொகை 2020 மே 31 ஆந் திகதி வரையிலும் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## அரசின் உத்தியோகபூர்வ இல்லங்களின் நிலுவை வாடகை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் அரசின் உத்தியோகபூர்வ இல்லங்களில் வதியும் திருமாணமான உத்தியோகத்தர் ஒருவரின் சம்பளத்திலிருந்து 12.5 சதவீதமும் திருமணமான உத்தியோகத்தர் ஒருவரின் சம்பளத்திலிருந்து 7.5 சதவீதமும் வாடகையாக அறவிடப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக அரசின் உத்தியோகபூர்வ இல்லங்களில் வதியும் உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 64.6 மில்லியன் வாடகை அறவிடப்பட வேண்டியதாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த வாடகை வருமானம் அரச நிர்வாக மற்றும் இடர்கள் முகாமைத்துவ அமைச்சினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## அரச உத்தியோகபூர்வ இல்லங்களில் அத்துமீறி குடியேறுதல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவின் பிரகாரம் பதவியொன்றிற்கு ஒதுக்கப்பட்ட இல்லமொன்றினை தவிர, ஏனைய அனைத்து இல்லங்களினதும் குத்தகைக் காலம் 05 வருடங்களிற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன் அரசின் நிர்வாக மற்றும் இடர்கள் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தது. அவ்வாறு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது 14 அமைச்சர்களினதும், 14 அரச உத்தியோகத்தர்களினாலும் 2020 யூலை 22 ஆந் திகதி அளவில் அத்துமீறி அரச உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியேறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## அழிவு நட்டங்கள்

அவசர விபத்தொன்று தொடர்பில், அதில் பயணம் செய்த உத்தியோகத்தர் அல்லது சாரதியினால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டும். எவ்வாறெனினும், அரச நிர்வாக மற்றும் இடர்கள் முகாமைத்துவ அமைச்சின் வாகன விபத்தொன்றில் ரூபா 2.7 நட்டம் ஏற்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் காவற்துறைக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 05 விபத்துக்கள் தொடர்பில் காவற்துறையின் பாதுகாப்பினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

# வாணிப அலுவல்கள்

கைத்தொழில், வாணிப, நீண்டகால இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்ற மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழான 05 திணைக்களங்கள், 05 அரச நிறுவனங்கள் மற்றும் 13 அரச கம்பனிகள் மூலம் இந்த பிரிவிற்காக பின்வரும் செயற்பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது.

- உள்நாட்டு சந்தைகளில் நுகர்வுப் பொருட்கள் தரமான நிலையில் மற்றும் பற்றாக்குறையொன்று இல்லாது நியாயமான விலையில் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுத்தல்.
- நுகர்வுப் பொருட்களுக்குரிய தேசிய விலைக் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- 1949 இன் 6 ஆம் இலக்க ஈட்டு அதிகாரச்சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரித்தல்
- நுகர்வோரின் பாதுகாப்பிற்காக நடவடிக்கை எடுத்தல்

மேற்குறிப்பிடப்பட்ட செயற்பணியை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ரூபா 39,902.46 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 16,311.51 மில்லியன் நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அந்த காலப்பகுதிக்காக பாபராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 59.12 சதவீதமான ரூபா 23,590.95 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் உரு 75 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 75 - பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் பயன்பாடு

மூலம் - பொது திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கை

### போலியான அளவீடுகளை சுற்றிவளைத்தல்

மீளாய்வாண்டின் போது அளவைக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் போலியான அளவீடுகளை சுற்றிவளைத்தல் 22,165 மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த சுற்றிவளைப்புகளில் 1,514 சுற்றிவளைப்புகள் வெற்றியளித்திருந்தன. முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் எந்தவொரு சுற்றிவளைப்பும் இடம்பெற்றிருக்கவில்லை. தண்டப்பணங்களாக ரூபா 2.85 மில்லியன் ஈட்டப்பட்டிருந்தது.

### புதிய ஆய்வுகூடத்தில் வளிச்சீராக்கல் கட்டமைப்பொன்றினை பொருத்துதல்

புதிய ஆய்வுகூடத்தில் வளிச்சீராக்கி இயந்திரத்தினை பொருத்துவதற்காக மீளாய்வாண்டின் போதுரூபா 995 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த

போதிலும், 2020 மே 25 ஆந் திகதி வரையிலும் அந்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியங்கள்

2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குரிய 271,046 மெட்ரிக் தொன் இயலளவுடன் கூடிய 120 களஞ்சியங்கள் காணப்பட்டன. அந்த களஞ்சியங்களில் 46 களஞ்சியங்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகையுடனும், 28 களஞ்சியங்கள் அரச நிறுவனங்களுக்கு வாடகையின்றியும் வழங்கப்பட்டிருந்ததுடன், திணைக்களத்தின் பொறுப்பில் 24 களஞ்சியங்களும், மாவட்ட செயலாளரின் பொறுப்பில் 20 களஞ்சியங்கள் மற்றும் பாவனைக்கு பொருத்தமற்ற 02 களஞ்சியங்களும் காணப்பட்டன. அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த களஞ்சியங்களிலிருந்து 2019 ஆம் ஆண்டின் போது கிடைத்த வாடகை வருமானம் ரூபா 92.51 மில்லியனாக இருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை களஞ்சிய வாடகை ரூபா 111.16 மில்லியனாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை களஞ்சிய வாடகையை அறவிடுதல் தொடர்பில் திணைக்களத்தினால் போதியளவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

### விஞ்ஞான ரீதியான களஞ்சியங்களின் பயன்பாடு

உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு சொந்தமான வேயாங்கொட களஞ்சியத் தொகுதியின் இயலளவு 34,300 மெற்றிக் தொன்களான 06 களஞ்சியங்கள் அரிசியை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தும் நோக்கில் விஞ்ஞான மற்றும் இயற்கைக் களஞ்சியமாக புதுப்பிக்கப்பட்டிருந்தது. களஞ்சிய புதுப்பித்தல் பணிகளுக்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 292.31 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2019 ஆம் ஆண்டு திணைக்களத்திற்கு சொந்தமாக எவ்வித பாதுகாப்பு அரிசி இருப்பும் காணப்படாததுடன் களஞ்சியங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. இந்தக் களஞ்சியங்களை புதுப்பிக்கும் நோக்கத்தினை நிறைவேற்றுதல் மற்றும் செலவிடப்பட்ட தொகையில் ஆக்கபூர்வமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள திணைக்களத்தினால் பொருத்தமான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

### ஏற்றுமதி சந்தையில் பிரவேசிப்பதற்கு உதவும் நிகழ்ச்சித்திட்டம்

2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம், 100 கம்பனிகளுக்கு ஏற்றுமதி சந்தையில் பிரவேசிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், சபையினால் 2019 ஆம் ஆண்டினுள் முதலாவது வகைப்படுத்தலின் கீழ் 36 கம்பனிகளுக்காகவும், இரண்டாவது வகைப்படுத்தலின் கீழ் 52 கம்பனிகளுக்காகவும் உதவி வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன் போது வகைபப்படுத்தலின் கீழ் சர்வதேச வியாபாரக் கண்காட்சிகளில் பங்குபற்றுவதற்காக 36 கம்பனிகளக்காக ரூபா 17.3 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. இதற்கிடையில் இறப்பர் மற்றும் இறப்பர் உற்பத்திப் பிரிவிற்கு உரியதாக வியாபாரக் கண்காட்சிகளுக்காக 2 கம்பனிகளும், ஆடைப் பிரிவிற்குரிய வியாபாரக் கண்காட்சிக்காக 11 கம்பனிகளும், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபார செயன்முறை முகாமைத்துவ பிரிவிற்கு உரியதாக வியாபாரக் கண்காட்சிக்காக 5 கம்பனிகளும் பங்குபற்றியிருந்தன.

மேலும், இரண்டாவது வகைப்படுத்தலின் கீழ் இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 34 கம்பனிகள் 2019 ஆம் ஆண்டினுள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 13 கம்பனிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பணத்தில் 40 சதவீதமான ரூபா 21.8 மில்லியன் கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், உற்பத்தி செயற்முறையிலான முன்னேற்றம், உற்பத்தி இயலளவிலான அதிகரிப்பு மற்றும் புதிய வியாபாரக் குறியீடுகளை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றுக்காக 17 கம்பனிகளுக்காக உதவி புரிவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 11இற்காக மாத்திரம் 40 சதவீதம் படியாக ரூபா 17.7 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது.

மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 175 மில்லியனாக காணப்பட்ட போதிலும், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு ரூபா 96 மில்லியன் மாத்திரம் கிடைத்திருந்தமையால் பாதிடப்பட்ட

இலக்குகளை நோக்கி பயணிக்க சபைக்கு முடியாதிருந்தது.

### புதிதாக 2000 ஏற்றுமதியாளர்களை அபிவிருத்தி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

2000 முயற்சியாளர்களை புதிய ஏற்றுமதியாளர்களாக மாற்றும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலும், ரூபா 34.12 மில்லியன் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் செலவிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக கட்டுப்பாட்டு சபையொன்று நியமிக்கப்பட வேண்டும் என 2017 மார்ச் 30 ஆந் திகதிய 2017/03/20 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு இடத்தினை தெரிவு செய்யும் போது அரச நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகளை கோராமல், தனியார் நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகளை கோரி ரூபா 3.47 மில்லியன் செலவிடப்பட்டு 06 தனியார் ஹோட்டல்களில் நிகழ்ச்சித்திட்டங்களில் நடாத்தப்பட்டிருந்தது. இதன் போது மதிப்பிடப்பட்ட கிரயத்தினை விஞ்சி ரூபா 215,900 செலவிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் 2000 முயற்சியாளர்களை ஏற்றுமதியில் ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், 2017-2019 காலப்பகுதியினுள் 155 பேர் மாத்திரம் ஏற்றுமதியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

### இருப்பு முகாமைத்துவம்

லங்கா சதொச லிமிடட் கம்பனியின் 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் இருப்பு முகாமைத்துவ செயன்முறையை நடைமுறைப்படுதல் தனியார் பிரிவின் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. கம்பனியின் இருப்பு முகாமைத்துவ நடைமுறையை அமுல்படுத்தப்பட்ட கெரவலப்பிட்டிய இருப்புக் களஞ்சியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள், 2019 யூன் மாதம் முதல் நிறுத்தப்பட்டிருந்தது. எனினும், முறையான இருப்பு முகாமைத்துவமொன்று இல்லாமையால் பகிர்ந்தளிப்பதற்கு பொருத்தமான குறுகிய காலத்தில் காலாவதியாகும், விற்பனை நிலையங்களிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட எனும் வகையில் வகைப்படுத்தப்பட்ட ரூபா 42.76 மில்லியன் பெறுமதியான நுகர்வுப் பொருட்களின் இருப்பொன்று 2019 ஒக்தோபர் மாதம் வரையிலும் குறித்த களஞ்சியத்தில் காணப்பட்டது.

### முயற்சியாண்மை வளங்கள் திட்டமிடல் செயற்திட்டம்

லங்கா சதொச கம்பனி லிமிடட்டினால் ரூபா 198.17 மில்லியனுக்கு வழங்கப்பட்டு 15 மாதங்களுக்குள் நிறைவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்ட முயற்சியாண்மை வளங்கள் திட்டமிடல் செயற்திட்டம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த தொகையில் 30 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரால் செயற்திட்டம் நிறைவு செய்து கையளிப்பதற்கு தாமதம் ஏற்படுமானால் தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் ஒப்பந்த தொகையிலிருந்து 1 சதவீதம் கழிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. தாமதிக்கும் நாளொன்றிற்கு செலுத்த வேண்டிய கட்டணம் தீர்மானிக்கப்பட்டிருக்காமையால் ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட வேண்டிய திகதியை விஞ்சி 574 நாட்கள் தாமதித்து உள்ள போது ஒப்பந்த தொகையின் 1 சதவீதம் மாத்திரம் கழிக்கப்பட்டு குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மேலும், உடன்படிக்கையின் பிரகாரம் பெறுநரின் எழுத்துமூல உடன்பாடின்றி ஒப்பந்தம் மல்லது அதன் ஒரு பகுதி அல்லது ஏனைய தரப்பினருக்கு ஒப்படைத்த பின்னர் ஏற்படும் நட்டங்கள் அல்லது இழப்புகள் தொடர்பில், ஒப்பந்ததாரர் குறித்த ஒப்பந்த பெறுமதியில் 1 சதவீதமான பெறுமதிக்கு சமனான பொறுப்புக்கும் கடப்படுகின்ற போதிலும் சில பகுதிகள் மற்றுமொரு நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படுகின்றமையால் தாமதமடைந்திருந்த ஒப்பந்தத்தின் 1 சதவீதமான ரூபா 19,817,578 தொகையை ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம், தேசிய போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரப்படாது ஒரே விநியோகத்தரிடமிருந்து இரு கூறுவிலைகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 24.38 மில்லியனான 12,800 எண்ணிக்கையான பிளாஸ்டின் கூடைகளில் 1,975 கூடைகள் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும்

களஞ்சியங்களில் விளைவற்றுக் காணப்பட்டதுடன், அந்த கூடைகளின் ஆகக் குறைந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3.76 மில்லியன் ஆக காணப்பட்டது.

## கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் விதிமுறைகளுக்கமைய செயற்படல்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்கு 74,818 ஆண்டறிக்கைகள் அனுப்பப்பட வேண்டிய போதிலும், 17,532 கம்பனிகள் மாத்திரம் அந்த அறிக்கைகளை அனுப்பியிருந்தன. அதன் பிரகாரம், ஆண்டறிக்கைகளை அனுப்ப வேண்டிய கம்பனிகளில் சுமார் 77 சதவீதமானவற்றின் ஆண்டறிக்கைகளை அனுப்புவதை புறக்கணித்திருந்தன.

## நிலுவை வருமானங்கள்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 131(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம், பதிவு செய்யப்பட்ட கம்பனிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஆண்டறிக்கை வருமானத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 2,292.00 மில்லியன் வருமானம் நிலுவையாக காணப்பட்டது. கடந்த வருடத்திலான ரூபா 1,974.60 மில்லியன் நிலுவை வருமானத்துடன் ஒப்பிடும் போது அது 16 சதவீத அதிகரிப்பாகும். மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு கம்பனிப் பதிவாளர் திணைக்களம் தவறியிருந்தது.

## கம்பனிகளின் நிதி அறிக்கைகளை பதிவு செய்தல்

கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 170(1) ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதி அறிக்கைகளை பதிவு செய்ய வேண்டிய கம்பனிகளின் எண்ணிக்கை 6893 ஆக இருந்தது. அவற்றுள் 1922 கம்பனிகள் மாத்திரம் நிதி அறிக்கைகளை சமர்ப்பித்திருந்த போதிலும், 4971 கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

## கம்பனியின் ஆவணங்களை ஸ்கேன் செய்தல்

கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள செயற்பாட்டிலுள்ள கம்பனிகளின் 70,931 கோவைகளின் ஆவணங்களுக்குரிய 9,128,320 பக்கங்களை ஸ்கேன் (Scanning) செய்தல் மற்றும் (Indexing) ஆகியவற்றுக்காக ரூபா 68.09 மில்லியனுக்கு தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த கோவைகளை ஸ்கேன் செய்த உள்ளபடியான தாள்களின் எண்ணிக்கை 6,082,608 ஆக காணப்பட்டமையால் அது உடன்படிக்கை செய்யப்பட்ட எண்ணிக்கையை விட குறைவாக காணப்பட்டமையால் அந்த இடைவெளியை குறைப்பதற்காக பெரும் எண்ணிக்கையான செயற்பாடற்ற சங்கங்கள் மற்றும் அதனைப் போன்ற கணக்காய்வாளர்கள், செயலாளர்கள் மற்றும் ஈட்டுப் பொறுப்பனை பதிவு செய்வதற்குரிய ஆவணங்களும் ஸ்கேன் செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், முன்னர் எதிர்பார்க்காத ஆவணங்களும் பின்னர் ஸ்கேன் செய்யப்பட்டமையால் ஒப்பந்ததாரருடன் ரூபா 25.71 மில்லியனுக்கு மேலதிக வேலைக்காக பிரிதொரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

## விளைவற்ற சொத்துக்கள்

2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 03 வருட காலப்பகுதியை கொண்ட ரூபா 1.325 மில்லியன் பெறுமதியான 05 தொலைக்காட்சிகள், ரூபா 3.641 மில்லியன் பெறுமதியான கணனி உதிரிப்பாகங்களின் இருப்பொன்றும், 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 03 வருட உத்தரவாதக் காலத்துடனான ரூபா 4.7801 மில்லியன் பெறுமதியான கணனி மற்றும் கணனி உப பாகங்களின் இருப்பொன்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் களஞ்சியத்தில் 2020 ஆகஸ்ட் மாதம் வரையிலும் வைக்கப்பட்டிருந்தன.

# சுற்றுலா அலுவல்கள்

“இலங்கை சுற்றுலாப் பயணிகளின் நினைவில் நிற்கும் உண்மையான மற்றும் பல்வேறு அனுபவங்களுக்காக உலகின் விசேட தீவொன்றாக இனங்காணல் மற்றும் இலங்கையின் இயற்கையான மற்றும் கலாச்சார உரித்துக்கள் புலப்படுத்தப்படும் வகையில் சமூக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும், சுற்றாடலுக்கு பொறுப்புக்கூற வேண்டிய மற்றும் மக்களுக்கும் நாட்டிற்கும் பொருளாதார நலன்களை பெற்றுத்தரக்கூடிய அதி விசேடமான அனுபவமொன்றினை வழங்கும் உயர் பெறுமதியுடைய சுற்றுலாத்தளமாக மாற்றுதல்” சுற்றுலா அபிவிருத்தித் துறையின் தூரநோக்கு மற்றும் செயற்பணியாக இருந்தது. அந் நோக்கத்தை நிறைவேற்றுதவற்காக சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் கீழான 04 நியதிச்சட்ட நிறுவனங்களினால் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டிதாக உள்ளன.

- சுற்றுலாத் துறை கைத்தொழில் சம்பந்தமான தேசிய கொள்கைகளின் பிரகாரம் சுற்றுலாத் துறைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தலும் நியமங்களை வகுத்தலும்.
- சுற்றுலாத் துறை முகவராண்மைகளின் பதிவு செய்தலும் ஒழுங்குபடுத்துகையும்
- ஓய்வு நேரங்கைளக் கழிப்பதற்காக பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
- வனவிலங்கு பாதுகாப்பு பிரதேசங்களில் சுற்றுலாத் துறைக் கைத்தொழில் மேம்படுத்தலுக்கான சுற்றுச் சூழல் அமைப்பு பாதுகாப்பை வலியுறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

மேற்குறித்த பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போதும் கடந்த 2 வருடக் காலப்பகுதிக்காகவும், பாராளுமன்றத்தினால் ரூபா 3,061 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 1,241 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், கடந்த 03 வருட காலப்பகுதியினுள் பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 59.46 சதவீதம் அல்லது ரூபா 1,820 மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் உரு 76 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 76 – ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் பயன்பாடு
மூலம் - திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கைகள்

இந்தப் பிரிவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

### சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அந்நியச் செலவாணி உழைப்பும்

2018 ஆம் ஆண்டின் போது 2,333,796 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்ததுடன், அது 2019 ஆம் ஆண்டின் போது 1,913,702 பேர் வரை குறைவடைந்திருந்தது. 2019 ஏப்ரல் மாதத்தின் போது இடம்பெற்ற உதித்த ஞாயிறு தாக்குதல் காரணமாக இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பில் பாரிய தாக்கம் ஏற்படுத்தியிருந்தது. அந்த தாக்கத்தினை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது தெளிவாக புலப்படுகின்றது. 2018 மே மாதத்தின் போது 129,446 சுற்றுலாப் பயணிகள் வருகைத்தந்திருந்ததுடன், 2019 மே மாதத்தின் போது 37,802 சுற்றுலாப்பயணிகள் மாத்திரம் வருகைத் தந்திருந்தனர். அதன் பிரகாரம், கடந்த வருடத்தின் மே மாதத்திற்கு ஒப்பாக 70.8 சதவீத குறைவொன்று அறிக்கையிடப்பட்டது. எவ்வாறெனினும், 2019 மே மாதத்தின் பின்னர் அந்த வீதம் கிரமமாக குறைவடைந்து 2019 திசெம்பர் மாதமளவில் 4.5 சதவீதம் வரையிலும் குறைத்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது. அந்த நிலைமை உரு 77 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 77 – 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு மாதத்திலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை
மூலம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

2018 ஆம் ஆண்டின் போது சுற்றுலாக் கைத்தொழிலில் ரூபா 712,027.3 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் போது அது ரூபா 65,665 மில்லியன் வரையிலும் 9.22 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அந்நிய செலாவணியை கருத்திற்கொள்ளும் போது 2018 ஆம் ஆண்டின் போது ஐ.அ.டொலர் 4,380.6 மில்லியனுக்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டின் போது ஐ.அ.டொலர் 3,606.9 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம், 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டின் போது ஐ.அ.டொலர் 773.7 மில்லியன் இழக்கப்பட்டிருந்தது. சுற்றுலாக் கைத்தொழிலின் மூலம் கிடைத்த வருமானம் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் கிரமமாக அதிகரித்து 2019 ஆம் ஆண்டின் போது குறைவடைந்திருந்தது. அது தொடர்பான விபரமொன்று உரு 78 மற்றும் 79 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு 78 - சுற்றுலா வருமானம் ரூபா மில்லியன்
மூலம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை




உரு 79- சுற்றுலா வருமானம் ஐ.அ.டொலர் மில்லியன்
மூலம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

உதிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் சுற்றுலாக் கைத்தொழில் செயலிழந்தமையால் மீளாய்வாண்டின் போதிலும், அனைத்து வலயங்களினதும் சுற்றுலாப்பயணிகளின் வருகை குறைவடைந்திருந்தது. அவ்வாறே, இந்தியாவிலிருந்து 355,002 சுற்றுலாப் பிரயாணிகள் வருகைத் தந்திருந்ததுடன், அது நாடொன்று எனும் வகையில் அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் ஆகும். அந்த எண்ணிக்கையை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 16.4 சதவீத்தால் குறைவடைந்திருந்தது. ஐக்கிய இராச்சியத்திலிருந்து 198,776 சுற்றுலாப் பயணிகள் வருகைத்தந்திருந்ததுடன், அது அதற்கடுத்த கவர்ச்சியான நாடாக காணப்பட்டது. எனினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 21.8 சதவீதமான குறைவொன்றினைக் காணக்கூடியதாக இருந்தது. விபரங்கள் உரு 80 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 80- நாடுகளின் அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை
மூலம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

மீளாய்வாண்டின் போது சுற்றுலா ஹோட்டல்களின் வருமானத்திலிருந்து அறவிடப்படும் சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் ரூபா 924.2 மில்லியனாக இருந்தது. கடந்த வருடத்தில் அந்த வரி வருமபனம் ரூபா 1,482.1 மில்லியனாக இருந்தது. அதன்

பிரகாரம், கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வரி வருமானம் ரூபா 557.9 மில்லியனால் அல்லது 37.64 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அந்த வீழ்ச்சி தொடர்பில் 2019 ஏப்ரல் மாதம் இடம்பெற்ற உதித்த ஞாயிறு தாக்குதல் தாக்கம் செலுத்தியிருந்தது. சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் கடந்த வருடங்களில் கிரமமாக அதிகரித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அது குறைவடைந்திருந்தது. விபரங்கள் உரு 81 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு 81 – சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம்
மூலம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்ததைப் போன்று சுற்றுலாப் பயணியொருவரின் சராசரிச் செலவினம் மற்றும் சுற்றுலாப் பயணியொருவர் இலங்கையில் செலவிடும் சராசரி நாட்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமை சுற்றுலா வருமானம் குறைவடைந்தமைக்கு பிரதானமான காரணமாக அமைந்திருந்தது. சுற்றுலாப் பயணியொருவர் இலங்கையில் செலவிடும் சராசரி நாட்களின் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டின் போது 10 ஆக இருந்ததுடன், கடந்த வருடத்தில் அது 11 நாட்களாக இருந்தது. 1987 ஆம் ஆண்டின் போது சுற்றுலாப் பயணியொருவர் இலங்கையில் செலவிடும் சராசரி நாட்களின் எண்ணிக்கையான 13 நாட்களுடன் ஒப்பிடும் போது, அந்த இலக்கினை மீளாய்வாண்டின் போதும் அடைய முடியாதிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது சுற்றுலாப் பயணியொருவரின் சராசரிச் செலவினம் ஐ.அ.டொலர் 181 ஆக இருந்ததுடன், 2018 ஆம் ஆண்டின் போது ஐ.அ.டொலர் 173.8 ஆக காணப்பட்டது. எவ்வாறெனினும், சுற்றுலாப் பயணிகளின் வருகை 18 சதவீதத்தினால் குறைவடைந்தமை சுற்றுலாக் கைத்தொழிலின் வருமானம் 9.22 சதவீதத்தினால் குறைவடைந்தமைக்கு காரணமாக அமைந்திருந்தது.

சுற்றுலாக் கைத்தொழிலின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2019 ஆம் ஆண்டிற்காக சேகரிக்கப்பட்டிருந்த சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் மற்றும் குடியகல்வு வரி வருமானம் ரூபா 3,031 மில்லியனாக காணப்பட்டது. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் மற்றும் இலங்கை சுற்றுலா சம்மேளன பணியகம் ஆகிய 04 நிறுவனங்களுக்காக முறையே 14 சதவீதம், 70 சதவீதம், 12 சதவீதம் மற்றும் 4 சதவீதம் படி வழங்கப்பட்டிருந்தது. மேலும், சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தில் குடியகல்வு வரி வருமானத்தில் பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக ரூபா 801 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு மேலதிகமாக பாதீட்டு மதிப்பீட்டினூடாக சுற்றுலா அபிவிருத்தி பணிகளுக்காக சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சிற்கு ரூபா 318 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### நிதியேற்பாட்டின் குறைப்பயன்பாடு

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சிற்கு சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 318 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றுள் சுற்றுலாக் கவர்ச்சிமிக்க இடங்களை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 120 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றுள் ரூபா 86.24 மில்லியன் அல்லது 28.13 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, மீளாய்வாண்டின் போது கோட்டைகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 100 மில்லியனான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதியளவில் அவற்றுள் ரூபா 47.76 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வறே, புகையிரத நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 50 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 8.71 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

### எதிர்பார்த்த இலக்குகள் நிறைவேற்றப்படாமை

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், உத்தேச பணிகள் 73 இனை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 46 பணிகள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

### விற்பனை மேம்படுத்தல் செலவினம்

மத்தியக் கிழக்கு, ஆஸ்திரியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தினால் ரூபா ….. மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், அந்த நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை 5 சதவீதம் முதல் 146 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது பணியகத்தின் வருடாந்த பாதீட்டில் சுற்றுலா மேம்படுத்தல் பணிகளுக்காக ரூபா 3,347.54 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் ரூபா 2,078.56 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### குடியகல்வு வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை

2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) உப பிரிவின் பிரகாரம், இலங்கையிலிருந்து புறப்படும் கப்பலொன்றில், இலங்கையிலிருந்து செல்லும் ஒவ்வொரு பிரயாணிக்காகவும் விநியோகிக்கப்படும் பயணச்சீட்டிலும் வரி அறவிடப்பட்டு அதில் ஒரு பகுதி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பப்பட வேண்டும். எனினும், அவ்வாறு கப்பல் மூலம் இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்லும் பயணியிடமிருந்து வரி அறவிட்டு அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் தகவல்களின பிரகாரம், 2019 ஆம் ஆண்டினுள் 100,614 பிரயாணிகள் வெளியேறிச் சென்றுள்ளமையால் அதற்காக பிரயாணியொருவரிடமிருந்து ஐ.அ.டொலர் 1.66 படியாக மீளாய்வாண்டிற்கு உரியதாக நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ஐ.அ.டொலர் 167,019 அல்லது ரூபா 29.73 மில்லியனான குடியகல்வு வரி வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு புறம்பாக உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளல்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்காத வகையில் சேவை அனுபவத்தினை பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் இருவர் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை சம்மேளனப் பணியகத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.
மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் பல்வேறு படிகளாக முறையே 8.20 மில்லியன் மற்றும் ரூபா 3.83 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

# மிருகக் காட்சிச்சாலைகள் மற்றும் தாவரவியல் பூங்காக்கள்

நவீன மிருகக்காட்சிசாலை எண்ணக்கருவின் கீழ் கவர்ச்சியான நுட்பங்கள் மற்றும் நிபுணத்துவ முறைமைகளினைப் பயன்படுத்தி, ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிகளுக்கமைய உச்ச பாதுகாப்பின் கீழ் வாழிடத்தினை வழங்கி ஆரோக்கியமான விலங்குகளின் பல்வகைமையை கண்காட்சிப்படுத்தல் எனும் செயற்பணியை நிறைவேற்றுவதற்காக சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் கீழான இரு திணைக்களங்களினால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது.

- ஓய்வினைக் கழிப்பதற்காக களியாட்ட பின்புலமொன்றினை வழங்குவதற்குரிய பணிகளை மேம்படுத்தல்.
- இலங்கையின் தாவரங்களின் பாதுகாப்பு, தாவரவியல் பூங்காக்களின் பராமரிப்பு மற்றும் மலர்ச் செய்கைக் கைத்தொழிலினை அபிவிருத்தி செய்தல்.
- விலங்குகள், பறவைகள் மற்றும் ஊர்வன போன்றவற்றினை சேகரித்தல் மற்றும் காட்சிப்படுத்துவதற்குரிய பணிகள்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக பாராளுமன்றத்தினால் ரூபா 5,590.13 மில்லியனான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 4,755.46 மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய காலப்பகுதிக்குரியதாக பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 17.93 சதவீதம் அல்லது ரூபா 834.67 மில்லியனான நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக் கவில்லை. விபரம் உரு 82 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 82 – பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் பயன்பாடு
மூலம் - பொது திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கைகள்

அமைச்சு மற்றும் திணைக்களங்களினால் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பணியினை நிறைவேற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

### விலங்கு இனப்பெருக்கம் மற்றும் பாதுகாப்பு

விலங்கு இனப்பெருக்கம் மற்றும் பாதுகாப்பானது மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களத்தின் முக்கிய இலக்காகிய போதிலும், 2011 ஆம் ஆண்டு முதல் பின்னவல யானைகள் சரணாலயத்தினுள் எந்தவொரு யானையும் குட்டியை ஈன்றிருக்கவில்லை. யானைகளுக்கு இனப்பெருக்கத்துக்கு அவசியமான விஞ்ஞான ரீதியான பின்புலமொன்று ஏற்படுத்தப்படாமை இதற்கு காரணமாக அமைந்திருந்தது. பின்னவல யானைகள் சரணாலயத்தில் வருடமொன்றிற்கு சுமார் 3 மில்லியன் வருமானம் ஈட்டப்படுவதுடன், அந்த வருமானத்தினை அதிகரித்தல் தொடர்பில்

தாக்கம் செலுத்தும் காரணிகளில் ஒன்றான யானைக் குட்டிகளுக்கு பாலூட்டும் சந்தர்ப்பத்தினை சுற்றுலாப் பயணிகளுக்கு காட்சிப்படுத்த முடியாதிருந்தது.

### வளாகத்தினை சுத்தமாக வைத்திருத்தல்

பின்வல யானைகள் சரணாலயத்தில் நாளாந்தம் சேரும் யானைகளின் மலம் மற்றும் எஞ்சும் உணவுகள் ஆகியவற்றை பொருத்தமான நடைமுறையொன்றினை பின்பற்றி அப்புறப்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. அந்த யானைகளின் மலம் மற்றும் எஞ்சும் உணவுகள் யானைகள் தங்கவைக்கப்பட்டிருக்கும் இடங்களின் அண்மையில் குவிக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக வளாகமானது அசுத்தமாக காணப்பட்டதுடன், சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பினை குறைத்தல் தொடர்பில் அது தாக்கம் செலுத்தியிருந்தது.

### கழிவு நீரினை சுத்தமான நீருடன் கலந்து அப்புறப்படுத்தல்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வெளியிடப்படும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளின் பிரகாரம், எந்தவொரு இடத்திலிருந்தும் கழிவு நீரினை அகற்றும் போது, ஆகக் குறைந்தது அந்த நீரினைப் போன்று எட்டு மடங்காயினும் சுத்தமான நீருடன் கலந்து அந்த நீர் அப்புறப்படுத்தப்பட வேண்டும். எனினும், தெஹிவளை மிருகக்காட்சிசாலையிலி இருந்து அப்புறப்படுத்தப்படும் கழிவு நீரானது அவ்வாறு சுத்திகரிப்படாது அருகில் உள்ள கல்வல எனும் இடத்திற்கு விடுவிக்கப்படுகின்றது. அதன் விளைவாக அந்த பிரதேசித்தின் நீர் நிலைகள் மாசடைதல், சுற்றியுள்ள பொதுமக்களின் சுகாதாரத்திற்கு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தல் போன்ற சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தது.

# மாகாண சபைகளின் அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதினேழாவது திருத்தத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1087 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பது மாகாண சபைகள் தற்போது செயற்பட்டு வருகின்றன. பதிமூன்றாவது திருத்தித்தில் உள்ளடங்கியுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மாகாண சபைகள் நிறைவேற்றுதல் வேண்டும். ஆதற்கமைய, விவசாயம், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, உள்ளூராட்சி மற்றும் சமூக சேவைகள் போன்ற துறைகள் உள்ளிட்ட அநேக துறைகளின் மாகாண மட்டத்திலான அதிகாரங்கள் இந்த மாகாண சபைகளிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகள் சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படுகின்ற ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுவதுடன் அங்குள்ள யாப்பியல் தலைவராக முதலமைச்சர் செயற்படுகின்றார். முதலமைச்சர் உள்ளிட்ட 04 அமைச்சர்களால் மாகாண சபைகளின் அமைச்சரவை நிறைவேற்று அதிகாரம் உருவாக்கப்பட்டுள்ளது. பிரதான செயலாளர் ஒருவர் நிர்வாக அதிகாரியாக கருமமாற்றுவதுடன் சனாதிபதியினால் அவர் நியமிக்கப்படுகின்றார். ஒவ்வொரு மாகாண சபைக்குமென மாகாண நிதியமொன்றும் அவசர தேவை நிதியமொன்றும் காணப்படுகின்றது. மத்திய அரசாங்கத்தின் திரட்டு நிதியத்தினை பெருமளவிற்கு ஒத்ததாக காணப்படுகின்ற இந்த மாகாண நிதியத்திற்கு அரசாங்க மானியம், வரி வருமானம் ஈட்டுதல் மற்றும் ஏனைய வழிகளிலிருந்து நிதிகள் கிடைப்பதுடன் நிதியத்திலிருந்து மீண்டெழும் மற்றும் மூலதன செவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அமைச்சொன்றின் கீழ் கொண்டுவரப்படாது மாகாண சபை நிறுவனங்கள், மாகாண அமைச்சுக்களின் கீழ் கொண்டுவரப்பட்டு சகல திணைக்களங்களையும் உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகளும் நிதிக்கூற்றுக்களும் வருடாந்தம் தயாரிக்கப்படுகின்றன.

அதற்கும் மேலாக, ஒவ்வொரு மாகாண சபையும் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களைக் காண்பித்து மத்திய அரசாங்கத்தின் கணக்கினைப் போன்ற நிதிக்கூற்றுக்களையும் தயாரிக்கின்றன.

ஆரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரை மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபைகளின் கணக்குகளை கணக்காய்வு செய்யும் அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேல், வடமத்திய, சப்ரகமுவ, வடமேல், மத்திய, வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா ஆகிய 9 மாகாணங்களின் 2018 ஆம் ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு இந்த அத்தியாயத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

மேலும் 2018 இன் 18 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## மாகாண சபை வருமானம்

மாகாண சபை வருமானம் அரசாங்க மானியம், வரி மற்றும் வரியல்லாத வருமானங்களை உள்ளடக்கியதாகும்.

## அரசாங்க மானியம்

2019 ஆம் ஆண்டில் 09 மாகாணங்களிற்காக வழங்கப்பட்டிருந்த அரசாங்க மானியம் ரூபா 218 பில்லியனாக காணப்பட்டதுடன், அது 2018 ஆம்

மாகாண சபைகள்

ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 204 பில்லியன் அதிகரிப்பாகும். 2019 ஆம் ஆண்டில் அதிகூடிய மானியமான 15 சதவீதம் மத்திய மாகாணத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அது ரூபா 32 பில்லியனாகும் அத்துடன், வடமேல் மாகாணத்திற்கு மிகைக் குறைந்த மானியம் வழங்கப்பட்டிருந்ததுடன், அது ரூபா 18 பில்லியனாக காணப்பட்டு மொத்த மானியத்தில் 8 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்தது. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த செலவினம் ரூபா 2,959 பில்லியனில் 7 சதவீதமான ரூபா 218 பில்லியன் அரசாங்க மானியமாக வழங்கப்பட்டிருந்தது.

## வரி வருமானம்

2019 ஆம் ஆண்டில் அனைத்து மாகாண சபைகளினதும் வரி வருமானம் ரூபா 78 பில்லியனாக காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது ஏறத்தாழ 4 சதவீத அதிகரிப்பாகும். 2019 ஆம் ஆண்டில் அதிகூடிய வரி வருமானமான ரூபா 41 பில்லியன் அல்லது 53 சதவீதம் மேல் மாகாண சபையால் சேகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2019 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் ஒட்டுமொத்த வரி வருமானமான ரூபா 1,735 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மாகாண சபைகளால் ஏறத்தாழ 4.4 சதவீதத்தை மாத்திரமே சேகரிக்க முடிந்திருந்தது.

## வரியல்லாத மற்றும் ஏனைய வருமானங்கள்

வரியல்லாத மற்றும் ஏனைய வழிகளிலிருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 12 பில்லியன் வருமானம் மாகாண சபைகளால் ஈட்டப்பட்டிருந்தது இது 2018 இல் ரூபா 10 பில்லியனாகும். 2019 ஆம் ஆண்டில் மேல் மாகாணம் ரூபா 4 பில்லியன் வரியல்லாத வருமானத்தை ஈட்டியிருந்தது. இருப்பினும், மாகாண சபைகளின் மொத்த வரியல்லாத வருமானத்தில் 32 சதவீதமாக இருந்ததுடன் அது அரசாங்கத்தின் ஒட்டுமொத்த வரியல்லாத வருமானத்தில் 7 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது.

## அரசாங்க மானியமும் மாகாண சபைகள் உழைத்த வருமானும்

2019 ஆம் ஆண்டில் மாகாண சபைகளிற்காக ரூபா 218 பில்லியன் அரசாங்க மானியம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கொப்பாக மாகாண சபைகளினால் ரூபா 90 பில்லியன் வருமானம் மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது. அதன்படி மாகாண சபைகளை நடாத்திச் செல்வதற்காக ஏறத்தாழ 41 சதவீதமான வருமானத்தை அரசாங்கம் வழங்கவேண்டியிருந்தது. அதற்கமைய ஈட்டப்பட்டிருந்த வருமானம் 36 சதவீதம் மாத்திரமாகும்.

## மாகாண சபைகளின் செலவினம்

ஒவ்வொரு மாகாண சபையினாலும் ஆளனி வேதனம், ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள், பேணுகைச் செலவினம் உள்ளிட்ட மீண்டுவரும் செலவினமும் மூலதனப் பண்புடைய அபிவிருத்திச் செலவினமும் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒட்டுமொத்தச் செலவினம் ரூபா 314 பில்லியனாகும். 2018 இல் அது ரூபா 300 பில்லியனாகும். இருப்பினும் நிதி ஏற்பாட்டினைக் காட்டிலும் ரூபா 14 பில்லியன் 2019 இல் செலவிடப்பட்டிருந்தது. அது நாட்டின் ஒட்டுமொத்தச் செலவினத்தில் 10 சதவீதமாகும்.

## மீண்டுவரும் செலவினம்

2019 ஆண்டில் மாகாண சபைகளால் மீண்டுவரும் செலவினத்திற்காக ரூபா 289 பில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அது 2018 இல் ரூபா 266 பில்லியன் ஆகும். 2019 ஆம் ஆண்டில் ரூபா 2,322 பில்லியன் மீண்டுவரும் செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் அது மொத்த அரசாங்க செலவினமான ரூபா 2,611 பில்லியனுடன் ஒப்பிடத்தக்கதாகும். மாகாண சபைகளால் செய்யப்பட்டிருந்த மீண்டுவரும் செலவினம் 2019 இல் அரசாங்கத்தினால் செய்யப்பட்டிருந்த மீண்டுவரும் செலவினத்தில் 21 சதவீதமாகக் காணப்பட்டது.

மாகாண சபைகள்

மேலும், 2019 இல் ஒவ்வொரு மாகாண சபையினாலும் ஈட்டப்பட்டிருந்த வருமானத்தைக் காட்டிலும் ரூபா 199 பில்லியன் மீண்டுவரும் செலவினத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அது 220 சதவீதம் வரையான வீச்சில் அமைந்திருந்தது. வடக்கு மாகாணம் உழைத்த வருமானத்தைக் காட்டிலும் 638 சதவீமான செலவினத்தை செய்திருந்ததுடன் முறையே கிழக்கு மாகாணம் 563 சதவீதமும் ஊவா மாகாண சபை 637 சதவீதமும் சப்ரகமுவ மாகாண சபை 444 சதவீதமுமாக செலவினம் செய்திருந்தது.

அவ்வாறே 2019 இல் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 218 பில்லியன் வருமானத்தைக் கணக்கிலெடுத்த பின்னரும் கூட மாகாண சபைகளின் மீண்டுவரும் செலவினத்தை ஈடுசெய்வதற்கு அது போதுமானதாக இருக்கவில்லை. ஆகையால் ரூபா 71 பில்லியன் தொகையால் அதிகரித்து மீண்டுவரும் செலவினம் செய்திருந்தது.

### அபிவிருத்திச் செலவினம்

2019 ஆம் ஆண்டில் ரூபா 25 பில்லியன் அபிவிருத்திச் செலவினமாக 09 மாகாண சபைகளால் செலவிடப்பட்டிருந்ததுடன் அது 2018 இல் ரூபா 34.8 பில்லியனாகும். அதற்கமைய 2018 உடன் ஒப்பிடுகையில் அபிவிருத்திச் செலவினத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 10.8 பில்லியனால் குறைவடைந்திருந்தது. மாகாண சபைகள் செலவிட்டிருந்த செலவுகளுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் அரசாங்க நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 637 பில்லியன் அபிவிருத்திச் செலவினமாக செலவிடப்பட்டிருந்தது. மேலும், அதிகூடிய அபிவிருத்திச் செலவினமாக ரூபா 69 பில்லியன் மேல் மாகாண சபையால் செலிவடப்பட்டிருந்ததுடன் குறைவான தொகையான ரூபா 0.3 பில்லியன் கிழக்கு மாகாணத்தால் செலிவிடப்பட்டிருந்தது.

## மாகாண சபைகளின் சொத்துக்கள்

2018 ஆம் ஆண்டில் ரூபா 222 பில்லியன் என இனங்காணப்பட்டிருந்த மாகாண சபைகளின் மொத்தச் சொத்துக்கள் 2019 ஆம் ஆண்டில் ரூபா 230 பில்லியன் என இனங்காணப்பட்டிருந்தது. அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3 சதவீத வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் காணப்பட்ட மொத்தச் சொத்துக்களின் அளவு ரூபா 2,199 பில்லியனாகக் காணப்பட்டது. அதற்கமைய, 2018 ஆம் ஆண்டில் மாகாண சபைகளினதும் மத்திய அரசாங்கத்தினதும் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,133 பில்லியனாக காணப்பட்டதுடன் அது 2019 ஆம் ஆண்டளவில் ரூபா 66 பில்லியனால் அல்லது 3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## நடைமுறையல்லாத சொத்துக்கள்

2018 ஆம் ஆண்டில் மாகாண சபைகளில் காணப்பட்ட மொத்த நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 179 பில்லியனாக இருந்தது. அது 2019 இன் இறுதியில் ரூபா 11 பில்லியனால் அதிகரித்து ரூபா 190 பில்லியனாக மாற்றமடைந்திருந்தது. இந்த நடைமுறையல்லாத சொத்துக்களில் மாகாண சபைகளினால் விலைமதிப்புச் செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 177 பில்லியனும் உள்ளடங்கியிருந்தன. மீளாய்வாண்டில் மத்திய அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியிருந்த ரூபா 1,355 பில்லியன் நடைமுறையல்லாத சொத்துக்களுடன் இணைத்து மாகாண சபைகளினதும் மத்திய அரசாங்கத்தினதும் மொத்த நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,545 பில்லியனாகும்.

### நடைமுறைச் சொத்துக்கள்

2018 ஆம் ஆண்டில் ரூபா 42 பில்லியன் ஆகக் காணப்பட்ட நடைமுறைச் சொத்துக்கள் 2019 ஆம் ஆண்டில் ரூபா 40 பில்லியன் வரை குறைவடைந்திருந்து. மாகாண சபைகளினதும் மத்திய அரசாங்கத்தினதும் மொத்த நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதி 2019 ஆம் ஆண்டில் ரூபா 884 பில்லியனாகும்.

### நடைமுறைப் பொறுப்புக்கள்

2018 ஆம் ஆண்டில் ரூபா 13.9 பில்லியன் ஆகக் காணப்பட்ட நடைமுறை பொறுப்புக்கள் 2019 ஆம் ஆண்டில் ரூபா 13.5 பில்லியன் வரை குறைவடைந்திருந்து. மாகாண சபைகளினதும் மத்திய

அரசாங்கத்தினதும் மொத்த 2019 ஆம் ஆண்டில் ரூபா 12,645 நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதி பில்லியனாகும்.

# மேல் மாகாண சபை

மேல் மாகாண சபையினால் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 24,477 மில்லியன் தொகை அரச மானியங்களின் மூலலும், உள்ளக வழிகளில் ரூபா 56,804 மில்லியனுமாக ரூபா 81,281 மில்லியன் கூட்டுத்தொகை வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 68,377 மில்லியன் தொகையும், மூலதன செலவினங்களுக்காக ரூபா 12,904 மில்லியனுமாக ரூபா 81,281 மில்லியன் கூட்டுத்தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது அரசின் நன்கொடைகள் மூலம் ரூபா 21,608 மில்லியனும், உள்ளக வழிகளினூடாக ரூபா 44,922 மில்லியனுமாக ரூபா 66,530 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீண்டெழும் செலவினம் ரூபா 61,380 மில்லியன் மற்றும் மூலதன செலவினம் ரூபா 7,591 மில்லியனுமாக ரூபா 68,971 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் மற்றும் கடந்த 4 வருடங்களின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் உரு 82 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 82 - மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம்
மூலம் - மேல் மாகாணசபையின் நிதிக்கூற்று

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

### பாடசாலையொன்றிற்காக பேரூந்துகளை பெற்றுக்கொள்ளல்

கம்பஹா கல்வி வலையத்தின் மஹா வித்தியாலயமொன்றிற்காக பேரூந்தொன்றினை கொள்வனவு செய்வதற்காக பழைய மாணவர் சங்கத்தினால் பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கு எவ்வித வலியுறுத்தலும் இல்லாது, வெளிவாரி தரப்பினரிடம் நிதி சேகரிப்பதாக குறிப்பிட்டு அதற்காக அதிபரின் அங்கீகாரத்தினை பெற்று நிதி சேகரிக்கப்பட்டிருந்தது. இந்த நோக்கத்திற்காக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பாடசாலைக்கு புதிதாக சேரும் பிள்ளைகளும், கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திடமிருந்தும் சேகரிக்கப்பட்ட ரூபா 6.65 மில்லியன் தொகை சேமிப்பு வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பேரூந்தினை கொள்வனவு செய்யும் நோக்கத்திற்கு புறம்பான கட்டிடமொன்றினை கொள்வளவு செய்யும் நோக்கத்திற்காக அந்த வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ள தொகையில் ரூபா 5.07 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2018 நவம்பர் 19 மற்றும் 30 ஆந் திகதிகளில்

பேரூந்தினை கொள்வனவு செய்வதற்காக அடிப்படை கொடுப்பனவாக ரூபா 1.20 மில்லியன் மோட்டர் வானகங்களை விற்பனை செய்யும் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 2.70 மில்லியனை செலுத்துவதற்காக எவ்வித அங்கீகாரமுமின்றி நிதிக் நுத்தகை கம்பனியொன்றிடம் 23.5 சதவீத வருடாந்த வட்டிக்கு 24 மாதங்களில் மீள செலுத்தும் அடிப்படையில் சுழற்சி கடன் வசதியொன்று அதிபரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2019 சனவரி 01 ஆந் திகதி வரையிலும், பேரூந்து பாடசாலைக்கு கிடைத்திருந்ததுடன், அது அதிபரின் தனிப்பட்ட பெயரில் மோட்டார் வாகன திணைக்களத்தில் பதிவு செய்திருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் பதிவினை பாடசாலையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### நேரக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை பொருத்துதல்

மேல் மாகாண சபையின் சபை செயற்குழுக் கூட்டத்தின் போது அங்கத்தவர்களின் அறைகள் All Committee Rooms (ABC) , மற்றும் சபை மண்டபத்தினுள் நேரக் கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை (Master Clock System) பொருத்துவதற்கும், அதற்கு மேலதிகமாக Digital Digits இல் நேரத்தினை காட்டும் கடிகாரம் தற்போதைய சபை மண்டபத்திலும், சபை செயலாளரின் அறையிலும், சபை செயலக வளாகத்திலும் பொருத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த தீர்மானத்திற்கு இணங்காத வகையில் முழுமையான மாகாண சபைக் கட்டிடத்திலும் பொருத்துவதற்காக ஒவ்வொன்றும் ரூபா 35,387 படியான Analog கடிகாரங்கள் 142 மற்றும் ஒவ்வொன்றும் 96,471 படியான Digital கடிகாரங்கள் 27 இனை கொள்வனவு செய்வதற்காக ரூபா 12.94 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. கடிகாரங்களை பொருத்தும் போது தேவையற்ற முறையில் ஒரே இடத்தில் கடிகாரங்கள் பொருத்தப்பட்டிருந்தல் மற்றும் ஒவ்வொரு கடிகாரத்திலும் வெவ்வேறு நேரங்கள் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேல் மாகாண சபைக் கட்டிடத்தில் காணப்படும் அசையும் மற்றும் அசையாத சொத்துக்களின் பொறுப்பினை ஒப்படைத்தல் மற்றும் பொருட்பதிவேட்டிற்கு உட்படுத்தல் ஆகியவற்றுக்குரியதாக 2019 ஒக்தோபர் 02 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த 09/2019 சுற்றறிக்கைக்கு இணங்க இந்த கடிகாரங்கள் 2020 பெப்ரவரி 17 ஆந் திகதி வரையிலும் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### மேல் மாகாண சபையின் நிதிப் பிரிவிற்கு செயற்பாட்டு கட்டமைப்பொன்றினை கொள்வனவு செய்தல்

மேல் மாகாணத்திற்கு தேவையான மென்பொருள் கட்டமைப்பொன்றினை தாபிப்பதற்காக மாகாண சபைக்கு செந்தமான மேல் மாகாண சபை தகவல் தொழில்நுட்ப வள அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த மென்பொருள் தேவைப்பாடு மற்றும் வழங்கப்பட வேண்டிய வசதிகள் தொடர்பில் முறையான கற்கையொன்றின் பின்னர் அந்த நிறுவனத்தினால் கொள்வனவு செய்தல் அல்லது கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டியதாக காணப்பட்டது. எனினும், அந்த அதிகாரசபை தாபிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தாது, குறித்த கட்டமைப்பின் தேவைப்பாடு உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆராயாது மேல் மாகாண சபையின் நிதிப் பிரிவினால் செயற்பாட்டு கட்டமைப்பொன்றினை கொள்வனவு செய்வதற்காக ரூபா 7.71 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதன் திரண்ட கணக்கின் தகவல்களை பெற்றுக்கொள்ளும் வசதிகள் காணப்படுவதுடன், மற்றுமொரு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக அல்லாது அந்த வசதிகளை பயன்படுத்த முடியுமான போதிலும், அது தொடர்பில் கவனம் செலுத்தாது இந்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### வெளிநாட்டு பயணங்கள்

அனைத்து ஆளுநர்களும் மற்றும் மாகாண பிரதம செயலாளர்களை விளித்த 2017 சனவரி 26 ஆந் திகதிய CSA/1/4 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதத்தில், 02 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாடு செல்லும் குழுக்களின் எண்ணிக்கை 05 இனை விட குறைவு ஆயின், திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும். எவ்வாறெனினும், வெளிநாடு செல்லும் குழுக்களின் எண்ணிக்கை 05 இனை விட குறைவான போதிலும் திறைசேரியின்

அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது ஆளுநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது 28 மக்கள் பிரதிநிதிகள் மற்றும் 21 உத்தியோகத்தர்கள் 13 வெளிநாட்டு பயணங்களில் பங்குபற்றியிருந்ததுடன், அதற்காக ரூபா 66.78 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

# மத்திய மாகாண சபை

மத்திய மாகாண சபையால் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 36,436 மில்லியன் அரசாங்க மானியத்தினாலும், உள்ளக மார்க்கங்களில் ரூபா 9,820 மில்லியனுமாக ரூபா 46,256 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் மீண்டெழும் செலவினமாக ரூபா 39,529 மில்லியனும் மூலதனச் செலவினமாக ரூபா 6,806 மில்லியனுமாக மொத்தம் ரூபா 46,335 மில்லியனைப் பயன்படுத்துவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 32,230 மில்லியனும் உள்ளக மார்க்கமாக ரூபா 7,836 மில்லியனுமாக ரூபா 40,066 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினமாக ரூபா 37,567 மில்லியனும் மூலதனச் செலவினமாக ரூபா 2,745 மில்லியனுமாக ரூபா 40,312 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் வரைபடம் 83 இல் காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் 83 மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மூலம் மத்திய மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள்

மத்திய மாகாண சபைக்குரிய 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### நீர் வரி அறவீடு சட்ட மற்றும் காலரீதியில் திருத்தம் செய்யப்படாமை

கண்டி மாவட்டதின் 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் 13 சிறிய நீர் மின் நிலையங்கள், பௌதீக ரீதியாக பரீட்சித்த போது குறித்த மின் நிலையங்களிலிருந்து 2019 ஆம் ஆண்டில் நீர் வரியாக ரூபா 2.29 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. குறித்த கம்பனிகள் இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 54,782,387 கிலோ வோட் மின்சாரத்திற்கான ரூபா 848.27 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. நீர்வரி அறவீடு சட்ட ரீதியாக திருத்தம் செய்யப்படாமை காரணமாக உழைத்த வருமானத்திற்கு ஒப்பாக அறவிடப்பட்டிருந்த நீர் வரி 0.27 சதவீதமாக இருந்தது. உடபலாத்த பிரதேச செயலகத்தில் பதிவேட்டிற்கு உட்படுத்தப்படாதிருந்த 04 சிறிய நீர் மின் நிலையங்கள் 2019 சனவரி மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 8,430,932 கிலோ வோட் மின்சாரத்தை உற்பத்தி செய்திருந்ததுடன் அதன் மூலம் ரூபா 118.03 மில்லியன்

வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதும், எவ்வித வரியும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வருமானத்தை அனுப்பாமை

மாகாண சபையால் உள்ளூராட்சி மன்றங்களுக்காக சேகரிக்கப்படும் முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் உரிய உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசங்களின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு சமூக சேவைகளை நிறைவேற்றுவதற்கும் அந்த நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய போதும், மத்திய மாகாண சபையால் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 2,481.66 மில்லியன் குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### மத்திய மாகாணத்திற்காக ஐந்தாண்டு திட்டமொன்று தயாரித்தல்

மத்திய மாகாண சபையின் நிர்வாக கட்டமைப்பில் பிரதி பிரதான செயலாளர் திட்டமிடல் பதவியின் கீழ் வரும் திட்டமிடல் துறைக்குரிய அறிவினைக் கொண்ட 09 பேர் உட்பட 37 பேருடனான பதவியணியொன்று இணைக்கப்பட்டிருந்தனர். நிலைபேறான அபிவிருத்திக்காக மத்திய மாகாண சபைக்குமான ஐந்தாண்டு திட்டமொன்றை தயாரிப்பதற்காக அத்துறை தொடர்பாக எவ்வித தொடர்புமில்லாத வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்துடன் ரூபா 4.69 மில்லியனான ஒப்பந்தமொன்றிற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அத்திட்டம் தொடர்பாக அறிவூட்டுவதற்காக நேரடியாக பொறுப்பினை வகிக்கும் 07 பேருக்கு ரூபா 1.75 மில்லியன் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2019 – 2023 காலப்பகுதியில் இத்திட்டம் செயற்படுத்த வேண்டிய போதிலும், 2020 சனவரி 23 ஆந் திகதி வரை சிங்கள வன் மற்றும் மென்பொருட்கள் சமர்ப்பிக்கப்படாமல் இருந்தது. 2020 ஆம் ஆண்டிற்காக இத்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### உத்தியோகபூர்வ விடுதி வீதம் வழங்குதல்

1988 இன் 27 ஆம் இலக்க மாகாண சபைகள் (சம்பள மற்றும் படிகள்) சட்டத்தின் 2(அ) மற்றும் (ஆ) பிரிவு மற்றும் 2019 மார்ச் 05 ஆந் திகதிய 10/2007 (i) ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் வீட்மைப்பு வசதிகள் வழங்குதல் என்ற தலைப்பில் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஆளுநருக்கும் பிரதான அமைச்சுக்கும் ஒரு உத்தியோகபூர்வ விடுதி வீதம் வழங்கப்பட வேண்டியிருந்தது. எனினும், ஆளுனருக்கும் பிரதான அமைச்சருக்கும் கண்டி மற்றும் நுவரெலியா நகரங்களில் இரண்டு வீடுகள் வீதம் வழங்கப்பட்டிருந்தன.

### அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் வெளிநாடு செல்லல்

2017 சனவரி 26 ஆந் திகதிய சீஏஎஸ்ஏ/1/4 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாடு செல்லும் குழுவின் எண்ணிக்கை 05 பேருக்கு கூடுதலாக இருந்தால் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டதன் பின்னர் சனாதிபதி செயலாளரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. 09 மாகாண சபையின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் உட்பட 18 பேர் சமூகமளித்த வெளிநாட்டு சுற்றுலாவிற்காக மேன்மை தங்கிய சனாதிபதியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் இருந்ததுடன் சுற்றுலாவில் பங்குபற்றிய மத்திய மாகாண சபையின் கௌரவ தலைவர் மற்றும் சபை செயலாளருக்கான ரூபா 2.36 மில்லியன் மாகாண சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

# தென் மாகாண சபை

தென் மாகாண சபையினால் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 28,362 மில்லியன் தொகை அரச மானியங்களின் மூலமும், உள்ளக வழிகளிலிருந்து ரூபா 8,745 மில்லியனுமாக ரூபா 37,107 மில்லியன் கூட்டுத்தொகை வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு சேகரிக்கப்படும் வருமானங்களிலிருந்து 2019 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 34,719 மில்லியன் தொகையும், மூலதன செலவினங்களுக்காக ரூபா 5,842 மில்லியனும் செலவிடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டின் போது அரசின் மானியங்கள் மூலம் ரூபா 27,697 மில்லியனும், உள்ளக வழிகளினூடாக ரூபா 8,795 மில்லியனுமாக ரூபா 36,492 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட வருமானங்களிலிருந்து மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 33,919 மில்லியன் தொகையும் மூலதன செலவினத்திற்காக 3,853 மில்லியனுமாக மொத்தம் ரூபா 37,772 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. முன்னைய 04 ஆண்டுகளுடன் ஒப்பிட்டு மீளாய்வாண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் உரு 84 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 84 – மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம்
மூலம் - வடமேல் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள்

தென் மாகாண சபையினால் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

## தகவல் நிலையமொன்றை நிர்மாணித்தல்

தென் மாகாண பிரதம அமைச்சகம் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளுராட்சி, போக்குவரத்து, சுகாதாரமும் சுதேசிய மருத்துவமும், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சு ஆகியவற்றால் யசோராபுர மாதிரிக் கிராமத்திற்காக தகவல் நிலையமொன்றை நிர்மாணித்தல் வேலைகளை 2016 திசெம்பர் 31 இல் பூரணப்படுத்துவதற்கு இணங்கப்பட்டு ரூபா 26.92 மில்லியன் தொகைக்குரிய ஒப்பந்தத்திற்காக தனியார் நிர்மாண நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த திகதியிலிருந்து 08 நாட்களிற்குள் 02 மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்தது. அதன்படி, உடன்படிக்கையில் குறிப்பிட்டிருந்த காலத்தினுள் அக்கட்டிடத்தினை நிர்மாணித்து முடிக்க முடியாது என்பது தெளிவாக காணப்படுகின்ற போதிலும், அதனைக்

கருத்திற்கொள்ளாது உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன், அந்த நிர்மாணப் பணிகள் 2019 இன் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயலாற்றல் பிணைமுறியின் காலத்தினை நீடித்துக்கொள்ளாது நிர்மாண வேலைகள் 842 நாட்களிற்கு காலநீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. “லெமினேடிங் டெம்பர்ட்” வேலையினை மேற்கொள்வதற்காக போலியாக ரூபா 7.41 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணப் பணியின் காலம் நீடிக்கப்பட்டிருந்தமையால், விலை வேறுபாடுகளிற்காக ரூபா 723,664 தொகையும் மேலதிக வேலைகளிற்காக ரூபா 357,566 தொகையுமாக மொத்தம் ரூபா 822 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## மேலதிகநேர மற்றும் விடுமுறை தின படிகளைச் செலுத்துதல்

தென் மாகாண பிரதம அமைச்சகம் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளுராட்சி, போக்குவரத்து, சுகாதாரமும் சுதேசிய மருத்துவமும், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சின் உத்தியோகத்தர்கள் வார நாட்களில் கடமைகளிற்காக சமூகமளிக்கையில் கைவிரல் அடையாளமிடுதல் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. வார இறுதி மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் கைவிரல் அடையாளமிடுதலை பயன்படுத்தாது மேலதிகநேர மற்றும் விடுமுறை தினங்களில் சேவையில் ஈடுபட்டமைக்காக ரூபா 914,624 படி செலுத்தப்பட்டிருந்தது.

## நிர்மாண வேளைகளிற்காக மிகையாகக் கொடுப்பனவு செய்தல்

சமூக நலனோம்பல், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்திற்குரிய ரூபா 3.75 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமுடைய ஹல்பொத நிவர்தன இல்லத்தின் மதகினையும் மதிற்சுவரினையும் நிர்மாணிக்கும் வேலைகள் தகைமைப் பரிசோதனையொன்றை மேற்கொள்ளாது உரிய நிதி வரம்பினை மீறி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாண வேலைகளிற்காக மொத்தம் ஒரு மில்லியன் ரூபா தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## முறையற்ற கொடுப்பனவுகள்

தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் ஹுங்கம கமத்தொழில் வளவில் பௌதீக மூலதனச் சொத்துக்களை கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்திசெய்தல் செயற்திட்டத்திற்காக ரூபா 3.39 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்குப் பயன்படுத்த முடியாத கட்டிடப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் சேவைகளிற்காக ரூபா 332,050 தொகையும் பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத ஊழியர்களிற்குரிய அங்கீகரித்த கூலி வீதத்தினைக் காட்டிலும் அதிகமாகவும் வேலையில் ஈடுபட்ட வார நாட்களை மிகைத்தும் ரூபா 443,750 தொகையுமாக மொத்தம் ரூபா 1.91 மில்லியன் முறையற்ற விதத்தில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

# வட மாகாண சபை

வடமாகாண சபையானது அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 25,742 மில்லியன் மற்றும் வருமானத்தின் ஏனைய உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 3,945 மில்லியன் உள்ளடங்களாக ரூபா 29,686 மில்லியன் தொகையான வருமானத்தை 2019 ஆம் ஆண்டிற்காக மதிப்பிட்டிருந்ததுடன் மதிப்பிட்ட வருமானத்தில் மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 25,382 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்காக ரூபா 4,488 மில்லியன் உள்ளடங்களாக ரூபா 29,870 மில்லியன் கூட்டுமொத்தத் தொகை செலவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 23,614 மில்லியன் மற்றும் வருமானத்தின் ஏனைய உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 5,122 மில்லியன் உள்ளடங்களாக 2019 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட்ட ரூபா 28,736 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானத்தில் 2019 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 24,463 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்காக ரூபா 2,588 மில்லியன் உள்ளடங்களாக ரூபா 27,051 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்த செலவினம் 2019 ஆம் ஆண்டின் போது ஏற்பட்டிருந்தது. இவ்வாண்டுக்கானதும் கடந்த 04 ஆண்டுக்குமானதுமான பாதீட்டு வருமான செலவினங்கள் மற்றும் உள்ளக வருமான செலவு விபரங்கள் பின்வரும் உரு 85 இல் காட்டலாம்.




உரு 85 – மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம்
மூலம் - வடமேல் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள்

### நிதி மோசடித்தன்மையிலான கொடுக்கல் வாங்கல்

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் யா/சிதம்பராக் கல்லூரிக்கு பிரமாண அடிப்படையிலான கொடை நிதி மூலம் ரூபா 0.3 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட கூடைப் பந்தாட்டத் திடல் ஆரம்பகட்ட வேலைகளுடன் இடைநிறுத்தப்பட்ட போதிலும் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டிராத ஒரு வேலைக்காக கொடுப்பனவு கணியச்சிட்டையானது வேலைகள் ஒப்பந்தகாரரால் தயாரிக்கப்பட்டு ரூபா 285இ000 ஆன தொகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது

### செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத்திட்டத்தின் கீழ் வடக்குமாகாண கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் கூட்டுமொத்தம் ரூபா 44.73 மில்லியன் பெறுமதியான 05 கட்டிட நிர்மாண வேலைகள் முழுமையாக நிறைவேற்றாமல் கைவிடப்பட்டுள்ளமை கணக்காய்வு பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண சபை

கிழக்கு மாகாண சபையால் 2019 ஆம் ஆண்டிற்காக அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 21,612 மில்லியன் தொகை மற்றும் உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 4,830 மில்லியன் தொகை உள்ளடங்கலாக ரூபா 26,442 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 26,442 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 3,929 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 30,371 மில்லியன் கூட்டுமொத்தம் 2019 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 21,612 மில்லியன் மற்றும் உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 3,921 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 25,533 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் 2019 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது. மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 26,012 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 1,996 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 28,008 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் போது மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் மற்றும் உள்ளபடியானவை தொடர்பான விபரங்கள் கீழே வரைபு 86 இல் காட்டப்பட்டுள்ளன.




வரைபு 86 - மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம்
மூலம் - கிழக்கு மாகாண சபையின் நிதிக்கூற்று

கிழக்கு மாகாண சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட பொருண்மை யானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## இரு மொழி மூல மாணவர்களுக்கான தனியான வகுப்புக்களை நடாத்துதல்

2008 ஏப்ரல் 21 ஆம் திகதிய 2008/12 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் இரு மொழி மூலம் (Bi-medium) கற்கின்ற மாணவர்களுக்காக தனியான வகுப்புபொன்று இருக்கக்கூடாததுடன் அவர்கள் சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலமான மாணவர்களுடன் கலந்திருக்க வேண்டும்.

மேலும் அவர்கள் ஆங்கிலத்தில் உரிய பாடத்தை கற்கும் போது மாத்திரம் அவர்கள் பிரிக்கப்பட வேண்டும். அதற்கிணங்க நேர அட்டவணையை ஒழுங்கமைப்பது அதிபரின் கடமையாகும். எனினும் மேற்படி சுற்றிக்கைக்கு முரணாக இரு மொழி மூலமான கல்விக்காக திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா கல்வி வலயத்தில் சிங்களம்/ தமிழ் மொழி மூலம் கற்கின்ற மாணவர்களிற்கு அவர்கள் கலந்திருக்கும் வகுப்புக்களை நடாத்தாமல் ஆங்கில மொழிமூலம் கற்கின்ற மாணவர்களிற்கு 06 பாடசாலைகளில் 20 தனிப்பட்ட வகுப்புக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

### செயலாற்றும் அதிபர்களின் நியமனம்

கல்வி அமைச்சின் 1998 யூலை 06 ஆம் திகதிய 1998/23 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தகைமை பெற்ற அதிபர்கள் நியமனம் செய்யப்படும் வரை மாத்திரமே செயலாற்றும் அதிபர்கள் நியமனம் செய்யப்பட முடியும். எனினும் இலங்கை ஆசிரியர் சேவையின் (எஸ்எல்ரீஎஸ்) 27 ஆசிரியர்கள் மேற்படி சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக கிண்ணியா கல்வி வலயத்தில் செயலாற்றும் அதிபர்களாக நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

### அதிபர்களின் இணைப்பு

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் இலங்கை அதிபர் சேவையின் (எஸ்எல்பிஎஸ்) 08 உத்தியோகத்தர்கள் எந்தவொரு பாடசாலை பொறுப்புமில்லாமல் பாடசாலைகளுக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தனர். எனினும் கிண்ணியா கல்வி வலயத்தின் பாடசாலைகளிலுள்ள அதிபர் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

### ஆசிரியர்களின் இணைப்பு

தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளில் ஆசிரியர்கள் தற்காலிக அடிப்படையில் பாடசாலைகளிற்கு இணைப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் கிண்ணியா கல்வி வலயத்தின் 21 ஆசிரியர்கள் 02 ஆண்டுகள் தொடக்கம் 07 ஆண்டுகள் வரையான காலவீச்சில் தேசிய பாடசாலைகளிலிருந்து மாகாண பாடசாலைகளிற்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தனர். மேலும் சம்பளங்கள் தேசிய பாடசாலைகளின் சம்பளப்பட்டியல்களிலிருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும் தற்காலிக இணைப்புக்களை இரத்துச்செய்து அவர்களை பொருத்தமான பாடசாலைகளில் அமர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### அதிபர்களின் மிகை

31 அதிபர்கள் மிகையாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் கல்முனை கல்வி வலயத்தின் அதிபர் பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அல்லது அவர்களை வெளி வலயங்களிற்கு இடமாற்றம் செய்வதற்கும் கல்முனை கல்வி வலயத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### ஆசிரியர் மிகை

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் ஆரம்ப மட்டம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில பாடநெறிகள் போன்ற பிரதான பாடநெறிகளுக்கு 472 ஆசிரியர்கள் மேலதிகமாக அறிக்கையிட்டிருந்தனர். எனினும் கல்முனை கல்வி வலயம் பற்றாக்குறைகள் அறிக்கையிடப்பட்டிருந்த பாடசாலைகளிற்கிடையே பதவியணியினரை சமர்ப்படுத்துவதற்கு அல்லது அவர்களை வெளி வலயங்களிற்கு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

### மாணவர்களின் இடைவிலகல்

கல்முனை கல்வி வலயத்திலுள்ள 17 பாடசாலைகள் பாடசாலைகளின் தரநிலையை பேணுவதற்காகவும், மாகாண தரப்படுத்தலுக்காகவும் க.பொ.த. சா/த பரீட்சைக்கு தோற்றுவதற்கு திறமையாக செயற்பட்டிருக்காத மாணவர்களை அனுமதித்திருக்கவில்லை. இதன் விளைவாக மாணவர்கள் எந்தவொரு கல்வித் தகைமையுமின்றி பாடசாலைகளை விட்டு விலக வேண்டியிருந்ததுடன் இந்நடைமுறை குறித்த மாணவர்களின் உயர் கல்வியை மோசமாக பாதிக்கும்.

### ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படாமை

கல்வி அமைச்சின் 2007 திசெம்பர் மாத 20/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 08 ஆண்டுகளுக்கு மேலான காலத்தை பூர்த்தி செய்திருந்த ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் கல்முனை கல்வி வலயத்திற்கு இணைப்புச்

செய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் 311 ஆசிரியர்கள் எந்தவொரு இடமாற்றமும் இல்லாமல் 08 ஆண்டுகள் தொடக்கம் 15 ஆண்டுகள் வரையான காலவீச்சில் ஒரே பாடசாலையில் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இது தொடர்பாக முறையான இடமாற்றக் கொள்கை வலயத்தால் பின்பற்றப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

### மாகாண இறைவரி ஆணையாளர் நியமனம் செய்யப்படாமை

2008 இன் 01 ஆம் இலக்க நிதிச் சட்டமூலத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண இறைவரி ஆணையாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் 2011 திசெம்பர் 18 இலிருந்து மாகாண இறைவரி ஆணையாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் இப் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக 08 ஆண்டுகளாக மாகாண இறைவரி ஆணையாளரொருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. நிதிச் சட்டமூலத்தில் குறிப்பிட்டவாறு கிழக்கு மாகாணத்தின் மாகாண வருமானத்தின் சேகரிப்பு மற்றும் நிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகள் பெரிய பரப்பொன்றிற்கு தாக்கமளித்திருந்தது.

### ஆதனத்தின் முகப்பெறுமதி மாற்றப்படாமை

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் ஆதனங்களின் குறைவான பெறுமதியை வெளிப்படுத்தியதற்காக ஆதனத்தின் பெறுமதி தொடர்பாக ரூபா 42 மில்லியன் கூட்டுமொத்தமான மேலதிக முத்திரைத் தீர்வையை மாகாண இறைவரித் திணைக்களம் சேகரித்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி திணைக்களத்தின் மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்பட்ட புதிய மதிப்பீட்டின் பிரகாரம் காணி பதிவகத்தில் ஆதனத்தின் முகப்பெறுமதியை மாற்றுவதற்கு திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் காணி பதிவகத்தின் பதிவாளரிற்கு திணைக்களம் அறிவித்திருக்கவில்லை. இதன் விளைவாக மதிப்பிடப்பட்ட ஆதனத்தின் பழைய பெறுமதி காணி பதிவகத்தில் பல ஆண்டுகளாக மாற்றப்படாமல் காணப்பட்டிருந்தது.

### முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்களை சேகரித்தல்

கிழக்கு மாகாணத்திலுள்ள காணிப் பதிவகத்தில் காணிகளை பதிவு செய்வதிலிருந்து முத்திரைத் தீர்வையை சேகரிப்பது தொடர்பாக மாகாண இறைவரித் திணைக்களத்தால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது நடாத்தப்பட்ட நடமாடும் சேவையின் பிரகாரம் 794 காணி உரிமையாளர்கள் முத்திரைத் தீர்வையாக குறைந்த தொகையை செலுத்தும் பொருட்டு அவர்களது காணிகளிற்காக குறைந்த பெறுமதியை வெளிப்படுத்தியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் அவ்வாறு குறைவாக பெறுமதியிடப்பட்ட ஆதனங்களிற்காக மாகாண இறைவரித் திணைக்களத்தால் ரூபா 14 மில்லியன் கூட்டுமொத்தமான மேலதிக முத்திரைத் தீர்வை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் காணி உரிமையாளர்களிற்கு விதிக்கப்பட்ட ரூபா 1.79 மில்லியன் நிலுவையாகவுள்ள முத்திரைத் தீர்வையை அவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு 2019 திசெம்பர் 31 வரையிலும் மாகாண இறைவரித் திணைக்களத்தால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### வரி ஏய்ப்புக்களிற்கு தண்டப்பணம் விதிக்கப்படாமை

2008 இன் 1 ஆம் இலக்க நிதிச்சட்டமூலத்தின் 57(ஆ) பிரிவின் பிரகாரம் வரி ஏய்ப்புக்களிற்காக சரியான தீர்வைத் தொகைக்கு மூன்று தடவைகளை விஞ்சாமல் தண்டப்பணம் விதிக்கப்பட முடியும். எனினும் திணைக்களத்தின் மதிப்பீட்டாளர் 115 காணி உரிமையாளர்களிற்குரிய முத்திரைத் தீர்வை வரி ஏய்ப்பு தொடர்பாக ஒற்றைச் சதவீதத்தையேனும் விதித்திருக்கவில்லை. இதன் விளைவாக குறிப்பிடத்தக்களவு வருமானம் மாகாண சபையால் இழக்கப்பட்டிருந்தது.

### உறுதிகள் மதிப்பிடப்படாமை

2012 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியின் போது கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட ஆறாயிரத்து இருபத்தாறு (6,026) உறுதிகள் காணிகள் குறைவாகப் பெறுமதியிடப்பட்டதன் காரணமாக மேலதிக முத்திரைத் தீர்வையை சரிபார்த்து விதிப்பதற்காக மாகாண இறைவரித் திணைக்களத்தால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக கிழக்கு மாகாண சபை குறைவான

காணி மதிப்பீட்டிலிருந்து மேலதிக முத்திரைத் தீர்வை வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### சொந்த நிதிகள் உருவாக்கப்படாமை

கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளரினால் வழங்கப்பட்ட 2014 யூன் 20 ஆம் திகதிய ஜீ/ஈபிசீ/பீ/14/ஆர்/எச்.ஏ ஆம் இலகக் கடிதத்தின் பிரகாரம் மாகாண வீடமைப்பு அதிகாரசபையானது திரட்டு நிதியத்தில் தங்கியிருக்காது அதனது சொந்த நிதிகளை உருவாக்க வேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டு சம்பளங்கள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் போது நிதிகள் கிடைக்கப்பெற்றிருந்தன. எனினும் அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து 05 ஆண்டுகள் கடந்திருந்த பின்னரும் செலவினத்தை எதிர்கொள்வதற்கு அதனது சொந்த நிதிகளை உருவாக்கும் பொருட்டு எந்தவொரு வணிக நடவடிக்கையையும் அதிகாரசபை ஆரம்பித்திருக்கவில்லை.

### நிரந்தரப் பதவியணி உருவாக்கப்படாமை

அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் மூன்று ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அதிகாரசபையின் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை வினைத்திறனாக ஆற்றுவதற்கு தேவையான பதவியணிகளை உருவாக்குவதற்கும் தேவையான உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் 08 உத்தியோகத்தர்கள் அவர்களது ஏற்கனவேயுள்ள உண்மையான பதவிகளிற்கு மேலதிகமாக மேற்பார்வை கடமை அடிப்படையில் அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

### தலைவரின் முறையற்ற நியமனம்

2013 இன் 2 ஆம் இலக்க கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை சட்டத்தின் 1(I) ஆம் பகுதியின் 03(3) ஆம் பிரிவின் பிரகாரம் நபரொருவர் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக காணப்பட்டால் அவர் அதிகாரசபையின் தலைவர் ஒருவராக நியமனம் செய்யப்படுவதற்கு தகைமை அற்றவராவார். எனினும் அக்காலப்பகுதியின் போது ஏறாவூர் நகரசபை உறுப்பினர் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு சபைக் கூட்டங்களில் பங்குபற்றிய நபரொருவர் மேற்படி சட்டமூலத்திற்கு முரணாக 2019 சனவரி 30 இல் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் தலைவராக நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

2006 இன் 01 ஆம் இலக்க கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியக சட்டமூலத்தின் 11(அ) பிரிவின் பிரகாரம் நபரெருவர் உள்ளூராட்சி அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக இருந்தால் அவர் பணியகத்தின் தலைவர் ஒருவராக நியமனம் செய்யப்படுவதற்கு தகைமை அற்றவராவார். எனினும் அக் காலப்பகுதியின் போது அம்பாறை நகர சபை உறுப்பினர் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு சபைக் கூட்டங்களில் பங்குபற்றியிருந்த நபரொருவர் மேற்படி சட்டமூலத்திற்கு முரணாக 2019 ஜனவரி 30 இல் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் ஒருவராக நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

### வீடமைப்பு அபிவிருத்தித் திட்டம்

மாகாண வீடமைப்பு அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (2015-2019) பிரகாரம் 2015 தொடக்கம் 2019 வரையான ஆண்டுகளின் போது ரூபா 14,525 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வீடற்ற குடும்பங்களுக்கு 29,700 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீடமைப்பு உதவி வழங்கப்படுகின்றமை தவிர இக் காலப்பகுதியின் போது எந்தவொரு வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

### நோக்கங்களிற்கு முரணாக செயற்படுதல்

அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் 2014/03/03 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளுகின்ற ஒப்பந்ததாரரிற்கு சீமெந்தை விநியோகிப்பதற்காக சீமெந்துக் கம்பனியொன்றிடமிருந்து சீமெந்தை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி தீர்மானத்திற்கு முரணாக அதிகாரசபை மேற்படி கம்பனியிடமிருந்து சீமெந்தை கொள்வனவு செய்து இலாபத்தை உழைக்கும் பொருட்டு உப முகவர்களிற்கு அவற்றை விற்பனை செய்திருந்தது. ஆகையால் கம்பனி அதிகாரசபைக்கு சீமெந்தை வழங்குவதை நிறுத்தியிருந்தது. இதன் விளைவாக

அதிகாரசபை மாகாணத்தினுள் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களிற்கு சீமெந்தை வழங்க முடியாதிருந்தது.

### கட்டுமானக் கற்களின் உற்பத்தி

அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் 2014/03/05 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் அதிகாரசபையால் பொறுப்பேற்கப்பட்ட அபிவிருத்தி வேலைகளுக்கான கட்டுமானக் கற்களை (Cement Bricks) உற்பத்தி செய்வதற்காக மாகாணத்தினுள் 10 உற்பத்தி நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 1.2 மில்லியன் கட்டுமானக் கற்களை உற்பத்தி செய்வதன் மூலம் ஆண்டிற்கு ரூபா 4.3 மில்லியன் இலாபமொன்றை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் 2019 திசெம்பர் 31 வரையிலும் இச் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### வருமான நிலுவைகளின் சேகரிப்பு

கிழக்கு மாகாணத்தில் தொழிற்படுகின்ற நாற்பத்தைந்து உள்ளூராட்சி அதிகாரசபைகள் மதிப்பீட்டு வரி, வாடகைகள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் குத்தகைகள் போன்ற பிரதான வருமான மூலங்களிலிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 895 மில்லியன் கூட்டுமொத்தமான வருமான நிலுவைகளை சேகரிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

### அரசாங்க காணிகளிலிருந்து பெறவேண்டிய குத்தகை வருமானம்

ரூபா 333 மில்லியன் கூட்டுமொத்தமான 09 பிரதேச செயலகங்களுடன் தொடர்புடைய அரசாங்க காணிகளுக்கான குத்தகை வருமானம் 1991 ஆம் ஆண்டிலிருந்து நிலுவைகளாக காணப்பட்டிருந்தன. எனினும் 2020 யூன் 30 வரையிலும் அவ் வருமான நிலுவையை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### GPRS முறைமை விளைவற்றிருத்தல்

பஸ் தரிப்பிடங்களிற்கு தனியார் பஸ்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல்களை பதிவு செய்யும் பொருட்டு ரூபா 1.142 மில்லியன் கிரயத்தில் 2015 யூன் 08 ஆம் திகதி General Packet Radio Service (GPRS) உடன் இணைக்கப்பட்ட 13 விற்பனை தளங்கள் (POS) மற்றும் 2,000 பயணச்சீட்டு சுருள்களை கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை கொள்வனவு செய்திருந்த போதிலும்இயந்திரங்களை செயற்படுத்துவதற்கு முறையான மென்பொருள் முறைமை காணப்படாததன் காரணமாக அப் பொருட்கள் உரிய நோக்கங்களுக்கு 05 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### ISO சான்றுபடுத்தல் பெற்றுக்கொள்ளப்படாமை

ரூபா 1 மில்லியன் கிரயத்தில் ISO 9001:2015 தரநியமத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்திறனான தர முகாமைத்துவ முறைமையொன்றினை நிறுவுவதற்கு 2016 செப்தெம்பர் 16 இல் தனியார் கம்பனியொன்றுடன் அதிகாரசபை உடன்படிக்கை ஒன்றைச் செய்திருந்தது. இதில் 2019 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 0.326 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2020 யூன் 30 வரையிலும் எதிர்பார்க்கப்பட்டவாறு ISO சான்றுபடுத்தலை அதிகாரசபை பெற்றிருக்கவில்லை. இதன் விளைவாக செயற்திட்டம் மீது செலவிடப்பட்ட பணம் பயனற்றதாகியிருந்தது.

### முன்பள்ளி பாடசாலை கல்வியில் டிப்ளோமா கற்கைநெறிகள் பூர்த்தி செய்யப்படாமை

யுனிசெப் ஒத்துழைப்புடன் மாகாண கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட கொள்கை வழிகாட்டலின் பிரகாரம் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களிற்கான ஆகக்குறைந்த நியமங்களாக முன்பள்ளி பாடசாலை கல்வியில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா கற்கைநெறி ஒன்றை கட்டாயமாக பூர்த்தி செய்திருக்க வேண்டிய போதிலும் 1,515 முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் 2020 யூன் 30 வரையிலும் டிப்ளோமா கற்கைநெறிகளை பூர்த்திசெய்திருக்கவில்லை.

### எரியூட்டியின் திருத்தம்

தனியார் கம்பனியொன்றால் 2016 யூன் மாதத்தில் ரூபா 5.28 மில்லியன் கிரயத்தல் மூதூர் ஆதார வைத்தியசாலையில் எரியூட்டியொன்று (Incinerator) நிறுவப்பட்டிருந்தது. எனினும் எரியூட்டி நிறுவப்பட்ட பின்னர் ரூபா 2.43 மில்லியன் மொத்தக் கிரயத்தில் அதிகமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் இது 2020 மே 31

வரையான நிறுவுதல் கிரயம் தொடர்பாக இயந்திரத்தின் கிரயத்தில் 46 சதவீதம் ஏற்பட்டிருந்ததை குறிக்கின்றது.

### மெத்தை மற்றும் படுக்கை விரிப்புடன் வைத்தியசாலை கட்டில்களின் கொள்வனவு

2019 பெப்ரவரி 04 ஆம் திகதிய பெறுகைக் குழு கூட்டக் குறிப்புக்களின் பிரகாரம் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் ரூபா 3.66 மில்லியன் தொகைக்கு தனியார் வழங்குநரொருவரிற்கு இப் பெறுகையை வழங்கியிருந்தது. இது தொடர்பாக 2017 செப்தெம்பர் 21 ஆம் திகதிய பிரி/04/2017 ஆம் இலக்க மாகாண திறைசேரி சுற்றறிக்கையின் 7.3 ஆம் பிரிவின் பிரகாரம் கடை முறை தொடர்பான ஆலோசனை தவிர்ந்த பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகைக்கான திணைக்கள மற்றும் அதிகார எல்லை ரூபா 2 மில்லியன் வரை மட்டுப்படுத்தப்பட வேண்டும். எனினும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் அவ் எல்லையை விஞ்சியிருந்தது.

# வட மத்திய மாகாணம்

வட மத்திய மாகாண சபையால் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 20,469 மில்லியன் அரசாங்க மானியங்களில் இருந்தும், ரூபா 4,731 மில்லியன் உள்ளக மார்க்கங்களில் இருந்துமாக ரூபா 25,200 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வருமானத்தில் ரூபா 20,377.34 மில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் ரூபா 4,068 மில்லியன் மூலதனச் செலவினமாகவும் மொத்தம் ரூபா 24,445.34 மில்லியனைப் பயன்படுத்துவதற்கு மதிப்பிடு செய்யப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 16,680.58 மில்லியனும் உள்ளக மார்க்கமாக ரூபா 4,877.56 மில்லியனுமாக ரூபா 21,558.14 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினமாக ரூபா 15,741.5 மில்லியனும் மூலதனச் செலவினமாக ரூபா 5,857.1 மில்லியனுமாக மொத்தம் ரூபா 21,598.6 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் சேகரிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தல் தொடர்பான விபரங்கள் வரைபடம் 87 காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் 87 : மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களும் செலவினங்களும் மூலம் வடமத்திய மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள்

### கட்நிதி முகாமைத்துவும்

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் காணப்படும் கட்டுநிதி மீதி திறைசேரிக்கு தீர்வுசெய்ய வேண்டிய போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை 03 மாகாண அமைச்சுக்களால் தீர்வு செய்யப்படாமல் இருந்த கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27.78 மில்லியனாக இருந்தது. அக்கட்டுநிதி மீதிகளில் 95 சதவீதமான ரூபா 24.61 மில்லியனான கட்டுநிதி மீதிகள் 9 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வந்த போதும் அம்மீதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### வருமான முகாமைத்துவம்

08 வருமானத் தலைப்புகளுடன் தொடர்பான மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா. 3,525.35 மில்லியனாக இருந்ததுடன் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா. 2,472.12 மில்லியனாக இருந்தது.இதனடிப்படையில் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் ரூபா. 1,053.23 மில்லியன் சேகரிக்க முடியாது போயுள்ளது. அவ்வாறு சேகரிக்க முடியாது போன வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 8 தொடக்கம் 99 வரையிலான இடைவெளிக்குட்பட்ட பெறுமதியாகக் காணப்பட்டது.

## மாகாண அபிவிருத்தித் திட்டம்

மீளாய்வாண்டில் மாகாண சபையினால் புதிய செயற்திட்ட முன்மொழிவுகள் மற்றும் திட்டமிடப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகள் எனும் அடிப்படையில் 1437 திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூபா. 3,487 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் ரூபா. 2,086 மில்லியன் பயன்படுத்தப்பட்டு 1,160 திட்டங்களின் வேலைகள் முழுமையாக பூரணப்படுத்தப்பட்டிருந்தன. அச் செயற்திட்ட முன்மொழிவுகளில் 57இனது வேலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 70 மில்லியன் நிதி குறை பயன்பாடுடையதாகக் காணப்பட்டது. 59 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு ரூபா. 324 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதும், அவற்றில் 50 வீதத்திற்கும் குறைவாகவே செயற்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டங்களின் முன்னேற்றம் அட்டவணை 23 இல் காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | புதிய வேலைப் பிரேரணைகளினி எண்ணிக்கை | பிற்போடப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை | மொத்த வேலைகளின் எண்ணிக்கை | வேலைகளின் மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா மில். |
|---|---|---|---|---|
| முழுமையாகப் பூரணப்படுத்தியவை | 873 | 287 | 1,160 | 2,086 |
| 50% மேல் பூரணப்படுத்தியவை | 151 | 10 | 161 | 1,007 |
| 50% இற்கு குறைவாக பூரணப்படுத்தியவை | 58 | 01 | 59 | 324 |
| ஆரம்பிக்கப்படாதவை | 57 | 0 | 57 | 70 |
| மொத்தம் | 1,139 | 298 | 1,437 | 3,487 |

அட்டவணை 23 – மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் செயன்முன்னேற்றம் - 2019
மூலம்: செயன்முன்னேற்ற அறிக்கை

## விசேட கல்வி அலகு

- 2001 மே 24 ஆம் திகதிய 1/வி.க/2/84 இலக்க கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தின் 01 பந்தியின் பிரகாரம் விசேட கல்வி அலகொன்றில் பிள்ளைகளை உள்வாங்கும் பொழுது விசேட கல்விக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், விசேட கல்விக்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர்கள், விசேட கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர்கள்/விடயப் பொறுப்பாசிரியர்கள் ஆகியோர்களில் 3 பேர் அடங்கிய குழுவொன்றின் மூலம் விசேட தேவையுடைய பிள்ளைகள் இனங்காணப்படல் வேண்டும். அவ்வாறாயினும் வட மத்திய மாகாணத்தினுள் இம் முறைக்கு மாற்றமாகச் செயற்பட்டதன் காரணமாக, சாதாரண வகுப்பறையில் கற்பிக்கப்பட வேண்டிய எழுத்து வாசிப்புத் திறன் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்ற பிள்ளைகள், முன்பள்ளிக் கல்வியைப் பெற்றிறாத பிள்ளைகள், மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த சாதாரண பிள்ளைகள் மற்றும் சுத்தம் குறைவான பிள்ளைகள் அதிகமானோர் விசேட கல்வி அலகுகளுக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.
- 2012 நவம்பர் 23 ஆம் திகதிய 42/2012 இலக்கத்தையுடைய கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றுநிருபத்தின் 05 பந்தியின் பிரகாரம் விசேட கல்வித் துறையில் நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்கள், நியமனக் கடிதங்களில் எத்தனை உப விடயப் பரப்புகள் குறிப்பிடப்பட்டிருந்த போதும், பிரதான விடயமாகிய விசேட கல்வித் துறையில் சேவை புரிதல் கட்டாயமானதாகும். ஆவ்வாறாயினும், விசேட கல்வி அலகுகளில் கற்பிப்பதற்கான முறையான பயிற்சி பெற்ற 20 ஆசிரியர்கள் வட மத்திய மாகாணத்துனுள் வேறு பாடங்கள் கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர்.
- 2012 நவம்பர் 23 ஆம் திகதிய 42/2012 இலக்கத்தையுடைய கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் விசேட கல்வி அலகுகளில் கற்பிப்பதற்காக குறைந்த பட்சம் 5

மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் இருக்கும் வகையில் இத் துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படல் வேண்டும். எனினும் வட மத்திய மாகாணத்தின் 08 கல்வி வலயங்களிலும் காணப்படுகின்ற 24 விசேட கல்வி அலகுகளைக் கொண்ட பாடசாலைகளிலும் இத் துறையில் பயிற்சி பெற்ற 29 ஆசிரியர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன.

- வட மத்திய மாகாணத்தின் 08 கல்வி வலயங்களிலும் காணப்படுகின்ற 30 கல்விக் கோட்டங்களில் 04 கோட்டங்களில் விசேட கல்வி அலகுகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக, அக் கல்விக் கோட்டங்களில் இருக்கின்ற விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான விசேட கல்வியைப் பெறுகின்ற சந்தர்ப்பம் இல்லாது போயிருந்தது.
- 2017 ஆம் ஆண்டு வட மத்திய மாகாணத்தின் 03 கல்வி வலயங்களுக்குச் சொந்தமான 13 பாடசாலைகளில் ரூபா. 18.48 செலவில் விசேட கல்வி அலகுகளுக்காக கட்டடங்கள் நவீனமயப்படுத்தப்பட்டிருந்த போதும், 2019 இறுதி வரையில் அவற்றில் விசேட கல்வி அலகுகள் செயற்படுத்தப்படாது இருந்ததுடன், மேலும் 12 பாடசாலைகளில் விசேட கல்வி அலகுகளுக்காக பொருத்தமான கட்டடங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனடிப்படையில், விசேட கல்வி அலகுகள் அவசியமான பாடசாலைகள் முறையாக இனங்காணப்பட்டு கட்டடங்கள் நவீனமயப்படுத்தப்படுவதற்கும் புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுவதற்கும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- 2007 மே 14 ஆம் திகதிய 2007/9 இலக்கத்தையுடைய கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பாடசாலைக் கட்டடங்கள் நிர்மாணிக்கும் பொழுதும் நவீனமயப்படுத்தப்படும் பொழுதும் அங்கக் குறைபாடுள்ளவர்கள் நுழைவதற்கான வசதிகள் ஏற்பாடு செய்துகொடுக்கப்படுவது தொடர்பில் மிகவும் முக்கிய கவனம் செலுத்த வேண்டியதுடன், பாடசாலைகளினுள் நுழைவு வகதிகள் கட்டாயமானதாகும். அவ்வாறாயினும், வட மத்திய மாகாணத்தின் 14 பாடசாலைகளில் காணப்படுகின்ற விசேட கல்வி அலகுகளுக்கான பொருத்தமான நுழைவு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.
- 2017 ஜனவர 30 திகதிய ED/09/18/02/01/2 இலக்கத்தையுடைய கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கல்வி அதிகாரச் சட்டத்தின் 37 ஆம் பிரிவு மற்றும் 1963/30 இலக்கத்தையுடைய அதி விசேட வர்த்தமாணியில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கமைவாக, 5-16 வயதெல்லைக்குட்பட்ட அனைத்துப் பிள்ளைகளையும் கட்டாயமாகக் கல்வியில் ஈடுபடுத்துகின்ற செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பாடசாலைக் குழு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டியிருந்த போதும், மாகாணத்தின் ஏந்துப் பிரதேசத்தினுள் விசேட தேவையுடைய பிள்ளைகளை இனங்கண்டு பாடசாலைகளின் விசேட கல்வி அலகுகளுக்கு அனுப்புகின்ற செயற்பாடு மேற்கொள்ளப்பட்டமையினை உறுதி செய்வதற்கான போதிய ஆதாரங்கள் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்படவில்லை.

## கடமைக்கு சமூகமளிக்காத நாட்களுக்கான கொடுப்பனவைப் பெறல்

அநுராதபுரம் கல்கிரியாகம பிராந்திய வைத்தியசாலையின் இரண்டு வைத்தியர்கள் 2019 ஆம் ஆண்டு கடமைக்கு சமூகம் தராத நாட்களில் சமூகம் தந்ததாக தினக் குறிப்பு எழுதப்பட்டிருந்தது. இதில் கடமைப் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமை புரிந்த ஒரு வைத்தியர் கடமைக்கு சமூகம் தராத 99 நாட்களில் 396 மணித்தியாலங்களுக்கான மேலதிகக் கடமைக் கொடுப்பனவாக ரூபா. 385,856 மற்றும் கடமைக்கு சமூகம் தராத 06 நாட்களுக்கான விடுமுறை நாட்களுக்கான கடமைக் கொடுப்பனவாக ரூபா. 25,739 மற்றும் மற்றைய வைத்தியர் கடமைக்கு சமூகம் தராத 67 நாட்களில் 3268 மணித்தியாலங்களுக்கான மேலதிகக் கடமைக் கொடுப்பனவாக ரூபா. 146,060 மற்றும் கடமைக்கு சமூகம் தராத 04 நாட்களுக்கான விடுமுறை நாட்களுக்கான கடமைக் கொடுப்பனவாக ரூபா. 9,736 உம் பெற்றிருந்தனர். கடமைப் பொறுப்பு வைத்திய

அதிகாரி சேவை சோதனைக் குறிப்புகளை வருடத்தின் 03 மாதங்களுக்கு மாத்திரமே தயாரித்திருந்தார்.

### வெளிப்படையான முறைகேடுகள்

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புகளுக்கான அளவைப் பத்திரங்கள், வேலை நிறைவு அறிக்கை மற்றும் பட்டியல் கொடுப்பனவுச் சுருக்கம் உள்ளிட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளின் அடிப்படையில் ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாவணங்களின் நிழற்பிரதிகளின் அடிப்படையில் வேறொரு சந்தர்ப்பத்திலும் என இரட்டைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 26 ஆம் திகதி வரை இரட்டைக் கொடுப்பனவாக பெறப்பட்டிருந்த தொகை ரூபா. 8.61 மில்லியனாக இருந்தது.

### தம்புத்தேகம நூலக சேவைகள் சபைக்கான கட்டடத்தை நிர்மாணித்தல்

வட மத்திய மாகாண பிரதான அமைச்சின் விசேட செயற்திட்டத்தின் கிழ் 2016 ஆம் ஆண்டு தம்புத்தேகம நூலக சேவைகள் சபைக்கான கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா. 24.99 மில்லியன் ஏலப் பெறுமதிக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அரசின் றுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 வழிகாட்டலின் அடிப்படையில் சாத்தியமான ஏலதாரர்களுக்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான குறைந்தபட்ச கால அவகாசமான 21 நாட்களை வழங்காது 05 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டதன் காரணமாக ஒரு விலைமனு மாத்திரம் கிடைக்கப்பெற்றிருந்தது.

கைச்சாத்திடப்பட்டிருந்த ஒப்பந்தத்திற்கமைவாக 2017 பெப்ரவரி 22 ஆம் திகதி நிர்மாண வேலைகளை முடிக்க வேண்டியிருந்த போதும், 2019 ஜனவரி 10 ஆம் திகதி முடிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ஒப்பந்தத்தின் படி அறவிடப்பட வேண்டிய ரூபா. 2.50 மில்லியன் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. இக் கட்டிடம் ரூபா. 25.20 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும், 2020 ஜூலை 15 ஆம் திகதி வரை திறக்கப்படாது ஒரு வருடத்திற்கும் மேலான காலம் பயன்பாடற்றுக் காணப்பட்டது.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டம்
முற்கொடுப்பனவை தீர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்காமை

02 நிர்மாண ஒப்பந்தங்களை நிறைவு செய்வதற்காக ரூபா. 21.95 மில்லியன் பெறுமதிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருந்தன. இவ்வொப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மொத்தம் ரூபா. 9.07 மில்லியன் வேலை ஆரம்பிப்பதற்கான முற்கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது. அவ்வொப்பந்தக்காரர்களினால் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலைகள் முடிக்கப்படாதிருந்ததுடன், செலுத்தியிருந்த முற்பணத்தினை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடு இடம்பெற்றிருக்கவில்லை.

### பொறியியலாளரின் மதிப்பீட்டிற்கு மேலதிகமான தொகைக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடல்

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழான பொறியியலாளர் மதிப்பீடு ரூபா. 1.71 மில்லியனாகவிருந்த உப செயற்திட்டமொன்றிற்கான ஒப்பந்தம் அனுமதிக்கப்பட்ட ஒரு சங்கத்திற்கு வழங்கப்படும் பொழுது பொறியியலாளர் மதிப்பீட்டினை விட ரூபா. 292,725 இனால் கூடிய தொகை மீது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

### செயற்பாடற்ற திட்டங்கள்

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் ரூபா. 36.64 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த முதுனேககம மகா வித்தியாலயத்தின் கனிஷ்ட, இடைநிலை, ஆரம்ப விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டடம் 2019 மார்ச் 01 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டிருந்த போதும், மின்சார இணைப்பு இல்லாததன் காரணமாக ஒரு வருடத்திற்கும் மேலான காலம் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### நிறைவு செய்யப்படாத திட்டங்கள்

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் திரப்பனை மஹானாம வித்தியாலயத்தின் மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் மற்றும் ஆரம்பக் கல்லூரியின் இரண்டு மாடி கற்றல் வள நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா. 41.45 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியின் மீது 2017 மார்ச் 13 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின்

அடிப்படையில் 2017 செப்டம்பர் 13 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்ய வேண்டியிருந்தது. 2017 மார்ச் 13 ஆம் திகதி ரூபா. 14.30 மில்லியன் பெறுமதியான 30 வீத வேலைகளை ஆரம்பிப்பதற்கான முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதும், 2019 ஜனவரி 18 ஆம் திகதி வரை அதன் பௌதிக முன்னேற்றம் 5 வீதமாகவிருந்தது. அன்றைய தினமாகும்பொழுது முற்பணக் காப்புறுதிக்கான காலமும் முடிவடைந்திருந்தது.

### பயனற்ற செலவுகள்

ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாக வள மத்திய நிலையக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான நிலையான இடமொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. நிலையான இடமொன்று இல்லாமல் செயற்திட்டத்தை திட்டமிடல், பொறியியலாளர் மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் ஏல ஆவணங்கள் தயாரித்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறு தயாரிக்கப்பட்ட ரூபா. 24.27 மில்லியன் பெறுமதியான மதிப்பீட்டின் அடிப்படையில் பிரதான அமைச்சு ஒப்பந்தக்காரர் ஒருவருடன் 2017 ஜுலை 31 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்தது. பின்னர் அநுராதபுரம் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தின் ஒரு காணியில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும், அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்காமை காரணமாக திட்டத்தின் வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன. அதுவரையில் திட்டத்திற்காக ரூபா. 2.08 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அச் செலவு பயனற்றதாகவிருந்தது.

### பயன்பாடற்ற சொத்துக்கள்

கலென்பின்துனுவெவ கல்வி வலயத்தின் பாடசாலைகளில் காணப்பட்ட 25 விடுதிகளில் 22 விடுதிகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமை காரணமாக அவ்விடுதிகள் பயன்பாடற்றுக் காணப்பட்டன. 2016ஆம் ஆண்டு வடமத்திய மாகாண பிரதான அமைச்சின் மூலம் ரூபா. 02 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கழிவு எரிக்கும் இயந்திரம் 2017 ஆகஸ்ட் 08 ஆம் திகதி கபிதிகொல்லாவ ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தது. வைத்தியசாலையினால் அத்தினத்திலிருந்து அவ்வியந்திரம் பாவனைக்கு எடுக்கப்படாது பயன்பாடற்றுக் காணப்பட்டது.

### விசேட கல்விக்காக வழங்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமை

08 வலயக் கல்விக் காரியாலயங்களின் விசேட கல்விக்காக 2015ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த முறையே ரூபா. 435,449, ரூபா. 341,731, ரூபா. 358,730 மற்றும் ரூபா. 378,239 என்பவற்றின் கூட்டுத்தொகை ரூபா. 1,514,149 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### சொத்துக்கள் முறையாக கையளிக்கப்படாமை

05 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையிலான காலமாக மூடப்பட்டிருந்த கலென்பின்துனுவெவ கல்வி வலயத்தின் 04 பாடசாலைகளில் காணப்பட்ட சொத்துக்கள் வேறு வெளி பிரிவினரால் பயன்படுத்தப்பட்டிருந்த போதும், அச் சொத்துக்களை முறையாக கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# வடமேல் மாகாண சபை

வடமேல் மாகாண சபையினால் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 28,550 மில்லியன் தொகை அரச மானியங்களின் மூலமும், உள்ளக வழிகளிலிருந்து ரூபா 10,449 மில்லியனுமாக ரூபா 38,999 மில்லியன் கூட்டுத்தொகை வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு சேகரிக்கப்படும் வருமானங்களிலிருந்து 2019 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 35,934 மில்லியன் தொகையும், மூலதன செலவினங்களுக்காக ரூபா 3,065 மில்லியனும் செலவிடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டின் போது அரசின் மானியங்கள் மூலம் ரூபா 25,884 மில்லியனும், உள்ளக வழிகளினூடாக ரூபா 8,907 மில்லியனுமாக ரூபா 34,791 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட வருமானங்களிலிருந்து மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 33,876 மில்லியன் தொகையும் மூலதன செலவினத்திற்காக 1,942 மில்லியனுமாக மொத்தம் ரூபா 35,818 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. முன்னைய 04 ஆண்டுகளுடன் ஒப்பிட்டு மீளாய்வாண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் உரு 88 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 88 – மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம்
மூலம் - வடமேல் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள்

வடமேல் மாகாண சபையினால் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

## நிலுவை வருமானம்

பிரதம செயலாளர் அலுவலகம், மாகாண வருமானத் திணைக்களம் மற்றும் காணி ஆணையாளர் திணைக்களம் ஆகியவற்றால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 08 வருமானக் குறியீடுகளிற்காக ரூபா 232.9 மில்லியன் வருமானம் நிலுவையாக வைக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 152.9 மில்லியன் வருமானம் 3 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக காணப்பட்டது.

## வரி வருமானங்களை விடுவித்தல்

மாகாண வருமானத் திணைக்களத்தினால் 1991 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய 784 கோவைகள் தொடர்பில் ரூபா 117 மில்லியன் நிலுவையான புரள்வு வரி, 2011 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய 483 முத்திரைக் கட்டணக் கோவைகள் தொடர்பில் முறையே ரூபா 36.9 மில்லியன் மற்றும் 40.1 மில்லியன் நிலுவையான முத்திரை வரி மற்றும் தண்டப் பணங்கள் மற்றும் ரூபா 76.9

மில்லியன் மேலதிக முத்திரை வரி என்பன 2016 முதல் 2019 வரையான காலத்தில் விடுவிக்கப்பட்டிருந்தமையால் மாகாண நிதியத்திற்கு ரூபா 193.9 மில்லியன் இழப்பாகியிருந்தது.

## ஆறுமாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல்

வடமேல் மாகாண சபையும் குருநாகல் மாநகர சபையும் ஒன்றிணைந்து ரூபா 1,384.8 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் ஆறுமாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. கட்டிடத்திற்கான தேவையினைக் கண்டறிந்து மாகாண நிதி ஒழுங்குவிதி 4.2.1(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரண்டு கட்டங்களில் அங்கீகரித்துக்கொள்ளும் நடைமுறைக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்டு வருடாந்த அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், இந்த நிர்மாணம் தொடர்பில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது 2019 ஆம் ஆண்டில் இந்த நிர்மாணம் இனங்காணப்பட்டு அவசர செயற்திட்டமொன்றாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆளுநரால் வடமேல் மாகாண பொறியியல் திணைக்களத்திற்கு இந்த நிர்மாணத்திற்காக திட்டமொன்றைத் தயாரித்துத் தருமாறு அறிவித்திருந்த போதிலும், அதற்காக போதியளவு காலம் வழங்காது மிக அவசர நடவடிக்கையாகக் கருதி இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கிரயத்தை உறுதியாக மதிப்பிட முடியாத மற்றும் நிர்மாண ஒப்பந்தத்திற்கான தொழில்நுட்ப அறிவற்ற சந்தர்ப்பத்தில் மாத்திரமே இந்த முறை தெரிவுசெய்யப்படுகின்றது.

விலைமனுக்களை மதிப்பிடுகையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களிலுள்ள 7.8.4(அ) வழிகாட்டலின் படி, பொருத்தமற்ற பிணைவைப்பு வெளிப்படுத்துகை படிவத்தினை பயன்படுத்துதல் பாரிய முரண்படுதலாகக் கருதி விலைமனுவினை மதிப்பீட்டிற்கு எடுத்தலாகாது. இருப்பினும், மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 720 மில்லியனான இந்த நிர்மாணத்திற்காக முன்வந்திருந்த ஏனைய விலைமனுதாரர்களின் கேள்விகளைத் திறக்காது ரூபா 1,384.8 மில்லியன் தொகைக்கு விலைமனுவினை சமர்ப்பித்திருந்த ஒப்பந்தகாரர் நிர்மாண வேலைகளிற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தார். அடிப்படையான கொள்வனவுச் சட்டத்திட்டங்களிற்கு இக்கொள்வனவு நடைமுறை முரணாகக் காணப்படுவதாக தேசிய கொள்வனவு ஆணைக்குழுவும் அறிவித்திருந்தது.

அவசர பணியாகக் கருதி கொள்வனவு நடைமுறைகளிற்கு முரணாக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 2019 நவம்பர் 06 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2020 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் நிர்மாண வேலைகளில் போதிளயவான பகுதி பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## விளைவற்ற சொத்துக்கள்

- வெளிநாட்டுச் செயற்திட்டமொன்றாக வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கல்கமுவ ஆதார வைத்தியசாலையினை புதுப்பித்தல் வேலைகளின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் அமைந்துள்ள அவசர சிகிச்சைப் பிரிவு ரூபா 26 மில்லியன் பெறுமதியான 46 மருத்துவ உபகரணங்களையும் மகப்பேற்றுப் பிரிவு ரூபா 16.7 மில்லியன் பெறுமதியான 14 உபகரணங்களையும் உள்ளடக்கியுள்ளதுடன் அவை ஏறத்தாழ 05 ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- வடமேல் அபிவிருத்தி அதிகாரசபையினால் முறையான சாத்தியவள ஆய்வு இன்றியும் திட்டமிடல் இன்றியும் ரூபா 12.6 மில்லியன் செலவில் பூரணப்படுத்தப்பட்டிருந்த மதுரங்குளியிலுள்ள சுற்றுலா தகவல் மற்றும் வசதிகள் நிலையம் 03 ஆண்டு காலமாக எவ்விதப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

- தம்பதெனிய ஆதார வைத்தியசாலையில் இரத்த மாற்றல் பிரிவினை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சிடமிருந்தும் மாகாண குறித்துரைத்த நிதி ஏற்பாட்டிலிருந்தும் ரூபா 15.6 மில்லியன் கிடைத்திருந்தது. 2019 ஆம் ஆண்டில் ரூபா 9.9 மில்லியன் பெறுமதியான இரத்த மாற்றல் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பினும், ஆண்டு இறுதி வரையிலும் அப்பிரிவின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமை காரணமாக சூழவுள்ள பிரதேசங்களில் வசிக்கும் நோயாளர்களிற்கு குளியாபிட்டி மற்றும்

குருநாகல் வைத்தியசாலைகளிற்கு சிகிச்சைக்காக பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

# சப்ரகமுவ மாகாண சபை

சம்பரகமுவ மாகாண சபையினால் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 27,298 மில்லியன் தொகை அரச மானியங்களின் மூலமும், உள்ளக வழிகளில் ரூபா 5,385 மில்லியனுமாக ரூபா 32,683 மில்லியன் கூட்டுத்தொகை வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 28,387 மில்லியன் தொகையும், மூலதன செலவினங்களுக்காக ரூபா 4,296 மில்லியனுமாக ரூபா 32,683 மில்லியன் பயன்படுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், 2019 ஆம் ஆண்டின் போது அரசின் நன்கொடைகள் மூலம் ரூபா 25,563 மில்லியனும், உள்ளக வழிகளினூடாக ரூபா 5,059 மில்லியனுமாக ரூபா 30,622 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினம் ரூபா 27,447 மில்லியன் மற்றும் மூலதன செலவினம் ரூபா 2,624 மில்லியனுமாக ரூபா 30,071 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் மற்றும் கடந்த 04 வருடங்களின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் உரு 89 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 89 - மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம்

மூலம் - சப்ரகமுவ மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள்

சப்ரகமுவ மாகாண சபைக்குரியதாக 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

### கட்டளைச் சட்டங்கள் மூலம் நிறுவப்பட்ட நிதியங்களுக்காக சட்டக்கோவையொன்றை தயாரிக்காமை

1993 இன் 05 ஆம் அலக்க சம்பரகமுவ மாகாண வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தினை தாபித்தல் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு முரணாகாத வகையில் உரிய வரையறைகளினுள் நிதியை ஈடுபடுத்தும் முறைகள் தொடர்பில் பிரமாணங்களை தயாரிக்கும் அதிகாரம் மாகாண அமைச்சரிடம் காணப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டு பிரமாணங்கள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

### உதவுதொகைகள் வழங்குவதற்கான மதிப்பாய்வொன்றினை மேற்கொள்ளாமை

1994 இன் 04 ஆம் இலக்க சமூக சேவைகள் நிதியத்தினை தாபித்தல் தொடர்பான சட்ட விதியில் 24 ஆம் பிரமாணத்தின் பிரகாரம், வேறு எந்தவொரு நன்கொடை அல்லது உதவுதொகை கிடைக்கப்பெறாத மிகவும்

வறுமையான நிலையிலுள்ள குடும்பங்களின் நபர்களுக்கு உதவிகளை வழங்க முடியுமாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் நிதியத்தில் ரூபா 79.13 மில்லியனான மீதி நிலவியது. நிதியத்தினால் போதியளவான மதிப்பாய்வொன்றினை மேற்கொண்டு அவ்வாறான குடும்பங்கள் இனங்காணப்பட்டு உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த காரணத்தால கடந்த வருடத்திற்காக பண்ட மற்றும் பண வடிவிலான உதவிகளுக்காக நிதியம் செலவிட்ட தொகையினை விட 47 சதவீதமான அல்லது ரூபா 8.87 மில்லியன் குறைவாகவே பண்ட மற்றும் பண வடிவிலான உதவிகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

### நிலுவை வருமானத்தினை அறவிட தவறியமை

- சம்பரகமுவ மாகாண நிதி விதி 116.1 இன் பிரகாரம், நிலுவை வருமானத்தை சேகரிக்கும் உத்தியோகத்தர்கள் மிகவும் சிரத்தையுடன் மற்றும் கவனமாக செயற்பட்டு நிலுவை வருமானத்தை சேகரிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடங்களுக்குரிய ரூபா 49.40 மில்லியனான நிலுவை குத்தகை வருமானத்தினை அறவிட தவறியிருந்தது.

- எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகத்தில் 1995 ஆம் ஆண்டு முதல் அத்துமீறிய முறையில் கைப்பற்றப்பட்டுள்ள சுமார் 9.9123 ஹெக்டேயர் பரப்பளவான அரசின் 04 காணித் துண்டுகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதியினுள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2020 சனவரி 13 ஆந் திகதி வரையிலும் ரூபா 10.45 மில்லியன் கூட்டுத்தொகையான நிலுவை குத்தகை பணத்தினை அறவிட்டு நீண்டகால குத்தகையொன்றினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- எலபாத்த பிரதேச செயலகத்தில் திகான கிராம சேவகர் பிரிவில் சுமார் 2.350 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணித்துண்டொன்று நீர்மின் நிலையமொன்றினை அமைப்பதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு 1999 ஆம் ஆண்டின் போது 21 வருட காலப்பகுதிக்காக நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு குத்தகைக்கு வழங்கிய திகதி முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நீரினை திருப்புவதங்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2.34 மில்லியனான நீர்க் குத்தகைப் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### சிறுவர் முன் பராய அபிவிருத்தி நிலையங்களை பதிவு செய்தல்

சப்ரகமுவ மாகாணத்தினுள் நிறுவப்பட்டுள்ள மற்றும் நடாத்திச் செல்லப்படும் அனைத்து சிறுவர் முன் பராய அபிவிருத்தி நிலையங்களையும் பதிவு செய்தல் சிறுவர் முன் பராய அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான பணிப்பொறுப்பு ஆகும். மீளாய்வாண்டளவில் சுமார் 1,238 முன்பள்ளிகள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், மேலும், 275 முன்பள்ளிகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளின் எண்ணிக்கையில் 67 சதவீதம் அல்லது 824 முன்பள்ளிகளின் பதிவு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக, சிறுவர் முன் பராய அபிவிருத்தி நிலையங்களில் மாகாண சபையின் கண்காணிப்பு நலிவடைந்திருந்தது.

### மருத்துவமனைகளுக்கு சமைக்காத உணவுகளை விநியோகிப்பதிலான ஒழுங்கீனம்

பலாங்கொடை மற்றும் கஹாவத்த ஆதார வைத்தியசாலைகளுக்கு 2019 செப்தம்பர் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையிலுமான காலப்பகுதியில் கட்டளையிடப்பட்ட சமைக்காத உணவின் அளவினை விட குறைவாக விநியோகிகப்பட்டிருந்தமை மற்றும் கட்டளையிடப்பட்ட சமைக்காத உணவு அல்லது அதற்கு மாற்றீடாக வேறு உணவு விநியோகிக்கப்படாத 43 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

### எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ள முடியாமை

சப்ரகமுவ மாகாணத்தின் சுற்றுலா அபிவிருத்தியை நோக்காக கொண்டு மாகாண வீதி அமைச்சினால் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான

காலப்பகுதியினுள் ரூபா 2.03 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டு சீலோகம சமூக அபிவிருத்தி கிராமத்தின் சுற்றுலா விடுதிகளுக்காக உபகரணங்களை வழங்குதல் மற்றும் கட்டிடங்கள் நிர்மாணித்தல் இடம்பெற்றிருந்தது. எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக அந்த உபகரணங்கள் மற்றும் கட்டிடம் பயன்படுத்தப்பட்டிராததுடன், மாகாண அமைச்சினால் அது தொடர்பில் பின்தொடர்தலொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

### திட்டமிடப்பட்ட முறையில் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை

மாகாண வீதி அமைச்சினால் 2019 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்ய திட்டமிடப்பட்ட ரூபா 127.15 மில்லியன் கூட்டுத்தொகையான 16 செயற்திட்டங்களின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளபடியான செயன்முன்னேற்றம் 10 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான வீச்சில் நிலவியது.

### செயலாற்றல் பிணைகளை பெற்றுக்கொள்ளாமை

- உடன்படிக்கை பெறுமதி ரூபா 14.86 மில்லியனான கடமுதுன சிங்கராஜ மடங்களின் வீதி 1.00 கி.மீட்டரிலிருந்து 2.325 கி.மீட்டர் வரையிலும் கொங்கிறீட் இடும் பணியின் ஒப்பந்தத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ரூபா 743,120 மில்லியனான செயலாற்றல் பிணையினை பெற்றுக்கொண்டிராததுடன், பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒப்பந்ததாரரால் முன்வைக்கப்பட வேண்டிய காப்புறுதி மேவுகையை பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- பிரதான அமைச்சினால் ரூபா 120.71 வேலைப் பெறுமதியுடைய புஸ்ஸல்ல பயிற்சி நிலையத்தின் ஐந்து மாடிகளை கொண்ட புதிய விடுதியினை நிரமாணிக்கும் பணிக்குரியதாக ரூபா 6.04 மில்லியனான செயலாற்றல் பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், 2020 யூன் 24 ஆந் திகதி வரையிலும் குறித்த ஒப்பந்தத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.
ஒப்பந்ததாரரால் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

# ஊவா மாகாண சபை

ஊவா மாகாண சபையினால் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 22,027 மில்லியன் தொகை அரச மானியங்களின் மூலமும், உள்ளக வழிகளிலிருந்து ரூபா 4,705 மில்லியனுமாக ரூபா 26,732 மில்லியன் கூட்டுத்தொகை வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு சேகரிக்கப்படும் வருமானங்களிலிருந்து மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 23,729 மில்லியன் தொகையும், மூலதன செலவினங்களுக்காக ரூபா 4,473 மில்லியனும் செலவிடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டின் போது அரசின் மானியங்கள் மூலம் ரூபா 21,249 மில்லியனும், உள்ளக வழிகளினூடாக ரூபா 3,677 மில்லியனும் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட வருமானங்களிலிருந்து மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 24,166 மில்லியன் தொகையும் மூலதன செலவினத்திற்காக 968 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு மீளாய்வாண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் உரு 90 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு 90 – மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம்
மூலம் - ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள்

## வருமான முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் உள்ளக வழிகளிலிருந்து சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வருமானம் ரூபா 4,075 மில்லியன் ஆனதுடன், சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 3,677 மில்லியனாகக் காணப்பட்டது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருமானக் குறியீடுகளின் கீழான திரட்டிய வருமான நிலுவை ரூபா 201.25 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அது 2019 இன் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 4.28 சதவீதமாகக் காணப்பட்டது.

1990 இன் 08 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் நிதிக் கட்டளைகளின் X ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 129(2)(ஆ), நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 158(2)(ஆ) மற்றும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185(2)(இ) பிரிவுகளின் பிரகாரம் குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் நிதியங்களிற்கு செலவு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டில் ஊவா மாகாண சபையினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 332 மில்லியன் முத்திரைக் கட்டணங்கள் உரிய உள்ளூராட்சி மன்றங்களிற்கு அனுப்பிவைக்கப்படும் வரை பொறுப்பாக இனங்காணப்பட்டிருக்காததுடன், மாகாண சபையின் வருமானமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## ஹாலிஎல கணனி வள பயிற்சி நிலைய நிர்மாணம்

ஹாலிஎல கணனி வள பயிற்சி நிலையத்தின் நிர்மாண வேலைகள் தொடர்பில் பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) இனால் 2016 யூன் 27 ஆந் திகதி நிர்மாணக் கம்பனியொன்றுடன் ரூபா 68.85 மில்லியன் பெறுமதியுடைய நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் 2017 யூன் 21 ஆந் திகதி செய்துமுடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 3.42 மில்லியன் தண்டப்பணத்தில் ரூபா 1.72 மில்லியன் மாத்திரம் 2018 ஏப்ரல் 24 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருந்தது.

2019 ஏப்ரல் 09 ஆந் திகதி ஒப்பந்த காரருடனான உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், மாகாண சபை நிதி ஒழுங்குகளிலுள்ள நி.ஒ. 705 இன் பிரகாரம் பொறுப்பினை மீறியோர் பட்டியலில் ஒப்பந்தகாரரின் பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

2016 ஆகஸ்ட் 29 ஆந் திகதி முற்பணமாக ரூபா 13.76 மில்லியன் ஒப்பந்த காரருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 வரையிலும் அதில் ரூபா 1.74 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. முற்பணமானது பிணை முறியொன்றின் மீது செலுத்தப்பட்டிருந்த போதிலும், பிணைமுறியின் செல்லுபடியாகும் காலம் 2018 திசெம்பர் 31 உடன் முடிவடைந்திருந்ததுடன், முற்பணத்தினை தீர்த்துக்கொள்வதற்கு அல்லது பிணை முறியின் செல்லுபடியாகும் காலத்தை நீடித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, ரூபா 12.02 மில்லியன் முற்பணத்தை அறவிட முடிந்திருக்கவில்லை.

செயலாற்றல் பிணை முறியின் செல்லுபடியாகும் காலம் 2019 யூலை 31 ஆந் திகதியாகக் காணப்பட்டதுடன், பிணை முறியிலிருந்து ரூபா 3.44 மில்லியன் தொகையினை அறவிட முடிந்திருந்த போதிலும், அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை நியமித்தல்

2019 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 03/2019 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி 07 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் ஒருங்கிணைந்த மற்றும் அதனையொத்த சேவைகளிலுள்ள பதவிகளிற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாத விவசாய விஞ்ஞானப் பதவிக்காக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

## செயற்திட்டங்களை பூரணப்படுத்தாமை

- ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்திற்குரிய பிபில கமத்தொழில் பயிற்சி நிலைய வளவில் விவசாய ஆலோசகர்களிற்காக உத்தியோகபூர்வ வதிவிடங்களை நிர்மாணிக்கும் வேலைகளிற்காக ரூபா 5.85 மில்லியன் தொகைக்கு ஒப்பந்த காரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 14 ஆந் திகதி ஒப்பந்த வேலைகள் ஆர்பிக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 10 ஆந் திகதி வேலைகள் செய்து முடிக்கப்பட வேண்டியிருந்தது. இருப்பினும், 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையிலும் அந்த வேலைகளின் ஒரு பகுதி மாத்திரம் பூரணப்படுத்தப்பட்டு, நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. 2019 ஆகஸ்ட் 07 ஆந் திகதி வரை இந்த நிர்மாண வேலைகளிற்காக ரூபா 2.73 மில்லியன் ஒப்பந்த காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

- ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ் தொழிற்படுகின்ற தியதலாவ ஹெல உணவகத்தில் ஓய்வு அறையினையும் கழிவறை முறைமையினையும் நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 1.30 மில்லியன் பேராதனை, விவசாயத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி வரையிலும் அந்த நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகார, சுற்றுலா, போக்குவரத்து,

கலாச்சார, புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சினால் 2013 ஆம் ஆண்டில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த உடவலவ சுற்றுலா ஓய்வு இல்லத்திற்காக 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 39.82 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 யூலை மாதம் வரையிலும் ஓய்வு இல்லமும் கடை அறையும் சுற்றுலா பயணிகளிற்காக திறக்கப்பட்டிருக்கவில்லை.

- கிதுல்கொடே சுற்றுலா வசதிகள் நிலையத்திலுள்ள சமையலறை மற்றும் சிற்றுண்டிச்சாலை நிர்மாண வேலைகளிற்காக 2016 ஒக்தோபர் 20 ஆந் திகதி ரூபா 26.09 மில்லியன் தொகைக்கு ஒப்பந்த காரருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.
சமர்ப்பிக்கப்பட்டிருந்த இறுதி பட்டியலின் படி, முடிக்கப்பட்டிருந்த வேலைகளின் பெறுமதி ரூபா 20.99 மில்லியனாகும். 2019 யூன் மாதம் வரையிலும், அக்கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.

- கிதுல்கொடே சுற்றுலா வசதிகள் நிலையத்திலுள்ள கழிவறை முறைமையினை நிர்மாணிக்கும் வேலைகளிற்காக ரூபா 6.33 மில்லியன் தொகைக்கு ஒப்பந்த காரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 6.03 மில்லியன் தொகைக்குரிய இறுதி பட்டியல் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2019 யூன் மாதம் வரையிலும், அக்கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய கிறிகம மின்னியல் பொறியியலாளர் நிலையத்திற்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் இரண்டாம் கட்ட வேலைகளிற்காக ரூபா 1.91 மில்லியன் தொகைக்கு ஒப்பந்தகாரர் சங்கமொன்றுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.
உடன்படிக்கையின் படி, 2018 நவம்பர் 15 ஆந் திகதி ஒப்பந்த வேலைகள் செய்து முடிக்கப்பட வேண்டிய போதிலும், 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி வரை இந்த நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.